ஏப்ரல் 1-15, 2000

# தமிழரசு.

ஏப்ரல் — ஜூன் ௨௦௦௦.


ஏப்ரல் 1-15, 2000 ரூ.5





**நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.**

**அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.**

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917,
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864

Mudra TNSACS 6259 98

222187

**தமிழரசு**
திருவள்ளுவர் ஆண்டு 2031
பங்குனி–சித்திரை
ஏப்ரல் 1–15, 2000
மலர் : 31 இதழ் : 19
விலை ரூ.5

## இந்த இதழில்...

❖ பூமாலை விற்பனை மையம் .......... 2
❖ திருவள்ளூர் மாவட்டத்தில் சிறப்புத் திட்டங்கள் .......... 4
❖ செய்வதைச் சொல்லுகிறோம்! .......... 8
❖ தமிழ் வளர்ச்சி ஒரு பார்வை .......... 17
❖ வீட்டுக் காய்கறித் தோட்டம் .......... 20
❖ அச்சு வெல்லம் .......... 26
❖ ராஜகோபாலத் தொண்டைமான் சிலை திறப்பு .......... 29
❖ மது எப்படி உடலைப் பாதிக்கிறது .......... 31
❖ கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் .......... 33
❖ என்ன படிக்கலாம்? .......... 35
❖ பழங்களின் மருத்துவ குணங்கள் .......... 47

### திருக்குறள்

*வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும்.*

முன்கூட்டியே எச்சரிக்கையாக இருந்து ஒரு தவறான செயலைத் தவிர்த்துக் கொள்ளாதவருடைய வாழ்க்கையானது நெருப்பின் முன்னால் உள்ள வைக்கோல் போர் போலக் கருகிவிடும்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*

# பூமாலை :
## கிராம மற்றும் நகரப்புற பொருளாதார சமநிலைக்கான திட்டம்

உழவர் சந்தை தொடக்க விழா, பூமாலை தொடக்க விழா, திருவள்ளூர் மாவட்டத்தைக் கணினி மயமாக ஆக்குகின்ற நிகழ்ச்சியின் தொடக்க விழா ஆகிய இந்த மூன்று அரிய நிகழ்ச்சிகளை இணைத்து பெரு விழாவாக இந்த விழாவை நடத்தி, நான் ஆற்றுகின்ற பணியிலே மேலும் உற்சாகத்தை எனக்கு அளிக்கும் வண்ணம் இந்த மாவட்டத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மாவட்ட ஆட்சித்தலைவர் பிரபாகரன் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

உழவர் சந்தை என்பது ஏற்கனவே தொடங்கப்பட்டு இன்றைக்கு 34-வது சந்தையாக இங்கே தொடங்கி வைக்கப்படுகின்றது. இதைத் தொடர்ந்து பூமாலை திட்டம் என்பது ஒரு புதிய திட்டம்.

24.3.2000 அன்று 2000-2001-ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவு திட்டத்தை சட்டமன்றப் பேரவையிலே வைத்து நான் உரையாற்றும் போது, "பொது மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள உழவர் சந்தைகளில் தாங்கள் விளைவித்த காய்கறிகளை உழவர்கள் நேரடியாக நியாய விலையில் விற்பதைப் போல, கிராமப்புற மக்கள் தாங்கள் தயாரித்த கைவினைப் பொருட்களை நகர்ப் புறங்களில் விற்பனை செய்து உரிய விலை பெறுவதற்கான நிலையான மையங்களை அமைத்துத்தர இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இத்தகைய விற்பனை மையங்களை எல்லா மாவட்டங்களில் ஏற்படுத்தவும், கிராமப்புற பொருட்களுக்குப் பூமாலை எனும் வணிகச் சின்னம் உருவாக்கி அவற்றின் விற்பனையை அதிகரிக்கவும் ஏறத்தாழ 15 கோடி ரூபாய் வரும் நிதியாண்டில் செலவிடப்படும்" என்று குறிப்பிட்டேன்.

அதனுடைய முதல் முயற்சிதான் – அரும்பு முயற்சிதான், இன்றைக்கு பூமாலைத் திட்டத்தின் அடிப்படையிலே நடந்து கொண்டிருப்பதாகும். நீங்கள் இந்தப் பூமாலைத் திட்டம் தொடங்கி வைக்கப்படுகின்ற இடத்தைப் பார்ப்பீர்களேயானால் கிராமப்புறங்களிலே, இருந்து வருகின்ற மகளிர், அவர்கள் தாங்களே முன்னின்று தயாரித்த பொருட்களைக் கொண்டு வந்து அவைகளை விற்பனை செய்கின்ற காட்சியைக் காணலாம். இந்த அரசின்



திட்டமே பொருளாதாரம் வளர வேண்டும், பொருளாதாரத்தில் ஒரு உயர்வு தமிழகத்தில் ஏற்பட வேண்டும் என்றாலுங் கூட, நகர்ப்புறத்துக்கும் கிராமப் புறத்துக்கும் இடையே பொருளாதார ஏற்றத் தாழ்வு வராமல் ஒரு சமநிலை ஏற்பட வேண்டும் என்பதில் அதிக அக்கறையோடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இன்றைக்குப் பணியாற்றி வருகின்றது.

பொருளாதார வளர்ச்சி என்ற பெயரால் நகர்ப்புறத்தினுடைய நிலை உயர்ந்து, கிராமப்புறத்தினுடைய நிலை குறைந்துவிடக்கூடாது. அதைச் சமப்படுத்தத்தான் இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் இந்த ஆட்சியிலே நாங்கள் நிறைவேற்றி வருகிறோம்.

கிராமப்புறங்களிலே முடங்கிக் கிடந்த பொருளாதார வளர்ச்சி இன்றைக்கு தட்டி எழுப்பப்பட்டு நகர்ப்புற உதவியோடு – நகர்ப்புற மகளிர் உதவியோடு ஒருவருக்கொருவர் உதவி என்ற முறையிலே இவர்கள் குறைந்த விலையிலே பெறுகிறார்கள், மலிவான விலையிலே, வாங்கிப் புசிப்போர் பெறுகிறார்கள். விவசாயிகள் தாங்கள் பயிரிட்டக் காய்கறிகளுக்கு நல்ல விலையைப் பெறுகிறார்கள் என்ற ஒரு பொருளாதார ஏற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறோம்.

பூமாலைத் திட்டம் கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகும். கைவினைப் பொருட்கள் என்றால் தஞ்சாவூர் தட்டு, காமாட்சி விளக்கு போன்ற பொருட்கள் அல்ல. அவைகளை விட மலிவான பொருட்கள். ஓலைகளினால் செய்யப்படுகின்ற பொருள்கள். மூலிகைகளிலிருந்து செய்யப்படுகின்ற பொடிகள், பல்தேய்க்கின்ற பொருள்கள், சலவைக்குகந்த பவுடர்கள், பொம்மைகள், சிறிய சிறிய விளையாட்டுக் கருவிகள் போன்றவைகளையெல்லாம் செய்யக்கூடிய திறமை நம்முடைய நாட்டிலே கிராமப்புறங்களிலே உள்ளவர்களுக்கு அதிகமாக உண்டு நான்கு பனை ஓலைகளைக் கொண்டு ஒரு சிறிய முடையாக முடையக்கூடிய ஆற்றல் இன்று நேற்றல்ல, பழங்காலத்திலேயே நம்முடைய கிராமப்புறத்து தாய்மார்களுக்கு உண்டு. இப்போது நவீன உலகத்தில் மேலும் அவைகளை நேர்த்தியாக, கண்ணைக் கவரக்கூடிய அளவிற்கு அந்தப் பொருள்களைத் தயார் செய்யக்கூடிய அந்த வாய்ப்பு, இந்தப் பூமாலை மூலமாக கிடைக்கும். எனவேதான், இந்தப் பூமாலை திட்டம் அம்பத்தூரிலே மாத்திரமல்ல, தமிழகம் முழுவதும் இருக்கின்ற எல்லா நகர்ப்புறங்களிலும் அமைக்கப்படவுள்ளது என்பதையும் அதற்காகத்தான் முதற்கட்டமாக 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது



என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் மாவட்ட முழுமையும் கணினி மயமாக ஆக்குகின்ற முயற்சி. அதைப்போல திருவாரூர் மாவட்டத்திலே கணினி மயமாக ஆக்குகின்ற முயற்சி. இந்த இரண்டு மாவட்டங்களையும் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டத்திலும் பிரபாகரன் அவர்கள் இன்றைக்கு இந்த கணினி மயமாக ஆக்குகின்ற முயற்சியைத் தொடங்கியிருக்கிறார். நான் பாராட்டுகிறேன்.

மூன்று மாவட்டங்கள் அல்ல, மிக விரைவில் தமிழ் நாட்டிலே உள்ள எல்லா மாவட்டங்களிலும் கணினி மயம்தான் என்கிற ஒரு நிலையை நாம் எய்திடுவோம்.

☐ முதலமைச்சர் கலைஞர்

திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூரில் 9-4-2000 அன்று கைவினைப் பொருள்கள் விற்பனை மையம் பூமாலை தொடக்கவிழா, உழவர் சந்தை திறப்பு விழா மற்றும் மாவட்டம் முழுமையும் கணினி மயம் ஆக்கும் திட்டத் தொடக்க விழாவில் முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...

ஆடைகள்செய் வோம்உழு படைகள்செய் வோம்;
ஆணிகள்செய் வோம்இரும்பாணிகள்செய்வோம்;
நடையும் பறப்புமுணர் வண்டிகள்செய் வோம்;
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்.

காவியம் செய்வோம்; நல்ல காடுவளர்ப் போம்;
கலைவளர்ப் போம் கொல்ல ருலைவளர்ப்போம்;
ஓவியம்செய் வோம் நல்லஊசிகள்செய் வோம்;
உலகத் தொழி லனைத்து முவந்து செய்வோம்.

– பாரதியார்



# திருவள்ளூர் மாவட்டத்தில் [illegible]! சிறப்புத் திட்டங்கள்

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2000-2001 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ள உழவர் சந்தைகளில் விளைந்த காய்கறிகளை உழவர்கள் நேரடியாக நியாய விலையில் விற்பனை போல, கிராமப்புற மக்கள் தாங்கள் தயாரித்த பொருட்களை நகர்ப்புறங்களில் விற்பனை செய்து உரிய விலை பெறுவதற்கான நிலையான விற்பனை மையங்களை எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்த கிராமப்புற பொருட்களுக்கு "பூமாலை" எனனும் வணிகச் சின்னம் உருவாக்கி அவற்றின் விற்பனையை அதிகரிக்கவும் உத்தரவிட்டுள்ளார். அதன்படி தமிழ்நாட்டின் முதல் "பூமாலை" ஊரக உற்பத்திப் பொருட்கள் விற்பனை மையம் திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூரில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 9-4-2000 அன்று திறந்து வைக்கப்பட்டது.



தமிழ்நாட்டின் முதல் "பூமாலை" ஊரக உற்பத்திப் பொருட்கள் விற்பனை மையம் திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூரில் சென்னை-திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் அம்பத்தூர் ரயில் நிலையம் அருகே நிறுவப்பட்டுள்ளது. உழவர் சந்தையை அடுத்து ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஊரக உற்பத்திப் பொருட்கள் விற்பனை மையத்தில் 100 சதுரடி பரப்பு கொண்ட 10 கடைகள் அமைந்துள்ளன.

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி "பூமாலை" என்ற பொதுவான வணிகச் சின்னத்தின் கீழ் கிராமப்புறங்களில் உள்ள கைவினை கலைஞர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயார் செய்யப்படும் பல்வேறு கைவினைப் பொருட்களும், வீட்டு உபயோகப் பொருட்களும் இவ்வங்காடிகளில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவைகளில் சில:

- ★ சணல், தோல் பைகள் மற்றும் பனை ஓலை பொருட்கள்
- ★ பொம்மைகள்
- ★ கண்ணாடி வேலைப்பாடுகளுடன் கூடிய சேலைகள், சுடிதார் ஆடைகள்
- ★ அப்பளம், ஊறுகாய், மசாலா மற்றும் சமையல் பொருட்கள்
- ★ ஊதுவத்தி, சாம்பிராணி, வாசனைத் திரவியங்கள்
- ★ மண்பாண்டங்கள்
- ★ சோப்பு, கிளீனிங் பவுடர், ஷாம்பு, பினாயில்
- ★ உணவுப் பொருட்கள்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பொன்விழா சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் (எஸ்.ஜி.எஸ்.ஒய்) கீழ் நிதி உதவி கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் ரூ.25,000 (இதில் ரூ.10,000 மானியம்) சுழல்நிதி மற்றும் மானியத்துடன் கூடிய கடனாக ரூ.2.5 இலட்சம் வரை நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தக்க பயிற்சியும், விற்பனை மேம்பாட்டிற்கான உதவியும் கொடுக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் கிராமப்புற கைவினை கலைஞர்கள் மற்றும் கிராமப்புற மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயார் செய்யும் பல்வேறு பொருட்களுக்கான விற்பனை அதிகரிக்கவும் அவர்கள் வாழ்க்கைத் தரம் மேம்படவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனபடி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் [illegible] மையங்கள் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் 14 இடங்களில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 15000க்கும் மேற்பட்ட குடிசைத் தொழில் புரிவோர் பயனடைகிறார்கள்.

## உடனுக்குடன் மக்கள் பணி

மக்களுக்கான சேவைகளை வெளிப்படையாகவும் விரைவாகவும், துல்லியமாகவும் வழங்கிடும் நோக்கத்துடன் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணையின்படி திருவள்ளூர் மாவட்டம் முழுமையாக கணினி மயமாககப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் மறறும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலும் கணிப்பொறி மையங்கள் அமைக்கப்பட்டு இக்கணிப்பொறிகள் அனைத்தும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் தலைமைச் செயலகத்துடன் கணினி வலைப்பின்னல் (Wide Area Network) பிணையமாக இணைக்கப்பட்டுள்ளன. இதற்குத் தேவையான மென்பொருள் தேசிய தகவல் மையத்தால் (NIC) வடிவமைக்கப்பட்டுள்ளது.

■ எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
திருவள்ளூர் மாவட்டம்.



திருவள்ளூர் மாவட்ட கணிப்பொறிமயமாக்கல் திட்டம் பல தனிச் சிறப்புக்களைக் கொண்டுள்ளது. மாநிலத்திலேயே முதன் முறையாக மாவட்டத்தில் உள்ள 8 வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் 14 வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் ஒரே சமயத்தில் கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளது.

## கணினி வலைப்பின்னல் பிணையம் : (TVLRNET)

மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலக கணினி மையங்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் தலைமைச் செயலகம் ஆகியவைகளை ஒன்றையொன்று கணினி மூலம் தொடர்புபடுத்தி இணைக்கும் வகையில் கணினி வலைப்பின்னல் பிணையம் (COMPUTER NETWORK) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் தன் அலுவலகத்தில் இருந்து வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் உள்ள மனுக்கள் மற்றும் பணிகள் நிலை ஆகியவற்றை கணினி மூலமாக தெரிந்து கொள்வதுடன் மேற்கொண்டு உத்தரவுகளைக் கணினி மூலமாகவே பிறப்பிக்கும் வகையில் மென் பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இனி அரசு ஆணைகள், சுற்றறிக்கைகள் யாவும் மின் அஞ்சல் (E-mail) மற்றும் நிகரி (Fax) இவற்றை கணினியுடன் பொருத்தி உடனுக்குடன் தகவல் பரிமாற்றம் செய்யும் வகையில் அனைத்து கணினிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

## சேவை மைய அணுகுமுறை

பொதுமக்கள் அரசு அலுவலகங்களுடன் கொள்ளும் தொடர்பு எளிதானதாகவும் தாமதமின்றி இனிதானதாகவும் இருக்கும் வண்ணம் சேவை மைய அணுகுமுறைகள் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

அதன்படி பட்டாமாற்றம், உட்பிரிவு செய்தல், முதியோர் உதவித்தொகை மற்றும் சான்றிதழ் கோரும் மனுக்கள் போன்றவை சேவை மையத்தில் பெறப்பட்டு கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு இறுதி ஆணை நாள் குறிப்பிடப்பட்ட ஒப்புகைச் சீட்டு கணிப்பொறி மூலமாக வழஙகப்படும். குறிப்பிட்ட நாளில் இறுதி ஆணை வழங்கப்பட்டதை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்து கணிப்பொறி மூலமாக நேரடியாக கண்காணிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் வட்டாட்சியர் அலுவலகங்களில் பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகளையும் அவற்றின் தன்மையைப் பொறுத்து 3 நாள் முதல் ஒரு வாரம் மற்றும் அதிகபட்சம் 30 நாட்களுக்குள் முடிவு செய்ய இயலும்.

## வலைத்தளம் (WEBSITE)

திருவள்ளூர் மாவட்டத்திற்கென இணையத்தில் (Internet) தனி வலைத்தளம் (Website) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் முகவரி http://www.tn.nic.in/tvallur. திருவள்ளூர் மாவட்டம் சம்பந்தப்பட்ட பல்வேறு தகவல்கள் இவ்வலை தளத்தில் இடம் பெற்றுள்ளது. அரசு அலுவலகங்களில் இருந்து பொது மக்கள் பெறுவதற்கு தேவையான சேவைகளை எளிதில் பெறும்





வண்ணம் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து சான்றிதழ்கள், பட்டா மாற்றம், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகன ஓட்டுநர் உரிமம் பெறுதல் போன்றவைகளுக்கான வழிமுறைகளைப் பொது மக்கள் எளிதில் அறியும் வண்ணம் விளக்கப்பட்டுள்ளது. இவ்வலை தளத்திலிருந்தே இதற்குத் தேவையான விண்ணப்ப படிவம் பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அலுவலர் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண் ஆகியவற்றை பொதுமக்கள் பெறலாம். மேலும், மாவட்டத்திலுள்ள அனைத்து மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் பற்றிய தகவல்களும் இதில் இடம் பெற்றுள்ளது.

## வளர்ச்சிப் பணிகள் பிணையம்

மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் ஆகிய அனைத்திலும் கணினி மையங்கள் அமைக்கப்பட்டு அவை பரந்த வலைப்பின்னல் பரப்பு பிணையமாக இணைக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித்தலைவர், ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஆகியோர் நேரடியாக தங்கள் அலுவலகத்தில் இருந்து வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் உள்ள கணினியுடன் தொடர்பு கொண்டு வளர்ச்சி பணிகளின் நிலையை கணினி மூலமாக தெரிந்து கொள்வதுடன், மேற்கொண்டு உத்தரவுகளைக் கணினி மூலமாகவே பிறப்பிக்கும் வகையில் மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இனி அரசு ஆணைகள், சுற்றறிக்கைகள் மற்றும் முக்கிய கடிதங்கள் யாவும் மின் அஞ்சல் (E-Mail), நிகரி (Fax) இவற்றை கணினியுடன் பொருத்தி உடனுக்குடன் தகவல் பரிமாற்றம் செய்யும் வகையில் அனைத்து கணினிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

## அம்பத்தூர் உழவர் சந்தை

உழுவோர்க்கு உயர்வும் நுகர்வோர்க்கு நிறைவும் அளிக்கும் வகையில் தமிழகமெங்கும் 100 உழவர் சந்தைகள் அமைக்கப்படும் என்ற முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவிப்பைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டத்தின் முதல் உழவர் சந்தை அம்பத்தூரில் எழில்மிகு தோற்றத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

* உழவர் சந்தையின் பரப்பளவு 0.86 ஏக்கர்
* கடைகளின் எண்ணிக்கை 100 கடைகள்
* நிலமதிப்பு ரூ.1.61 கோடி

### அம்பத்தூர் உழவர் சந்தையின் சிறப்பு

* சென்னை - திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் அம்பத்தூர் ரயில் நிலையத்தின் அருகில் நாள்தோறும 2 லட்சம் பேர் கடந்து செல்லும் சிறப்பான இடத்தில் அமைந்த முதல் உழவர் சந்தை.
* இயற்கை எழிலோடு இணைந்த வண்ணம் மங்களூர் ஓடு கூரை அமைக்கப்பெற்ற முதல் உழவர் சந்தை.
* காய்கறி கழிவுகளை வீணாக்காமல் பயன்படுத்த உழவர்களுககு பயன்படும் வண்ணம் மண்புழு உரமாக மாற்ற வசதி கொண்ட முதல் உழவர் சந்தை.
* மகளிர் சுய உதவிக்குழுக்களின் கைவினைப் பொருட்களை விற்பனை செய்ய 10 அங்காடிகள்.
* டான்வா பண்ணை மகளிர் குழுக்கள் நடத்தும் சிற்றுண்டிச்சாலை, சைக்கிள் ஸடாண்ட் மற்றும் கழிவறைகள்.
* தொலைபேசி மற்றும் மின்னணு கருவி.

### உழவர் சந்தையில் டான்வா மகளிர் குழு

உழவுத் தொழில் என்பது ஆண்களும், பெண்களும் சரிசமமாக ஈடுபடும் தொழில. உழவர் சந்தையில் காய்கறிகளைக் கொண்டு வருவதும், விற்பனை செய்வதும் பொதுவாக ஆண் விவசாயிகளே. பெண்களுக்கும் உரிய வாய்ப்புக்களை கொடுக்கும் வண்ணம் அம்பத்தூர் உழவர் சந்தையில் பல சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

இம்மாவட்டத்தில் அம்பத்தூர் உட்கோட்டத்தில் உள்ள மேலப்பேடு கிராம டான்வா பண்ணை மகளிர் குழு உறுப்பினர்கள் உழவர் சந்தையிலிருந்து சேகரிக்கப்படும் காய்கறி கழிவுகளிலிருந்து மண்புழு உரம் உற்பத்தி செய்கின்றார்கள். மிதிவண்டி நிறுத்த நிலையமும் இக்குழுவினரால் பராமரிக்கப்படுகிறது.

திட்டத்தின் கீழ் டான்வா பண்ணை மகளிர் குழுக்களுக்கு வழங்கப்படுகிறது.

இதன் மொத்த மதிப்பீடு ரூ.9,99,581.

### தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சித்திட்டம் (டான்வா)

டான்வா திட்டம் வேளாண்மை துறை மூலம் டேனிடா நிதி உதவிக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### டான்வா திட்ட நோக்கம்

* வேளாண் தொழில் நுட்பங்களை தெரிந்து செயல்படுத்துதல்.
* சக பண்ணை மகளிருக்கும் பயிற்றுவித்தல்
* சிறு, மிகச்சிறு பண்ணை மகளிர் வேளாண்மை உற்பத்தியை பெருக்குவதினால் உணவு மற்றும் பொருளாதாரத்தில் மேம்படுதல்.

## செயல்பாடுகள்

### கிராம அடிப்படை பயிற்சி

பெண் வேளாண்மை அலுவலர்களால் 25 பண்ணை மகளிருக்கு 5 நாட்களுக்குக் கிராமங்களிலேயே குறைந்த மற்றும் செலவில்லா வேளாண் தொழில் நுட்பங்கள் செயல் முறையாக பயிற்சி அளிக்கப்படுகிறது.

### சிறப்புப் பயிற்சி

பண்ணை வருமானத்தைப் பெருக்க 4 நாட்களுக்கு வேளாண் சார்புள்ள தொழில்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### பண்ணை மகளிர் கருத்தரங்கு

இந்த ஒரு நாள் கருத்தரங்களில் பண்ணை மகளிர் தாங்கள் கடைபிடித்த தொழில் நுட்ப அனுபவங்களையும் மற்றும் பண்ணை மகளிர் குழு நடைமுறை செயல்பாட்டு அனுபவங்களையும் பகிர்ந்து கொள்கிறார்கள்.

ஆலத்தூர் டான்வா பண்ணை மகளிர் குழு சிற்றுண்டி சாலை நடத்துகின்றார்கள். கழிவறை பராமரிப்பு இக்குழுவால் மேற்கொள்ளப் படுகிறது.

இந்த அனைத்து பணிகளும் பொன்விழா சுய வேலைவாய்ப்புத்




### சகபண்ணை மகளிர் பயிற்சி

பயிற்சி பெற்ற பண்ணை மகளிர் ஒவ்வொருவரும் 5 சக பண்ணை மகளிருக்கு செயல் விளக்கங்கள் மூலம் 5 நாட்களுக்குப் பயிற்சி அளித்தல். இதனால் வேளாண் தொழில் நுட்பங்கள்



விரைந்து கிராமங்களில் பரவி கடைபிடிக்கப்படும் திறனும் அதிகரிக்கிறது.

### தொடர்பணி

டான்வா பயிற்சி பெற்ற பண்ணை மகளிர் வேளாண்மை துறையுடன் தொடர்ந்து செயல்படவும், துறையின் நவீன தொழில் நுட்பங்களை அவ்வப்போது பெறவும் திட்டம் முடிவு பெற்ற கோட்டங்களில் ஒரு பெண் வேளாண்மை அலுவலர் நியமிக்கப்பட்டு பருவகால பயிற்சி, மாதிரி பண்ணை, டான்வா பண்ணை மகளிர் குழு உருவாக்குதலுக்குண்டான பயிற்சிகள் அளிக்கப் படுகின்றன.

### மாதிரி பண்ணைகள்

வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களைக் கடைபிடிப்பதன் மூலம் நிலையான வருமானம் பெற, மாதிரி பண்ணைகள் பண்ணை மகளிர் வயல்களில் அமைக்கப்பட்ட வயல் நாள் நிகழ்ச்சி மூலம் அதன் வெற்றிக் கதைகள், அனுபவங்கள் இதர விவசாயிகளுக்கும் எடுத்துக்காட்டப்படுகிறது.



### டான்வா பண்ணை மகளிர் குழுக்கள்

ஒத்த கருத்துடைய 20 டான்வா, சக மற்றும் புற பண்ணை மகளிருக்கு 2 நாள் குழு உருவாக்குதல் பயிற்சி மூலம் குழுக்கள் உருவாக்கப்பட்டு, தேர்வு செய்யப்படும் குழுக்களுக்கு 1 நாள் குழு நிலைபடுத்துதல் பயிற்சி அளிக்கப்படுகிறது. சேமிப்பு மற்றும் குழு உறுப்பினர்கள் இடையே தங்களுக்குள்ளேயே கடன் கொடுத்து வங்கியில் குழு சார்பாக சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கப்படுகிறது. 4 நாள் குழு அடிப்படை சிறப்பு பயிற்சி மூலம் வேளாண் சார்ந்த மற்றும் சாராத பயிற்சிகள் அளிக்கப்படுகின்றது.

இவ்வாறு பயிற்சி பெற்ற குழு உறுப்பினர்கள், மண்புழு உரம், வாஷிங் பவுடர், கிளீனிங் பவுடர், ஊதுபத்தி, ஃபினாயில், கம்ப்யூட்டர் சாம்பிராணி, மெழுகுவர்த்தி, ஊறுகாய், கூடை பின்னுதல், ரெடிமேட் உடைகள் ஆகிய தொழில்கள் செய்து உற்பத்தி பொருட்களை விற்பனை செய்து, வருமானம் பெறுகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற சிறு, மிகச்சிறு மற்றும் சகபண்ணை மகளிர் எண்ணிக்கை 23,150 ஆகும். 24 மாதிரிப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. 35 பண்ணை மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த வருடம் 3 பண்ணை மகளிர் குழுக்கள், டோக்ரா சுழல் நிதியாக ரூ.25,200 வீதம் ரூ.75,600 பெற்றுள்ளன. இவ்வருடம் பொன்விழா சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 6 குழுக்கள் சுழல் நிதி பெற தேர்வு செய்யப்பட்டுள்ளன.

### மண்புழு உரம் தயாரிக்கும் முறை

நல்ல நிழலானமேட்டுப்பாங்கான நிலத்தில் 6 அடி நீளம், 3 அடி அகலம், 3 அடி உயரமுள்ள தொட்டிகளைக் கட்ட வேண்டும். இந்த தொட்டியில், சேகரித்து வைத்துள்ள காய்கறி கழிவு பொருட்களை 1 அடி உயரத்திற்கு இட வேண்டும். இதன் மேல் உலர்ந்த சாணித்தூளைப் பரப்பவும். இந்த உரப்படுக்கையை 2 அடி உயரம் வரை தயார் செய்யவும். இந்த உரப்படுக்கையில் 15 நாட்கள் வரை தினசரி நீர் தெளித்து கிளறிவிட வேண்டும். இதனால் உரப்படுக்கையிலுள்ள வெப்பம் தணிகிறது. இந்த படுக்கையில் ஒரு தொட்டிக்கு 1000 மண்புழுக்கள் வீதம் விட வேண்டும். தொட்டியை ஈரக்கோணியினால் மூடி வைக்க வேண்டும். புழுக்களை அதிக வெப்பம், பறவைகள், எலி, தவளை ஆகியவையிடமிருந்து பாதுகாப்பது அவசியம்.

சுமார் 45-60 நாட்களில் மண்புழு இறுதி உரம் தயாராகிவிடும். உரம் தயாரான பின் புழுக்கள் அடிபாகத்திற்குச் சென்று விடும். மேற்பகுதியிலிருந்து உரத்தினை எடுத்து சல்லடையில் சலித்து பயன்படுத்தலாம்.

இவ்வாறு உற்பத்தி செய்யும் மண்புழு உரத்தை காய்கறி பயிரிடும் உழவர்கள் காய்கறி பயிருக்கு பயன்படுத்துவதால் தரமான பசுமையானக் காய்கறிகள் கிடைக்கும்.

### மண்புழு உரத்தின் பயன்கள்

* மண் வளத்தை பாதுகாக்கிறது. மண்ணின் தரத்தை மேம்படுத்துகிறது. ஈரப்பதத்தை காக்கிறது.
* மண்ணின் அங்ககச் சத்தினை கூட்டுகிறது.
* மண்ணில் உள்ள நுண்ணுயிர் பங்கினை மேம்படுத்துவதால் பயிர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
* மண்ணில் கிட்டாத நிலையில் உள்ள மணிச்சத்தை பயிருக்கு எடுத்து தருகிறது.
* பயிரின் மகசூல் அதிகரிக்கிறது.

காய்கறி கழிவுகளை கொண்டு மண்புழு உரம் தயாரிக்கும் முதல் உழவர் சந்தை அம்பத்தூர் உழவர் சந்தை என்பது குறிப்பிடத்தக்கது. ★

நம்முடைய வரவு–செலவுத் திட்ட அறிக்கை வெளி வந்தவுடனேயே இதைப்பற்றிய கருத்துக்களைச் சொல்லும்போது, ஒன்றும் இல்லை என்று கூறியிருக்கின்றார்கள். நானும் – ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை என்கிறார்களே – என்று மீண்டும் ஒருமுறை நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தேன்.

★ 50 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படயிருக்கும் குடிநீர் பற்றாக்குறையைச் சமாளித்திட தொலைநோக்குத் திட்டம்:

★ 21ஆம் நூற்றாண்டிற்கு தமிழகத்தை அழைத்துச் செல்ல உயிரியல் தொழில்நுட்ப கொள்கை (Bio-technology). Biotechnology என்பது சாதாரணமானதல்ல. இன்றைய தினம் வளர்ந்து வருகிற விஞ்ஞானத்தில் குளோனிங் என்கிற முறை வந்திருக்கிறது. அதுவரையிலே வரக்கூடிய ஒரு டெக்னாலஜிதான் Biotechnology.

★ வரும் நிதியாண்டில் எஞ்சிய அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், அரசு கலை மற்றும் தொழில் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களுக்கு கணினி பயிற்சித் திட்டம்.

★ தகவல் தொழில்நுட்பத் துறையில் புதிய நிறுவனங்களைத் தொடங்க முன்வருவோருக்குக் கடன் வழங்க ஊக்க மூலதன நிதி (Venture Capital Fund).

★ கோவை, திருச்சி, மதுரை, சேலம், நெல்லை போன்ற நகரங்களில் செயற்கைக்கோள் தரை நிலையங்கள் (Earth Stations) வரும் ஆண்டில் அமைத்துத் தர முடிவு.

★ அனைத்து வட்டாட்சி அலுவலகங்களும் முழுமையாக கணினிமயமாக ஆக்கப்படும். அனைத்துப் பதிவு அலுவலகங்களும் கணினி வசதி செய்யப்படும்.

★ வரும் ஆண்டில் 75 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் 24 மாவட்டங்களில் மேம்படுத்தப்படும்.

★ பழங்குடியினர் நலனை கவனிக்க தனியாக இயக்ககம் உருவாக்க முடிவு.

★ இளைஞர்களுடைய விளையாட்டு மேம்பாட்டுக்கென தனியாக ஒரு துறை அமைப்பு.

★ ஆதரவற்ற முதியோர், மீனவர், நிலமற்ற விவசாயத் தொழிலாளர், விதவைகள், ஆதரவற்ற பெண்கள், உடல் ஊனமுற்றோர் போன்ற பிரிவினருக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் 150 ரூபாய், 200 ரூபாயாக உயர்வு.

★ அரசுப் புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகள் வீடு கட்டி அனுபவித்து வருபவர்களுக்கு அந்த இடத்தை உரிமையாக்கி வீட்டுமனைப் பட்டா வழங்குதல்.

# செய்வதைச் சொல்லுகிறோம்!

■ முதலமைச்சர் **கலைஞர்**

★ 6ஆம் வகுப்பிலே பயிலும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு ஏற்கெனவே இந்த அரசு வழங்குவது போல, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின வகுப்பைச் சேர்ந்த 30 ஆயிரம் மாணவிகளுக்கும் மாதந்தோறும் 100 ரூபாய் வழங்கும் திட்டம்.

★ அதேபோல 3 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட 60 ஆயிரம் மாணவியருக்கு ஓராண்டுக்கு 500 ரூபாய் வீதம் ஊக்கத்தொகை.

★ ஊனமுற்றோர்களுடைய வேலைவாய்ப்பை அதிகரித்திட 6 பயிற்சி மையங்கள் அமைத்து 300 பேருக்கு கணினிப் பயிற்சி இலவசமாக அளித்தல்.

**முதல்வர் கலைஞர்** அவர்கள் 2000-2001ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து சட்டமன்றப் பேரவையில் 4-4-2000 அன்று ஆற்றிய உரையிலிருந்து.



★ மேலும் 6 மையங்களில் ஆய்வுக்கூடப் பரிசோதனை, எக்ஸ்–ரே பரிசோதனை, இ.சி.ஜி., இ.இ.ஜி., இதர நவீன பரிசோதனைகளை மேற்கொள்ள 300 பேருக்குப் பயிற்சி.

★ சமூக சீர்திருத்தத்துறை மூலமாக மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து மக்களை மீட்க பிரச்சாரம் செய்திட முடிவு.

★ 60 வயதிற்குள் இறக்க நேரிடும் நெசவாளர்கள் குடும்ப ஓய்வு நிதி 50 ஆயிரம் ரூபாயாக உயர்வு.

★ 60 வயதைத் தாண்டிய நெசவாளர்கள் பயன்பெற மாத ஓய்வுத் தொகை 150 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக உயர்வு.

★ பத்திரிகையாளர்களுடைய ஓய்வூதியம் 1,500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்வு. பத்திரிகையாளர்கள் பணிபுரியும்போது இறந்து விட்டால் வழங்கப்படும் நிதி 40 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்வு.

★ மாவட்டத் தலைமையிடங்களில் அரசு அலுவலர்களுக்கு 2,144 வாடகைக் குடியிருப்புகள்.

★ புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டத் தலைமையிடங்களிலும், திருப்பூர் போன்ற நகரங்களிலும் புதிதாக சார்பு நகரங்கள். சாட்டிலைட் டவுன் உருவாக்க முடிவு.

★ சத்துணவு பெறும் மாணவர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு வழங்கப்பட்ட 18 பைசா என்பது இனி 23 பைசாவாக உயர்த்த முடிவு.

★ மகளிர் திட்டங்களை ஒருங்கிணைத்து 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம்.

★ காஞ்சிபுரம் பட்டு, தஞ்சாவூர் தட்டு போன்ற உலகத் தரம் வாய்ந்த பொருட்களுக்கு 'வணிகச் சின்னம்' அமைத்து, உலக அளவில் மார்க்கெட் ஏற்படுத்தித் தர முடிவு.

★ கைவினைப் பொருட்களுக்கு 'பூமாலை' என்னும் வணிகச் சின்னம் அமைத்து, அவைகளை விற்பதற்கு ஏதுவாக விற்பனை மையங்கள்.

★ 24-10-2001 அன்று மருதுபாண்டியன் தூக்கிலிடப்பட்ட 200ஆவது ஆண்டை நினைவுகூர்ந்திட அரசு சார்பில் புகழாஞ்சலி நிகழ்ச்சி.

★ சாமி சிதம்பரனார், மயிலை சீனி வெங்கடசாமி, கவிஞர் முடியரசன் நூல்கள் நாட்டுடைமையாக்கப் பட்டு, அவர்கள் குடும்பத்திற்கு தலா 10 இலட்சம் காப்பு நிதி.

★ திருச்சி தலைக்காவிரி நிறுவனத்தை அரசு உதவி பெறும் நிறுவனமாக அறிவிப்பு.

★ மாநிலமெங்கும் இளைஞர்களை ஊக்குவிக்க விளையாட்டுப் பயிற்சிகள், போட்டிகள் அறிவிப்பு.

★ பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கு நிவாரணம் காண உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய முடிவு.

★ வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கு பயிற்சி அளித்து அறிவியல் அலுவலர்களாக மாற்ற முடிவு.

★ ஒசூரில் மலர்ப்பூங்கா.

★ சென்னைக்கருகே ஆடை தயாரிக்கும் பூங்கா.

★ கடலூரில் தொழில் பூங்கா.



★ நாங்குனேரியில் உயர் தொழில்நுட்ப தொழில் பூங்கா 3000 ஏக்கரில்.

★ வரும் ஆண்டில் மாத்திரம் 696 மெகாவாட் மின் உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடு.

★ வரும் ஆண்டில் ஆயிரம் உள்நாட்டு மீனவர்களுக்கு வீடு கட்ட முடிவு.



★ 10 இடங்களில் மீனவர் அங்காடி முதல்கட்டமாக அமைக்கப்படும்.

★ தனியார் கரும்பாலைகள் கொடுக்க வேண்டிய விவசாயிகளுடைய பாக்கியைத் தீர்த்திட ஆலை அதிபர்களை அழைத்துப் பேச முடிவு.

★ குடமுருட்டி ஆறு, அரியாறு, கோரையாறு மற்றும் கொடிங்கால் வடிகால் அகலப்படுத்தப்படும்.

★ உய்யக்கொண்டான் வாய்க்காலின் கரைகள் பலப்படுத்தப்படும்.

★ தூர்வாருவதற்கு இந்த ஆண்டும் 50 கோடி ரூபாய்.

★ ஆலந்தூர் மாடல் பாதாள சாக்கடை வசதித் திட்டத்தைப் பரவலாக்கத் திட்டம்.

★ 6 ஆயிரம் பள்ளி ஆசிரியர்கள் நியமனம்.

★ 4 ஆயிரம் காவல்துறையினர், தீயணைப்புப் பணியாளர்கள் நியமனம்.

★ மாநில அரசு பணிகளில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு குறித்த வெள்ளை அறிக்கை.

★ நான்கு மாவட்டங்களில் ஊரக தூய்மை இயக்கம்.

★ சொந்தக் கிராமங்களில் கல்விக் கூடங்கள், மருத்துவமனை அமைக்க முன்வருபவர்கள் பெயர் சூட்ட ஒப்புதல்.



★ மாவட்ட திட்டக் குழுக்கள் இனி மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் தலைமையிலே இயங்க முடிவு.

★ தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டங்கள்.

★ கன்னியாகுமரியில் ரப்பர் தொழிற்பூங்கா.

★ அபிஷேகப்பட்டியில் கால்நடைப் பண்ணையை சீர்திருத்தி மேம்பாடு செய்தல்.

★ மதுரை மாநகராட்சியில் உயர்நீதிமன்றக் கிளை.

★ வணிகர்களுக்கான பல்வேறு சலுகை, வரி குறைப்பு, வரி நீக்கம்.

★ திரைப்படத் துறைக்கு வரிச் சலுகைகள்,

இவ்வளவும் அடங்கியுள்ள இந்த நிதிநிலை எதுவுமே இல்லாதது, ஒன்றுமே இல்லாதது என்று பேசப்பட்டதுதான் எனக்கு மிகுந்த வேதனை அளிக்கின்றது.

★ ★ ★

வரி விதிப்பு என்று பார்த்தால், கடந்த 4 ஆண்டுகளில் வரிவிதிப்பு, வரிகுறைப்பு என்று பார்க்கும்போது, வரிவிதிப்பு என்பது தாங்கக்கூடியவர்களுக்குத்தான் விதிக்கப்பட்டு இருக்கிறது; தாங்க இயலாதவர்களுக்கு, நடுத்தெரு நாராயணர்களுக்கு, சாதாரண சாமானிய மக்களுக்கு, வர்த்தகர்களுக்கு – இவர்களுக்கெல்லாம் வரி குறைப்பு செய்யப்பட்டு இருக்கிறது. இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு எவ்வளவு இனங்களுக்கு வரி குறைக்கப்பட்டது.



எத்தனை இனங்களுக்கு வரி அறவே நீக்கப்பட்டது என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது; மீண்டும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1996–97இல் 353 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டது. 1997–98இல் 143 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டது. 1998–99இல் 81 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டது. 1999–2000இல் 25 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டது. இப்போது, 2000–2001இல் 76 கோடி ரூபாய் வரிச்சலுகை அளிக்கப்பட்டு, மொத்தம் 678 கோடி ரூபாய் மதிப்பிற்கு வரிச் சலுகைகள் தரப்பட்டுள்ளன. முதல் ஆண்டு தரப்பட்ட சலுகை தொடர் ஆண்டுகளுக்கும் பொருந்தும் என்ற வகையிலே கணக்கிட்டால், இந்த 5 ஆண்டுகளில் ஏறத்தாழ 2,700 கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மறந்துவிட முடியாது.



1996–97ஆம் ஆண்டில் பருப்பு, மஞ்சள், மிளகாய், வெல்லம், கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டி போன்ற 14 பொருள்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. சமையல் எரிவாயு, டீசல் உள்ளிட்ட 30 இனங்களுக்கு வரி குறைப்பு செய்யப்பட்டது. 1997–98ஆம் ஆண்டில் பருத்தியினால் ஆன பின்னலாடைகள், மாட்டுத்தீவனம், நாட்டு மருந்துகள், ஊனமுற்றோர் பயன்படுத்தும் சைக்கிள், கயிறு போன்ற 24 இனங்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. யூரியா, தேங்காய் மற்றும் கொப்பரைகள், பருத்தி, தமிழ் தட்டச்சுப்பொறிகள், வணிகச் சின்னமுடைய நெய் மற்றும் வெண்ணெய் உள்ளிட்ட 34 இனங்களுக்கு வரி குறைப்பு செய்யப்பட்டது.

1998–99ஆம் ஆண்டில் சமையல் எண்ணெய், காசினிக் கீரை, கணினி மென்பொருள் உள்ளிட்ட 6 இனங்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப் பட்டது. மசாலாப் பொடிகள், ஐஸ்கிரீம் போன்ற 8 இனங்களுக்கு வரிக் குறைப்பு செய்யப்பட்டது.

1999–2000ஆம் ஆண்டில் சூரிய ஒளியிலே இயங்கும் விளக்குகள், புடவை விளிம்புப் பட்டிகள், காலணிப்பட்டிகள், பருத்தி நூல் கயிறு, பிரம்பினால் செய்யப்பட்ட தட்டி, கூடை மற்றும் முறம் போன்ற 10 இனங்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப் பட்டது. கணினிகள், தொலைக்காட்சி படம் எடுக்கும் கருவிகள், டிரான்சிஸ்டர்கள், வணிகச் சின்னம் இட்ட ரஸ்க், வாழ்த்து அட்டைகள், சாம்பிராணி வில்லைகள் உள்ளிட்ட 54 இனங்களுக்கு வரிக்குறைப்பு செய்யப்பட்டது.

இந்த ஆண்டு, 2000–2001இல் நித்தியகல்யாணி இலை மற்றும் வேர், காது கேட்கப் பயன்படும் கருவிக்கான கம்பி, அரைஞான் கயிறு, பதப்படுத்தப்பட்ட பால், நாட்டுச் சர்க்கரை, தமிழ் தினசரி காலண்டர்கள், காகித உறைகள் உள்ளிட்ட 10 இனங்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. மொசைக் கற்கள், துணி துவைக்கும் இயந்திரங்கள், அனைத்து வகை மின்சக்திக் கருவிகள், உபகரணங்கள், வறுகடலை போன்ற 15 இனங்களுக்கு வரிக்குறைப்பு செய்யப் பட்டது.

இந்த அளவிற்கு வரிக்குறைப்பு, முழு வரிவிலக்கு தந்த கழக அரசு இந்த 5 ஆண்டுகளில் எந்தெந்த இனங்களுக்கு வரி விதித்தது என்று பார்த்தால்,

1996–97இல் மது வகையறாக்களுக்கு Vend Fee விதித்து 75 கோடி ரூபாய் அதுவரை எங்கேயோ போய்க் கொண்டிருந்த வரியை அரசு கஜானாவில் சேர்த்தோம்.

1997–98ஆம் ஆண்டில் பான் மசாலாவிற்கு வரி விகிதம் 11 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. மேலும் பரிசு சீட்டுகளின் மீது வரி உயர்த்தப்பட்டது. மது பானங்களுக்கு ஆயத் தீர்வையும் Vend Fee–யும் உயர்த்தப்பட்டது.

1998–99ஆம் ஆண்டில், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான வகைகளுக்கு வரி விகிதங்கள் உயர்த்தப்பட்டன. மேலும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் துணி வகைகள் மற்றும் சிகரெட்டுக்கு, வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சர்க்கரைக்கும் வரிவிதிக்கப் பட்டது. கேளிக்கைகள் வரிச் சட்டத்தின்கீழ், கேளிக்கைப் பூங்காவில் உள்ள ஒவ்வொரு கேளிக்கை இனத்திற்கும் செல்வோர்களிடம் வசூலிக்கப்படும் தொகை மீது 20 விழுக்காடு கேளிக்கை வரியாக விதிக்கப்பட்டது. இவ்வரித் தொகை பூங்காவின்

உரிமையாளர் ஏற்கவேண்டும். இவ்வகையில் வரும் வருவாயில் 90 விழுக்காடு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும்.

1999–2000ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் பான்மசாலாவிற்கு வரிவிகிதங்கள் உயர்த்தப்பட்டன. மேலும் இந்தியாவிலே தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை பானங்களுக்கு 12–11–1999 முதல் 40 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக வரி விகிதம் உயர்த்தப்பட்டது.

23–6–2000 இந்திய துணைக் கண்டம் முழுவதும் – விற்பனை வரியில் சமச்சீர் தளமுறை நடைமுறைப்படுத்த வேண்டி வந்த வகையில் தமிழ்நாட்டில் சில பொருட்களின் மீது வரி விகிதங்களை உயர்த்த வேண்டி வந்தன. காற்றூட்டப்பட்ட பானங்கள், ஆகாய வானூர்திகள், திரைப்படத் தயாரிப்புக்கான உபகரணங்கள், மின்னணு விளையாட்டுப் பொருட்கள், மத்தாப்பு மற்றும் பட்டாசு வகைகள், மோட்டார் வாகனங்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள், பி.வி.சி. பொருட்கள் போன்ற 19 பொருட்கள் மீது இருந்த 11 விழுக்காட்டு வரி விகிதம் 12 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. மேலும் சந்தன கட்டைக்கு 8 விழுக்காடாக இருந்த வரி 12 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. சந்தன எண்ணெய்க்கு 4 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக வரி உயர்த்தப்பட்டது. தங்கம் மற்றும் வெள்ளிக் கட்டிகள் மற்றும் தேய்ந்த, பழுதடைந்த நகைகள் மீது இருந்த 0.5 விழுக்காடு வரி விகிதம் 1 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.



ஆடம்பர வரிச் சட்டத்தின்கீழ் பீடி நீங்கலாக சிகரெட் போன்ற ஆடம்பர புகையிலைப் பொருட்களுக்கு அண்டை மாநிலங்களில் உள்ளதுபோல 5 விழுக்காடு ஆடம்பர வரி புதியதாக விதிக்கப்பட்டது.

மது பானங்கள் மீது ஆயத் தீர்வை உயர்த்தப் பட்டது. 2000–2001ஆம் ஆண்டில் ஒரு லிட்டர் அதிகபட்ச சில்லறை விலை ரூ.29–ம் அதற்கு மேலும் உள்ள மென்பானங்களுக்கான விற்பனை வரி 12 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக 1–4–2000 முதல் உயர்த்தப்பட்டது.

சமையல் எண்ணெய் போன்றவைகளுக்கு எல்லாம் வரிவிகிதம் ஏற்றப்படவில்லை. இதில் சமச்சீர் வரியை தமிழக அரசு ஏற்றுக்கொள்ள வில்லை. ஏழையெளிய, நடுத்தர மக்கள் பயன்படுத்தும் எந்தப் பொருள்கள் மீதும் வரி போடப்படவில்லை, மாறாக வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது அல்லது குறைக்கப்பட்டுள்ளது என்பதைத்தான் நான் சொன்ன இந்த புள்ளிவிவரங்கள் நிரூபிக்கின்றன.

★ ★ ★

விவசாயிகளினுடைய முன்னேற்றத்திற்கு, நிதிநிலை அறிக்கையிலே எதுவுமே இல்லை என்ற விவாதத்திற்கு, நான் கேட்கிறேன்; விவசாயிகளை எல்லாம் நிதிநிலை அறிக்கை தயாரிப்பதற்கு முன்பு அழைத்துப் பேசி, அவர்களுடைய கருத்தைக் கேட்டுத் தயாரித்தோமே, இது விவசாயிகளை அலட்சியப்படுத்தியதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

வேளாண்மை, முந்திரி சாகுபடி திட்டம், பாசனம், விவசாயிகளினுடைய நலன் என்ற 4 தலைப்புகளில், பக்கம் 12 முதல் பக்கம் 17 வரை, 5 பக்கங்கள் விவசாயிகளுக்காகத் தான் ஒதுக்கப் பட்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கையில், விவசாய சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கையின் அடிப்படையில் 13 சலுகைகள், அவர்களுடைய முறையீடுகளுக்கு, அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க ஏற்கப்பட்டு, அவை வழங்கப்பட்டு, விவசாயிகள் அளித்த மற்ற ஆலோசனைகளும், கோரிக்கைகளும் பரிசீலித்து உரிய முடிவு எடுக்கப்படும் என்றும் இந்த அறிக்கையிலே தெரிவிக்கப் பட்டிருக்கிறது. புதிய வேளாண் கொள்கை ஒன்றை உருவாக்க, உயர்நிலைக் குழு அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. வேளாண் பொருட்களை சேமித்து வைக்க, குளிர்பதனக்கூடங்கள் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களில் அறுவடைக்கான சிமெண்ட் களங்கள் அமைக்கப்படும் என்றும், அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொண்டு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விவசாயிகளுக்கு சேமிப்போடுகூடிய ஈட்டுறுதித் திட்டம் வகுக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. பாசன நீரைப் பயன்படுத்த குழுக்கள் அமைக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிச் செயலாளர்களை மாற்றம் செய்ய வேண்டுமென்ற கருத்தும் ஏற்கப்பட்டிருக்கிறது.

கரும்பு விவசாயிகளுக்கு, தனியார் கரும்பு ஆலை தர வேண்டிய கடன் பாக்கியை விரைவில் தீர்க்க ஆலை அதிபர்களை அழைத்துப் பேசுவோம் என்று



நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் 75,000 ஏக்கர் தரிசு நிலங்கள் மேம்படுத்தப்பட்டு, பயிர் சாகுபடிக்கு கொண்டு வரப்படும் என்பது விவசாயிகளுக்கு செய்யப்படும் சாதனையா அல்லவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகின்றேன்.



பரம்பிக்குளம், ஆழியாறு பாசனத் திட்டப் பகுதிகளில் மடை விட்டு மடை மூலம் பாசன வசதித் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அறிவிக்கப் பட்டு இருக்கிறது. விவசாயத் தொழிலாளிகளுடைய நலனுக்காக தனியாக விவசாயத் தொழிலாளிகள் நல வாரியம் அமைக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதைப்போலவே, நெசவாளர்களுக்கான நன்மைகள், திட்டங்கள் இவைகளும் இந்த அறிக்கையிலே தெரிவிக்கப் பட்டிருக்கின்றன.

★ ★ ★

வேளச்சேரியிலே கடந்தகால அரசு அமைத்த பெண்களுக்கான தொழிற்பேட்டையை கைவிட்டு விட்டோம் என்று சொன்னார்கள். திடீரென்று சுப்பராயன் அவர்கள் கடந்தகால அரசு அதை அமைத்தது, இதை அமைத்தது எல்லாவற்றையும் கெடுத்துவிட்டீர்கள் என்று பேசினார், என்னவென்று தெரியவில்லை எனக்கு, திடீரென்று அப்படி பேசினார். நான் அவருக்குச் சொல்லிக் கொள்கின்றேன். கடந்தகால அரசு அறிவித்தது, அறிவித்ததோடு சரி. பிறகு அது என்னவோ நிறைவேறவில்லை. ஆனால் இந்த அரசு அதே இடத்தில் என்ன அறிவித்திருக்கிறது என்றால் நிதிநிலை அறிக்கை 65–ஆவது பத்தியிலே இருக்கிறது. பார்த்தால் தெரியும். வேளச்சேரி அருகே இந்தியாவிலேயே முதல்முறையாக கேளம்பாக்கத்தில் பெண் தொழில் முனைவோர்களுக்கு என்று தனியாக உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை உருவாக்கி வருகிறது. இது அடுத்த சில மாதங்களில் செயல்படத் தொடங்கும் என்று நிதிநிலை அறிக்கையிலே இருக்கிறது. அதனைப் பார்த்தால் புரியும்.

தமிழ்நாட்டிலே சிறுதொழில்கள் நலிந்து போயிற்று; அழிந்து போயிற்று என்று சொன்னார்கள். தமிழ்நாட்டில் சிறுதொழில்கள் நலிந்த நிலையில் உள்ளதாக எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? சுமார் 50 ஆண்டுகாலமாக நேற்று வரையிலும் பார்த்தீர்கள் என்றால் 1–4–1996 வரையிலும் பார்த்தால் 50 ஆண்டுகால சிறுதொழில் வளர்ச்சி உருவான சூழ்நிலை இவைகளையெல்லாம் வைத்துப் பார்த்தால் 2,34,400. ஆனால் இந்த 4 ஆண்டு காலத்திலே 1996–97லே 29,445, 1997–98லே 31,159, 1998–99லே 29,623, 1999–2000லே 27,234 (பிப்ரவரி மாதம் 2000 முடிய) மொத்தம் 1,17,461 சிறுதொழில்கள் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை என்பதை நான் மிகுந்த பெருமிதத்தோடு இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

★ ★ ★

நான் நிதிநிலை அறிக்கையிலே கோடிட்டுக் காட்டியுள்ள நாங்குனேரி பிரச்சினை இன்றைய தினம் ஒரு ஒளிமயமான முன்னேற்றத்தை உருவாக்கி யிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன். நாங்குனேரியில் ஒரு பூங்கா அமைக்க 3000 ஏக்கர் நிலம் கையகப்படுத்த திட்டமிட்டு அதிலே ஏறத்தாழ 2000–க்கு மேற்பட்ட இடம் நம் கைவசம் வந்திருக்கின்றது. 3000 ஏக்கரும் மொத்தமாக அரசுக்கு வரவிருக்கிறது. அந்த நாங்குனேரியைப் பற்றிய ஒரு தகவலை மாத்திரம் இங்கே நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

நிதிநிலை அறிக்கையில், "நாங்குனேரி உயர்தொழில்நுட்ப தொழிற்பூங்காவுக்காக High-tech Industrial Park சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. விரிவான சாத்தியக்கூறு அறிக்கை (Detailed Feasibility Report) ஒன்றை இரு பிரபல நிறுவனங்கள் தந்திருக்கின்றன. அங்கு ஒரு ஏற்றுமதி வளர்ச்சி மையம் (Export Promotion Zone) உருவாக்க மத்திய அரசிடம் பதிவு செய்யப் பட்டிருக்கிறது. தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்கு உறு துணையாக விளங்கக்கூடிய இந்த மாபெரும் திட்டப் பணி வரும் நிதியாண்டில் தொடங்கப் படும்" என்று 24–3–2000 அன்று குறிப்பிட்டிருந்தேன்.

இதனையொட்டி, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் 31–3–2000 அன்று வெளியிட்டுள்ள ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கையில், நாங்குனேரி உயர் தொழில்நுட்ப தொழிற்பூங்காவை, சிறப்பு பொருளாதாரப் பகுதியாக (Special Economic Zone) அறிவித்துள்ளார். ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான மத்திய அரசின் கொள்கையில் இரண்டே இரண்டு இடங்களுக்குத்தான் "Special Economic Zone" என்ற சிறப்புத் தகுதி வழங்கி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்று, தமிழ்நாட்டில் தென்மாவட்டத்தில் அமைந்துள்ள நாங்குனேரி உயர் தொழில்நுட்ப தொழிற்பூங்கா, மற்றொன்று, குஜராத் மாநிலத்தின் போசித்ரா.

அது அகில இந்திய அளவில் நமது மாநிலத்திற்கு – குறிப்பாக தென்மாவட்டங்களின் தொழில் முயற்சிக்குக் கிடைத்துள்ள அங்கீகாரம் ஆகும்; பெருமையுமாகும்.

நாங்குனேரியில் அமையவுள்ள உயர்தொழில் நுட்ப தொழிற்பூங்கா Special Economic Zone என்ற தகுதியைப் பெறுவதால், இந்தத் தொழிற்பூங்காவில் உருவாகும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரங்களையும், மூலப்பொருட்களையும் வரியின்றி இறக்குமதி செய்து கொள்ளலாம்; உள்நாட்டுச் சந்தையிலிருந்து அவற்றை வாங்கும்போது வரி கிடையாது; சுங்க வரி கட்டுப்பாடுகள் இங்கு அமையும் தொழில்களுக்குப் பொருந்தாது; வங்கிச் சட்டங்கள், தொழிலாளர் நலச் சட்டங்கள் தவிர, பிற விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் நடைமுறைச் சிக்கல்களில் இருந்து ஏற்றுமதியாளர்கள் விடுவிக்கப்பட்டு விடுவார்கள். இதனால் நாங்குனேரி, வருங்காலத்தில் ஒரு சிறு சீனாவாக (Mini - China) மாறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நாங்குனேரி உயர் தொழில்நுட்பப் பூங்காவில் 8000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு ஏற்படும். வேலைவாய்ப்பும் ஆயிரக்கணக்கானவர்களுக்குக் கிட்டும்.

தூத்துக்குடி துறைமுக விரிவாக்கம், தூத்துக்குடி விமான நிலைய மேம்பாடு, சேதுசமுத்திரம் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு விரிவான சாத்தியக்கூறு ஆய்வு நடத்தவும், சுற்றுச்சூழல் விளைவுகளைக் கண்காணிக்கவும் மத்திய அரசு 4 கோடியே 80 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்திருப்பது, அதிநவீன வசதிகளோடு குளச்சல் துறைமுகத்தைப் பெரிய துறைமுகமாக உருவாக்க, தமிழக அரசு மலேசிய அரசோடு இணைந்து திட்டமிட்டிருப்பது – ஆகிய இந்தப் பின்னணியில் "Special Economic Zone" என்ற அந்தஸ்துடன் நாங்குனேரியில் அமையவுள்ள உயர் தொழில்நுட்பத் தொழிற்பூங்கா, தென்மாவட்டங்களின் ஈர்ப்பு மையமாக விளங்கும் என்பதை நான் மகிழ்ச்சியோடும், பெருமையோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.



**முதலமைச்சர் கலைஞர் அறிவித்த முக்கிய சிறப்பு அம்சங்கள்**

★ புதுடெல்லியிலே அமைந்துள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வரும் "இந்திய மொழிகளின் மையம்" (Centre for India Languages) தமிழ் மொழியைக் கற்பிப்பதற்கும், தமிழ் மொழி ஆராய்ச்சிக்கும் உரிய ஏற்பாடுகளைச் செய்ய முடிவு செய்திருப்பது அறிந்து இந்த அரசு மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றது.

இப்பல்கலைக்கழக இந்திய மொழிகள் மையத்தின் தலைவர் பேராசிரியர் நசீர் அகமதுகான் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ள கோரிக்கையினை ஏற்று தமிழ் மொழி இலக்கியம், கலாச் சாரம் ஆகியவற்றைப் பற்றியும் ஆய்வுகள் விரிவுபடுத்தப்படவும் டெல்லியிலே வாழும் தமிழர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் இந்திய மொழிகளின் மையத்தில் "தமிழ் இருக்கை" (Tamil Chair) ஒன்று உருவாக்கப்பட்டு அதற்கென்று தனியே நிதியொதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ தமிழகத்தில் மொத்தம் 8 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. அத்துடன், ஆண்டுதோறும் 7 ஆயிரம் ஏக்கர் அளவிற்கு தென்னை சாகுபடி பரப்பு அதிகரித்துக் கொண்டு வருகிறது. தென்னை உற்பத்தியில் இந்தியாவிலேயே கேரளத்திற்கு அடுத்து தமிழகம் இரண்டாம் இடத்தை வகிக்கிறது.

இதனைக் கருத்திற் கொண்டு தமிழ்நாட்டிலே உள்ள தென்னை மரங்களை நோயிலிருந்து காலத்தே காப்பாற்றவும், தென்னை சாகுபடியை மேம்படுத்தவும், தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளினுடைய நலனைக் கருத்தில் கொண்டும் தென்னை சார்ந்த உபதொழில்களை ஊக்குவிக்கவும், 12.3.2000 அன்று விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் என்னிடம் வைக்கப்பட்ட கோரிக்கையையொட்டியும் "தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம்" (Tamil Nadu Coconut Development Authority) உருவாக்கப்படும்.

★ மகளிர் நடத்தும் 210 நியாய விலைக்கடைகள் சிறப்பாக நடைபெற்று வருவதைக் கருத்தில் கொண்டு அந்த எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று நிதிநிலை அறிக்கையிலே நான் அறிவித்துள்ளேன்.

அத்துடன், மாவட்டங்களில் உள்ள பெண்களின் சுயஉதவிக் குழுக்கள் 500 கார்டுகளுக்கும் குறையாமல் சேர்த்து நியாய விலைக் கடைகள் அமைத்து நடத்து வதற்கு முன் வந்தால் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அனுமதி வழங்கவும், ஊராட்சித் தலைவர்கள் 500 கார்டுகளுக்குக் குறையாமல் சேர்த்து நியாயவிலைக் கடைகளை அமைத்து மகளிரையே நியமனம் செய்து நடத்த முன் வந்தால், ஊராட்சித் தலைவருக்கு அனுமதி வழங்கவும் முடிவு செய்யப் பட்டுள்ளது.

இதுபோலவே நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களும் நியாய விலைக் கடைகளை நடத்த முன் வந்தால் அவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

★ வணிகர்கள் கொடுக்கும் புகார்களை உடனடியாகக் கவனித்து விசாரணை செய்து, பாதுகாப்பும் நியாயமும் வழங்கிட இப்போது நடைமுறையிலே உள்ள காவல்துறை அமைப்பில் காலதாமதம் ஏற்படுவதால் பல்வேறு பிரச்சினைகள் உருவானது, அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

எனவே, வணிகர்கள் தரும் புகார்களை உடனடியாக விசாரித்து நியாயமும் வழங்க ஏதுவாக ஒவ்வொரு மாவட்ட காவல்துறை கண்காணிப்பளர் (S.P.Office) அலுவலகத்திலும் தனிப் பிரிவு ( Police Special Branch for Traders) அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது.



★ அமைப்பு ரீதியல்லாத தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதிலே பெரும் அக்கறை கொண்டுள்ள தமிழக அரசு அவர்களுக்கென நல வாரியம் ஒன்று அமைத்துள்ளது. இதில் பதிவு செய்து கொண்டுள்ள தொழிலாளர்கள் விபத்து நிவாரணம், மகளிருக்கு மகப்பேறு நலன், பணி ஓய்வுகாலப் பயன்கள் போன்ற உதவிகளை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த வாரியத்தில் ஏற்கெனவே சேர்ந்து கொண்டுள்ள தையல் தொழிலாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்களின் கோரிக்கைகளை ஏற்று இவர் களுக்குத் தனித்தனியாக நல வாரியங்களை அமைக்க முடிவு நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோலவே முடி திருத்துவோர் மற்றும் சலவைத் தொழிலாளர்கள் மிகுந்த எண்ணிக்கை இருப்பதைக் கருத்தில் கொண்டு அந்த இரு பிரிவினருக்கும் என தனித்தனியே நல வாரியம் அமைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

★ அரசுக்குத் தேவை இல்லை என்ற நிலையில் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் நீண்டகாலமாக குடியிருப்போருக்குப் பட்டா வழங்க வேண்டும் என்று முடிவு எடுத்து, முதலில் 20 ஆண்டுகளுக்கு மேல் குடியிருப்போருக்கு என்றும், பிறகு நிதிநிலை அறிக்கையிலே அதை 10 ஆண்டுகள் என்றும் குறைத்து அறிவிக்கப்பட்டது.

★ இப்போது அதைப்பற்றிய விளக்கம் ஒன்றைத்தர விரும்புகின்றேன். உதாரணமாக ஒரு சர்வே எண்ணின் மொத்தப் பரப்பளவு 2 ஏக்கர் என்று வைத்துக் கொள்ளலாம். அதில் 30 குடும்பங்கள் வீடு கட்டியும் குடிசை போட்டும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய அனுபவத்திலேயுள்ள மொத்தப் பரப்பளவு 1 ஏக்கர், 25 சென்ட். மீதி 75 சென்ட் இடம் காலியாக உள்ளது. 30 குடும்பங்களில் 15 குடும்பங்கள் 10 ஆண்டுகளுக்கு மேலும், 10 குடும் பங்கள் 7 ஆண்டுகளுக்கு மேலும், 5 குடும்பங்கள் 2 ஆண்டுகளுக்கு மேலும் குடியிருந்து வருகிறார்கள்.

இந்த 2 ஏக்கரும் அரசுக்குத் தேவை இல்லை என்ற நிலை இருக்குமானால் பட்டா தரவேண்டும். அங்கு 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வரும் 15 குடும்பங்களுக்கு மட்டுமல்லாமல் 7 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வரும் 10 குடும்பங்களுக்கும், 2 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வரும் 5 குடும்பங்களுக்கும் பட்டா வழங்கப்படும். அதுமட்டுமல்லாமல், அதே சர்வே நம்பரில் காலியாகவுள்ள 75 சென்ட் இடத்தையும் கூட அதே ஊரில் வீட்டுமனை இல்லாத தகுதியுள்ள ஏழையெளிய மக்களுக்குப் பிரித்து பட்டா வழங்கப்படும்.

★ நில்வரி பாக்கிக்காகவும், கூட்டுறவுக் கடன் பாக்கிக்காகவும், மாவட்டங்களில் உள்ள வெவ்வேறு மட்டங்களில் அரசு அனுமதியின்றி ஜப்தி செய்து, ஜப்தியின் மூலம் வசூல் செய்வது என்று இதுவரை முடிவு செய்யப்பட்டு வருகிறது. இந்த நடைமுறையை மாற்றி, இனி இது போன்ற நேர்வுகளில் அரசின் அனுமதி ஆணையின்றி, ஜப்தி நடவடிக்கையிலே யாரும் ஈடுபடக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

★ வருவாய்த் துறையை மக்களுக்குத் துரிதகதியில் பணியாற்றும் துறையாக மாற்ற ஏதுவாக மாவட்டங்களைக் கணினிமயமாக்கும் திட்டத்தையும், விவசாயிகளுக்குப் பட்டா வழங்கும் திட்டத்தையும் முனைப்போடு செயல்படுத்துவோம் என்று நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தேன்.



தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்களில் ஐம்பது இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள், கூட்டுப்பட்டா வாங்கியிருப்பது புள்ளி விவரங்களில் சேகரிக்கப் பட்டுள்ளது. அதில் பலர் தனிப்பட்டா வைத்துக் கொள்ள விரும்பியும், சில நிர்வாகக் காரணங்களால் அது இயலாமல் இருக்கிற நிலை என் நேரடிக் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், இந்தக் கூட்டுப் பட்டாவினை விரும்பாதவர்களுக்குத் தனிப்பட்டாவாகக் கொடுப்பதற்கு நிர்வாக நடவடிக்கையை முடுக்கிவிடுவதற்காக தீவிரப் பதிவுமாற்றம் மற்றும் உட்பிரிவு முனைப்புத் திட்டம் ஒன்றை இன்னும் ஆறு மாத காலத்திற்குள் செயல்படுத்தி முடித்திட உள்ளோம். இதன்மூலம் ஒரு கோடிக்கும் அதிகமானோர் பலன் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பது மகிழ்ச்சியான செய்தியாகும்.

★ கேளிக்கை வரி சட்டப்பிரிவு 4–ன் கீழ் வரி செலுத்தும் திரையரங்கு தாரர்கள் புதிய படங்களுக்குச் செலுத்தும் வரி 30 விழுக்காட்டில் இருந்து 25 விழுக்காடாகக் குறைகிறது என்று நிதி நிலை அறிக்கையில் குறைக்கப் பட்டது.

இந்த வரிச் சலுகை இணக்க வரி செலுத்தும் திரையரங்கு தாரர்களுக்கும் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, கேளிக்கை வரிச் சட்டம் 5(ஏ) மற்றும் 5(பி)–ன் கீழ் விதிக்கப்படும் இணக்க வரியிலும் தகுந்த மாற்றங்கள் செய்யப்படும்.

★ தற்போது சித்த மற்றும் யுனானி மருந்துகளுக்கு வரி விலக்கு உள்ளது. திரு குமாரதாஸ் அவர்கள், ஆயுர் வேத மருந்துகளுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்பட வேண்டும் என்று கோரினார். ஓமியோபதி மற்றும் ஆயுர்வேத மருந்துகளுக்கு விதிக்கப்படும் விற்பனை வரி 8 விழுக்காட்டி லிருந்து 4 விழுக் காடாகக் குறைக்கப் படும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதித் திட்டம். யாரும் பேசவில்லை. சுப்பராயன் மட்டும் தான் பேசினார்.

ஊரக வளர்ச்சித்துறை மானியக் கோரிக்கை, புத்தக எண்.27, பக்கம் எண். 99–ல் இந்தத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.117.50 கோடி என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. பெரும்பாலான உறுப்பினர்கள் இந்த ஆண்டின் இந்தத் தொகையை உயர்த்தித்தர கோரிக்கை வைக்கவேயில்லை, சுப்பராயன் அவர்கள் மட்டும் ஒரு கோடி ரூபாய் அளவில் ஒதுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். இதை யாரும் கேட்காததால் தான் நிதிநிலை அறிக் கையில் நானும் விட்டு விட்டேன். ஏனென்றால் திட்டம் நிறைவேற்றினால் கட்டாயம் கேட்பார்கள்.

எனினும் இத்திட்டத்திற்கு இருக்கும் மக்கள் வரவேற்பை அனுசரித்து, கடந்த ஆண்டு தொகுதி ஒன்றுக்கு 50 இலட்சம் ரூபாய் என்று ஒதுக்கப்பட்டது, இந்த ஆண்டு ரூ.60 இலட்சம் ஆக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். □







# தமிழ் வளர்ச்சி - ஒரு பார்வை

தமிழைக் ''கன்னித் தமிழ்'', ''என்றுமுள தென்தமிழ்'' என்றெல்லாம் புலவர் போற்றினர். இப்புகழ்ச்சி பழைமை பாராட்டுவதாக உள்ளது; வளர்ச்சி பற்றிச் சிந்தனை செய்யவில்லையா? வளர்ச்சியே இல்லையா? என்ற வினா தோன்றக் கூடும். நானூறு ஆண்டுகட்கு முன் கூட வளர்ச்சி வரையறுக்கப்பட்டதாகத் தான் இருந்தது. வெளியீட்டுச் சாதனங்கள் குறைவாக இருந்தமையால் வளர்ச்சி சிறிதே இருந்தது என்பாரும் உளர்.

முன்பெல்லாம் தமிழ் ஓலையிலும் கல்வெட்டிலும் இருந்தது. ஓதுவார் நாவிலும் தவழ்ந்து வந்தது. எழுத்தாக இருக்கும் தமிழுக்கு அடிப்படை பேச்சுத் தமிழாகும். தமிழ் பேசும்மொழியாக உள்ள வரையிலும் வாழ்கிறது; வளர்கிறது என்றே கூற வேண்டும்.

தமிழ்நாட்டின் எல்லை வடவேங்கடம் - தென்குமரி என்றிருந்தது இன்று குறுகி இருக்கிறது. அதனால் தமிழ் வளர்ச்சி இல்லையா? தமிழர் எண்ணிக்கை இப்போது பெருகியிருக்கிறது. ஆகவே தமிழ் வளர்ந்திருக்கிறது எனலாமா? தமிழர் எண்ணிக்கைக்கு ஏற்பக் கல்வியறிவு பெருகவில்லை யானாலும்கூடத் தமிழ் வளர்ச்சி அடைந்துள்ளது. பத்திரிகை உலகில் தமிழ் முன்னேறி வருகிறது. தமிழ் நூல்களும் அழகான நிலையில் வெளிவந்து கொண்டு இருக்கின்றன.

தமிழ்நாட்டின் அரசியல் மொழியாகத் தமிழ் உயர்ந்துள்ளது; உயர்நிலைப் பள்ளிகளின் கல்வி மொழியாகவும் வாழ்கிறது; தமிழ் மேடையின் முழக்கமாகவும் உள்ளது; ஆனால், கல்லூரி மொழியாக முழுமையாகப் பயன்படவில்லை.

கம்பனைப் போற்றியவர்கள், குடியரசு வந்ததும் பாரதியையும் போற்றத் தொடங்கினர். பாரதி வாழும் போதே உலகம் அவன் பாடலைப் பாடத் தொடங்கி விட்டது. பாரதியால் தமிழ் வளர்ந்தது. தமிழால் பாரதியும் வளர்ந்தார். அவர் நாட்டுப்பாடல் மட்டுமா பாடினார்? அவர் பாடிய கண்ணன் பாட்டு - புதிய திருவாய் மொழி; பாஞ்சாலி சபதம் - புதிய இதிகாசம்; குயில்பாட்டு - குழந்தைகள் முதல் ஞானிகள் வரை பலரும் தத்தமக்கு ஏற்ற வகையில் ஈடுபடும் காப்பியம். பாரதியால் வளர்ந்த தமிழ் பாரதிதாசன், கவிமணி முதலியோரால் மேலும் வளர்ந்தது.

தமிழிசைப் பாடல்களை இடையில் மறந்த காலம் போய் இன்று அவை புது வாழ்வு பெற்று வருகின்றன. நாட்டுப்புறப் பாடல்களை நாட்டின் செல்வமாய்க் கொள்ளும் குடியரசுக் காலத்தில் அந்த நடையிலும் நூல்கள் வெளிவருவது இயல்பேயாகும்; வளர்ச்சியுமாகும்.

அச்சுப் பொறியே குடியரசின் கல்விப்பொறி. அதனால் எதனையும் எளிதில் அச்சிடலாம். அச்சுப்பணி பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்து வருகிறது. குப்பையும் நுரையும் சேறும் கலக்கமும் ஆரவாரமும் இருந்தாலும் ஆறு கரை மீறாமல் இருக்கிறது. கரையைக் காக்கும் முயற்சியும் நடைபெற்று வருகிறது.

மேடைத் தமிழிலும் வளர்ச்சி ஏற்பட்டது. ஆட்சி மாறும் அளவுக்கு மேடைத் தமிழ் வளர்ந்தது. உரைநடையை ஓர் இலக்கியம் என அறியாத காலமும் இருந்தது. பேசுவதே உரைநடையில் தானே! பத்திரிகைகளின் வளர்ச்சியால் பல கருத்துகளையும் விளக்கும் ஆற்றலையும், நுட்பத்தினையும் உரைநடைத் தமிழ் பெற்று வளர்ந்திருக்கின்றது. மொழி பெயர்ப்பு முறையும் தேவைக்கும் விரைவினுக்கும் ஏற்ப வளர்ந்து வருகின்றது. வானொலி வழி வெளிப்படும் உரைநடை, செறிவும் திட்பமும் உடையதாக வளர்வதோடு, பரந்த கருத்துக்களைப் பலரும் அறியுமாறு சுருங்க விளக்கும் திறமும் பெறுகிறது.

சிறுவர் இலக்கியம் ஒரு புத்தம்புது முயற்சி. முதியோர் இலக்கியத்தையே வழங்கி வந்த நிலை மாறி, குழந்தைகளுக்கெனத் தனிப் பாடநூல், பாடல்,

□ முனைவர் சா. வளவன்

கதை என வளர்ந்து வருகிறது. இளைஞர்களுக்கென்று பாடல்களும், கதைகளும் விளக்கங்களும் படங்களோடும் சுவையோடும் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் வெளி வருகின்றன. அவர்கள் மனநிலையையும் மொழிப் பாங்கினையும் ஆராய்ந்தறிந்து எழுதப்பட்டு வருகின்றன.



புதினங்கள் முதலில் மொழிப்பெயர்ப்புகளாகவும் தழுவல்களாகவும் இருந்தன. பின்னர் புதிய தமிழ்ப் படைப்புகளாக வெளிவரலாயின. சிறந்த மொழிபெயர்ப்புகளும் பலப்பல திறத்தில் வருகின்றன. சிறுகதை வளர்ச்சியும் தமிழின் வளர்ச்சியைக் காட்டுகிறது. நாடகத்துறை, அதன் சிக்கல்களை அறிந்து திகைப்பின்றி இயங்குவதே பெரிய வளர்ச்சி. புதிய அறிவியல் போக்கினைப் பயன்படுத்தி உலகை மயக்கும் வெள்ளித் திரையில் வளருவது நாடகமேயாகும். வானொலி நாடகம் ஒரு புதுமை. கற்பனையில் அனைத்தையும் காணும் புதுமைக்கு ஏற்ற நுண்ணிய ஒலி வேறுபாட்டினையும் இனிமையினையும் ஆற்றலினையும் இடத்திற்கு ஏற்பத் தமிழ் பெற்று வளர்கிறது. கலைகளை வளர்க்கும் தமிழ் தானும் வளர்கிறது. வரலாறு, உளவியல், இலக்கிய ஆராய்ச்சி என்று பல துறைகளிலும் தமிழ் வளர்ச்சி உள்ளது என்று தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் நிறுவியுள்ளார்.

பேசும் மொழியை ஆங்கிலத்துடன் ஈடுபடுத்தி, ஆங்கிலம் பெற்றுள்ள மொழித் திறனை, செல்வாக்கினைப் பெற்று வளர்ச்சி பெறும் வரை ஆங்கிலத்தைப் பயன்பாட்டு மொழியாகக் கொள்ள வேண்டும் என்ற கருத்தினால் தமிழின் வளர்ச்சியை அடையாளப்படுத்தத் தவறிவிட்டனர் எனலாம்.

மொழிப் பயன்பாட்டில் ஆங்கிலம், இந்திய மொழிகளைக் காட்டிலும் ஆற்றல் பெற்றது என்ற மனப்பாங்கு இருந்தது. தமிழரும் விதிவிலக்கல்லர். இம்மனப்பாங்கு, சிறுகச் சிறுக மாறத் தொடங்கியது. மொழியின் வளர்ச்சியிலும் முன்னேற்றம் தொடங்கியது; பார்வையிலும் படத் தொடங்கியது. இன்றைய நிலையில் மிக வேகமாக வளர்ந்து வரும் சமுதாய அறிவியல் வளர்ச்சியைத் தமிழ்வழி அறிந்து கொள்வதும் கற்பிப்பதும் ஓரளவு எளிதாக உள்ளது. அதற்குத் தமிழின் பல பிரிவுகளில் புதுமையாக்கம், நிலை பேறாக்கம் முதலியன நிகழ்ந்திருக்கின்றன. தமிழின் வளர்ச்சியாக இவற்றை உறுதியாகக் கூறலாம்.

இந்திய நாட்டுச் சூழலில் நான்கு மொழிக் குடும்பங்களைச் சார்ந்த மொழிகள் வழக்கில் இருந்து வருகின்றன. இவற்றில் பல பேச்சு வழக்கினை மட்டுமே கொண்டு செயற்பட்டு வருகின்றன. பதினைந்து அல்லது பதினாறு மொழிகளே எழுத்து வழக்கினைப் பெற்று, இலக்கிய, இலக்கண வளம் நிறைந்த மொழிகளாக உள்ளன. இம்மொழிகள் தேசிய மொழிகளாகவும் உள்ளன. இவற்றுள் ஒன்று ஆட்சி மொழியாகவும் அதற்குத் துணையாக ஆங்கிலமும் பயன்பட்டு வருவதை அறிவோம். மொழி அடிப்படையில் இந்தியா பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாநிலத்திலும் அம்மாநிலத்தில் வழங்கும் பெரும்பான்மை மொழி ஆட்சி மொழியாக இருந்து வருகிறது.



ஒவ்வொரு மாநிலத்திலும் வெவ்வேறு மொழிக் குடும்பங்களைச் சார்ந்த மொழிகள் சில வழக்கில் இருந்து வருகின்றன. இந்தியா முழுவதும் பலமொழி வழக்குநிலை பரவலாக இருந்து வருகிறது. இச்சூழலில் ஒரு மொழியின் வளர்ச்சிக்குப் பலதடைகள் உள்ளமையை அறியலாம். பிறமொழிகளைப் போலவே மெல்ல வளர்ந்தாலும் தமிழின் வளர்ச்சி குறைவானதன்று. தமிழ் இன்றைய மொழிப் பயன்பாட்டில் கல்வித்துறை, பரவல் செய்தித் தொடர்பு, நீதித்துறை போன்ற பல துறைகளிலும் பயன்படுத்தப்பட்டும் வருகிறது. இவற்றால் மொழி வளர்ச்சி நிகழ்வு தொடர்வதாயிற்று.

ஒரு மொழியின் வளர்ச்சி என்பது அம்மொழியினுடைய மொழிப் பயன்பாட்டைக் கருத்தில் கொண்டே பெரும்பாலும் அளவிடப்படுகிறது. ஒரு மொழி எந்த அளவுக்குச் சமுதாயத்தின் பணிகளை நிறைவேற்றுவதில் பங்கு பெறுகிறது என்பதைப் பொறுத்தே அதன் உண்மையான வளர்ச்சி வெளிப்படுகிறது. ஒரு மொழியின் சொல்வளம், சொற்றொடர் வளம், பொருள்வளம், எளிமை போன்றவை விரைவாக வளர்ந்து வரும் சமுதாய, அறிவியல் முன்னேற்றங்களை எளிதிலும் விரைவிலும் பெருமளவிலும் வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் வளர வேண்டும்.





தமிழ் மொழியில் குறிப்பாக மொழிப் பயன்பாட்டில் சமுதாயத்தின் தேவைக்கேற்ப ஓரளவு பல புதிய சொற்களையும், பழைய சொற்களில் சில மாற்றங்களைச் செய்து அவற்றையும் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளோம். ஆட்சித்துறைக்கெனக் கலைச்சொல் அகராதிகள் சில வெளியிடப்பட்டுள்ளன. பிறமொழிக் கருத்துகளை மற்றும் சொற்களை எடுத்தாளும் போது அவற்றை அப்போது நடைமுறையிலிருக்கும் சமுதாய மொழியியல் சூழலுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட வழக்கு முறையில், நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட சொற்கள், சொற்றொடர்கள் போன்றவை மொழிப் பயன்பாட்டில் எளிமையும் ஆற்றலும் பெற்று விளங்க வேண்டும். காரணங்களை ஆராய்ந்து அவற்றிற்கேற்ப மீண்டும் அச்சொற்களை மொழிப் பயன்பாட்டின் தன்மைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். வேறொரு முறையும் கைக்கொள்ளப்படுகின்றது. ஒருமுறை மொழிப் பயனில் புகுத்தப்பட்ட சொற்கள், சொற்றொடர்கள் போன்றவை மொழிப்பயன்பாட்டில் ஒரு குறிப்பிட்டதுறைக்கு ஏற்றவையாக அமையாவிட்டால் அவற்றை அப்படியே நிலை நிறுத்திக் கொண்டு, அக்குறிப்பிட்ட மொழிப் பயன்பாட்டிற்கென மீண்டும் மொழிக்கூறுகளைப் புதுமையாக்கம், நிலைபெறாக்கம் ஆகிய முறைகளின் மூலம் உருவாக்கி அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். புதுமையாக்கத்தின் ஒரு பகுதியாக எளிமையாக்கம் செயற்படுகிறது.

இவற்றை உணர்ந்தோர் தமிழிலும் தக்கவாறு உதவுகின்றனர். தமிழ் எழுத்துக்கள், சந்தி, சொற்றொடர் அமைப்பு முதலியனவற்றை எளிமைப்படுத்தும் முயற்சி பல ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. தமிழ் மொழிப் பயன்பாட்டில் ஒப்புமையாக்கத்தின் மூலம் சில புதுச்சொற்கள் ஆக்கப்பட்டு வருகின்றன. இன்று வழக்கிலுள்ள மொழிநடை (Style) பல துறைகளிலும் பயன்படும் வகையிலும் மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

கல்வி கற்பித்தலுக்கென ஒரு மொழி நடை, ஆட்சித்துறைக்கென ஒரு மொழி நடை, அறிவியல் துறைக்கென ஒரு மொழிநடை, செய்தித் தொடர்புகேற்ற ஒரு மொழி நடை என்று பல சமுதாயப் பணிகளுக்கேற்ப மொழி நடையில் வளர்ச்சி நிகழ்ந்து வருகிறது.



## கலைச் சொல்லாக்கம்

தமிழ் மொழியின் வளர்ச்சியில் கலைச்சொல்லாக்கம் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றுள்ளது. கலைச் சொல்லாக்கம் எம்முறையில் உருவாக்கப்படுகிறது என்பதைப் பலரும் அறிவதால் பல புதிய சொற்கள் பெருகும். கலைச் சொற்கள், பேசும் மொழிக்கு எந்த அளவில் பயன்படுகிறது என்ற ஆய்வும் தமிழின் வளர்ச்சிக்கு உதவும். இவற்றை உணர்ந்தே, கலைச் சொல்லாக்கம் தமிழில் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கலைச் சொற்களின் வளர்ச்சியால் தமிழ் மொழியின் சொற்களஞ்சியம் பெருகி வருகிறது. இச்சொற்களைப் பயன்படுத்துவதற்கெனச் சில புது அமைப்புகளும் மொழி நடையும் தோன்றி வளர்ந்து வருகின்றன.

சொல்லாக்கத்தினைக் கருத்தில் கொண்டு, எல்லாத் துறைகளுக்குமுரிய கலைச் சொற்களைத் தமிழில் ஆக்க, தமிழக அரசு பல அமைப்புகளை ஏற்படுத்தி உள்ளது. தமிழ்வளர்ச்சித்துறையில் மட்டும் இதுவரை 78 துறைகளுக்குரிய சிறப்புச் சொல்துணை அகராதிகள் வெளியிடப்பட்டுள்ளன. பழைமையைப் போற்றுவோரும் புதுமையை விரும்புவோரும் தொடர்ந்து தத்தம் வழிகளில் சொல்லாக்க ஆய்வில் ஈடுபட்டு வருகின்றனர். இருவரும் இணையும் போது விரைவும் கூடுதலாகும்.

- *தமிழ்மொழி வரலாறு*
  *இ.ஆ.ப. தேர்வு–கருவி நூலில் தற்காலத்தில்*
  *தமிழின் வளர்ச்சி கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.*
- *வெளியீடு : தமிழ் வளர்ச்சித்துறை*

# வீட்டுக் காய்கறித் தோட்டம்

மனிதன் வளமுடனும், நல்ல பொலிவுடனும் வாழ, சத்துணவு மிகவும் அவசியம். பல்வேறு ஊட்டச்சத்துக்களும் சரியான அளவில் கலந்த உணவையே நாம் சத்துணவு என அழைக்கின்றோம். ஊட்டச் சத்துக்களில் வைட்டமின்கள், உலோக உப்புச் சத்துக்கள், புரதச்சத்து, அவற்றில் அடங்கியுள்ள அமிலோ அமிலங்கள் முதலியன பகுத்து ஆராயப்பட்டு, சத்துணவு என்ற கோட்பாட்டினை வல்லுநர்கள் வகுத்துள்ளனர். பல்வேறு உடல் நிலைகளுக்கும், வேலைத் திறனுக்கும் தக்கவாறு மனிதனுக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்துக்களின் அளவுகள் கணிக்கப்பட்டு, மனிதன் அன்றாடம் உட்கொள்ள வேண்டிய உணவு வகைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.



மனிதன் அன்றாடம தன்னுடைய உணவில் சுமார் 300 கிராம் காய்கறிகளைக் கண்டிப்பாகச் சேர்த்துக் கொள்ளுவது அவசியம் என உணவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். இதில் கீரை வகைகளின் பங்கு 125 கிராமும், கிழங்கு மற்றும் வேர்க்காய்கறிகளின் பங்கு 200 கிராமும், இதர காய்கறிகளின் பங்கு 75 கிராமும் இருத்தல் சாலச் சிறந்தது என்ற கருத்தினையும் நிபுணர்கள் கூறுகின்றனர். காய்கறிகளில் மாவுச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச் சத்து, தாது உப்புகள் மற்றும் வைட்டமின்கள் நிறைந்துள்ளன. எனவே காய்கறிகளைத் தேவையான அளவு உணவில் சேர்ப்பதன் மூலம் பல நோய்களின் தாக்குதலைத் தவிர்ப்பதுடன் உடலும் நல்ல ஆரோக்கியத்துடன் காணப்படும். உடல் நலத்திற்குத் தேவையான முக்கியத் தாது உப்புக்களான சுண்ணாம்பு, பாஸ்பரஸ், இரும்பு ஆகியவை காய்கறிகளைத் தவிர மற்ற உணவுப் பொருட்களில் போதிய அளவு கிடைப்பதில்லை. மேலும், உணவு செரிக்க உற்பத்தியாகும் அமிலத்தைச் சமநிலைப்படுத்த காய்கறிகள் தேவைப்படுகின்றன. எனவே, காய்கறிகளை நல்ல காப்பு உணவு என்று கூறுவது மிகையாகாது.

**காய்கறிகளிலுள்ள ஊட்டச்சத்துக்கள்**

பொதுவாக — காய்கறிகளில் வைட்டமின் சத்துக்கள் அதிக அளவில் உள்ளன. வைட்டமின் 'ஏ' நிறைந்துள்ள காய்கறிகளில் தக்காளி, கேரட், பட்டாணி, கீரைகள், சர்க்கரைவள்ளிக்கிழங்கு, முட்டைக் கோசு முதலானவைகள் அடங்கும். பீன்ஸ் வகைக் காய்கறிகள் மற்றும் மிளகாய் ஆகியவற்றில் வைட்டமின் 'பி' சத்து அதிக அளவில் உள்ளது. பச்சைக் காய்கறிகளில் வைட்டமின் 'சி' மிகுதியாக உள்ளது. முட்டைக்கோசு, கீரைகள், தக்காளி, அவரை, பாகல், பட்டாணி, குடமிளகாய் முதலான காய்கறிகளில் வைட்டமின் 'சி' சத்து மிகுந்து காணப்படுகிறது. லெட்டூஸ் மற்றும் பசுமையான காய்கறிகளில் வைட்டமின் 'டி'யும், வைட்டமின் 'இ' சத்தும் அடங்கியுள்ளன.

**புரதச்சத்து நிறைந்துள்ள காய்கறிகள்** : அவரை, பீன்ஸ், பட்டாணி கொத்தவரை, மொச்சை, கீரைகள், தட்டைப் பயறு

**சுண்ணாம்புச் சத்து நிறைந்த காய்கறிகள்** : தண்டுக்கீரை, வெந்தயக்கீரை, மிளகாய், வெண்டை, முட்டைக் கோசு, வெங்காயம், கேரட், கருணைக்கிழங்கு.

**இரும்புச் சத்து நிறைந்துள்ள காய்கறிகள்** : கீரைகள், பாகல், மிளகாய், பட்டர் பீன்ஸ், அவரை, முட்டைக்கோசு.



**அயோடின் சத்து நிறைந்துள்ள காய்கறிகள்** : வெண்டைக்காய், பரங்கி, அஸ்வராகஸ்.

**தமிழ்நாட்டில் காய்கறி சாகுபடி**



தமிழ்நாட்டில் காய்கறிகள் சுமார் 1.71 இலட்சம் எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு ஆண்டுதோறும் 45.16 இலட்சம் டன் மகசூல் பெறப் படுகிறது. இந்தியாவில் சராசரி மனிதன் நாளொன்றுக்குச் சுமார் 60 கிராம் காய்கறிகளையே உட்கொள்கின்றான். ஒரு நாளைக்கு 300 கிராம் காய்கறிகளை உட்கொள்ள வேண்டும் என்ற கணக்கின்படி தமிழ்நாட்டில் காய்கறித் தேவையைப் பூர்த்தி செய்ய உற்பத்தியை மேலும் ஐந்து மடங்கு அதிகரிக்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். எனவே, காய்கறி தேவையைப் பூர்த்தி செய்ய, காய்கறி பயிரிடப்படும் நிலப்பரப்பை அதிகரிப்பதுடன் விளைச்சல் திறனையும் நாம் அதிகரிக்க வேண்டும். இதற்கு உயர் விளைச்சல் தரும் வீரிய ஒட்டு இரகங்கள், தரமான விதைகள், புதிய தொழில்நுட்பங்கள், அறுவடைக்குப்பின் கெட்டுப் போகாமல் பாதுகாப்பதற்கு உரிய வழிமுறைகள், புதிய பதப்படுத்தும் முறை ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

காய்கறிப் பயிர்கள் குறைந்த காலத்தில் நிறைந்த மகசூல் தருவதால, அவற்றை நீண்ட காலப் பயிர்களுடனும், நிரந்தரப் பயிர்களான பழமரங்கள், தென்னை இவற்றின் இடைவெளியிலும் ஊடுபயிர்களாகப் பயிரிடலாம். மேலும் மற்ற பயிர்களுடன் தோழமைப் பயிராகவும் (Companion Cropping), கலப்புப் பயிராகவும் (Mixed Cropping) காய்கறிகளைப் பயிரிட்டு விளைச்சலைப் பெருக்கலாம். பயிற்சுழற்சியில் (Crop Rotation) காய்கறிகளை ஒரு பருவத்தில் பயிரிடுவதால் உற்பத்தியைப் பெருக்க முடியும்.

இருப்பினும், ஒவ்வொரு குடும்பமும் அவர்களது வீட்டில் காய்கறித் தோட்டங்களை அமைப்பதன் மூலம் அவர்களது அன்றாடக் காய்கறித் தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய இயலும். தற்பொழுது வீட்டுக் காய்கறித் தோட்டங்கள் — குறிப்பாக நகரங்களில் வீட்டைச் சுற்றியுள்ள காலியிடங்களிலும், மாடியின் மேலும், தொட்டிகள் மற்றும் மரப்பெட்டிகளிலும் காய்கறித் தோட்டங்களை அமைத்து வருகின்றனர். கிராமங்களில் காலியிடங்களில் மட்டுமின்றி வீடுகளின் கூரைகள் மேலும், முற்றங்களிலும், வைக்கோல் போர்கள் மீதும் கொடி காய்கறி வகைகளைப் பயிரிடுகிறார்கள்.

**வீட்டுக் காய்கறித் தோட்டம் அமைத்தல்**

வீட்டுக் காய்கறித் தோட்டம் ஒரு குடும்பத்திற்குத் தேவையான சுவைமிகு காய்கறிகளைப் புதியதாகத் தருவதுடன் மகிழ்ச்சியையும், நல்ல பொழுது போக்கையும் தருகின்றது. காய்கறிகளின் விலை ஏறிக்கொண்டே போகும் இத்தருணத்தில் ஒவ்வொரு வீட்டிலும் வசதிக்கேற்ப காய்கறிகளைப் பயிரிடுவது நல்லது. வீட்டைச் சுற்றியுள்ள காலியிடங்கள்

சிறியவைகளாக இருந்தாலும் சரி, தேவைக்கேற்ப சில காய்கறிகளை ஆண்டு தோறும் பயிரிடலாம். சாதாரணமாக 5 நபர்கள் கொண்ட குடும்பத்திற்கு வேண்டிய காய்கறிகளை சுமார் 5 சென்ட் நிலத்திலிருந்து பெறலாம். வீட்டுக் காய்கறித் தோட்டம் நமக்கு அளிக்கும் நன்மைகளோ பல. அவைகளாவன:

1. குறைந்த செலவில் ஆண்டு முழுவதும் பசுமையான காய்கறிகளைப் பெறலாம்
2. ஓய்வு நேரத்திற்கு உகந்த பொழுதுபோக்கு
3. தோட்ட வேலை சிறந்த உடற்பயிற்சி
4. சுற்றுப்புறம் சுத்தமாக அமையும்
5. கழிவு நீரைக் கொண்டே கிடைத்திடும் சிறந்த காய்கறிகள்

## இணைப்பு - 1

### விட்டுக் காய்கறித் தோட்டம் - பயிர் தொடரும் முறை

| வ.எண். | காய்கறிகளின் பெயர் | பயிரிடும் காலம் |
|---|---|---|
| 1. | கத்திரி, முள்ளங்கி | ஜூன்–நவம்பர் |
| | முட்டைக்கோசு | டிசம்பர்–பிப்ரவரி |
| | தட்டைப்பயறு | மார்ச்–ஜூன் |
| 2. | கொத்தவரை | ஜூன்–செப்டம்பர் |
| | தக்காளி,பீட்ரூட் | அக்டோபர்–ஜனவரி |
| | முள்ளங்கி | பிப்ரவரி–மார்ச் |
| | தண்டுக்கீரை | ஏப்ரல்–ஜூன் |
| 3. | தக்காளி, தட்டைப்பயறு | ஜூலை–அக்டோபர் |
| | கத்திரி | நவம்பர்–மார்ச் |
| | வெண்டை | ஏப்ரல்–ஜூன் |
| 4. | வெண்டை | ஜூலை–செப்டம்பர் |
| | தட்டைப்பயறு | அக்டோபர்–ஜனவரி |
| | தக்காளி–தண்டுக்கீரை | பிப்ரவரி–மே |
| | முள்ளங்கி | ஜூன்–ஜூலை |
| 5. | மிளகாய்,முள்ளங்கி | ஜூன்–செப்டம்பர் |
| | கேரட் | அக்டோபர்–ஜனவரி |
| | கொத்தவரை | பிப்ரவரி–மே |
| 6. | பெரிய வெங்காயம் | ஜூன்–செப்டம்பர் |
| | மிளகாய் | அக்டோபர்–ஜனவரி |
| | கீரை | பிப்ரவரி–மார்ச் |
| | முள்ளங்கி | ஏப்ரல்–மே |

வீட்டுத் தோட்டம் அமைக்கும் போது கீழ்க்காணும் குறிப்புகளை மனதில் கொள்ள வேண்டும்.

1. இடம் மற்றும் நீர் வசதி
2. மண்ணின் தரம் மற்றும் பருவம்
3. தேவையான காய்கறிகள்

பொதுவாக நிழல் படாத நல்ல திறந்த வெளியான இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும். மண் பரப்பின் மேலுள்ள கற்கள், ஓடுகள், கண்ணாடித் துண்டுகள் போன்றவைகளை அப்புறப்படுத்தி, 45 செமீ ஆழத்திற்கு மண்ணை நன்றாகக் கொத்தி கல்கட்டிகளையும் அப்புறப்படுத்த வேண்டும். பிறகு தொழு உரம் அல்லது கம்போஸ்டு உரத்தினை 1 ச.மீட்டருக்கு 2.5 கிலோ என்ற அளவில் இட்டு நன்றாகக் கலந்து சமன் செய்ய வேண்டும். வீட்டுத் தோட்டத்திற்கான மாதிரி வரைபடம் இணைப்பு–2ல் தரப்பட்டுள்ளது. அதற்கேற்றவாறு பாத்திகளையும், நடைபாதைகளையும் அளவு செய்து பிரித்துக் கொள்ள வேண்டும்.

### பருவமும் விதைப்பும்

ஆடி மற்றும் தை மாதங்கள் காய்கறிகள் பயிரிடுவதற்கு ஏற்ற முக்கியக் காலமாகும். தக்காளி,



கத்திரி, வெண்டை, கொத்தவரை போன்ற காய்கறிகளை ஆண்டு முழுவதும் பயிரிடலாம். கொடி காய்கறிகளான பூசணி, புடல், பீர்க்கன் போன்றவைகளை மேற்கூறிய இரு பட்டங்களில் சாகுபடி செய்யலாம். காய்கறிகளைப் பிரதான பாத்திகளில் மட்டுமின்றி நடைபாதைகள், வேலிகள் மற்றும் மண் திட்டுகளின் மீதும் கீழ்க்கண்டவாறு பயிரிடலாம்.

**நடைபாதை :** தோட்டத்தின் நடுவிலுள்ள பிரதான பாதையின் மீது பந்தல் அமைத்து அதன்மீது அவரை, புடல், பீர்க்கன் போன்ற கொடி காய்கறிகளைப் பயிரிடலாம். நடைபாதையின் இரு பக்கங்களில் வெண்டை மற்றும் புளிச்சக் கீரையைப் பயிரிடலாம்.

**இதர நடைபாதைகள் :** நடைபாதைகளின் இரு பக்கங்களிலும் கொத்தமல்லி, வெந்தயம், சியோன் பசலை, பொன்னாங்கன்னிக் கீரை, வெங்காயம், தண்டுக்கீரை, தவசிக் கீரை போன்றவற்றைப் பயிரிடலாம்.

**வேலிகள் :** வேலியோரங்களில் பசலி, கோவைக்காய், பாகற்காய், பீர்க்கன் போன்ற காய்கறிகளைப் பயிரிடலாம்.

**பந்தல்கள் :** நான்கு மூலைகளில் கம்போஸ்ட் குழிகள் அமைத்து அதன் மீது பந்தல்களை ஏற்படுத்தி – அவரை, புடல், பீர்க்கன் போன்ற கொடி வகைச் செடிகளைப் பயிரிடலாம்.

**மண் திட்டுக்கள் :** பாத்திகளைப் பிரிக்கும் மண் திட்டுகளின் மீது கீரை, வெங்காயம், முள்ளங்கியை நடலாம்.

தோட்டத்தின் பின்பாகத்தில் நீண்ட காலப் பயிர்களை இடத்திற்குத் தக்கவாறு வாழை, பப்பாளி, மேற்கிந்திய செரி போன்ற பழ வகைகளையும், அகத்தி, கறிவேப்பிலை, முருங்கை, சுண்டைக்காய் போன்ற காய்கறி வகைகள்ளையும் சாகுபடி செய்யலாம். நீண்ட காலப் பயிர்களின் மத்தியிலுள்ள இடங்களில் சர்க்கரைவள்ளிக் கிழங்கு, தட்டைப் பயறு, பீன்ஸ் போன்ற காய்கறிகளைச் சாகுபடி செய்யலாம். மேலும், ஓரிரண்டு சேனைக் கிழங்கு செடிகளைய்ம் வாழையின் நிழலில் நடலாம். வீட்டுக் காய்கறித் தோட்டத்தில் எந்தெந்தக் காய்கறிகளை எந்தெந்தப் பருவத்தில் பயிர் செய்வது என்ற பயிர் தொடரும் முறையினை இணைப்பு–2ல் தரப்பட்டுள்ளது.

நகரங்களில் வீட்டைச்சுற்றி காலியிடங்கள் இல்லாதவர்கள் மொட்டை மாடியின் மேல் காய்கறிகளைச் சாகுபடி செய்யலாம். இதற்காக வடிகால் வசதி கொண்ட சிமெண்ட் தொட்டிகள், மரப்பெட்டிகள் போன்றவற்றில் செம்மண், மணல், தொழுஉரம் போன்றவற்றைச் சமபங்கில் கலந்து நிரப்பி, வேண்டிய காய்கறிகளைச் சாகுபடி செய்யலாம். விதைகளைப் பத்து அல்லது பதினைந்து நாட்கள் இடைவெளியில் விதைத்தோ அல்லது நாற்றுகளை நடவு செய்வதன் மூலமோ வீட்டிற்குத் தேவையான காய்கறிகளைத் தொடர்ச்சியாகப் பெறலாம்.

தக்காளி, கத்தரி, மிளகாய் போன்ற காய்கறிகளை நாற்றுவிட்டும், வெண்டை, அவரை, பீன்ஸ், தட்டைப்பயறு போன்றவைகளை நேரிடையாகப் பாத்திகளில் விதைப்பு செய்தும் சாகுபடி செய்தல் வேண்டும். எப்பொழுதும் நல்ல முளைப்புத் திறன் கொண்ட விதைகளையே விதைக்க வேண்டும். விதைப்பதற்கு முன் விதைகளை அக்ரசான் அல்லது செரசான் மருந்துடன் ( 1 கிலோ விதைக்கு 2 கிராம் மருந்து) கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். நாற்றுகளை மாலை வேளையில் நடவு செய்தல் வேண்டும்.

பாத்திகளில் பயிரிட வேண்டிய முக்கியக் காய்கறி வகைகளும் அவற்றின் சாகுபடி விவரங்களும் இணைப்பு அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அதில் கூறியவாறு சாகுபடி முறைகளைக் கையாளுவதன் மூலம் நல்ல விளைச்சலைப் பெறலாம். அவரை, பீன்ஸ், தட்டைப்பயறு போன்ற அவரை குடும்பப் பயிர்களின் விதைகளை 'ரைசோபியம்' நுண்ணுயிருடன் கலந்து விதைக்க வேண்டும். இதனால் மகசூல் அதிகரிக்கும்.

### பின்செய் நேர்த்தி

விதைகளை விதைத்த பின்னரோ அல்லது நாற்றுகள் நடவு செய்த பின்னரோ நீர் பாய்ச்சுதல் அவசியம். பின்பு மண்ணின் ஈரத்திற்கேற்ப வாரம் இருமுறை காலையிலோ அல்லது மாலையிலோ நீர் பாய்ச்சுதல் அவசியம். பாத்திகளில் களையெடுத்து சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். கூடுமானவரை செயற்கை உரங்களைத் தவிர்த்து இயற்கை உரங்களை உபயோகித்தல் நல்லது. இதற்காக குப்பைக் கூளங்கள், வீட்டுக் கழிவுகள், தழைகள் போன்றவற்றைக் கம்போஸ்டு குழிகளில் அவ்வப்போது இட்டு நன்கு மக்க வைக்கவேண்டும். நன்கு மக்கிய பின்னர் அவைகளைச் செடிகளுக்கு இடவேண்டும். இவ்வசதி இல்லாத தருணத்தில் 17:17:17 காம்ப்ளக்ஸ் உரத்தினை 1 ச.மீட்டருக்கு 40–50 கிராம் வீதம் மேலுரமாக இடலாம். உரங்களை, பாத்திகளைக் கொத்திய பின்னரோ அல்லது மண் அணைப்பிற்கு முன்போ இட்டு உடனே நீர் பாய்ச்சுதல் வேண்டும்.

பொதுவாகக் காய்கறிப் பயிர்களை இலைப்பேன், இலைப் புழுக்கள், வண்டுகள் ஆகியவைகள் தாக்கும். இவைகளைக் கட்டுப்படுத்த மீதைல் டெமட்டான் அல்லது டைம்தோவேட் மருந்தினை (2 மிலி/லிட்டர்) தெளித்துக் கட்டுப்படுத்தலாம். காய்ப்புழுக்களின் தாக்குதலைக் கட்டுப்படுத்த எண்டோசல்பான் (1மிலி/லிட்டர்) அல்லது கார்பரில் (2 கிராம்/லிட்டர்) தெளிக்க வேண்டும்.

இலைப்புள்ளி நோய், சாம்பல் நோய் மற்றும் தேமல் நோய் காய்கறிகளை அதிக அளவில் தாக்கும் நோய்களாகும். இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த மேன்கோசெப் (2 கிராம்/லிட்டர்) மருந்தினை அடிக்க வேண்டும். நனையும் கந்தக (2.5 கிராம்/லிட்டர்) மருந்தினைத் தெளித்து, சாம்பல் நோயினைக் கட்டுப்படுத்தலாம். தேமல் நோய் மழைக்காலங்களில் அதிகம் காணப்படும். இந்நோயைப் பரப்பும் அசிவிணியை மீதைல் டெமட்டான் அல்லது டைம்தோவேட் (2 மிலி/லிட்டர்) மருந்தினைக் கொண்டு கட்டுப்படுத்தலாம். எறும்புகளின் தொல்லையைப் போக்க பாத்திகளைச் சுற்றிலும் பி.எச்.சி.10 சதம் தூளினைத் தூவலாம்.

பூசணி, புடல், பாகல், பீர்க்கன் போன்ற பூசணி வகை குடும்பப் பயிர்களுக்கு பி.எச்.சி. மருந்தினைத் தெளிக்கக் கூடாது. சிறிய அளவில் காய்கறித் தோட்டத்தினை வைத்திருப்பவர்கள் ஒரு நாள் முழுவதும் ஊறவைத்த வேப்பம் புண்ணாக்கின் நீரினை வடித்து அதில் மேலும் சமபங்கு நீரினைக் கலந்து செடிகளில் தெளித்து பூச்சியின் தாக்குதலை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தலாம். சாறு எடுக்கப்பட்ட வேப்பம் புண்ணாக்கினை உரமாகவும் இடலாம். இதனால் வேர்ப் புழுக்கள், நூற் புழுக்கள் போன்றவற்றையும் கட்டுப்படுத்தலாம். அறுவடைக்கு 10—15 நாட்களுக்கு முன்னர் மருந்து அடிப்பதனை நிறுத்த வேண்டும். பயிர்ப் பாதுகாப்பு மருந்துக்களைக் காலை அல்லது மாலை வேளைகளில் தான் அடித்தல் வேண்டும். வெயில் நேரங்களிலோ அல்லது காற்று அடிக்கும் போதோ மருந்தினைச் செடிகளுக்கு அடிக்கக்கூடாது.

மேற்கூறிய முறைகளைக் கையாண்டு வீட்டுக் காய்கறித் தோட்டம் அமைப்பதன் மூலம் அதிகச் சத்துடைய, சுவைமிக்க புதிய காய்கறிகளைப் பெறலாம். நாம் விளைவித்த காய்கறிகளை நாம் உண்ணும்போதோ அல்லது மிகுதியான காய்கறிகளை உறவினர்களுக்கோ, நண்பர்களுக்கோ கொடுப்பதன் மூலம் மிகுந்த மகிழ்ச்சியைப் பெறலாம் என்பது திண்ணம்.

## இணைப்பு – 2

## வீட்டுக் காய்கறித் தோட்டம்




1,500 சதுர அடிக்கான மாதிரித் திட்டம்



## வீட்டுக் காய்கறித் தோட்டச் சாகுபடிக் குறிப்புகள்

| வ. எண். | காய்கறிகளின் பெயர்கள் | இரகங்கள் | நடும் முறை | விதையளவு 10 ச.மீ.க்கு | இடைவெளி வரிசைக்கு செடிக்கு | மகசூல் 10 ச.மீ. | அறுவடை |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | தக்காளி | கோ.1, கோ.2, கோ.3, பி.கே.எம்.1, பூசாரூபி | நாற்றுவிட்டு 28 நாட்களில் நடவும் | 5 கிராம் | 35 x 60 செ.மீ. | 15–20 கிலோ | நட்ட மூன்றாவது மாதம் முதல் நான்காவது மாதம் வரை |
| 2. | கத்தரி | கோ.1, கோ.2, எம்.டி.யு.1, பி.கே.எம்.1, பாலூர் 1 | நாற்றுவிட்டு 35–40 நாட்களில் நடவும் | 5 கிராம் | 75 x 75 செ.மீ. | 20–25 கிலோ | நட்ட மூன்றாவது மாதம் முதல் ஐந்தாவது மாதம் வரை. |
| 3. | மிளகாய் | எம்.டி.யு.1, கோ.1, கோ.2, கோ.3 | நாற்றுவிட்டு 45 நாட்களில் நடவும் | 1 கிராம் | 30 x 15 செ.மீ. | 10–12 கிலோ | நட்ட 45–ம் நாள் முதல் மூன்று மாதம் வரை |
| 4. | வெண்டை | கோ.1, எம்.டி.யு.1, பூசா சவாணி, பர்பானி கிராந்தி | விதைகளை பார்களில்/ பக்கவாட்டில் ஊன்றவும் | 10 கிராம் | 45 x 30 செ.மீ. | 10–45 கிலோ | விதைத்த 30 நாள் முதல் மூன்று மாதம் வரை |
| 5. | கொத்தவரை | பூசா நவ்பகார், பூசா சடபகார் பூசா மௌசமி | விதைகளை பார்களில்/ பக்கவாட்டில் ஊன்றவும் | 10 கிராம் | 45 x 15 செ.மீ. | 5–7 கிலோ | விதைத்த 45 நாள் முதல் மூன்று மாதம் வரை |
| 6. | முள்ளங்கி | பூசா ரஸ்மி, பூசா டேசி, ஜப்பான்வால் | விதைகளை பார்களில்/ பக்கவாட்டில் | 10 கிராம் | 30 x 10 செ.மீ. | 10–15 கிலோ | விதைத்த 45 நாட்களில் |
| 7. | கீரை வகைகள் | கோ.1, கோ.2, கோ.3 | ஒரு பங்கு விதையும், 10 பங்கு மணலும் கலந்து விதைக்கவும் | 3 கிராம் | – | 10–15 கிலோ | வாரம் இருமுறை |
| 8. | அவரை | பிரிமியா, அர்காகோமல் ஏர்காடு 1. | விதைகளை பார்களில்/ பக்கவாட்டில் ஊன்றவும் | 30 கிராம் | 45 x 10 செ.மீ. | 4–5 கிலோ | விதைத்த 45 நாள் முதல் மூன்று மாதம் வரை |
| 9. | பந்தல் அவரை | கோ.2, கோ.3, கோ.4, கோ.5 | விதைகளை பார்களில்/ பக்கவாட்டில் ஊன்றவும், அல்லது 2 செ.மீ. இடைவெளியில் குழி எடுத்து நடவும் | 20 கிராம் | 60 x 30 செ.மீ. | 10 கிலோ | விதைத்த 50 நாளிலிருந்து 200 நாள் வரை |
| 10. | பூசணி குடும்பங்கள் | – | குழி அளவு – 45 x 45 x 45 செ.மீ. நீளம், அகலம் மற்றும் ஆழம் | 5 விதைகள் – குழி. 15 நாட்கள் கழித்து 2 செடிகள்/ குழி என குறைக்கவும் | | 10–15 கிலோ | மூன்று மாதம் முதல் ஐந்தாம் மாதம் வரை |

# அச்சு வெல்லம்

□ ஐராவதம்

புரொபஸர் பூவராகன், அஜ்மீர் [டெல்லியிலிருந்து தென்மேற்கே இருநூற்று இருபத்தைந்து மைல் தொலைவில் உள்ளது. ஆரவல்லி மலைகளின் வடமேற்கு கோடியில் உள்ள இந்த ஊர் பன்னிரண்டாவது நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. மொகலாய ராணுவ தளமாகவும், மொகலாய அரசர்களின் விடுமுறை வாசஸ்தலமாகவும் விளங்கியது. முதலாவது ஜேம்ஸின் தூதுவரான ஸர்.தாமஸ் ரோவை ஜஹாங்கீர் இங்கே தான் வரவேற்றார். ஊருக்கருகில் அணாசாகர் என்ற பெரிய செயற்கை ஏரி உள்ளது. ராஜஸ்தான் மாகாணத்தைச் சேர்ந்த அஜ்மீர், ஒரு வியாபார ஸ்தலம். உப்பு வியாபாரம், பருத்தித் துணிகள் நெசவு, சாயம் போடுதல் முக்கியமான தொழில்கள். ரயில்வே தொழிற்சாலைகளும் உள்ளன. அகன்ற தெருக்கள், கல்விக் கூடங்கள் இவற்றிற்குப் பெயர் போனது. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தி ஓராம் வருஷத்திய ஜனத்தொகை இரண்டு இலட்சத்து முப்பதினாயிரத்து தொளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது.] ஆண்கள் கல்லூரியில் இங்கிலீஸ் லெக்சரர். லெக்சரர் உத்தியோகம் தான் எனினும், உள்ளூர்த் தமிழர்கள் அவரைப் புரொபஸர் என்றே அழைத்தார்கள்.

பூவராகன், வாரத்தில் நான்கு நாட்கள் மாலை வேளைகளில் தமிழ வகுப்பு நடத்தி வந்தார். மொத்தம் பத்துப் பேர் படிக்க வந்தார்கள். அவர்களில் நான்கு பெண்கள், பூவராகன் மனைவி பூமா உள்பட. மற்ற பெண்களின் கற்பின் நிமித்தமும், புரொபஸரின் தமிழ்ப் பண்பாடு நிமித்தமும் பூமா நாள் தவறாமல் அவர் நடத்துகிற வகுப்புகளுக்கு வந்து கொண்டிருந்தாள்.

''இவர்தான் எம்.எஃப். ஹுசேன். ரொம்ப நல்ல ஓவியர். என் பழைய நண்பரும் கூட'' என்று நிஜமான புரொபஸர் ரூப்சந்த் கன்னா, மாலை நான்கு மணிக்கு பூவராகன் வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த போது அறிமுகப்படுத்தினார்.

''இல்லஸ்டிரேட் வீக்லியில் பார்த்திருக்கிறேன்'' என்றார் பூவராகன்.

''ஒரு டாகுமெண்டரி எடுப்பதற்காக அஜ்மீர் வந்திருக்கிறார், அது கானெ திரைப்பட விழாவிற்குப் போகிறது'' என்றார் கன்னா.

ஹுசேனைத் தேநீர் சாப்பிடுவதற்காகத் தன் வீட்டிற்கு அழைத்தார் பூவராகன். பூமாவைப் பார்த்ததும் A face to be Painted என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டார் ஹுசேன்.



''நீங்கள் கவிதை எழுதுவதுண்டா?'' - ஹுசேன் பூவராகனைக் கேட்டார்.

''இல்லையே, ஏன்?''

''கிட்டத்தட்ட எல்லா இங்கிலீஸ் வாத்தியார்களுமே எழுதுகிறார்களே?''

''அதைச் சொல்கிறீர்களா? நான் இங்கிலீஷில் எழுதுவதில்லை.''

அதற்குள் பூமா குறுக்கிட்டாள்.

''அவர் தமிழ் எழுத்தாளர். நிறைய சிறுகதைகளும், ஒரு நாவலும் எழுதியிருக்கிறார்.''

''நாவல் பெயர் என்ன?''

''அச்சு வெல்லம்''.

''அப்படி என்றால்?''



பூமா புரொபஸரைப் பார்த்தாள்.

"A block of molasses".

"Oh, it is symbolic".



"Yes, of human existence".

ஹுசேன், தன் டயரியில் குறித்துக் கொண்டார். தன் அறைக்குத் திரும்பியதும், 'Booma, A face to be Painted' என்றும் மறக்காமல் குறித்துக் கொண்டார்.

கானெ விழாவில், டாகுமெண்ட்ரி பிரிவில் ஹுசேனுக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. இரவு ஒன்பது மணிக்கு மேல் அவர் இடத்தைத் தேடிக் கண்டுபிடித்து, பாரிஸ் நிருபர் ஒருவர் பேட்டி காண வந்தார். அப்பொழுது பாரிசில் இலக்கிய விமர்சகர்கள் நீள நீளமாய்க் கொட்டாவி விட்டுக் கொண்டு இருந்தார்கள்.

பேட்டி முடிகிற தருவாயில் நிருபர் கேட்டார்;

''இந்திய இலக்கியம் பற்றி ஏதாவது .... கவிதை, நாவல் பற்றி?''

ஹுசேன் நிறையவே சாம்பெய்ன் சாப்பிட்டிருந்தார்.

''புரொபஸர் பூவராகன் ... A novel by name 'அச்சுவெல்லம்'. It is symbolic, You know, of human existence''.

''எந்த மொழி?'' - நிருபருக்கு இந்தியா பற்றிக் கொஞ்சம் தெரியும்.

''தமிழ்''

அந்த வாரக் கடைசியில் ஹுசேன் பேட்டி வெளியிட்ட பத்திரிகை, வேறொரு பக்கத்தில் சிறிய விளம்பரம் ஒன்றும் வெளியிட்டது.

'தமிழ் மொழி தெரிந்த ஐரோப்பியர் ஒருவர் தேவை. நாவல் மொழி பெயர்ப்புக்கு'.

மிலான் நகரத்திலிருந்து, டானியல் காஸ்டில்லோ விளம்பரத்திற்குப் பதில் போட்டிருந்தான். தான் கத்தோலிக்கப் பாதிரி ஒருவரிடமிருந்து ஆறு வருட காலம் தமிழ் கற்றுக் கொண்டதாகவும், தனக்கு நாவல் பிரதி அனுப்பி வைக்கும்படியாகவும் எழுதி இருந்தான். பாரிஸ் பத்திரிகை ஆசிரியர் டெல்லி பிரெஞ்சு தூதருக்குக் கடிதம் எழுதினார்.

டெல்லியில், தான் சந்திக்க நேர்கிற அரசாங்க உத்தியோகஸ்தர்களில் தமிழர்களை எல்லாம் விசாரித்தார் தூதர். அவர்களோ தாங்கள் 1.இங்கிலீஸ், 2.அமெரிக்கன், 3.பிரெஞ்சு நாவல்களைத் தான் படிப்பதாகவும், தங்கள் வீடுகளில் வேண்டுமானால் விசாரித்துச் சொல்வதாகவும் பதிலளித்தார்கள்.

அர்ஜெண்டினா கவிஞர் ஒருவருக்கு அந்த தேசத்து தூதரகம் அளித்த வரவேற்பு விருந்துக்கு, பிரெஞ்சு தூதர் இந்த நினைவுகளையெல்லாம் மறந்து தான் போனார். ஆனால் அங்கே, 'இவர்தான் சிதம்பரம் ஸஞ்ஜயன். தமிழில் சிறந்த விமர்சகர்'என்று யாரோ அறிமுகப்படுத்தினார்கள்.

தூதருக்கு சின்ன சபலம். விமர்சகர் என்றதும் அவரிடத்தில் நேரடியாக அந்தப் புஸ்தகம் பற்றிக் கேட்காமல், அவர் வாயிலிருந்தே அதைப் பற்றிய அபிப்பிராயத்தை வரவழைக்க வேண்டுமென்பது தான் அது. மேலும் அந்த சமயத்தில் ஆசிரியர் பெயரோ புஸ்தகத்தின் பெயரோ அவர் நினைவிலும் இல்லை: கோட்பாக்கெட்டில் இருந்த டயரியிலும் இல்லை.

'தமிழில் நல்ல நாவலாசிரியர் யார்?'

ஸஞ்ஜயன் பிரெஞ்சிலேயே பதில் சொன்னார்.

'தமிழில் அப்படியெல்லாம் கேட்காதீர்கள். எழுத்தாளர்கள் என்று கேளுங்கள். மொத்தம் நாலு பேர்தான். நான் ஒருத்தன். விருத்தாசலம் விதுரன் - இவன் முப்பத்திரண்டு வயசிலேயே செத்து போய்விட்டான். பதினாறு சிறுகதைகள் தான் மொத்தமாய் எழுதினான் - அதிலே இரண்டு கதைகள் தேறும். அப்புறம் பித்தாபுரம் பீஷ்மன் - இப்பொழுது பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருக்கிறான். நூறு கதைகள், நிறைய கவிதை எழுதியிருக்கிறான். இவனிடம் பத்து கதை தேறும். இன்னும் கொஞ்சம் குறைவாய் எழுதியிருந்தால் இன்னும் நிறைய தேறி இருக்கும். கடைசியாய் திருவல்லிக்கேணி திருதராஷ்டிரன். இவனை எங்களோடு சேர்ப்பதில் அர்த்தமேயில்லை. நாலாவதாக இருக்கட்டும் என்று சேர்க்கிறேன். இவன் நிறைய எழுதிவிட்டான். என்னால் கணக்கு வைத்துக்கொள்ள முடியவில்லை...'

பிரெஞ்சு தூதருக்கு தூக்கம் வந்தது. பிறகு பார்ப்பதாகச் சொல்லி, ஸஞ்ஜயன் விலாசத்தை வாங்கிக்

கொண்டு விடை பெற்றுக் கொண்டார்.



ஒரு வாரத்திற்கெல்லாம், பிரெஞ்சு தூதர் ஸஞ்ஜயனுக்கு ஒரு கடிதம் எழுதினார். பூவராகன் பெயரையும், அவர் நாவலையும் குறிப்பிட்டு அந்தப் புஸ்தகத்தை வாங்கித் தரும்படிக் கேட்டிருந்தார். ஸஞ்ஜயனும் தபாலில் புஸ்தகத்தை வரவழைத்து ஒரு முறைக்கு, இரு முறையாகப் படித்தார். அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஜோவென்னெ வெர்கா ( 1840 - 1922 - இத்தாலிய சிறுகதை, நாவல் ஆசிரியர், பிறப்பு ஸிஸிலி. எழுதுவதின் பொருட்டு சட்டப் படிப்பைக் கைவிட்டார். ஆரம்பத்தில், பிரெஞ்சு பாணியில் உணர்ச்சிக் குவியல்களாக நாகரிக உலகைப்பற்றி நாவல்கள் எழுதினார். இவரது பிந்தைய படைப்புகள் எளிமையாகவும், தத்ரூபமாகவும் அமைந்தவை. ஸிஸிலியன் விவசாய, கிராமிய சூழ்நிலைகளை ஆதாரமாகக் கொண்டவை ) எழுதிய நாவல் ஒன்றின் அப்பட்டமான தழுவலாக இருந்தது. கதைக்கரு மாத்திரமல்லாமல், நிகழ்ச்சிகளும் அதே வரிசையிலே அமைக்கப்பட்டிருந்தன.

புரொபஸர் பூவராகனுக்கு ஸஞ்ஜயன் விரிவாகவே கடிதம் எழுதினார். தான் ஆரம்ப நாட்களில் கல்கத்தா இம்பீரியல் லைப்ரரியில் வெர்காவின் நாவலைப் படித்ததாகவும், பூவராகனுக்கு அதைப் படிக்கிற வாய்ப்பு எப்படி ஏற்பட்டது என்பதை தான் தெரிந்து கொள்ள விரும்புவதாகவும் எழுதினார்.

பூவராகனின் பதில் நேர்மையாகவே இருந்தது.

'என் பெரியப்பா ஆடுதுறை எஸ்.கோபால ஐயங்கார். நிறைய நாவல்கள் படிப்பவர். அவர் அலஹாபாத் ஏ.எச்.வீலர் கம்பெனியிலிருந்து 1934-இல் வெர்காவின் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு நாவல்களை ஒரு தொகுப்பாக வாங்கினார். நான் வீலர் கம்பெனிக்குப் போன வருஷம் ஒரு கடிதம் எழுதினேன். அதற்கு அவர்கள் எழுதியிருந்த பதில் சுவாரஸ்யமாயிருந்தது.

'வெர்காவின் இந்த நாவலை இம்பீரியல் லைப்ரரிக்கு ஒரு பிரதி



வாங்கிக் கொடுத்தோம். தனிப்பட்ட நபர்கள் இரண்டு பேர் தான் இந்த நாவலை வாங்கினார்கள். குஜராத்தில் ஒருவரும், ஆடுதுறை கோபால ஐயங்காரும், இரண்டாவது யுத்தம் தொடங்கிய பின், இத்தாலிய நூல்களை யாரும் வாங்கிப் படிக்கவில்லை. சுதந்திரத்திற்குப் பிறகோ, ஆல்பர்ட்டோ மொராவியாவைத் தவிர வேறு எந்த இத்தாலிய நாவல்களையும் நாங்கள் விற்கவில்லை.

'இப்படி வீலர் கம்பெனியிலிருந்து பதில் வந்ததும் எனக்கு தைரியமாயிருந்தது. குஜராத்திக்காரர் அவர் மொழியில் செய்வாரோ என்னவோ? தமிழில் போட்டியில்லை என்றதும் நான் இதை தமிழ்ப்படுத்தினேன். இப்படி இம்பீரியல் லைப்ரரியில் வெர்காவைத் தேடிக் கண்டுபிடித்துப் படித்து முப்பந்தைந்து வருஷங்களுக்கு அப்புறமும் ஞாபகம் வைத்துக் கொள்கிற தமிழர் இருப்பார் என்று தெரிந்திருந்தால், செய்திருக்கமாட்டேன்.

இரண்டு நாளைக்கெல்லாம் ஸஞ்ஜயன், பிரெஞ்சு தூதருக்கும், பாரிஸ் பத்திரிகை ஆசிரியருக்கும் கடிதம் எழுதினார்.

'அச்சு வெல்லம் இந்திய பாரம்பரியத்தில் ஊறிக் கிடக்கிறது. அதனுடைய முழு அழகையும் மொழி பெயர்ப்பில் கொண்டுவர முடியாது. இத்தோடு நான் எழுதிய 'தெய்வ மரணம்' என்கிற நாவலில் பிரெஞ்சு மொழி பெயர்ப்பு நானே செய்தது, அனுப்பியிருக்கிறேன்.

*– சிறந்த சிறுகதைகள் தொகுப்பிலிருந்து.*
*தொகுப்பு : சா. கந்தசாமி*
*வெளியீடு : கலைஞன் பதிப்பகம்*



■ முதலமைச்சர் கலைஞர்

# ராஜகோபாலத் தொண்டைமான் : மாசு மருவற்ற பெருமனம் படைத்தவர்

*புதுக்கோட்டையை ஆண்ட ராஜகோபாலத் தொண்டைமான் அவர்களை நான் மிக நன்றாக அறிவேன். என்னுடைய அருமை நண்பர் அன்பில் தர்மலிங்கம் மூலமாக அவரோடு ஓரிரண்டு தடவை பேசுகின்ற, பழகுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கின்றது. இங்கே மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலகத்தை அமைக்க வேண்டும். அதற்கு இந்த மாளிகையைப் பெற மன்னர் ஒப்புவாரா? அந்தக் கருத்தை ஏற்பாரா? என்ற ஐயப்பாடு எனக்கு எழுந்த போது, அவரிடத்திலே என்னைப் பேசச் செய்கிற முயற்சியில் அன்பில் தர்மலிங்கம் ஈடுபட்டு அந்த முயற்சியில் வெற்றி பெற்று, இன்று இந்த இடம் இந்த வளாகத்தில் அமைந்திருக்கிற இந்தப் பெரிய மாளிகை அனைத்தும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஆதிக்கத்திலே வந்திருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.*

*இங்கே தம்பி திருநாவுக்கரசு எடுத்துக் காட்டியதைப் போல வெள்ளையர் ஆட்சி முடிவுற்று சமஸ்தானங்கள் எல்லாம் ஒன்றுபட வேண்டும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபட்ட சமஸ்தானங்கள் தன்னாட்சியை மாற்றிக் கொண்டு மத்திய அரசோடு ஒன்றிக் கலந்து நடைபெற வேண்டும் என்று ஒரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் அந்த முயற்சியிலே முனைப்போடு ஈடுபட்ட அந்தக் காலக் கட்டத்தில், நம்முடைய தொண்டைமான் அவர்கள், அவரே வலிய முன் வந்து, "புதுக் கோட்டையை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள், நான் ஒரு சாதாரண குடிமகனாக, பிரஜையாக இருந்து வாழ்கிறேன்" என்று இந்த சமஸ்தானத்தை அவர்களிடத்தில் ஒப்படைத்த மாசு மருவற்ற பெருமனம் படைத்தவர், மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சில் இன்றைக்கும் நிலைத் திருக்கின்ற ராஜகோபால் தொண்டைமான் அவர்கள்.*

*அவர்களுடைய . இந்த சமஸ்தானம் 1686–ஆம் ஆண்டு தோன்றிய சமஸ்தானம். இந்த சமஸ்தானத்திலே ஒன்பதாவது மன்னராக விளங்கியவர் தான் இன்றைக்கு சிலை வடிவாக இங்கே நின்று கொண்டிருக்கின்ற ராஜா, ராஜகோபாலத் தொண்டைமான் அவர்களாவார்கள்.*

*நான் முதலிலே சொன்னதைப் போல இந்த புதுக்கோட்டை சமஸ்தானத்தினுடைய கடைசி மன்னரும் அவர்தான். 23.6.1922–இல் அவர் பிறந்தார். அவருடைய ஆறாவது வயதிலேயே 6 வயது சிறுவனாக இருந்த போதே 1928–ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசால் அவர் மன்னராக நியமிக்கப்பட்டார். பால்ய வயதில் ஒரு பரிபாலனத்தைச் செய்வதற்கு அவரால் இயலாது என்ற காரணத்தால் அல்லது அந்த காரணத்தைக் காட்டி ஆங்கிலேய அரசாங்கத்தின் பிரதிநிதி ஒருவர் அவருக்கு மேற்பார்வையாளராக இருந்து சமஸ்தான நிர்வாகத்தை நடத்தினார்.*

*அதற்குப் பிறகு 1944–ஆம் ஆண்டு தான் அவருடைய 22–வது வயதில் தான் முழு ஆட்சிப் பொறுப்பையும் இவர் ஏற்றுக்கொண்டு புதுக்கோட்டை மண்டலத்தை ஆளுகின்ற அந்த வாய்ப்பை அவர்கள் பெற்றார்கள். இள வயதிலேயே ஒரு மன்னருக்குத் தேவையான பல்வேறு கலைகளை ஆர்வத்தோடு கற்றுக் கொண்ட பெருமைக்குரியவர். அதே போல நிர்வாக நெறிமுறைகளை எல்லாம் அக்கறையோடு தெரிந்து கொண்டார்.*

*தமிழ், ஆங்கிலம், வடமொழி, மலையாளம், உருது ஆகிய 5 மொழிகளிலும் நல்ல புலமை பெற்று விளங்கினார். குதிரையேற்றம், துப்பாக்கி சுடுதல் ஆகியவற்றில் நல்ல தேர்ச்சி பெற்றவர். அவருடைய இயல்பு மிக மிக குறைவாகப் பேசுகின்ற இயல்பு, நிறைவாக எதையும் செய்ய வேண்டும் என்கின்ற ஆர்வம். அதற்கேற்ற ஆற்றலும் கொண்டு விளங்கியவர் தான் ராஜகோபாலத் தொண்டைமான் அவர்கள்.*

*அவர் ஆட்சியின்போது உத்தமர் காந்தியடிகள் மறைந்துவிட்டார்கள். அவரது மறைவையொட்டி நடைபெற்ற நினைவு போற்றும் நிகழ்ச்சியில் காந்தியடிகள் நினைவைப் போற்றும் வகையில் அவருடைய ஆட்சிப் பொறுப்பிலேயிருந்த எல்லாப் பகுதியில் உள்ள கோயில்களும் சமத்துவத்தோடு திகழ வேண்டும் என்ற ஆர்வத்தோடு எல்லா கோயில்களிலும் ஆதிதிராவிட மக்கள் உள்ளிட்ட அனைவரும் வழிபடச் செல்லலாம் என்று கூறி அதற்கு வழி வகுத்தவர்.*

*அத்தகைய ஒரு சமூக நீதியைக் கண்டவர். அத்தகைய சமூக ஒற்றுமை சமுதாயத்தில் ஏற்பட வேண்டும் என்பதற்காக முனைந்து பாடுபட்டவர். அதற்கு செயல்வடிவம் தந்தவர் நம்முடைய மறைந்த ராஜகோபாலத் தொண்டைமான் அவர்கள்.*

*அவருடைய குடும்பத்தார் முன்னிலையில் அவருடைய ஆட்சியின் கீழ் இருந்த புதுக்கோட்டை சமஸ்தானத்திலே உள்ள ஏராளமான பொதுமக்களுடைய முன்னிலையில், உழவர் பெருங்குடி மக்களுடைய முன்னிலையில், பாட்டாளி மக்களுடைய முன்னிலையில் இன்றைக்கு அவருடைய சிலை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.*

## எனது வேண்டுகோள்

*நான் வேறொன்றும் அந்தக் குடும்பத்தை கேட்க விரும்பவில்லை. தங்களுடைய முன்னோர், தங்களுடைய மன்னர், மாமன்னர் கடைசிக்காலம் வரை இந்த மக்களுடைய அன்புக்குப் பாத்திரமாக இருந்து மறைந்தவர். அவருடைய புகழைப் பரப்ப அவருடைய அடியொற்றி நடக்க வேண்டிய பெரும் பொறுப்பை அந்தக் குடும்பத்தினர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.*

*அந்தக் குடும்பம் எல்லோரும் பாராட்டத்தக்க அளவிற்கு மன்னருடைய விருப்பப்படி ஒற்றுமையோடு வாழ்கிறது என்கின்ற ஒரு உயரிய நிலையை தமிழகத்திற்கு அவர்கள் செய்தியாகத் தர வேண்டும். இந்த சிலை திறப்பு விழாவிலே நான் விடுக்கின்ற வேண்டுகோள் – நான் அளிக்கின்ற*

செய்தி இதுதான் என்பதை மாத்திரம் உங்கள் அத்தனை பேருடைய சார்பாக அந்தக் குடும்பத்தாருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### உழவர் சந்தையின் முக்கியத்துவம்

இந்த இனிய விழாவில் உழவர் சந்தை காலையில் திறக்கப்பட்டு இருக்கிறது. அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தான் நான் இங்கே வந்தேன். உழவர் சந்தை எவ்வளவு முக்கியம் என்பதை இங்கே உள்ளவர்கள் உணர்ந்தாலும் உணராவிட்டாலும் நம்முடைய திருமயம் சட்டமன்ற உறுப்பினர் சின்னையா இங்கே பாராட்டிப் பேசினாலும், உழவர் சந்தையிலும் குறைபாடு உண்டு என்று சட்டமன்றத்தில் அவருடைய கட்சியின் சார்பில் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் உழவர் சந்தை தங்களுடைய மாநிலத்திற்கு வேண்டுமென்று கர்நாடக மாநிலத்தில் உள்ளவர்கள் கருத்து தெரிவிக்கின்றார்கள்.

28.2.2000 அன்று வெளிவந்த டெக்கான் ஹெரால்ட் என்ற கர்நாடக மாநிலத்து ஆங்கில இதழில் ஆசிரியருக்கு ஒரு கடிதம் (Letter to the Editor) வெளியாகி இருக்கிறது. அதில்,

"Sir, In Tamil Nadu, Chief Minister M.Karunanidhi has brought some reforms which made the common man's life much easier and better. Through the introduction of the Ulavar Santai (Farmer's Fair) he has eliminated middlemen and facilitated the farmers to sell the produce directly to the consumers at Government - fixed rates.

Even the transport charges for vegetables and fruits have been made free.

The cost of vegetables in Tamil Nadu is reduced to a fraction of 70-75 per cent to the prices of vegetables and fruits in Bangalore. In this system, both the farmer and common man are beneficiaries. including the Government.

Why can't the Karnataka Government emulate this noble Tamil Nadu experiment and Explore the possibility of introducing it here with the attention it deserves?

SANDYA GANESH, BANGALORE.

அதன் தமிழாக்கம்

ஐயா, ஒரு சாதாரண மனிதனின் வாழ்க்கை எளிதாகவும் சிறப்பாகவும் இருக்கும் வண்ணம் தமிழ்நாட்டில் அதன் முதலமைச்சர் சில சீர்திருத்தங்களை கொண்டு வந்துள்ளார். உழவர் சந்தையை அறிமுகம் செய்ததன் மூலம், இடைத்தரகர்களின் தலையீட்டை தடுத்து நிறுத்தியதோடு, உற்பத்தியான விளைபொருளை அரசு நிர்ணயம் செய்துள்ள விலைக்கே நேரடியாக நுகர்வோர்க்கு விற்பதற்கான வசதிகளை அவர் செய்துள்ளார்.

அங்கு விற்பனை செய்யும் காய்கறிகளையும் பழங்களையும் கொண்டு வருவதற்கு போக்குவரத்துச் செலவும் இன்றி இலவசமாக கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெங்களூரில் விற்கும் காய்கறிகள் மற்றும் பழங்களின் விலையைப் பார்க்கும் போது உழவர் சந்தையில் விலை 70 முதல் 75 சதவிகிதம் வரை குறைவாகவே உள்ளது. அந்த முறையின் காரணமாக உழவர்களும், தனி மனிதனும் அரசுடன் நன்மை அடைகின்றனர்.

தமிழ்நாட்டின் இந்த அரிய அமைப்பை ஏன் கர்நாடக அரசு மிகுந்த முனைப்புடன் பின்பற்றக் கூடாது? தேவைப்பட்டவர்களை கவர, இந்த அரிய திட்டத்தை அறிமுகம் செய்வது குறித்து ஏன் பரிசீலிக்கக் கூடாது?

(சந்தியா கணேஷ், பெங்களூர்).

இவ்வாறு ஒருவர் பெங்களூரில் அந்தப் பத்திரிக்கையில் ஆசிரியருக்குக் கடிதம் எழுதி அது அந்தப் பத்திரிக்கையில் வெளிவந்திருக்கிறது. எப்பொழுதுமே உள்ளூர்க்காரர்கள் உள்ளூர்க்காரர்களைப் பாராட்டுவது வழக்கமில்லை. அது ஏதோ பெரிய சாபக்கேடு என்றுகூட கருதுவது தான் நம்முடைய, அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள ஒரு வழக்கம்.

குறிப்பாக ஆர்ம்ஸ்டிராங் சந்திர மண்டலத்திற்கு சென்றார் என்றால் இங்கே அடியக்கமங்கலத்திலே இருக்கின்ற நம் ஊர் ஆள் "ஆஹா, ஆர்ம்ஸ்டிராங் சந்திர மண்டலத்திற்குப் போனான். என்ன இருந்தாலும் விஞ்ஞானம் எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது. அவனுடைய துணிச்சலைப் பாராட்டத்தான் வேண்டும்" என்று தான் சொல்வான். ஆர்ம்ஸ்டிராங்கிற்குப் பதிலாக அய்யம்பேட்டையிலே உள்ள அடுத்த வீட்டுக்காரன் சந்திர மண்டலத்திற்குப் போய் வந்தால் என்ன பெரிதாகக் கிழித்துவிட்டான் என்று சொல்வார்கள். ஏனென்றால் ஆர்ம்ஸ்டிராங் அமெரிக்காகாரன், அவன் போனால் நம் ஊர்க்காரன் பாராட்டுவான். பக்கத்து வீட்டுக்காரன் சென்றால் எரிச்சல் அடைவார்கள். இது தமிழர்களுக்கே உள்ள இலக்கணம் – நல்ல குணம் (?) இந்த நல்ல குணம் தான் தமிழ்நாட்டை முன்னேற விடாமல் தடுத்து வைத்திருக்கிறது.

உழவர் சந்தை மதுரையில் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு இன்றோடு 28 உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டு இருக்கின்றன. 27 உழவர் சந்தைகளில் நேற்று வரை விற்கப்பட்ட காய்கறிகளின் மதிப்பு மாத்திரம் 12 கோடி ரூபாய்க்கு மேல் என்பதிலிருந்து எவ்வளவு வெற்றிகரமாக இந்த உழவர் சந்தைகள் நடைபெற்று வருகின்றன என்பதைக் காணலாம்.



– மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 14–3–2000 அன்று புதுக்கோட்டையில் ராஜகோபாலத் தொண்டைமான் சிலை திறப்புவிழா – உழவர் சந்தை தொடக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து...

★ ★ ★



# மது எப்படி உடலைப் பாதிக்கிறது?





□ டாக்டர் முத்துச் செல்லக்குமார்

பல்வேறு பழங்கள், தானியங்கள் ஆகியவற்றின் மூலமாக மது தயாரிக்கப்படுகிறது. அவற்றிலிருக்கும் 'ஆல்கஹாலின்' சதவிகிதமும் மாறுபட்டதாக இருக்கும்.

மது ஒரு குறிப்பிட்ட விகித்த்தில் இருந்தால் அது கிருமிநாசினியாகப் பயன்படுகிறது. 70 சத்விகிதத்தில் அது பல்வேறு நோய்க் கிருமிகளை அழிக்கும் சிறந்த கிருமிநாசினியாகச் செயல்படுகிறது.

மதுவில் எந்தவித வைட்டமின்களோ தாது உப்புகளோ கிடையாது. இது ஜீரணமாவது எளிது. மது பொதுவாக 7 கலோரி சக்தியைத் தருகிறது. கர்ப்பிணிகள் மது அருந்துகின்றபோது அது வளரும் குழந்தையையும் சென்றடைந்து பாதிப்பை உண்டாக்கும்.

மதுவில் இருப்பது 'எத்தனால்' எனப்படும் 'இத்தேல் ஆல்கஹாலாகும்'. இது நேரடியாகச் சிறுகுடலில் இருந்து உறிஞ்சி எடுக்கப்பட்டு இரத்தத்தை அடைகிறது. அங்கிருந்து அது கல்லீரலைச் சென்றடையும். அங்குதான் நாம் உட்கொள்ளும் உணவும், மருந்தும், பிறபொருட்களும் வளர்சிதை மாற்றத்தை அடைகின்றன. சிறிதளவு 'எத்தனால்' எந்தவித மாற்றத்தையும் அடையாமல் அப்படியே நுரையீரல், சிறுநீர், வியர்வை ஆகியவற்றின் மூலமாக வெளியேறிவிடுகிறது. ஆனால், பெரும்பாலான 'எத்தனால்' 'அல்ஹால் டீஹைறரோஜினஸ்' என்ற என்ஸைமால் 'அஸிடேட்' என்ற பொருளாக மாறுகிறது. இவை நஞ்சுப் பொருட்களாகும். இவை கல்லீரல், மூளை மற்றும் உடலின் பாகங்களில் அதிகமாகச் சேரும்போது அந்த உறுப்புகள் பாதிக்கப்படுகின்றன. மேலும், எந்தவித மாற்றமும் அடையாத 'எத்தனால்' நேரடியாகவே மூளை மற்றும் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும். இதுதவிர மணமும், சுவையும் இருப்பதற்காக மதுவில் சேர்க்கப்படும் ஆல்டிஹைறடு, ஹிஸ்டமைன், பீனால்ஸ், இரும்பு, கோபால்ட் போன்ற பொருட்களும் உடல் திசுக்களை பாதித்து உடலுக்குக் கேடு விளைவிக்கின்றன.

மதுவில் கலந்துள்ள ஆல்கஹால் மூளை, தண்டுவடம், நரம்புகள் ஆகியவற்றைப் பாதிக்கிறது. மூளை பாதிக்கப்படுவதால் அடி மனதில் அடக்கி வைத்துள்ள பாதுகாப்பற்ற உணர்வு, பய உணர்வு ஆகியன மிகவும் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றன. அடக்க உணர்வு அனைத்தும் மறைந்து அதிகப்பேச்சும், சிரிப்பும் தற்பெருமை உணர்வும் தலைதூக்கும். கவனிக்கும் தன்மை, பிரதிபலிக்கும் தன்மை, சீர்தூக்கிப் பார்க்கும் தன்மை ஆகியவை பாதிக்கப்படும். மதுவிற்கு நல்ல மணத்தையும் சுவையையும் தருவதற்காக அத்துடன் சேர்க்கப்படும் கோபால்ட் என்ற பொருள்களாலும் நரம்பு மண்டலம் பாதிப்பு அடைகிறது.

மது தண்டுவடத்தையும், சிறுமூளையையும் பாதிப்பதால் தள்ளாடியபடி நடக்கிறார்கள். உடலிலுள்ள எல்லா நரம்புகளும் பாதிக்கப்படுவதால் நரம்புத் தளர்ச்சி ஏற்படுகிறது.

### குடல் புண்கள்

மது அதிகமாக அருந்துவதால் இரைப்பையும் பாதிக்கப்படுகிறது. அதன் உட்சுவர்களிலுள்ள செல்கள் அழிந்து இரைப்பையிலும், குடலிலும் புண்கள் உண்டாகின்றன. இதனால், வயிற்றில் அடிக்கடி வலி, வாந்தி போன்றவை ஏற்படும். அதிகமாகப் புண் ஏற்பட்டிருக்குமானால் புண்களிலிருந்து அதிக இரத்தம் கசிந்து இரத்த வாந்தியாகவும் அது வெளிப்படும். சிலருக்கு புண் ஏற்பட்ட இடத்தில் 'ஓட்டை' விழுந்து குடலில் இருக்கின்ற உணவெல்லாம் குடலைச் சுற்றியிருக்கின்ற சவ்வில் இழுத்து உயிருக்கு ஆபத்தை உண்டாக்கக் கூடிய வயிற்றறை உறை அழற்சி என்ற நோயும் ஏற்படும்.

### கல்லீரல் பாதிப்பு

மது கல்லீரலையும் பாதிக்கிறது. இதனால் கல்லீரல் வீங்கிவிடும். பிறகு கொழுப்புச் சத்துகள் அதிகமாகத் தங்கும். சிறிது காலத்திற்குப் பிறகு எல்லாக் கல்லீரல் செல்களுமே அழிந்து முற்றிலுமாக அதில் புதிய செல்கள் ஒரு பக்கம் உருவாகிக் கொண்டிருக்கும். இதனால் கல்லீரல் இறுகிவிடும். இதனை 'சுரணை நோய்' அல்லது 'ஈரல் இறுக்கி நோய்' என்று கூறுவார்கள். இவர்களுக்கு ஜீரணசக்தி குறைந்துவிடும். பசியும் இருக்காது. அடிக்கடி வயிற்று வலி, வாந்தி ஆகியவை ஏற்படும். இவர்களுக்கு மஞ்சள் காமாலையும் ஏற்பட வாய்ப்பு உண்டு. கல்லீரல் செல்கள் பாதிக்கப்படுவதால் கல்லீரலுக்கு வரும் இரத்தக் குழாய்களும் பாதிக்கப்பட்டு 'இரத்த அழுத்தம்' அதிகமாகும். இதனால் மண்ணீரலும் பாதிக்கப்படும். இவர்களுக்கு வயிறு மிகப் பெரியதாக வீக்கம் அடையும். கல்லீரல் புற்றுநோய் வரவும் வாய்ப்பு உண்டு.

### கணையம் பாதிப்பு



மது அருந்துவதால் கணையம் பாதிப்படைந்து 'கணைய அழற்சி' எனும் நோய் வரும். இதனால் அதிலுள்ள 'லாங்கர்கான்' செல்கள் அழிந்து நீரிழிவு நோய் வர வாய்ப்பு உள்ளது.

### ஆண்மை இழப்பு

அதிக மது அருந்துபவர்களுக்கு அது ஆரம்பத்தில் சிற்றின்ப உணர்ச்சியைத் தூண்டுவதாக கருதப்பட்டாலும், நாளடைவில் அது ஆண்களின் விந்தகத்தை பெரிதும் பாதித்து செயலிழக்கச் செய்து விடுவதால் ஆண்மைத் தன்மையை அவர்கள் இழக்க நேருவதுடன் 'குழந்தைப் பேறு' தகுதியும் இல்லாமல் போய் விடுகிறார்கள்.

### இதயப் பாதிப்பு

அதிக மது அருந்துகின்ற போது அது இதயத்தைப் பாதித்து இதயத்தசை நோயை உண்டாக்கி விடும். இதில் இதயம் பெரிதாக வீங்கிச் சரிவர வேலை செய்ய முடியாமல் போய்விடும். மேலும், உயிருக்கே ஆபத்தான மிக வேக இதயத் துடிப்பை உண்டாக்கும். இதில் மேலறை மற்றும் கீழறை நடுக்கத்தை ஏற்படுத்திவிடும்.

### தசைகள் பாதிப்பு

உடல் தசைகள் பாதிப்படைந்து இயக்குத்தசை நோய் உண்டாக்கும். இதனால், தசைகள் வீங்கி, சொல்ல முடியாத வேதனையையும், பிடிப்பையும் ஏற்படச் செய்யும். இப்படி மதுவினால் உடலின் அனைத்து உறுப்புகளுமே பாதிக்கப் படுகின்றன.

### தவறான எண்ணங்கள்

***எவ்வளவு குடிக்கிறோமோ அந்த அளவிற்கு 'உணவு' சாப்பிட்டால் உடலுக்குத் தீங்கு வருவதில்லை என்ற எண்ணம் சரியா?***

இது தவறான எண்ணம். வெறும் வயிற்றில் அதிகமாக மதுவை அருந்துகின்ற போது, அதில் எளிதில் புண் ஏற்பட வாய்ப்பு உண்டு. அத்துடன் உணவையும் சாப்பிடுகின்ற போது, மதுவினால் அதிகமாகின்ற அமிலம் உணவால் சமப்படுத்தப்படும். ஆனால், உணவோடு மது அருந்தினாலும், தனியாக அருந்தினாலும் அவை ரத்தத்தைச் சென்று அடைவதால் கல்லீரல் பாதிப்பு, கணைய பாதிப்பு, நரம்பு மண்டலங்களின் பாதிப்பு, உடல் ஆரோக்கியத்திற்குப் பொதுவாக ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளுமே ஏற்படும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை.

***கர்ப்பமானவர்களுக்கும், குழந்தை பிறந்த வீட்டிலும் பெண்கள் மது குடிக்க நிர்ப்பந்தம் செய்யப்படுகிறதே?***

இது மிகவும் கண்டிக்கத்தக்க செயலாகும். கர்ப்பமாக இருக்கும் போது மது அருந்தினால் கரு பாதிக்கப்பட்டு கர்ப்பம் கலைந்து போவதற்கும் வாய்ப்பு உண்டு.

இதே போல பிரசவ வீட்டிலும் பெண்ணிற்கு மது தருவது நிறுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக, அதிகமாக உழைத்து பகலில் வேலை செய்பவர்கள் மாலை வீடு திரும்பியவுடன் 'உடல் அசதியைப்' போக்குகிறேன் என்று கூறி அதிகமாகக் குடிக்கிறார்கள். இதே போல, உடல் வலி, வயிற்று வலி போன்ற பல்வேறு தொந்தரவுகள் இருப்பவர்களும் இதே வழியையே கடைப்பிடிக்கிறார்கள்.

### சிகிச்சை முறைகள்

மதுவை நீண்ட நாள் குடித்து வரும் ஒருவரை மாற்றுவது என்பது கடினமான செயல் தான். என்றாலும், முறையாக சிகிச்சைக்கு உட்படுத்தினால் எளிதாக இதைச் செயலாக்க முடியும்.

முதலில் அந்த நபர் மது அருந்தி வருவதற்கான காரணத்தைக் கண்டறிய வேண்டும். இதற்கு 'ஆலோசனை' என்ற முறையில் அவரோடு மனம் விட்டுப் பேசி அவரது பிரச்சனைகளை அறிந்து அதைத் தீர்க்க முனைய வேண்டும்.


> **கர்ப்பமாக இருக்கும் போது மது அருந்தினால் கரு பாதிக்கப்பட்டு கர்ப்பம் கலைந்து போவதற்கும் வாய்ப்பு உண்டு.**


படிப்படியாக அவரது மனத்தை மாற்றி அவரது கவனத்தை வேறு விஷயத்தில் செலுத்தச் செய்ய வேண்டும். அவருக்குச் சமுதாயத்தில் இருக்கும் பங்கினை உணரச் செய்ய வேண்டும். இதற்கு உளவியல் ரீதியாக தீர்வு காண முயல வேண்டும்.

பிறகு, மது அருந்தும் போது குமட்டல், வாந்தி ஆகியவற்றை உண்டாக்கி அதில் வெறுப்பை ஏற்படச் செய்யும் 'டைஸல்ஃபியூரம்' போன்ற மருந்துகளைப் பயன்படுத்தலாம்.

ஏற்கெனவே, மதுவினால் பாதிக்கப்பட்டு வைட்டமின் 'பி' குறைபாடு, நரம்புப் பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு ஆகியவற்றைச் சரி செய்தல், அத்துடன் மதுவைத் திடீரென நிறுத்துவதால் ஏற்படும் கை நடுக்கம் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் சிகிச்சை அளித்தல் போன்றவையெல்லாம் மதுவிற்கு அடிமையானவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்கான அடிப்படையாகும்.

– நன்றி : மருத்துவ அறிவியல் மலர்

★ ★ ★



# கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்

□ இர. பிரபாகரன்
துணைவேந்தர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்.

தமிழகத்தில் அனைத்துப் பிரிவு மக்களின் வாழ்க்கை நிலையையும் மேம்படுத்தும் விதமாகத் தமிழக அரசு பல்வேறு புதிய திட்டங்களை உருவாக்கித் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது.

வளமான வாழ்வின் அடித்தளமான மக்களின் உடல்நலத்தை உறுதிப்படுத்தும் வகையில் "வரும் முன் காப்போம்" திட்டம்,

உலகம் முழுவதும் வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்பத் துறையில் தமிழகமும் இணையாக நடைபோடும் வகையில் 666 மேல்நிலைப் பள்ளிகளில் "கணிப்பொறி அறிமுகத் திட்டம்", இடைத் தரகர்களின் இடைஞ்சல்களைப் போக்கி வேளாண் மக்களின் விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும், நுகர்வோர் நியாய விலைகளில் அவற்றைப் பெற்றிடவும் வழி வகுத்திடும் "உழவர் சந்தை" அமைப்புத் திட்டம், எனச் செயல்படுத்தப்படும் பல்வேறு நன்னோக்குத் திட்டங்களுடன், தமிழக கிராம மக்களின் பொருளாதார நிலையையும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும்



மேம்படுத்தும் வகையில் அவர்களின் வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ள கால்நடைகளின் நலப் பராமரிப்பை உறுதி செய்யும் வகையில் அண்மையில் தொடங்கப்பட்டுள்ள திட்டமே "கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்".

கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் கடந்த 18.01.2000 அன்று காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுக்குன்றத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், தமிழகத்தின் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தையும் சேர்ந்த கிராமங்களில் ஏதேனும் ஒன்றில் மாதந்தோறும் நடத்தப்பெறுகிறது. கால்நடை மருத்துவர்கள் மட்டுமின்றி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் நிபுணர்களும், கால்நடைப் பராமரிப்புத்துறை வல்லுநர்களும், இத்திட்டச் செயல்பாட்டில் பங்கேற்று, உயர்தர சிகிச்சை முறைகளைக் கிராமப்புறப் பகுதிகளில் பராமரிக்கப்படும் கால்நடைகளைத் தேடி, நாடிச் சென்று வழங்க இத்திட்டத்தின் மூலம் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**"செல்வம் எத்தனையுண்டு புவிமீதே – அவை யாவும் படைத்த தமிழ்நாடு"**

- என்றார் தமிழ்க்கவி பாரதியார். தமிழகம் கால்நடைச் செல்வங்களையும் நிரம்பப் பெற்றுள்ளது. கிராமப்புறப் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு மகத்தானது. வேளாண் விளைச்சல்கள் பொய்த்து விடும் காலத்திலும், பருவ வேறுபாடு இன்றி ஆண்டுதோறும் வருவாயைப் பெற்றிடவும் தமிழகக் கிராம மக்கள் பெரிதும் நாடி நிற்பது கால்நடை வளர்ப்பையே.

பெரு நகரங்களில் வாழ்வோர் பெரும் தொழில் நிறுவனங்களில் தங்களின் சேமிப்பை முதலீடு செய்து பங்குகளை வாங்கிச் சேர்ப்பது போல், ஆண்டு முழுவதும் வறுமையற்ற வாழ்வு வாழக் கிராமப்புற மக்கள் கால்நடைகளில் தான் முதலீடு செய்கிறார்கள்.

வீட்டில் வளர்க்கப்படும் பசுமாடு நோய்வாய்ப்பட்டால், பால் உற்பத்தி பாதிக்கப்பட்டு வருவாய் இழப்பினால் அந்தக் குடும்பத்தின் வாழ்வு நசிந்து விடுகிறது.

அவசரப் பணத்தேவை ஏற்பட்டாலோ, ஓரிரண்டு ஆடுகள் அல்லது சில கோழிகள் விற்கப்பட்டு கடன் பெறாமல், கடன் மீது வட்டி ஏறித் தொல்லைப் படுத்தாமல் அத்தேவை நிறைவேற்றப் படுகிறது.

பொருளாதார நோக்கில் மட்டுமின்றி, தமிழகக் கிராமப்புற மக்களின் உடல்நல மேம்பாட்டிலும் கால்நடைகளின் பங்கு குறிப்பிடத்தக்கதாகவே அமைந்துள்ளது.

**"பத்துப் பசுக்கள் எம் வீட்டிலுண்டு – நல்ல
பாலுக்கு யாதொரு பஞ்சமில்லை;
நித்தம் சுகமாக வாழ்ந்திடுவோம்"**

- என்றார் கவிமணி தேசிக விநாயகனார் அவர்கள். ஆம்! பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகளில் மக்களை, குறிப்பாக குழந்தைகளைப் பாதித்துள்ள புரதப் பற்றாக்குறை நம் நாட்டுக் கிராம மக்களை அண்டிப் பார்க்க விடாமல் தடுத்து நிறுத்தியிருப்பதில் விலங்கினப் புரதம் நிறைந்த பால் பொருட்களுக்குச் சிறப்பிடம் உண்டு. மேலும், வீரிய இனக்கோழிகளின்

எண்ணிக்கைக்கு இணையாக கிராமப்புறப் புறக்கடை வளர்ப்பில் உள்ள நாட்டினக்



கோழிகளின் முட்டைகளும், இறைச்சியும் கூட தமிழகக் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்றன.

ஆனால், இத்தகைய கால்நடைச் செல்வங்கள் நோய்வாய்ப்பட்டால், கிராமப்புற மக்களுக்கு ஏற்படும் இழப்புகள் எத்தனையோ வழிகளில்,

- கால்நடை இறந்து விட்டால் நேரடி பொருளாதார இழப்பு
- நோய்வாய்ப்பட்டால் உற்பத்தி இழப்பு
- மருத்துவச் செலவு
- கால்நடைகளை மருந்தகங்களுக்கு ஒட்டிவர அல்லது எடுத்து வரப்போக்குவரத்துக் கூலி
- பய வேலை ஒரிரு நாட்களுக்குப் பாதிக்கப்படுவதால் வருவாய் இழப்பு

ஆனால், தற்போது உயர்தரமான கால்நடைச் சிகிச்சை முறைகளைக் கிராமப் பகுதிகளுக்கே எடுத்துச் செல்வதால் பல அனுகூலங்கள் உண்டு.

மாதந்தோறும், கிராமந்தோறும் நடத்தப்படவுள்ள கால்நடைப் பாதுகாப்புத் திட்ட முகாம்களில்...

- சினைப் பிடிக்காத மாடுகளுக்குச் சிறப்புச் சிகிச்சைகள்
- செயற்கை முறைக் கருவூட்டல்
- நோய்வாய்ப்பட்ட அனைத்து வகைக் கால்நடைகளுக்கும் உயர்தரச் சிகிச்சை வாய்ப்புக்கள் (ஆய்வகப் பரிசோதனை, அறுவைச் சிகிச்சைகள் மற்றும் பல உயர்தர சிகிச்சை வாய்ப்புகள்)
- கால்நடைகளுக்கும் குடற்புழு நீக்கச் சிகிச்சை
- கால்நடைகளுக்கும், கோழி இனங்களுக்கும் பல்வகைத் தடுப்பூசிகள் அளித்தல்
- உயர் அளவிலான உற்பத்திக்கான புதிய இரகங்கள், தீவன உற்பத்தி வகைகள், பயிர் செய்யும் முறைகள் மற்றும் பிற நவீன உத்திகளை விளக்கும் கண்காட்சி
- தேவைக்கேற்ற தொடர் சிகிச்சை வாய்ப்புகள்

எனப் பலவற்றிற்கும் வகை செய்யப் படுகின்றது.

பசு, எருமை, காளை, வெள்ளாடு, செம்மறியாடு, கோழி என அனைத்து இனங்களுக்கும் சிறப்புச் சிகிச்சை வழங்கவும், அறிவியல் ரீதியான பராமரிப்பு குறித்த ஆலோசனை பெறவும், நவீனத்தொழில் நுட்ப வசதிகளைக் கிராமப் பகுதிகளுக்கே கொண்டு செல்லவும் வழி வகுத்திடும் இத்திட்டத்தினால் தமிழகத்தின் கிராமப்புற பொருளாதாரம் பலவழிகளில் மேம்படும்.

- நோய்வாய்ப்பட்ட கால்நடைகளின் இறப்பு பெரிதும் தவிர்க்கப்படும்.
- நோய்ப்பாதிப்பினால் ஏற்படும் நேரடி அல்லது மறைமுக உற்பத்தி பாதிப்பு குறைக்கப்படும்.
- கால்நடைகளும், கோழி இனங்களும் நோய் பாதிப்பில் இருந்து முன்கூட்டியே பாதுகாக்கப்படும்.
- குடற்புழு பாதிப்பால் சுரத்தின்றிக் காணப்பட்ட கால்நடைகள் தெளிவு பெறும். அவற்றின் உற்பத்தித் திறன் பெருகும்.
- சினைப் பிடிக்காத மாடுகள் சினைப் பிடிக்கும், பால்வளம் பெருகும்.
- தீவனப் பயிர்கள் உற்பத்தி மேம்பட்டு, கால்நடைகள் மூலமாக பால், இறைச்சி உற்பத்தி பெருகும்.
- உயர் உற்பத்தித் திறன் கொண்ட கால்நடை, கோழி இனங்கள் கிராமப்பகுதிகளில் வலம் வரும்.
- கால்நடை மற்றும் புறக்கடை கோழி வளர்ப்பில் கிராமப்புற மக்களின் நம்பிக்கை மீட்கப்பட்டு வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளின் எண்ணிக்கை பெருகும்.

ஒட்டு மொத்தமாகத் தமிழகத்தில் கால்நடைச் செல்வங்களின் எண்ணிக்கை பெருகி, உற்பத்தி அதிகரித்துக் கிராம மக்களின் வருவாயும், வாழ்க்கைத் தரமும் நீண்டுயர்ந்து, இந்தியாவில், தமிழகத்தின் பெருமை சிறக்க வழி வகுக்கும் வகையில் தீட்டப்பட்டுள்ளது "கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்".

*நன்றி : கால்நடைக் கதிர்*



# +2 படித்தபின் என்ன படிக்கலாம்?

□ Dr. P.T. சூர்யகுமார்

சென்ற இதழின் தொடர்ச்சி

சென்ற இதழில் பத்தாம் வகுப்பு, +2 படித்தபின் என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம் என்று பார்த்தோம். பொதுவாக மாணவர்களிடம் உள்ள பல திறமைகளை வெளியில் கொண்டுவந்து அந்தந்த துறையில் வெற்றிப் பெறச் செய்ய வேண்டும் என்பது தான் கல்வியாளர்களின் சிந்தனை. அரசாங்கத்தின் நோக்கமும்கூட. வெற்றிக்கு உறுதுணையாக இருப்பவை ஆற்றல், அறிவு, அன்பு, அடக்கம், அயராது உழைத்தல், நல்ல எண்ணங்கள், நல்ல செயற்பாடுகள், நல்ல முயற்சிகள் ஆகும்.

எந்தத்துறையை எடுத்துக்கொண்டாலும் முழுதிறனைக் காட்டவேண்டும். எடுத்துக்காட்டாக தொழிற்கல்வியில் எல்லோரும் விரும்பும் பாடம், Computer Science, Information Technology, Electricals - Electronics and Communication Engineering. இதைப் படித்தவர்கள் எல்லோருக்கும் நல்ல வேலை வாய்ப்பு கிடைத்து விடுகின்றதா என்றால் இல்லை. ஏன்? என்று கேள்வி உங்களிடம் தோன்றும். காரணம் இந்த மூன்றும் Application Oriented or Job Oriented Course என்று கூறலாம். இதைப் படித்தவர்கள் நேரிடையாக ஒரு வேலைக்குச் செல்லலாம். ஆனால் அதற்கு தன்னை முழுமையாக தகுதி ஆக்கிக் கொள்கின்றார்களா என்றால் இல்லை எனலாம். Field Experience என்று கூறுவார்களே அது தெரிந்து இருக்க வேண்டும். Computer Science அல்லது Information Technology மாணவன், Software -களைக் கொண்டு எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து அளிக்கும் திறமை பெற்றிருக்கவேண்டும் அல்லது, தனக்குப் பிடித்த துறையில் முழுவிவரங்களையும் தெளிவாக, சுருக்கமாக கூறும் வகையில் அமைக்க (To present) தெரிந்து இருக்க வேண்டும்.

இல்லையின் ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது போல் ஆகிவிடும். இவ்விடத்தில் திருவள்ளுவரின் வாக்கினை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

*கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக*

பொதுவாக தொழிற்துறை, மருத்துவம், விஞ்ஞானம், விவசாயத் துறைகளைத் தவிர, மேலும்பல தொழிற்சம்பந்தமான வருமானமுள்ள துறைகள் உள்ளன. அவற்றில் சிலவற்றை பார்ப்போம்:

Accountancy / Commerce / Economics என்ற பாடங்களை +2வில் படித்த மாணவர்கள் B.Com., Corporate Secretaryship, Co-operation, Business Management, Business Administration போன்ற துறைகளில் படிப்பதோடு, CA, ICWAI, ACS என்ற உயர்தர படிப்புகளில் நேரிடையாக சேர்ந்து வெற்றி பெறலாம்.

## சார்ட் அக்கௌண்டன்ஸி (Chartered Accountancy)

மூன்று கட்டங்களாக பிரிக்கலாம்:

a. Foundation Course - ஆரம்பக் கல்வி (அ) அடிப்படைக் கல்வி [10 மாதம்]

b. Intermediate Course - மத்தியக் கல்வி

c. Final Course - இறுதிக் கல்வி

(i) அடிப்படைக் கல்வி என்பது சார்டட் அக்கௌண்டன்ஸியின் 'நுழைவு வாயில்' என்று கூறலாம். முன்பெல்லாம் இளங்கலையில் டிகிரி முடித்தவர்கள் தான் இதில் சேர தகுதிப் பெற்று இருந்தனர். ஆனால் 1992 ஏப்ரல் முதல் அடிப்படைக் கல்வி மூலம் +2 மாணவர்கள் CA படிப்பிற்கு நேரிடையாக சேரலாம் என்று அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த பவுண்டேஷன் கோர்ஸில் சேர விரும்புவோர் +2 படித்து இருந்தால் போதும். சேருவோர், கூடவே இளங்கலையில் சேர்ந்தும் படிக்கலாம். இரண்டு நன்மை. இளங்கலையும் படித்து விடலாம். சி.எ.வும் படித்து விடலாம். இதில் சேர விரும்புவோர் தங்கள் பெயரை குறிப்பிட்ட விண்ணப்பங்களுடன் பூர்த்தி செய்து அதற்குரிய பீஸ் DD மூலம் எடுத்து,

"Assistant Secretary,
The Institute of Chartered Accountants of India,
122, Uthamar Gandhi Salai,
P.B.No.3314, Nungambakkam,
Chennai - 600 034."

- என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஆங்கிலம் தான் பயிற்சி மொழி. பவுண்டேஷன் கோர்ஸில் என்ன படிக்க வேண்டும்? என்பதை பார்ப்போம் :

1. Fundamentals of Accountancy,
2. Mercantile Law,
3. Mathematics, Statistics,
4. Economics

இந்த பவுண்டேஷன் கோர்ஸில் தங்கள் பெயரை அந்த நிறுவனத்தில் பதிவு செய்த 10 மாதங்களுக்குப் பிறகு தேர்வு எழுதலாம். வருடத்தில் இரண்டு முறை ரிஜிஸ்தர் செய்யலாம்.

30.6.2000க்குள் ரிஜிஸ்டர் செய்பவர்கள் Foundation Course தேர்வினை மே 2001-இல் எழுதுவார்கள். அதே போல் 31.12.2000 க்குள் ரிஜிஸ்டர் செய்பவர்கள், நவம்பர் 2001-இல் எழுதலாம்.

(ii) பவுண்டேஷன் கோர்ஸ் பாஸ் செய்தவர்கள் அடுத்து இண்டர்மீடியட் கோர்ஸில் சேரலாம். பயிற்சிப் பெற்ற சார்டட் அக்கௌண்டன்டு ஒருவரின் கீழ் 'ஆர்டிகிள் கிளார்' ஆக பயிற்சி பெறவேண்டும். இவ்வாறு பன்னிரண்டு மாதம் பயிற்சி பெற வேண்டும். இப்பயிற்சிக்குப் பிறகு இண்டர்மீடியட்தேர்வு எழுதி வெற்றி பெறலாம். அதே போன்று மேற்கொண்டு பயிற்சிப் பெற்று இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பைனல் தேர்வு எழுதி வெற்றி பெறலாம். இதில் ஒரு வருடம் ஏதாவது ஒரு கம்பெனியில் பயிற்சி பெற வேண்டும்.

Intermediate-இல், குரூப் 1-இன் கீழ் மூன்று தாள்களும், குரூப் - 2ன் கீழ் 3 தாள்களும் ஆக ஆறு தாள்கள் எழுத வேண்டும். அதே போல் final-இல் குரூப் 1-ன் கீழ் 4 தாள்களும், குரூப் 2ன் கீழ் 4 தாள்களும் ஆக எட்டு தாள்கள் எழுத வேண்டும்.

### C.A. படித்தால் என்ன பயன் என்பதை பார்ப்போம் :

இந்த மூன்று கட்டங்களிலும் [3 ஆண்டு 10 மாதங்களில்] பாஸ் செய்தவர்கள் C.A. நிறுவனத்தில் நபராக ஏற்றுக் கொள்ளப்படுவர். C.A.-வாக இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பிராக்டிஸ் செய்யலாம். நிறைய பணமும், வசதியும் பெறலாம்.

மாதச் சம்பளம் வாங்குபவர்களும், கம்பெனி நடத்துவர்களும் C.A. படித்தவர்களிடம் ஆலோசனை பெறுகின்றனர்.

இளங்கலையில் டிகிரி முடித்தவர்கள் முதற்கட்டத் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கப்படுகின்றது.

### Fellowship - F.C.A. [அல்லது] A.C.A. :

இவ்வாறு மூன்று கட்டங்களிலும் வெற்றிப் பெற்றவர்கள் 'அசோசியட் மெம்பர்' ஆப் த இன்ஸ்டியூட்'' என (Associate Member of the Institute) ரிஜிஸ்டர் செய்யப்படுகின்றது. இதற்குப் பிறகு தொடர்ந்து 5 ஆண்டுகள் கவுன்சிலின் விதி முறைகளுக்கு இணங்க பயிற்சிப் பெற்றவர்கள் பெல்லோ மெம்பர் ஷிப் - என (Fellow Membership - F.C.A. (OR) A.C.A.) அழைக்கப்படுவர்.

சார்டட் அக்கௌண்டண்ட் ஆக பணி புரிய விரும்புவோர் சர்டிபிகேட் ஆப் பிராக்டிஸ்' (Certificate of Practise) என்ற சான்றிதழை அந்த நிறுவனத்தில் இருந்து பெற வேண்டும்.

இதற்கு மேல் முழு விவரங்கள் வேண்டுவோர் :

Board of Studies, C-1, Sector-1, Noida-201301, Ghaziabad District, U.P.

- என்ற முகவரிக்கு எழுதி தெரிந்து கொள்ளலாம்.

## கம்பெனி செகரட்டரிஷிப் (Company Secretaryship)

இந்த நிறுவனம் அக்டோபர் 13, 1968 முதல் செயல்பட்டு வந்தாலும் ஜனவரி 1, 1981 முதல் ஒரு முழுமையான நிர்வாகமாக செயல்படுகின்றது. இந்த நிறுவனம் கம்பெனி செகரட்டரி என்ற பதவிக்கு மாணவர்களை தயார் செய்கின்றது.

### கம்பெனி செகரட்டரி என்றால் என்ன?

ஒவ்வொரு பெரிய கம்பெனியின் மூத்த ஆபிஸர்களில் இவர்களும் ஒருவராக விளங்குகின்றனர். ஒரு கம்பெனியின் வெற்றிக்கும், தோல்விக்கும் சில நேரங்களில் இவர்களே காரணமாகியும் விடுகின்றனர். கம்பெனியின் பணவிஷயங்கள், மேற்பார்வை, சட்ட நுணுக்கங்கள், நிர்வாகம் போன்ற பல துறைகளில் தங்களுடைய பணி அதிகமாக உள்ளது. இது அல்லாது அன்றாட கம்பெனி அலுவல்களையும் அவர்கள் பார்த்தாகவேண்டும். ஒவ்வொரு கம்பெனியும் பல்வேறு நோக்கங்களைக் கொண்டதாக இருக்கும். எனவே கம்பெனி செகரட்டரியாக இருப்பவர்கள் பணியும், தான் பணிபுரியும் கம்பெனிக்கு தகுந்தவாறு மாறுபட்டு இருக்கும்.

ஒரு கம்பெனி என்றால் அதன் சுயாட்சி, வெளிப்புற மக்கள் தொடர்பு, அரசாங்கத் தொடர்பு, வளர்ச்சி, சமுதாய கண்ணோட்டம், வருமானம், வேலை செய்பவர்களின் திறன், பொருள்களின் உற்பத்தித்தரம், மக்களின் தேவை, அந்நிய நாட்டின் தொடர்பு, குறுகிய கால நீண்டகால கம்பெனியின் திட்டங்கள் என்ற எல்லாவற்றையும் பொருத்து உள்ளது. அத்துணை கட்டங்களிலும் கம்பெனி செகரட்டரியின் பங்கு மிகவும் பொருத்தமானது. இன்றைய பொருளாதார மறுமலர்ச்சித் திட்டங்கள், அரசாங்கத்தின் பல்நோக்குத் திட்டங்கள், வளர்ந்த நாடுகளுடன் நம் வியாபார போட்டி எல்லாவற்றிற்கும் சிறப்பாக ஒருங்கிணைந்த திட்டத்தையும், வெற்றியையும் ஒரு கம்பெனிக்கு வாங்கி கொடுப்பவர் கம்பெனி செகரட்டரி தான்.

50 இலட்சம் முதலீடு கொண்ட எந்த ஒரு கம்பெனியாக இருந்தாலும், ஒரு கம்பெனி செகரட்டரியை கண்டிப்பாக நிர்ணயிக்க வேண்டும் என்பது சட்டம்.

### கம்பெனி செகரட்டரியாக வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

+2 படித்த மாணவர்கள் (Fine Arts - தவிர) முதலில் தங்கள் பெயரை கீழ்கண்ட நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டு முதல் கட்டமாக (Foundation Course) [பவுண்டேஷன்கோர்ஸ்] பாஸ் செய்ய வேண்டும். இது 8 மாத கால படிப்பு ஆகும். இந்த நிறுவனம் டில்லியை தலைமை ஆபிஸாக கொண்டு இந்தியாவில் கல்கத்தா, மும்பை, சென்னை ஆகிய இடங்களில் நகர கிளைகளையும், 36 இடங்களில் துணைகிளைகளையும் கொண்டு உள்ளது.

மாணவர்கள் எப்போது வேண்டுமானாலும் தங்கள் பெயரை ரிஜிஸ்டர் செய்து கொள்ளலாம். இருப்பினும் வருடத்திற்கு இரண்டு முறை ஜூன், [30, செப்டம்பர்-மாதத்திற்கு முன்பதிவு செய்தவர்கள்], டிசம்பர் மாதங்களில் [31, மார்ச்சுக்குள் பதிவு செய்தவர்கள்] நுழைவுத் தேர்வு நடைபெறும். ரிஜிஸ்டர் செய்த பின் எட்டு மாதம் கழித்து தேர்வினை எழுதலாம். இதற்குரிய விண்ணப்பம் பெற உரிய



பணம் ரூ.35 [தற்போது]க்கு DD/IPO இன்ஸ்டிடியூடன் கம்பெனி செகரட்டிரி பெயருக்கு எடுத்து,

"The Institute of Company Secretaires of India, ICSI House, 22, Institutional Area, Lodi Road, New Delhi 110003"

- என்ற முகவரிக்கோ [அல்லது]

"SIRC, 4, Wheatcrofts Road, Nungambakkam, Chennai 600 034"

- என்ற முகவரிக்கோ அனுப்பி விண்ணப்பமும், விளக்கமும் பெறலாம்.

பவுண்டேஷன் கோர்ஸ்ஸில் கீழ்கண்ட பாடங்களைப் படிக்க வேண்டும்.

Business Communication
Business Law and Management
Principles of Accountancy
Economics and Statistics

ஒவ்வொரு பேப்பரிலும் முதல் முறையிலேயே குறைந்தது 40% பெற வேண்டும். மேலும் எல்லா பேப்பரின் தோராய மதிப்பெண் சுமார் 50%க்கு குறைவில்லாமல் வெற்றிப் பெற்றவர்கள், இரண்டாவது கட்டமாக இண்டர் மீடியட் (Intermediate Course of Company Secretaryship) கோர்ஸில் தங்கள் பெயரை பதிவு செய்யலாம்.

இண்டர்மீடியட்டில், 8 பேப்பர் [குரூப்-Iல் 4 பேப்பர்களும், குரூப்-IIல் 4 பேப்பர்களும்] எழுத வேண்டும். [இந்த துறைகளில் முதலிலேயே வேறு ஒரு இளங்கலை, பட்டப்படிப்பு படித்தவர்களாயிருப்பின் சில பாடங்களில் விலக்களிப்படுகின்றது] இதை முடித்தவர்கள், மூன்றாவது கட்டமாக 9 பேப்பர் (Group-I-3, Gr.-II-3, Gr.-III-3) எழுத வேண்டும். மேலும் இதில் வெற்றிப் பெற்றவர்கள், 2-3 வருடம் Practical Experience பெற வேண்டும். இந்த கோர்ஸை தொலைதூர படிப்பின் மூலமும், அங்கங்கே உள்ள கிளைகளின் துணையுடன் குறுகியகால நேரிடை பயிற்சி மூலம் படித்து வெற்றி பெறலாம். ACS படித்தவர்கள் Ph.D. ஆராய்ச்சி படிப்பிலும் சேர தகுதி பெறுகின்றனர். சில பல்கலைக்கழகங்கள் இதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

## காஸ்ட் ஒர்க்ஸ் அக்கௌண்டண்ட் (Cost Works Accountants of India)

இப்பதவியும் மேற்கூறிய இரண்டு பதவிகளைப் போன்று மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இதைப் படித்தவர்கள் Finance Director, Managing Director, Financial Controller, Chief Accountant, Marketing Manager, Chief Internal Auditor, Cost Controller என பல பதவிகளை வகிக்கலாம். மேலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் ICWAI படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகம். இதைப் படித்தவர்கள் மேற்கொண்டு Ph.D. என்ற ஆராய்ச்சி பட்டபடிப்பிற்கும் தகுதி உடையவர்கள் ஆகின்றனர். மேலும் காஸ்ட் அக்கௌண்டன்ட் முடித்தவர்கள் சொந்தமாகவும் பயிற்சி செய்து பொருள் ஈட்டலாம்.

### இதில் சேர என்ன தகுதி வேண்டும் என்பதை பார்ப்போம்?

+2 முடித்த மாணவர்கள் பவுண்டேஷன் (Foundation Course) கோர்ஸில் நேரிடையாக சேரலாம். மேலும் அகில இந்திய தொழிற்துறை கல்வி [அ] மாநில தொழிற்துறை கல்வி நிறுவனத்தால் அளிக்கும் கல்விச் சான்றிதழ் பெற்றவர்களும் சேரலாம். இதற்குண்டானதேர்வு பொதுவாக 23, 24 ஜூன் மாதமும், 30, 31 டிசம்பர் மாதத்திலும் வருடத்தில் இரண்டு முறை நடைபெறும். இந்த கோர்ஸில் சேர 31.5.2000க்குள் அல்லது 30.11.2000க்குள் உரிய விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

"Southern India Regional Council of ICWAI, ICWAI Bhavan, 65, Montieth Lane, Egmore, Chennai - 600 008."

தபால் மூலமும் கிளைகளில் நேரிடையாகவும் சேர்ந்து இந்த கோர்ஸை படிக்கலாம். பவுண்டேஷன் கோர்ஸ் முடித்தவர்கள் 18 மாதத்தில் final exam எழுதலாம்.

Foundation Course-ல் கீழ்க்கண்ட 4 பேப்பர் படிக்க வேண்டும்.

1. Business Fundamentals and Economics
2. Management and Organisation
3. Basic mathematics & Statistics
4. Commercial Law

Intermediate Course-ல் 8 பேப்பர் [குரூப் 1ல் 4, குரூப் 2ல் 4], final exams 8 பேப்பரும் [குரூப் 1ல் 4, குரூப் 2ல் 4] எழுத வேண்கடும்.

இளங்கலை, முதுகலை அல்லது தொழிற் படிப்பு ஏதேனும் படித்துக் கொண்டு இருக்கும் மாணவர்கள், Cost Accountants என்ற படிப்பையும் தொடர்ந்து படிக்கலாம்.

இவ்வாறு CA, ACS, ICWAI என்ற மூன்று கோர்ஸ்களும் மிகவும் பிரசித்தமானவை. இந்த மூன்று முக்கிய நபர்கள்தான் பொருளாதாரத்தின் சீரமைப்பின் சிற்பிகளாக விளங்குகின்றனர். இந்திய நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் இவர்கட்கு வரவேற்பு அதிகம். சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றும் உடலுக்கு நல்லதுபோல் இந்த மூவரும் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையானவர்கள் என்றால் மிகையாகாது. இதற்கு மிகவும் ஆராய்ச்சித்தன்மை கொண்ட அறிவும், நிறைய பொறுப்பும், அவ்வப்போது மாறுகின்ற சட்டநுணுக்கங்களையும், மேலைநாட்டின் வளர்ச்சியையும், மக்களின் விருப்பமும் நன்கு தெரிந்து கொண்டு செயல்பட வேண்டும். வாழ்க்கை முழுவதும் மாணவர்களாக இருக்க வேண்டும் என்றால் மிகையாகாது. என்ன மாணவச் செல்வங்களே, இதில் சேர இப்போதே தயாராகிவிட்டீர்களா?

பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையான மூன்று கோர்ஸ்களைப் பார்த்தோம்.

பொருளாதாரம் வளர்ந்தால் மட்டும் போதுமா? நாட்டின் பாதுகாப்பும் முக்கியம் அல்லவா?

நாட்டைக்காக்க நாம் எந்த கோர்ஸ்களை படிக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

**முப்படையில் சேர முந்துங்கள். முப்படையில் என்ன கோர்ஸ்கள் உள்ளன என்பதை பார்ப்போம்.**



ஓர் நாட்டின் ஸ்திரதன்மை அந்நாட்டின் குடியாட்சி (Democracy) ஆகும். வலிமை மிக்க நாடு என்கிற போது, பொருளாதாரத்தில் மட்டும் அல்ல, மனித சமுதாயத்தின் வாழ்க்கைத் தரம் மட்டும் அல்ல, ராணுவ பலத்திலும் எல்லா வகைகளிலும் வளர்ச்சியுற்ற நாடாக இருக்க வேண்டும். உலக நாடுகளோடு ஒப்பிடுகையில் இந்தியாவும் ராணுவ வளர்ச்சியில் சிறந்த இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. இந்திய பாதுகாப்புப் படையை மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம். 1.தரைப்படை (Army) 2. கப்பல் படை (Navy) 3. ஆகாயப்படை (Air Force) என. இந்த மூன்று பிரிவுகளில் பணிபுரிய மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு உள்ளது. மற்றப் பணிகளைக் காட்டிலும், நம் நாட்டின் பணி மிகவும் பெருமை அளிக்க வல்லது, அல்லவா?

மாணவர்கள் இவற்றைப் பற்றி நன்கு தெரிந்துக் கொள்ள வேண்டும் என்பது தான் குறிக்கோள். ஏதோ வீட்டில் சண்டைப் போட்டுக் கொண்டவன் அல்லது கிராமங்களில் விவசாயம் செய்ய நிலம் அல்லது சொந்த வீடு இல்லாதவர்கள் தான் இராணுவத்தில் சேருவர், வீட்டில் அடங்காதவன் நாட்டில் அடங்குவான் என்ற நம்பிக்கை எல்லாம் போய், இப்போது எல்லோரும் பங்கேற்கும் பண்பு வளர்ந்து உள்ளதை வரவேற்கின்றோம்.

**முப்படையில் சேர ஒழுக்கம், நேர்மை, தன்னம்பிக்கை, உடல் உறுதி, உள்ள உறுதி, துணிவு, ஆற்றல், சமயோசித அறிவு போன்றவைகள் மிகவும் அவசியம். எல்லாவற்றிற்கும் மேல் நாட்டுப்பற்று தேவை.**

மூன்று படைகளும் ஒன்றையொன்று சார்ந்துள்ளது. ஏதோ போர் காலத்தில் மட்டும் தான் இவர்கள் வேலை செய்கின்றார்கள் என்பது அல்ல. போர் இல்லாத காலங்களிலும், அரசாங்கத்திற்கு இராணுவத்தின் சேவை தேவைப்படின் உடனடியாக செயல்படுகின்றனர். உலக சமாதானத்திற்காக United Nation அழைத்தால் எந்த நாடுகளுக்கும் அனுப்பப்படுவர். சூறாவளி, மழை காலங்களில் வெள்ளம், பூமியதிர்ச்சி போன்ற இயற்கை சீற்றங்கள் ஏற்படும் போதும், மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் உதவும் வகையில் விரைந்து பணிபுரிகின்றனர்.

ஆண்டிற்கு ஏறத்தாழ 2000 அலுவலர்கள் வட்டத்தில் (Officers Rank) முப்படைக்கு தேர்வு செய்கின்றனர்.

**இப்போது தரைப்படையைப் பற்றி பார்ப்போமா?**

தரைப்படை என்பதை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1.காலாட்படை (Infantry) 2. இராணுவபடை (Armoured corps) 3. குறிவைத்து தகர்க்கும் படை (Artillery).

Infantry படையை மேலும் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். பாராசூட் படை, இயந்திரம் தாங்கிய படை, தனிப்படை என. அதே போல், இராணுவ படையிலும் டேங்க் படை பிரிவு மிகவும் பிரசித்திப் பெற்றது. Artillery படையில் ராடர், கணினி போன்ற நுணுக்கமான கருவிகளைப் பயன்படுத்தி எதிரி நாட்டின் விமானங்களையும், எதிரி நாட்டின் ராணுவ தளவாடங்கள் உள்ள இடத்தையும் குறிவைத்து தகர்த்துவிடும் திறன் வாய்ந்தவர்களின் தனிப்படை உள்ளது. இந்த மூன்று வீரர்களும் போர்களத்தில் முதன்மையாக இருந்து போராடுபவர்கள். இப்படை அல்லது இவர்களுக்கு பலவிதங்களில் உதவும் வண்ணம் Support Arms என்ற சிறப்பு படையும் உள்ளது. இதற்குப் பெயர், Army Service Corps என்பது. மேற்கூறிய மூன்று படைபிரிவுகளுக்கு வேண்டிய வாகன வசதிகள், மருத்துவ வசதிகள், தளவாடங்களை சரிபார்த்தல், சாப்பாட்டு பொருள்கள் சரியான முறையில் கிடைக்கும் வகையில் பார்த்துக் கொள்ளுதல் இவற்றின் தலையாயப் பணி ஆகும். தளவாடங்களை பராமரிப்புக்கென Ordance Corps என்ற பகுதி உள்ளது. இது அல்லது Intelligence Corps என்பது மற்றொரு பிரிவு. எதிரிகள் இருக்கும் இடம், படைபலம், போன்ற பல முக்கிய செய்திகளை சேகரித்து அவ்வப்போது மேற்பார்வைக்கு அனுப்புதல் இதன் தலையாய பணி. Army Medical Corps என்பது மருத்துவ உதவிகளையும், Signal Corps என்பது Communication - தொடர்பு தொடர்ந்து இருக்கும் வகையில் பணிபுரிகின்றது. Corps of Engineers



(Sappers) 'சேப்பர்' என்றழைக்கப்படுவர். படை முன்னேறுவதற்கு உறுதுணையாக மண்ணுக்குள் ஏதாவது குண்டு வைத்துள்ளார்களா என்று கண்டு பிடித்து, செயலிழக்கச் செய்தும், தேவைப்படின் பாலங்கள் அமைத்தல் போன்றவைகளைக் கவனிக்கும். அது அல்லது Corps of Millitary Police என்ற பிரிவு, Civil Police தேவைப்படின், வண்டிகள் போக்குவரத்து, முக்கிய தலைவர்களை பாதுகாப்புடன் வழிகாட்டி அழைத்துச் செல்லுதல், இதுதவிர Remount Veterinary Corps என்ற பிரிவு அறிவுள்ள நாய்களை (Sniffer dogs) பராமரித்து எப்போதும் கவனமாக இருத்தல், மேலும் விலங்குகளைப் பராமரித்தல், சட்டப் பிரச்சினைகளை கவனிக்க Judge Advocate Generals Branch (JAG) என்ற பிரிவும் உள்ளது.

இவைகள் அல்லாது, Millitary ஜவான்கள், கல்வி, உடற்பயிற்சி, முன்னேற்ற துறை, தபால் வசதி, பண்ணை போன்றவைகளைக் கவனிக்க சிறந்த பயிற்சிப் பெற்ற ராணுவ வீரர்கள் என்ற பெரிய அமைப்பைக் கொண்டது தான் தரைப்படை. மிகவும் நேர்த்தியான முறையில் அமைக்கப்பட்டிருக்கும் தரைப்படையில் சேர விருப்பமுள்ள மாணவர்கள் இராணுவம் நடத்தும் நுழைவுத் தேர்விற்கு தன்னை தயார்படுத்திக் கொள்ளுதல் அவசியம். அறிவும் மட்டும் அல்ல. உடற்திறனும், கண்பார்வையும் மிகவும் முக்கியம். பல சாகஸங்களை செய்யும் உடல் வலிமை வேண்டும்.

தரைப்படையைப் பற்றி தெரிந்து கொண்டீர்கள் இப்போது கடற்படைக்குச் செல்வோம். வீரமுடன் கடலில் நீந்தி வாருங்கள்.

**கடற்படையைப் பற்றி பார்ப்போம்**

கடற்படையிலும், தரைப்படையைப் போன்று பல பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவிற்கும் முக்கியப் பணி உள்ளது.

முதன்மைபிரிவு (Executive Branch), தொழிற்துறை பிரிவு ( Engineering Branch), [இதில் Marine Engineering and Navel Architecture அடங்கும்] மேலும், Naval Aviation Branch, Electrical Branch, Law Education, Logistic போன்ற பல பிரிவுகள் உள்ளன.

Short Service Commission (SSC) மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் திறமையைப் பொறுத்து, Logistic, Education Law, Technical, Air traffic Controller போன்ற பல பிரிவுகளுக்கு அனுப்பப் படுகின்றனர். [SSC என்பது மாணவர்களை பாதுகாப்புத்துறைக்கு தேர்வு செய்யும் கூட்டமைப்பு ஆகும்].

Executive Branch-க்கு தேர்ந்தெடுப்பவர்கள் போர் கப்பல்களை நடத்தும் முதன்மை அலுவலர்கள். போர் கப்பல்கள் பலவகைப்பட்டது. சில போர் கப்பல்களில் விமானந்தாங்கி தாக்கும், எதிரிக் கப்பல்களை தூள்தூளாக்கும் முறையையும், நீர்மூழ்கி கப்பல்களையும் தன்னிடத்தே வைத்து இருக்கும். பெரிய போர் கப்பல்கள் முதல் சிறிய கப்பல்கள் வரை பொறுப்பேற்று நிர்வகிக்கும் திறன் கொண்டவர்கள் தான் இதில் பணிபுரியும் முதன்மை அலுவலர்கள். பெரிய கப்பல்களுக்கு உதவிடும் வகையில் உள்ள Support Vessels, Mine Sweeper, Supply Ship போன்ற கப்பல்களையும் சில நேரங்களில் மேற்பார்வை இடவேண்டும்.

இதில் சேர, National Defence Academy நடத்தும் B.Sc., கணிதம் அல்லது இணையான இளங்கலையில் பட்டம் அல்லது B.Sc. கணிதம் கூடிய விஞ்ஞானம் படித்து இருக்க வேண்டும்.

Marine Engineering Branch என்பது போர் கப்பல்களை பராமரிக்கும் தனிப்பிரிவு ஆகும். இதில் பணிபுரிய Marine Engineer அல்லது Mechnical Engineer படித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். மேலும் +2 மாணவர்களும் நேரிடையாக சேர்க்கப்படுவர். அதில் சேர்ந்த பிறகு Naval Engineering College-ல் B.E. படிக்கலாம்.

இதே போல் Navel Architect என்ற பிரிவில் சேர +2 மாணவர்கள் நேரிடையாக தேர்ந்தெடுக்கப்படுவர். இவர்கள் போர் கப்பல்களை பழுது பார்த்தல், பராமரித்தல், பல்வகை போர் கப்பல்களை கட்டுதல் போன்ற அரிய பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

Electrical Branch என்ற பிரிவு ராடார் போக்குவரத்து, மின்னணு பொருள்கள் சரிபார்த்தல், அமைத்தல், ஏவுகணைகள், வானொலி வசதிகள் போன்றவை சரிபார்க்கும் முழு பொறுப்பு ஆகும். இதில் BE (ECE, EEE,IT) படித்த இஞ்ஜினியர்கள் தேவைப்படுகின்றனர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு Naval Academy-ல் ஆறுமாதக் காலம் கடும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. வெற்றிகரமாக முடித்தவர்களை வேலைக்கு அமர்த்துகின்றனர்.

Education Branch என்ற பிரிவில் சேர விஞ்ஞானம் அல்லது கலைப் பிரிவில் முதுகலைப் பட்டம் பெற்று இருக்க வேண்டும். இவர்களின் முக்கியப் பங்கு கடற்பற்றி ஆராய்ச்சியும், வானிலை ஆராய்ச்சியும் (Oceanography, Meteorology) தான். இவர்கள் முக்கியமாக கொச்சியில் உள்ள INS கருடா, அரக்கோணத்தில் உள்ள INS ராஜாளி, கோவாவில் உள்ள INS ஹன்ஸா, விசாகப்பட்டிணத்தில் உள்ள INS டெகா என்ற இடங்களில் பயிற்சிப் பெற வேண்டும்.

இப்படி பல துறைகளாகப் பிரிக்கப்பட்டு உலகில் சிறந்த கடற்படையில் ஒன்றாக விளங்கும் இந்திய கடற்படையில் சேர தீவிரமாக முயற்சியுங்கள்.

**விமானப் படைபிரிவைப் பற்றி சற்று பார்ப்போம் :**

இப்படைப் பிரிவிலும் பல பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவிற்கும் முக்கிய பணிகளும் உள்ளன. Flying, Engineering or Technical , Ground Duties என பிரிக்கலாம். Flying பிரிவில் உள்ளவர்கள் நவீன போர் விமானங்களில் பணிபுரியும் சாகசங்களை தெரிந்து வைத்து இருப்பர். Engineering பிரிவு பராமரிப்பும், Ground Duties என்பது Logistics, Material / Financial Planning நிர்வாகத்தை நடத்தும் திறமையும் கொண்டவர்கள்.

இதில் சேர ஏரோநாட்டிக்கல், மெக்கானிக்கல், எலெக்ட்ரிக்கல், எலெக்ட்ரான்ஸ் போன்ற பிரிவுகளில் படித்த BE இன்ஜினியர்களுக்கு வாய்ப்புக்கள் அதிகம்.

முப்படை ப் பிரிவுகளைப்பற்றி சற்று பார்த்தோம். இதிலுள்ள பல்வேறு பிரிவுகளில் சேர அரசாங்கம் எப்போதும் அழைப்பு விடுகின்றனர். எப்படி சேர்க்கப்படுகின்றனர் என்பதைப் பார்ப்போம்.

10+2 படித்த மாணவர்கள் National Defence Academy (NDA) நடத்தும் தேர்வில் வெற்றி பெற வேண்டும். வெற்றிப் பெற்றவர்களுக்கு 4 வருடம் கடுமையான பயிற்சி அளிக்கப்படுகின்றது. முப்படைக்கும் பொதுவாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதில் மூன்று ஆண்டுகள் கடுமையான பயிற்சியும், கடைசி நான்காவது ஆண்டு, கடற்படை, விமானப்படை, தரைபடை என பிரிக்கப்பட்டு, அந்தந்த படையில் பயிற்சி பெறுகின்றனர். வெற்றிப் பெற்றவர்கள் அந்தந்த துறையில் அதிகாரிகளாக நியமிக்கப்படுகின்றனர்.

இதே போல் இளங்கலைப் படித்தவர்கள் CDS (Combined Defence Serive) மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு 1½ வருடப் பயிற்சிக்குப் பிறகு IMA டேராடூன், Naval Academy கோவா, Air Force ஹைதராபாத் போன்ற இடங்களுக்கு மீண்டும் அனுப்பி வைத்து கடும் பயிற்சி பெறுகின்றனர்.

மேலும் முப்படைக்கு தேர்ந்தெடுக்கும் முறைகள் இரண்டு.

1. Short Service Commission (SSC)
2. Permanent Service Commission (PSC)

[தமிழ்நாடு பப்ளிக் சர்விஸ் கமிஷன் போன்ற அமைப்பு தான்]

அவ்வப்போது பல துறைகளுக்கு SSC என்ற அமைப்பு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற் கின்றது. SSC-ல் வெற்றிப் பெற்றவர்கள் குறைந்தது ஏழு வருடங்கள் (5-7 Years) பணிபுரியலாம். அதற்கு பிறகு தனக்குப் பிடித்த துறையில் (Air, Navy, Army) சேரலாம். Permanent Service Commission மூலமும் மேற்கொண்டு முப் படையில் சேர விரும்புவோர் சேரலாம். Permanent Service Commission - ஆல் தேர்ந்தெடுக்கப்படுவர். குறைந்தது 20 வருடம் பணிபுரிய வேண்டும். SSCயில் பணிபுரிந்தவர்களின் திறமைக்கேற்ப அரசாங்கமும் செயல்படும். **பெண்களும் இப்பணிகளில் ஈடுபடலாம்.** சிலநேரங்களில், பெண்கள் எதிர்பார்த்ததைவிட அருமையாக சிறப்பாக பல துறைகளில் பணியாற்று கின்றனர். 1995 முதல் பெண்கள் விமான ஓட்டிகளாக பறந்துள்ளனர் என்பது பெண்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் மனதில் விருந்தளிக்கின்றது.

SSC-யில் சேர 18 வயதுக்கு மேல் இருக்கக்கூடாது. தரைப்படையில்சேர முழுவிவரங்கள் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம்.

"Additional Directorate General of Recruiting, Army Headquarters, West Block-III, R.K.Puram, New Delhi"

அல்லது முழுவிவரங்களை தினசரிகள் மூலமும் தெரிந்து கொள்ளலாம். விமானப்படையில் சேர்வதுபற்றி விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

"Directorate of Manpower, Planning and Recruitment, Air Headquarters, Motilal Nehru Marg, New Delhi".



National Defence College, நியுடெல்லி என்பது பிரசித்திப்பெற்ற கல்லூரி. இதில் தான் முப்படையில் சேர்ந்த மூத்த அதிகாரிகளின் முழு பயிற்சிப் பள்ளி ஆகும். இதில் நன்கு தேர்ந்தவர்கள் முப்படையின் உயர்ந்த பதவியை வகிக்கின்றனர்.

## Career in Hotel Management

உனக்கு படிப்பு வரவில்லை. ஏதோ ஒரு ஓட்டலில் சேர்ந்து வயிற்று பசியைப் போக்கிக் கொள் என்று ஏதோ ஒன்றும் முடியாதவர்களுக்கு புகலிடம் என்ற மாயை மறைந்து, ஹோட்டல் தொழிலின் சிறப்பினையும், வெளிநாட்டினரையும் ஈர்க்கும் தன்மை கொண்டது என்பதை இன்றைய மாணவ சமுதாயம் புரிந்து கொண்டனர். மனிதன் மனிதனாக வாழ, உணவு, உடை, இருப்பிடம் அவசியம் என்பர். அதில் உணவின் பங்கு மிக முக்கியம். வாய்க்கு ருசியாகவும், அதே நேரத்தில் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கிணங்க சிறந்த உணவை அளிக்கவல்லது ஹோட்டல் தொழில். வெளிநாட்டவரையும் நல்ல முறையில் வரவேற்று இந்திய கலாச்சாரத்தின் பெருமையை விளக்க பெருந்துணையாக இருப்பது ஹோட்டல் பணிதான். சுற்றுலாத்தொழில் வளர்ந்து வரும் இந்நிலையில் ஹோட்டல் தொழிலுக்கு மிகவும் வரவேற்புள்ளது.

இன்ஸ்டிட்யூட் ஆப் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் கேட்டரிங் டெக்னாலஜி & அப்ளைடு நியூட்ரிஷன்



(Institute of Hotel Management, Catering Technology and Applied Nutrition) என்ற கல்வி நிறுவனம் சென்னை, மும்பை, டில்லி, கல்கத்தா, ஸ்ரீநகர், லக்னோ, புவனேஸ்வரம், ஹைதராபாத், பெங்களூர், திருவனந்தபுரம் போன்ற இடங்களில் உள்ளது.

மேலுள்ள இடங்களில் மூன்று ஆண்டு டிப்ளமா படிப்பிற்கு விண்ணப்பங்கள் பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் வரவேற்கப்படுகின்றது. எல்லா இடங்களுக்கும் பொதுவான நுழைவுத் தேர்வு அகில இந்திய அளவில் நடத்தப்படுகின்றது. +2 மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். 22 வயதிற்கு மேற்படாதவர்களாக இருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட பழங்குடியினரின் வயது 25 ஆக தளர்த்தப்பட்டுள்ளது.

இது தவிர உணவு தயாரிப்பு [18 மாதங்கள்] புட் அண்ட் பெவரேஜஸ் [8 மாதங்கள்] போன்ற சான்றிதழ் படிப்பில் சேரலாம். இதற்கு SSLC படித்த மாணவர்கள் சேர தகுதி பெறுவர்.

இளநிலைப் பட்டப்படிப்பு படித்தவர்கள் ஹோட்டல் நிர்வாகப் பணியில் அகாமடேஷன், ஆபரேஷன் & மேனேஜ்மெண்ட் படிப்பில் முதுநிலை டிப்ளமா படிக்கலாம். [18 மாதங்கள்] வயது வரம்பு 28. ஆனால் பழங்குடியினருக்கு வயது வரம்பு 31. இது அல்லாது கேனிங்/பேக்கரி/குக்கரி/ ரிஸப்ஷன்/புக்கீப்பிங்/கவுண்டர் சர்வீஸ் போன்ற ஒரு வருடப் படிப்பும் உள்ளது.

மதிப்பெண்கள் அடிப்படையிலும், நேர்முகத் தேர்வின் அடிப்படையிலும் மேற்கண்ட படிப்பிற்கு தேர்வு செய்கின்றனர். பல்வேறு கல்வி நிறுவனங்கள் தற்போது ஹோட்டல் மேனேஜ்மெண்ட் கோர்ஸ் நடத்துகின்றது.

இதில் சேர மாணவர்கள் ஆங்கிலத்தில் சரளமாக பேச பயிற்சி பெற வேண்டும். பிறமாநில மொழிகளைத் தேர்ந்தெடுத்தும் படிக்கலாம். வெளிநாட்டின் மொழிகளை (French, Russian, German போன்ற) தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். **உயரமாகவும், அழகான தோற்றமும், இனிமை நிறைந்த பேச்சும், பொறுப்பும், சகிப்புத் தன்மையும் அவசியம். இரவு பகல் என பாராமல் மற்றவர்களின் வசதிகேற்ப பணி புரிந்திட வேண்டும்.** தேவைபடின் தனக்குக் கீழுள்ள சில வேலைகளை தானே செய்யவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். இத்தகைய குணங்களைக் கொண்டவர்கள் இத்தொழிற் சம்பந்தமானபடிப்பில் சேரலாம்.

**எங்கே படிக்கலாம்? சில முக்கிய கல்லூரிகள்/நிறுவனங்களின் விலாசங்கள் கீழே தரப்பட்டுள்ளது.**

1. இன்ஸ்டிட்யூட் ஆப் ஹோட்டல் மேனேஜ்மென்ட், தரமணி, சென்னை - 600 113
2. ஃபுட் கிராப்ட் இன்ஸ்டிட்யூட், துவாக்குடி, திருச்சி - 620 015
3. பாண்டிச்சேரி இன்ஸ்டிட்யூட் கிராப்ட் மையம், உப்பளம்தெரு, பாண்டிச்சேரி - 605 001

இவற்றைத் தவிர பல தனியார் நிறுவனங்கள் சிறப்பாக மேற்கண்ட கல்வியைக் கற்றுத் தருகின்றது. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

4. சுப்புலட்சுமி லட்சுமிபதி சைன்ஸ் கல்லூரி, மதுரை - 625 022
5. ஹோலி கிரஸண்ட் ஸ்கூல் ஆப் ஹோட்டல் மேனேஜ்மெண்ட், சென்னை
6. மெரிட் ஸ்விஸ் ஆசியன் ஸ்கூல் ஆப் ஹோட்டல் மேனேஜ்மெண்ட், எழும்பூர், சென்னை - 600 008 & ஊட்டி - 643 001
7. எம்.எம்.ஏ, காலேஜ் ஆப் கேட்டரிங் டெக்னாலஜி, மயிலாப்பூர், சென்னை - 600 004
8. எஸ்.என்.ஆர். சன்ஸ் கல்லூரி, கோவை - 641 006
9. சப்தகிரி காலேஜ் ஆப் ஹோட்டல் மேனேஜ்மெண்ட், தருமபுரி - 636 701
10. வி.ஜே.பி. காலேஜ் ஆஃப் கேட்டரிங் டெக்னாலஜி & ஹோட்டல் மேனேஜ்மெண்ட், திருச்சி - 620 018

இதுபோன்று மேலும் இருபது கல்லூரிகள் மேற்கண்ட ஹோட்டல் மேனேஜ்மெண்ட் கோர்ஸ்களை தமிழ்நாட்டில் நடத்துகின்றனர். தனியார் நிறுவனங்களில் சேர்வதற்கு முன் மூன்று வருடத்திற்கு அல்லது ஒரு வருட கோர்ஸ்க்கு என்ன செலவாகும், என்ன வசதிகள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு மாணவர்களும், பெற்றோர்களும் இதில் சேர தீர்மானிக்க வேண்டும்.

படித்து முடித்தவர்கள் 5 அல்லது 3 நட்சத்திர ஓட்டல்களில் பல வசதிகளையும் பெற்று நிறைய வருமானமும் பெறுகின்றனர். வெளிநாடுகளில் செல்ல வசதியும் உள்ளது. சொந்தமாக ஹோட்டல்களும் நடத்தலாம்.

**மருத்துவம், இன்ஜினியரிங் ஆகிய துறைகளில்– இந்திய அளவில் நடைபெறும் சில நுழைவுத் தேர்வுகளைச் சற்று பார்ப்போம், வாருங்கள் :**

மருத்துவத்தில் MBBS, BSMS, BHMS, BAMS, BDS, Pharmacy, Nursing தவிர நிறைய மருத்துவ சார்புடைய கோர்ஸ்கள் இப்போது மிகவும் கிராக்கி. அனஸ்திசியோலஜி (Anesthesiology), அனாடமி (Anatomy), டெர்மிட்டாலஜி (Dermatology), பாரின்ஸிக் மெடிசன் (Foreignsic Medicine), ஆப்தமாலஜி (Optomology), ஆர்தோ (Ortho), பார்மகாலேஜி (Pharmacology), யுரோலஜி (Urology) போன்ற பல படிப்புகள் அதிக வேலை வாய்ப்பும், மக்களிடையே மிகவும் மரியாதை நிறைந்ததாகவும் உள்ளது.

தமிழ்நாட்டில் அல்லாது பிற மாநிலங்களில் அகில இந்திய அளவில் சில நுழைவுத் தேர்வுகள் தனித்தனியாக நடைபெறுகின்றது. அவற்றுள் சிலவற்றை இங்கே பார்ப்போம்.

**மருத்துவத்துறை**

- All India Institute of Medical Science, Ansari Nagar, New Delhi-110029 (50 Seats)

- Armed Forces Medical College, Pune-410 040 (105 for Boys, 25 for Girls)
- Central Board of Secondary Education, New Delhi (15% in Medical Dental Colleges மத்திய அரசு, மாநில அரசால் நடத்தப்படும் கல்லூரிகளில்)
- Christian Medical College, Vellore - 632 002
- Sri Ramachandra Medical College, Porur, Chennai 600 016
- St.Johns' National Academy of Health sciences Johnagara, Bangalore - 560 034
- Mahatma Gandhi Institute of Medical Sciences (P.O.) Sevagram, Wadha - 442 102
- Manipur Academy of Higher Education, University Building, Mashar Nagar, Manipal - 576 117
- Jawaharlal Nehru Medical College, Aligarh Muslim University, Aligarh - 202 002
- Institute of Mecial Sciences, BHU, Varnasi - 221 005

தமிழ்நாட்டு மாணவர்கள் பொதுவாக தமிழ்நாட்டின்-அண்ணாப் பல்கலைக்கழகம் நடத்தும் நுழைவுத் தேர்வினை மட்டும் எழுதுவர். அகில இந்திய அளவில் நடைபெறும் நுழைவுத் தேர்வுகளைப்பற்றி அதிக கவனம் செலுத்தி எழுதிட வேண்டும். ஏனெனில் பிற மாநிலங்களில் உள்ள கல்வி நிறுவனங்களில் தமிழ்நாட்டு மாணவர்களுக்கென தனி விழுக்காடு (%) உள்ளது. அதை முழுமையாக பயன்படுத்தாமல் விட்டுவிடுகின்றனர்.

### தொழிற்கல்வித்துறை

தொழிற்கல்வித்துறையில் அண்ணாப் பல்கலைக் கழகம் நடத்தும் நுழைவுத் தேர்வைத் தவிர அகில இந்திய அளவில் பல நுழைவு தேர்வுகள் நிறைய மாணவர்களின் கவனத்திற்கு வருவதில்லை. என்னென்ன நுழைவுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றது என்று பார்ப்போம்.

a. I.I.T. (Chennai, Bombay, Kanpur, Kharagpur, Gwahati); IISC, Bangalore, BHU, Varanasi, Indian School of Mines Dhanad

**போன்ற நிறுவனங்களுக்கென JEE நுழைவு தேர்வு.**

(Admission to B.Tech/B.Arch/B.Pharm/Integrated M.Sc./ Integrated MN.Tech)

b. Birla Institute of Tech. & Science, Pilani

c. Birla Institute of Tech. Misra, Ranchi

d. Army Institute of Tech. Pune

e. Pondicherry University, Pondy

f. School of Planning & Architecture, New Delhi

g. T.S.Chankya, Bombay, / M.E.R.I., Calcutta

h. University of Roorkee, Roorkee.

### வெளிநாட்டு மோகம் கல்வியிலும் தொடர்கின்றது

அயல்நாட்டு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் இந்திய மாணவர்களை பெருமளவில் சேர்க்கும் முயற்சியில் பல இடங்களில் கல்விக் கூடங்களின் கண்காட்சியும், ஆலோசனைக் கூட்டங்களையும் நடத்தி வருகின்றது. இதற்குரிய ஆலோசகர்கள், சென்னை, மும்பை, கல்கத்தா, டெல்லி போன்ற பெருநகரங்களில் செயற்படுகின்றனர். **வெளிநாட்டுப் படிப்பைப் பற்றி சில குறிப்புகள் தெரிந்து வைத்துக் கொள்வது நலம்.**

- ஆரம்பத்தில் அந்நாட்டு மொழி பயில வேண்டும்
- இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், நியூஜிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் இந்திய மாணவர்களை வெகுவாக கவர்கின்றது.
- இந்திய நாட்டின் சராசரி கல்விக் கட்டணங்களை விட பத்து முதல் நாற்பது மடங்கு கட்டணங்கள் செலவாகும்.
- மற்ற நாடுகளை ஒப்பிடும் போது, கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் கல்விக் கட்டணம் ஓரளவுக்கு குறைவாகவே உள்ளது.
- வெளிநாட்டு படிப்பை மூன்று வகையாக பிரிக்கலாம் :
  1. வெளிநாட்டிலேயே சென்று பல்கலைக்கழகங்கள், கல்லூரியில் தங்கி படித்தல்
  2. தொலைத்தூரப் படிப்பின் மூலம் இங்கேயே இருந்து கொண்டு படித்து, மேலைநாடுகளின் பல்கலைக்கழகங்களின் பட்டம் பெறுதல்
  3. இங்கே இரண்டு வருடம் அங்கே இரண்டு வருடம் என தங்கிப் படிக்கும் 'Twinning System' முறை



- இளநிலையைத் தவிர்த்து, முதுகலையில் சேர்வது நல்லது. மேலும் உதவிச் சம்பளம் கிடைக்கும் என்பதை உறுதி செய்து பிறகு படிக்கலாம்.
- வெளிநாடு சென்று படிக்க விருப்பமுள்ள மாணவர்கள் TOEFL (Test of English as a Foreign Language), SAT (Scholastic Aptitude Test) போன்ற தேர்வுகளை எழுதிடல் வேண்டும். இதைப்படிக்க பல புத்தகங்கள் உள்ளன. இருப்பினும் Barron's Guide for TOEFL, ARCO's Guide for SAT வாங்கி படித்து பயன் பெறலாம்.
- ஒவ்வொரு நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் பற்றிய விளக்கங்களை E-Mail, Internet மூலமும், முன்பே படித்த மாணவர்களிடம் விசாரித்தும் அல்லது வழிகாட்டு மையம்

  பேராசிரியர் P.S.B.Guidance I.T.Centre.
  4/1399 6th Hall West Mogappair,
  Chennai 600058.

  அல்லது Campus Abroad அல்லது மத்திய அரசு அங்கீகாரம் பெற்ற முனைவர்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம். மேலும் ஒவ்வொரு நாட்டின் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளின் முழு விவரங்களை கையேடு மூலம் (Hand Book) அந்தந்த நாட்டின் நிர்வாகம் வெளியிடுகின்றது.
- ஆராய்ச்சிப் படிப்பிற்கும், பட்டமேற்படிப்பு படிப்பதற்கும் பண உதவி சற்றேனும் கிடைக்கும் வகையில் வெளிநாடு சென்று படிக்கலாம்.
- சில மாணவர்கள் அயல்நாட்டுப் பட்டங்கள் பெறுவதால் அந்த நாடுகளில் வேலை தேடவோ, குடியுரிமை பெறவோ எளிதாகும் என்று கருதுகின்றனர். இது முற்றிலும் ஆதாரமற்ற நம்பிக்கை.
- மருத்துவப் படிப்பிற்குச் செல்லும் மாணவர்கள் உலக சுகாதார நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமா என உறுதிசெய்த பின்னர் சேர வேண்டும். நிறைய மாணவர்கள் மேல்நாட்டு மோகத்தால் அங்கீகரிக்கப்படாத கல்லூரிகளில் சேர்ந்து பண விரயம் செய்து, மனம் தளர்ந்து கண் கலங்கும் காட்சி நமக்கு கண்ணீரை வரவழைக்கின்றது.
- போலிப் பல்கலைக்கழகங்களும், அதற்கு ஏஜண்டாக இருந்து செயல்படுபவர்களையும் சற்று தெரிந்து வைத்துக் கொண்டு ஏமாறாமல் இருப்பது சிறந்தது என அறிவுறுத்துவது நமது கடமை.

### சட்டம்

சட்டம் என்பது ஒரு நாட்டின் முக்கிய பணிகளில் ஒன்று. சட்டம் ஒழுங்காக இருந்தால் நாடும் நலமுடன் இருக்கும். எனவே சட்டம் படித்தவர்கள் சிறப்பான இடத்தை வாழ்க்கையில் பெறுகின்றனர் என்றால் மிகையாகாது. எந்த தொழிலையும் தொடங்குவதற்கு முன் சட்ட சிக்கல்கள் வராதவாறு சட்ட நிபுணர்கள் உதவியை நாட வேண்டியுள்ளது. பெரும்பாலும் மாணவர்கள், மருத்துவம், இஞ்ஜினியரிங், விவசாயம், கம்ப்யூட்டர் போன்ற துறைகளைத் தேர்ந்தெடுப்பர். கடைசியாக சட்டத்திற்கு விண்ணப்பம் செய்வர். அது இப்போது மாறி, **சட்டம்தான் என்னுடைய முதல் விருப்பம் என மாணவர்களிடையே மாறுதல் ஏற்பட்டுள்ளது.**

சட்டப்படிப்பில் +2 படித்த மாணவர்கள் சேரலாம். BL என்பது 5 ஆண்டுகால படிப்பு ஆகும். தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, கோவை போன்ற இடங்களில் உள்ள கல்லூரிகளில் மாணவர்களை சேர்க்கின்றனர். இதற்குரிய நுழைவுத் தேர்வினை சட்டக்கல்வி இயக்கம் நடத்துகின்றது. மாலை நேரக் கல்லூரிகள் தற்போது இல்லை. இளநிலைப் படிப்பு படித்தவர்கள் 3 ஆண்டு முழுநேர BL படிக்கலாம். இவர்களுக்கு இரண்டாவது ஆண்டு முடிவில் BGL பட்டமும், மூன்றாவது ஆண்டு முடிவில் BL பட்டமும் வழங்கப்படும். சட்டக்கல்விக்கென தமிழ்நாட்டில் தனியாக டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் உள்ளது.

### எங்கெங்கு 5 வருட BL படிப்பு உள்ளது?

- நேஷனல் லா ஸ்கூல், பெங்களூர்
- சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
- டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை.
- பெங்களூர் பல்கலைக்கழகம், ஜனனி பாரதி.
- பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகம், பாண்டி.
- வெங்கடேஸ்வரப் பல்கலைக்கழகம், திருப்பதி.
- உஸ்மானியப் பல்கலைக்கழகம், ஹைதராபாத்.
- ஆந்திர பல்கலைக்கழகம், வால்டர்.
- கேரளாப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.
- இந்திய சட்டக் கல்லூரி, புதுடெல்லி.
- எம்.எஸ். பல்கலைக்கழகம், பரோடா.
- சிவாஜி பல்கலைக்கழகம், கோல்காபூர்.
- உட்கல் பல்கலைக்கழகம், புவனேஸ்வர்.

### சட்டத்தைப் படிக்க வேண்டுவோரிடம் இருக்க வேண்டிய குணாதிசயங்கள் (Essential attributes) என்ன?

- சட்டத்தை காக்கின்றோம் என்ற பொறுப்புணர்வு தேவை.
- சரளமாக ஆங்கிலத்தில் பேசவும், தமிழில் பேசவும் வேண்டும்.
- நீண்ட நேரம் பணி செய்ய வேண்டும்.
- புதிய புதியதாக நடக்கும் அன்றாட நிகழ்ச்சிகளை ஆராய்ந்து ஒழுங்குமுறைப்படுத்தும் திறன் பெற்று இருக்கவேண்டும்.
- நேர்மை, நீதி, மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை அதிகம் தேவை.
- பேச்சில் தெளிவு, உடனுக்குடன் விஷயங்களை உணரும் தன்மை, சரளமாக பேசுவதோடு, கருத்துக்களை மற்றவர்கள் ஒத்துக் கொள்ளக்கூடிய பேச்சு சாதுர்யம்.
- தோற்றம், நடை, பெருந்தன்மை, உயரம் போன்றவைகள் சட்டம் படிக்க விரும்புவோர்க்கு அழகு சேர்ப்பன ஆகும்.

**சட்டம் படித்தால் என்ன வேலை கிடைக்கும்**

- சமுதாயத்தில் சிறந்த மதிப்பை பெறுவர்.
- நீதிபதியாக பணிபுரியலாம்.
- சட்ட நிபுணர்களாக பணிபுரியலாம் (Legal Advisor, Advocate)
- பல பெரிய நிறுவனங்களில் சட்ட ஆலோசகர்களாக நியமனம் செய்வர்.
- பாதுகாப்பு படையின் முப்படைப் பிரிவில் சட்டம் படித்தவர்களுக்கு தனிமரியாதைதான்.
- உலக நிறுவனங்களில் பணிபுரிய வாய்ப்பு உள்ளது.
- எல்லாத்துறையிலும் சட்டவல்லுநர்கள் தேவைப்படுகின்றனர்.

## பேஷன் டெக்னாலஜி

வேலையை வெகுவிரைவில் தேடித்தரும் பயிற்சிக் கல்வியில் ஒன்று ஃபேஷன் டெக்னாலஜி. இந்தியா முழுவதும் 7 நகரங்களில் NIFT பயிற்சி மையங்கள் உள்ளன.

**என்ன படிக்கலாம்?**

**ஃபேஷன் டிசைன்** (3 ஆண்டு பட்டயப் படிப்பு)

**தகுதி**

+2வில் 50% மதிப்பெண்கள் பெற்றவர் சேரலாம்.

* * *

## கார்மென்ட் மானுஃபாக்சரிங் டெக்னாலஜி (2 ஆண்டு பட்டயப்படிப்பு)

**தகுதி**

இளநிலைப்படிப்பில் 50%க்கு குறைவில்லாமல் பெற்று இருக்கவேண்டும்.

நுழைவுத் தேர்வின் மூலமும், நேர்முகத் தேர்வு மூலம் மாணவர் சேர்க்கை நடைபெறுகின்றது.

இந்தியாவின் பல்வேறு நகரங்களில் பல்வேறுப்பட்ட டிசைன் கோர்ஸ்கள் நடைபெறுகின்றது.

சென்னையில் உள்ள NIFT அலுவலக முகவரி :

NIFT கோ-ஆப்டெக்ஸ் பில்டிங்,
350 பாந்தியன் சாலை, எழும்பூர்,
சென்னை - 600 008.

NIFT போன்று பல நிறுவனங்கள் ஃபேஷன் டெக்னாலஜி சம்பந்தமான கோர்ஸ்களை அளிக்கின்றது.

a. இன்டர்நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, H-12, சவுத் எக்ஸ்டென்ஷன், நியுடெல்லி - 110 049. இவற்றில் ஒரு வருட கோர்ஸாக அப்பாரல் மெர்கன்டைஸிங் (Apparel Merchandising); ஃபேஷன் டிசைனிங் (Fashion Designing); கமர்ஷியல் ஆர்ட் (Commercial Art); இன்டீரியர் டிசைன் (Interior Design); அசெஸரி டிசைன் (Accessory Design); கார்மெண்ட் குவாலிட்டி கண்ட்ரோல் (Garment Quality Control); கார்மெண்ட் புரடக்ஷன் டெக்னாலஜி (Garment Production Technology) போன்றவை கற்றுத் தரப்படுகின்றது. இதுபோல் மேற்கூறிய எல்லா கோர்ஸ்களிலும் இரண்டு வருட, சிலவற்றில் மூன்று வருட படிப்பும் உள்ளது.

b. பேர்ல் அகாடமி ஆஃப் ஃபேஷன், C-56/2, நகரா இன்டஸ்டிரியல் ஏரியா, பேஸ் II, New Delhi-110 020 என்ற நிறுவனமும் நல்ல வளமுள்ள கோர்ஸ்களை அளித்து வருகின்றது.

i. Fashion Design and Clothing Technology (Two years

ii. Computer Aided Design Apparel / Textiles (one year)

iii. Fashion Design (Textile) (one year)

iv. Apparel Production Management (one year)

c. S.N.D.T. Women's University, Mumbai.

i. Interior design (three years)

ii. Jewellery/Accessory Design (three years)

d. 4 வருட கோர்ஸான 'Interior Design' கீழ்காணும் நிறுவனங்களில் கற்றுத் தரப்படுகின்றன.

i. School of Interior Design and Institute of Environmental Design, Vallbha Vidya Nagar, Gujarat.

ii. Indian Institute of Interior Designers, Mumbai.

e. ஒரு வருட Interior Decoration என்ற கோர்ஸ் exterior-interior private Limited, Delhi, Chennai, Bangalore, Calcutta, Hydrabad, Pune, Kochi போன்ற இடங்களில் கற்றுதரப்படுகின்றது.

f. 5 வருட கோர்ஸான 'Bachelor of Fine Arts' J.J. School of Arts, Mumbaiயிலும் கற்றுதரப்படுகின்றது.

g. 'Gemmology' என்ற கோர்ஸ் கீழ்காணும் நிறுவனங்களில் கற்றுதரப்படுகின்றது.

Gemmology Institute of India, Mumbai.

Gemstones Artisans Training School, Jaipur.

Indian Gemmological Institute, New Delhi.

Indian Diamond Institute, Surat.

Small Industries Service Institute (SISI), Chennai.

H. இதேபோன்று 'Jewellery Design' என்ற கோர்ஸ்,



- Gem and Jewellery Export Promotion Council, Jaipur
- Jewellery Export Promotion Council, Mumbai
- National Institute of Design, Paldi Ahamadabad - 380 007

ஆகிய இடத்தில் கற்றுத் தரப்படுகின்றன.

இதில் National Institute of Design, Paldi Ahamadabad-380 007 என்ற நிறுவனம், இத்துறையில் பிரசித்திப் பெற்ற நிறுவனம். இதில் மேற்கூறிய Jewellery Design என்ற கோர்ஸ் அல்லாமல் நான்கு வருட கோர்ஸ்களான Industrial Design, Communication Design, Textile and Apparel Design என்ற கோர்ஸ்கள் பிரசித்திப் பெற்றவை.

இதில் சேர 10+2 மாணவர்களுக்கு இந்த மேற்கண்ட துறையில் மிகுந்த ஆர்வமும், கலைத்திறன் கொண்ட அறிவும், ஆங்கிலத்தில் சரளமாக பேசுகின்ற திறமையும் தேவை.

மேற்கண்ட நிறுவனத்தில் சேர ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதத்தில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் குறைந்தது இளங்கலையில் (Fine Arts Commercial Art, Architecture Engineering Home Science) படித்தவர்களுக்கென சிறப்பான கோர்ஸ்களை இந்நிறுவனம் அளிக்கின்றது.

சென்னையில் மற்றொரு நிறுவனமான The Institute of Fine Arts and Design, +2 படித்த மாணவர்களுக்கு Diploma in Visual Design for Advertising and Print Diploma in Fine Arts (Drawing and Painting) என்ற இருவகை கோர்ஸ்களை கற்றுத் தருகின்றது.

ஃபோட்டோகிராஃபில் சிறந்து விளங்க பல நிறுவனங்கள் பயிற்சி அளித்தாலும் குறுகிய கால பயிற்சியாக கீழ்கண்ட நிறுவனங்கள் மாணவர்களுக்கு அளிக்கின்றது.

i. The Institute of Imaging Technology, Nungambakkam, Chennai.

ii. Krishna's Photo Studio, T.Nagar, Chennai

iii. VGP Film and Video Institute, Chennai

* * *

**மீன்பிடிக் கப்பல் தலைவனாக வேண்டுமா?**

Mate Fishing Vessel Course [18 மாதம்]. Engine Driver Fishing Vessel [18 மாதம்] கோர்ஸ்கள் சிஃப்நெட் நிறுவனத்தால் நடத்தப்படுகின்றது. S.S.L.C. படித்தவர்கள் சேரலாம். இதில் வெற்றிப் பெற்றவர்கள், மீன்பிடிக் கப்பலின் தலைவனாக ஆகலாம். இப்படிப்பு குறித்து மேலும் விவரம் வேண்டுவோர் பின்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம்.

The Central Institute of Fisheries,
Nautical and Engineering Training,
S.N. Chetty St, Royapuram,
Chennai - 600 013.

**தொலைநிலைக்கல்வி :**

ஏதாவது ஒரு வேலையைப் பார்த்துக் கொண்டோ அல்லது திறந்த வெளி பல்கலைக்கழகங்கள் மூலம் மேற்கொண்டு இளநிலை, முதுநிலை பட்டயப்படிப்ப படிக்கலாம். இந்திராகாந்தி தேசிய திறந்தநிலை பல்கலைக்கழகம், புதுடெல்லி, சென்னை பல்கலைக்கழகம், பாரதியார் பாரதிதாசன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோவை ஆகியவை முக்கியப் பல்கலைக்கழகங்கள் ஆகும். இதுபோன்ற இந்தியாவின் ஏறத்தாழ 68 பல்கலைக்கழகங்கள் தொலைநிலைக்கல்விகளை அளிக்கப்படுகின்றது. மாணவர்கள் வேலைவாய்ப்பிற்கான கோர்ஸ்களை தேர்ந்தெடுத்து படித்திடல் வேண்டும்.

**பெற்றோர்களுக்கு ஓர் வேண்டுகோள் :**

தன்னுடைய பிள்ளைகளின் பிரகாசமான எதிர்காலத்திற்கு பெற்றோர்களைத் தவிர சிறந்த வழிகாட்டி வேறு யாரும் இல்லை என்பது உண்மை. இருப்பினும் பெற்றோர்கள் சிலவற்றை மனதில் கொள்வது நல்லது என்ற முறையில் இங்கே தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

- என்னென்ன கோர்ஸ், எங்கே உள்ளது என்ற முழுமையான விவரங்களை தெரிந்துகொள்ள வேண்டும்.
- அந்த கோர்ஸில் சேர தகுதி, நுழைவுத்தேர்வு, நேர்முகத்தேர்வு முதலியவற்றைப் பற்றி தெரிந்து கொள்ளுதல் அவசியம்.
- அந்த படிப்பின் காலம், படிப்பினைப் படித்தபின் மேற்கொண்டு உயர்கல்வி பெறவேண்டுமா? அல்லது இளநிலைக் கல்வி முடித்தவுடன் வேலைக் கிடைக்குமா என்பனவற்றை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.
- மாணவர்களும், பெற்றோர்களும் அந்த கோர்ஸை முடிக்க என்ன செலவாகும் என்பதை நிர்ணயிக்க வேண்டும்.

எ-கா : ஒரு மாணவன் பேமெண்ட் சீட்டில் Engineering-ல் சேர விழைகின்றான் என்று வைத்துக்கொள்வோம்.

| | ரூ. |
|---|---|
| • பீஸ் ஒரு வருடத்திற்கு 65,000 4 வருடத்திற்கு பீஸ் | - 2,60,000 |
| • மெஸ்பில் [சாப்பாடு/ஹாஸ்டல் ரூ.1,000/மாதம் என வைத்துக்கொண்டால் 4 வருடத்திற்கு 4X10 = 40 மாதங்கள் விடுமுறை போக | - 40,000 |
| • டிரஸ், புத்தகம், எழுதுபொருள் போன்றவை 4 வருடத்திற்கு | - 25,000 |
| • பயணச் செலவு | - 10,000 |
| • புராஜெக்ட் செலவு | - 7,000 |
| • இதர செலவுகள் | - 5,000 |
| ஆகமொத்தம் | - 3,47,000 |

4 வருட BE படிப்பிற்கு ஆகும் செலவு தோராயமாக 3 இலட்சத்து நாற்பத்து ஏழாயிரம் ஆகும். இதுவே Free Seat கிடைத்தால் குறைந்தது 2 இலட்சம் செலவாகும். மேற்கொண்டு ME/Tech படிக்கவேண்டும். **மாணவர்களே சற்று சிந்தியுங்கள். தன்னுடைய வசதிகளையெல்லாம் கட்டுபடுத்தி உங்களுக்காகவே வறுமையில் வாழும் பெற்றோர்களுக்கு நல்முறையில் படித்து நல்ல மாணவனாக வர முயற்சியுங்கள். அதுதான் நீங்கள் பெற்ற தாய்-தந்தைக்கு செய்யும் சேவை, நாட்டிற்கும் தான்.**

- படிப்பிற்கு ஏதேனும் உதவிச்சம்பளம் கிடைக்கின்றதா என்று அறிய வேண்டும்.

- பெற்றோர்கள் குறிப்பு எடுத்து கொள்வது நல்லது. மாதம் ஒருமுறை ஆசிரியரையும், தலைமை ஆசிரியரையும் சென்று பார்க்க வேண்டும்.

- பிள்ளைகளை நல்ல வார்த்தைகளைக் கொண்டு பேசி, கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டித்து வளர்க்க வேண்டும். ஓரேடியாக கண்டிப்பதும், ஓரேடியாக கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவதும் சரியில்லை. அவர்களை திருத்துகின்றோம் என்பதை வெளியில் காட்டிக் கொள்ளாதவாறு திருத்த வேண்டும்.

- பிள்ளைகள் எதிரிலேயே தாய் தந்தை ஒருவருக் கொருவர் குறை காண்பது, பேசுவது, சாடிக்காட்டுவது, பிள்ளைகளுக்கு மனதில் திடத்தன்மையை குறைப்பதோடு, சிந்தனைகளையும் குறைத்து விடுகின்றது.

- அதேபோல் மற்றவர்கள் எதிரில் பிள்ளைகளை குறைகூறுவதும், தகாத வார்த்தைகளால் பேசுவதும் தவிர்க்க வேண்டும். அது அல்லாமல் மற்றவர்கள் எதிரில் என் பிள்ளை நல்ல பையன் என்றும், தவறுதல்கள் செய்வதில்லை என்றும், நல்லபிள்ளைகளோடு மட்டும்தான் நண்பனாக இருக்கின்றான் என்றும் மிகைபடுத்தாமல் கூறுவது நல்லது.

- RP. factor - Reward Punishment என்ற முறையில் **புகழ்கின்ற செயல்களை செய்தபிறகு தவறாமல் புகழ வேண்டும்.** தவறு என்கின்ற செயல்களை செய்கின்ற போது கண்டிப்பாக கண்டிக்க வேண்டும். அவனாக எதுவும் செய்ய லாயக்கு இல்லாதவன். சொல்வதை மட்டும் செய்வான், தன்னிச்சையாக சிந்திக்க மாட்டான், அறிவு வளர்ச்சி அற்ற குழந்தையைப் போல் நடந்துகொள்வான். சில நேரங்களில் முட்டாள் போலும் நடப்பான். பொறாமை குணம் உடையவன். குட்டிசுவராகத்தான் போவான், பொறுக்கி, எருமை என்றும், ஆடுமாடு மேய்க்ககூட இலாயக்கு இல்லாதவன் என்றும் அர்ச்சனை செய்வதை விடுத்து அவனிடம் உள்ள அருமையான குணங்கள், சிந்தனை, செயல்பாடுகளை வெளியே கொண்டு வாருங்கள். **பிள்ளைகளிடம் நல்லதொரு தோழனாக இருப்பது நல்லது.**

**கல்வியின் முக்கியத்துவத்தை சங்ககாலம் முதல் உணர்த்தியுள்ளது.**

- கல்வியின் மூலம்தான் பிள்ளைகள் நல்ல வாழ்க்கையைப் பெறமுடியும். **பெற்றோர்கள் பிள்ளைகளின் படிப்பை பாதியில் நிறுத்திவிடக்கூடாது.** நம் நாட்டில் ஆரம்ப பள்ளியில் 100 பேர் சேருகின்றார்கள் என்று வைத்துக்கொண்டால், +2 படிக்கும் மாணவ-மாணவிகள் 22 பேர்தான், மேலும் மேற்கல்வி படிக்கின்றவர்கள் 9 பேர்தான். இந்தியாவில் மொத்தம் ஏறத்தாழ 76 இலட்சம் மாணவர்கள்தான் கல்லூரிக்குச் செல்கின்றனர். **வளர்ந்த நாடுகளை ஒப்பிடுகையில் இது மிகவும் குறைவு.** அதாவது இந்தியாவின் 100-க்கு 9 பேர்தான் கல்லூரி செல்கின்றனர். அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் 100-க்கு 50 பேர் கல்லூரிக்குச் செல்கின்றனர். மற்றும் சில வளரும் நாடுகளில் 100-க்கு 24 பேர் கல்லூரிக்குச் செல்கின்றனர். நாம் எந்த அளவு பின்தங்கி உள்ளோம் என்று பாருங்கள். **பெற்றோர்களின் தலையாய கடமை பிள்ளைகளை மேற்படிப்பிற்கு அனுப்புவதுதான். 'பிச்சைப்புகினும் கற்கை நன்றே' என்ற வாக்கினை என்னுடைய தாய் எப்போதும் கூறுவதை இங்கு நினைவுபடுத்துகின்றேன்.**

கல்வி சிறப்பினை சங்ககாலம் தொட்டே விளக்கப்பட்டுள்ளது. திருக்குறளின் 43ஆவது அதிகாரம் 'அறிவுடைமை' கல்வியின் முக்கியத்துவத்தை விளக்குகின்றது. ''அறிவு அற்றம் காக்கும் கருவி'' வறுமையிலிருந்து விடுபட கல்விதான் சிறந்த கருவி என அழகாக விளக்கப்பட்டுள்ளது. அண்ணாப் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுபோல் அயோத்தியில் விரும்பும் பாடங்களை தேர்ந்து எடுத்து படித்தனர் என கம்பன் அன்றே வருணித்துள்ளார் [நகர பாடகம், 74] ஏழையாய் இருந்தாலும் பெற்றோர்களின் முதல் கடமை பிள்ளைகளுக்கு நல்லதொரு கல்வி கொடுப்பதுதான் என புறநானூறு கூறியுள்ளது. [புறநானூறு 312, 183]. தமிழக அரசாங்கமும் இதனை உணர்ந்து ஏறத்தாழ 21.56% அளவில் மொத்த மாநில வருவாயில் [பள்ளிக் கல்விக்கென 3834.39 கோடியும், உயர்கல்விக்கென 812.79 கோடி எனவும், ஆக 4648.95 கோடி] கல்விகென ஒதுக்கி உள்ளது மிகவும் போற்றத்தக்கது. தமிழக அரசுக்கு நன்றியும் இந்நேரத்தில் சொல்லுதல் மிகையாகாது. 1997 புள்ளியியல் படி, தமிழ்நாடு இளநிலைக் கல்வியில் [சையன்ஸ்] பாடங்களில் இந்தியாவிலேயே தமிழகம் முதன்மையாக வந்துள்ளது. ஆண்கள்: 70,962; பெண்கள்: 59,687; மொத்தம்: 1,30,649. இந்தியாவின் மொத்த மாணவர்கள் (B.Sc. இளநிலை - சயின்ஸ்] : 9,77,513. இதற்கடுத்து மகாராஷ்டிரா, உத்திரபிரதேசம், ஆந்திர பிரதேசம். [ஆனால் கலைப்பிரிவில் தமிழகம் 10ஆவது இடத்தில் உள்ளது]. சற்று கவனத்தை திருப்பினால் போதும்.

மேற்கூறிய கருத்துக்கள் ஒரு வழிகாட்டியே தவிர முழுமையான விவரங்களை தெளிவாக கூற இயலவில்லை. இருப்பினும் முழுவிவரங்கள் வேண்டுவோர்,

முதன்மை அலுவலர்,
பேராசிரியர் P.S.B. கல்வி மையம்,
4/1399, 6வது ஹால்,
வெஸ்ட் முகப்பேர், சென்னை.

என்ற முகவரியை தொடர்புகொண்டு பயன்பெறலாம்.

☐ ☐ ☐



# பழங்களின் மருத்துவப் பயன்கள்

● டாக்டர் ஜி. மணிவாசகம்

நன்றாகப் பழுத்த பழங்களையே நாம் உண்ண வேண்டும். வாழை, மா, பலா ஆகியவற்றை முக்கனி என்கிறோம். இவை மூன்றும் உடல் பெருக்கத்துக்கு முக்கியமானவையாகும். பொதுவாக எல்லாப் பழங்களுமே மலமிளக்கிகளாகும்.

**நெல்லிக்கனி**

அமிர்தத்துக்கு ஒப்பாகிய நெல்லிக்கனியை பகற்பொழுதில் உணவுக்கு முன் சாப்பிட வேண்டும். பித்தமும், வாயுவும், காசநோயும், நீரிழிவும் இதனால் நீங்கும்.

**விளாம்பழம்**

உடலுக்கு சுகமும், நல்ல பசியும் உண்டாக்கும். பித்த தாகம் நீங்கும். இதனை உணவுக்கு முன்னும், பின்னும் உண்ணலாம். இது குடல் நஞ்சை வெளியேற்றும்.

**வாழைப்பழம்**

வாழைப் பழங்களை தயிருடன் சேர்த்து உண்ணக் கூடாது. பேயன் வாழைப்பழம் நோய் எதிர்ப்புச் சக்தியைத் தரும். மலை வாழைப்பழம் ஆண் மலடு நீக்கும். ரஸ்தாளிப் பழம் தசைப்பிடிப்பை ஏற்படச் செய்யும்.

**மாம்பழம்**

மாம்பழத்தை புசித்தால் மனத் தளர்ச்சி நீங்கும். ஆண்மையைப் பெருக்கும். மாம்பருப்பு அதிக இரத்தப் போக்கை நிறுத்தும்.

**அத்திப்பழம்**

பித்த வாதத்தைப் போக்கி மலபந்தத்தை நீக்கும். குருதியைப் பெருக்கும். பெண் மலடை குணமாக்கும். வெள்ளைப் போக்கை நிறுத்தும்.

**புளியம்பழம்**

மது போதையினால் ஏற்படும் விஷத்தை முறிக்கும். புளிப்புள்ள பழங்களை எப்பொழுதும் தனித்தே சாப்பிட வேண்டும்.

**நாவற்பழம்**

குருதியைப் பெருக்கும். உள்வெப்பத்தை அடக்கும். நீர் வேட்கை நீங்கும். பசியை உண்டாக்கி வயிற்றுப் போக்கை நிறுத்தும்.

**கொய்யாப்பழம்**

நோய் எதிர்ப்பு திறனைக் கொடுக்கும். வைட்டமின் 'சி' நிறைந்தது. மலச்சிக்கல் நீங்கும்.

**மாதுளம் பழம்**

இதை சாப்பிட உடலில் குளிர்ச்சி உண்டாகும். இரத்த விருத்தி உண்டாகும். தூலக நோய்கள் நீங்கும். வாந்தி நீங்கும். மயக்கம் நீங்கும். இதயத்திற்கு நன்மை செய்யும்.

**பேரீச்சம்பழம்**

இதனால் பித்த ரோகம், மலபந்தம் போகும். நரம்புத் தளர்ச்சி சுகமாகும். இரத்த விருத்தி ஏற்படும். உடல் வளர்ச்சி பெறும்.



முகப்பரு அழியும். சிறுநீரகப் பித்த கற்கள் கரையும். இப்பழத்தால் பித்தநோய் போகும். அழகு உண்டாகும். முள்ளந்தண்டு வலுப்பெறும். குடற்பூச்சிகள் அழியும். பாலுண்ணி, மருவு ஆகியவற்றை பரவாமல் தடுக்கும்.



மனச்சோர்வு அடியோடு நீங்கும். உடலுக்கு நன்மை தரும். காமத்தைக் கட்டுப்படுத்தும், தொடர்ந்து சாப்பிடுவது நல்லதல்ல.

### திராட்சைப்பழம்

இதனால் உடல் குளிர்ச்சி பெறும். சுக்கில விருத்தியும், இரத்த விருத்தியும் உண்டாகும். இதயத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கும்.

### பப்பாளிப்பழம்

இது நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாகும். தினமும் புசிக்க வயிற்று வலி தீரும். நன்றாக மலம் கழியும். உடல் தசையை கரைக்கும். குடல் பூச்சிகளை அழிக்கும். இரத்த விருததி பெறும். கால் ஆணி, கற்கள் உண்டாகாமல் தடுக்கும். தோல், முடிக்கு பளபளப்பு தரும்.

### எலுமிச்சம்பழம்

இதற்கு ராஜகனி என்று பெயர். மயக்கம், வாந்தி, வாய் குமட்டல், நீர் வேட்கை, கண்ணோய், காதுவலி ஆகியன நீங்கும். எலுமிச்சம் பழத்தை ரசமும் ஊறுகாயும், கற்பமுறையாக உண்ண நரை, திரை மாறும். பிடிப்பு, பக்க தூலை, மயக்கம்,



### கிச்சிலிப்பழம்

இதற்கு போஜன் கஸ்தூரி என்று பெயர். கிச்சிலிப்பழத்தை யாவரும் பிரியமாக அருந்துவர். இது இரத்தத்தைச் சுத்தம் செய்யும். நாவிற்கு ருசியைத் தரும். உணவுடன் புசிப்பின் பித்தத்தைக் குறைத்து தேக ஆரோக்கியத்தை தந்து நல்ல ஜீரண சக்தியைக் கொடுக்கும். இருமல், நீரிழிவு, மார்பு நோய், ஈரல் நோய் ஆகியன நீங்கும். உடலுக்கு நல்ல வன்மையை உண்டாக்கும்.

### மங்குஸ்தான் பழம்

இதனால் நாள்பட்ட கழிச்சல், சீதக்கழிச்சல், வெள்ளை ஆகியன தீரும். பழத்தை வேக வைத்துப் பிழிந்து எடுத்த சாற்றை நெருப்பில் வற்ற வைத்து சர்க்கரை கலந்து பாகு செய்து உட்கொள்ள நாட்பட்ட கழிச்சல், வெள்ளை நோய் நீங்கும்.

### குறட்டாம்பழம்

குறட்டாம் பழத்தை தலைக்கு தைலமாகத் தேய்த்து பயன்படுத்த மூளைக்கட்டி, மூளை புற்று வராமல் தடுக்கலாம்.

### தர்பூசணிப் பழம்

தாகத்தை தணிக்கிறது. சிறுநீர்க் கோளாறுகளை அகற்றுகிறது.



குடலுக்கு நல்ல பலனளிக்கும். பசியின்மை, அஜீரணம் நீங்கும்.

### ஆரஞ்சுப்பழம்

குடலுக்கும், உடலுக்கும் நன்மை செய்யும். பல்நோய், சரும நோய், மூத்திரக் கோளாறுகள் நீங்கும். ஜீரண சக்தியை அபிவிருத்தி செய்யும்.

### வேப்பம்பழம்

பழரசத்தை எடுத்து மணப்பாகு செய்து உட்கொள்ள தோல் நோய்கள் நீங்கும்.

நன்றி : *மருத்துவ அறிவியல் மலர்*

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906





டைடல் பார்க், சென்னை.










# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
சித்திரை

ஏப்ரல் 16–30, 2000

மலர் : 31 இதழ் : 20

விலை ரூ.5


## இந்த இதழில்...


❖ மதுரையில் உயர்நீதிமன்றக் கிளை கட்டிட கால்கோள்விழா .......... 2

❖ சட்டப் பேரவையில் .......... 4

❖ இளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாடு .......... 27

❖ வேலை...வேலையே வாழ்க்கை .......... 38

❖ என்ன படிக்கலாம் .......... 41


*முதல் பக்க அட்டையில்...*

மதுரையில் உயர் நீதிமன்றக் கிளைக் கட்டிட கால்கோள் விழா

*இரண்டு மற்றும் மூன்றாம் அட்டையில்*

விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு மையம்

*கடைசிப் பக்க அட்டையில்*

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு

---

**திருக்குறள்**

*தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்*
*வன்மையு ளெல்லாந் தலை*

அறிவு ஆற்றல் ஆகியவற்றில் தம்மைக் காட்டிலும் சிறந்த பெரியவராய் இருப்பவரோடு உறவுகொண்டு அவர்வழி நடப்பது மிகப்பெரும் வலிமையாக அமையும்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*


222187

மதுரை மாநகரில் சென்னை உயர் நீதிமன்றக் கிளை அமைப்பதற்காக புதிய நீதிமன்ற கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டுவிழா 13.4.2000 அன்று மதுரை உலகனேரியில் நடைபெற்றது.

விழாவிற்கு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமை தாங்கினார். மதுரை உயர் நீதிமன்றக் கிளை புதிய கட்டிடத்திற்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டாக்டர் ஏ.எஸ்.ஆனந்த் அடிக்கல் நாட்டி இலவச சட்ட உதவி ஆணையத்தின் மலரை வெளியிட்டார்.

“விழாவில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன் வரவேற்றார். உச்ச நீதிமன்ற நீதிபதி டி.ராஜூ, சட்டப்பேரவைத் தலைவர் பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன், சட்ட அமைச்சர் ஆலடி அருணா, மதுரை வழக்கறிஞர் சங்கத் தலைவர் கே.வெள்ளைச்சாமி ஆகியோர் விழாவில் வாழ்த்திப் பேசினர்.



விழாவில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை .வருமாறு :

“மேன்மை தங்கிய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களை வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மதுரை மாநகரத்திற்கு வரவேற்கின்றேன். மதுரை பழம்பெருமை வாய்ந்ததும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றினைக் கொண்டதும் ஆகும் எனத் தாங்கள் அறிவீர்கள். தென் தமிழகம் முழுவதும் பரவியிருந்த பெருமைமிகு பாண்டியர் ஆட்சியின் தலைமையிடமாக இந்நகர் அமைந்திருந்தது.

பல்வேறு தமிழ்ப் புலவர்கள் தத்தம் புகழ்மிகு படைப்புகளால் தமிழுக்குப் புகழ் சேர்த்த மூன்றாம் தமிழ்ச் சங்கம் இம்மதுரை மாநகரில்தான் அமைந்திருந்தது. கோவலனுக்கு அநீதி இழைத்தமையை உணர்ந்து துடிதுடித்து தான் அமர்ந்திருந்த அரியாசனத்திலேயே உயிர் துறந்த பாண்டியன் நெடுஞ்செழியன் அரசு புரிந்த இடம் இது. தமிழ்ப் பெண்களுக்கே எடுத்துக் காட்டாக வரலாற்றில் திகழும் கண்ணகியினால் கோவலன் குற்றமற்றவன் என்பது ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டது.

வரலாற்றுச் சிறப்பு மிகுந்த இந்நகரில் வரலாற்றுச் சிறப்பைப் பெறும் இந்நிகழ்ச்சியில் நாம் கலந்து கொண்டுள்ளோம். தமிழ்நாடு அரசும், மதுரை வழக்கறிஞர் சங்கமும், அனைத்து தென் தமிழ் மாவட்ட மக்களும் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக, சென்னை உயர் நீதிமன்றத்தின் நிரந்தரக் கிளை மதுரையில் நிறுவப்பட வேண்டுமென கோரி வந்துள்ளனர். இறுதியாக இன்று அந்தக் கோரிக்கை நிறைவேறி உயர் நீதிமன்றக் கிளையின் கட்டிடத்திற்குரிய அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் நாம், இங்கு குழுமியுள்ளோம்.. தமிழக நீதித்துறை நிர்வாக வரலாற்றில் இது உண்மையிலேயே ஒரு மைல்கல் ஆகும்.

இந்திய தலைமை நீதிபதி நீதியரசர் டாக்டர் ஏ.எஸ்.ஆனந்த் அவர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கு பெறுவதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உயர்நீதிமன்றக் கிளை கட்டிடத்திற்க்காக நீதியரசர் திரு ஆனந்த் அவர்கள் அடிக்கல் நாட்டுவது முற்றிலும் பொருத்தமுடையதாகும். ஏனெனில், அவர் சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பணியாற்றிய காலத்தில்தான் இந்தக் கிளை அமைவதற்கான திட்டம் ஒரு உறுதியான வடிவத்தைப் பெற்றது.

நீதியரசர் டாக்டர் ஆனந்த் அவர்கள் நமது மாநிலத்தில் தலைமை நீதிபதியாகப் பணிபுரிந்த காரணத்தால் தமிழக மக்களின் மீது அவர் பேரன்பும், பற்றும் கொண்டுள்ளவர் என்பதை நான் அறிவேன்.

மதுரையில் அமையும் இந்தக் கிளை சீரிய முறையில் செயல்படுவதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் போதுமான அளவில் அமைய வேண்டுமென நீதித்துறை அலுவலர்கள் உள்ளத்தில் உள்ள உணர்வுகளை நான் அறிந்துள்ளேன். இந்தக் கிளை மிகச்சிறப்பாகச் செயல்படுத்துவதற்குத் தேவையான அனைத்து உள் கட்டமைப்பு வசதிகளையும் இந்த அரசு நிறைவேற்றித் தரும் என உறுதி அளிக்கிறேன்.

## உயர் நீதிமன்றத்தை அணுகும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் உயர் நீதிமன்ற கிளைகள் தொடங்கப்பட வேண்டியது அவசியமாகிறது

☐ முதலமைச்சர் கலைஞர்





இங்கு கட்டிடம் கட்டுவதற்காக 75 ஏக்கர் நிலத்தினை 45.50 இலட்சம் ரூபாய் செலவில் இந்த அரசு கையகப்படுத்தி வழங்கியுள்ளது என்பது உங்கள்அனைவருக்கும் தெரியும். இங்கு கட்டப்படவுள்ள கட்டடத்திற்குரிய வரைபடங்கள் அரசுக்கு வந்துள்ளன. அந்த வரைபடங்களைத் துணையாகக் கொண்டு, இங்கு கட்டிடங்கள் கட்டுவதற்கு உரிய செலவினமாக 56.45 கோடி ரூபாயை நேற்றைய தினம் அனுமதித்துள்ளேன் என்பதனை இவ்வேளையில் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை உயர் நீதிமன்றம் இப்பகுதியிலிருந்து வெகுதூரத்தில் இருப்பது மட்டுமல்ல; செலவினங்களும், அதனால் ஏற்படும் மன உளைச்சல்களும் அதிகம். நீதியை நாடும் மக்களுக்கு இவையெல்லாம் தடைக்கற்களாக விளங்கின. இவற்றின் அடிப்படையில் சராசரி மனிதனுக்கு ஏற்படும் சிரமங்களைக் கருதி, சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளை இங்கு அமைவதற்கு மத்திய அரசினையும், சென்னை உயர் நீதிமன்றத்தினையும், இந்திய உச்சநீதி மன்றத்தையும் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தினோம்.

அஸ்ஸாம், மராட்டியம் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய இடங்களில் உள்ள உயர் நீதிமன்றங்களுக்கு இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கிளைகள் உள்ளன என்பதை நான் அறிகிறேன்.

உயர் நீதிமன்றத்தை அணுகும் மக்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதன் காரணமாக, அதற்கு உதவும் வகையில், இதுபோன்ற கிளை நீதிமன்றங்கள் பல காலப் போக்கில் தொடங்கப்பட வேண்டியது மிகவும் அவசிய மாகும்.

சென்னை உயர் நீதி மன்றத்தின் ஒத்துழைப்பு, அரசு வழக்கறிஞர்கள் சங்கம், இப்பகுதி வாழ் மக்களின் முழுமையான ஒத்துழைப்பு ஆகியவற்றின் துணையோடு இந்தக் கிளை மிகக் குறுகிய காலத்தில் அமைந்து முழுமை யாகச் செயல்படும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

### நிதிநெருக்கடிகள் இருப்பினும் நீதித்துறைக்கு தேவையான வசதிகளுக்கு முன்னுரிமை

நிதி நெருக்கடிகள் இருந்த போதிலும் தமிழக அரசு தமிழக நீதித்துறைக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதில் முன்னுரிமை வழங்கி வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் கோவை, விருதுநகர், உதகமண்டலம், திருத்தணி, சேலம் ஆகிய இடங்களில் 25 கோடி ரூபாய்க்கு மேல் வழங்கி நீதிமன்றங்களுக்குரிய கட்டிடங்களைக் கட்டியுள்ளது. கோவை, மதுரை ஆகியநகரங்களில் வழக்கறிஞர்களுக்கான கட்டிடங்களைக் கட்ட 3.25 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு நீதிமன்றங்களும், நீதித்துறை அலுவலர்களுக்கான குடியிருப்புகளும் 39 கோடி ரூபாய் செலவில் தமிழகம் முழுவதிலும் கட்டப்பட்டுள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 101 நீதிமன்றங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இறுதியாக, விரைவாக நீதி வழங்கப்படுவதற்கு உறுதுணையாக நீதித்துறைக்குத் தேவைப்படும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கான முயற்சிகளில் தமிழக அரசு சளைக்காது என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளை இங்கு அமைவதில் தென் மாவட்ட மக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார்கள். இத்திட்டம் நிறைவேறுவதற்காக நீண்ட காலமாக முயற்சிகளை மேற்கொண்டவன் என்ற முறையில் சிறப்பான இந்த நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலம் இந்த மகிழ்ச்சியில் நானும் பங்குகொள்கிறேன்”.

★ ★ ★

# சட்டப் பேரவையில்...

**சட்டப்பேரவையில் மானிய கோரிக்கைகளிலும் அதன் மீதான விவாதங்களிலும் மாண்புமிகு அமைச்சர்கள் வெளியிட்ட அறிவிப்புகள் இங்கு தொகுத்து வழங்கப்படுகிறது.**

## கல்வித்துறை...

ஊரக வளர்ச்சித் துறையின் வேலை வாய்ப்பு திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் 851 பள்ளிக் கட்டடங்கள் கட்டிக் கொடுகக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக புதியதாக அனைதது துவகக பள்ளிகளுக்கும் நிரந்தர கட்டட வசதி செய்து தரவேண்டும் எனற அடிபபடையில் 900 பள்ளிக்கூட கட்டடங்கள் கட்டிக் கொடுக்க 28 கோடி ரூபாய் அளவில ஊரக வளர்ச்சி இயக்குநரகத்தின் மூலமாக ஒரு திட்டம் கிடைத்திருக்கிறது. அந்த 900 பள்ளிக்கூடங்கள் கிராமப் பகுதியிலே உளள பளளிக்கூடங்கள் தெரிவு செய்யப்பட்டு கட்டுவதற்கு வழி காணப்படும்.

சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 557 பள்ளிகளில் கணினி அறிவியல் கற்பிப்பதற்காக அவரவர் தொகுதியிலே 2 வகுப்பறைகள கட்ட நடவடிக்கை எடுககப்பட்டு வருகிறது என்பதையும், கடந்த ஆண்டு 666 மேல்நிலைப் பள்ளிகளிலே தொடங்கப்பட்ட கணினி வகுப்புகளுக்கு மிகப் பெரும்பாலான வகுப்பறைகள் சட்டமன்ற உறுப்பினர் நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலேயிருநது தான் கட்டப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்து அதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு பக்கம் 20,000 பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டிகளுடன் இணைந்த ஒலிப்பதிவுக் கருவி ஏற்கெனவே வழங்கப்பட்டது. 6,100 பள்ளிகளுக்கு வருகிற ஆண்டில் அந்த ஒலிப்பதிவுக் கருவி இந்த ஆண்டு வழங்கப்படும்.

நடுநிலைப்பள்ளிகளுக்கு 2.25 கோடி ரூபாய் செலவில் 2000 ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளுக்கு வருகிற ஆண்டில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்.

பல ஆண்டுகளாக தலைமை ஆசிரியர்கள் இல்லாத 494 நடுநிலைப் பள்ளிகளுக்கு ஏற்கெனவே இந்த நடுநிலைப்பள்ளிகள் தலைமை ஆசிரியர் இல்லாமலேயே நடந்து கொண்டிருந்தன. அங்கு பல காலமாக அந்த போஸ்டிங் இல்லை. ஒருத்தர், யாரோ ஒருத்தர் ஒப்புக்குத் தலைவராக இருப்பார்.

ஆனால், இப்போது தலைமை ஆசிரியர் என்று தகுதியுள்ள நிலையில் 494 பேருக்கு அந்தப் பணியிடம் ஏற்படுத்தப்பட்டு இந்த ஆண்டு ஜூன், ஜூலையில் நிரப்பப்படும்.

இதுவரையிலே தலைமை ஆசிரியர் இல்லாத 259 தொடக்கப்பள்ளிகள், ஒரு ஆசிரியர், இரண்டு ஆசிரியர்கள் இருந்தால் தலைமை ஆசிரியர் என்ற ஒரு போஸ்ட் கிரியேட் பண்ணுவதில்லை. இநத 259 தொடக்கப் பள்ளிகளுக்குத் தலைமையாசிரியர் பணியிடம் ஏற்படுத்தப்பட்டு நிரப்பப்படும்.

393 ஓராசிரியர் பள்ளிகள் வருகிற ஆண்டில் ஈராசிரியர் பள்ளிகளாக மாற்றப்படும. அது ஏறததாழ 780–790 பள்ளிகள் இருந்தன. அவைகளிலே சிலவற்றிலே மாணவாகள எண்ணிக்கையைப் பொறுதது ஏற்கெனவே இரணடாவது ஆசிரியர்கள வழங்கப்பட்டாாகள்.

இப்போது 20 மாணவர்களாக இருந்தால், 30 மாணவர்களாக இருந்தால் இரண்டாவது ஆசிரியர் 393 பள்ளிகளுக்கும வழங்கப்படும.

இதுவரையிலே சிறுபான்மையினர் மாணவர் முன்னேற்றத்திற்காக சிறுபான்மையினர் அதிகமாக உள்ள கடலூர் மற்றும் இராமநாதபுரம் ஒன்றியங்களில் தொடங்கப்பட்ட புதிய பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டவும். அதாவது பெரும்பாலும் இஸ்லாமிய சமூகம் அதிகம் இருக்கிற அந்த வட்டாரங்கள். பள்ளித் தளவாடங்கள் பெற்றுத் தரவும் மத்திய அரசு நிதியுதவியுடன் வருகிற ஆண்டில் 1.5 கோடி ரூபாய் செலவு செய்யப்படும். கட்டடங்கள், தளவாடங்கள் ஆகியவற்றுக்கு நடுநிலைப் பள்ளி மாணவர்கள் அறிவியலை எளிதாகக் கற்கும் வண்ணம் பழைய ஊர்திகளை கழிவு செய்து, நீக்கிவிட்டு புதிய நடமாடும் ஊர்திகளை 50 இலட்ச ரூபாய் செலவில் 11 புதிய ஊர்திகள் பெற்றுத் தரப்படும்.

**நூறு உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்கள்**

இந்த ஆண்டு ஏற்கெனவே 364 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்பட்டது. இந்த ஆண்டு மேலும் 50 பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும்.






ஏற்கெனவே 296 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. இப்போது மேலும் 50 உயர்நிலைப் பள்ளிகள் நிலை உயர்த்தப்படும். 100 உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்கள் வழங்கப்படும்.

வருகிற ஆண்டில் 333 சிறப்பு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். அவைகளில் 243 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள், 30 இசை ஆசிரியர் பணியிடங்கள், 30 தையல் ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 30 ஓவிய ஆசிரியர் பணியிடங்கள் அடங்கும்.

இதில் தையல் ஆசிரியர், ஓவிய ஆசிரியர், இசை ஆசிரியர் பணியிடங்களைப் பெரும்பாலும் மகளிர் பள்ளிக்கூடங்களுக்கு வழங்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதேபோல, ஆசிரியர்களுக்குப் பயிற்சி, இடைக்காலத்திலேயே பயிற்சி வழங்குகிற முறையில் ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் வள ஆதார மையம் அமைக்க முடிவு செய்து முதற்கட்டமாக 3 மாவட்டங்களில் 1.57 கோடி ரூபாய் செலவில் 30 மையங்கள் வருகிற ஆண்டில் இடைநிலை ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படி 30 மையங்கள் மூலமாக அந்தப் பயிற்சி வழங்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

8 மாவட்டங்களில் சென்ற ஆண்டு ஆசிரியர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் புதிதாக தொடங்கப்பட்டன. சென்ற ஆண்டு 4 கோடி ரூபாய் செலவிலே கட்டடங்கள் கட்டுவதற்கு மத்திய அரசின் ஒப்புதலோடு அந்தப் பணி ஆற்றப்பட்டது. இந்த ஆண்டு மேலும் 4 கோடி ரூபாய் செலவில் அந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும்.

ஆசிரியர் கல்வி இயக்குநரகம் பணியாளர்கள் பணி விதிமுறை தனியாக வகுக்கப்பட்ட பின்பு 157 விரிவுரையாளர்களும், 31 மூத்த விரிவுரையாளர்களும் அதாவது இப்பொழுது பள்ளிக்கல்வித் துறையும், ஆசிரியர் பயிற்சிபள்ளிகளுடைய ஆசிரியர்களுடைய துறையும் இரண்டும் இணைக்கப்பட்டு இருந்தது. இங்கேயிருந்து அங்கே போவார்கள். அங்கேயிருந்து இங்கே வருவார்கள். அந்த முறை தவறு ஏனென்றால் பயிற்சி ஆசிரியர்களுக்கு, பயிற்சிக்கு ஆசிரியர்களாக, இருப்பவர்களுக்கு அதிலே நல்ல அனுபவம் உள்ளவர்கள் அங்கேயே நீடிப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்பதற்காக இரண்டு துறையும் பிரிக்கப்பட்டு செயல்படுத்துகிற முறையில் புதிதாக 157 விரிவுரையாளர்களும், 31 சீனியர் விரிவுரையாளர்களும் வருகிற ஆண்டில் நேரடி நியமனம் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக நியமிக்கப்படுவார்கள். உயர்நீதி மன்றத்தால் அனுமதி ரத்து செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் அவர்களைப் பற்றி அவர்களுக்காக உச்ச நீதிமன்றத்தில் 4.4.2000 அன்று மனு அனுமதிகோரி மறு ஆய்வு மனுதாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்வு இயக்குநரகம் இந்தக் கால கட்டத்திலே பல வகையிலே சீர்திருத்தம் பெற்றிருக்கிறது. இப்போது இரண்டு தேர்வு நடைபெற்றது. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு, ப்ளஸ் 2 தேர்வு, எந்தக் குறைபாடும் அதிகமாக வரவில்லை. ஆகவே, அதிக குறையில்லாத ஒரு துறையாக இருப்பதற்குக் காரணம் ஒழுங்குபடுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது. அந்த ஒழுங்குபடுத்தப்பட்ட காரியங்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஒன்று மதிப்பெண் சான்றிதழ்கள் வருகிற ஆண்டிலிருந்து தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இடம் பெறும். தமிழ் ஏற்கெனவே இடம் பெறவில்லை. ஆங்கிலத்தில் இருந்தது. இப்போது இரு மொழிகளிலும் இடம் பெறும். போலி மதிப்பெண்கள் சான்றிதழ்களில் வருவதைத் தடுக்க – போலிச் சான்றிதழ்கள் தயாரித்து தான் வரும். அப்படி தயாரித்து வருவதைத் தடுக்க சான்றிதழ்களில் முப்பரிமாணவில்லை அச்சிடப்படும். அதை ஒரு தடவை அச்சிட்டார்களேயானால் பிறகு யாரும் அதை எடுக்க முடியாது. மாற்ற முடியாது.

சிறுபான்மைச் சமுதாயத்திற்கு, அவர்கள் நீண்ட நாட்களாகத் தெரிவித்த ஒன்று, உருது அகாடமி தேவை என்று அவர்கள் பல முறை கேட்டார்கள். அதற்கான ஆய்வுகள் நடந்து, ஆந்திர, கர்நாடக மாநிலங்களுக்குச் சென்று, அங்கே எப்படி உருது அகாடமிகள் செயல்படுகின்றன என்று பார்த்து, அந்த அடிப்படையிலே கருத்துக்களைப் பெற்று, முதல்வர் அவர்களோடு உயர் கல்வித் துறை செயலாளர் கலந்து பேசி முடிவெடுத்து, அந்த அகாடமி அறிவிக்கப்பட்டது. அந்த அகாடமியிலே யார் யார் இடம் பெறுகிறார்கள் என்ற விவரத்தை இப்போது நான் படிக்கிறேன்.

அதனுடைய தலைவர் – கல்வித் துறை அமைச்சர், துணைத் தலைவர் – டாக்டர் சையது சைபியுல்லா,

அதனுடைய உறுப்பினர்கள் –அரசு செயலாளர்கள், அதிலே இடம் பெறுகின்ற மற்ற உறுப்பினர்கள் – டாக்டர் நிசார் அகமது, சையது சாஜ்ஜட் ஹுசைன், கவிஷ்பட்ரி, டாக்டர் பர்வீன் பாத்திமா, டாக்டர் சையது சலாலுதீன், டாக்டர் பி.அகமது ஹாசா, ஜபருல்ஹக் சகீர், மௌலிவி பசுருல்ஹக், திருமதி சபா முஸ்தபா, அப்துல்ரசீது, ஹர்பஜன்சிங், சையது பசுல்லா, அது தவிர மேலும் மூன்று உறுப்பினர்கள்.

அந்தக் குழு, தாங்களே நியமித்துக் கொள்ளக் கூடியவர்களாக, மூன்று உறுப்பினர்களுக்கான இடமும் அனுமதிக்கப்பட்டு, உருது அகாடமி அரசால் அறிவிக்கப்பட்டதாக நடைமுறைக்கு வரவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாக, தொடர்ந்து கல்வி மேம்பாட்டுக்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும். சமுதாய நலனைக் குறிப்பாகக் கொண்டு நாம் செயல்படுவோம். அதற்கு உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பும் தேவை என்று கேட்டுக் கொள்கிறேன்.

## நெடுஞ்சாலைத்துறை...

நெடுஞ்சாலைத்துறை என்பது முன்பு கடலிலே கரைத்த பெருங்காயத்தைப்போல கண்ணுக்குத் தெரியாமல் இருந்தது. இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையைப் பற்றி ஆழமாக, அகலமாக, அழுத்தமாக பல்வேறு கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான ஒரு வாய்ப்பை முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி, இதை ஒரு தனி துறையாக்கி உங்களுக்கெல்லாம் இந்த வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள்.




தமிழகத்தில் அரசு பராமரிப்பில் உள்ள சாலைகளின் மொத்த நீளம் 60,212 கிலோ மீட்டர். இது 100 சதுர கிலோ மீட்டருக்குள்ள சாலையினுடைய அடர்த்தி 177.572 கிலோ மீட்டர். அகில இந்திய சராசரியான 66.3 கிலோ மீட்டரை விட இது இரண்டு மடங்கு மேலும் அதிகமாகும்.

தமிழ்நாட்டில் சாலையினுடைய அடர்த்தி அகில இந்திய சராசரியைவிட 66.3 கிலோ மீட்டர் அதிகமாக இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றைச் சொல்வேன். 1991–92ஆம் ஆண்டு திட்டப் பணிகளுக்காக மட்டும் தமிழ்நாட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை அதாவது 1991–92இல் 67.05 கோடி ரூபாய். 2000–2001ஆம் ஆண்டில் முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிற தொகை 809.19 கோடி ரூபாய்.

ஆயிரத்துக்கு மேல் மக்கள்தொகை உள்ள எல்லா கிராமங்களுக்கும் 31.3.1999 உடன் இணைப்புச் சாலை வசதி செய்து முடிக்கப்பட்டு விட்டது. இப்போது 500 முதல் 1,000 வரை மக்கள்தொகை உள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி அளிக்கும் திட்டம் நபார்டு வங்கிக் கடன் உதவியோடு, 1999–2000இல் தொடங்கப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 436 கிராமங்கள் இணைப்புச் சாலை வசதி பெற்றுவிடும். இதிலே ஆதிதிராவிட மக்கள் – பெரும்பான்மையாக வசிக்கும் 100 கிராமங்கள் பயன்பெறும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இதுவரை மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 8,482 கிலோ மீட்டர் சாலைப் பணிகளில் 6,415 கிலோ மீட்டர் வரை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 2,067 கிலோ மீட்டர் சாலைகள் 31–12–2000–க்குள்ளாக முடிக்கப்பட்டு விடும்.

இரயில்வே மேம்பாலங்கள், கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில், ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த காலத்தில் மூன்று இரயில்வே மேம்பாலங்கள்தான் பெறப்பட்டன.

இந்த 4 ஆண்டு காலத்தில் கிட்டத்தட்ட 52 இரயில்வே மேம்பாலங்கள் நம்முடைய முதல்வர் அவர்களால் பெறப்பட்டன. 52 மேம்பாலங்கள் என்றால் சாதாரண காரியம் அல்ல. அதற்கு பாதித்தொகையை ரயில்வே இலாகா தருகிறது. பாதித் தொகையை தமிழ்நாடு அரசு போட வேண்டும். அதற்குரிய நிதி ஆதாரத்தையும், இங்கே வைத்துக்கொண்டுதான் முதலமைச்சர் அவர்கள் இதை பெறுகிறார்கள்.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பாலங்கள், திருவாரூர் நகர் கீழ்ப்பாலம் அது முடிந்திருக்கிறது. விழுப்புரத்தில் கீழ்ப்பெரும்பாக்கம் கீழ்ப்பாலம், அந்தப் பணி முடிந்திருக்கிறது. அரக்கோணம் மேம்பாலம் முடிக்கப்பட்டிருக்கிறது. சென்னை நகர், கிண்டி மேம்பாலம் அது முடிக்கப்பட்டிருக்கிறது. சென்னை இராயபுரம் மேம்பாலம், அதுவும் முடிக்கப்பட்டிருக்கிறது.



## வேளாண்மைத்துறை...

உணவு உற்பத்தியைப் பொறுத்தவரை நமது அடிப்படைத் தேவைகளில் உணவே முக்கியப் பங்கு வகிக்கின்றது. தமிழகத்தில் 65 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் 28.11 இலட்சம் ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது. இதில் 13.69 இலட்சம் ஹெக்டேர் கிணற்றுப் பாசனம் மூலமும், 6.23 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பு ஏரிப் பாசனம் மூலமும் பாசன வசதி பெற்றுள்ளது.

1966–67ஆம் ஆண்டு 50.29 இலட்சம் ஹெக்டேர் நிலத்தில் சாகுபடி செய்யப்பட்ட மொத்த உணவு உற்பத்தி 54.48 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டது. இதுவே, 1998–99ஆவது ஆண்டில் 36.76 இலட்சம் ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டு, 94.12 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்யப் பட்டது.




இதுவே அகில இந்திய அளவில் உணவு உற்பத்தியில் உன்னத சாதனை படைக்கப் பட்டுள்ளது. அதாவது 1998–99ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டேர் நிலத்தில் சராசரியாக 3,579 கிலோ அரிசி உற்பத்தி செய்யப் பட்டுள்ளது.

1998–99ஆம் ஆண்டில் பஞ்சாப் 3,152 கிலோ உற்பத்தித் திறனும், ஆந்திரப் பிரதேசம் 2,781 கிலோ உற்பத்தி திறனும், கர்நாடகம் 2,529 கிலோ உற்பத்தித் திறனும், மேற்கு வங்காளம் 2,255 கிலோ உற்பத்தித் திறனும், அரியானா 2,239 கிலோ உற்பத்தித் திறனும் ஓர் ஹெக்டேருக்கு இருந்தது.

ஆக உற்பத்தித் திறனில் இந்தியாவிலேயே முதலிடமாக அரிசி உற்பத்தியிலே இன்றைக்கு தமிழகம் நிமிர்ந்து நிற்கிறது.

அந்த அடிப்படையிலே தரிசு நில மேம்பாட்டு திட்டத்திலே, அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வா.செ.குழந்தைசாமி அவர்களுடைய தலைமையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு குழுவைப் போட்டு அந்தக் குழு தமிழ்நாடெங்கும் ஆய்வு செய்து 37.84 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்கள் என கண்டறியப்பட்டு அதை விளைநிலங்களாக கொண்டு வருவதற்காக எடுக்கப்பட வேண்டிய ஆலோசனை வழங்கப்பட்டு அரசு அளவிலே பரிசீலிக்கப்பட்டு இன்றைக்கு முதல்கட்டமாக 10 மாவட்டத்திலே 10,000 எக்டேர் நிலங்கள் விளைநிலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன.

தொடர்ந்து 2000–2001ஆம் ஆண்டில் 12 கோடி ரூபாய் செலவில் 24 மாவட்டங்களில் 30,000 எக்டேர் பரப்பளவிலே விளைநிலங்களாகக் கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கையை நாம் எடுத்து வருகிறோம்.

## போக்குவரத்துத் துறை...

போக்குவரத்துத் துறையைப் பொறுத்த வரையில், இதிலே இரண்டு பிரிவுகள், ஒன்று போக்குவரத்துக் கழகங்களை இயக்குகிற துறை. மற்றொன்று, போக்குவரத்து ஒழுங்கு முறைகளை நடைமுறைப் படுத்துகின்ற துறை. இந்தப் போக்குவரத்துக் கழகங்கள், 21 போக்குவரத்துக் கழகங்கள், 17,000 பேருந்துகள், இவற்றைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட வெள்ளை யானையாகவே வளர்ந்து கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை.

அதே நேரத்தில் போக்கு வரத்துத்துறை வரி வசூலிப்பது, உரிமம் வழங்குவது போன்ற பணிகளை மேற்கொண்டி ருக்கிற இந்தத் துறை, தங்க முட்டையிடும் ஒரு வாத்தாகவே இருக்கிறது. ஒரு பக்கம் வெள்ளை யானையாக வளர்ந்து கொண்டிருக்கிற போக்குவரத்துக் கழகங்கள், ஒரு பக்கம் தங்க முட்டையிடுகிற வாத்து; இந்த இரண்டும், இந்தப் போக்குவரத்துத் துறையினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கின்றன.

இதிலே 1995–96–லே 391 கோடி ரூபாயாக இருந்த வருவாய், இன்று 2000–2001–லே 630.72 கோடி ரூபாயாக வளர்வதற்கான வாய்ப்புக்களை முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் மூலமாகவும், வரியை அதிகம் உயர்த்தாமல், வரி ஏய்ப்புக்கு இடம் கொடுக்காமல் இந்த நிதியைப் பெருக்கியிருக்கிறார்கள்.

இந்தப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த வரையில், இலாபம் மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயல்படுகிற கழகங்கள் இல்லை என்பதை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

### கிராமப்புறங்களுக்கும் பேருந்து வசதிகள்

அதே நேரத்திலே, நட்டத்திலே இயங்க வேண்டுமென்ற எண்ணமும் இல்லை. ஆனால், பொது மக்களுடைய தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற

அடிப்படை உணர்வோடு தான், முதல்வர் அவர்கள் இதை தேசியமயமாக்கினார்கள். கிராமங்களுக்குப் பேருந்துகளை அனுப்ப வேண்டுமென்ற எண்ணத்தோடு தான் ஆயிரம் பேர் வசிக்கிற கிராமங்களுக்கெல்லாம் பேருந்துகளை வழங்க வேண்டுமென்று முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, 500 ரூபாய்க்குக் குறைவாக நட்டம் இருக்கிற பேருந்துகளினுடைய எண்ணிக்கை மட்டும் 2,797. உச்சகட்டமாக 2,500 ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டிருக்கிற பேருந்துகளினுடைய எண்ணிக்கை 231. ஏறத்தாழ 11,000 பேருந்துகள். இதிலே 7,000 பேருந்துகள்தான் இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

### இந்திய அளவில் பெற்ற விருதுகள்

அதுபோல இந்தப் போக்குவரத்துக் கழகம், இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த 4 ஆண்டுகளில், இந்திய அளவில் தேசிய உற்பத்தித் திறன் குழு 1 ஆண்டில் வழங்கும் 10 விருதுகளில் 1997–98ல் 7 விருதுகளை நம்முடைய போக்குவரத்துக் கழகம் பெற்றிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல, 1998–99ல் 5 விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மாநில சாலை போக்குவரத்து நிறுவனங்களின் கூட்டமைப்பு விருதுகள் இந்த ஆண்டு 1999–2000ல் மட்டும் 9 விருதுகளை நம்முடைய போக்குவரத்துக் கழகங்கள் பெற்றிருக்கின்றன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.




இந்தத் துறையைப் பொறுத்த வரையில் மற்றொரு முக்கியமான செய்தி, விபத்துக் குறித்த செய்திகளாகும். விபத்துக்களைப் பொறுத்த வரையில் நான் முன்பே சொன்னதைப் போல, அன்றாடம் விபத்துக்கள் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. ஆனால் இது அரசுப் போக்குவரத்துக் கழகத்திலே நடப்பதைப் போல உறுப்பினர் சுந்தரம் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

1.1.2000–த்திலிருந்து 31.3.2000 வரை இந்த மூன்று மாதத்திலே நடைபெற்ற விபத்துக்களுடைய புள்ளி விபரம் இதிலே அரசுப் பேருந்துகளின் மூலம் ஏற்பட்ட விபத்துக்களின் மொத்த எண்ணிக்கை 1495. தனியார் பேருந்துகளின் மூலமாக ஏற்பட்டது 915. இறந்தவர்களின் எண்ணிக்கை அரசுப் பேருந்துகளின் மூலமாக ஏற்பட்ட விபத்துக்களின் மூலமாக 340 பேர், தனியார் பேருந்துகளின் மூலமாக 186 பேர்.

அரசுப் பேருந்துகள் 17,000 இயங்குகின்றன. தனியார் பேருந்துகள் 5000 தான் இயங்குகின்றன. ஆகவே, அந்த விகிதாச்சார அடிப்படையிலே, விபத்துக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விபத்துக்கள் எங்கே நடை பெற்றாலும் அதை தடுக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்ட முதலமைச்சர் அவர்கள், இதை எப்படியாவது தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு தான், உயரதிகாரிகளையெல்லாம் அழைத்து வைத்துப் பேசி, ஒரு ஓட்டுநர் ஒரு முறை தவறு செய்தால், இரண்டாவது முறையும் அது போன்று உயிரிழப்பு ஏற்படுகிற தவறைச் செய்தால், அவருடைய உரிமத்திலே அதைப் பதிவு செய்து கொண்டு, அந்த உரிமத்தை ரத்து செய்ய வேண்டுமென்று முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்.

### உயர்மட்டக்குழு முடிவுகள்

மேலை நாடுகளில் எல்லாம் அப்படித்தான் இருக்கிறது. ஒரு முறை விபத்து ஏற்பட்டால், இரண்டாவது முறையும் விபத்து ஏற்பட்டால், அந்த உரிமத்தை ரத்து செய்யலாம் என்று இருக்கிறது. ஆனால், நம்மிலே தான் பலர் இதிலேயும் அரசியலைப் புகுத்தி, இதற்கு எதிர்மாறாக செய்ததன் விளைவாக அந்த உத்தரவுகூட ரத்து செய்யப்பட்டது. இருந்தாலும், மேலும் அந்த விபத்துக்களைத் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, முதல்வர் அவர்கள் ஆணையின் அடிப்படையிலே 2 நாட்களுக்கு முன்பாக பல்வேறு தொழிற்சங்கப் பிரதிநிதிகள், இந்த விபத்துக்களோடு தொடர்புடைய நெடுஞ்சாலைத்துறைச் செயலாளர், மருத்துவத் துறைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், காவல் துறை இயக்குநர் ஆகியோர் அடங்கிய ஒரு உயர்மட்டக் குழு, இதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு சில முடிவுகளை எடுத்திருக்கிறது. இந்தத் துறையின் மூலமாக அறிவிப்புக்களாக அந்த முடிவுகளை நான் இங்கே அறிவிக்க விரும்புகின்றேன்.

பெரும்பாலான விபத்துக்களுக்கு காரணமாக இருப்பது ஓவர் ஸ்பீடிங், வேகமாக செல்வதுதான், மோட்டார் ஆக்ட் இந்தச் சட்டத்தின்படி கூட ஊர்திகள் சட்டத்தின்படி கூட, 65 கிலோ மீட்டருக்கு மேல் செல்லக்கூடாது என்று விதியிருந்தாலும்கூட, அதை மீறித்தான் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, 65 கிலோ மீட்டருக்கு மேல், பேருந்துகள் முன்பு போக்குவரத்துத்துறை பேருந்துகளுக்கு மட்டும் இந்த



விதி இருந்தது. அதிலே ஒரு மீட்டர் பொருத்தப்பட்டிருந்தது. 45 கிலோ மீட்டருக்கு மேல் சென்றால், பிங், பிங் என்ற ஒரு சத்தம் வரும். அதற்குப் பிறகு, அது தானாகவே, அந்த வேகம் குறைந்துவிடுகின்ற அளவிற்கு, அந்தக் கருவி பொருத்தப்பட்டிருந்தது. ஆனால், அது போக்குவரத்துக் கழகங்களுடைய வாகனங்களுக்கு மட்டுமேயிருந்தது. தனியார் போக்குவரத்து வாகனங்களுக்கு இல்லை.

போக்குவரத்துக் கழகங்களுடைய பேருந்துகளுக்கு நட்டம் ஏற்படுகிறது என்ற காரணம் காட்டி அதை நிறுத்தி விட்டார்கள்.

ஆகவே,மீண்டும், இந்த அரசு அது தனியார் பேருந்துகளாக இருந்தாலும், போக்குவரத்துக் கழகங்களுடைய பேருந்துகளாக இருந்தாலும், லாரிகளாக இருந்தாலும், ஒவ்வொரு பேருந்திலேயும் 65 கிலோ மீட்டருக்கு மேல் செல்லாமல் தடை செய்கிற அந்த இயந்திரத்தைப் பொருத்த வேண்டும். மூன்று மாதம் அதற்கு நேரம் கொடுத்து, அதற்குப் பிறகு ஒரு மாதம், ஆக நான்கு மாதங்களிலே இதைச் செய்யவேண்டுமென்ற உத்தரவை பிறப்பிக்க இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல, உரிமம் வழங்குவதிலே, உரிமம் வழங்குகிறபோது, இதுவரை பெற்றிருக்கிற உரிமம், லைசன்ஸ் ஹோல்டருக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல், இனிமேல் உரிமம் பெறுபவர்கள், ஒரு மாதம் ஒரு புரொபேஷன். அந்த உரிமத்தைப் பெற்ற பிறகு, ஒரு வருடம் அவர்களுக்கு அது பயிற்சி காலமாகக் கருதப்பட்டு, அந்த ஒரு ஆண்டு காலத்திற்குள்ளாக, எந்த விபத்தும் இல்லாமல் ஓட்டினால் தான் அவர்களுக்கு, அந்த உரிமம் நிரந்தரப்படுத்திக் கொடுக்கப்படும் என்ற விதியை உருவாக்கி, இனிமேல் உரிமம் வழங்க விழைகிற பொழுது, ஒரு வருடத்திற்கு, அது ஒரு பயிற்சி காலமாகக் கருதப்பட்டுத் தான் உரிமம் வழங்கப்படும் என்ற முடிவையும் அதிலே எடுத்திருக்கிறோம். அவைகளின் மூலமாக, ஓரளவிற்கு இந்த விபத்துக்களைத் தவிர்க்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

அதுமட்டுமல்லாமல் இது நான்கு துறைகளும் சேர்ந்து செயல்பட வேண்டிய காரியமாக இருக்கிறது. போக்குவரத்துத்துறை, நெடுஞ்சாலைத்துறை, காவல்துறை மற்றும் உள்துறை போன்றவைகள் எல்லாம் சேர்ந்து செயல்பட வேண்டி இருக்கிற காரணத்தால், முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனைப்படி, சாலை பாதுகாப்பு ஆணையர், ரோட் சேஃப்டி கமிஷனர் என்ற அடிப்படையில், ஒரு ஆணையத்தை உருவாக்கி, அதற்கு ஒரு ஆணையரை நியமித்து, அவரே இதனுடைய செயலாளராகவும் செயல்பட்டு, மாநில அளவிலே இதுபோன்ற கூட்டு முயற்சிகளின் மூலமாக விபத்துக்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த அரசு முடிவு செய்திருக்கிறது.

### சீரான சாலையும் விபத்துக்குக் காரணம்

அதற்கு உதவியாக, சாலை பாதுகாப்பு நிதி என்ற ஒரு நிதியையும் இந்த அரசு உருவாக்க முடிவு செய்து இருக்கிறது. அந்த நிதிக்கு, மோட்டார் வாகன வரியிலிருந்து ஒரு பகுதியினை, சாலை பாதுகாப்பு நிதிக்காக ஒதுக்கி, சாலை பாதுகாப்பு பராமரிப்புச் செலவிற்கு தொடர்ந்து பயன்படுத்த வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது.

மேலும், நான் நெடுஞ்சாலைத்துறை அமைச்சருடன் பேசி, இங்கே இருந்து செங்கல்பட்டிற்குச் செல்கிற வரை விபத்துக்கள் குறைவாக இருக்கின்றன. காரணம், நடுவிலே கட்டப்பட்டு இருக்கிற அந்த மீடியன், பிரித்திருக்கிற அந்தச் சூழ்நிலைதான். செங்கல் பட்டிலிருந்து, கிட்டத்தட்ட உளுந்தூர்பேட்டை செல்கிற வரையில் அதிக விபத்துக்கள் நடைபெறுகின்றன. நடுவிலே, அந்த மீடியன் இல்லை. ஆனால், சாலைகள் அகலமாக இருக்கின்றன. விபத்துக்களுக்கு இன்னொரு காரணம், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு சாலைகள் மிக நன்றாக இருப்பதே, அதற்கு ஒரு காரணமாகவும் அமைந்து விடுகின்றன.

மிகவும் வளைந்து, வளைந்து ரோடு போனது என்றால், பொதுவாக, மெதுவாக ஓட்டிக் கொண்டு போகிறார்கள். ஆனால், மிகவும் நன்றாக இருக்கின்ற சாலைகளிலே, அதிவேகமாக ஓட்டுநர்கள் ஓட்டுகின்ற ஒரு சூழ்நிலை உருவாகிக் கொண்டு இருக்கிறது.

ஆகவே செங்கல்பட்டிலேயிருந்து, விழுப்புரம் வரை நடுவிலே, மிகக் குறுகிய அளவிலே ஒரு மீடியனை அமைக்க நெடுஞ்சாலைத் துறையைக் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். இந்தத் துறையினுடைய இணைப்போடு, இந்தச் சாலை பாதுகாப்பு ஆணையரின் உதவியோடு அதுவும் விரைவிலே நடைமுறைப்படுத்தப்படும். இந்த விபத்துக்களைக் குறைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல, போக்குவரத்து அலுவலகங்களைப் பொறுத்த வரையில் இவைகள் கணினிமயமாக்கப்பட்டு எல்லா நிலைகளிலேயும், இன்று உரிமம்கூட, ஒவ்வொருவருக்கும் சென்ற 5 நிமிடத்திலேயே ஃபோட்டோ எடுத்து அது வழங்குகிற ஒரு முறையும் கொண்டு வந்திருக்கிறோம். அதிலே பல்வேறு ஊழல்கள், இன்னும் சில இடங்களிலே இருந்தாலும்கூட, அவைகளை எல்லாம் தடுத்து நிறுத்தி, அவை சிறப்பாக செயல்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான், வட்டார போக்குவரத்து அலுவலகங்களுடைய எண்ணிக்கை 7 ஆக உயர்ந்திருக்கிறது. அதற்கு முன்பு 37–ஆக இருந்த வட்டார போக்கிகுவரத்து அலுவலகங்களினுடைய

எண்ணிக்கை 44 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதாவது 7 பகுதி அலுவலகங்கள் மேனிலைப்படுத்தப்பட்டு, அவைகள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக உயர்த்தப்பட்டிருக்கின்றன. மேலும் புதியதாக, 12 பகுதி அலுவலகங்கள் இந்த நான்கு ஆண்டுகளிலே கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இவைகள் எல்லாம், இந்தத் துறையின் வளர்ச்சிக்காக, இந்த அரசு செய்திருக்கிற நடவடிக்கைகள்.

**சென்னையில் வட்ட வழித்தடம்**

மேலும், மாநகரத்தைப் பொறுத்தவரையில் பரீட்சார்த்த முறையாக வட்ட வழித்தடங்கள் டெல்லிக்குச் சென்றால் ஒரு வட்ட தடம். ஒரு ரூபாய்கொடுத்து விட்டு, எங்கு வேண்டுமோனாலும் போய் இறங்கி வரலாம் என்கிற மாதிரி, இப்போது 10 ரூபாயாக இருக்கிறது. கட்டணம் அதிகமாக இருக்கிறது. அது போன்ற பரீட்சார்த்தமாக மாநகரத்திலே வட்ட வழித் தடங்களாக 5 வட்ட வழித்தடங்களை உருவாக்கலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது. அதிலே கலைஞர்நகர், தியாகராயநகர், சுங்கச் சாவடி, சைதாப்பேட்டை, அம்பத்தூர் தொழிற்பேட்டை இந்த இடங்களைச் சுற்றிச் சுற்றி வரும் ஒரு பேருந்தாக இருக்கும். ஒரே கட்டணமாக இருக்கும். அதே போல இரயில் பயணிகள் வசதிக்காக சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலே இருந்து பேருந்துகள் இயக்கப்படவிருக்கின்றன. அதிலே புதிய 5 பேருந்துகள் கலைஞர் நகர், சைதாப்பேட்டை மேற்கு, அடையாறு, மயிலை, பெசண்ட்நகர், அயன்புரம் ஆகிய இடங்களுக்கு மத்திய இரயில் நிலையத்திலிருந்து, சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து புதிய பேருந்துகள் இயக்கப்படும். அவற்றினுடைய கட்டணம் வேறுபாடாக இருக்கும்.

மாநகரத்தில் குளிர்சாதன பேருந்து பாரிமுனையிலிருந்து கூடுவாஞ்சேரி வரையிலும், ஆவடியிலிருந்து தாம்பரம் வரையிலும் குளிர்சாதன பேருந்துகளை இயக்கலாம் என்று அரசு முடிவு செய்து விரைவிலே அதையும் இயக்குவதற்கு தயாராக இருக்கிறது. அதிலே புதிய கட்டணம் ரூபாய் 20, 25, 30 ஆக இருக்கும்.

விரைவுப் பேருந்துகளாக மிதவை பேருந்துகள் 10 வழித் தடங்களில் ''ஏர்பஸ்'' என்று சொல்கிற அடிப்படையிலே புதிய பேருந்துகளாக 10 வழித் தடங்களில் மிதவை பேருந்துகளை இயக்குவதற்கும் அரசு முடிவு செய்திருக்கிறது. குளிர் சாதன பேருந்துகளையும் இதுபோன்ற இடங்களிலே உருவாக்குவதற்கும் அரசு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. ஆகவே, பயணிகளுடைய கவனத்தை முன்னிட்டு, வளர்ச்சியை முன்னிட்டு புதிய பேருந்துகளையும், குளிர்சாதன பேருந்துகளையும் உருவாக்குவதற்கும் இந்த அரசு நடிவக்கை எடுத்து வருகிறது.

**முதல்வர் அறிவித்த ஊதிய உயர்வு**

அனைத்திற்கும் மேலாக இந்தப் போக்குவரத்துத் துறை இந்த அளவிற்குச் சிறப்பாகச் செயல்படுகிறது என்று சொன்னால், அதற்குக் காரணம், அதனுடைய முதுகெலும்பாக இருக்கின்ற தொழிலாளர்கள் என்பதை உணர்ந்து முதல்வர் அவர்கள் அந்தத் தொழிலாளர்களுக்கு, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு செய்திருக்கிற நன்மைகள் ஒன்று, இரண்டல்ல.

அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்த போது, அதைவிட அதிகமாக பலன் பெறக்கூடிய இந்த வாய்ப்புகளை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு தான் தொழிற்சங்கங்களும் ஒத்துழைத்து அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டது. 1998லே ஏற்பட்ட ஊதிய உயர்வின்படி அவர்களுக்கு குறைந்த பட்சம் 2,000 ரூபாய் அவர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கிற அளவிற்கு அந்த ஒப்பந்தம் அமைந்திருந்தது.

**அரசு அலுவலர் போல் ஓய்வூதியம்**

அவர்களுடைய மிக முக்கியமான கோரிக்கையான பென்ஷன் திட்டம் அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அரசு ஊழியர்களைப் போலவே தொழிலாளர்களுக்கும் ஊதியம் வழங்க வேண்டும். ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்ற அவர்களது கோரிக்கை ஏற்கப்பட்டு முதல்வர் அவர்கள் அதற்கான ஆணையைப் பிறப்பித்து, அவை இன்று இந்த தொழிற்சங்கங்களுக்கும் அதனுடைய நகல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய கருத்துக்களைப் பெற்ற பிறகு வெகு விரைவில் போக்குவரத்துத் தொழிலாளர்களும் அரசு ஊழியர்களைப் போல ஓய்வூதியத்தைப் பெறுவதற்கான நாள் வெகு விரைவில், இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

## சமூகநலத்துறை...

**கி**ராமப்புற ஏழை மகளிர் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் 1989ஆம் ஆண்டு முதல் மகளிர் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தற்போது சென்னை நீங்கலாக 28 மாவட்டங்களில் அரசு உதவியுடன் மகளிர் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் குறிப்பாக கிராமப்புற ஏழை மகளிருக்காக செயல்படுத்தப்படுவதினால் பேரூராட்சி மற்றும் நகராட்சி வரையறைக்குள் உள்ள ஏழை மகளிருக்கு இத்திட்டத்தின் பயன்கள் சென்றடைவதில்லை.

எனவே அன்னை பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டத்தினை நகர பஞ்சாயத்து மற்றும் நகராட்சிப் பகுதிகளுக்கும் நீட்டிக்க முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

குடும்பங்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் காரணமாக பிரிய நேரிடும் தம்பதிகளுக்கு ஆலோசனை வழங்க நாமக்கல் மாவட்டத்தில் ஜோசப் செல்லமுத்து கல்வி அறக்கட்டளை என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் தமிழ்நாடு சமூகநல வாரியம் வழியாக நடத்தப்பட்டு வருகிறது.

தற்போது இவ்வாண்டு முதல் விழுப்புரம் அல்லது கடலூர், நாகப்பட்டினம், தேனி, நெல்லை, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி புதிதாக தோற்றுவிக்கப்படும். மேலும் தற்போது வழங்கப்படும் மைய செலவினம் ரூ.79,000 லிருந்து ரூ.85,000 ஆக உயர்த்தப்படும்.

ஈரோடு அரசினர் கூர் நோக்கு இல்லத்திற்கு மத்திய மற்றும் மாநில அரச சமபங்கேற்கும் செலவினத் திட்டத்தின் கீழ் இல்லத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் புதிய கட்டிடம் கட்ட முதல்வர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்.

**ஊனமுற்றோர்க்கு கூடுதல் உதவி**

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்ற பெண்கள், ஊனமுற்ற ஆண்/பெண் இருபாலருக்கும் அவர்களின் வேலைவாய்ப்பிற்கும், சுயதொழில் செய்து வாழ்க்கை வாழ்வதற்கும் இலவசமாக தற்சமயம் வழங்கப்பட்டு வரும் 4,000 தையல் இயந்திரங்கள் இந்த ஆண்டு முதல் 5,500 ஆக உயர்த்தி வழங்க முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இதில் ஊனமுற்றோருக்கென தனியாக 500 தையல் இயந்திரங்கள் குறிப்பிட்டு ஒதுக்கப்படும்.




உடல் ஊனமுற்ற சிறப்புக் கல்வியினை மேம்படுத்தும் வகையில் பார்வையற்றோர், செவித்திறன் குறைந்தோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியோருக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்படும் பயிற்சிக்கான மாத உதவித்தொகை ரூ.300லிருந்து ரூ.400 ஆக உயர்த்தி வழங்க முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

காது கேளாத நபர்களை திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபர்களுக்கும், கை கால் ஊனமுற்றோரை திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபர்களுக்கும் திருமண உதவித்தொகை ரூ.5,000 வழங்கப்பட்டு வந்தது. இதில் ரூ.2,000 ரொக்கத் தொகையாகவும், ரூ.3,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்பட்டு வந்தது. இவ்வாண்டு முதல் இந்த உதவித்தொகையை ரூ.7,000 ஆக உயர்த்தி வழங்க முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இதில் ரொக்கத் தொகையாக ரூ.2,000மும், தேசிய சேமிப்புப் பத்திரமாக ரூ.5,000 மும் வழங்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் கடுமையான ஊனமுற்றோர் 6,400 பேருக்கு பராமரிப்பு உதவித்தொகையாக ரூ.150 வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு முதல் நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் அனைத்திற்கும் சுமார் 1,000 கடும் ஊனமுற்ற நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்க முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மனவளர்ச்சி குன்றிய பெண்கள் 14 வயதிற்குள் சிறப்புப் பள்ளிகளில் அனுமதிக்கப்படுகின்றனர். 14 வயதிற்கு மேல் பொறுப்பு பெற்றோருக்கு வந்து விடுகிறது. எனவே 14 வயதிற்கு மேல் அவர்களுக்கு தொழிற்பயிற்சி அளித்து சமுதாயத்தில் அவர்களைப் பாதுகாத்திட ஏதுவாக அரசு 1997–98–ஆம் ஆண்டில் 14 வயதிற்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றிய மகளிரை பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பு இல்லம் நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு மாநில அரசால் ஒரு தொண்டு நிறுவனத்திற்கு 30 பெண்கள் பயனடையும் வகையில் 6 நிறுவனங்களுக்கு 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது. அது 1998–99, 1999–2000 ஆண்டிற்கும் விஸ்தரிக்கப்பட்டது.

மன வளர்ச்சி குன்றிய பெண்களை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்காக காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கோவை ஆகிய மாவட்டங்களில் உள்ள தொண்டு நிறுவனங்கள் முன்வருமேயானால் அவர்களுக்கு நிதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

**சுயவேலை வாய்ப்பு**

ஊனமுற்றோருக்கு உதவும் பொருட்டு அவர்கள் சுயவேலைவாய்ப்பில் ஈடுபடுவதற்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் பெற்றுக்கொள்ள பரிந்துரைக்கப்படும் போது அரசு மானியமாக ரூ.1,000 அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ அது வழங்கப்பட்டு வந்தது.

வரும் நிதியாண்டிலிருந்து இந்த மானியத் தொகை ரூ.1,000லிருந்து ரூ.2,000 ஆக உயர்த்தி வழங்க முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அதேபோல இத்திட்டத்தில் பயன் பெற இருக்கும் பயனாளிகளின் எண்ணிக்கை 800 லிருந்து 1,000 ஆக உயர்த்தப்படுகிறது.

**இளைஞர் இல்லம்**

சென்னை அரசினர் சிறுமியர் இளைஞர் மற்றும் சிறப்பு இல்லத்தில் நிலவும் அதிக எண்ணிக்கையை குறைப்பதற்காக திருவண்ணாமலை மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலமாக சிறுமியருக்கான ஒரு இளைஞர் இல்லம் தொடங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. 100 சிறுமியர் இவ்வில்லத்தின் மூலம் பயனடைவர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் ஒரு இளைஞர் நலக்குழுமத்தையும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலம் ஒரு கூர்நோக்கு இல்லத்தையும் தொடங்க அரசு முடிவெடுத்துள்ளது. சென்னை இளைஞர் நலக் குழுமத்தின் வழக்கு எண்ணிக்கையை குறைக்கவும், சென்னை அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் நிலவும் இல்லவாசிகளின் அதிக எண்ணிக்கையை தவிர்க்கவும் நடைமுறைப் படுத்தப்பட உள்ள இத்திட்டத்தின் மூலம் அரசிற்கு ரூ.3.92 இலட்சம் செலவாகும். இத்திட்டத்தின் மூலம் 50 சிறார்கள் பயனடைவர்.

முதியோர்களுக்கான தேசியக் கொள்கையை முன்னிட்டு இம்மாநிலத்தில் சமூகநல ஆணையரை முதியோர் நலனின் மாநில ஒருங்கிணைப்பாளராக நியமனம் செய்து முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## கால்நடை பராமரிப்புத்துறை...

இந்த 4 ஆண்டு காலத்திலே சாதனைகளை எடுத்துக் கொள்வோமானால், செல்லப் பிராணிகளான நாய், பூனை போன்ற வளர்ப்பு பிராணிகள் கடந்த ஆட்சி காலத்திலே கட்டணம், அனுமதிக் கட்டணம், மருத்துவத்தினுடைய அனுமதிக் கட்டணமாக ரூ. 5 வசூலிக்கப்பட்டு வந்தது. 1996–லே தலைவர் கலைஞருடைய ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு அந்த 5 ரூபாய் கட்டணத்தை முதன் முதலாக ரத்து செய்தார்கள்.

கால்நடை ஒன்றுக்கு குடற்புழு நீக்கத்திற்கு ரூ.1 வீதம் வசூலிக்கப்பட்டு வந்தது. கடந்த ஆட்சிக் காலத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் 1996–ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின்பு அந்த ஒரு ரூபாயை ரத்து செய்ததன் அடிப்படையில், 3,62,37,000 கால்நடைகள் இந்தத் திட்டத்தினால் பயன் பெற்றுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனைகளுக்குத் தொலை தூரத்தில் உள்ள கிராமங்களில் வளர்க்கப்படும் பசுவினங்களுக்கு கலப்பின கருவூட்டல் செய்திட ரூ.15 இலட்சம் செலவில் 300 பொலி காளைகள் முற்போக்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற ஆட்சியும் இந்த ஆட்சிதான்.

**பட்டுக்கோட்டை அழகிரி பெயரில் அறக்கட்டளை**

மாணவர்கள் கல்வி உதவித் தொகை, ஒவ்வொரு ஆண்டும் சுமார் 950 மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 20 இலட்சம் அளவில் மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அதைப் போல கால்நடை பல்கலைக் கழகத்திற்கு பட்டுக்கோட்டை அழகிரியின் பெயரால் ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்து அறக்கட்டளை ஒன்று துவக்கப்பட்டு அதன் வழியே கிடைக்கப் பெறும் வட்டித தொகை மூலம் சிறந்த மாணவர்களுக்குக் கல்வி பயில முழு உதவித் தொகை வழங்க ஆணையிடப்பட்டு இன்றைய தினம் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 16 மாணவர்களும், நாமக்கல்லில் 12 மாணவர்களும், தூத்துக்குடியில் 5 மாணவர்களும், ஆக மொத்தம் 33 மாணவர்கள் உதவித் தொகைப் பெற வழி வகுத்து உள்ளார்கள்.

ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் உள்ள பயன்தராத கால்நடைகளுக்குப் பதிலாக புதிய கால்நடைகள் வாங்குதல், ரூ.5.96 இலட்சம் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தரப்பட்டிருக்கிறது.

ஊசி மருந்துகள் தயாரிக்கும் வகையில் இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து தயாரிப்பு நிறுவனத்தில் தற்போதுள்ள மருந்தாக்கு ஆய்வுக்கூடப் பிரிவில் மேம்பாடு செய்வதற்கானத் திட்டங்கள் ரூ.10 இலட்சம்.

துறைக் கையேட்டினைத் திருத்தியமைத்தல் ரூ.3.75 இலட்சம்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, நுண்ணுயிரியல் துறையில் ஆட்டுக் கொள்ளை நோய்க்கான வீரியம் குறைக்கப்பட்ட உயிர் நச்சுயிரிகளைக் கொண்ட தடுப்பூசியினைத் தயாரித்தல், களநிலைகளில் அதன் மதிப்பீடு மற்றும் தரம் நிர்ணயம் அளித்தல் ரூ.11.95 இலட்சம் ஆக, மொத்தம் 53.44 இலட்சம் ரூபாயை கருணையோடு அளித்திருக்கிறார்கள்.

அதைப்போல தென் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சிக்காக நீதியரசர் இரத்தினவேல்பாண்டியன் அவர்கள் அறிக்கையின்படி முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்யைில் அறிவிக்கப்பட்ட புதிய திட்டம் இந்த ஆண்டு அபிசேகப்பட்டி பண்ணையிலே நிறைவேற்றப்பட இருக்கிறது

கம்பளி இன சோக்லா ஆடுகள் மூன்றில் ஒரு பங்கு மானிய விலையில் 660 பயனாளிகளுக்கு ஆண்டு தோறும் வழங்கிடவும் அதேபோன்று வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள 300 விவசாயிகளுக்கு அபிசேகப்பட்டி கால்நடைப் பண்ணையில் ஒவ்வோர் ஆண்டும் 15 நாட்கள் கால்நடை வளர்ப்பு குறித்த பயிற்சி அளித்தும், பயிற்சி முடிந்தவுடன் ஒரு பயனாளிக்கு ஒரு கிடாவும், 4 பெட்டை ஆடுகளும் மூன்றில் ஒரு பங்கு மானிய விரைவில் ஆண்டு தோறும் வழங்கிடவும்,

மேலும், தென்மாவட்டங்களிலுள்ள வறுமைக் கோட்டிற்குக்'கீழ்வாழும்விவசாயிகள் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையில் புறக்கடை கோழி வளர்ப்பு மூலம் வருவாய் கிடைக்க வழி செய்திட ஒரு பயனாளிக்கும் 10 கிரிராஜா கோழிக் குஞ்சுகள் வீதம் ஆண்டொன்றுக்கு 2,400 பயனாளிகளுக்கு வழங்கிடவும்,

தென்மாவட்டங்களில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு நீலநாக்கு நோய் தோன்றி பெரும் பாதிப்பு ஏற்படுத்த முக்கிய காரணமாயிருந்த 'கூலிக்காயிட்ஸ்' என்ற ஒரு வகை கொசுக்களை ஒழித்து ஆடுகளை நீலநாக்கு நோய் பாதிக்காத வண்ணம் கொசு ஒழிப்பு மருந்துகளை ஆடுகள் நிறைந்த பகுதிகளில் தெளிக்கவும்,

நீலநாக்கு நோய் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளவும், மேலும் திருநெல்வேலி அபிசேகப்பட்டிப் பண்ணையில் நீர்ப்பிரி முகடு வசதிகளைச் செய்வதற்காகவும் மொத்தம் 82 இலட்சம் ரூபாயும் அதைப் போல இன்றைய தினம் தென்மாவட்ட மக்களுடைய பொருளாதார வளர்ச்சிக்காக நீதி அரசருடைய அறிக்கையை எடுத்து இந்த கால்நடை பராமரிப்புத் துறையின் கருணையோடு அந்தப் பகுதி மக்களுக்காக அளித்த தொகைக்கு அந்தப் பகுதி மக்கள் எல்லாம் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## மீன்வளத்துறை...

மீன்வளத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் 25.3.2000 முதல் சுருக்குமடி, இரட்டைமடி வலைகளைப் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த சுருக்குமடி இரட்டை மடி வலைகளால் மீன்வளம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, இந்த மீன் வளத்தைப் பெருக்குவதன் நோக்கமாக இந்த வலைகளை எடுத்துச் செல்பவர்களுக்கு – விசைப்படகு மீனவர்களும், கட்டுமரம், வல்லம் போன்ற மீனவர்களும் – இதுபோன்ற வலைகளைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கு அரசு ஒரு ஆணை பிறப்பித்துள்ளது.

**அதிவேக ரோந்து படகுகள்**

அதுமட்டுமல்லாமல் மத்திய அரசு நமது தமிழக அரசுக்கு கொள்கை அளவில் அறிவுறுத்தி வந்த 45 நாட்கள் விசைப் படகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்வதற்குத் தடை விதித்தால் மீன்வளம் அதிகமாக இருக்கும் என்று மத்திய அரசு வலியுறுத்தி வருகிறது. அதையும் இந்த அரசு நடைமுறைப்படுத்த பரிசீலித்து வருகிறது. ஏப்ரல், மே மாதங்களில் 45 நாட்கள் விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லாமல் இருந்தால் மீன் வளம் அதிகரிக்கும்




என்பதைக் கருத்தில் கொண்டு செயல்பட உள்ளது.

தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தும் சட்டம் விதிப்படி விதிகளைச் செவ்வனே நடத்துவதற்கு மத்திய அரசின் நிதி உதவியுடன் ரூ.449.95 இலட்சம் செலவில் 5 அதிவேக ரோந்து படகுகள் இயக்கப்பட்டு வருகிறது. இந்த ரோந்து படகிற்கு முதல்வர் அவர்கள் அழகான பெயர்களைச் சூட்டித் தந்து 16–1–1999 முதல் இது இயக்கப்படுகிறது. அந்தப் படகுகளுக்கு நீலம், கயல், பவளம், முத்து, வலம்புரி என்று பெயரிடப்பட்டு ஒவ்வொரு பகுதியிலும் மீனவர்களைப் பாதுகாக்க மீனவர்கள் எல்லையைத் தாண்டிச் செல்லாமல் இருக்க மற்றும் புயல் காலங்களில் அவர்களை மீட்டு வருவதற் காகவும் இந்தப் பணியைச் செவ்வனே செய்வதற்காக இந்தப் படகுகள் இயங்கிக் கொண்டிருக்கிறது.

ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு மீனவர்களைப் பயிற்றுவிப்பதற்காக 43.5 அடி படகு 25 இலட்ச ரூபாய் செலவில் கன்னியாகுமரியிலே இயக்கப்பட இருக்கிறது. அந்தப் படகுக்கு முதல்வர் அவர்கள் குமரி என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். மீனவர்கள் ஆழ்கடலில் இருக்கின்ற மீன்களை இனம் கண்டு கொண்டு அவர்கள் அந்த மீன்களைப் பிடித்து வருவதற்கு இந்தப் பயிற்சிப் படகு அங்கே இயங்க இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இறங்கு தளங்கள்**

மீனவ மக்கள் கொண்டு வருகின்ற மீன்கள் சுத்தமான முறையில் கையாள வேண்டுமென்ற எண்ணத்திலும், சர்வதேச அளவில் மீன்களுக்கு விலை

உயர்வு – நல்ல விலையில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் இந்த மீன்களை சுத்தமாக கையாள வேண்டும் என்ற எண்ணத்திலும், பல வசதிகள் கூடிய இறங்கு தளங்கள் மத்திய அரசு, மாநில அரசு நிதி உதவியுடன் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 10 இடங்களும் அறிவிக்கப்பட்டு அதில் முதல் கட்டமாக புன்னைக் காயலில் பணி தொடங்கப்பட்டு இருக்கிறது. மற்ற பகுதியிலும் விரைவிலே பணி ஆரம்பிக்கப்படும்.

மீனவ மகளிருக்கு அலுமினியப் பாத்திரங்கள், மானிய விலையில், பாதி மானிய விலையில் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டு இதுவரையில் 7500 மீனவ மகளிருக்கு அலுமினியப் பாத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பாத்திரங்களுக்கு மீனவ மகளிரிடையே நல்ல வரவேற்பு இருந்ததால் நடப்பு நிதியாண்டிலும் இரண்டாயிரம் மகளிருக்கு 3 இலட்சம் ரூபாய் அலுமினிய தட்டு வழங்கப்படும்.

இதுமட்டுமல்லாமல், மத்திய தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் உள்நாட்டு மீனவர்களுக்காக 589.67 இலட்ச ரூபாய் அளவில் திட்டங்கள் தீட்டப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

வண்ண மீன் உற்பத்திற்காக சென்ற நிதிநிலை அறிக்கையில் 10 இலட்ச ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்திருந்தது. திருமூர்த்தி, ஆழியாறு போன்ற பகுதிகளில் வண்ண மீன் வளர்க்கும் திட்டம் உருவாக்கப்பட்டு அந்த 21 வகையான வண்ண மீன்கள் சென்னையிலே விற்கப் பட இருக்கின்றன.

**மீனவ மகளிருக்குக் காப்பீடு**

புதிய திட்டங்களுக் கான அறிவிப்புகளை முதல்வர் அவர்கள் இங்கே தந்திருக்கிறார்கள். விபத்துக் காலத்தில் ஆண்கள் மட்டுமே, மீனவ ஆண்கள் மட்டுமே இறக்க மாட்டார்கள். பெண்களும் இறப்பார்கள் என்று, பெண் இனத்திற்கு பெருமை சேர்க்கின்ற கலைஞர் அவர்கள், மீனவ மகளிர்க்கும், தமிழக அரசே காப்பீடு செய்து, அதற்கான பிரீமியத்தைச் செலுத்தி, அவர்கள் விபத்தில் இறக்கும் காலத்தில் அவர்களுக்கு, மீனவ மகளிருக்கு 15,000 ரூபாய் அளிப்பதற்கு முன் வந்திருக்கிறார்கள். பகுதி ஊனம் அடைந்தால் 7,500 ரூபாயும் அளிக்க இருக்கிறார்கள். ஆகவே, அதற்கும் மீனவ மகளிர் அனைவரும் நன்றிக் கடன் உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

மீனவக் குடும்பத்தினர் இறந்தால் அவர்களின், இறுதிச் சடங்கைச் செய்வதற்காக, அவர்கள், இருக்கின்ற சூழ்நிலையை அவர்கள் வருமானத்தில் பின்னடைந்துள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அந்த மீனவ சங்கத்தில் உள்ளவர்களின் குடும்பத்தினர் யாராவது இறந்தால் அவர்களுக்கு, இறுதிச் சடங்கு செய்வதற்காக 500 ரூபாய் வழங்குவதற்கும் கலைஞர் அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள் என்பதை உங்கள் மத்தியிலே தெரிவித்துக் கொண்டு, இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை கலைஞர் அவர்கள் மீனவர்களுக்காகத் தந்திருக்கிறார்கள்.

## வருவாய்த்துறை...

தமிழ்நாடு நில உரிமைபதிவேடு திட்டத்தை முதல் கட்டமாக 9 மாவட்டங்களில் செயல்படுத்தியபோது, நில உரிமைப் பதிவேடுகள் அச்சடிக்கப்பட்டு கைகளால் எழுதப்பட்டு வழங்கப்பட்டது. தற்போது வருவாய்த் துறையில் அனைத்துப் பணிகளும் கணினி மயமாக்கப்பட்டு வருகிறது. இதை கருத்தில் கொண்டு வருங்காலத்தில் நில உரிமைப் பதிவேடுகள் கணினி மூலமாக தயாரிக்கப்பட்டு வழங்கப்படும், இதனால் நில உரிமைப் பதிவேட்டில் உள் பதிவுகள் நேர்த்தியாகவும், தெளிவாகவும், எளிதாகப் படிக்கும் வகையிலும் அமையும். மேலும் இந்த விவரங்கள் கணினியில் எப்பொழுதும் பாதுகாக்கப்படுவதால் திருத்தங்கள், மாறுதல்கள், எளிதாகவும், விரைவாகவும் மேற்கொள்ளலாம்.

**அரசு நிலங்களுக்கு அளவைக் கற்கள்**

நில அளவை நடைமுறையில் புறம்போக்கு மற்றும் பட்டா நிலங்கள் எல்லைகளை அடையாளம் காண புறம்போக்கு மற்றும் பட்டா நிலங்களின் எல்லைகளில் நில அளவைக் கற்கள் நட்டு பராமரிக்கும் முறை வழக்கில் இருந்தது. ஆனால் இந்த நடைமுறை 1982–ஆம் ஆண்டு முதல் கைவிடப்பட்டது. இக்காரணத்தினால் நில அளவை களப் பணியாளர்கள் புறம்போக்கு நிலங்களையும், ஆக்கிரமிப்புகளையும்




அடையாளம் காண்பதில் பல இடையூறுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அரசு நிலங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் புறம்போக்கு நிலங்களுக்கும், பட்டா நிலங்களுக்கும் இடையில் உள்ள எல்லைகளில் இனி நில அளவைக் கற்கள் நட்டு பராமரிக்கும் முறை மீள செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.



நில அளவைத்துறை நில அளவைத் தொடர்பான களப் பணி செய்வதுடன் மட்டுமல்லாது, கிராம, வட்ட, மாவட்ட வரைபடங்களும் தயாரித்துப் பராமரித்து வருகிறது. இந்த வரைப் படங்களையே அரசின் பிற துறைகளும் பயன்படுத்தி வருகின்றன. இது பொதுமக்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. இப்படங்கள் மரபு வழியாக பழைய நடைமுறைகளின்படி கையால் வரையப்பட்டு வருகின்றன.

அறிவியல் வளர்ச்சி காரணமாக அனைத்து துறைகளிலும் கணினி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி நில அளவைத் துறையிலும் கணினி சார்ந்த புதிய தொழிற்நுட்பங்களை அரசு அறிமுகப்படுத்தி வருகிறது. அதன் ஒரு கட்டமாக சென்னை நில அளவை மத்திய அலுவலகத்தில் ஒரு கணினி வரைபட மையம் (Computerised Cartographic Centre) துவங்கப்பட்டு அங்கு தயாரிக்கப்படும் அனைத்து வரைபடங்களும் இனி கணினி மயமாக்கப்படும்.

**நிலப்படங்கள் கணினி மயம்**

சென்னை மாவட்டத்தில் நில அளவைப் பணிகள் 1903 மற்றும் 1915–ஆம் ஆண்டு கால கட்டத்தில் முடிக்கப்பட்டுள்ளன. அந்நில அளவையின் போது தயாரிக்கப்பட்ட நிலப்படங்களே இன்று வரை பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1900–ஆம் ஆண்டு இருந்த சென்னை மாவட்டம் தற்போது மிகவும் விரிந்து பல வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஏற்கும் நிலையில் இந்நிலப்பதிவுருகளும், நிலப்படங்களும் இல்லை. நிலப்படங்களும், நிலப்பதிவுருகளும் மிகவும் சீரழிந்த நிலையிலும் அதிகமான பதிவுகள் நெருக்கமாக பதியப்பட்டும், மேற்கொண்டு பராமரிக்க இயலாத நிலையிலும் உள்ளன. எனவே நாளது வரை உள்ள அனைத்து விபரங்களையும் பிரதிபலிக்கும் வகையில் சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்து நிலப்படங்களையும் மைய அரசு நிதி உதவியுடன் கணினி மயமாக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## விட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி...

சென்னை கோயம்பேட்டில் உள்ள தெற்காசிய விளையாட்டு கிராமத்தில் காலியாக உள்ள நிலத்தில் வணிகக் கோபுரக் கட்டிடம் மற்றும் அலுவலகக் கட்டிடம் கட்டப்படும். சென்னை வில்லிவாக்கம் பகுதியில் ரூ. 5.31 கோடி செலவில் 110 உயர் வருவாய் பிரிவு குடியிருப்புகள் கட்டப்படும்.

சென்னை மாநகரத்தின் மையப் பகுதியில் உள்ள நுங்கம்பாக்கத்தில் ரூ.6.63 கோடி செலவில் உயர்வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள் கட்டப்படும். இத்திட்டப் பகுதியில் குடிநீர் வசதி மற்றும் பாதாள சாக்கடை போன்ற வசதிகளுடன் கான்கிரீட் நடைபாதை அமைத்துத் தரப்படும்.

சென்னை கலைஞர் கருணாநிதி நகரில் 96 உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள் அடங்கிய கோபுரக் கட்டிடம் ரூ.14.85 கோடி செலவில் கட்டப்படும்.

சென்னை அறிஞர் அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம் பகுதியில் மத்திய அரசு நிறுவனமான எண்ணெய் மற்றும் எரிவாயு குழுமத்திற்கு ரூ. 3.51 கோடி செலவில் 14 அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டப்படும்.




கன்னியாகுமரி மாவட்டம் வல்லன் குமாரவிளையில் ரூ.3.40 கோடி செலவில் குறைந்த வருவாய் பிரிவினர்க்கு 63 வீடுகளும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு 55 வீடுகளும் உயர்வருவாய் பிரிவினர்க்கு 7 வீடுகளும் கட்டப்படும்.

ஈரோடு முத்தம்பாளையத்தில் ரூ.4.56 கோடி செலவில் 30 உயர் வருவாய் பிரிவு குடியிருப்புகளும், 75 நடுத்தர வருவாய் பிரிவு குடியிருப்புகளும், 15 குறைந்த வருவாய்ப் பிரிவு குடியிருப்புகளும் கட்டப்படும்.

ஈரோடு மாவட்டம் சத்திய மங்கலம் பகுதி 2–இல் ரூபாய் 1.80 கோடி செலவில் 660 நடுத்தர வருவாய் பிரிவினருக்கான குடியிருப்புகள் கட்டப்படும்.

கோயம்முத்தூர் மாவட்டம் விளாங்குறிச்சியில் ரூ.7.30 கோடி செலவில் 200 வீடுகளும் வெள்ளக்கிணறு பகுதியில் ரூபாய் 6.00 கோடி செலவில் 260 வீடுகளும் கட்டப்படும்.

மதுரை மாவட்டம் அண்ணா நகரில் ரூபாய் 6 கோடி செலவில் 200 வீடுகளும் மதுரை வீட்டு வசதி பிரிவு அலுவலகப் பகுதியில் ரூ. 2.62 கோடி செலவில் 60 உயர் வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகளும் கட்டப்படும்.

கரூரில் ரூபாய் 1.40 கோடி செலவில் 5 உயர் வருவாய்

பிரிவினருக்கான வீடுகளும் 55 நடுத்தர வருவாய் பிரிவினருக்கான வீடுகளும் கட்டப்படும். வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் ரூ. 3.99 கோடி செலவில் 92 நடுத்தர வருவாய் பரிவினருக்கான வீடுகள் கட்டப்படும்.

தருமபுரி மாவட்டம் ஏ.ஜெட்டிஹல்லியில் ரூ. 8.43 கோடி செலவில் 68 உயர் வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகளும் 102 நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகளும் 87 குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகளும் கட்டப்படும்.

அரியலூர் குரும்பன் சாவடி திட்டம் பகுதி–1ல் 213 மனைகள் மற்றும் 50 நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகளும் அடங்கிய கூட்டமைப்பு வீட்டு வசதித் திட்டம் ரூ. 3.19 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 7.03 கோடி மதிப்பீட்டில் 1,631 மனைகள் மேம்படுத்தப்படும். நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் ரூ. 70.21 கோடி மதிப்பீட்டில் 4,732 மனைகள் மேம்படுத்தப்படும்.

நாகப்பட்டினம் பால் பண்ணைச் சேரியில் ரூபாய் 1.80 கோடி செலவில் மனைகள் மேம்படுத்தப்படும்.

**கோவை**

கோவை மாவட்டம் தெலுங்கு பாளையத்தில் மனைகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ. 4.15 கோடி செலவில் உயர் வருவாய்ப் பிரிவினருக்கான 113 மனைகளும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான 175 மனைகளும், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காக 183 மனைகளும் ஆக மொத்தம் 471 மனைகள் மேம்படுத்தப்பட உள்ளன.

அரசு ஊழியர்களின் நலனில் அக்கறை கொண்ட தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்ட முன்பணமாக வழங்கப்படும் ரூபாய் நான்கு இலட்சத்தை ஆறு இலட்சமாக உயர்த்தியுள்ளதுடன் இதற்காக இந்நிதியாண்டில் ரூ. 100 கோடி ஒதுக்கீடு செய்து நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளார்கள்.

மேலும் அரசு ஊழியர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டத்தைப் பொறுத்தவரை கடந்த ஆண்டில் மட்டும் 2144 வாடகைக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. இந்த நிதியாண்டில் பட்டினப்பாக்கம், திருப்பூர், திருவண்ணாமலை, திருவாரூர், பெரம்பலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், தேவக்கோட்டை, வல்லன்குமாரவிளை, முத்தம்பாளையம், மன்னார்குடி, மேட்டூர் , புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் ரூ. 30 கோடி மதிப்பீட்டில் 914 அரசு ஊழியர் வாடகை குடியிருப்புகள் கட்டப்படும்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் பராமரிக்கப்படும் மதுரை, சேலம், திருநெல்வேலி, கோவை, திருச்சி மற்றும் கடலூர் ஆகிய நகரங்களில் உள்ள 9637 குடிசைமாற்று குடியிருப்புகளின் சிறப்பு பழுது பார்க்கும் பணிக்காக பகுதி–2 திட்டத்தின் கீழ் முதல்வர் அவர்கள் ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார்.

**கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும்–இணையமும்**

கிராமப்புறங்களில் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 7,000 வீடுகள் கட்டுவதற்கும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர்க்கு 5,000 வீடுகள் கட்டுவதற்கும் ரூ. 170 கோடி கடன் வழங்கப்படும்.

பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு ரூ.5 கோடி கடன் வழங்கப்படும். வீடு சார்ந்த கடைகள் உள்ள கட்டிடம் கட்டுவதற்கும் கடன் வழங்கப்படும் கடனுக்கு ஈடாக காட்டப்படும் கட்டட மதிப்பை கணக்கிடும் போது சதுர அடிக்கு ரூ.350 என்பதை மாற்றி ரூ.450 ஆக உயர்த்தப்படும்.

வீடுகள் விரிவாக்கம் மற்றும் புதுப்பிக்கும் பணிகளுக்கு சுமார் 5000 வீடுகளுக்கு ரூ.50 கோடி கடன் வழங்கப்படும்.

நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் குறைந்த வருவாய்ப் பிரிவு, நடுத்தர வருவாய்ப் பிரிவு மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்கு 25 ஆயிரம் வீடுகள் கட்ட ரூ.450 கோடி கடன் வழங்கப்படும்.

பெருகி வரும் வீட்டு வசதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கோடு 2000–2001 ஆம் நிதியாண்டில் மேலும் 30 புதிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் ஏற்படுத்தப்படும்.

**பீடித் தொழிலாளர்க்கு 3000 வீடுகள்**

இந்த நிதியாண்டில் பீடித் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் 3000 வீடுகள் பல்வேறு மாவட்டங்களில் கட்டப்படும்.

பீடித் தொழிலாளர்களுக்குக் கட்டப்படும் ஒவ்வொரு வீடும் ரூ.34 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்படுகிறது. அவ்வீடுகளின் மாதிரி வடிவமைப்பை மாற்றி அமைக்கவும் தலை பரப்பளவை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதோடு ஒவ்வொரு வீடும் ரூ.40 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**நகர் ஊரமைப்புத்துறை**

தமிழகத்தின் தொன்மை வாய்ந்த நகரங்களான செட்டிநாடு, வாலிநோக்கம், மருதூர், பிச்சாவரம், மரக்காணம் ஆகிய நகரங்களுக்கு ரூ.3.50 இலட்சம் செலவில் நகர அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்படும்.

முழுமைத் திட்டங்கள் புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தி திட்டங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களைச்



செயல்படுத்துவதற்கு நிதியுதவியாக ரூ.15 இலட்சம் வழங்கப்படும்.ரூ.8 இலட்சம் செலவில் மிகவும் குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சியடைந்த பின்வரும் 12 வட்டங்களில் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படும். கிருஷ்ணராயபுரம், வானூர், செய்யார், பாப்பிரெட்டிப்பட்டி, ஆரணி, உடையார்பாளையம், திட்டக்குடி ,காப்பக வள்ளி, ஒட்டன்சத்திரம், கீழ்வேளூர், குடவாசல், கந்தர்வக்கோட்டை.

நவீன தொழில் நுட்பமுறையான புவியமைப்பு தகவல் முறையினை பயன்படுத்தி திருவண்ணாமலை உட்பட மூன்று நகரங்களுக்கான முழுமைத் திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தி திட்ட வரைபடங்கள் கணினி மயமாக்கப்படும்.

**மேம்பாட்டுப் பணிகள்**

சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் 26 ஆயிரம் குடும்பங்களுக்கு ரூ.39 கோடி செலவில் சுற்றுச் சுவர்களுடன் கல்நார் தகடுகளாலான கூரை கொண்ட வீடுகள் அமைக்கப்படும். இத்திட்ட பணிகள் இதர நகரங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

வெள்ளக் குறைப்பு பணிகள் திட்டத்தின்கீழ் சென்னை ஒக்கியம், துரைப்பாக்கத்தில் 2000–2001–ஆம் ஆண்டில் மேலும், 1600 வீடுகள் ரூ. 15.55 கோடி செலவில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்படும்.

குடிசைப் பகுதிகளை நல்ல உறைவிடமாக மேம்படுத்த தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு மின்விளக்குகள், மழை நீர் வடிகால், குடிநீர் வசதி மற்றும் கழிப்பறைகள் போன்ற பணிகளை 30 ஆயிரம் நகர குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு ரூ.6 கோடி செலவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப்பணிகள் நகரங்கள் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் குடிசைவாழ் குடும்பங்களுக்கு பயன்படும் வகையில் அமைக்கப்படும்.

1999–ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தில் திருச்சி மாநகரில் 2000 குடிசைப் பகுதி வாழ் குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளன. இக்குடும்பங்களுக்கு 2000–2001 ஆம் ஆண்டில் ரூ.271 கோடி செலவில் சுற்றுச் சுவர்களுடன் கல்நார் தகடுகளாலான கூரைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## தொழிலாளர் நலத்துறை...

**தமிழகம் முழுவதும் பயன்**

கட்டிடத் தொழிலாளர்களுக்காக நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்து, நலத்திட்டத்தின் மூலமாக சென்னையிலே இருப்பவர்களுக்கும், மதுரையிலே இருப்பவர்களுக்கும், கோவையிலே இருப்பவர்களுக்கும் மட்டும்தான் அந்த பயன்கள் என்பது மாறி, இப்போது அது தமிழ்நாடு முழுமைக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

தொழிலாளர்களின் ஜனநாயக ரீதியான தொழிற்சங்க உரிமை பாதிக்கக்கூடாது. தொழிலாளர்கள் சுரண்டப்படக் கூடாது. அச்சுறுத்தப்படக் கூடாது, தொழிலாளர் களுக்குச் சேரவேண்டிய சலுகைகள், உரிமைகள், பயன்கள் உடனடியாக வந்து சேர வேண்டும். தொழிலாளர் நலச்சட்டங்கள், ஒப்பந்தங்கள், நீதிமன்றத் தீர்ப்புகள், அவார்டுகள் அமல்படுத்தப்பட வேண்டும். மீறுவோர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே நேரடியாகக் கலந்து பேசி ஒப்பந்தம் போட்டாலே போதும்




தொழில் பிரச்சினையில் அரசுக்கு வேலையே இல்லை.

**நல்லுறவு வேண்டும்**

அதுமட்டுமல்ல, சலுகைகள், உரிமைகள், பயன்கள் என்பதோடு மட்டுமல்ல, இன்னும் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே நம்பிக்கையை ஏற்படுத்தி, தொழிற்சாலையிலே வேலை செய்யக்கூடிய அத்தனை பேரும் கதவடைப்பைக் கைவிட்டு, ஸ்டிரைக்கைக் கைவிட்டு, பொருள் உற்பத்தியைப் பெருக்கி, நல்லுறவோடு இருக்க வேண்டும்.

தொழிலாளி இல்லையென்றால் தொழிற்சாலை இல்லை, தொழிலாளி இல்லையென்றால் உற்பத்தி இல்லை, தொழிலாளி இல்லை என்றால் அன்னியச் செலாவணி இல்லை, இராமன் இல்லாமல் இராமாயணம் இல்லை என்று சொல்வதைப் போல. ஆகையினால் தொழிலாளர் உறவும் பாதுகாக்கப்பட வேண்டும். முதலாளிகளுடைய பொருளாதார நன்மையையும் நாம் பாதுகாக்க வேண்டும்.

குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று சொல்வது தொழிலாளர் விரோதக் கொள்கையா? ஸ்தாபன ரீதியற்ற தொழிலாளர்களுக்காக வாரியங்கள் கொண்டு வந்தது தொழிலாளர் விரோதக் கொள்கையா? நான் சுப்பராயன் அவர்களைக் கேட்கிறேன், விவசாயத் தொழிலாளர்களுக்காகக் குறைந்த பட்சக் கூலி அமைத்தது தொழிலாளர் விரோதக் கொள்கையா? நீங்கள் எதைத் தொழிலாளர் விரோதக் கொள்கை என்கிறீர்கள்?

அதுமட்டுமல்ல, தோட்டத் தொழிலாளர்கள் என்று சொன்னாலே, நம்முடைய உறுப்பினர் கிருஷ்ணசாமி தான் நினைவுக்கு வருகிறார். அவர்கள் இங்கே பேசினார்கள். அவருக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய தனிப்பட்ட நிலையையும் நான் குறைத்துப் பேசவில்லை.

ஆனால், நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எங்களைப் பொறுத்த மட்டில், இந்தச் சட்டங்கள், சம்பளப்பட்டுவாடா சட்டம், மகப்பேறு நலச்சட்டம், தேசிய மற்றும் பண்டிகைகள் விடுமுறைச் சட்டம், பிழைப்பூதிய பட்டுவாடா சட்டம், தொழிலாளர்களுக்கு நிறைந்த அந்தஸ்து வழங்கும் சட்டம், சம உரிமைச் சட்டம், பணிக்கொடை வழங்கும் சட்டம், போனஸ் பட்டுவாடா சட்டம், தொழிலாளர் நலநிதிச் சட்டம், இவைகளை எல்லாம் எங்களுடைய அதிகாரிகள் பயன்படுத்தி, சிறப்பாகச் செய்து வருகிறார்கள்.

**90 சதவிகிதம் தோட்டத் தொழிலாளர்களுக்கு**

தேனியிலே, கோத்தகிரியிலே, பந்தலூரிலே, தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினையைக் கவனிப்பதற்கு ஒரு தனி அலுவலகம் திறக்கப்பட்டு, தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார்கள். இந்தியாவிலேயே தோட்டத் தொழிலாளர்களுக்கு 90 சதவீதம் வீடு கட்டிக் கொடுத்தது யார்? கலைஞருடைய அரசு அல்லவா?

இப்போது இருக்கக்கூடிய அந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்கான வாரியத்திற்கு எங்களுடைய கமிஷனர் தான் தலைவர், பல கூட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. முத்தரப்பு கூட்டம், நிர்வாகம், தொழிலாளி, அரசு தரப்பு, அதைப் போலவே வீட்டு வசதி வாரியம். எங்களுடைய செயலாளர்தான் அதன் தலைவர். முத்தரப்பு கூட்டம். நீங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தலைமை தாங்குங்கள். ஆனால், 'பொய் சொல்லலாகாது பாப்பா' என்பதை மட்டும் பணிவோடு உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இங்கே மருத்துவ வசதிக்காக 136 மருந்தகங்களும், 29 தோட்ட மருத்துவமனைகளும் உள்ளன. தோட்டம் அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சிகிச்சைக்குச் சென்றால் நிர்வாகம் அந்தச் செலவை ஏற்றுக்கொள்கிறது. மகப்பேறு வசதி, பேறுகால விடுப்பு–12 வாரம், அதைப் போலவே குழந்தைகள் காப்பகம் என பல்வேறு வசதிகளைச் செய்து கொடுத்துள்ளோம்.

**அறிவிப்புகள்**

1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் தவறிழைப்போர் மீது நடவடிக்கை எடுத்து வழக்கு தொடுத்து அவை முடிவிற்கு கொண்டு வருவதற்கு பல காலம் ஆவதுடன் அதில் பல இடையூறுகளும் இருந்தன. அத்தவறுகளை உடனுக்குடன் திருத்தி இணக்க முறையில் அபராதம் வசூலிக்கும் குற்ற இசைவுத் தீர்வு முறை கடந்த ஆண்டின் தொழிலாளர் நலத்துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்டு அம்முறை தற்போது சிறப்பாக அமல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த முறை சிறப்பாக நடைபெற்று வருவதனைக் கருத்தில் கொண்டு 1958ஆம் வருட தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டத்தின் கீழும், 1958ஆம் வருட தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை மற்றும் விடுமுறை நாட்கள்) சட்டத்தின் கீழும் அதே போன்று குற்ற இசைவுத் தீர்வு முறையை கொண்டு வர மேற்படி சட்டங்களுக்கு உரிய திருத்தங்கள் கொண்டு வரப்படும்.

கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களின் மகனோ அல்லது மகளோ 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் ரூ.750ம், 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் ரூ.1,000ம், வழங்கப்பட்டு வருகிறது.

கட்டுமானத்தொழிலாளர் குழந்தைகள் மேலும் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு இனி இந்த உதவித் தொகையான ரூ.750க்கு பதிலாக ரூ.1000மும், ரூ.1000க்குப் பதிலாக ரூ.1500ம் ஆக உயர்த்தி வழங்கப்படும். இந்தச் சலுகை இந்தக் கல்வியாண்டில் இருந்து அமலுக்கு வரும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் மகன் அல்லது மகள் திருமணத்திற்கு தற்போது ரூ.1000 உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

இது இனி ரூ.2000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

கட்டுமானத் தொழிலாளர்களின் மகன் அல்லது மகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இந்த திருமண உதவித் தொகை இனி புதிதாக திருமணம் செய்து கொள்ளும் பதிவு பெற்ற ஆண், பெண் கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படும்.



கட்டுமானத் தொழிலாளர்களின் பிள்ளைகள் கலை மற்றும் விஞ்ஞானத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பு படித்தால் ரூ.1500ம், அதே படிப்பை விடுதியில் தங்கி படித்தால் ரூ.1750ம் வழங்கப்படும்.

மேலும் இவற்றில் பட்டமேற்படிப்பு படித்தால் முறையே ரூ.2000மும், ரூ.3000மும் வழங்கப்படும்.

சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை பராமரிப்பு, விஞ்ஞானம் மற்றும் அவை தொடர்புடைய தொழிற் கல்வி பயிலும் கட்டுமானத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ரூ.2000 உதவித் தொகையும் இதே படிப்பை விடுதியில் தங்கி படித்தால் ரூ.4000ம் உதவித் தொகையும் வழங்கப்படும்.

இந்த தொழிற் கல்விகளில் மேற்படிப்பு படித்தால் முறையே ரூ.4000ம், மற்றும் ரூ.6000 வழங்கப்படும்.

தொழில் மற்றும் தொழில்நுட்பப் படிப்புகள் படிக்கும் கட்டடத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ரூ.1000 உதவித் தொகையும் இதே கல்வியை விடுதியில் தங்கிப் படித்தால் ரூ.1200ம் வழங்கப்படும்.

தாய் தந்தையரை இழந்த ஏழை மாணவ மாணவியருக்கு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்க்கையின் போது தேவையான கல்வித் தகுதி பெற்றிருக்கும் பட்சத்தில் சேர்க்கையில் முன்னுரிமை வழங்கப்படும்.

அதே போன்று உயர்நிலைப் பள்ளிகளில் மாநில அளவில் விளையாட்டில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்ற சிறந்த மாணவ மாணவியருக்கு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்க்கையின் போது முன்னுரிமை வழங்கப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள வேலை வாய்ப்பகங்களில் வேலைவாய்ப்புத் தொடர்பான தகவல்கள் இணையத்தளத்தில் (WEBSITE) பதிவு செய்து அனைவரும் தகவல் பெற வழிசெய்துத் தரப்படும்.

அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சிகள் பெற்று வந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பினருக்கும் மற்றும் பயிற்சி பெறும் அனைத்துப் பயிற்சியாளர்களில் 1/5 பகுதியினருக்கும் அவர்களின் பெற்றோர்களின் வருமானத்தின் அடிப்படையில் உதவித்தொகை வழங்கப்பட்டு வந்தது.

கடந்த 37 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட இந்த உதவித் தொகை மிகவும் குறைவாக இருந்தது.

அவ்வுதவித் தொகையை இந்த அரசு உயர்த்தி நிர்ணயித்து அங்ஙனம் புதிதாக நிர்ணயிக்கப்பட்ட உதவித்தொகை தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

பர்மா மற்றும் இலங்கை அகதிப் பயிற்சியாளர்கள் தற்போது மாதம் ரூ.82.50 பெற்று வருகின்றனர். அதே போன்று சீர்மரபினர் பயிற்சியாளர்கள் மாதம் ரூ.45 பெற்று வருகின்றனர்.

இனி பர்மா மற்றும் இலங்கை அகதிப் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.175ம், சீர்மரபினர் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.140ம் வழங்கப்படும்.

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை...

முதலமைச்சர் அவர்கள் 2000–2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் போது மாநிலத்தில் மூன்றில் ஒரு பங்காக உள்ள 2 கோடி மாணவரல்லாத இளைஞர்களுக்குத் தற்போது விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி வசதிகள் குறைந்த அளவே இருப்பதால், அவர்களுக்குப் பயன்படும் வகையில் மாநிலத்திலுள்ள அனைத்து கிராம பஞ்சாயத்துகள் மற்றும் நகர்ப்புறங்களில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் உருவாக்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

**5001 விளையாட்டு – உடற்பயிற்சி மையங்கள்**

நம் மாநிலத்தில் 12,617 கிராமப் பஞ்சாயத்துக்களும் 611 பேரூராட்சிகளும், 102 நகராட்சிகளும் மற்றும் 6 மாநகராட்சிகளும் உள்ளன. இந்த நிதியாண்டு 2000–2001 இல், 5001 விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் பின்வருமாறு அமைக்கப்படும்.

3000க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராம பஞ்சாயத்துக்கள் அல்லது 1000க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராம குடியிருப்புகளில் 3850 மையங்கள்.

611 நகரப் பஞ்சாயத்துக் களில் 611,

102 நகராட்சிகளில் 510,

6 மாநகராட்களில் 30

இந்த மையமானது பஞ்சாயத்து அலுவலகம் அல்லது தொலைக்காட்சி பெட்டி அறை அல்லது சமுதாயக் கூடங்களுக்கு அருகில் அமைக்கப்படும். இம்மையங்களை அமைக்க தோராயமாக 5000 சதுர அடி நிலம் தேவைப்படுகிறது.

**மையம் ஒன்றுக்கு செலவு ரூ.25,000**

மேலும் ஒவ்வொரு மையமும் அமைக்க ஆகும் (விளையாட்டு உபகரணங்கள் உட்பட) செலவு ரூ.25,000 ஆக 5000 மையங்கள் ஆரம்பிக்க ஆகும் மொத்த செலவு ரூ.1250 கோடி. இதில் ரூ.1 கோடி விளையாட்டு உபகரணங்களுக்காக, இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் மூலம்

தரப்படுவதோடு மீதமுள்ள தொகை பல்வேறு திட்டப் பணிகளிலிருந்து ஒதுக்கீடு செய்து அமல்படுத்தப்படும்.

இந்த மையங்களை நிறுவத் தேவைப்படும் அனைத்து செலவினங்களையும் தனி நபரோ அல்லது தனி நிறுவனமோ எவரேனும் முன்வந்து அமைத்துக் கொடுக்கும்பட்சத்தில் அம்மையங்களுக்கு அவர்களின் பெயர் அல்லது அவர்களின் உறவினரின் பெயரோ வைக்க அனுமதிக்கப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து இம்மையத்தை அமைக்க நிதி ஒதுக்கிடும்




பட்சத்தில் அம்மையத்தை அமைப்பதற்கு இடத்தேர்வு எந்தத் தடையுமின்றி அவருடைய விருப்பத்திற்கேற்ப அமைக்கலாம்.

சிறிய அளவிலான கிராமப் பஞ்சாயத்து அல்லது குடியிருப்பு இடங்களில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையத்தை அமைக்கத் தேவையான இடம் கிடைக்கும் பட்சத்தில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச மக்கள் தொகை வரம்பினைத் தளர்த்தலாம்.

**இளைஞர் மன்றங்கள்**

ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துக்களிலும், நகர்ப்புற பகுதிகளிலும் உள்ள விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையம் ஒன்றுக்கு ஒரு இளைஞர் மன்றம் வீதம் ஆரம்பிக்கப்படும். குறைந்த பட்சம் 25 உறுப்பினர்களைக் கொண்ட இந்த இளைஞர் மன்றத்திடம் அம்மையத்தினைப் பராமரிக்கின்ற பொறுப்பு ஒப்படைக்கப்படும்.

கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் அல்லது நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களில் உறுப்பினராக உள்ள அப்பகுதி உறுப்பினர், அந்த மையத்திற்கு புரவலராக இருப்பார்கள். தற்போது இயங்கி வருகின்ற இளைஞர் மன்றங்கள், அம்மன்றங்களை அமைக்கத் தேவையான விதிமுறைகளின்படி அமைந்து இருந்தால், அவைகள் அங்கீகரிக்க வழிவகை செய்யப்படும்.

**இளைஞர் மன்றத்தின் பணிகள்**

இளைஞர் மன்றங்கள் பல்வேறு சமூக நலப்பணிகளான முறைசாராக் கல்வி, விபத்து நிவாரணம், நமக்கு நாமே வேலைத் திட்டடங்கள், மரம் நடுதல், சமூக அநீதிக்கு எதிரான பிரச்சாரங்கள், மத நல்லிணக்கத்தை பேணுதல், மேலும் அறிவியல் முனைப்பு, பொது மக்களிடையே அவர்களுடைய உரிமைகளையும், கடமையும் எடுத்துரைத்தல் ஆகியவற்றில் ஈடுபடும்.

மேலும் இந்த மையங்கள் அரசினுடைய கொள்கை மற்றும் திட்டங்களைப் பரவச் செய்யும் அமைப்புகளாகவும், சட்டம் ஒழுங்கு பற்றிய விவரங்களைப் பெறவும் மற்றும் அரசால் செயல்படுத்தப் படுகின்ற திட்டங்கள் மற்றும் உதவிகளுடைய தரத்தைப்பற்றி தகவல் பெறவும் உபயோகப்படுத்தப் படும்.

இந்த மையங்கள் அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் கண்களாகவும், காதுகளாகவும், செயல்படும் மற்றும் சமூக மாற்றத்திற்கும் மேம்பாட்டிற்கும் ஒரு சக்தியாக இருக்கும், இளைஞர் மன்றங்களுக்கு மக்கள் சாசனத்தைப் பற்றிய புத்தகங்கள், அரசினுடைய திட்டங்கள் மற்றும் அரசு வெளியீடுகளான தமிழரசு பத்திரிக்கை, செய்தி வெளியீடுகள் போன்றவைகள் வழங்கப்படும்.

இளைஞர் மன்றங்களை அமைக்க ஆகும் செலவினத்தினை எதிர்கொள்ள ஒவ்வொரு மன்றத்திற்கும் தலா ரூ.500 வீதம் தொடராத செலவினமாக அனுமதித்து அதனை மாவட்ட ஆட்சியர்கள் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு வழங்கப்படும் 5000 இளைஞர் மன்றங்கள் ஆரம்பிப்பதற்கான மொத்த நிதித்தொகை ரூ.25 லட்சம்.

அனைவரும் பங்கேற்கக் கூடிய திறந்த விளையாட்டுப் போட்டிகள் (பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மற்றும் மாணவரல்லாத இளைஞர்கள் பங்கு கொள்ளும் போட்டிகள்) மிகக்குறைந்த அளவிலேயே நடத்தப்படுகிறது. மாநிலம் முழுவதிற்கும் வட்டார அளவிலான திறந்த ஊரக விளையாட்டுப் போட்டிகளை நடத்த ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு வட்டாரத்திற்கு ரூ.1948 என ஒதுக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுப் போட்டிகள், தடகளப் போட்டியில் ஐந்து பிரிவுகளிலும் (100மீ. ஓட்டம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல் மற்றும் தொலைதூர ஓட்டம்) மேலும் மூன்று குழுப் போட்டிகளிலும் (கையுந்துப் பந்து, கபடி மற்றும் பூப்பந்து) நடத்தப்படுகின்றன. தடகளப் போட்டிகளில் 10 பிரிவுகளிலும் (100மீ., 200 மீ., 800 மீ,



5000 மீ., 10000மீ ஓட்டப் போட்டிகள்) நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல், ஈட்டி எறிதல் மற்றும் தட்டு எறிதல்) மேலும் அந்தப் பகுதிகளில் பிரபலமாக உள்ள விளையாட்டுக்களில் ஏதாவது 3 குழுப்போட்டிகளிலும் கைப்பந்து, ஈந்து கபடி, பூப்பந்து, கால்பந்து, கூடைப்பந்து மற்றும் கிரிக்கெட்) ஆகிய போட்டிகளில் வட்டார அளவிலான திறந்த போட்டிகளை அடிப்படை அளவில் நடத்துவதற்கு அதிக வரவேற்பு உள்ளது.

**நிதி ஒதுக்கீடு ரூ.25 இலட்சமாக உயர்வு**

மாவட்ட மற்றும் மாநில அளவில் அனைவரும் பங்கேற்கக் கூடிய திறந்த ஊரக விளையாட்டுப் போட்டிகளை நடத்த தற்போது நிதி ஒதுக்கீடு முறையே ரூ.2.78 இலட்சம் மற்றும் ரூ.2.66 இலட்சம் ஆகும். (மொத்தம் ரூ.5.44 இலட்சம்) இந்த ஒதுக்கீடு போதுமானதாக இல்லை. (மாவட்டம் ஒன்றிற்கு ரூ.9,928 என கணக்கிடப்பட்டுள்ளது) மேலும் தடகளப் போட்டிகளில் மட்டும்தான் போட்டிகள் நடத்தப் படுகின்றன. மேலே கூறப்பட்ட ஊரக அளவிலான திறந்த விளையாட்டுப் போட்டிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்ட தடகள மற்றும் குழுப் போட்டிகளைப் போல், மாவட்ட அளவிலும் நடத்துவதற்கு அதிக வரவேற்பு உள்ளது.

அனைத்து கிராமப் பஞ்சாயத்துக்களில் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் ஊரக விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்களை அமைத்த பிறகு, வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான திறந்த ஊரக விளையாட்டுப் போட்டிகள் மிகவும் பிரபலமாக அமையும். இந்தப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்துவதற்கு வட்டார மாவட்ட மாநில அளவில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி ரூ.1,294 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாக உயர்த்தப்படும்.

**முட்டுக்காட்டில் நீர் விளையாட்டு மையம்**

காஞ்சிபுரம் மாவட்டம் முட்டுக்காட்டில் இந்திய விளையாட்டுக் குழுமத்தின் சார்பில் நடத்தப்பட்ட முதற்கட்ட ஆய்வு அறிக்கையில், தரமான நீர் சாகச விளையாட்டு வளாகம் ஏற்படுத்த வசதிகள் அமைக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. இவ்விடம் சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் இடையில் இந்திய மற்றும் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்தக்கூடிய நீர் சாகச விளையாட்டு வளாகம் அமைய வாய்ப்புகள் உள்ளது. இந்த மையம் புகழ் பெற்ற மையமாக மாறினால் நமது உள்நாட்டுப் பொருளாதாரம் வளர்ச்சியடையும்.

முட்டுக்காட்டில் கீழ்க்கண்ட வசதிகளுடன் கூடிய சர்வதேசத் தரத்திலான நீர் விளையாட்டு மையத்தை அமைப்பதற்கான தொழில் நுட்ப மற்றும் நிதி ஆதாரம் பற்றிய ஆய்வு டிட்கோ நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

Water sking (with facilities for wakeboard, slalom and jump competitions)

Wind surfing

Motor boating

Jet boating

Water scooter

Rowing

Kayaking

Canoeing

இதற்காக ரூ.5 இலட்சம் தொடரா செலவினமாக ஒதுக்கீடு செய்யப்படும்.

ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்தவும் அல்லது விளையாட்டு உபகரணங்கள் வாங்கவும் அல்லது இரண்டிற்கும் மைய அரசு ரூ.1.50 இலட்சம் மானியம் அளித்து வருகின்றது.

மைய அரசு ஓராண்டுக்கு ஒரு ஒன்றியத்திற்கு ஒரு பள்ளிக்கும், ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு ஒன்றியத்தில் இரண்டு பள்ளிகளுக்கு மிகாமலும் நிதியுதவி வழங்கும்.

இத்திட்டத்தின் கீழ் தமிழகத்திலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு ஒன்றியத்திற்கு இரண்டு பள்ளிகள் வீதம் 770 பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்தவும், இந்த நிதியாண்டில் 385 பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கவும் மைய அரசின் நிதியுதவி பெற்று இத்திட்டத்தை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**வாழ்க்கைத் தொழில் பற்றி வழிகாட்டுதல்**

ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த மற்றும் சமுதாயத்தின் ஆதிதிராவிடர், ஆதி திராவிட பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய இனங்களைச் சார்ந்த மாணவர்கள் அரசு உயர்நிலைப்பள்ளி, மேநிலைப்பள்ளி மற்றும் கல்லூரிகளில் 10–ஆம் வகுப்பு 12–ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி வகுப்புகளில் படிக்கும் போது அவர்களுடைய வாழ்க்கையின் முக்கிய கட்டமான தொழில் மற்றும் வேலைவாய்ப்புகளைப் பற்றி போதுமான வழி காட்டுதல் இல்லாமல் இருக்கின்றார்கள். மேலும் அவர்களுக்குண்டான பல்வேறு போட்டித் தேர்வுகளைப் பற்றியும், வேலைவாய்ப்புகளைப் பற்றியும் மற்றும் சுயத் தொழிலுக்கான வாய்ப்புகளைப் பற்றியும் அறியாத நிலையில் இருக்கின்றார்கள். இதனால் அவர்களுடைய திறனுக்குத் தகுதியில்லாத வேலையில் அமர வேண்டிய நிலை ஏற்படுகிறது.

புதிதாகத் துவக்கப்பட்ட இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, பள்ளிக்கல்வித் துறை மற்றும் உயர்கல்வித் துறையுடன் ஒருங்கிணைத்து வாழ்க்கைத் தொழில் குறித்து வழிகாட்டும் ஆவணங்களைத் தயாரித்து அவற்றை இணையம் உட்பட மின்னணுவியல் மற்றும் பத்திரிகை மூலம் அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேநிலைப்பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலுகின்ற மாணவர்கள் அனைவரும் அறியும்படி ஆவண செய்து முக்கிய பங்காற்றும் ஒவ்வொரு பள்ளி அல்லது கல்லூரியில் பணியாற்றுகின்ற ஆர்வமுள்ள மற்றும் மதிப்பூதியம் எதிர்பாராத ஆசிரியர் ஒருவரை வேலைவாய்ப்பு அறிவுரையாளர் என பதவிப் பெயரிட்டு அழைக்கலாம்.

## ஊரகத்தொழில் மற்றும் பத்திரப் பதிவுத்துறை...

இன்றைக்குத் தொழில் துறை மூலமாக சிறப்புப் பயிற்சியாக, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு கடந்த ஆண்டு 14 இலட்ச ரூபாய் செலவிலே 400 நபர்களுக்கு பயிற்சி அளித்திருக்கிறோம்.

மானிய உதவிகளைப் பொறுத்தவரையில், பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய தாலுகாக்களை, 287 ஊராட்சி ஒன்றியங்களை, ஒன்றியம் வாரியாக பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய பகுதிகளாக நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், கடந்த காலத்திலே சிறப்பு மானியங்கள், 1999–2000–ஆம் ஆண்டிலே மட்டும் ரூ.7,865.98 இலட்சம் உதவியாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியின் போது 1991–1994 ஆண்டுகளில், 5 ஆண்டுகளில் சிறு மற்றும் குறுந்தொழில்களுக்கு கடந்த கால அரசு வழங்கிய மானியம் ரூ.192 கோடி என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.




### குறுந்தொழிலுக்கு வழங்கிய மானியம்

ஆனால், நம்முடைய தலைவர் கலைஞர் ஆட்சியிலே, கடந்த நான்கு ஆண்டுகளிலே வழங்கிய மானியம் மட்டும், சிறுதொழில், குறுந்தொழிலுக்கு வழங்கிய மானியம் மட்டும் ரூ.306 கோடி என்பதை மிகப் பெருமிதத்தோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்றைக்குச் சிறுதொழில்களிலே பொருளாதார மந்தம், பின்னடைவு ஏற்பட்டிருந்தாலும் கூட, கடந்த ஆட்சிக் காலத்திலே, நான்காண்டு காலத்திலே சிறுதொழில் பதிவுகள் மொத்தம் 97,767 தான். ஆனால், தலைவர் கலைஞர் ஆட்சியிலே, நான்காண்டு காலத்திலே சிறுதொழில் பதிவு மட்டும் 1,23,257 அலகுகள் என்பதை இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

### 8,400 மகளிருக்குத் தொழில் பயிற்சி

இன்றைக்கு இருக்கின்ற தொழில் துறையிலே மகளிருடைய பங்கு எந்த அளவிற்கு கலைஞர் அரசு உயர்த்தியிருக்கிறது என்பதை நான் இங்கே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். தலைவர் கலைஞர் ஆட்சியிலே கிட்டத்தட்ட 8,400 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.91.40 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அரசின் இந்த திட்டச் செலவிலே, ஒரு முதல் பெண் தொழில் முனைவோர் வந்தால், அவருக்கு அதிகபட்சமாக 50,000 ரூபாய் மானியம், அல்லது முதலீட்டிலே 10 சதவிகிதம் வழங்கப்படுகிறது. இதுபோக, இன்றைக்கு வளர்ந்து வருகின்ற இந்தத் தொழில் துறையைப் பொறுத்த அளவில், நாட்டிலே வளர்ந்து வருகிற தொழில் நுட்பத்திற்கு ஏற்றாற் போல, தொழில் துறையை உயர்த்துவதற்கு கோவையிலும், மதுரையிலும் ஒரு Incubator Centre அமைக்கப்பட்டிருக்கிறது. காரணம், சாதாரணமாகப் படித்துப் பட்டம் பெற்ற ஏழையெளிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் வாடகை வசதியோடு அவர்கள் மின் தடையில்லா சாதனம், அதோடு மட்டுமல்லாமல், வாடகை அடிப்படையில் இணையத்துடன் இணைத்தல், கணினி மற்றும் இதர தளவாடங்கள் ஆகிய பல வசதிகளைப் பெறுவதற்கு மதுரையிலே C, e, d – யுடன் கூட்டுச் சேர்ந்து ரூ.50 இலட்சம் செலவிலே அங்கே அந்த வசதி வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

சிறுதொழில்களுக்கு மண்டலத் தொழில் வசதி ஆக்கக் குழு ஒன்று தலைவர் கலைஞர் ஆட்சியிலே நிறுவப்பட்டிருக்கிறது. சிறுதொழிலிலே இருக்கின்றவர்கள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு அவர்கள் வழங்கிய பின்னால் அந்தப் பணம் வரவில்லையென்றால், இந்த வசதி ஆக்கக்குழு, அத்தனை ஏற்பாட்டையும் செய்து, அந்தப் பணத்தைத் திரும்பப் பெற்றுத் தருவதற்கு ஏற்ப, எல்லா நடவடிக்கையையும் எடுத்து வருகின்றது.

தலைவர் கலைஞர் ஆட்சியிலே இன்றைக்குப் பாரதப் பிரதமருடைய சுயவேலைவாய்ப்புத் திட்டம்,



ஊரகத்தொழில் துறையிலே ஒரு முக்கியமான அங்கம். அதிலே இந்தியத் திருநாட்டிலே இன்றைக்குப் பாரதப் பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்திலே தமிழகம் முதல் நிலையிலே இருக்கின்றது என்பதை புள்ளி விவரத்தோடு நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த 1999–2000–ஆம் ஆண்டிலே மத்திய அரசின் இலக்கிற்கு அதிகமாக 103 விழுக்காடு வங்கிகளிடமிருந்து 15,460 பேருக்கு ஒப்பளிப்பு பெறப்பட்டது. கடந்த ஆட்சியின் போது, மூன்று ஆண்டுகளில் 28,144 பேருக்கு வழங்கிய மொத்தக் கடன் ரூ.15,379.86 இலட்சம். ஆனால், தலைவர் கலைஞர் ஆட்சியிலே, 3 ஆண்டுகளிலே வழங்கப்பட்ட பணம், 43,513 பேருக்கு ரூ.22,563 இலட்சம் கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆலோசனையின் பேரிலே, சிறுதொழில், குறுந்தொழில்களினுடைய குறைகளைக்கேட்டு நிவர்த்தி செய்வதற்காக சிறுதொழில் வாரியம் ஒன்றை அமைத்து, அதிலே 3 கூட்டங்கள் நடத்தப்பட்டு, அதன் மூலமாகப் பெறப்பட்ட கோரிக்கைகள் 169. அவற்றிலே, அத்தனைத் துறைகளுடனும் கலந்து பேசி தீர்க்கப்பட்டவை 102 கோரிக்கைகள். அவற்றை இந்த அரசு தீர்த்திருக்கிறது.

இதைத் தவிர, தொழில் துறையிலே தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் சிட்கோ முதல்வர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சிட்கோ, ஆரம்ப காலத்தில் நல்ல வளர்ச்சியைப் பெற்று இலாபத்திலே இயங்கி வந்த நிறுவனம், பின்பு, கடந்த ஆட்சிக் காலத்திலே, 1995–ஆம் ஆண்டிலே, 3 கோடி ரூபாய்க்கு மேலே நட்டத் திலே, இழப்பிலே அந்த நிறுவனம் விட்டுச்சென்ற வேளையிலே, மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக ஆட்சிக்கு வந்தார்.

தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே, 3 ஆண்டுக் காலத்திலே எடுக்கப்பட்ட சீரிய நடவடிக்கைகளினால், இன்றைக்கு இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் விற்கப்படாமல் இருந்த 349 தொழிற்கூடங்களும், 371 மேம்படுத்தப்பட்ட மனைகளும், அதோடு இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், சிட்கோ நிறுவனத்தால், தொழிற்பேட்டையால் கூடுதலாகக் கழக அரசு கட்டிய 186 தொழிற்கூடங்களும், 694 மேம்படுத்தப்பட்ட மனைகளும் உருவாக்கப் பட்டுள்ளன.

அதுபோக, இந்தத் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற 1996–97–லே இருந்தது, 55 இலட்சம் ரூபாய் இலாபம். 1997–98–லே 186 இலட்சம் ரூபாய் இலாபம். 1998–99–லே 43 இலட்சம் ரூபாய் இலாபம். 1999–2000–லே 124 இலட்சம் ரூபாய் இலாபம். 2000–2001–லே 112 இலட்சம் இலாபம் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, நட்டத்திலே இருந்த 'சிட்கோ' நிறுவனம் இப்போது இலாபத்திற்கு வந்திருக்கிறது.

### அண்ணா பெயரில் தொழிற்பேட்டை

குறிப்பாக, இங்கே நான் ஒருசில அறிவிப்புகளைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன். அதற்கு முன்னால் ஒரு முக்கியமான கருத்தை நம்முடைய உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன் வற்புறுத்தினார். அறிஞர் அண்ணா பெயரால் இருக்கிற தொழிற்பேட்டை, கோவையிலே அதற்காக இந்த அரசு முயற்சி எடுக்கப்பட்ட நேரத்திலே, SIDBI நிறுவனமானது Government Guarantee கொடுக்க வேண்டுமென்று சொன்னது. அரசு அதற்கு பிணை வைப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னது. நம்முடைய அரசு, தனியார் கூட்டுறவு தொழிற்பேட்டைகளுக்கு கொடுப்பதில்லை என்று முடிவெடுத்து, கொள்கை முடிவெடுத்திருக்கிறது.

அதற்குப் பின்னால், நாம் மத்திய அரசை வலியுறுத்தி பல கடிதங்களை எழுதி, அந்த 300 ஏக்கர் நிலமும், அவர்கள் வாங்குகிற கடனுக்கு மேல் அதிகபட்சமாக இருக்கிற காரணத்தால், அதையே வைப்பாக ஏற்றுக் கொள்ளலாம் என்று SIDBI மற்றும் மத்திய அரசுக்கு எழுதிய கடிதங்களுக்கு, அவர்கள் முதன் முறையாக ஒப்புக்கொண்டு, பின்னால் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.




அதற்குப் பின்னால், நம்முடைய தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாகக் கடன் வழங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு, அதற்காக அரசாங்கத்தினுடைய பங்காக 50 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. இதற்கு நம்முடைய அரசானது, நிதித்துறையினுடைய சார்பாக அதற்கு ஒரு குறிப்பிட்ட பணத்தை அரசினுடைய பங்காக

வழங்கி இருக்கிறது. மேலும் அது போதவில்லை என்றாலும், அதுபற்றிப் பேசி, நிச்சயமாக அறிஞர் அண்ணா தொழிற்பேட்டை தொடங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சிறுதொழில்கள் துறையைப் பொறுத்தவரையில், சிறுதொழில் பிரிவுகள் விற்பனை மையம் சென்னையிலும், மதுரையிலும் 8 இலட்சம் ரூபாய் செலவிலே இந்த ஆண்டு தொடங்கப்பட இருக்கிறது. அவர்கள் உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்வதற்காக காட்சி மையம் அமைக்கவிருக்கிறது இந்த அரசு.

அதுபோல, ஒற்றைச் சாளர முறையிலே இனிமேல் மனு செய்பவர்களுக்கு அங்கே இருக் கின்ற பொது மேலாளரே அத்தனை அனுமதியும் பெற்றுத் தருகின்ற வாய்ப்பை புதிய வாய்ப்பை இந்த அரசு உருவாக்கி யிருக்கிறது.




தமிழ்நாடு தொழில் நுட்ப மையம், நலிந்த தொழில்நுட்பம் உள்ளவர்களுக்கு அவர்களுடைய தரத்தை, பொருட்களின் தரத்தை உயர்த்துவதற்காக 5 இலட்ச ரூபாய் இந்த அரசு ஒதுக்கி இருக்கிறது. மதுரையிலே உள்ள வட்ட பரிசோதனை ஆய்வுக் கூடத்தை நவீனப்படுத்துவதற்காக இந்த அரசு, 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

அதுபோல ஒருவர் சிறு தொழில் தொடங்க வேண்டுமென்றால், இப்போது தனியார் ஒருவர் தொழில் தொடங்க வேண்டுமென்றால் அதற்காக தொழில் நுட்ப ஆலோசனைகளைப் பெறுவதற்கு உரிய பணத்தைச் செலுத்த வேண்டும்.

**இளைஞர்களுக்கு அரசு சலுகை**

அவ்வாறு தொழில் தொடங்க வருகின்ற இளைஞர்கள், படித்த பட்டதாரிகள், ஏழைகளுக்காக 50 சதவிகிதம் அவர்கள் தொழில்நுட்ப அறிவைப் பெறுவதற்கு கலைஞர் அரசு ஏழையெளிய, படித்த பட்டதாரிகளுக்காக 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பதிவுத்துறையைப் பொறுத்த அளவில், இன்றைக்கு தமிழ்நாட்டிலே அனைத்து சார்பதிவகங்களிலும் கணினி மயமாக்குவதற்குரிய நடவடிக்கையை நம்முடைய முதல்வர் அவர்கள் கடந்த பிப்ரவரி மாதம் ஆரம்பித்து வைத்து, 25 சார்பதிவகங்கள் கணினி மயமாக்கப்பட்டன. வருகின்ற ஜூன் மாதத்திற்குள்ளாக, இந்த 2000–2001க்குள் தமிழ்நாடு முழுவதும் உள்ள அத்தனை சார்பதிவகங்களும் கணினி மயமாக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**அடையாளம் காட்டும் கருவி**

அதே போல முத்திரைத் தாள்களைப் பற்றிச் சொன்னார்கள். போலி முத்திரைத் தாளும் சரி, அதுபோல கள்ளப்பணத்தையும் சரிபார்ப்பதற்காக அடையாளம் காட்டும் கருவி ஒவ்வொரு சார் பதிவகத்திலும் வைப்பதற்காக தமிழ்நாட்டிலே முதல் கட்டமாக 300 சார்பதிவகங்களிலே போலி முத்திரைத்தாள் அடையாளம் காட்டும் கருவி வாங்குவதற்கு இந்த அரசு முடிவு செய்திருக்கிறது.

இதுபோல நம்முடைய வீட்டுவசதி வாரியத்திற்கு உதவி செய்கின்ற நிறுவனத்திற்கு மற்றும் இருக்கக்கூடிய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கும் அவர்கள் முத்திரைத் தாள்களைப் பெறுவதிலே மிகுந்த கஷ்டம் இருக்கிறது. எனவே, அவர்கள் ஃபிராங்கிங் மெஷினை வைத்துக் கொள்வதற்கு முத்திரைத்தாள் அச்சிடும் இயந்திரங்களை வைத்துக் கொண்டு, அதையே பயன்படுத்தி முத்திரை ஸ்டாம்பாக பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறது. இதனால் அரசுக்கு முன் பணமாக பல கோடி ரூபாய் வருமானம் கிட்டும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

**முத்திரைத்தாள் விற்க 1524 பேர் தேர்வு**

எல்லா மாநிலங்களிலும் இருக்கக்கூடிய பதிவுத் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி மையம் நம்முடைய தமிழகத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்காக உருவாக்கப்பட்ட அந்த பயிற்சி மையம், இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லா மாநிலத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. புதியதாக வருகிற ஆண்டிலே 1524 முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அதுபோல வழிகாட்டி மதிப்பைப் பொறுத்த மட்டில் வழிகாட்டி மதிப்பைத் தெரிந்து கொள்ள மிகக் கஷ்டமாக இருக்கிறது என்று இங்கே பேசிய நண்பர்கள்






சொன்னார்கள். அதனை நாமெல்லாம் இப்போது, இணையப் பரப்பிலே தெரிந்து கொள்ளலாம்.

நம்முடைய பதிவுத் துறை மூலமாக வழிகாட்டும் மதிப்பை இன்றைக்கு 10 அலுவலகங்களிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இனிமேல் வருங்காலத்திலே தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய சார்பதிவகங்களுடைய வழிகாட்டி மதிப்பை கணினியிலே, நாம் இருக்கக்கூடிய பத்திரப் பதிவுத்துறைக்காக நியமிக்கப்பட்டிருக்கின்ற இணையப் பரப்பிலே வீட்டிலே இருந்து வழிகாட்டி மதிப்பைத் தெரிந்து கொள்ளலாம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

100 பட்டு நூற்பாளர்களுக்குக் கடின நீரை மென்நீராக்கி, பட்டை உற்பத்தி செய்வதற்கு 50 சதவிகிதம் மானியமாக 4 இலட்சம் ரூபாய் வழங்குவதற்கு இந்த அரசு முடிவு செய்திருக்கிறது.

வருகிற ஆண்டிலே, நம்முடைய கைத்திறன் தொழில் பூம்புகார் மூலமாக தயார் செய்யப்படக்கூடிய அத்தனை கலைப்பொருட்களும், பூனா, ஹைதராபாத் மற்றும் ஜெய்பூர், உதய்பூர், போபால், இந்தூர், கோவா, புதுடெல்லி மற்றும் மும்பை போன்ற நகரங்களிலே பெரிய அளவில் கண்காட்சிகள் நடத்த உத்தேசித்துள்ளது.

இதுபோக, 2000–2001–ஆம் ஆண்டில் எப்படி மாமல்லபுரத்திலே கற்சிலைகளுக்காக, தலைவர் கலைஞர் அவர்களால் ஆரம்பத்திலே ஒரு ஆண்டு படிப்பாக, அதிலே கைவினைகளில் பயிற்சி செய்வதற்கு ஓர் ஆண்டு ஆரம்பித்த பின்பு, பட்டயப் படிப்பாக மாற்றினார்களோ அதே போல பஞ்சலோகச் சிலைகளையும், வெங்கல வார்ப்புச் சிலைகளையும், வடிவமைக்கின்ற நம்முடைய சுவாமிமலையிலே, வருகின்ற ஆண்டிலே 10 இலட்சம் ரூபாயிலே, கட்டடம் கட்டப்பட்டு, அங்கே மூன்று ஆண்டுகள் பட்டயப் பயிற்சி பெறுவதற்காக, நம்முடைய தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இந்த ஆண்டிலே அந்தப் பட்டப்படிப்பை மூன்று ஆண்டு பட்டயப் படிப்பாகத் தொடங்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தனை துறைகளும் இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்களின் ஆலோசனைப்படி மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இன்னும் பல சீர்திருத்தங்கள் இந்தத் துறையிலே கொண்டு வருவதற்கு நாம் இருக்கின்றோம் என்பதை மட்டும், நான் தெரிவித்து இதிலே குறிப்பாக, தமிழ்நாட்டிலே தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கியமான காரணம், இங்கே இருக்கின்ற தாராள தொழில் மையக் கொள்கைகள் தான்.

முக்கியமாகச் சொல்லப் போனால், இங்கே திறந்த வெளி, டிரான்ஸ்பெரண்ட் இந்தியத் திருநாட்டிலேயே தமிழகத்தில்தான் தொழில் தொடங்குவதற்கு, விரும்புகிறார்கள். அந்த அளவிற்கு எந்தப் பிரதிபலனும் எதிர்பார்க்காமல் அரசே முன்வந்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகள் அத்தனையும் செய்கின்ற ஒரே மாநிலம், இந்தியத் திருநாட்டிலே தமிழகம்தான். அது கலைஞர் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## பால்வளத்துறை...

நமது தலைவர் கலைஞர் அவர்களால் பெயர் சூட்டப்பட்டு, தமிழகத்தில் உள்ள அனைத்து தரப்பு நுகர்வோர் நாவின் சுவை கூட்டிடும் சொல்லாக "ஆவின்" திகழ்கிறது.

கால்நடைகளுக்குச் செயற்கை கருவூட்டல், கிராம அளவில் தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் மூலம் செய்யப்படுகிறது. 1999–2000–ஆம் ஆண்டில் உறைவிந்து மூலம் 10.55 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த நிதியாண்டில், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் நடமாடும் கால்நடை சிகிச்சைப் பிரிவிலுள்ள நல்ல தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் மூலம் 8.80 இலட்சம் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

செயற்கை கருவூட்டலின் பயனாகக் கடந்த நிதியாண்டில் 1 இலட்சத்து 13 ஆயிரத்து 446 வீரியமுள்ள கிடாரிக்கன்றுகள் பிறந்துள்ளன. உதகமண்டலத்திலுள்ள கருவூல ஜெர்சி பொலிகாளைப் பண்ணையிலுள்ள உறைவிந்து நிலையத்திலும், ஈரோட்டிலுள்ள எருமை இன பொலிகாளை உறைவிந்து நிலையத்திலும், உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப் படுகின்றன. கடந்த ஆண்டு 14 இலட்சத்து 60 ஆயிரம் உறை விந்து குச்சிகள் தயாரிக்கப் பட்டுள்ளது.

**கறவை மாடுகளுக்கான மானியம் உயர்வு**

ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் நலத்துறை மற்றும் தாட்கோ நிறுவனம் மூலம் வழங்கப்படும் கறவை மாடுகளுக்கான மானியம் 3 ஆயிரம் ரூபாயிலிருந்து 4 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.




மேலும், பகுதி 1 திட்டத்தின் கீழ் மாதவரம் பால் பண்ணை வளாகத்தில் அமைந்துள்ள கட்டடங்களைப் பராமரித்தல் மற்றும் பழுது பார்த்தல், சாலைகளைச் செப்பனிடுதல் மற்றும் பழுது பார்த்தல் ஆகிய பணிகளுக்காக ரூபாய்5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருத்தில் கொண்டு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு நடப்பு நிதியாண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் அலுமினியம் பால் கொள்கலன்களும், 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் பால் தரம் அளக்கும் கருவிகளும், 3.5 இலட்சம் ரூபாய் செலவில் கணிப்பொறியுடன் கூடிய பால் சேகரிக்கும் நிலையங்களும், 10 இலட்சம் ரூபாய் செலவில் திரவ நைட்ரஜன் குடுவைகளும் வாங்கித் தரப்படும்.

மேலும் ஒரு கறவை மாடு வாங்குவதற்காக மானியத்துடன் கூடிய கடன் தொகை ஆறாயிரம் ரூபாயிலிருந்து 12 ஆயிரமாக கடந்த நிதியாண்டு முதல் வாங்கப்பட்டு வருகிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பால் கொள்முதலில் சாதனை**

பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு 7 ரூபாய் 51 காசிலிருந்து 9 ரூபாயாக நியாயமான முறையில் உயர்த்தி வழங்கியதன் காரணமாக கடந்த 18 ஆண்டு கால பால்வளத் துறையின் வரலாற்றில் மைல்கல்லாக கடந்த நிதியாண்டில் நாளொன்றுக்குச் சராசரியாக 16 இலட்சத்து 65 ஆயிரம் லிட்டர் என்ற அளவில் பால் கொள்முதல் செய்து சாதனைப் படைக்கப் பட்டுள்ளது.

**அறிவிப்புகள்**

திண்டுக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு புதிதாக பால் பண்ணை அமைக்கவும், பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும், மத்திய அரசிடம் இருந்து 8.86 கோடி ரூபாய் 100 சதவீத மானியமாக பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த நிதியாண்டில் பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை 1992–ன் கீழ் மத்திய அரசின் 100 சதவீத மானியத்தில், 69 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் மாதவரத்தில் சிறப்பு ஆணையரின் கட்டுப்பாட்டில் ஓர் மத்திய தரக்கட்டுப்பாடு ஆய்வகம் அமைக்கப்பட உள்ளது.

நடப்பு நிதியாண்டில் ஆதி–திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த ஆயிரம் பால் உற்பத்தியாளர்களுக்கு 2 ஆயிரம்




கறவை மாடுகள் 80 இலட்சம் ரூபாய் மான்யத்துடன் வாங்கித் தரப்படும்.

கலப்பினக் கன்று வளர்ப்புத் திட்டத்தின் கீழ் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடையும் வகையில் மைய அரசின் நிதியுதவியின் கீழ், கால் நடைகளின் தரத்தை உயர்த்துவதற்காக, கன்று வளர்ப்புத் திட்டத்திற்கு சுமார் 1350 நபர்கள் பயன் பெறும் வகையில் ஒரு கன்றுக்கு 12 ஆயிரத்து 420 ரூபாய் வீதம் 1 கோடியே 67 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் கடனுதவி வழங்கப்பட உள்ளது. ★



# இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு



ஒரு சமுதாயத்தின் வலிமை, அச்சமுதாய மக்களின் மன ரீதியான நலத்தையும், உடல் ரீதியான வலிமையையும் பொறுத்துள்ளது. அறிவு, சக்தியாயின், உடல்வலிமை சொத்தாகும். ஒருவரின் ஆளுமை முழுமையான வளர்ச்சி பெறுவதற்கு விளையாட்டு அத்தியாவசியமானது. விளையாட்டு, ஒருங்கிணைந்து செயல் படுவதன் முக்கியத்துவத்தையும், நேர்மை யாகச் செயல்படும் பக்குவத்தையும் கற்றுத் தருவதுடன், வெற்றியையும், தோல்வி யையும் சமமாக ஏற்றுக்கொள்ளக் கூடிய மனத் திண்மையையும் அளிக்கிறது. தனி நபர் உறுதியுடன் முயற்சி செய்யவும், தன்னிலை இழக்காமல் தேடல் உணர்வுடனும் வளர்ச்சியடைய விளை யாட்டு உதவுகிறது.

மாணவர் சமுதாயத்தில், நன்னடத்தையை வளர்ப்பதையும், சேவை மனப்பான்மையை மேம்படுத்துவதையும் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு தற்போது தேசிய மாணவர் படை, சாரணர், சாரணியர் மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் ஆகியவை





இயங்குகின்றன. மைய அரசைச் சார்ந்த 'நேரு யுவகேந்திரா சங்கேதன்' [இளைஞர் மன்றம்] பணிகளைத் தவிர, மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்காக இருக்கின்ற மாணவரல்லாத இளைஞர் சமுதாயத்தை மேம்படுத்துகின்ற குறிக்கோளுடன் செயல்பட வேறு அமைப்புகள் இல்லை. மைய அரசாலும், மாநில அரசாலும் அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பல திட்டங்களை, மாணவரல்லாத இளைஞர்கள் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் சீரிய முறையில் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தினால், அவர்களை ஆக்கபூர்வமான சக்தியாக உருவாக்க முடியும்.

## இளைஞர்களுக்கெனப் புதிய துறை

விளையாட்டின் முக்கியத்துவத்தையும் இளைஞர்களின் ஆற்றலையும் அங்கீகரிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 2000-2001ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரையின்போது 'இளைஞர்கள் நலன் மற்றும். விளையாட்டு மேம்பாட்டுத் துறை' என்ற புதிய துறையை உருவாக்க அறிவித்துள்ளார். இதுகாறும், விளையாட்டு மற்றும் சாரண சாரணியர் துறை, பள்ளிக் கல்வித் துறையின் கீழும், தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் உயர்கல்வித் துறையின் கீழும் செயல்பட்டு வந்தன. மாணவரல்லாத சமுதாயத்தினருடைய நலன் கருதி, செயல்படுவதற்குக் குறிப்பாகத் தனித்துறை இல்லை. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை இனிமேல் விளையாட்டு, சாரண சாரணியர், தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் கிராமப்புற, நகர்ப்புற மாணவரல்லாத சமுதாயத்தினருக்கான நலத்திட்டங்கள் ஆகியவற்றிற்கான பணிகளை மேற்கொள்ளும்.

## குறிக்கோள்களும், இலக்குகளும்

இத்துறையின் முக்கியக் குறிக்கோள்கள் :

1. மாவட்டத் தலைநகரங்களில், பள்ளி மற்றும் கல்லூரிகளில் விளையாட்டிற்கான விளையாட்டு அரங்க மற்றும் ஆடுகள வசதிகளை உருவாக்குதல்.
2. அனைத்து ஊராட்சிகள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ளரங்க விளையாட்டுகள், சிறு ஆடுகள விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சி செய்வதற்கான வசதிகளுடன் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குமையங்களை பொதுமக்களுக்காக உருவாக்குதல்.
3. திறமைமிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிவாகை பெறச் செய்தல்.
4. தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விருதுகளும், பல்வேறு ஊக்க உதவிச் சலுகைகளும் வழங்குதல்.
5. மேல்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு நம்பிக்கையூட்டும் எதிர் காலத்திற்கான வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழில் ஆகியவற்றிற்கு ஆலோசனைகள் வழங்குதல்.
6. மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களிடையே சாகசச் செயல்கள் செய்ய ஆர்வத்தையும், உடற்பயிற்சி செய்ய ஆவலையும் ஊக்குவித்தல்; போக்குவரத்து விதிகள், முதலுதவி, சுகாதாரம், துப்புரவு, சமச்சீர் உணவு, பண்பு நலன்கள் ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
7. மாணவரல்லாத சமுதாயத்தினரிடையே அறிவியல் முனைப்பு, சமுதாய நல்லிணக்கம் மற்றும் சேவை மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்திடல்.
8. அனைத்துக் கிராமங்களிலும் மற்றும் நகர்ப்புறங்களிலும் இளைஞர் மன்றங்கள்/சங்கங்கள்/சுயஉதவிக் குழுக்கள் அமைப்பதும், அவற்றின் மூலம் தொண்டர் படையை உருவாக்கி மக்களிடையே 'நமக்கு நாமே' என்ற கொள்கையின்மீது பிடிப்பும், அதனால் கல்வியறிவு, அறிவியல் முனைப்பு, சமுதாய நல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றை மேம்படுத்துதல் மற்றும் நமது பாரம்பரியப் பண்பாடு மீது பெருமை கொள்ளச் செய்தல்.
9. விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலன் வளர்ச்சியின் நோக்கத்தில் மைய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களைச் செயல்படுத்துதல்.



10. பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், இளைஞர் விழாக்கள் மற்றும் கண் காட்சிகள் நடத்தி இளைஞர்களிடம் எழுச்சியையும் உத்வேகத்தையும் மலரச் செய்தல்.

தமிழ்நாடு கடந்த ஆண்டுகளில் குழுப் போட்டிகளிலும், தனித்திறன் போட்டிகளிலும், தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் முன்னிலை வகித்து வருகிறது. இது தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டுக் கட்டமைப்பு, பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊக்க உதவித் தொகை ஆகியவற்றால் ஏற்பட்டது.

மாநிலத்தில் விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலன்களை மேம்படுத்துவதற்குத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் கண்காணிப்பு அமைப்பாக உள்ளது. தமிழக அரசு 1997ஆம் ஆண்டு 10 கோடி ரூபாய் அளவிற்கு நிதி திரட்ட விளையாட்டு மேம்பாட்டு நிதி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. அரசு, ஒரு கோடி ரூபாயை இந்த மைய நிதிக்குத் துவக்க நிதியாக வழங்கியது. இந்த நிதியில் 50 விழுக்காடு அளவு ஆதரவாளர்கள் நன்கொடை மூலமும், தாராள மனப்பான்மை கொண்ட புரவலர்கள் மூலமும் திரட்டப்படும். இந்த மைய நிதியின் மூலம் கிடைக்கப் பெறுகின்ற வட்டித் தொகையானது மாவட்ட மற்றும் மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு நிதியுதவியும் மற்றும் தற்போதுள்ள விளையாட்டுக் கட்டமைப்பு வளாகங்களைப் பராமரிக்கவும் பயன்படுத்தப்படும்.

நாட்டு நலப்பணித் திட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பாளராக உறுப்பினர்-செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அவர்கள் 1996ஆம் ஆண்டு நாட்டு நலப்பணித் திட்டம் கல்லூரிக்கல்வி இயக்ககத்திற்கு மாற்றப்படும்வரை இருந்தார்.

## ஊரக விளையாட்டு மையங்கள்

385 ஊரக விளையாட்டு மையங்கள் [ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று], போதிய விளையாட்டு வசதியைக் கொண்ட பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ளன. அப்பள்ளிகள், அருகில் உள்ள பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் மற்றும் மாணவரல்லாதவர்கள் பள்ளியில் இருக்கும் விளையாட்டு வசதிகளை உபயோகப்படுத்திக் கொள்ளவும், பள்ளி மைதானத்தில் போட்டிகளை நடத்தவும், பொது ஆடுகளமாக பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதி வழங்க விருப்பமுடைய பள்ளிகளாக இருத்தல் வேண்டும். ஒரு மையத்திற்கு ரூ.10,000 மதிப்பிலான விளையாட்டுக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

1999-2000ஆம் ஆண்டில் 100 ஊராட்சி ஒன்றியங்களில் மேலும் 100 இரண்டாவது ஊரக விளையாட்டு மையங்கள் மாற்றுப் போட்டிகளை நடத்தும் போது ஆடுகளமாக இருக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 285 ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டாவது ஊரக விளையாட்டு மையங்கள் படிப்படியாக ஏற்படுத்தப்படும்.

## ஊராட்சி மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் மாணவரல்லாத இளைஞர்களுக்கு விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு மையங்களை ஏற்படுத்துதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2000-2001ஆம் ஆண்டு நிதிநிலையறிக்கையின்போது - விளையாட்டு வசதிகள், உடற்பயிற்சி செய்ய வசதிகள் தற்போது பள்ளிகளில் உள்ளதென்றும், மொத்த மக்கள் தொகையில் 35 விழுக்காடு அளவிற்கு உள்ள மாணவரல்லாத இளைஞர்கள் மேற்கூறிய வசதிகளைப் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். அவர்களை, தீய பழக்க வழக்கங்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டும், அவர்களுடைய ஓய்வு நேரத்தைச் செவ்வனே செலவிட விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு மையங்களை அனைத்து ஊராட்சிகளிலும் நகர்ப்புறப் பகுதிகளிலும் படிப்படியாக ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மையமும் கீழ்க்கண்ட வசதிகளை கொண்டதாக இருக்கும்.



1. நீளம் தாண்டுதல், மும்முனை தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதல் பயிற்சிக்கான மணற்குழி [10 X 2.5 மீ. X .5 மீ].
2. இணைக்கம்பம், நேர்க்கம்பம், பளுதூக்குதல், கர்லாக் கட்டையுடன் கூடிய வசதிகளைக் கொண்ட திறந்தவெளி உடற்பயிற்சி மையம்.
3. சிறிய இடவசதி கொண்ட விளையாட்டுக்களான கையுந்துப்பந்து, பூப்பந்து, வளையப்பந்து மற்றும் கபடி



போன்ற விளையாட்டு வசதிகளை அமைத்துத் தருதல்.

4. உள்விளையாட்டுக்களான கேரம் மற்றும் சதுரங்கம் ஒவ்வொரு மையத்திற்கும் செலவு ரூ.25,000 ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2000-2001ஆம் ஆண்டில் 5000 விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு மையங்களைத் தோற்றுவிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

### கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள முட்டுக்காட்டில் நீர்சாகச விளையாட்டு வளாகம் ஏற்படுத்துதல்

காஞ்சிபுரம் மாவட்டம், முகத்துவார கிராமமான முட்டுக்காட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மகிழ்ச்சியைத் தரக்கூடிய படகு சவாரியை நடத்திவருகிறது. இந்திய விளையாட்டுக் குழுமத்தின் சார்பில் நடத்தப்பட்ட ஆய்வு அறிக்கையில், தரமான நீர்சாகச விளையாட்டு வளாகம் ஏற்படுத்த வசதிகளைக் கொண்டது எனக் கூறப்பட்டுள்ளது. இவ்விடம் சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் இடையில் இந்திய மற்றும் அயல்நாட்டுச் சுற்றுலா பயணிகள் பயன்படுத்தக் கூடிய நீர் சாகச விளையாட்டு வளாகம் அமைய வாய்ப்புள்ளது. இந்த மையம் புகழ்பெற்ற மையமாக மாறினால், நமது உள்நாட்டுப் பொருளாதாரம் வளர்ச்சியடையும்.

தமிழ்நாடு அரசு, முட்டுக்காட்டில் அயலார் துணையுடன் நிலையானதொரு பன்னாட்டு நீச்சல் விளையாட்டு வளாகம் அமைக்கத் தேவையான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

### விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகள்

நம் மாநிலத்தில் மூன்று விளையாட்டுப் பள்ளிகளையும், நான்கு விளையாட்டு விடுதிகளையும் அரசு ஏற்படுத்தியுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் 8ஆம் வகுப்பிலும் அல்லது 11ஆவது வகுப்பிலும் சேர்க்கப்பட்டு, அவர்கள் படிப்பைத் தொடரும் காலத்தில், அவர்களுக்கு முறையே மூன்று அல்லது இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு விளையாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு, அரசு, உணவிற்காகவும், மற்ற தலைப்பிலும் கீழ்க்கண்டவாறு மானியம் அளிக்கிறது:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | - | 710 |
| மாதம் ஒன்றிற்கு ஒரு மாணவனுக்கு வழங்கப்படுகின்ற உணவிற்கான தொகை [10 மாதங்களுக்கு மட்டும்] | | ரூ.600 |
| சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவனுக்கு | | ரூ.700 |
| ஆண்டுக்கு ஒரு முறை ஒரு மாணவனுக்கு உண்டான விளையாட்டுப் பொருட்கள் வாங்க, படி | - | ரூ.250 |

### ஒரு மாணவனுக்கு ஒரு ஆண்டிற்கு வழங்கப்படுகின்ற பணித்தொகை

| | | |
|---|---|---|
| அ. விளையாட்டுப் பள்ளி | - | ரூ.400 |
| ஆ. விளையாட்டு விடுதி | - | ரூ.300 |

### சிறப்பு விளையாட்டு விடுதி

கல்லூரி செல்லும் மாணவர்களுக்கென ஒரு சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1. தடகளம்
2. கூடைப்பந்து
3. குத்துச்சண்டை
4. நீச்சல் மற்றும்
5. கையுந்து பந்து

இந்த விடுதி, தேசிய அளவில் பல விளையாட்டு வீரர்களைத் தந்துள்ளது.

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | - | 50 |
| மாணவர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கான உணவிற்கான தொகை [10 மாதத்திற்கு] | - | ரூ.1200 |
| சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவருக்கு ஆண்டு ஒன்றுக்கு | - | ரூ.1650 |
| ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு படிப்புக் கட்டணம் | - | ரூ.1500 |

### வேலூர் சத்துவாச்சாரியில் பளுதூக்கும் விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்

வேலூருக்கு அருகிலுள்ள சத்துவாச்சாரியை இருப்பிடமாகக் கொண்ட பளுதூக்கும் விளையாட்டு வீரர்கள் நாட்டிற்காகவும், மாநிலத்திற்காகவும், பதக்கங்களையும், புகழினையும் பெற்றுத் தந்துள்ள காரணத்தினால் 1-8-97 முதல் அங்கு பளுதூக்கும் விளையாட்டில் சிறப்பு மேம்பாட்டு மையம் ரூ.11.87 இலட்சம் மொத்த மதிப்பீட்டில் நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த பயிற்சியாளரால் 30 விளையாட்டு வீரர்களுக்கு [மாணவர் மற்றும் மாணவரல்லாதோர்] பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த மையத்தை மேலும் விரிவுபடுத்தி அங்கு பளுதூக்கும் விளையாட்டு வீராங்கனைகளுக்கென ஒரு விடுதியை நிறுவ இந்திய விளையாட்டுக் குழுமத்திடம் நிதி கோரப்பட்டுள்ளது. ஒரு ஆண்டில் 300 நாட்களுக்கு அங்கு பயிற்சி பெறுகின்றவர்களுக்கு நாள் ஒன்றுக்கு சிற்றுண்டி தொகையாக ரூ.10-ம் மற்றும் அவர்கள் வீட்டிலிருந்து மையத்திற்கு வந்துபோக, போக்குவரத்துத் தொகையாக ரூ.10-ம் வழங்கப்படுகிறது.

ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு விளையாட்டு உபகரணப் படியாக ரூ.1890 வழங்கப்படுகிறது. இதற்காக ரூ.3.53 இலட்சம் ஆண்டொன்றுக்கு தொடர் செலவினமாக ஏற்படுகிறது.

### கோவையில் கூடைப்பந்து விளையாட்டிற்கெனச் சிறப்பு மேம்பாட்டு மையம்

கோயம்புத்தூரில் கூடைப்பந்து விளையாட்டு பிரபலமான விளையாட்டாகும். கோவை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து 20 வயதுக்குட்பட்ட மாணவர்களின் திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க 1-8-97 முதல் விளையாட்டு மேம்பாட்டு மையம் ரூ.6.30 இலட்சம் செலவில் ஆரம்பிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் கோவை நேரு விளையாட்டரங்கிற்குத் தினந்தோறும் பயிற்சி பெற வருகின்றார்கள். அவர்களுக்கு விளையாட்டு உபகரணப் படியாக ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு ரூ.3,200-ம், வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து செல்வதற்கு, போக்குவரத்துச் செலவினமாக தினம் ஒன்றிற்கு ரூ.10-ம் மற்றும் ஒரு மாணவனுக்குச் சிற்றுண்டிச் செலவிற்காக நாள் ஒன்றிற்கு ரூ.10-ம் ஆண்டுதோறும் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது. இதற்காக ஆண்டொன்றுக்குத் தொடர் செலவினம் ரூ.3.55 இலட்சம் ஆகும்.

### திருநெல்வேலியில் வளைகோல்பந்து விளையாட்டிற்கு என சிறப்பு மேம்பாட்டு மையம்

திருநெல்வேலி அதிக அளவில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் வளைகோல்பந்து விளையாட்டு வீரர்களை வழங்கியுள்ளதால், அங்கு வளைகோல்பந்து விளையாட்டிற்கு என சிறப்பு மேம்பாட்டு மையம் 1-8-97 முதல் ரூ.5.30 இலட்சம் தொடர் செலவினத்தில் செயல்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த பயிற்றுநர்களால் 30 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ.3600 விளையாட்டு உபகரணப் படியாக வழங்கப்படுகிறது. ஆண்டொன்றில்



300 நாட்களுக்கு, வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து போக போக்குவரத்திற்காக நாளொன்றுக்கு ரூ.10-ம் மற்றும் சிற்றுண்டிச் செலவினத்திற்காக நாளொன்றிற்கு ஒரு விளையாட்டு மாணவனுக்கு ரூ.10-ம் வழங்கப்பட்டு வருகிறது.

### தனியார் கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள்

விளையாட்டுத் துறையில் தங்களுக்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டுகளில் தகுதிகளைப் பெற்ற தனியார் கல்லூரிகள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. அந்தக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் குறிப்பிட்ட தகுதிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு இணை விளையாட்டு மேம்பாட்டு

மையங்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு உணவுத் தொகை செலவினமாக ரூ.600-ம் ஆண்டொன்றுக்கு ஒரு மாணவனுக்கு விளையாட்டு உபகரணப்படி ரூ.500-ம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட செலவினத் தொகை ரூ.8.98 இலட்சமாகும்.

### மாவட்ட அளவிலான கோடைகாலப் பயிற்சி முகாம்கள்

ஒவ்வோராண்டும் மாவட்டத் தலைநகரங்களில் 16 வயதிற்குட்பட்ட மாணவர் மற்றும் மாணவரல்லாத ஆண், பெண் இருபாலாருக்கும் மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் - தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து மற்றும் கையுந்து பந்து விளையாட்டுக்களில் நடத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு ரூ.1.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### மாநில அளவிலான கோடைகாலப் பயிற்சி முகாம்

கோடைகாலத்தில் ஒவ்வோராண்டும், தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து மற்றும் கையுந்து பந்து விளையாட்டுப் பிரிவுகளில் குடியரசுதின



விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பிடங்களைப் பெற்ற 16 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியருக்கு தங்கும் வசதியுடன் கூடிய 21 நாட்களைக் கொண்ட மாநில அளவிலான கோடைகாலப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகின்றது. சுழற்சிமுறையில், இந்தப் பயிற்சி முகாம் ஒவ்வோராண்டும் ஒரு மாவட்டத் தலைநகரத்தில் நடத்தப்படுகின்றது. 2000ஆம் ஆண்டிற்கான கோடைகாலப் பயிற்சி முகாம் புதுக்கோட்டையில் நடத்தப்படவுள்ளது. இதற்கு ரூ.2.99 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 14 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கென சிறப்புப் பயிற்சி முகாம்கள்

ஒவ்வோராண்டும் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்து பந்து மற்றும் நீச்சல் விளையாட்டுக்களில் 14 வயதிற்குட்பட்ட ஆண் மற்றும் பெண்பாலாருக்கென நடத்தப்படுகின்ற இளமையில் தெரிந்தெடுக்கும் விளையாட்டுப் போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற திறமைமிக்க விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு 1999-2000ஆம் ஆண்டுமுதல், சிறப்புப் பயிற்சி முகாம்களை நடத்த தமிழக அரசு ஒப்புதலளித்துள்ளது. ஒலிம்பியன்/சர்வதேச விளையாட்டு வீரர், மாநில விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள், பயிற்றுநர்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்களைக் கொண்ட தேர்வுக்குழு திறமைமிக்க விளையாட்டு வீரர்களை இப்பயிற்சி முகாமிற்குத் தேர்வு செய்கிறது. 165 மாணவ, மாணவியர் [கால்பந்து விளையாட்டில் 15 மாணவர் மற்ற 5 விளையாட்டுப் பிரிவுகளில் ஒவ்வொரு விளையாட்டிலும் 15 மாணவர் மற்றும் 15 மாணவியர்] இந்த சிறப்புப் பயிற்சி முகாமில் பயிற்றுவிக்கப் படுவார்கள். இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.5 இலட்சமாகும்.

இந்தப் பயிற்சி முகாம் மூன்று கட்டமாக நடத்தப்படுகின்றது. ஒவ்வொரு கட்டப் பயிற்சி முகாமின் கால அளவு 21 நாட்களாகும். முதற்கட்டப் பயிற்சி முகாம், 1999 நவம்பர் மாதத்தில், சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடத்தப்பட்டது. இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட பயிற்சி முகாம்கள் 2000ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடத்தப்படவுள்ளது.

### மாநில விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறுவோருக்கு சிறப்புப் பயிற்சி முகாம்கள்

மாநில விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களைப் பெறுகின்ற மாணவர்கள் மற்றும் மாணவரல்லாத விளையாட்டு வீரர்களுக்கு 21 நாட்கள் கால அளவைக் கொண்ட சிறப்பு விளையாட்டுப் பயிற்சி முகாம்கள் 157 விளையாட்டு வீரர்களுக்குக் கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் 1999-2000ஆம் ஆண்டு முதல் நடத்தப்படவுள்ளது.

1. தடகளம் [25 மாணவர்கள் மற்றும் 25 மாணவியர்கள்]
2. கால்பந்து [16 மாணவர்கள் மற்றும் 16 மாணவியர்கள்]
3. வளைகோல்பந்து [16 மாணவர்கள் மற்றும் 16 மாணவியர்கள்]
4. கூடைப்பந்து [12 மாணவர்கள் மற்றும் 12 மாணவியர்கள்]
5. கையுந்து பந்து [12 மாணவர்கள் மற்றும் 12 மாணவியர்கள்]



இத்தகைய பயிற்சி முகாமிற்கான முதல் பயிற்சி முகாம் சென்னையில் மே-2000 மாதத்தில் நடத்தப்படவுள்ளது. இதற்காக நிதிஒதுக்கீடு ரூ.2.70 இலட்சமாகும்.

### பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறுபவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி முகாம்கள்

1999-2000ஆம் ஆண்டு முதல், பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களைப் பெறுகின்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு 21 நாட்கள் கால அளவு கொண்ட சிறப்புப் பயிற்சி முகாம்கள் மொத்தம் 157 மாணவர்களுக்குக் கீழ்க்கண்ட விளையாட்டுப் பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது.

1. தடகளம் [25 மாணவர்கள் மற்றும் 25 மாணவியர்கள்]
2. கால்பந்து [16 மாணவர்கள் மற்றும் 16 மாணவியர்கள்]
3. வளைகோல்பந்து [16 மாணவர்கள் மற்றும் 16 மாணவியர்கள்]
4. கூடைப்பந்து [12 மாணவர்கள் மற்றும் 12 மாணவியர்கள்]
5. கையுந்து பந்து [12 மாணவர்கள் மற்றும் 12 மாணவியர்கள்]

இத்தகைய பயிற்சி முகாமிற்கான முதல் பயிற்சி முகாம் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில், மே-2000 மாதத்தில் நடத்தப்படவுள்ளது. இதற்காக நிதி ஒதுக்கீடு ரூ.2.70 இலட்சமாகும்.

### இந்திய விளையாட்டுக் குழுமத்தின் விளையாட்டுப் பயிற்சி மையங்கள்

இந்திய விளையாட்டுக் குழுமம் கீழ்க்கண்ட இடங்களில் விளையாட்டுப் பயிற்சி மையங்களை நிறுவியுள்ளது.

1. ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை- வளைகோல்பந்து விளையாட்டுப் பிரிவில் 27 மாணவர் மற்றும் கால்பந்து விளையாட்டுப் பிரிவில் 25 மாணவர்.
2. நேரு பூங்கா விளையாட்டு வளாகம், சென்னை- வளைகோல்பந்து விளையாட்டுப் பிரிவில் 23 மாணவியர் மற்றும் கையுந்து பந்து விளையாட்டுப் பிரிவில் 13 மாணவியர்.
3. சேலம் மகாத்மா காந்தி விளையாட்டரங்கம் - கூடைப்பந்து விளையாட்டுப் பிரிவில் 3 மாணவர், கையுந்து பந்து விளையாட்டுப் பிரிவில் 16 மாணவர் மற்றும் தடகள விளையாட்டுப் பிரிவில் 21 மாணவர்.
4. மாநில அரசு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்குவதற்கான இடவசதியும், பயிற்சி பெறுவதற்கான விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரவும், இந்திய விளையாட்டுக் குழுமம் பயிற்றுநர்களை அமர்த்தியும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ-மாணவியர்க்கு இலவச உணவு மற்றும் விளையாட்டுப் பொருட்களை வழங்கியும், பயிற்சியும் அளித்து வருகின்றன. இந்திய விளையாட்டுக் குழுமம் இத்திட்டத்திற்கான விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுக்கின்றது.

### மாவட்டங்களில் கிரிக்கெட் விளையாட்டினை ஊக்குவித்தல்

கிரிக்கெட் மிகவும் பிரபலமான விளையாட்டாகும். அவ்விளையாட்டைப் பொறுத்தமட்டில், பயிற்சி முகாம்களையும், விளையாட்டுப் போட்டிகளையும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் நடத்தி வருகின்றது. இந்திய விளையாட்டுக் குழுமத்தைச் சார்ந்த ஒரு கிரிக்கெட் பயிற்றுநர் சென்னையில் பணிபுரிந்து வருகின்றார். மேலும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச் சேர்ந்த ஒரு கிரிக்கெட் பயிற்றுநர் கடலூரில் பணிபுரிந்து வருகின்றார். மற்ற மாவட்டங்களில் பயிற்சி பெற்ற கிரிக்கெட் பயிற்றுநர்கள் இல்லை. எனவே, தேவையைக் கருதி, கிரிக்கெட் விளையாட்டில் சிறந்து விளங்கிய முன்னாள் கிரிக்கெட் விளையாட்டு வீரர்களின் பணிகளைப் பகுதிநேரப் பயிற்றுநர் பணிக்கு மாவட்டங்களில் உபயோகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### விளையாட்டு மருத்துவ மையம்

விளையாட்டுத் துறையில் விளையாட்டு மருத்துவத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் விளையாட்டு மருத்துவ மையத்தைத் தொடங்கிட முடிவெடுக்கப்பட்டுள்ளது. விளையாட்டு மருத்துவத்தில் சிறப்பான தேர்ச்சி பெற்ற மருத்துவர், உடற்கட்டு



பயிற்சியாளர் மற்றும் பயிற்றுநர் ஆகியோர் ஒருங்கிணைந்து செயல்பட்டு தனிநபர் விளையாட்டு வீரரின் திறமைகளை விஞ்ஞானரீதியாக ஆராய்ந்து, அந்த விளையாட்டு வீரர்கள் உயர்மட்ட அளவில் சாதனைகள் பல புரிய அவர்களுக்குத் தேவையான பயிற்சித் திட்டங்களை வகுத்துத் தருவார்கள்.

### விளையாட்டு மேம்பாட்டிற்கான தொலைநோக்குத் திட்டம்

2020ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்கு விளையாட்டுத் துறையில் மேம்பாடுகளைச் செய்ய விளையாட்டு மேம்பாட்டிற்கான தொலைநோக்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில், தமிழ்நாட்டில் விளையாட்டுப் போட்டிகளை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ.1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் :

### மாநில விளையாட்டுப் போட்டிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாநில விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படவேண்டுமென்ற கருத்தினை முன்வைத்து அதனை இந்திய சுதந்திரதின பொன்விழாவின் கொண்டாட்டங்களும் இணைந்து நடத்திட அறிவுறுத்தியதன் பேரில் மாநில விளையாட்டுப் போட்டியின் துவக்கவிழா நடத்தப்பட்டது. அதற்காக நிதி ஒதுக்கீடு ரூ.20 இலட்சம் வழங்கப்பட்டது. மாநில விளையாட்டுப் போட்டிகள் கீழ்க்கண்ட 14 விளையாட்டுகளில் நடத்தப்பட்டு வருகின்றன. 1. தடகளம் 2. டிரையத்லான் 3. சிறகுபந்து 4. நீச்சல் 5.டென்னிஸ் 6. மேசைப்பந்து 7. பளுதூக்குதல் 8. சிலம்பம் 9. கூடைப்பந்து 10. கால்பந்து, 11. வளைகோல்பந்து, 12. கபடி, 13. கோ-கோ மற்றும் 14. கையுந்துபந்து. மேற்கண்ட விளையாட்டுகளில் மாணவ மாணவியர், மாணவரல்லாதோர் பெருமளவில் கலந்து கொள்கின்றனர்.

### மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களுக்கான ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவிலான ஊரக விளையாட்டுப் போட்டிகள்

கிராமப்புற இளைஞர்களிடையே போட்டி மனப்பான்மையையும், போராடும் ஆற்றலையும் வளர்க்கும் பொருட்டு ஒன்றிய அளவிலான ஊரக விளையாட்டுப் போட்டிகள் தமிழகத்திலுள்ள அனைத்து 385 ஒன்றியங்களில் ரூ.7.50 இலட்சம் செலவில் தடகளத்திலும் [5 போட்டிகள்] மற்றும் அந்த ஒன்றியத்தில் பிரபலமான ஏதாவது மூன்று விளையாட்டுகளிலும் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஊரக விளையாட்டு மையங்கள் இப்போட்டிகளை நடத்துவதற்கான இடமாக உள்ளது. இதே போன்று, ஊரக விளையாட்டு மையங்களுக்கிடையேயான தடகளப் போட்டிகள் மாவட்ட மற்றும் மாநில அளவில் மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.5.44 இலட்சம் செலவில் நடத்தப்படுகின்றன. 2000-2001ஆம் ஆண்டு முதல் தடகள விளையாட்டில் அதிகப் போட்டிகளையும் மற்றும் அதிக குழு போட்டிகளையும், ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவில் விரிவாக நடத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

### தமிழ்நாடு பல்கலைக்கழகங்களிடையேயான விளையாட்டுப் போட்டிகள்

கல்லூரி அளவிலான விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களிடையே தடகளம், கால்பந்து, வளைகோல் பந்து, கூடைப்பந்து, கையுந்துப்பந்து, கபடி, மேசைப்பந்து, டென்னிஸ் மற்றும் பூப்பந்து ஆகிய விளையாட்டுகளில் போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் ரூ.4 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு வருகின்றன.

### விளையாட்டுப் பள்ளி/விளையாட்டு விடுதிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் இதர போட்டிகளில் பங்கேற்றல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் மூன்று விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் நான்கு விளையாட்டு விடுதிகள் இயங்கி வருகின்றன. விளையாட்டுப்பள்ளி / விடுதிகளுக் கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து,



வளைகோல்பந்து மற்றும் கையுந்துப்பந்து ஆகிய விளையாட்டுக்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகளிலிருந்து ஒவ்வொரு விளையாட்டிலும் சிறந்த விளையாட்டு வீரர்களைக் கொண்ட ஒரு அணி தேர்வு செய்யப்பட்டு மாநில விளையாட்டுச் சங்கங்களால் நடத்தப்படும் போட்டிகளில் கலந்துகொள்கிறது. நிதி ஒதுக்கீடு ஆண்டிற்கு ரூ.3.25 இலட்சம்.

### இளமையில் தேர்ந்தெடுத்தல் போட்டிகள்

பள்ளியில் பயிலும் 14 வயதிற்குட்பட்ட மாணவ மாணவியரிடையே உள்ள விளையாட்டுத் திறனைக் கண்டறிய தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இளமையில் தேர்ந்தெடுத்தல் போட்டிகளை ஒவ்வொரு ஆண்டும் ரூ.7 இலட்சம் செலவில் பின்வரும் 6 விளையாட்டுக்களில் நடத்துகிறது. 1. தடகளம் 2. கூடைப்பந்து, 3. கால்பந்து 4. வளைகோல்பந்து 5. நீச்சல் மற்றும் 6. கையுந்துப்பந்து.

### அண்ணா சைக்கிள் போட்டி

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை நினைவுகூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15ஆம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 16 வயதிற்குட்பட்ட சிறுவர் சிறுமியருக்கு தனித்தனியாக மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவிலான சைக்கிள் போட்டி ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் சுற்றுமுறையில் ஒரு மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகிறது. நிதி ஒதுக்கீடு ரூ.1 இலட்சம்.

### சென்னைப் பெருநகர அரசு ஊழியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்

சென்னைப் பெருநகரில் உள்ள அரசு ஊழியர்களுக்கிடையே விளையாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் விளையாட்டுப் போட்டிகள் ஆண்கள் மற்றும் பெண்களுக்காக ஐந்து வெவ்வேறு வயது பிரிவில் பின்வரும் விளையாட்டுத்களில் நடத்தப்பட்டு வருகின்றன. தடகளம், கையுந்து பந்து, பூப்பந்து,மேசைப்பந்து மற்றும் சிறகுப்பந்து. நிதி ஒதுக்கீடு ரூ.25,000.

### அகில இந்திய அரசுப் பணியாளர்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள்

தமிழ்நாட்டைச் சார்ந்த அரசுப் பணியாளர்கள் அணி வெவ்வேறு மாநிலங்களில் சுற்று முறையில் நடத்தப்படும் தேசிய அளவிலான அரசுப் பணியாளர்கள் போட்டியில் பங்கேற்று வருகிறது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.75,000. 1999-2000ஆம் ஆண்டில், தமிழக அணி திருவனந்தபுரத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான கால்பந்து மற்றும் சிறகுப்பந்து போட்டிகளில் பங்கேற்றது.

1999-2000ஆம் ஆண்டில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தேசிய அளவிலான அகில இந்திய அரசுப் பணியாளர்களுக்கிடையேயான டென்னிஸ் போட்டியினை நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கில் ரூ.1.45 இலட்சம் செலவில் நடத்தியது. இதில் தமிழகத்தைச் சார்ந்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் உட்பட 14 மாநிலங்களைச் சார்ந்த வீரர்களும் மத்திய அரசு அதிகாரிகளும் பங்கேற்றனர்.

### அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள்

இந்திய விளையாட்டுக் குழுமம் ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளை ஒன்பது விளையாட்டுகளில் 16 வயதிற்குட்பட்ட சிறுவர் சிறுமியருக்காக நடத்தி வருகிறது. தமிழக அணி தேசிய அளவிலான போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. 1999-2000ஆம் ஆண்டில், தமிழகம் ஒட்டு மொத்த வகையத்திற்கான கோப்பையைப் பெற்றது. நிதி ஒதுக்கீடு ஆண்டிற்கு ரூ.3 இலட்சம்.

### தேசிய மகளிர் விளையாட்டு விழா

இந்திய விளையாட்டுக் குழுமம் மகளிருக்காக வயது வரம்பின்றி 13 விளையாட்டுக்களில் தேசிய மகளிர் விளையாட்டு விழாவை நடத்தி வருகிறது. தமிழக அணி இவ்விழாவில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. நிதி ஒதுக்கீடு ரூ.5 இலட்சம்.

### விளையாட்டு உதவித்தொகைத் திட்டம்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இத்திட்டத்தின்கீழ், 14 விளையாட்டுப் போட்டிகளில் தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு [குறைந்தபட்சம் மாநில அளவில் பதக்கம் பெற்றவர்] உதவித்தொகையாக ஒருமுறை மட்டும் உயர்நிலை/



மேல்நிலைப் பள்ளி மாணவராக இருந்தால் ரூ.5,000-மும், கல்லூரி/பல்கலைக்கழக மாணவராக இருப்பின் ரூ.6,500-ம் ஒரு ஆண்டிற்கு மொத்தத்தில் ரூ.6 இலட்சத்திற்கு மிகாமலும் வழங்கி வருகின்றது.

1998-99ஆம் ஆண்டு, கீழ்க்கண்டவாறு உதவித் தொகைகள் வழங்கப்பட்டன :-

| | |
|---|---|
| உயர்நிலை/மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் | - 39 |
| கல்லூரி/பல்கலைக்கழக மாணவர்கள் | - 55 |

### முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது

பன்னாட்டுப் போட்டிகளில் தமிழகத்திற்கு பெருமை சேர்த்த தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங் கனைகளைக் கௌரவிக்கும் வகையில், தமிழக அரசு ''முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது'' ஒன்றை ஏற்படுத்தி, 2 விளையாட்டு வீரர்கள், 2 விளையாட்டு வீராங்கனை களுக்குத் தலா ரூ.1 இலட்சத்திற்கான ரொக்கப் பரிசினையும், தமிழ்நாடு விளை யாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சின்னம் பொறித்த வெள்ளிக் கேடயம் ஒன்றினையும் பரிசாக வழங்கி வருகின்றது.



### தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றோருக்கு ரொக்கப் பரிசுகள்

மணிப்பூர் மாநிலம், இம்பாலில் 1999ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற ஐந்தாவது தேசிய விளை யாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்றோருக்குத் தங்கம் - ரூ.50,000, வெள்ளி-ரூ.30,000, வெண்கலம் - ரூ.20,000 என்ற வகையில் ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் மொத்தம் 16 தங்கப் பதக்கங்களும், 15 வெள்ளி மற்றும் 17 வெண்கலப் பதக்கங்களும் பெற்றனர். மேற்கண்ட விருதுகளுக்கான மொத்த செலவு ரூ.24.15 இலட்சமாகும்.

### சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்களுக்கு அடுக்குமாடி/ காலிமனை இடங்கள் ஒதுக்கீடு செய்தல்

தமிழ்நாடு அரசு, ஒலிம்பிக்ஸ், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பதக்கம் வென்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் திறமையைப் பாராட்டு முகத்தான், அடுக்குமாடி/காலி மனை இடங்களை ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

| | |
|---|---|
| தங்கப்பதக்கம் | - உயர் வருமானப் பிரிவு அடுக்குமாடி/காலி மனை |
| வெள்ளிப்பதக்கம் | - நடுத்தர வருமானப் பிரிவு அடுக்குமாடி/காலி மனை |
| வெண்கலப் பதக்கம் | - குறைந்த வருமானப் பிரிவு அடுக்குமாடி/காலி மனை |

இதுவரை 13 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் இத் திட்டத்தின் மூலமாகப் பயன் பெற்றுள்ளனர்.

மேற்படி சர்வதேச விளை யாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்கள் பெறும் விளையாட்டு வீரர், வீராங் கனைகளுக்கு அடுக்குமாடி/ காலிமனை ஒதுக்கீடு செய்வதற்குப் பதிலாக உயர் அளவு ரொக்கப் பரிசினை வழங்கி கௌரவிக்கும் ஒரு திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

### சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு மானியம்

தமிழ்நாட்டைச் சார்ந்த தலைசிறந்த விளை யாட்டு வீரர், வீராங் கனைகளுக்கு சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க மைய அரசின் பயணச் செலவின உதவியினைப் பெறாதபட்சத்தில், அவர்கள் ஒவ்வொருவருடைய கோரிக்கையைத் தனித்தனியே ஆராய்ந்து, விமானப் பயணக் கட்டணத்தை அனுமதித்து, தமிழ்நாடு அரசு மானியம் வழங்கும். 1996 97 முதல் இதுவரை இத்திட்டத்தின்கீழ் 29 விளையாட்டு வீரர், வீராங் கனைகள் பயன்பெற்றுள்ளனர்.





### அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு மானியம் வழங்குதல்

அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு தேசிய மற்றும் தென்மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்து வதற்கும் மற்றும் அப்போட்டிகளில் தமிழக அணி கலந்து கொள்வதற்கும் மானியம் வழங்கப்படுகின்றது. 1999-2000ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.16.50 இலட்சம் இம்முறையில் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஓய்வூதியம் வழங்குதல்

தற்போது நலிந்த நிலையிலுள்ள கடந்த காலங்களில் சிறந்து விளங்கிய விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் அவர்களுடைய மாத வருமானம் ரூ.500-க்கு மிகாமலும், 58 வயதைக் கடந்தவராகவும் உள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500 வீதம் [illegible]டைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. இதுவரை 33 நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகள் இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

### திறமையான விளையாட்டு வீரர்களுக்கென பணி ஒதுக்கீடு செய்தல்

திறமையான விளையாட்டு வீரர்களுக்கென பணி ஒதுக்கீடு செய்கையில், கல்வித்துறையின் 5-3-84-ம் நாளிட்ட அரசாணை [நிலை] எண்.244-ன்படி பொது விளம்பரத்தின் மூலம் அரசு பொதுத்துறை நிறுவனங்களில் நியமனம் செய்யப்படும் பணியிடங் களுக்கு மொத்த மதிப்பெண்களில் கூடுதலாக 50 சதவீத மதிப்பெண்கள் [எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களில் அல்லது எழுத்துத் தேர்வு இல்லாத பட்சத்தில், நேர்காணல் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில்] தரலாம் என்று ஆணையிட்டுள்ளது. இந்த அரசாணையைச் செயல்படுத்தும்போது, பல இடையூறுகள் நேர்வதைக் காணலாம்.

பல்கலைக்கழக/மாநில/இந்திய - அளவில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுக் கொண்ட மிகச்சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு, காவல்துறையில் கீழ்க்காணும் பணியிடங்களில் நேரிடை நியமனத்தில் 10 சதவீதம் ஒதுக்கீடு செய்து அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1. காவலர்கள் கிரேடு 2 [ஆண் மற்றும் பெண்]
2. காவல்துறை உதவி ஆய்வாளர் [ஆண் மற்றும் பெண்]
3. காவல்துறை உதவி கண்காணிப்பாளர்

ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய இனங்களுக்குச் செய்யப்படும் ஒதுக்கீடானது தொழிற்கல்விப் பிரிவுகளில் பின்பற்றப் படும் செங்குத்துமுறை (Vertical reservation) போன்று அல்லாமல் சமமான ஒதுக்கீடு (Horizontal reservation) முறையில் இருக்க வேண்டும்.

சீருடை பணியாளர் தேர்வு ஆணையம், தேசிய/ மாநில/பல்கலைக்கழக அல்லது மாவட்ட அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு நேர்காணலில் 10 மதிப்பெண்களுக்கு முறையே 2, 1,½ என்ற விகிதத்தில் மதிப்பெண்கள் அளிக்கிறது. இந்த மதிப்பெண்கள் எழுத்து, நேர்காணல் ஆகிய தேர்வுகளில் எடுத்த மொத்த மதிப்பெண்களைக் காட்டிலும் மிகவும் குறைவாகவே இருக்கின்றது. எனவே, அவ்வாறு காவல்துறையில் தேர்வு செய்யப்பட்டவர்கள் தங்களுடைய எழுத்து மற்றும் நேர்காணல் தேர்வுகளில் எடுத்த மதிப்பெண்களின் அடிப்படையிலேயே தேர்வு செய்யப்பட்டார்களே ஒழிய, அவர்கள் விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் தேர்வு செய்யப்படவில்லை.

மேற்கண்ட 2 அரசாணைகளுக்கு, கல்வி மற்றும் காவல் துறைகளைக் கலந்தாலோசித்தபின், பொதுத் துறை நிறுவனங்களிலும், சீருடைப் பணியாளர்கள் துறையில் அடங்கியுள்ள காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்புத்துறை மற்றும் வனத்துறை போன்ற துறைகளிலும் தொழிற்கல்விப் பிரிவுகளின் அனுமதியைப் போன்று 'விளையாட்டு அடிப்படையில் ஒதுக்கீடு' செய்ய புதிதாக உருவாக்கப்பட்ட இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை தேவையான திருத்தங்கள் கொண்டுவர முயற்சி செய்யும். தவறான வழிமுறைகளைக் கடைப்பிடித்து பணி ஒதுக்கீட்டுக்குத் தேர்வுபெறும் முறையைத் தவிர்க்கும் பொருட்டு, பன்னாட்டுப் போட்டிகளிலும், தேசிய அளவிலான போட்டிகளிலும் கலந்துகொண்ட விளையாட்டு வீரர்களை மேற்கண்ட முறையில் தேர்வு செய்யலாம். ★

# வேலை.... வேலையே வாழ்க்கை

□ கி. ராஜநாராயணன்

தலைக்கோழி கூப்பிட்டதும் வழக்கம்போல முழிப்புத் தட்டியது. தொழுவில் மாடுகளின் மணியோசையும் அவைகள் கூளம் தின்னும்போது காடிப் பலகையின் சத்தமும் கேட்டது.

கெங்கம்மா படுக்கையில் இல்லை; படுக்கையின் கதகதப்பு ஆறி ஜில்லிட்டிருந்தது. அவள் மாடுகளுக்குக் கூளம் போட்டுவிட்டு இந்நேரமெல்லாம் முற்றம் தெளிக்கச் சாணிப்பால் கரைத்துக் கொண்டிருப்பாள். நாகையா புரண்டுபடுத்தார். அடித்துப்போட்டது போல மேலெல்லாம் ஒரு அசதி. போர்த்திக் கொண்டிருந்த கட்டிய வேட்டியைக் காதோடு சேர்த்து முக்காடிட்டுக் கொண்டு ஒருக்களித்துப்படுத்து, கைகளிரண்டையும் தொடை இடுக்கில் சொருகிக் கொண்டு, விட்ட தூக்கத்தைப் பிடிக்க முயன்றார். முற்றம் தெளிக்கும் சத்தம் கேட்டது.

ராத்திரி போட வேண்டிய நாத்துக்கூளத்தை மண்போக நன்றாகத் தட்டியெடுத்து நாகையா வைத்து விடுவார். ரெண்டு தரம் எழுந்து அவர் கூளம் போடமாட்டார்; அதை கெங்கம்மாவே செய்துவிடுவாள். மத்தியில் இவருக்கு ஒருதரம் 'ஒன்னுக்கு' எழுந்திருப்பதே பெரிய காரியம்!

கெங்கம்மா பாத்திரங்களைத் தேய்க்க ஆரம்பித்துவிட்டாள். ரெண்டாங்கோழி கூப்பிட்டது. இனி அவள் தன்னைத் தூங்கவிட மாட்டாள்; எழுந்திருந்துவிட வேண்டியது தான். எழுந்து வேட்டியைக் கட்டிக்கொண்டார். சுருக்கி வைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணெய் லாந்தரைத் தூண்டினார். குழந்தைகள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தன. ரோகிணி வழக்கம் போலப் பாயிலிருந்து உருண்டு விலகிப்போய் தரையில் ஒரு மூலையில் கொடுவாய் வழியத் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளைப் பிரியத்தோடு எடுத்துப் படுக்கையில் படுக்க வைத்தார். தூளியில் கைக்குழந்தையும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது.

பருத்திமார் முடியினால் தொழுவைத் தூத்த ஆரம்பித்தார். தூத்த சாணியை அள்ளிப் பெரிய கூடையில் எடுத்து வைத்தார். அந்தக் கைகளைத் தொழுவின் கல்தூணில் தேய்த்துத் துடைத்துவிட்டு, கோவணத்தை ஒருதரம் இறுக்கிக் கட்டிக் கொண்டு, பழைய கோணிச் சாக்கை நாலாக மடித்துத் தலையில் போட்டுக் கொண்டார். கெங்கம்மா வந்து சாணிக்கூடையைக் கூடப்பிடித்துத் தலையில் தூக்கி விட்டாள்.

தொழுக் குப்பையை எடுத்து முடித்ததும், கண்டாங்கிச் சேலையில் கிழித்த துண்டை வேட்டியின் மேல் இடுப்பில் சுற்றிக் கொண்டு பானையில் நனையப்போட்டு வைத்திருந்த பருத்தி விதையை ஆட்டுரலில் போட்டு ஆட்ட ஆரம்பித்தார். ஆட்டும் போதே 'இந்தப் பருத்தி விதையை ஆட்டுகிறது ஒரு பெரிய பாடு' என்று அவர் மனசு முணங்கிக் கொண்டது. பருத்தி விதையை மிஷினில் கொடுத்துப் பவுடராக்கி வைத்துக் கொண்டு இந்தத் தொல்லைப் படாமல் மாட்டுக்குக் கலக்கிவிட்டால் என்ன என்று நினைத்தார்.

மாடுகளுக்குத் தண்ணீர் காட்ட ஆரம்பித்தார். மனுசர்களில் உள்ளது போலவே மாடுகளிலும் புத்திகெட்டதும் உண்டு! என்ன நொறநாட்டியம் பண்ணுகிறதுகள் இந்த மாடுகள். கலக்கிவிட்டோம் குடிச்சோம் என்று உண்டுமா; சனியன். ஒரு மாடு உப்பைப் போட்டுக் கலக்கிவிட்டால் தான் குடிக்கும். ஒரு மாட்டிற்கு ஊறலோடு காடித்தண்ணீர் விட வேண்டும். ஒரு மாட்டிற்குத் தவிடு. ஒரு மாட்டுக்குத் தனி பருத்தி விதைப் பால். இன்னொரு மாட்டுக்குப் புண்ணாக்கும் ஊறல் கலந்த பருத்தி விதைப்பாலும். அடுத்த மாட்டுக்கு பருத்தி விதைத்தொக்கு கட்டியாக. மற்றதுக்கு அதோடு கம்பஞ்சோறு கலந்து பிசைந்து வைக்க வேண்டும். அதிலும் இந்தப் பால்மாடு இருக்கே, ரொம்பச் செல்லம். பால் கொடுக்கிறோம் என்கிற மேட்டிமை அதுக்கு ரொம்ப!



பால் மாட்டுக்கு மட்டும் தண்ணீர்காட்ட அவருக்குப் பொறுமை இருப்பதில்லை; அதை அவள் தான் கட்டி அடைக்கணும். கெங்கம்மா பால் மாட்டுக்கு 'ஒரு அஞ்சலில்' தண்ணீர் காட்டி விடுவாள். 'பசுமாடுகள் ரொம்ப நுட்பமுடையதுகள்.' நம்முடைய ஆத்திரப்படுதல், பொறுமையின்மை இதுகளை எப்படியோ தெரிந்து கொண்டு விடுகின்றன! நிச்சயம், இவைகளுக்கெல்லாம் அவை பணிந்து போவதில்லை.

அவருடைய அம்மா இருந்த போது அடிக்கடி சொல்லுவாள், 'ஓ நாகையா, மாடுகளுக்குக் கூளம் போட்டதும் அதுகளைத் தட்டித் தடவிக் கொடு. மனசோடு, பிரியமாய்த் தண்ணீர் காட்டும்போது கோபப்படாதே" என்று பாடிப்பாடிச் சொல்லியிருக்கிறாள். ஆனால் நாகையா தண்ணீர் காட்டும் போதுதான் மாடுகளுக்கு அடி விழும்.

கெங்கம்மா கம்பம்புல் குத்தி, இடிக்க ஆரம்பித்தாள். அவளுடைய வலுவான ஒவ்வொரு உலக்கைப் போட்டுக்கும், வீட்டின் கதவுத் தாழ்ப்பாள் அதிர்ந்து சத்தங் கொடுத்தது. இப்படிக் கம்பம்புல் இடிக்கும் போதெல்லாம் நாகையா நினைப்பார், இந்தத் தானியத்தை மட்டும் சமைக்க இவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறதே! பேசாமல் மில்லில் கொண்டு போய் அரைத்து வைத்துக் கொண்டால், எவ்வளவு சௌகரியமாய் இருக்கும்? இந்த அபிப்பிராயத்தை அவர் முதலில் வெளியிட்ட போது வீட்டுப் பெண்கள் சிரித்தார்கள். அம்மா மாத்திரம் அவருக்குப் படும்படி பதில் சொன்னாள். "உலையை அடுப்பில் வச்சிக்கிட்டுத்தானே கம்பம்புல்லை இடிக்க ஆரம்பிக்கோம். இடிச்சி, கொஞ்சம் நேரமாயிட்டாலுங் கூட சோறு காரல் ஆகி கசக்கவும் ஆரம்பித்து விடுமே. அரைச்சி வச்சிக்கிட்டு சமைக்கிறதாவது! அதென்ன நெல்லரிசியா?"

ஆனாலும், இந்த அரியாயப்பாடு வேண்டாம். ஏதாவது ஒரு மாற்றம் செய்தே ஆகணும். உடல் தைரியத்தில் இந்த மக்கள் சிந்திக்க மறுக்கிறார்கள் என்று எண்ணுவார் நாகையா.

குழந்தைகள் படுக்கையிலிருந்து ஒவ்வொருத்தராய் எழுந்திருக்க ஆரம்பித்தார்கள். ஆரோக்கியமான குழந்தைகள் சிரித்துக் கொண்டே எழுந்திருக்கின்றன. அனாரோக்கியமான குழந்தைகள் அழுதுகொண்டே எழுந்திருக்கின்றன. நாகையா தம்பதிக்கு இரண்டு மாதிரிகளிலும் குழந்தைகள் இருந்தன.

அடுப்பில் அவள் கம்பஞ்சோற்றைக் கிண்டிக் கொண்டே குழந்தைகளைச் சமாதானப்படுத்தினாள். காப்பி போட்டு எல்லோருக்கும் தந்தாள். கைக்குழந்தைக்குப் பால் கொடுத்து இறக்கிக் கீழே விளையாடவிட்டாள்.

எரியும் அடுப்புக்குப் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் கைக்குழந்தை, வேலைக்காரர்களான ஆடு மேய்க்கிறவன், மாடு மேய்க்கிறவன், குடிமகன், ஏகாலி இவர்களுக்குச் சோறு போடுதல், வீட்டைப் பெருக்குதல், ஒசி மோர் கேட்க வந்தவர்களுக்குக் கொடுத்தல், 'வெளிக்கு'ப் போய்விட்டு வரும் குழந்தைகளுக்குக் 'கால்' கழுவிவிடுதல் இப்படியாக அவள் ஒரு அட்டாவதானம் செய்து கொண்டிருந்தாள்.

காலை ஆகாரம் முடிந்து நாகையா உழவுக்குப் புறப்பட்டார். கெங்கம்மா தலையில் தண்ணீர் செம்புடனும் கையில் செடி வெட்டும் வாச்சாத்துடனும் அவருக்கு முன்னதாகவே புறப்பட்டுப் போய் புஞ்சையில் முள்ளையெல்லாம் பொறுக்கி எடுத்துக் கொண்டு வந்து ஒரு இடத்தில் போட்டு தீ வைத்துப் பொசுக்கினாள். கற்களைப் பொறுக்கித் தண்ணீர் போகும் நத்துகளில் போட்டாள். முள் செடிகளையும் மஞ்சணத்தி, சாரணத்தி முதலிய செடிகளையும் வாச்சாத்துவால் தோண்டி வெட்டினாள்.

நாகையா வந்து கலப்பை கட்டி உழத்தொடங்கினார். அதற்கு



முன்னால் இருவரும் ஒரு வாய் வெற்றிலை போட்டுக் கொண்டார்கள். கஞ்சிக் கலயத்தை காக்காய் வந்து உருட்டி விடாமல் இருக்க ஓர் இடத்தில் கொஞ்சம் மண் பறித்து அதில் கலயத்தைப் பதித்து வைத்தாள் அவள். இனி அவள் அவசரமாய்ப் புறப்பட்டுப் போய் ஆட்களைச் சத்தம் காட்டிக் கூட்டிக் கொண்டுபோய் தோட்டத்தில் அவர்களோடு சேர்ந்து களை வெட்ட வேண்டும். மதியத்துக்கு வீட்டுக்கு வரும் சாப்பாட்டு வேளையில், ராத்திரிக்குக் கிண்ட வேண்டிய களிக்கு கேப்பை திரித்து வைத்துப்போக வேண்டும்.

நாகையாவுக்கு அவள் செய்யும் வேலையும் அதன் நேரங்களும் அத்துப்படி. நாளில் கொஞ்ச நேரம்கூட உஸ் என்று உட்கார மாட்டாள். தூங்கும் நேரம்தவிர மற்ற நேரமெல்லாம் வேலைதான். தூக்கமும்கூட அவள் ஒரு வேலையாகத்தான் செய்கிறாள். இப்படி ஏன் செய்யவேண்டும்; எதுக்காகச் செய்ய வேண்டும் என்று கேட்டால் அவளுக்குப் பதில் சொல்லத் தெரியாது. ஒன்று மட்டும் தெரிகிறது; விநாடி கூட வேலை செய்யாமல் இருக்க முடியாது அவளால்.



சித்திரை மாசத்தின் கரிசல் காட்டு ஏறுவெயில் தாங்க முடியாததாய் இருந்தது. வியர்வை பெருகி வழிந்தது. மாடுகள் இளைத்தன. தூரத்தில் கானல் நீராகத் தெரிந்தது, இந்த வேனாவெயிலில் அவள் மற்றப் பெண்களோடு நிறை போட்டுக் கொண்டு வேகமாய் களை வெட்டிக் கொண்டிருப்பாள். மாடுகளின் வாயிலிருந்து சொங்கு நுரையாக வழிந்தது. காரணமில்லாமல் அவர் வலவனைத் தூண்ட தார்க்கம்பால் குத்தினார்; அடித்தார்.



தூரத்தில் ஓர் அண்டங்காக்கை கரைந்தது. அவர் எதிர்பார்த்தபடியே அது கலயத்தைப் பார்த்து வந்தது. கோபத்தோடு ஒரு மண் கட்டியை எடுத்து அதை நோக்கி எறிந்தார்.

உழுதுவிட்டு அவர் சாயந்திரம் வீட்டுக்கு வந்தபிறகும் கெங்கம்மா வரவில்லை, "அம்மா எங்கலே?" என்று கேட்டதற்கு, "களை கொஞ்சந்தான் பாக்கி இருக்காம்; செதுக்கீட்டுத்தான் வருவாளாம்; சொன்னா."



மாடுகளுக்குத் தண்ணி காட்டி கூளத்தைப் போட்டார். விளையாடச் சென்றிருந்த குழந்தைகளும், பள்ளிக்கூடம் போயிருந்த குழந்தைகளும் ஒவ்வொன்றாக வந்தன. கடையில் 'வாங்கித் திங்க' ஏதாவது – தானியமோ பருத்தியோ – கொடுக்கச் சொல்லி கேட்டுக் குழந்தைகள் சிணுங்கின. நாகையா முகத்தை உம் என்று வைத்துக் கொண்டார்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் கெங்கம்மா களை சுரண்டியுடன் சிரித்துக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தாள். சிரிப்புக்குக் காரணம், அவள் தெருவில் வரும்போது வீட்டில் குழந்தைகளின் சிணுக்கட்டத்தையும் புருஷனின் எரிச்சலான சத்தத்தையும் கேட்டதுதான். கைக்குழந்தை அவளை நோக்கிப் 'பறந்து கொண்டு' வந்தது. அவசரமாக முகம் கைகால் கழுவிக்கொண்டு வந்தவள் முகத்தைத் துடைத்தும் துடைக்காமலும் குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

எல்லாக் குழந்தைகளுக்கும் வாங்கித்திங்க பருத்தி கொடுத்தனுப்பினாள். குத்துக்காலிட்டு முழங்காலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த புருஷனின் முதுகுப்புறமாக அருகே வந்து உட்கார்ந்து கொண்டு குழந்தைக்கும் பால் கொடுத்தாள். நாகையாவின் மௌனம் அவளுள் புன்னகையை வரவழைத்தது. மெதுவாகப் புருஷனின் முதுகின் மேல் ஒருக்களித்துச் சாய்ந்து கொண்டு திரும்பி, அவருடைய முகத்தைப் பார்த்துச் சிரித்தாள். பதிலுக்கு அவர் நறுக்கென்று அவளை ஒரு கிள்ளு வைத்தார். வலியால் முகத்தைச் சுளித்துக் கொண்டு அவருடைய புஜத்தைப் பிடித்துத் தள்ளினாள். அவர் லம்பி கீழே சாயாமல் கையை ஊன்றிக் கொண்டார். தாயார் தகப்பனாருக்கு இடையில் நடக்கும் இந்த விளையாட்டை என்ன என்று தெரியாமல், காம்பிலிருந்து முகத்தைத் திருப்பி அதிசயத்தோடு அவர்களைப் பார்த்தபோது குழந்தையின் தோளின்மேல் பால் சொட்டியது.

குழந்தையை இறக்கி விளையாட விட்டுவிட்டு கெங்கம்மா திரும்பவும் பம்பரமாக இயங்க ஆரம்பித்தாள். கேப்பைக் களி கிண்டி கருவாட்டுக் குழம்பு செய்தாள். ஊர்ப் பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீர் சுமந்து கொண்டு வந்து பானைகளிலும் தொட்டிகளிலும் ரொப்பினாள். ஒரு நாளைக்குத்தான் கிராமத்தில் சம்சாரி வீட்டுக்கு எத்தனை குடங்கள் தண்ணீர் எடுக்க வேண்டியிருக்கிறது. எருமை மாடுகளுக்கும் பசு மாடுகளுக்கும் உழவுகாளைகளுக்கும் நாளைக்கு ரெண்டு தரம் குடிக்க தொட்டி தொட்டியாய் தண்ணீர் வேண்டும். குழந்தைகள், பெரியவர்கள் குளிக்கணும். குடிக்க கைகால் முகம் கழுவ, பண்டபாத்திரங்கள் கழுவ, சை... சன்னத்தண்ணீரா சுமக்க வேண்டியிருக்கிறது! நாகையாவுக்கு வேலை இல்லாத நாட்களிலும் மனசு ஆரோக்கியமுள்ள நாட்களிலும், அவளோடு சேர்ந்து தண்ணீர் சுமப்பார். கோடை நாட்களில் – கடும் தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள காலத்தில் – சுமந்தே தீர வேண்டும். இதனால் அவருக்கு உச்சந் தலையில் ஒரு ரூபாய் அகலத்தில் பொட்டல் விழுந்துவிட்டது.

அனைவரும் குளிக்க பெரிய மடாவில் வென்னீர் காய்ச்சி முடிந்தது. கூட்டில் அடைய வந்த கோழிகளுக்குத் தவிடு போட்டுப் பிசைந்த கம்மஞ் சோற்றை வைத்தாள். நாய்க்குச் சோறு போடப்பட்டது. கறவை மாடுகளில் பால் கறந்தாள், பூனைக்குப் பாலும் சோறும் கலந்து வைத்தாள். குழந்தைகளைக் குளுப்பாட்டி, புருஷனுக்கு முதுகில் அழுக்குத் தேய்த்து விட்டு, வேலைக்காரர்களுக்கெல்லாம் சோறு படைத்து, பிச்சைக்காரர்களுக்கும் போட்டு, யாவரும் உண்டு படுத்த பிறகு கெங்கம்மா குளித்து, சாப்பிட்டு அடுப்பங்கூடத்தை ஒதுங்க வைத்து, காய்ச்சி ஆறிய பாலை இதம் பார்த்து உரைக்குத்தி, மாடுகளுக்கெல்லாம் ஒரு தரம் கூளம் போட்டுவிட்டு வந்து படுக்க வர ஊர் அரவம் ஒடுங்கிவிட்டது.

புருஷன் பக்கத்தில் வந்து படுக்கையை விரித்தாள். லாந்தலைச் சுருக்குவதற்கு முன் நாகையா அவளை ஒரு தரம் பார்த்தார். அந்த முகத்தில் துளிக்கூடக் களைப்போ ஆயாசமோ இல்லை. எப்படி அவளால் இப்படித் திகழ முடிகிறது? அந்தக் கணத்தில் அவருக்குப் பளிச்சென்று மனசில் ஒன்று தட்டுப்பட்டது. 'நாம், வாழ்க்கை வேறு வேலை வேறு என்று நினைக்கிறோம்; இவளோ, வேலையே வாழ்க்கையாக விளங்குகிறாள்.' தன் அருகே தலை சாய்த்த தன் மனையாட்டியை இறுகப் பற்றி முகர்ந்தார். பூசுப்பொடியோ சோப்பு வாடையோ முதலிய எதுவும் இன்றி சுயம்பான, தனி மனுஷி வாடைதான் அவளிடம் இருந்தது.

– சிறந்த சிறுகதைகள் தொகுப்பிலிருந்து...

தொகுப்பு சா.கந்தசாமி

வெளியீடு : கலைஞன் பதிப்பகம், சென்னை–17.



□ Dr. P.T. சூர்யகுமார்

சென்ற இதழில் 10th. +2 படித்துப் பிறகு என்ன படிக்கலாம் என்று பார்த்தோம். தொடர்ந்து மற்ற துறைகளையும் பார்க்கலாம்.

### கடல்வாணிபத்துறை

போன இதழில் கடற்படை, ஆகாயப் படை, விமானப் படைகளைப் பற்றியும் அதில் எவ்வாறு சேர்ந்து பயன்பெறலாம் என பார்த்தோம். 'கடல்வாணியம்' என்ற சொல்லை கப்பற்படையுடன் குழப்பிக் கொள்ளக்கூடாது. கடல்வாணிகம், பாதுகாப்புத்துறையுடன் எந்த தொடர்பும் கிடையாது. ஆனால் கடல் மூலம் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பயணிகளையும் சாக்குகளையும் எடுத்துச் செல்கின்றது. கப்பலை ஆழ்கடலில் செலுத்துவது. ஆழ்கடலின் சீற்றத்தையும், சிலநேரங்களில் இயற்கையின் சீற்றத்தையும் பொருட்படுத்தாது




கடல்வாணிகமும், பயணிகளையும் அழைத்து செல்வதுதான் ஒரு வீரதீரமான செயல். இரண்டு நாளைக்கு வெளியூர் பயணம் செய்ய நாம் என்னென்ன ஏற்பாடுகளைச் செய்கின்றோம் என்று நினைத்துப் பாருங்கள். கடலில் பயணம் செய்கின்றபோது ஏற்படும் உணர்வுகள், உணர்ச்சிகள், எழுச்சிகள் சொல்லில் அடங்காது. "கப்பலோட்டிய தமிழன்" படத்தைப் பார்த்து இருப்பீர்கள். ஏன் இப்போது பரபரப்புடன் பலமுறைப் பார்த்த "டைட்டானிக்" படத்தில் "காதலைக் காட்டிலும்" எந்த நிமிடமும் தனக்கு ஆபத்து என்று தெரிந்தும் "கடமை தவறாமல்" சுறுசுறுப்பாக பணிபுரியும் மனிதர்களையும், மாலுமிகளையும் பார்க்கின்றோம். 'மாலுமிகள்' பல சவால்களையும் எதிர்நோக்க வேண்டிய மனோதிடம் உள்ளவர்கள். கப்பல் சரக்கு போக்குவரத்து, கப்பல் பயணிகளின் போக்குவரத்து, எண்ணெய் கப்பல், உல்லாசக் கப்பல் என பல விசேஷக் கப்பல்களைக் கொண்டது. சென்னை, கொச்சி, தூத்துக்குடி, இராமேஸ்வரம் போன்ற இடங்களில் சென்று பார்த்தால் அழகுக்கு அழகு சேர்ப்பன போல் அமைந்துள்ளது துறைமுகங்கள். இந்தப் பணியில் அரசாங்கம், தனியார் நிறுவனங்கள் என இரண்டும் ஈடுபட்டுள்ளன.

இந்திய அரசாங்கம் போக்குவரத்து மந்திரி சபையின் மூலம் போதிய பயிற்சி கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளன. 'துறைமுக இயக்கத்தின்' நேரடி நிர்வாகத்தின் கீழ் எல்லாப் பயிற்சி நிறுவனங்களும் செயல்படுகின்றது.

கடல் வாணிபத் தொழில் மூலம் சிறந்த ஊதியத்தையும், நீண்ட விடுமுறைகளையும், உலகத்தின் ஒரு பக்கத்தில் இருந்து மறுபக்கத்திற்கு பயணம் செய்யும் வாய்ப்பினையும் ஒருவர் பெறுவர். இதில் இளம்நிலை பொறியாளர் தகுதியில் இருக்கும் ஒருவர் மாதம் ஒன்றுக்கு ரூ.86,000 முதல் 1 இலட்சத்து இருபதாயிரம் வரை வருமானம் பெறலாம். முதன்மைப் பொறியாளர் தகுதியில் இருக்கும் ஒருவர் மாதம் ஒன்றுக்கு இரண்டு இலட்சம் வரை வருமானம் பெறலாம். இதில் பெரிய நன்மை என்னவென்றால் 6 மாத காலம் தொடர்ந்து கப்பலில் பயணித்து அலுவல் செய்யும் ஒருவர் இந்தியாவில் வசிக்காத இந்திய குடிமகன் என்ற அந்தஸ்தைப் பெறுகிறார். அவர் பெறும் வருமானம் வருமானவரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றது. இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல், அவர் ஒவ்வொரு ஆண்டும் ஆறுமாத காலம் ஊதியத்துடன் கூடிய விடுமுறையைப் பெறுகின்றனர்.

**இத்தகையச் சிறப்புவாய்ந்த மாலுமிகளாக ஆகவேண்டுமா? மாலுமியாவதற்கு என்னென்ன தகுதிகள் தேவை?**

1. பள்ளியில் மேல்நிலைக் கல்வியில் +2 அல்லது அதற்கு இணையான படிப்பில் குறைந்தது 60% மதிப்பெண்களாவது பெற்றிருக்கவேண்டும். கணிதம், இயற்பியல், வேதியியல் போன்ற பாடங்களை முக்கியப் பாடமாகக் கொண்டு படித்து இருக்கவேண்டும்.
2. வயது 22–க்குள் இருக்க வேண்டும்.
3. கப்பல் தொழிலில் மிகுந்த ஆர்வமும், உடற்திறனும், எதையும் சாதிக்கவேண்டும் என்ற உள்ளுணர்வும், உறுதியும், எல்லோரையும் அரவணைத்து அழைத்துசெல்லும் மனோதிடமும் (Team sprit and leadership quality) மிகவும் அவசியம்.
4. கப்பல் இயக்கத்தினால் ஏற்படும் 'குமட்டல் நோய்' (vomiting sensation) இல்லாதவராகவும் இருக்கவேண்டும்.
5. மிக முக்கியமாக கண்பார்வை சிறப்பாக இருக்கவேண்டும். மருத்துவ தகுதியின்படி அவர் + அல்லது 2.5 கண்பார்வை உள்ளவராக இருக்கவேண்டும். நிறக்குருடு (Colour Blindness) இல்லாதவராகவும் இருக்கவேண்டும்.
6. பெண்கள் இந்தத் தொழிலுக்கு இதுவரை ஏற்றவர்களாக கருதவில்லை.

# பத்தாம் வகுப்பு, +2 படித்த மாணவர்களுக்கு – வழிகாட்டி
# என்ன படிக்கலாம்? எங்கு படிக்கலாம்?

கப்பல் (வாணிபத்) துறையில் இரண்டு முக்கியத் துறைகளைக் கொண்டுள்ளது.

i. கப்பல் தளம் அதை பராமரித்தல்

ii. எந்திரம்

கப்பல்தலைவன் இந்த இரண்டு துறையையும் நிர்வகிப்பவர். கப்பல்தளத் தொழிலில் பணிபுரிபவர்கள் கப்பலை செலுத்தும் அதிகாரியாவார்கள். வாணிகக் கப்பல் என்றால், கப்பலை சரிவர இயக்குவதும், சரக்கை ஏற்றுவதும், இறக்குவதும், கப்பலை பராமரித்தலும், பயணிகளுக்கும், கப்பல் சிப்பந்திகளுக்கும் பாதுகாப்பு கொடுப்பதும், கடல் போக்குவரத்துக்கு உதவும் தேசிய மற்றும் பன்னாட்டு சங்கேத மொழிகளைத் தெரிந்துகொண்டு அவற்றைக் கடைப்பிடிப்பதும் அவர் பொறுப்பாகும்.

**கப்பலின் தலைவனாக அல்லது மாலுமியாக ஆகவேண்டுமா?**

I.I.T. நடத்தும் ஒருங்கிணைந்த தேர்வான Joint Entrance Examination (JEE) தேர்வு எழுதி வெற்றிப் பெறவேண்டும். பொதுவாக இந்தத் தேர்வு இரண்டு கட்டமாக நடத்தப்படுகின்றது.

(1) ஜனவரி முதல் ஞாயிற்றுக்கிழமை (ஸ்கிரினிங் டெஸ்டு) முதல் கட்டத் தேர்வு நடைபெறும்.

இத்தேர்வினை குறைந்தது 1 இலட்சத்து 20 ஆயிரம் பேர்க்கு மேல் எழுதுவார்கள். அவர்களின் அறிவை வடிகட்டி, 1500–2000 மாணவர்களை முதற்கட்டத் தேர்வில் தேர்ந்தெடுப்பர். இரண்டாவது கட்டத் தேர்வை மே மாதம் 6,7 தேதிகளில் (தேதிகள் மாறலாம்) – மே .மாத முதல் சனி, ஞாயிற்றுக்கிழமைகள்) நடைபெறும். அதிலிருந்து 400 மாண்வர்களைத் தேர்ந்தெடுப்பர். பிறகு மாணவர்களின் விருப்பங்களை அறிந்து அதற்குரிய பாடங்களை வழங்குவதற்கென தனித்தனி குழுக்கள் உள்ளன. நான் மாணவர்களுக்கு அறிவுறுத்துவது என்னவென்றால் இதுபோன்ற படிப்பிற்கு 9ஆம் வகுப்பு முற்கொண்டே நன்கு படிக்கவேண்டும். எல்லா பாடப் புத்தகங்களைத் தவிர, இது சம்பந்தமான பல புத்தகங்களைத் தானே படித்திடல் (Self-study) வேண்டும்.

இவ்வாறு மேற்கூறிய தேர்வில் வெற்றிப் பெற்றவர்கள் B.Sc. Nautical Science என்ற 3 ஆண்டு படிப்பில் சேரலாம். இந்த கல்வி, மும்பையில் உள்ள T.S. சாணக்யா என்ற கல்வி நிலையத்தில் கற்றுத்தரப்படுகின்றது. (T.S. Chanakya, Karave, Nerul, Navi, Mumbai-400 076.)

இந்த மூன்று ஆண்டு கல்வியை முடித்தவுடன், ஒருவர் பயிற்சிபெரும் அதிகாரியாக ஆவர். மேலும் வெளிநாடு செல்ல ஒரு வருடப் பயிற்சியைப் பெறவேண்டும். இவ்வாறு பயிற்சியின் சான்றிதழைப் பெற்றவர்கள், கப்பலில் இரண்டாம் அல்லது மூன்றாம் நிலை அதிகாரியாக நியமிக்கப்படுவர். மேலும் இவர்கள் உயர்நிலைப்பெற First mate, Master என்ற தேர்வுகளை எழுதிடவேண்டும். Master என்ற தேர்வில் வெற்றிபெற்றவர்கள் கப்பல் தலைவனாக (Captain) ஆகும் உரிமைப்பெறுகின்றார்.

இரண்டாவதாக எந்திரத்துறையில் மாணவர்கள் சேர்வதை சற்று பார்ப்போம். கடற்பொறியாளராக தகுதி பெற, மேற்கூறிய I.I.T. யின் ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வினை எழுதி வெற்றிபெற்றவர்கள், கல்கத்தாவில் உள்ள .MERI என்ற நிறுவனம் நடத்தும் 4 ஆண்டு இளங்கலைப் "கடற் பொறியியல்" (Marine Engineering) என்ற பிரிவில் சேரலாம். (Marine Engineering and Research Institute (MERI), P-19, Taratola Road, Calcutta-700 088) மேலும் T.S. Chanakya என்ற நிறுவனத்திலும் சேரலாம்.

மேலும் முதன்மைப் பொறியாளராக பதவி உயர்வு பெற வேண்டுமானால் குறைந்தக்காலப் பணியினையும், அது தொடர்பான தேர்வுகளையும் எழுதி வெற்றி பெறவேண்டும். உங்கள் திறமைக்கேற்ப, இளநிலைப் பொறியாளர் என்ற பதவியில் இருந்து முதன்மை பொறியாளராக 5 வருட இடைவெளியிலேயே உயர்வு பெற இயலும்.

மேற்கூறிய நிறுவனங்கள் அல்லது கீழ்க்கண்ட நிறுவனங்களிலும் சேர்ந்து பயிலலாம்.

★ National Institute of Post Management, Chennai

★ International Institute of Maritime Studies, New Delhi

★ Shipping Corporation of India

★ Tamil Nadu Maritime Academy

★ Tolani Maritime Institute

★ BITS, Pilani (Diploma in Nautical Science)

★ Chennai School of Ship Management

★ Academy of Maritime Education Training (AMET), Chennai

★ Directorate General of Shipping, Jahaz Bhavan, W.H. Marg, Mumbai - 400 038.

மேற்கூறிய படிப்பைத் தவிர கப்பலில் பலதரப்பட்ட கோர்ஸ் படித்தவர்களுக்கு வரவேற்பு உள்ளது. அவை, என்னென்ன என்று பார்ப்போம். Marine Management, Navigation, Astronomy, Navigational Aids, Decca, Loran, Satellite Navigator, Navel Architecture, Cargo Work, Ship Maintenance, Seamanship, Marine Communication போன்றவற்றில் பயிற்சி பெற்றவர்கள் வேலைக்கு செல்லலாம்.

மேலும் கப்பலில், Electrical Engineering, Electronics, Electronics and Communication, Mechanical Engineering, Information Technology, Computer Science போன்ற துறைகளில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு உள்ளது. அது அல்லாது Accountancy, Commerce படித்தவர்களுக்கும், Indian Music, Western Music படித்தவர்களுக்கும் அனுபவம் உள்ளவர்கட்கும் வேலைவாய்ப்பு அதிகம். ஆக ஒரு கப்பல் என்கின்றபோது ஒரு குட்டி நகரம், குட்டி தீவுப் போலத்தான். நகரங்கள் நகர்வது இல்லை. அதுதான் வித்தியாசம். மற்றவை எல்லாம் பொதுவானவையே.

மேலும் ஆராய்ச்சிப் படிப்பிற்கு சென்னை I.I.T. யில் கடற் பொறியியல் படிக்க விரும்புவோர் OCEAN Engineering Department (அல்லது) National Institute of Ocean Technology என்ற மையத்திலும் சேர்ந்து பயிலலாம்.

இவற்றைப் படித்தவர்கள் கடல்வாணிபத்தில் மட்டுமல்லாது ONGC (Oil and Natural Gas Commission), UPSC யில் நடத்தப்படும் பல வேலைகளுக்கு தகுதி பெறுகின்றனர். மற்ற



வேலைகளைக் காட்டிலும் அதிகச் சம்பளம் பெறுவர். மதிப்பும் அதிகம்.

## RADIO OFFICERS' TRAINING COURSE

+2 படித்து வெற்றிப் பெற்ற மாணவர்கள், ஒரு வருட கோர்ஸ்ஸில் சேர்ந்து பயிற்சி பெற்று கடல் வாணிபத்துறையில் சேர்ந்து நிறைய வருமானம் ஈட்டலாம்.

இவை எங்கெங்கு நடத்தப்படுகின்றது என்பதை பார்ப்போம்

★ Central Institute of Marine Communications, 166, Vanniar Street, Choolaimedu, Chennai-94.

★ Indian Institute of Marine Electronics, 19, Ramanathan's St, T.Nagar, Chennai-17.

★ Indian Maritime College, 14-A, Masilamani St, T.Nagar, Chennai-17.

★ Dr. Ramana's Institute of Marine Electronics, 162, Lattice Bridge Road, Thiruvanmiyur, Chennai.

★ National Institute of Marine Electronics, 12, Govt. Library St, Ayyanar Nagar, Pondicherry - 605 013.

**+2 படித்த மாணவர்கட்கு சில சிறப்புக் கோர்ஸ்களை தொகுத்து வழங்கப்பட்டுள்ளது. இந்த சிறப்புக் கோர்ஸ்கள் அனைத்தும் வேலைவாய்ப்புக்குரியது. படித்தவுடன் அரசாங்க வேலையை எதிர்பார்க்காமல், தனியாகவும் அல்லது தனியார் துறைகளிலும் வேலை செய்யும் அளவிற்கு தகுதி பெறுகின்றனர்.**

**சித்தா மருத்துவம் (BSMS) – 5 வருடம் :**

1. அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையம்கோட்டை, திருநெல்வேலி–627 002

2. அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, அரும்பாக்கம், சென்னை–600 106

**ஆயுர்வேத மருத்துவம் (BAMS) – 5 வருடம்**

1. ஆயுர்வேதக் கல்லூரி, பட்டான்ஜலிப்புரி (P.O), தோடகம் ரோடு, கோயம்புத்தூர் – 641 108

2. வெங்கட்ரமணா ஆயுர்வேத கல்லூரி, மைலாப்பூர், சென்னை–600 004

3. சந்திரசேகர சரஸ்வதி விஸ்வ வித்யாலயா, காஞ்சிபுரம் – 631 561

**யுனானி மருத்துவம் (BUMS) - 5 வருடம்**

1. அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரி, அரும்பாக்கம், சென்னை – 600 106

**ஹோமியோபதி மருத்துவம் (B.H.M.S.) – 5 வருடம்**

1. அரசினர் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி, கீழ்பாக்கம், சென்னை– 600 010

2. அரசினர் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி, திருமங்கலம், மதுரை - 626 706

3. ஒயிட் மெமோரியல் ஹோமியோபதி கல்லூரி, நாகர்கோயில் – 629 706

4. விநாயக மிஷன் மருத்துவக் கல்லூரி, சேலம் – 636 001

**உடல்வலிமை பெற தெரபி :**
**B.O.T. (Occupational Theraphy) – 3 வருடம்**

1. சந்தோஷ் ஆஸ்பிட்டல், பெசண்ட்நகர், சென்னை–600 090

2. கே.எம்.சி.எச். மருத்துவக் கல்லூரி, அவினாஷ் ரோடு, கோவை – 640 014

3. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம் – 608 002

4. கிருஸ்துவ மருத்துவக் கல்லூரி, வேலூர் – 632 002

**சேனடரி இன்ஸ்பெக்டர் (Sanitary Inspector) – ஒரு வருடம்**

அரசு மருத்துவக் கல்லூரிகளான, செங்கல்பட்டு – 603 001, சென்னை – 600 003, கீழ்பாக்கம், சென்னை – 600 010, மதுரை – 625 001, ஸ்டான்லி, சென்னை –600 001 ஆகிய ஐந்து இடங்களில் கற்றுதரப்படுகின்றது.

**ஆர்தோபிஸ்ட் கோர்ஸ் (பெண்களுக்கு மட்டும்) (Orthopist) – 2 வருடம்**

மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை – 625 001

**பல்சீரமைப்பு கல்வி**
**(Dental Mechanic/Dental Hygienist) –2 வருடம்**

சென்னை பல்மருத்துவக் கல்லூரி, சென்னை 600 003

**கண்மருத்துவம் (Optometry) – 1 வருடம்**

அரசினர் கண் மருத்துவமனை, சென்னை 600 008

**கண் உதவி மருத்துவர் (Opthalmic Assistant) – 2 வருடம்**

1. மதுரை அரசினர் மருத்துவக் கல்லூரி, மதுரை 625 020



2. தஞ்சாவூர் அரசினர் மருத்துவக் கல்லூரி,
தஞ்சாவூர்-613 004

3. கிருஸ்துவ மருத்துவக் கல்லூரி, வேலூர்-632 002.

**இதயப் புகைப்படம் எடுத்தல் :**
**(Radiological Assistant) – 1 வருடம்**

1. சென்னை மருத்துவக் கல்லூரி,
சென்னை – 600 003

2. மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை – 625 020

**பேச முடியாத குழந்தைகளுக்கு பேச கற்றுக் கொடுக்கும் முறை**

**B.Sc. Speech Hearing & Language–3 வருடம்**

இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி போரூர்,
சென்னை–600 016.

**மரைன் இன்ஜினியரிங்**

**B.E. (Marine Engineering) - 4 வருடம்**

1. ஜி.எஸ்.பிள்ளை தொழிற்கல்வி நிலையம்,
இடையத்தான்குடி, நாகப்பட்டினம்–611 001

2. வெங்கடேஸ்வரா கல்லூரி,
ஸ்ரீபெரும்புதூர் – 602 105

**லெதர் டெக்னாலஜி**
**B.Tech Leather Technology - 4 வருடம்**

1. அண்ணா பல்கலைக்கழகம், எம்.ஐ.டி., சென்னை.

2. பிரியதர்ஷினி இன்ஜினியரிங் கல்லூரி,
வாணியம்பாடி–635 751

3. பாரத் இன்ஜினியரிங் கல்லூரி, சேலையூர்,
சென்னை – 600 073

4. இஸ்லாமியக் கல்லூரி, வாணியம்பாடி – 635 725

**ஏரோடெக்னிக்கல்**
**B.Tech (Aerotechnical) – 4 வருடம்**

1. ஹிந்துஸ்தான் இன்ஜினியரிங் கல்லூரி,
படூர், சென்னை–603 103

2. பார்க் இன்ஜினியரிங் கல்லூரி, கருமத்தம்பட்டி,
கோவை–641659

3. சாலைபோக்குவரத்து கல்லூரி, ஈரோடு–638 316

**இன்ஸ்ட்ருமென்டேஷன் கண்ட்ரோல்**
**B.E. Instrumentation Control Engineering – 4 வருடம்**

மாநில மண்டல பொறியியல் கல்லூரி (R.E.C.),
திருச்சி–620 014

**நீர்வளப் பெருக்கு**
**B.E. Water Resources Engineering – 4 வருடம்**

மாநில மண்டல பொறியியல் கல்லூரி
(R.E.C.), திருச்சி–620 014

**கப்பல் கட்டுதலும், கடல் ஆராய்ச்சியும் –**
**Naval Architecture & Ocean Engineering – 4/5 வருடம்**

இந்தியதொழில்நுட்பக் கல்லூரி (I.I.T.),
சென்னை – 600 036

**எலெக்ட்ரோ கெமிகல் - B.E.**
**Electrochemical Engineering – 4 வருடம்**

எலெக்ட்ரோ கெமிகல் நிறுவனம்,
காரைக்குடி–630 006

**ஜியோ இன்பர்மெட்டிக்ஸ்/சுரங்கவளம்/செராமிக்–பிங்கான் சப்பர் டெக்னாலஜி – 4 வருடம்**

அண்ணா பல்கலைக்கழகம், கிண்டி,
சென்னை – 600 025

**தோல் ஆராய்ச்சி Footwear Science & Technology – 4 வருடம்**

அண்ணாப் பல்கலைக்கழகம், எம்.ஐ.டி.வளாகம்,
சென்னை – 600 025

**இண்டீரியர் டிசைன்/குடும்பக்கல்வி/சத்துள்ள உணவு தயாரித்தல்/ டூரிசம் – பெண்களுக்கு மட்டும்**

அவினாசிலிங்கம் பெண்கள் மேம்பாட்டு கல்வி
நிறுவனம், கோயமுத்தூர் – 641 043

**கண்ணாடி செய்தல் – Glass Blowing – 1 வருடம்**

பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி–620 024

**கிராமங்களில் தொழிற்கல்வி –**
**B.A. (Rural Industries & Management) – 3 வருடம்**

காந்தி கிராமியப் பல்கலைக்கழகம்,
காந்தி கிராமம், திண்டுக்கல் – 624 302

**பஞ்சாயத்து ராஜ்யம் – (M.A. (Development Administration & Panchayat Raj) – 5 வருடம்**

+2 படித்த மாணவர்கள் 5 வருட கோர்ஸில் சேரலாம்.

(I.A.S. பரீட்சை திறமையாக எழுதுவதற்கேற்ப பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு முன்னேற்றமான பாடத்திட்டத்தைக் கொண்டது).

காந்தி கிராமியப் பல்கலைக் கழகம்,
காந்தி கிராமம், திண்டுக்கல் – 624 302

**அக்ரிகல்சரல்/சேனடரி சையின்ஸ்/காதி/எலெக்ட்ரானிக்ஸ்/ பேங்கிங் டெக்னாலஜி – டிப்ளமா கோர்ஸ் – 2 வருடம்**

மிகவும் பிரபலமான பாடத்திட்டங்களைக் கொண்டது. படித்தவுடன் வேலை. இந்த படிப்பிற்கு மிகவும் மாணவர்களிடையே போட்டி. செயல் பயிற்சி அதிகம். பாடப் பகுதிகள் குறைவு, இதன் சிறப்பு அம்சம்.

காந்தி கிராமியப் பல்கலைக் கழகம், காந்தி கிராமம், திண்டுக்கல் – 624 302.



**மனையியல் – B.Sc. பெண்களுக்கு மட்டும் – 3 வருடம்**

காந்தி கிராமியப் பல்கலைக் கழகம்.
காந்தி கிராமம். திண்டுக்கல் – 624 302

**காந்திய சிந்தனை – Gandhian Thought**

காந்திய வழியில் செல்ல விரும்பும் மாணவர்கள் காந்திய சிந்தனை மிகவும் வளர்த்துக் கொள்ள சிறந்த இடம், காந்தி கிராமியப் பலகலைக கழகம். 6 மாதம் கோர்ஸிலிருந்து உயர் கல்வி வரை (Ph.D.) காந்திய சிந்தனைகள் படிக்க சிறந்த இடம். மதுரைப் பலகலைககழகமும இந்த பாடத்தில் மிகவும் கவனம செலுத்துகினறது.

**சுற்றுலா போக்குவரத்து மேலாண்மை**
**(B.T.T.N.) – 3 வருடம்**

அன்னை தெரஸா பெண்கள் பல்கலைககழகம்
கொடைககானல் – 624 102

**காடு வளர்ப்பு B.Sc. (Forestry) – 3 வருடம்**

காடு வளர்ப்பும் அதன் ஆராய்ச்சி நிறுவனம்.
மேட்டுப்பாளையம

**தோட்டக்கலை B.Sc. (Horticulture)**

1. ஹார்டிகல்சரல் கல்லூரி, பெரியகுளம்

2. ஹார்டிகல்சரல் கல்லூரி, கோவை

**மீன்வளர்ப்பு B.F.Sc. – 4 வருடம்**

மீன் வளர்ப்பும் ஆராய்ச்சியும் இணைந்த கல்லூரி,
தூத்துக்குடி–628 008

**பாலிமர் கெமிஸ்டிரி Polymer Chemistry - 5 வருட இணையான கோர்ஸ்**

சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600 005.

**சமஸ்கிருதமும், விஞ்ஞானமும் – B.S.A.Sc.,**

பங்காரு அம்மன் கல்லூரி, காஞ்சிபுரம்

**அராபிக்மொழி – B.A.(Arabic) – 3 வருடம்**

1. ஜமால் மொகமது கல்லூரி, திருச்சி–620 020

2. நியுகல்லூரி, சென்னை–600 014

**ஹிந்தி – B.A.(Hindi) – 3 வருடம்**

பிரஸிடென்சி கல்லூரி, சென்னை – 600 005

**மலையாளம் – B.A. (Malayalam) – 3 வருடம்**

பிரஸிடென்சி கல்லூரி, சென்னை – 600 005

**சமஸ்கிருதம் – B.A. (Sanskrit) – 3 வருடம்**

ராணிமேரி பெண்கள் கல்லூரி,
சென்னை – 600 004

**தெலுங்கு – B.A.(Telugu)– 3 வருடம்**

ராணிமேரி பெண்கள் கல்லூரி.
சென்னை – 600 004

**ஓவியம் & சிற்பம் – B.F.A. (Painting & Sculpture)**

நுண்கலைக் கல்லூரி, பெரியமேடு.
சென்னை – 600 003

**தொழிலாளர்மேலாண்மை –**
**B.L.M. (Labour Management)**

1. தமிழ்நாடு தொழிலாளர் கல்விக் கல்லூரி. சென்னை – 600 005

2. D.G. வைஷ்ணவ கல்லூரி, அரும்பாக்கம்.
சென்னை – 600 106

**இசை B.A.(Music)**

1. ராணிமேரி பெண்கள் கல்லூரி.
சென்னை–600 004

2. ராஜா இசைக் கல்லூரி, திருவையாறு – 613 204

3. சீத்தாலஷ்மி ராமசாமிக் கல்லூரி,
திருச்சி – 620 002

4. ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம்,
மதுரை – 625 002

5. எஸ்.கே.சுவாமிநாத சுவாமிகள் கல்லூரி, திருப்பனந்தாள் – 612 504

**தத்துவம் B.A. (Philosophy)**

1. அமெரிக்கன் கல்லூரி, மதுரை

2. எ.எம்.ஜெயின் கல்லூரி, சென்னை – 600 114

3. அருளானந்தர் கல்லூரி, கருமாத்தூர் – 626 573

4. சென்னை கிருஸ்துவக் கல்லூரி,
தாம்பரம், சென்னை – 600 059

5. ராமகிருஷ்ண விவேகானந்த கல்லூரி,
சென்னை – 600 004

6. பச்சையப்ப முதலியார் கல்லூரி,
சென்னை – 600 030



7. நேஷனல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

8. மதுரைக் கல்லூரி, மதுரை

**உளவியல் B.A. (Psychology) – 3 வருடம்**

1. பெண்கள் கிருஸ்துவக் கல்லூரி, சென்னை-600 006
2. பி.எஸ்.ஜி. கல்லூரி, கோவை – 641 014
3. ஜெ.பி.எ.எஸ். பெண்கள் கல்லூரி (SIET COLLEGE) சென்னை – 600 018
4. அரசினர் கல்லூரி, கோவை – 641 018
5. பிரஸிடென்சி கல்லூரி, சென்னை – 600 005.

**சமூக கல்வி – B.A. Social Work - 3 வருடம்**

1. காவேரிப் பெண்கள் கல்லூரி, திருச்சி–620 003
2. பெண்கள் டோக் கல்லூரி, மதுரை–625 002

**மனையியல் – B.Sc. Home Science**

1. அண்ணா ஆதர்ஷ் கல்லூரி, அண்ணாநகர், சென்னை–40.
2. இஸ்லாமியப் பெண்கள் கல்லூரி, வாணியம்பாடி
3. ஜெ.பி.எ.எஸ். பெண்கள் கல்லூரி, (SIET COLLEGE) சென்னை–600 018
4. ராணிமேரி பெண்கள் கல்லூரி, சென்னை – 600 004
5. பெண்கள் கிருஸ்துவக் கல்லூரி, சென்னை – 600 006
6. சு.வி.சி. கல்லூரி, திருச்சி
7. டாக்டர் நல்லி குப்புசாமி கல்லூரி, தஞ்சாவூர்
8. சீத்தாலஷ்மி ராமசாமி பெண்கள் கல்லூரி, திருச்சி – 620 002
9. சாரதா பெண்கள் கல்லூரி, சேலம் – 636 016
10. சாரதா நாய்க்கண் பெண்கள் கல்லூரி, கரூர் – 630 301
11. ஜி.வி.ஜி. விசாலட்சுமி பெண்கள் கல்லூரி, உடுமலைப்பேட்டை – 642 128
12. ஃபாத்திமா கல்லூரி, மதுரை – 625 018
13. ஹோலி கிராஸ் மனையியல் கல்லூரி, தூத்துக்குடி – 628 003
14. எஸ்.எம். அரசு பெண்கள் கல்லூரி, மதுரை – 625 002
15. சட்டநாதக் கரையாளர் கல்லூரி, தென்காசி
16. மீனாட்சி பெண்கள் கல்லூரி, மதுரை – 625 002
17. ஆதிசுஜனகிரி பெண்கள் கல்லூரி, கம்பம் – 625 516
18. T.B. அப்துல் காதர் பெண்கள் கல்லூரி, கீழக்கரை – 623 517
19. V.V. வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர் – 626 003

**சுற்றுப்புற மேலாண்மை**
**B.Sc. (Environmental Management) – 3 வருடம்**

1. நேஷனல் கல்லூரி, திருச்சி – 620 001
2. ஜவஹர் சயின்ஸ் கல்லூரி, நெய்வேலி – 607 801

**விஷுவல் கம்யூனிகேஷன் –**
**B.Sc. (Visual Communication)**

1. நுண்கலை கல்லூரி, பெரியமேடு, சென்னை – 600 003
2. டாக்டர் தாமோதரன் சயின்ஸ் கல்லூரி, கோவை – 641 014
3. லயோலா கல்லூரி, சென்னை – 600 034
4. நியூகாலேஜ், ராயப்பேட்டை, சென்னை – 600 014
5. எஸ்.ஆர்.எம். கலை & சயின்ஸ் கல்லூரி, சென்னை – 600 033
6. மொகமது சதாக் கலை & சயின்ஸ் கல்லூரி, சோளிங்கநல்லூர், சென்னை – 600 096
7. சிந்திக் கல்லூரி, திருவேற்காடு, சென்னை – 600 117.

**ஆசிரியர் பயிற்சிக்கல்வி –**
**Teacher Training Education – 2 வருடம்**

பொதுவாக எல்லா மாவட்டக் கல்வி நிலையங்களில் பயிற்சி நடத்தப்படுகின்றது.

1. திருவல்லிக்கேணி, சென்னை
2. முனையான்ஜிபட்டி, திருநெல்வேலி
3. திரூர், செங்கல்பட்டு
4. வடலூர், விழுப்புரம்
5. ராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்
6. ஆடுதுறை, தஞ்சாவூர்
7. மாயனூர், கரூர்
8. திருமூர்த்திநகர், கோயமுத்தூர்
9. டி.கல்லுப்பட்டி, மதுரை
10. தேரூர், கன்னியாக்குமரி
11. நாமக்கல், சேலம்
12. கிருஷ்ணகிரி, தருமபுரி



13. பாளையப்பட்டி, ராமநாதபுரம்

இது அல்லாது அரசுக் கல்விப் பயிற்சி மையங்களில் கீழ்க்கண்ட இடங்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

ஆண்களுக்குத் தனி, பெண்களுக்குத் தனி என இரண்டு கல்லூரிகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. பெண்களுக்கென்று : ராயப்பேட்டை, உத்திரமேரூர், விழுப்புரம், ராணிப்பேட்டை, தஞ்சாவூர், சின்னதாராபுரம், கோயமுத்தூர், திருநகர்–மதுரை போன்ற இடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆண்களுக்கென்று: கங்காவள்ளி – சேலம், தருமபுரி, ஜோஸிலாம்பட்–விருதுநகர், சமுகரங்கபுரம் – திருநெல்வேலி, நாகர்கோவில் போன்ற இடங்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

**தெலுங்கு மொழியில் ஆசிரியப் பயிற்சியாக :**

தருமபுரி, கிருஷ்ணகிரியிலும்

**உருது மொழியில் பயிற்சியாக :**

சென்னை–600 002, ராயப்பேட்டை–சென்னையிலும்

**மலையான மொழியில் பயிற்சியாக :**

விலவன்கோடு – கன்னியாகுமரியிலும்
நடத்தப்படுகின்றது. படித்து முடித்தவுடன் வேலை

**உலகப் பிரசித்திப் பெற்ற சில நிறுவனங்களைப் பற்றி சற்று பார்ப்போம் :**

**இந்திய தொழில் நுட்ப நிறுவனங்கள் (I.I.T.)**

"சோர்வின்றி முயற்சி மேற்கொள்பவர்கள் விதியையும் தோல்வி அடையச்செய்வார்கள்" என 'விதியை மதியால் வெல்லலாம்' என அற்புதமாக, அழகாக சென்னையில் கிரஸ்ஸண்ட் இன்ஜினியரிங் கல்லூரியில் 12–ம் பட்டமளிப்பு விழாவில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கூறியது போல், இங்கு சேர்கின்ற மாணவ மாணவிகள் அயராது படித்து உலகின் பல துறைகளில் தலைசிறந்து விளங்குகின்றனர் என்றால் மிகையாகாது.

இந்தியாவில் சென்னை, பம்பாய், கான்பூர், காராக்பூர், கௌஹாத்தி, டெல்லி போன்ற இடங்களில் இந்த நிறுவனங்கள் உள்ளது. இயற்கை எழிலுடனும், உயர்கல்விக்கென எல்லா வசதிகளையும் தன்னிடம் பெற்றுள்ள நிறுவனம். வளர்ந்த நாடுகளில் உள்ள பெரிய தொழிற்துறை பல்கலைக் கழகங்கள், நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாக மிகவும் சிறப்பான தரம் வாய்ந்த கல்வியை அளிக்கின்றது.

இந்த நிறுவனங்களில் இளங்கலையில் (B.E./B.Tech) சேர்வதற்கென பொது நுழைவுத் தேர்வான Joint Enterance Examiniation (JEE) என்று சுருக்கமாக அழைக்கப்படும் தேர்வினை எழுத வேண்டும். இது இரண்டு கட்டமாக நடத்தப்படுகின்றது. 1. முதற்கட்டம்: ஜனவரி முதல் ஞாயிற்றுகிழமை 2. அடுத்த கட்டம்: மே மாதம் 6, 7 தேதிகளில் (தேதிகள் மாறலாம்) நடத்தப்படுகின்றது. +2 மாணவர்கள் கணிதம், இயற்பியல், வேதியல் எடுத்து படித்தவர்கள் இந்த நுழைவு தேர்வினை எழுதலாம். அனைவரும் புகழும் வண்ணம் திறமையாக இந்த நுழைவுத் தேர்வுகளை எவ்வித குறைகளும் இல்லாமல் நடத்தி நல்ல மாணவர்களை தேர்ந்தெடுக்கின்றனர். இதில் தேர்வுபெற மாணவர்கள் நுணுக்கமாக, ஆழமாக ஆராய்ந்து, பாகுபடுத்தி, அயராது படித்திடல் வேண்டும் என்பது தான்தாரக மந்திரம். B.E./B.Tech என்ற கோர்ஸ்களுக்குப் பிறகு M.E./M.Tech/M.S./Ph.D. என்ற ஆராய்ச்சி படிப்பும், M.Sc. (Physics, Chemistry, Maths)ம் உள்ளது.

இந்த உயர் நிறுவனங்களில் உலகப்புகழ் பெற்ற ஆசிரியர்களும், உயர்கல்வி வசதிகளும் அதற்கு மேல் நிர்வாகத் திறன் கொண்ட நிர்வாக குழு இருப்பது தான் இந்த நிறுவனத்தின் சிறப்பு அம்சங்கள்.

**இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ்**
**(I.I.Sc.) பெங்களூர்**

இது IIT போன்ற சிறந்த நிறுவனம். +2வில் முதல் 20 ரேங்க் எடுத்தவர்களுக்கு, I.I.Sc. Young Fellowship' என்ற புரோகிராம் நடத்தப்படுகின்றது. இதில் வெற்றிப் பெற்றவர்கள் நேரிடையாக உயர் ஆராய்ச்சி படிப்பிற்கு சேர்கின்றனர்.

J.N.Tata (1839–1904), Lord Curzon Sri Krishnaraja Wodeyar IV (The Maharaja of Mysore) மூவரின் பெரும் முயற்சியால், 1909ல் துவக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனத்தில் விஞ்ஞானம், இன்ஜினியரிங் துறையில் சிறந்து விளங்குகின்றது. உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானிகள் இதன் நிர்வாகிகளாக இருந்துள்ளனர். எடுத்துக்காட்டாக, சி.வி.ராமன், எஸ்.தவான், எஸ்.ராமசேஷன், சி.என்.ஆர்.ராவ், ஜி.பத்மநாபன், எஸ்.பாகவந்தம் போன்றோர்.

**மேலாண்மையில் உயர்கல்வி நிறுவனங்கள்**
**I.I.M. (Indian Institute of Management)**

இன்றைய தொழில் உலகம் கடுமையான போட்டிகளை சந்தித்து வருகின்றது. ஒரு நிறுவனத்தின் அமைப்பு, உற்பத்தித் திறன், கச்சா பொருள்கள், முதலீடு முதலியவைகள் முழுமையாக இருந்தாலும் சரியான நிர்வாகத் திறன் இல்லை என்றால், உடல் உறுப்புக்கள் அனைத்தும் நல்ல முறையில் இருந்தாலும், நரம்பு மண்டலத்தின் தண்டு வடம் சரியில்லை என்றால், எத்தகைய செயல்களையும், செய்ய இயலாதவனைப் போல் ஆகிவிடுகின்றது. இத்தகைய நிர்வாகத் திறமையை மாணவர்களிடம் தகுந்த முறையில் உருவாக்கும் படிப்பே எம்.பி.ஏ. (M.B.A.), B.B.A. போன்றவைகள் ஆகும்.

**B.B.A.–ல் சேர்ந்து வெற்றி பெற என்னென்ன தகுதி தேவை?**

- +2வில் வெற்றிப் பெற்றவர்கள் (வணிகவியல், பொருளியல் எடுத்துப் படித்தவர்களுக்கு முன்னுரிமை)
- ஆங்கில அறிவுத்திறன், கணக்கில் புலி, பொது அறிவின் தந்தையாக இருக்க வேண்டும். எங்கெங்கு நடத்தப்படுகின்றது : பொதுவாக தமிழகத்தில் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் B.B.A., B.B.M., B.A. (Corporate Science) B.A. (Co-operation) போன்ற இளநிலைப் படிப்புகள் கற்று தரப்படுகின்றது.

உயர் கல்வியில் இந்தியாவில் சிறந்தது I.I.M. என்ற உயர்நிலைக் கல்வி கூடங்கள் தான். I.I.M. – அகமதாபாத், கல்கத்தா, இந்தூர், கோழிக்கோடு, லக்னோ, பெங்களூர் ஆகிய இடங்களிலும், இந்தியாவின் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் M.B.A. என்ற பட்டமேற்படிப்பு சொல்லித் தரப்படுகின்றது. இங்கு படிப்பவர்கள், வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்கு சிறந்தவர்களாகின்றனர். இதுவல்லாமல் முக்கியமாக சில சிறப்பு நிறுவனங்களும் உள்ளன.

**உதவி சம்பளம்**

மாணவர்களுக்கு பயன்படும் வகையிலும், அவர்களை ஊக்குவின்ற பொறுப்பினை மிகவும் உணர்ந்து பல உதவிச் சம்பளங்கள் (Scholarship) கொடுக்கப் படுகின்றன. பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இதனை தொகுத்து வழங்கப்படுகின்றது. தமிழக அரசு பலவகைகளில் மாணவர்களுக்கு உதவி அளிக்கின்றது.

ரூபாய்
இலட்சத்தில்

★ சமூகப் பாதுகாப்பும்,
நலனும் என்ற முறையில் ---------------------------4.69

★ பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு
சிறப்புப் பயிற்சி ----------------------------------------2.00
(கிட்டத்தட்ட 3331 மாணவ-மாணவிகள்
போன வருடம் பயிற்சி பெற்றனர்)

★ தேசிய மாணவர் படைகளில்
சேர்ந்த மாணவர்களுக்கு உதவியாக ---------1722.00
(போன வருடம் ஏறத்தாழ 88,328
மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்)

★ நாட்டுநலப்பணித் திட்டத்தின் கீழ்
கல்லூரிகளில் 1,65,000
மாணவர்களும் சிறப்பு முகாம்களில்
பங்குபெறும் 85,000 மாணவர்களும்
பங்குபெற்று பயன்பெறுகின்றனர் ---------------- 281.00

★ உயர்கல்வித்துறையின் கீழ் வரும்
10 பல்கலைக்கழகங்களில், பல
பெருந்தலைவர்களின் பெயரில்
21 அறக்கட்டளைகளை ஒவ்வொன்றும்
25 இலட்சம் வீதம் கணக்கிட்டு,
அதிலிருந்து வரும் வட்டித்தொகையை
சிறந்த மாணவர்களுக்கு
உதவித்தொகையாக வழங்குகின்றன ----------- 42.00

★ எவரும் பட்டப்படிப்பு பயிலாத
குடும்பத்திலிருந்து தொழிற்கல்வியில்
சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு
அனைத்துச் செலவுகளையும்
அரசாங்கமே ஏற்றுக்கொள்கின்றது.
இந்த முறையில் அனைத்து மாணவர்களும்
பயன்பெறுகின்றனர் -------------------------------- 3.47

★ தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின
மாணவர்களின் கல்வித்தரம் உயர்த்தும்
வகையில் ----------------------------------------16.75

★ கிராமப்புறங்களில் படிக்கும் மாணவ
மாணவியர்க்கு ஊக்கப் பரிசுத்தொகை
ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து 100 பேர்
திறன்மிக்க மாணவர்களை (9ஆம் வகுப்பு
முதல் – 12 வரை) தேர்ந்தெடுத்து ரூ.1000
ஆண்டுதோறும் உதவித்தொகையாக
வழங்குகின்றது ---------------------------------- 100.00

★ பள்ளி இறுதித் தேர்வு மற்றும்
மேல்நிலைத்தேர்வுகளில் முதல்
மூன்று நிலைபெறும் மாணவர்களுக்கு
கல்வி உதவி ------------------------------------ 23.00

இது அல்லாது அனைத்து தாழ்த்தப்பட்ட பழங்குடி இனத்தை சேர்ந்த மாணவர்கட்கு அனைத்து சலுகைகளும் வழங்கப்படுகின்றது. அதேபோல் பிற்பட்டோர் வகுப்பினருக்கும் (BC/MBC) உதவிச்சம்பளமும் வழங்கப்படுகின்றது.

இவ்வாறு தமிழகத்தில் மாணவ–மாணவிகள் பயன்பெறுகின்றனர். விரிவான விளக்கங்களை கல்லூரிகள் அல்லது அந்தந்த பல்கலைக்கழகத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**கல்வி என்பது மனிதனுக்கு**, மனிதனாக வாழ மிக முக்கியம். கல்வியில் படித்து தேர்ந்தவனாக இருந்தால் மட்டும் போதுமா? ஒழுக்கம் தேவை. எனவே ஒழுக்கம் நிறைந்த கல்வி பெற வேண்டும். எல்லோரும் கல்வி பெற வேண்டும். அரசாங்கம் தான் எல்லோருக்கும் கல்வி கற்க வசதி செய்யவேண்டும் என்று நினைப்பது முழுமையாக ஏற்றுக் கொள்ள தக்கது அல்ல. தானாக படிக்க வேண்டும் என்றும், 'பிச்சைப்புகினும் கற்கை நன்றே' என்ற வாக்கினை மனதில் கொண்டு படித்தல் வேண்டும். உலகில் உள்ள அனைவரையும் ஒன்று சேர்க்கும் பாலம் கல்வி தான்.

அயராது உழைத்தலும், ஆழ்ந்த சிந்தனையும், தன்னாற்றலும், இடம், பொருள், ஏவல் என்ற மூன்றுக் கட்டங்களையும் சரியான முறையில் பயன்படுத்தி ஒரு கருத்தை அமைக்கின்றானே அவனே தலைவன். வெற்றிப்பெற்றவன் விஞ்ஞானி, அறிவாளி ஆகிறான். நீண்டகால பயணத்திற்காக, வெற்றிக்காக, சில குறுகியக்கால சந்தோஷங்களை அர்ப்பணிக்க வேண்டி வரும் அல்லது மேற்கூறிய இலக்கை அடைய பல சோதனைகள் வரலாம். அதனை திடத்துடன் எதிர்கொண்டு விதியையும், மதியால் வெல்லலாம் என்பதற்கிணங்க செயல்பட்டு வெற்றிகாணுங்கள்.

உங்கள் எண்ணங்கள்தான் செயற்பாடுகள்; உங்கள் செயற்பாடுகள்தான் எண்ணங்களாக தோன்றுகின்றன.

நல்லதை நினையுங்கள். வெற்றி உங்கள் கையில் உளவியல் நிபுணர்களின் கருத்தாகும்.

மாணவர்களே! உங்களுக்கு ஆர்வமுள்ள துறையை தேர்ந்தெடுத்து, எல்லா ஒழுக்கமும் பெற்று, வளமுடன் வாழ வாழ்த்துகின்றேன்.



ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906










# தமிழரசு







# கலைஞர் அரசின் நான்கு ஆண்டு சாதனைகள்



தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2031
சித்திரை – வைகாசி
மே 1–31, 2000
மலர் : 31 இதழ் : 21 & 22
விலை ரூ.10

222187

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1996ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார். தமிழ் மக்களின் நலனை நாளும் மனதில்கொண்டு அவர்களுக்கு தொண்டு செய்வதே தனது வாழ்வின் தவமாக கொண்டவர் கலைஞர்.

அவரது முந்தைய ஆட்சி காலத்தில் ஏராளமான திட்டங்களைத் தீட்டி எண்ணற்ற பல சாதனைகளை புரிந்து தமிழ்நாட்டில் ஒரு பொற்காலத்தையே உருவாக்கியவர்.

நான்காவது முறையாக அரசுப் பொறுப்பில் அமர்ந்து அவர் ஆற்றிவரும் அரும்பணிகளில் சில...

பெரியார் நினைவு சமத்துவபுரம்

❖ 1997 முதல் 150 சமத்துவபுரங்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு 53.31 கோடி ரூபாய். இதுவரை 66 சமத்துவபுரங்கள் திறப்பு; இவற்றுள் கட்டப்பட்டுள்ள 6500 வீடுகளில் தாழ்த்தப்பட்டவர்க்கு 2600; பிற்படுத்தப் பட்டோர்க்கு 1625; மிகப்பிற்படுத்தப் பட்டோர்க்கு 1625; இதர இனத்தவர்க்கு 650 என வழங்கப்பட்டுள்ளன.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

❖ 1997 முதல் மூன்று ஆண்டுகளில் 634 ஊராட்சிகளில் மொத்தம் ரூ.519 கோடியில் 79,372 பணிகள் நிறைவேற்றம்.

❖ 2000-2001இல் 210 கிராமங் களில் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகளுக்கு - ரூ.75 கோடி ஒதுக்கீடு.

நமக்கு நாமே திட்டம்

❖ 1997 முதல் மூன்று ஆண்டுகளில் 108 கோடி ரூபாயில் ஆயிரக்கணக்கான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதில் மக்கள் பங்கு ரூ.41 கோடி. 2000-2001இல் அரசு ஒதுக்கீடு ரூ.30 கோடி.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

❖ 1997-98ல் அறிமுகம்.

❖ ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு 1997-98இல் ரூ. 25 இலட்சம்; 1999-2000இல் ரூ. 50 இலட்சம்; 2000-2001இல் ரூ.77 இலட்சம் வீதம் உயர்வு; இதுவரை ரூ.258 கோடி ஒதுக்கீட்டில் பல பணிகள் நிறைவேற்றம்.



வாழ்வொளித் திட்டம்

❖ 40,648 பள்ளிகளில் இதுவரை 37,960 பள்ளிகளில் வாழ்வொளித் திட்டப்படி மருத்துவ சோதனை நடைபெற்றுள்ளது.



❖ 1999-2000இல் அறிமுகம்; 1 முதல் 12ஆம் வகுப்பு வரையான 59 இலட்சம் மாணவ மாணவியர்க்கு மருத்துவப் பரிசோதனை; 81,87,250 பேருக்குச் சிகிச்சைகள்; 79,776 மாணவ மாணவியர்க்குத் தொடர் சிகிச்சைகள்.

❖ சுகாதார அட்டைகள் வழங்கப்பட்டுள்ள மாணவர்கள் எண்ணிக்கை 16,28,244. இலவசமாக வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு ரூ.1.26 கோடி.



"வருமுன் காப்போம் திட்டம்"

❖ நோய் வந்தால் மட்டுமே மருத்துவர்களையும், மருத்துவமனைகளையும் நாட வேண்டும் என்று மக்களிடையே நிலவிவரும் மனோ நிலையை மாற்றி, நோய் வருமுன் தடுக்கும் உணர்வை அவர்களிடையே உருவாக்கிட வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப் பட்டுள்ள திட்டம்.

❖ இத்திட்டம் 29.11.99 அன்று திருவள்ளூர் மாவட்டம் பாடிய நல்லூரில் முதன் முதலில் தொடங்கப்பட்டது. இதுவரை 2541 முகாம்களில் 24,30,297 பேர் பயனடைந்துள்ளனர். இவர்களில் 1,53,010 பேர் தொடர் சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். பெரும் பாலானோர் கூலித் தொழிலாளிகள்; 40 சதவீதம் பேர் பெண்கள்; 26 சதவீதம் பேர் குழந்தைகள்.

❖ 15.5.2000 வரை முகாம்களில் இலவசமாக வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு 1 கோடியே 10 இலட்சத்து 33,147 ஆகும். 2000-2001இல் இலக்கு 10,000 முகாம்கள் ஒதுக்கீடு.

உழவர் சந்தை

❖ விவசாயிகளுக்கும் நுகர்வோர்களுக்கும் நேரடித் தொடர்பு ஏற்படுத்தி, இடைத்தரகர் களில்லாத நேர்மையான வியாபாரத்தின் மூலம் விவசாயிகள் பயன்பெற்றிடும் வகையில் தொடங்கப்பட்டது.

❖ தமிழகம் முழுவதும் 100 உழவர் சந்தைகள் திறக்கத் திட்டமிடப்பட்டு, முதலாவது "உழவர் சந்தை" 14-11-99 அன்று மதுரையில் தொடங்கப்பட்டது. இதுவரை 43 உழவர் சந்தைகள் திறப்பு.

❖ 15.5.2000 வரை ரூ.30.33 கோடி மதிப்பில் 4,88,15,033 கிலோ காய்கறிகள் விற்பனை; 4,04,824 விவசாயிகளும், 1,65,52,312 பொதுமக்களும் பயன்.






**கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்**

❖ உழவர்களின் செல்வமாய் மதிக்கப்படும் கால்நடைகளை நோய்களிலிருந்து காப்பாற்றி மேம்படுத்திட 18-1-2000 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக் குன்றத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

❖ 15.5.2000 வரை 1232 முகாம்களில் 40,07,989 கால்நடைகள் பயன். இலவசமாக வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு ரூ.66,15,725; ஒன்றியத்திற்கு மாதத்திற்கு ஒரு முகாம் வீதம் 4620 முகாம்கள் நடத்த 2000-2001இல் ரூ.2.29 கோடி ஒதுக்கீடு.

**பூமாலைத் திட்டம்**

❖ கிராமப்புறங்களில் தயாரிக்கப்படும் கைவினைப் பொருள்களுக்கு நகர்ப்புறங் களில் அங்காடி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக "பூமாலை" வணிகச் சின்னத்துடன் விற்பனை மையங்கள் அமைக்க 2000 - 2001 நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. முதல் "பூமாலை" விற்பனை மையம் திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூரில் 9.4.2000 அன்று தொடக்கம்.

**திருக்கோயில்கள்**

❖ திருக்கோயில்களில் 4 ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய சொத்துப் பதிவேடுகள் 7994. ஆனால், 1996 வரை 1380 மட்டுமே.

❖ 1996க்குப்பின் மீட்கப்பட்ட கோவில் சொத்துக்கள் 1859.15 ஏக்கர் நிலமும், 381.1382 கிரவுண்டு மனைகளும்.

❖ 1996க்குப்பின் பிப்ரவரி 2000 வரை அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ.109.10 கோடி.

❖ 2072 கோயில்களுக்குக் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன. முந்தைய ஆட்சியில் 441 குடமுழுக்கு விழாக்கள் மட்டுமே.



❖ 1856 இலவசத் திருமணங்கள் திருக்கோவில் நிதியில் இருந்து செய்யப் பட்டுள்ளன.

❖ ஒவ்வொரு கோவிலிலும் ஆதிதிராவிடரில் ஒருவர் ஓர் அறங்காவலராக கண்டிப்பாக நியமனம் செய்யப்பட வேண்டும் எனும் கழக அரசின் 1990 ஆணைப்படி தற்போது 10 ஆயிரம் ஆதிதிராவிடர்கள் தமிழகத் திருக்கோவில்களில் அறங்காவலர்கள்.

**கால்நடை வளம்**

❖ புதிய கால்நடை மருந்தகங்கள் 120.

❖ நிலை உயர்த்தப்பட்ட கால்நடை மருந்தகங்கள் 50.

❖ கரூர், திருவாரூர், உதகமண்டலம் ஆகிய 3 கால்நடை மருத்துவமனைகள் பிரதம மருத்துவமனையாகத் தரம் உயர்வு.

❖ 2126 பார்வை கிளை நிலையங்கள் கால்நடைகளுக்காக புதிதாய் தொடங்கப் பட்டன.

❖ வளர்ப்புப் பிராணிகளுக்கு 5 ரூபாய் வீதம் வசூலிக்கப்பட்டு வந்த மருத்துவக் கட்டணம் 1996இல் நீக்கப்பட்டது.

❖ கால்நடைகளுக்குக் குடற்புழு நீக்கத்திற்காக வசூலிக்கப்பட்ட 1 ரூபாய் கட்டணம் 1996இல் ரத்து; பயனடைந்த கால்நடைகள் 3,62,37,000.

❖ கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்கு ரூ.2.56 கோடியில் புதிய கட்டடம்.

❖ புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கால்நடை மருத்துவர்கள் எண்ணிக்கை 174.

❖ கால்நடைப் பண்ணைகளில் தினக்கூலி களாகப் பணிபுரிந்த 1185 பேரில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த 877 பேர் 1997-98இல் பணி நிரந்தரம்.

❖ கால்நடைப் பாதுகாப்புத் துறையில் பணியாற்றி இறந்துபோன ஊழியர்களின் வாரிசுகள் 181 பேருக்கு கருணை அடிப்படையில் நியமனம்.

❖ பட்டுக்கோட்டை அழகிரி பெயரில் ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடைப் பல்கலைக்கழகத்தில் அறக்கட்டளை வட்டித் தொகையில் இருந்து மாணவர்களுக்கு உதவித்தொகை.

❖ கிராமப்புறப் பள்ளிகளில் மேல்நிலைக்கல்வி முடித்துவரும் மாணவ மாணவியருக்கு



கால்நடை மருத்துவக் கல்வியில் 1998-99 முதல் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு.

- தமிழ்நாடு கால்நடை பாதுகாப்புத் திட்டம் 18.1.2000 அன்று திருக்கழுக்குன்றத்தில் தொடக்கம்.

- 1997-98இல் தென் மாவட்டங்களில் நீலநாக்கு நோய் தாக்கி இறந்த கால்நடைகளுக்காக ஏழை, எளிய விவசாயிகளுக்கு 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டது.

## கல்வித்துறைக்கு நிதி ஒதுக்கீடு

- 1995-96இல் ஒதுக்கீடு ரூ.2233.17 கோடி; 2000-2001இல் ரூ.4949 கோடி; கூடுதல் ஒதுக்கீடு ரூ.2715.83 கோடி.

**பள்ளிக் கல்வித் துறை நான்காண்டு சாதனைகள்**

- 965 புதிய தொடக்கப் பள்ளிகள்.

- 412 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 330 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 253 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்வு.

- 35,411 இடைநிலை ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு முன்னுரிமைப்படி நியமனம்.

- 2,696 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களும், 2,838 பட்டதாரி ஆசிரியர்களும் நியமனம்.

- 2,562 மொழி ஆசிரியர் முதலிய சிறப்பாசிரியர்கள் நியமனம்.

- 10,12 ஆம் வகுப்புத் தேர்வுகளில் மாநில/ மாவட்ட அளவில் முதல் 3 இடங்களைப் பெறும் மாணவர்தம் உயர்கல்விச் செலவு 1996 முதல் அரசு ஏற்பு.

- 666 பள்ளிகளில் - 11, 12 ஆம் வகுப்புகளில் கணினிப் பாடம் அறிமுகம் (1999-2000). 2000-2001 இல் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், 9 ஆம் வகுப்பிலிருந்து, கணினிப் பாடம் விரிவுபடுத்தப்படுகிறது. அரசுக் கல்லூரி களிலும் கணினிப் பாடம் அறிமுகம்.

- தீவிர தொடக்கக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக, 1999-2000 ஆம் ஆண்டில், 6 முதல் 14 வயது வரையுள்ள 27,000 குழந்தைகள் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப் பட்டுள்ளனர்.



- 1998-99 ஆம் ஆண்டு முதல் 1 முதல் 5 ஆம் வகுப்புவரை பயிலும அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பாடநூல்கள். பயன்பெற்ற மாணவர் கள் 59.13 இலட்சம் இதற்காக அரசு ரூ.25.31 கோடி செலவிட்டுள்ளது

- 857 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு





ரூ.40.49 கோடி செலவில் வகுப்பறை வசதிகள்.

- 400 உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.3 கோடி செலவில் கழிப்பறை வசதிகள்.

- 6,62 பள்ளிகளுக்கு ரூ.39.09 கோடி செலவில் அறிவியல் ஆய்வகக் கட்டிடங்கள்.

- 1444 பள்ளிகளுக்கு ரூ.6.68 கோடி செலவில் அறிவியல் கருவிகள்.

- 400 பள்ளிகளுக்கு ரூ.2 கோடி மதிப்பில் நூலகப் புத்தகங்கள் வழங்கல்.

- 100 கிராமப்புற திறமை மிக்க மாணவ, மாணவியருக்கு 9ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை தொடர்ந்து 4 ஆண்டுகளுக்கு, ஆண்டுதோறும் ரூ.1000 படிப்புதவித் தொகை.

- ஆண்டுதோறும் ஏறத்தாழ ஆயிரம் மாணவ, மாணவியர்க்கு ரூ.20 இலட்சம் உதவித் தொகை.

- பட்டதாரி இல்லா குடும்பங்களிலிருந்து தொழிற்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயிலும் முதல் 10 நிலை மாணவ மாணவிகளின் கல்விச் செலவு முழுவதையும் 1996-97 முதல் அரசு ஏற்பு.

- மாணவர் உடல் நலன் காக்க 1999-2000இல் வாழ்வொளித் திட்டம் அறிமுகம்.

- 10, 12ஆம் வகுப்பு படித்து முடித்துச் செல்லும் பொழுதே மாணவர் களுக்கு சாதிச் சான்றிதழ், வாழ்விடச் சான்றிதழ், குடும்ப வருமானச் சான்றிதழ் ஆகியன வழங்கும் திட்டம் 1999-2000ல் அறிமுகம்.

- வேலை வாய்ப்பக பதிவு முன்னுரிமை அடிப் படையில் இடைநிலை ஆசிரியர் பணி நியமனம்.

- 8 மாவட்டங்களில் புதிய மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களுக்கு ரூ. 12 கோடி செலவில் புதிய கட்டடங்கள்.

- 17 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் 1997-98ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் 850 ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுக்கு கூடுதலாக இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்புகள்.

- 1999-2000 ஆண்டு முதல் இடைநிலை ஆசிரியர் பயிற்சியில் கூடுதல் சிறுபான்மை மொழிப்பிரிவுகள்.

- அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட பயிற்சிப் பள்ளிகளில் பயின்று பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 1998-99 ஆம் ஆண்டு முதல் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 30 சதவீதம் இட ஒதுக்கீடு. 5 ஆண்டு வயது வரம்புத் தளர்ச்சி

**உயர்கல்வித்துறை**

- 1997இல் உயர் கல்வித்துறை தனியே உருவாக்கம்.

- 964 கல்லூரி விரிவுரையாளர்கள் நியமனம்

- 1996க்குப்பின் தொடங்கப்பட்டுள்ள சுயநிதி பொறியியல் கல்லூரிகள் 51; 2000-2001இல் மேலும் 18 புதிய சுயநிதி

பொறியியல் கல்லூரிகள். (5 ஆண்டு அ.தி.மு.க அரசில்-31)

- 1996க்குப்பின் 62 சுயநிதி பாலிடெக்னிக் நிறுவனங்கள் புதிதாகத் தொடங்கப் பட்டுள்ளன.
- பொறியியல் கல்லூரி மாணவர்கள் சேர்க்கையில் 1997-98முதல் ஒற்றைச் சாளர முறை (Single Window System) அறிமுகம்.
- 1998-99 முதல் பாலிடெக்னிக் நிறுவனங்களிலும் இம்முறை அறிமுகம்.
- 103 புதிய சுயநிதி கலை அறிவியல் கல்லூரிகள்.
- 2 அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரிகள்,
- 42 தனியார் கல்லூரிகளில் எம்.பி.ஏ., எம்.சி.ஏ. ஆகிய பட்டப் படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.
- 31 அரசுக் கலை அறிவியல் கல்லூரிகளில் கணினி அறிவியல் பாடம் தொடக்கம்.
- இளம்- கலை / இளம் அறிவியல் பட்டப்படிப்பில் தமிழ் வழி பயின்ற 76,526 மாணவ மாணவியர்க்கு ரூ.400/- வீதம் 3.06 கோடி ரூபாய் ஊக்கத் தொகை.
- 1997-98இல் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மையம் (TANITEC) தொடக்கம்; Computer Graphics, Software Engineering and Hardwares System, Multimedia Telecommunications, Information Technology, Digital Technology போன்ற பாடத்திட்டங்கள் அறிமுகம்.
- 1.1.1996 முதல் கல்லூரி ஆசிரியர்களுக்கு U.G.C ஊதிய விகிதம் செயலாக்கம்.
- நெல்லையில் ஒரு சட்டக் கல்லூரி.
- திருச்சியில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் பெயரில் மருத்துவக் கல்லூரி.
- தூத்துக்குடியில் மேலும் ஓர் அரசு மருத்துவக் கல்லூரியைத் தொடங்க மத்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. மதுரையில் மற்றும் ஒரு மருத்துவக் கல்லூரி 2000-2001இல் தொடங்கிட அறிவிப்பு.
- சென்னை மருத்துவக் கல்லூரி 7.7.1998 அன்று மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையினால் நிகர்நிலைப் பல்கலைக் கழகமாக நிலை உயர்த்தப்பட்டது.
- சேலத்தில் 17.9.1997 அன்று பெரியார் பல்கலைக்கழகம்.
- 20.9.1997இல் சென்னையில் டாக்டர் அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக் கழகம் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் திறப்பு.
- பட்டதாரிகள் இல்லாக் குடும்பங்களில் இருந்து தொழிற் கல்லூரிகளில் சேரும் முதல் 10 நிலை மாணவர்களின் உயர்கல்விச் செலவு 1996-97 முதல் அரசு ஏற்பு. 1996-97 முதல் 1998-99 வரை 3,47,273 ரூபாய் அரசு செலவு.
- கிராமப்புறப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துத் தொழிற் கல்விப் பிரிவுகளிலும் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு திட்டம் 1997-98முதல் நடைமுறை; 1997-98இல் 864 மாணவர்கள், 1998-99இல் 1190 மாணவர்கள்; 1999-2000த்தில் 1544 மாணவர்கள் பயன்.
- 15 பல்கலைக் கழகங்களில் மன்னர்கள், வீரர்கள், தலைவர்கள், புலவர்கள் பெயரில் ரூ.25 இலட்சம் வீதம் ரூ.7 கோடி செலவில் 28 அறக்கட்டளைகள்.
- (666 பள்ளிகளில்-11,12ஆம் வகுப்புகளில் கணினிப்பாடம் அறிமுகம் (1999-2000). 2000-2001இல் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், 9ஆம் வகுப்பிலிருந்தும்) கலை அறிவியல் கல்லூரிகளிலும் கணினிப் பாடம் விரிவுபடுத்தப்படும்.
- உயர்கல்வியில் தமிழ்மொழியைப் பயிற்று மொழியாக்குவது குறித்து முதல்வர் கலைஞர் தலைமையில் உயர்மட்டக்குழு செயல் தலைவராக, பேராசிரியர் தமிழண்ணல் நியமனம்.





- 1999இல் உருது அகாடமி தொடக்கம், முதற்கட்டமாக 15 இலட்சம் ரூபாய் நிதி.
- ஆவணக் காப்பகத்தில் ரூ.80 இலட்சம் செலவில் கட்டப்பட்ட புதிய நூலகக்கட்டடம் 4.2.2000 அன்று திறப்பு.

## சமூகச் சீர்திருத்தத்துறை

- மூடப்பழக்கங்களை அகற்றுதல், பெண்ணுரிமைக்குப் பாடுபடுதல், சாதி, பேதங்களை அகற்றிச் சமதர்மச் சமுதாயம் உருவாகப் பாடுபடுதல் முதலியவற்றை நோக்கமாகக் கொண்டு சமூகச் சீர்திருத்தத்துறை என்னும் புதிய துறை 1999-ல் உருவாக்கம்
- பகுத்தறிவு, விஞ்ஞானம் ஆகியவற்றில் மக்களை ஈடுபடுத்திடும் பிரச்சாரங்களை சின்னத்திரை மூலமாகவும், துண்டுப் படங்கள் மூலமாகவும், நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள் மூலமாகவும் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத்துறை

- இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத்துறை என்னும் புதிய துறை, 28-3-2000 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

## சமூகநலத்துறை

### திருமண உதவித் திட்டங்கள்

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்**

- 1989இல் கலைஞர் அரசில் அறிமுகம் - உதவித்தொகை ரூ.5,000; 1996இல் நிதியுதவி ரூ.10,000 என உயர்வு.
- 1996க்குப்பின் ரூ. 201 கோடியே 72 இலட்சத்து 20,000 ரூபாய் செலவு; பயன் பெற்ற மகளிர் 2,01,722.

**அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம்**

- 1989இல் கலைஞர் அரசில் உதவித்தொகை ரூ.5,000; 1996இல் ரூ.10,000; மணமக்களில் ஒருவர் ஆதிதிராவிடர் எனில் 2-10-1997 முதல் உதவித்தொகை ரூ. 20,000 என உயர்வு.
- 1996க்குப்பின் 2,536 தம்பதியர்க்கு ரூ.3 கோடியே 27 இலட்சத்து 5000 நிதியுதவி.

**டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம்**

- 1975இல் அறிமுகம்; 1989இல் நிதியுதவி ரூ.5,000; 1997-98இல் ரூ.7,000;

1999-2000இல் அது ரூ.10 ஆயிரமாக மேலும் உயர்வு.

❖ 1996க்குப்பின் 791 விதவைப் பெண்களுக்கு ரூ.55.24 இலட்சம் நிதியுதவி.(31.3.2000 வரை)

**அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்**

❖ 1996-97இல் நிதியுதவி ரூ. 2000; 1997-98இல் ரூ. 3000; 1998-99இல் ரூ. 5000; 1999-2000இல் ரூ.7,000.

❖ 1996க்குப் பின் 360 மகளிர்க்கு ரூ.16.28 இலட்சம் உதவி.

**ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைகளின் மகள் திருமண உதவித் திட்டம்**

❖ 1990இல் நிதியுதவி ரூ. 1,000; 1996இல் நிதியுதவி ரூ.2,000 என உயர்வு; 1997இல் ரூ.3,000; 1998இல் ரூ.5,000; 1999இல் ரூ.7,000 என உதவிநிதி உயர்த்தப்பட்டது.

❖ 1996க்குப்பின் 4,209 பெண்களுக்கு ரூ.1 கோடியே 75 இலட்சத்து 60,000 நிதியுதவி.

❖ இலக்கு; 1050 மகளிர்க்கு ரூ.73.50 இலட்சம்.

**ஊனமுற்றவர்களை மணந்துகொள்ளும் ஊனமற்றவர்களுக்கு ஊக்க நிதி**

❖ காதுகேளாத, வாய்பேசாதவர்களை மணம் செய்துகொள்ளும் ஊனமற்றவர்களுக்கும்; ஒரு கை அல்லது கால் இழந்தோரை திருமணம் செய்துகொள்ளும் ஊனமற்றவர்களுக்கும் வழங்கப்படும் நிதியுதவி ரூ.5,000 என்பது ரூ. 7,000 என 2000-2001இல் உயர்வு.

**நலத்திட்டங்களுக்கு மாதரசிகளின் பெயர்கள்**

❖ தமிழ்நாடு மகளிர் திட்டத்திற்கு பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம்.

❖ பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்திற்கு, சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்.

❖ அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு



சத்தியா அம்மையார் நினைவு ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம்.

❖ மகளிர்க்கு இலவசத் தையல் எந்திரம் வழங்கும் திட்டத்திற்கு சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு மகளிர் இலவசத் தையல் எந்திரங்கள் வழங்கும் திட்டம் எனப் பெயர்கள் சூட்டப்பட்டன. 2000-2001இல் ஆண்டுக்கு 4,000 தையல் இயந்திரம் என்பது 5,500 என அதிகரிப்பு. இதில் 500 ஊனமுற்றவர்களுக்கு.

**நலிந்தோர் உதவித்தொகை**

❖ மாத ஓய்வூதியம் ரூ.100 என்பது, 1998இல் ரூ.150 ஆகவும், 2000இல் ரூ.200 ஆகவும் உயர்வு; பயனாளிகள் எண்ணிக்கை உச்சவரம்பு ரத்து.



❖ முதியோர், நெசவாளர்கள், மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், ஆதரவற்ற விதவையர், உடல் ஊனமுற்றோர் / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் போன்ற பிரிவினரில் 8,43,295 பேர் பயன்.

❖ விதவைப் பெண்களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட மகன் இருந்தாலும் முதியோர் உதவித்திட்டத்தின்கீழ் உதவித்தொகை வழங்கிட 2.6.1998 அன்று ஆணையிடப்பட்டது.

**சத்துணவுத் திட்டம்**

❖ 1989-90இல் 2 வாரங்களுக்கு ஒரு முட்டை; 1.6.1998 முதல் வாரம் ஒரு முட்டை.

❖ 1995-96இல் சத்துணவுத் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 360 கோடி; 2000-2001இல் ரூ. 581 கோடி - கூடுதல் ஒதுக்கீடு ரூ.221 கோடி.

❖ பள்ளிச் சத்துணவு பணியாளர்கள் பணியிலிருக்கும்போது இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு குழுக்காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் (Group Insurance Scheme) குடும்ப நலநிதி வழங்க 7.11.1990 அன்று கலைஞர் அரசு ஆணையிட்டது;

ஆனால் முந்தைய அரசு இந்த ஆணையை 1994ஆம் ஆண்டில் நிறுத்தி வைத்ததன் காரணமாக இறந்துபோன சத்துணவுத் திட்ட பணியாளர்களின் குடும்பங்களுக்கு குடும்ப நலநிதி வழங்கப்படாமலேயே இருந்தது;

1996ல் கலைஞர் அரசு மீண்டும் அமைந்த பிறகு இந்த ஆணையை மீண்டும் செயல்படுத்தியதுடன் முந்தைய ஆட்சி காலத்தில் இறந்துபோன



சத்துணவுத் திட்ட பணியாளர்களின் குடும்பங்களுக்கும் குடும்பப் பாதுகாப்பு நிதி வழங்கிட ஆணையிடப்பட்டது.

❖ சத்துணவுப் பணியாளர்களை நிரந்தரப் பகுதி நேரப் பணியாளர்கள் (Permanent part time employees) என்று 16.4.1989இல் ஆணையிட்ட கலைஞர் அரசு சத்துணவுப் பணியாளர்களுக்கு சிறப்பு சேம நல நிதித் திட்டத்தையும் (Special Provident Fund) 25.4.1998 முதல் விரிவுபடுத்தியது.

❖ சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள் நிலை-1 மற்றும் நிலை-2, ஊட்டச்சத்து பணியாளர்கள் ஆகியோருக்கு ரூ.200-5-250-10-400 என வழங்கப்பட்ட ஊதியத்தினை ஆண்டுக்கு ரூ. 140 கோடி செலவில் 1.1.1996 முதல் ரூ.600-10-700-20-1100 என உயர்த்தி, புதிய ஊதிய விகிதத்தை வழங்கி, குறைந்தபட்ச அடிப்படை ஊதியம் ரூ.760/- என நிர்ணயித்தது கலைஞர் அரசு.

❖ அதேபோல சமையலர்களுக்கு மாதம் ரூ.175 வீதம் வழங்கப்பட்ட மதிப்பூதியம் 1.1.96 முதல் ரூ.450/- எனவும், உதவியாளர்களுக்கு மாதம் ரூ. 125 வீதம் வழங்கப்பட்ட மதிப்பூதியம் 1.1.96 முதல் ரூ.400/- எனவும் உயர்த்தி 25.4.98 அன்று ஆணையிடப்பட்டது.

❖ சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர், உதவியாளர்கள் ஓய்வு பெறும் வயது 55 என்பது 58 ஆக உயர்த்தி 25.4.98 அன்று ஆணையிடப்பட்டது.

❖ சத்துணவுப் பணியாளர்கள் பணிக்காலத்தில் இறக்க நேர்ந்தால் ஈமச் சடங்குக்காக வழங்கப்பட்ட தொகை 2000 ரூபாய் என்பது 5,000 ரூபாயாக உயர்த்தி 24.4.1997 அன்று ஆணையிடப்பட்டது.

❖ சத்துணவுப் பணியாளர்களுக்கு கோடை விடுமுறை காலத்திற்கும் ஊதியம் வழங்கப்படும் என 27.6.1998 அன்று சத்துணவு ஊழியர் மாநாட்டில் முதல்வர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

❖ சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் சமையலர், உதவியாளர்கள் ஆகியோர் பணிக்காலத்தில் இறக்க நேர்ந்தால் அவர்களுடைய வாரிசுகளுக்கும் கருணை அடிப்படையில் வேலை வழங்கப்படும் என 27.6.1998 அன்று சத்துணவு ஊழியர் மாநாட்டில் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப் படுகிறது.




❖ ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் சத்துணவு மானியம் 13 காசுகள் என்பது 18 காசுகளாக 23.12.1996 அன்று உயர்த்தப்பட்டது.

❖ தற்போது 18 காசுகள் என்பது 23 காசுகளாக உயர்த்தப்படுமென நிதிநிலை அறிக்கையில் (2000-2001) அறிவிக்கப் பட்டுள்ளது.

## உள்ளாட்சித் துறை

### உள்ளாட்சித் தேர்தல்களில் பெண்களுக்கு 33 விழுக்காடு ஒதுக்கீடு

❖ 1996ல் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்.

❖ பெண்களுக்கு 33 விழுக்காடு ஒதுக்கீடு.

❖ 44,143 பெண்கள் உள்ளாட்சி அமைப்புகளில் பதவியேற்பு.

❖ அவர்களில் 2 பெண்கள் மேயர்கள், அவர்களிலும் ஒருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்.

### உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி, அதிகாரம்

❖ திட்டங்கள் தாமதமின்றி உடனுக்குடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக, உள்ளாட்சி அமைப்புகளில் திட்டங்களுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்படும் திட்டங்களுக்கான நிதிவரம்பு 1996க்குப் பின்,

சென்னை மாநகராட்சிக்கு ரூ.7.50 இலட்சம் வரை என்பது ரூ.50 இலட்சம் வரை என்றும்,

மற்ற மாநகராட்சிகளுக்கு ரூ.2 இலட்சம் வரை என்பது ரூ.25 இலட்சம் வரை என்றும்,



நகராட்சிகளுக்கு ரூ.10 ஆயிரம் என்பது ரூ.10 இலட்சம் வரை என்றும் உயர்த்தப்பட்டுள்ளது.

### வரி வருவாயில் உள்ளாட்சிகளுக்கு 8 விழுக்காடு

❖ 1997-98 முதல் மாநில வரி வருவாயிலிருந்து 8 விழுக்காடு நிதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து வழங்கப்படுகிறது.

## ஊரக வளர்ச்சித்துறை

### 4 ஆண்டுகளில் 9,32,129 பணிகள்

❖ முந்தைய ஆட்சியில் நிலுவையிலிருந்த 1,14,141 பணிகளுடன், கடந்த நான்கு ஆண்டுகளில் எடுக்கப்பட்ட புதிய பணிகளையும் சேர்த்து மொத்தம் 9,36,129 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

❖ தமிழகத்தில் உள்ள பேரூராட்சிகளுக்கு நான்கு ஆண்டுகளில் ரூ.540 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

### மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் அவலம் நீக்கி அரிய சாதனை

❖ மனித கழிவுகளை மனிதனே சுமக்கும் அவல நிலையை அகற்றிட அனைத்து பேரூராட்சிகளிலும் இருந்த 417 உலர் கழிப்பிடங்களும், அனைத்து நகராட்சி மாநகராட்சிப் பகுதிகளிலும் இருந்த 238 உலர் கழிப்பிடங்களும் - ஆக மொத்தம் 655 உலர் கழிப்பிடங்களும் நவீன கழிப்பிடங்களாக 10.73 கோடி ரூபாய் செலவில் மாற்றப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

❖ 9 புதிய ஊராட்சிகளும், ஏற்காடு ஊராட்சி ஒன்றியமும் உருவாக்கப்பட்டன.

❖ 29.75 கோடி ரூபாய் செலவில் 708 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள்.

❖ 94.80 கோடி ரூபாய் செலவில் 4,186 ஆரம்பப் பள்ளிக் கட்டடங்கள்.

❖ 68.58 கோடி ரூபாய் செலவில் 4,475 நியாய விலைக் கடைகள்.

❖ 12.06 கோடி ரூபாய் செலவில் 1,074 சத்துணவு மையங்கள்.

❖ 350 கோடி ரூபாய் செலவில் 35 ஆயிரத்து 507 நீர்ப்பிடிப்பு / ஆதாரப் பணிகள்.

❖ 69.42 கோடி ரூபாய் செலவில் 12,612 ஜீவன்தாரா கிணறுகள்.

❖ 9.07 கோடி ரூபாய் செலவில் 656 ஊராட்சி அலுவலகக் கட்டிடங்கள்.

❖ 35.28 கோடி ரூபாய் செலவில் 22 ஆயிரத்து 53 தொலைக்காட்சி அறைகள்.

❖ 32.65 கோடி ரூபாய் செலவில் 1,28,626 தனி நபர் கழிப்பறைகள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன.

❖ 1.75 கோடி ரூபாய் செலவில் 3,92,549 புகையில்லா அடுப்புகளும், 1.20 கோடி ரூபாய் செலவில் 5,993 கரிமவாயு கலன்களும் அமைக்கப்பட்டுள்ளன.

❖ 6.77 கோடி ரூபாய் செலவில் 2,238 தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் கழிவறைகள்.

❖ ரூ.220.50 கோடியில் 4,76,106 பயனாளிகளுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவிகள்.

❖ ரூ.16.78 கோடி செலவில் ஊரக இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 44,737 இளைஞர்களுக்குப் பயிற்சிகள்.

❖ நான்கு ஆண்டுகளில் ஊராட்சிப் பகுதிகளில் 90,000 புதிய தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

- 12,000 தெரு விளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன.

(ஊரக வளர்ச்சித்துறை மேற்கொண்ட சாலை வளர்ச்சிப் பணிகள் நெடுஞ்சாலைத்துறை பகுதியில் இடம் பெற்றுள்ளன)

## நகராட்சி நிர்வாகம் மற்றும்

## குடிநீர் வழங்கல்

### குடிநீர் வசதி

**ஊரகக் குடிநீர் வசதிகள்**

- ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் அளிக்க உறுதிபூண்டு, 32,049



குடியிருப்புகளில் 1996 முதல் இதுவரை 21,501 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.1,003.79 கோடி செலவில் முழுமையாக குடிநீர் வசதி செய்து கொடுக்கப் பட்டுள்ளது. எஞ்சிய 10,548 குடியிருப்புகளுக்கும் 2 ஆண்டு களில் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

- இராமநாதபுரம் மாவட்டத்தில் உவர்நீரை நன்னீராக்கும் 11 திட்டங்களால் (கலன்களால்) குடிநீர் வசதி பெற்ற கிராம குடியிருப்புகள் 237 - செலவு ரூ.62.11 கோடி.

**நகர்ப்புறக் குடிநீர் வசதிகள்**

- நகர்ப்புறக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், 140 நகர பகுதிகளுக்கு ரூ.304 கோடி செலவில் குடிநீர்த்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- ஆசியாவிலேயே மிகப் பெரிய - கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் - 27.6.1999 அன்று இராமநாதபுரம் மாவட்டம் நரிப்பையூரில் ரூ.51.07 கோடியில் நிறைவேற்றம்.

**அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் குடிநீர்த் திட்டப் பணிகள்**

- 636 ஊராட்சிகளில் குடிநீர்த்திட்ட பணிகள் மேற்கொள்ளப் பட்ட குடியிருப்புகள் 4,869.
- பணி முடிக்கப்பட்ட குடியிருப்புகள் 3,985 - செலவு ரூ.104.90 கோடி.





## மாநகராட்சிகள்

**சென்னை மாநகரில்**

- 1997க்குப் பின் கட்டப்பட்ட சிறு பாலங்கள் 48 - செலவு ரூ.4.26 கோடி.
- ரூ.115.50 கோடி செலவில் கட்ட திட்டமிடப்பட்ட 10 மேம்பாலங்களில் 5 மேம்பாலங்கள் திறப்பு - மேலும் 5 மேம்பாலங்கள் விரைவில் திறக்கப்படும்.
- 108.50 கோடி ரூபாய் செலவில் மேலும் 8 மற்றும் 7.91 கோடி ரூபாய் செலவில் 3 சுரங்கப் பாதைகள் அமைத்திட முடிவு.
- ரூ.5.11 கோடியில் நேப்பியர் பாலம் எழிலுடன் அகலப்படுத்தப்பட்டுள்ளது.
- சென்னை இராயபுரத்தில் ரூ. 17 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 1.10 கிமீ. நீளமுள்ள ரயில்வே மேம்பாலம் 1999 நவம்பரில் திறப்பு.
- தெரு விளக்குகள் அனைத்தும் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன.
- சைதாப்பேட்டை பஜார் சாலையில் ரயில் பாதையின் கீழாக வாகன சுரங்கப்பாதை அமைக்கப் படுகிறது. இதுவரை செலவு ரூ.1.68 கோடி.
- எழிலகம் அருகில் பயணிகள் சுரங்கப் பாதை 69 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப் பட்டுள்ளது.



- கோயம்பேட்டில் ஆசியாவிலேயே பெரிய பேருந்து நிலையம் ஏறத்தாழ 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.
- கொத்தவால் சாவடி காய்கறிச் சந்தை கோயம்பேட்டிற்கு மாற்றப்பட்டதால் உயர்நீதிமன்றத்தை சுற்றியப் பகுதியில் நெரிசல் நீக்கப்பட்டுள்ளது.
- சிங்கப்பூர் நிறுவனத்தின் மூலம் திருவல்லிக்கேணி, மயிலை, கோடம்பாக்கம் பகுதிகளில் தூய்மை திட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- திருச்சி, மதுரை, நெல்லை, கோவை, சேலம் ஆகிய 5 மாநகராட்சிகளுக்கும், அடிப்படை வசதிகளை மேம்படுத்திட ஆண்டுக்கு ரூ.25 கோடி வீதம் மொத்தம் ரூ.100 கோடி வழங்கப்பட்டு, குடிநீர், சாலை, தெருவிளக்குகள், வடிகால்கள் முதலிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 8758 பணிகளில் 8664 பணிகள் முடிந்துள்ளன.
- பத்தாவது நிதிக்குழு பரிந்துரை அடிப்படையில் சென்னை நீங்கலாக 5 மாநகராட்சிகளுக்கும் நான்கு ஆண்டுகளில் ரூ.16.85 கோடி வழங்கப்பட்டு, எடுக்கப்பட்ட




770 பணிகளில் - தெரு விளக்குகள், சாலை வசதிகள், பொதுக் கழிப்பிடம், குடிநீர் மேம்பாடு உள்ளிட்ட 751 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

❖ மாநகராட்சிகளின் நிதிநிலையை உயர்த்த 6 மாநகராட்சிகளுக்கும் மாநில நிதிப்பங்கேடாக 1997-98 முதல் 3 ஆண்டுகளில் ரூ.313.61 கோடி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.142.18 கோடி வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

❖ பகுதி 2 திட்டத்தின்கீழ் திருச்சி, மதுரை, நெல்லை, சேலம் மாநகராட்சிகளுக்கு ரூ.1.24 கோடி வழங்கப்பட்டு, 344 வடிகால் மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**மதுரை மாநகராட்சி**

❖ ரூ.11.31 கோடி செலவில் பேருந்து தடச்சாலைகளும், பிரதானச் சாலைகளும், ரூ.1.5 கோடியில் புறச்சாலைகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

❖ ரூ.95 இலட்சம் செலவில் புதிய குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டு, ரூ.2.70 கோடி செலவில் குடிநீர் வழங்கும் பணிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

❖ விசுவாசபுரி, ஆர்.வி. நகர், ஆரப்பாளையம், கண்மாய்க்கரை ஆகிய இடங்களில் ரூ.1.81 கோடியில் கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ தரைப்பாலம் ரூ.1 கோடி செலவிலும், கல்பாலம் ரூ.8 கோடி செலவிலும், மதுரா கோட்ஸ் பாலம் ரூ.9 கோடி செலவிலும் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளன.

❖ ரூ.10 கோடி செலவில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கட்டப்பட்டுள்ளது.

❖ ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் புதை வடிகால் திட்டம் மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது.



**கோவை மாநகராட்சி**

❖ ரூ.2.52 கோடியில் 31.76 கி.மீ. சாலை அமைக்கப் பட்டுள்ளது.

❖ ரூ.1.02 கோடியில் 10.94 கி.மீ. நீள வடிகால் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

❖ ரூ.1.50 கோடியில் மின்தகன நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டது.

❖ பில்லூர் குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக ரூ.27.23 கோடி வழங்கப்பட்டுள்ளது.

❖ ரூ.5 கோடி செலவில் தடாகம் ரோடு, சக்தி ரோடு ஆகிய இடங்களில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ கோவை நான்காவது மண்டலத்தில் புதைவடிகால் அமைக்க ரூ.57.46 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

**திருச்சி மாநகராட்சி**

❖ ரூ.2.76 கோடியில் 1340 சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

❖ திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ரூ.1.50 கோடியில் பல்வேறு வாகனங்களும், தளவாடங்களும் வாங்கப்பட்டுள்ளன.

**சேலம் மாநகராட்சி**

❖ ரூ.3.45 கோடி மதிப்பீட்டில் 176 கடைகள் கொண்ட வணிக வளாகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**நெல்லை மாநகராட்சி**

❖ ரூ.1.27 கோடி செலவில் தச்சாநல்லூர் பகுதிக்குக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

❖ வேய்ந்தான்குளம் பகுதியில் ரூ.6.90 கோடியில் பேருந்து நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**நகராட்சிகள்**

❖ மாநில வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்கும் 8 விழுக்காடு தொகையில் 45 விழுக்காடு தொகை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படுகிறது.

❖ இதன்படி, 1997-98 முதல் மூன்று ஆண்டுகளில் ரூ.1013.97 கோடி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.458.63 கோடி வழங்கப்படுகிறது.

❖ ஆண்டுக்கு ரூ.10 கோடி வீதம் ரூ.40 கோடி வழங்கப்பட்டு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சுகாதார மேம்பாடு, துப்புரவு, சிமெண்ட் சாலை முதலிய இனங்களில் 2271 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன; 30,000 தெருவிளக்குகள் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ளன; குப்பை அகற்றும் பணியில் மாட்டு வண்டிகளை படிப்படியாக அகற்றிட 1164 வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

❖ ஆண்டுக்கு ரூ.15 இலட்சம் வீதம் நான்கு ஆண்டுகளில் 60 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு 53 மகப்பேறு மருத்துவமனைகள் கட்டப்பட்டுள்ளன.

❖ பத்தாவது நிதிக்குழுப் பரிந்துரைகளின்கீழ் 4 ஆண்டுகளில் ரூ.35.71 கோடி விடுவிக்கப்பட்டு, 8436 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

❖ நகராட்சிகளில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள ஒவ்வொரு நகராட்சிக்கும் தனியே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

❖ 1998-99இல் ரூ.1.50 கோடி விடுவிக்கப்பட்டு 67 குடிநீர் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

❖ பொன்விழா ஆண்டு சிறப்புத் திட்டத்தின்கீழ் ரூ.50 கோடி வழங்கப்பட்டு, குறைவாக குடிநீர் பெற்றுவரும் நகர்ப்புறங்களில் முதற்கட்டமாக 12 நகராட்சிகள் மற்றும் 25 பேரூராட்சிகளில் குடிநீர் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

❖ தமிழக நகராட்சிகளில் திட்ட அமைப்பாளர்கள், புள்ளி விவரக் குறிப்பாளர்கள், துப்புரவு ஆய்வாளர்கள்,

துப்புரவுப் பணியாளர்கள், ஓட்டுநர்கள் போன்ற பல்வேறு பதவிகளில் 5207 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

- ரூ.1313.20 கோடி மதிப்பீட்டில் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின்கீழ் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீரகற்ற புதைசாக்கடைத் திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

**போக்குவரத்து வசதிகளில் முன்னேற்றம்**



- தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களின் சிறப்பான செயல்பாட்டிற்காக தேசிய உற்பத்தித் திறன் குழு ஆண்டுதோறும் வழங்கும் 10 விருதுகளில் 1997இல் 7 விருதுகளையும் 1998-99இல் 5 விருதுகளையும் பெற்றுள்ளது தமிழகம்.

- மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங்களின் கூட்டமைப்புக் குழு வழங்கும் விருதுகளில் 9 விருதுகளை 1999-2000ஆம் ஆண்டிற்கு பெற்றுள்ளது தமிழகம்.

- வாங்கப்பட்ட புதிய பேருந்துகள் 8500. மேலும் 2000 பேருந்துகள் வாங்கப்பட உள்ளன.

- 1433 புதிய வழித்தடங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

- பேருந்துகளுக்கு மேல் கூண்டு கட்டுதல், உதிரி பாகங்கள் வாங்குதல், பயணச் சீட்டு அச்சிடுதல் போன்றவைகளில் சிக்கன நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு, ஊழல் வழிமுறைகள் அகற்றப்பட்டதன்காரணமாக 1996 மே மாதத்திற்குப் பிறகு 2000 பிப்ரவரி வரை 140.10 கோடி ரூபாய் அரசுக்கு சேமிப்பு கிடைத்துள்ளது.

- 1990இல் 8ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் இலவச பஸ் பாஸ்.

- 1996-97இல் 12ஆம் வகுப்பு வரை நீட்டிப்பு.

- 1990இல் ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகளுக்கு அரசு போக்குவரத்துகளில் இலவசப் பயணச் சலுகை; 1996இல் இச்சலுகை தியாகிகளின் வாரிசுகளுக்கும் நீட்டிப்பு.

- சிறு துறைமுகங்களைச் சீரோக்கக் கடல்சார் வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது.

- குளச்சல் துறைமுகத்தை மேம்படுத்திட மலேசிய அரசுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதிகளைப் பெருக்கிட மினி பஸ் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை 714 மினி பஸ்கள் இயக்கப்படுகின்றன.



## நெடுஞ்சாலைத்துறை

- நெடுஞ்சாலைத் துறைக்கு நான்கு ஆண்டுகளில் ரூ.1605.51 கோடி ஒதுக்கீடு.

**பாலங்களும், மேம்பாலங்களும்**

- 652.83 கோடி ரூபாயில் 440 புதிய பாலங்களைக் கட்ட திட்டமிடப்பட்டதில் இதுவரை திறக்கப்பட்ட பாலங்கள் 151. அதனுடைய மதிப்பு ரூ.204.10 கோடி.

- தற்போது கட்டப்பட்டுவரும் பாலங்கள் 289. அதனுடைய மதிப்பு ரூ.448.73 கோடி.

**சாலை வசதிகள்**

- 1972இல் 1500க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைத் திட்டம்.

- 1990இல் 1000க்குமேல் மக்கள் தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கம்.

- 1996க்குப் பின், இணைப்புச் சாலை வசதி பெற்ற கிராமங்கள் 517 - இதனால், இணைப்புச் சாலை இல்லாத 1000 பேருக்கு மேல் மக்கள் தொகை கொண்ட கிராமங்களே இல்லை என்ற சாதனை படைக்கப்பட்டது.

- 1999-2000இல் முதற்கட்டமாக 500க்கு மேல் 1000க்குள் மக்கள் தொகை கொண்ட 340 கிராமங்களுக்கு ரூ.123.70 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டது. 2000-2001இல் ரூ.90.75 கோடி செலவில் 140 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை அமைக்கத் திட்டம்.

- ரூ.343.81 கோடி மதிப்பீட்டில் 4191 கி.மீ. நீள ஊரகச் சாலைகள் எடுக்கப்பட்டு, 3427





கி.மீ. நீளப் பணிகள் 245 கோடி ரூபாயில் முடிக்கப்பட்டுள்ளன. 4290கி.மீ. நீள மாவட்ட பெரிய சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகளின் பணிகள் ரூ.379.07 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 3000 கி.மீ. நீளப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- நியமிக்கப்பட்ட சாலைப் பணியாளர்கள் 10,000.

- சென்னை நகர் நோக்கி வரும் 251.60 கி.மீ. நீள ஆரச்சாலைகளும், 3 பாலங்களும், 212.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**அமைக்கப்பட்டுவரும் புறவழிச்சாலைகள்**

- ரூ.49.85 கோடி செலவில் 18.80 கி.மீ. நீள தாம்பரம் - மதுரவாயல் - சென்னை புறவழிச்சாலைப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- ரூ.36 கோடி செலவில் மதுரை சுற்றுச்சாலை அமைக்கப்படுகிறது.

- ரூ.110 கோடி செலவில் 28.40 கி.மீ. நீளக் கோவை புறவழிச்சாலை அமைக்கப்பட்டு, போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டது.

- ரூ.2.18 கோடியில் புறவழிச் சாலைகள் அமைக்கப்படும் இடங்கள் - கும்பகோணம், பழனி, செய்யாறு, கும்பகோணத்தில் நிலம் கையகப்படுத்தும் பணி முடிவுற்றது; மற்ற இடங்களில் பணி முடியும் நிலை.

- விபத்துப் பகுதிகளாக கண்டறியப்பட்டு மேம்படுத்தப்பட்ட இடங்கள் 410.

- ரூ.15.60 கோடி மதிப்பீட்டில் 57.80 கி.மீ. நீளச்சாலை, ஓர் உயர்மட்டப் பாலம் அமைக்க எடுக்கப்பட்ட திருப்பூர் நகர் மற்றும் அதன் சுற்றுப்புறச் சாலை மேம்பாட்டுப் பணிகளில் 16.70 கி.மீ. சாலைப் பணிகளும், ஓர் உயர்மட்டப் பாலமும் ரூ.12.59 கோடியில் முடிக்கப்பட்டுள்ளன.

- கரும்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 210 கி.மீ. நீளச்சாலை ரூ.17.19 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன.



**தேசிய - மாநில நெடுஞ்சாலைகள்**

- அதிகரிக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகள் நீளம்1787 கி.மீ.; தற்போது மொத்த நெடுஞ்சாலை நீளம் 3789 கி.மீ.

- அதிகரிக்கப்பட்ட மாநிலச் சாலைகள் நீளம் 3469.40 கி.மீ.; இது 1999ஐ விட 89 சதவீதம் அதிகம்.

**ஊரக வளர்ச்சித்துறை மூலம்**
**சாலை மேம்பாட்டுப் பணிகள்**

- புதிதாக அமைக்கப்பட்ட கிராமச் சாலைகள் நீளம் 10,000 கி.மீ.

- இதுவரை தார்ச் சாலைகளாக மாற்றப்பட்ட கிராமச் சாலைகள் நீளம் 20,900 கி.மீ.

- 2000-2001 முடிவுக்குள் மேலும் 7,669 கி.மீ. கிராமச் சாலைகள் ரூ.900 கோடி செலவில் தார்ச் சாலைகளாக மாற்ற திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. இதில் 1999-2000இல் 3600 கி.மீ. தார்ச்சாலை அமைக்கும் பணியும், 2800 கி.மீ. சிமெண்ட் சாலை அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டன. எஞ்சிய பணிகள் 2000-2001இல் முடிவடையும்.

- 1996க்குமுன் பேரூராட்சிகளில் இருந்த சிமெண்ட் சாலை நீளம் 380 கி.மீ.; இது நான்கு ஆண்டுகளில் 909 கி.மீட்டராக அதிகரிப்பு.

- பேரூராட்சிகளில் தார்ச்சாலைகளின் நீளம் 733 கி.மீட்டரிலிருந்து 1996க்குபின் 3421 கி. மீட்டராக அதிகரிப்பு.

- நபார்டு நிறுவனத்தின் மூலம் - ஊரக அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியத்தின் உதவியுடன் ஊரகப் பகுதிகளில் சாலை அமைத்தல், குடிநீர் வசதி முதலியவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மதிப்பு ரூ.780.5 கோடி.

## பொதுப்பணித் துறையில்

## போற்றத்தக்க பணிகள்

**காவிரி பிரச்சினை**

- பிரதமர் வாஜ்பாய் 9 மணி நேரம் அமர்ந்துபேசி கர்நாடக அரசைச் சம்மதிக்க வைத்ததன் காரணமாக 1998இல் காவிரி நீர் பிரச்சினையில் இணக்கமான முடிவு ஏற்பட்டது.

## தூர்வாரும் பணிகள்

**காவிரி கழிமுகப்பகுதியில் தூர்வாரல்**

- 1997-98 முதல் 82.14 கோடி ரூபாய் செலவில் நாகை, திருவாரூர், தஞ்சை மாவட்டங்களில் காவிரி கழிமுகப் பகுதி வாய்கால்களில் தூர்வாரப்பட்டு, நெய்வேலி காட்டாமணிச் செடிகள் அகற்றப்பட்டன.

- 39.91 கோடி ரூபாய் செலவில் - ஆண்டுக்கு 200 சட்டமன்றத் தொகுதிக்கு ஓர் ஏரி என்ற அடிப்படையில் 1997, 1998 ஆகிய இரண்டு ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட 400 ஏரி குளங்களில் 381 ஏரி குளங்களில் தூர்வாரும் பணி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகள் 30.6.2000க்குள் முடியும்.

- 22.81 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாநில ஏரிப்பாசன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட, 819 பொதுப் பணித்துறை கண்மாய்களில் 560 கண்மாய்களும், 719 முன்னாள் ஜமீன் கண்மாய்களில் 475 கண்மாய்களும் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சிய கண்மாய்களின் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- 111 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும் வீராணம் ஏரியின் 22 கி.மீ. நீள வடவாறு வரத்துக் காலவாயைச் சீரமைத்து, ஏரியை ஆழப்படுத்தி, கால்வாய்களைத் தூர்வாரி மேம்படுத்தும் திட்டத்தில் 30 கோடி ரூபாய் மதிப்புடைய பணிகள் முடிவடைந்துள்ளன; எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் வாய்க்கால் ரூ.90 இலட்சத்தில் சீரமைப்பு.

- இராமநாதபுரம் மாவட்டம் நாராயண காவேரி, ரகுநாத காவேரி, சங்கரத்தேவன் பாசனக் கால்வாய்களில் ரூ.7.41 கோடி செலவில்



தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கமுதி, கடலாடி, முதுகுளத்தூர், சாயல்குடி பகுதியில் 22,000 ஏக்கர் பாசன வசதி பெற்றுள்ளன.

- ❖ தேனி மாவட்டம் கோம்பையில் 100 ஆண்டுகாலக் கோரிக்கையான 18ஆம் கால்வாய்த் திட்டப் பணிகள் 25.5.1999 அன்று தொடங்கி வைக்கப்பட்டன.
- ❖ ஒட்டேரி நல்லாவில் ரூ.1.12 கோடி செலவில் தூர்வாரப்பட்டது.
- ❖ தமிழகம் முழுவதும் 1999-2000இல் ரூ.50 கோடி செலவில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- ❖ 2000-2001இல் மேலும் ரூ.50 கோடி செலவில் தூர்வாரப்படுகிறது.

### நடுத்தர - சிறுபாசனத் திட்டங்கள்

- ❖ கடந்த நான்கு ஆண்டுகளில் 33 நடுத்தர மற்றும் சிறுபாசனத் திட்டங்கள் 396.20 கோடி ரூபாய் செலவில் அனுமதிக்கப் பட்டதில்,

1. மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அளிக்கும் திட்டம்,
2. இராமநாதபுரம் மாவட்டம் நாராயண காவிரி வாய்க்கால் சீரமைப்பு
3. லால்குடி வட்டம் ஆண்டி ஓடையின் குறுக்கே அணை கட்டும் பணி
4. நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் கடானா நதி நீர்த்தேக்க பாசன விரிவாக்கத் திட்டம்
5. நிலக்கோட்டை வட்டம் சிறுமலை யாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் பணி.
6. கரூர் வட்டம் குடகனாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் அமைந்துள்ள வெள்ளி யணை மற்றும் 3 குளங்களுக்கு நீர்வரத்தினை அதிகரிக்கச் செய்யும் திட்டம்.
7. மதுரை வண்டியூர் குளத்தைத் தூர்வாரி, நவீனப்படுத்தி, பூங்கா அமைத்து அழகுபடுத்தும் திட்டம்





ஆகிய 7 திட்டங்களின் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. எஞ்சிய 26 பணிகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

- ❖ 19.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு உதவியுடன் 17 திட்டங்கள் உட்பட நிறைவேற்றப்படும் 59 சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களில் இதுவரை 27 திட்டங்களின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன; 23 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 9 பணிகள் எடுக்கப்படவுள்ளன.
- ❖ நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ், தமிழகம் முழுவதும் 768.99 கோடி மதிப்பில் 636 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள்,

நெல்லை மாவட்டத்தில் - இராதாபுரம் நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டம்.

அடவி நயினார் நீர்த்தேக்கத் திட்டம்,

நாங்குநேரிகொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம், பச்சையாறு நீர்த்தேக்கத்திட்டம்,

விருதுநகர் மாவட்டத்தில் கிருதமால் நதி அணைத் திட்டம்,

குமரி மாவட்டத்தில் - பொய்கையாறு நீர்த்தேக்கத் திட்டம்,

தேனி மாவட்டத்தில் - சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டம்,

வேலூர் மாவட்டத்தில் மோர்தானா நீர்த்தேக்கத் திட்டம்,

இராஜா தோப்புக்கானாறு நீர்த்தேக்கத் திட்டம்

- ஆகிய பணிகள் 233.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்படும் நிலையில் உள்ளன.

- ❖ 334.07 கோடி மதிப்பீட்டில் 16 பாசன அமைப்புகள் மேம்படுத்தப்படுகின்றன.

### பொதுப்பணித் துறை நவீன மயம்

❖ 445 கணிப்பொறிகள், 140 படிப் பெருக்கிகள், 281 ஈப்புகள் உட்பட வாகனங்கள் போன்றவை ரூ.30 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்டு பொதுப் பணித் துறை நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

❖ 354 உதவிப் பொறியாளர்கள் உட்பட 1996 முதல் 797 பேர் நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

❖ பல ஆண்டுகளாகத் தினக்கூலிகளாக விளங்கிய 503 பணியாளர்களும், 189 தொழில்நுட்ப உதவியாளர்களும் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

❖ உலக வங்கி நிதியுதவிடன் 38.647 கோடி மதிப்பீட்டில் நிலத்தடி நீர் முதலிய விவரங்களை ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நீரியல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

❖ ஹட்கோவின் கடனுதவியுடன் சென்னை மாநகரில் 5 நீராதாரங்களில் 120.25 கி.மீ. நீளத்திற்கு தூர்வாருதல், நீர்நிலைகளின் சாலையோரங்களில் ஆக்கிரமித்துள்ள 28,511 குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல்ஆகிய பணிகள் 300 கோடி ரூபாய் செலவில் புத்தாயிரமாண்டில் தொடங்கப் பட்டுள்ளன.

### கட்டடப் பணிகள்

❖ சென்னை, விழுப்புரம், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடஙகள், புதுக்கோட்டை, திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் கூடுதல் கட்டடங்கள், கோவை காவல்துறை ஆணையாளர் கட்டடம், 85 காவல்நிலையக் கட்டடங்கள் உட்பட 4 ஆண்டுகளில் 9,401 கட்டடங்கள் 930 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

❖ திருவாரூர், திருவண்ணாமலை, திருவள்ளூர், நாமக்கல், கரூர், நாகை, தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உட்பட 1,360 கட்டடங்கள் 225 கோடி ரூபாய் செலவில் கட்டப்படுகின்றன.

## வேளாண்துறையில் வியக்கத்தக்க சாதனை

### உணவுப் பொருள்கள் உற்பத்தியில் சாதனை

| | | |
|---|---|---|
| 1995-96 | - | 64.05 இலட்சம் மெட்ரிக் டன்கள் |
| 1996-97 | - | 69.30 இலட்சம் மெட்ரிக் டன்கள் |
| 1997-98 | - | 81.04 இலட்சம் மெட்ரிக் டன்கள் |
| 1998-99இல் | - | 94.12 இலட்சம் மெட்ரிக் டன்கள் |
| **1999-2000இல்** | - | **95 இலட்சம் மெட்ரிக் டன்கள் (உத்தேசம்)** |

### அரிசி உற்பத்தியில் சாதனை

| | | |
|---|---|---|
| 1995-96 | - | 52.90 இலட்சம் மெட்ரிக் டன்கள் |
| 1996-97 | - | 58.05 இலட்சம் மெட்ரிக் டன்கள் |
| 1997-98 | - | 68.94 இலட்சம் மெட்ரிக் டன்கள் |
| 1998-99இல் | - | 81.41 இலட்சம் மெட்ரிக் டன்கள் |

### தமிழகத்தின் முப்பெரும் சாதனை

❖ இந்திய மாநிலங்களில் அரிசி உற்பத்தியில் தமிழகத்தின் உற்பத்தித்திறன் ஒரு ஹெக்டேருக்கு 3,443 கிலோ எனச் சாதனை.

❖ இந்திய மாநிலங்களில் கரும்பு உற்பத்தியில் தமிழகத்தின் உற்பத்தித்திறன். ஒரு ஹெக்டேருக்கு 1,34,156 கிலோ எனச் சாதனை.

❖ இந்திய மாநிலங்களில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தமிழகத்தின் உற்பத்தித்திறன் ஒரு ஹெக்டேருக்கு 1,579 கிலோ எனச் சாதனை.





(Based on ASSOCHAM study for the year 1998-99 - "BUSINESS LINE" dated 15.5.2000)

❖ ஒரிசா, மேற்கு வங்கப் புயல், ஆந்திர மாநில வறட்சி நிலை போன்ற காரணங்களால் அகில இந்திய அளவில் உணவு உற்பத்தி குறைந்தாலும், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள, கூடுதல் உணவு உற்பத்தியால் இந்தியநாட்டு உணவு நிலை மேம்பட்டுச் சாதனை படைக்கப் பட்டுள்ளது. ("FINANCIAL EXPRESS" dated 14.2.2000)

### விவசாயிகளுக்கு சலுகைகள்

❖ இந்தியாவிலேயே முதன்முதலாக 1990இல் கலைஞர் அரசு விவசாயிகளுக்கு வழங்கிய இலவச மின்சாரம் தொடர்ந்து நீட்டிப்பு.

❖ விவசாயிகளுக்கு 8,00,000 உர அடையாள அட்டைகள் 11.41 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

❖ காவிரிப் பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்படும் நெல் உற்பத்தி ஊக்கத்தொகை ரூ.50.

❖ தர வெட்டுத்தொகை குறைப்பு ரூ. 15இல் இருந்து ரூ.5.

❖ 1995-96 இல் நெல்கொள்முதல் மோட்டாரகம் ரூ. 360; சன்ன ரகம் ரூ.375; 1997-98இல் மோட்டா ரகம் ரூ. 415; சன்ன ரகம் ரூ.445; 1998-99இல் மோட்டா ரகம் ரூ.440; சன்ன ரகம் ரூ.470; 1999-2000இல் மோட்டா ரகம் ரூ.490; சன்ன ரகம் ரூ.520.

❖ 4 ஆண்டுகளில் 30 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ரூ.2.40 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் 2 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

❖ நெல் கொள்முதல் 95-96இல் 2.45 இலட்சம் டன்; 97-98இல் 16.78 இலட்சம் டன். 1998-99இல் 11.81 இலட்சம் டன், 1999-2000இல் 12.13 இலட்சம் டன்.

❖ மைய அரசு நிர்ணயவிலையைவிட முந்தைய அரசினால் 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள கரும்பு, டன் ஒன்றிற்கு



ரூ.50, ரூ.60 என்ற அளவிலேயே அதிகரித்து விலை பரிந்துரைக்கப்பட்டு வந்தது.

- ஆனால், கலைஞர் அரசுதான் மைய அரசு நிர்ணயவிலையைவிட டன் ஒன்றிற்கு ரூ.175/- கூடுதலாகப் பரிந்துரை விலையை நிர்ணயித்தது.

- 8.5 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றிக்கு 1995-96இல்முந்தைய் அரசு பரிந்துரை விலை ரூ.560; 1999-2000 - கலைஞர் அரசு பரிந்துரை விலை ரூ.740; சர்க்கரை கட்டுமானத்தைப் பொறுத்து, சர்க்கரை ஆலைகளால் விவசாயிகளுக்குக் கூடுதல் விலைகளும் வழங்கப்படுகின்றன.

- கரும்பு பயிர்க்கடன் ரூ. 45,000 என்பது ரூ. 55,000 ஆகவும், இதர பயிர்களுக்கு ரூ. 25,000 என்பது ரூ. 35,000 ஆகவும் உயர்வு;

- கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்க 1997-98இல் கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கலைஞர் அரசு வழங்கிய முன்பணம் ரூ.76.41 கோடி; 1998-99இல் இத்தொகை ரூ.210 கோடி.

- டிசம்பர் 1996 வெள்ளச்சேதம் - விளைபொருள் இழப்புக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூ. 55.15 கோடி.

- இதன் மூலம் பயன் பெற்ற விவசாயிகள் 10,05,166.

- நவம்பர் 1997 வெள்ளச்சேதம் - விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயிர்கள் இழப்பீட்டுத் தொகை உட்பட வெள்ள நிவாரணம் ரூ.59 கோடி.

- 1999 - மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட திருச்சி, கரூர், தஞ்சை, நாகை, புதுக்கோட்டை திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை ரூ.33.28 கோடி.

- இயற்கைச் சீற்றத்தால் ஆடு இறந்தால் ரூ. 1000/; மாடு இறந்தால் ரூ.5,000/; கன்று இறந்தால் ரூ. 3,000/- நிவாரணம்.

- 1997ல் பெருமழை - பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரத்து செய்யப் பட்ட நிலவரி மதிப்பு ரூ.44 கோடி.



- 3 குதிரைத்திறன் கொண்ட ஆயில் என்ஜின் களுக்குப் பதிலாக 5 குதிரைத்திறன் கொண்ட ஆயில் என்ஜின்கள் வாங்க அளிக்கப்படும் மானியம் -

  சிறு விவசாயிகளுக்கு - 25 விழுக்காடு

  மிகச்சிறு விவசாயிகளுக்கு- 30 விழுக்காடு

  தாழ்த்தப்பட்ட/மலைவாழ்
  இன விவசாயிகளுக்கு - 50 விழுக்காடு

- யூரியா உரத்திற்கு விற்பனை வரி 4 விழுக்காடு என்பது 2 விழுக்காடாகக் குறைப்பு.

- நிலமற்ற விவசாயிகளுக்கு வயதின் அடிப்படையில் வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ. 100 என்பது ரூ. 150 ஆக உயர்வு. 2001இல் இது ரூ. 200/-.

- விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் பதிக்கும் குழாய்களுக்காக இதுவரை விதிக்கப்பட்டு வந்த பாதைக் கட்டணம் (Track Rent) 2000-20001இல் ரத்து.

- முதல்வர் கலைஞர், வரலாற்றிலேயே முதல்முறையாக 2000-2001 நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்குமுன் விவசாயச் சங்கப் பிரதிநிதிகளை 12.3.2000 அன்று அழைத்துப்பேசி, அவர்களின் கருத்தினை பெற்று பரிசீலித்து முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

- 1999-2000இல் மாநில நிதியைக் கொண்டு 10 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 1000 எக்டேர் நிலப்பரப்பில் மொத்தம் 10,000 எக்டேர் தரிசு நிலத்தினை மேம்பாடு செய்து பழமரக் கன்றுகள் 3979 எக்டேரிலும், வேளாண் மரக்கன்றுகள் 6,021 எக்டேரிலும் 4.90 கோடி ரூபாய் செலவில் நடப்பட்டுள்ளன.

## கூட்டுறவு

- குறுகிய காலப் பயிர்க் கடனுக்கு ஒரு சதவீத வட்டி குறைப்பு (13 விழுக்காடு என்பது 12 விழுக்காடு).

- 1996-97இல் வறட்சியாலும், 1997 நவம்பர் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாகவும், மத்தியகாலக் கடன்கள் நீண்டகாலக் கடன்களாகவும் மாற்றியதால் விவசாயிகளுக்கு ரத்து செய்யப்பட்ட அபராத வட்டி ரூ.50 கோடி.

- 30-6-99க்கு முன்பு தவணை கட்ட தவறிய வேளாண்மை சார்ந்த கடன்களுக்கு, 30-6-2000க்குள் வட்டியுடன் கடனைச் செலுத்தும் சிறிய, பெரிய விவசாயிகள் அனைவர்க்கும் அபராத வட்டி தள்ளுபடி.

- 1998-99ல் நடப்புக் கடன்தொகையை முறையாக திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு கடன் தொகையில் 6.25 சதவிகிதம் வட்டி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

- 1999-2000இல் இது 7 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பயனடையும் விவசாயிகள் எண்ணிக்கை ஏறத்தாழ 10 இலட்சம்.

- 1995-96இல் கூட்டுறவு வங்கிகள் மூலம் ஒருவருக்கு வழங்கப்பட்ட நகைக் கடன் ரூ.25,000 - தற்போது ரூ.1 இலட்சம் என உயர்வு.

- கூட்டுறவு வங்கிகளில் உயர்ந்துள்ள வைப்பீடுகள் 1995-96இல் ரூ.4,859 கோடி; 1998-99இல் ரூ.10,879 கோடி. 1999-2000இல் ரூ.13,377 கோடி (29.2.2000 வரை) என உயர்ந்துள்ளது.

- ஜனநாயக முறையில் தமிழகத்தில் கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட்டு சிறப்பாக இயங்கி வருவதைப் பாராட்டும் முகத்தான் உலகின் மிகப் பெரிய உர நிறுவனங்களில் ஒன்றாகிய "இப்கோ" என்னும் உழவர் உரக் கூட்டுறவு நிறுவனம், 1998-99 ஆம் ஆண்டிற்குரிய "சக ஹாரித்தா பந்து" என்னும் விருதினை 51 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுடன் தமிழக கூட்டுறவுத் துறைக்கு 19.11.1999 அன்று புதுடெல்லியில் வழங்கியது.

- தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடனை 1.7.1998 முதல் 30.9.1999 வரையான தவணைத் தேதிக்குள் வட்டியுடன் திருப்பிச் செலுத்தும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்புத் தொகை ரூ.6.58 கோடி.

- இதனால் பயன்பெற்ற சிறு மற்றும் குறு விவசாயிகளின் எண்ணிக்கை - 1,47,654.

- நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளில் பணியாற்றுவோர் 7,600. இவர்களின் ஊதிய விகிதங்கள் 1.10.1994 முதல் முன் தேதியிட்டு 10.3.1997 அன்று மாற்றியமைக்கப்பட்டது. ஒரு பணியாளருக்கு குறைந்தபட்ச பயன் ரூ.224. இவ்வூதிய உயர்வு தொடர்பான 5 ஆண்டு ஒப்பந்த காலம் 30.9.99 உடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து, நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைப் பணியாளர்களின் ஊதிய விகிதங்களை 1.10.99 முதல் திருத்தியமைப்பது குறித்து பரிசீலிக்க 9 உறுப்பினர்களைக் கொண்ட குழு 13.3.2000 அன்று அரசால் நியமிக்கப்பட்டு அது தனது பணியைத் தொடங்கியுள்ளது.

- நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்களின் தொகுப்பூதியம் ரூ.800 என்பது ரூ.900 ஆக உயர்த்தப்பட்டது.

- 180 புதிய மண்ணெண்ணெய் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் 500 மண்ணெண்ணெய் நிலையங்கள் 2000 ஆண்டுக்குள் அமைக்கப்பட உள்ளன.

- 1996 - க்குப் பின் 3,326 புதிய நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

- முழுவதும் மகளிர் நடத்தும் நியாயவிலைக் கடைகள் 209; இவற்றுள் 1996-க்குப் பின் கலைஞர் அரசு ஏற்படுத்தியவை 63 கடைகள், 2000-2001 இல் மகளிர் நியாயவிலைக் கடைகள் கூடுதலாக அமைக்கப்படும்.

**மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம் - சேமிப்புடன் கூடியது**

- 1.1.1999 அன்று சென்னையில் தொடக்கம் - பின்னர் மற்ற மாநகராட்சிகளுக்கும் விரிவு.

- 2.5.1999 முதல் அனைத்து நகராட்சி, பேரூராட்சிகளுக்கு நீட்டிப்பு.





- தினசரி வழங்கப்படும் கடன் தொகை ரூ.100 முதல் ரூ.5000 வரை.

- 10.5.2000 வரை பயன்பெற்ற மகளிர் 95,144.

- இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை ரூ.9.63 கோடி.

- இத்திட்டத்தில் இதுவரை மகளிர் சேமிப்பு ரூ.4.85 கோடி.

- தினமும் வசூலிக்கப்படும் ஒரு ரூபாயில் 85 காசுகள் சேமிக்கப்பட்டு வட்டியுடன் திருப்பி வழங்கப்படுகிறது.

**உணவுப் பொருள் வழங்கல்**

- 3 பேர் உள்ள குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி.

- மத்திய அரசு அரிசி விலையை உயர்த்தியும் தமிழக அரசு உயர்த்தவில்லை; மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில்தான் மிகக் குறைந்த விலையில் அரிசி வழங்கப் படுகிறது; அத்துடன் வறுமைக் கோட்டிற்குக் கீழ், மேல் எனப் பிரிக்காமல் அனைவர்க்கும் கிலோ ரூ.3.50 விலையில் வழங்கும் மாநிலம் தமிழகம் மட்டுமே.

- முழு நேரக் கடைகளும் பகுதிநேரக் கடைகளுமாக தொடங்கப்பட்ட புதிய நியாய விலைக் கடைகள் 3,390.

- 1.56 கோடி (1,56,22,594) குடும்பங் களுக்குப் புதிய இருவண்ண குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

- 1700 கோடி ரூபாய் மானியத்துடன் உணவுப்பொருள் தமிழக மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

- ஊராட்சி உறுப்பினர் முதல், நாடாளுமன்ற உறுப்பினர் வரை அவரவர் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் நியாயவிலைக் கடைகளைப் பார்வையிட்டு குறை களைவதற்கு ஆலோசனை வழங்கிட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**மண்ணெண்ணெய் விநியோக மையங்கள்**

- அமைக்க திட்டமிடப்பட்டவை 500.

- இதுவரை தொடங்கப்பட்டவை 205.

- நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அவரவர் எல்லைகளில் நியாயவிலைக் கடைகளைப் பார்வையிட அரசு ஆணை.

## வீட்டுவசதி மேம்பாடு

**தமிழ்நாடு வீட்டுவசதி மேம்பாட்டு வாரியம் மூலம்**

- கடந்த நான்கு ஆண்டுகளில்,

  குறைந்த வருவாயினருக்காக 5,952 வீடுகளும், 9,014 மனைகளும்,

  நடுத்தர வருவாயினருக்காக 493 அடுக்கு மாடி வீடுகளும், 8,359 தனி வீடுகளும், 9,156 மனைகளும்,

  உயர் வருவாயினருக்காக 2,799 அடுக்கு மாடி வீடுகளும், 3,897 தனி வீடுகளும், 7,060 மனைகளும்,

  தமிழக அரசு ஊழியர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 2,670 அடுக்குமாடி வீடுகளும்,

  நலிந்த பிரிவினருக்கு 12,780 மனைகளும்,

  துணைப் பணித் திட்டத்தின் கீழ் 61 கடைகள்/சமுதாயக் கூடங்களும்,

  - ஆக மொத்தம் 24,231 வீடுகளும், 38,010 மனைகளும் ரூ.849.47 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.

- ஆக, கடந்த 4 ஆண்டுகளில் பொருளா தாரத்தில் நலிந்தோர் முதல் உயர் வருவாய் வகுப்பினர் மற்றும் அரசு ஊழியர் ஆகிய மக்களுக்காக 62,241 மனைகளும்,

வீடுகளும் வீட்டுவசதி வாரியத்தினால் உருவாக்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

❖ 1996 முதல் 31.03.2000 வரை 4 ஆண்டுகளில் 8230 குடியிருப்புகள் ரூ73.50 கோடி செலவில் கட்டப் பட்டுள்ளன.

❖ தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் உதவியுடன் சென்னை, மதுரை, ஈரோடு, கோவை, சேலம், திருச்சி, வேலூர், திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய நகரங்களில் குடிசைப்பகுதிகளில் வாழும் 3293 குடும்பங்களுக்கு ரூ.4.22 கோடி செலவில் அடிப்படை வசதிகள் அமைத்துக் கொடுத்து, மனை உரிமம் வழங்கப் பட்டுள்ளது.



❖ நகரங்களில் குடிசைப்பகுதிகளின் சுற்றுப்புற சூழ்நிலையினை மேம்படுத்தும் பொருட்டு அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு மின் விளக்குகள், மழைநீர் வடிகால், குளியலறை, கழிப்பறை போன்ற வசதிகளை அமைத்து சுற்றுப்புற சூழ்நிலையினை மேம்படுத்திடவும், அப்பகுதிகளை நல்ல உறைவிடமாக மாற்றும் பணிகளுக்காகவும் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.17.72 கோடி செலவிடப்பட்டு, 91,403 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

### கல்நார் தகடுகளால் ஆன - தீப்பிடிக்காத ஓட்டுக் கூரைகளுடன் கூடிய வீடுகள் அமைத்தல்

❖ 1998ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதல்முறையாக கலைஞர் அரசு உருவாக்கியுள்ள புதிய திட்டம்.

❖ கல்நார் தகடுகளால் ஆன - தீப்பிடிக்காத ஓட்டுக் கூரைகளுடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம்.

❖ இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தில் உள்ள 6 மாநகரங்களிலும் ஆட்சேபகரமான இடங்களில் குடிசைகளில் வாழும் 50 ஆயிரத்து 25 குடும்பங்களுக்கு கல்நார் வீடுகள் அமைக்க கலைஞர் அரசு திட்டமிட்டுள்ளது.

❖ குடும்பம் ஒன்றிற்கு 12,500 ரூபாய் செலவில் சுற்றுப்புறச் சுவர்களுடன் கூடிய கல்நார் தகடுகளால் ஆகிய கூரைகள் அமைக்கப்படுகின்றன.

❖ இத்திட்டத்தின்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் கலைஞர் அரசு அமைத்துள்ள புதிய கல்நார் தகடு வேய்ந்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 20 ஆயிரத்து 611.



❖ இதுவரை இத்திட்டத்தின் செலவினம் 26 கோடியே 50 இலட்சம் ரூபாய்.

❖ நடப்பு ஆண்டில் (2000-2001) 39 கோடி ரூபாய் செலவில் 26 ஆயிரம் குடும்பங்களுக்கு கல்நார் தகடு வேய்ந்த குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப் படவுள்ளன.

### குடிசைப்பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள்

❖ சென்னை நகரில், நதிக்கரைகள், சாலையின் மருங்குகள் மற்றும் துரித ரயில் போக்குவரத்துக்கான தடம் போன்ற பொது திட்டங்களுக்குத் தேவையான இடங்களில் சுமார் 69,000 குடும்பங்கள் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி வாழ்ந்து வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

❖ இக்குடியமைப்புகள் அடிக்கடி தீவிபத்திற்கும் வெள்ளத்தின் சீற்றத்துக்கும் உள்ளாகின்றன.

❖ இக்குடும்பங்களை நகருக்கருகே மாற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து குடியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

❖ இம்மாபெரும் திட்டத்தின் முன்னோடியாக சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 6,500 குடியிருப்புகள் ரூ.60.00 கோடி செலவில் கட்ட திட்டமிடப்பட்டு, ரூ.34.98 கோடி செலவில் 3084 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

❖ மேலும் 3416 குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

❖ சென்னை நகரில் நதியின் கரைகளில் அமைந்துள்ள குடிசைவாழ் குடும்பங்களுள் 3000 குடும்பங்களை சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதி 2ல் ரூ.37.50 கோடி செலவில் 3000 குடியிருப்புகள் அமைத்து குடியமர்த்த திட்டமிடப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

❖ இத்திட்டம் 2 ஆண்டுகளில் முடிவுறும். இத்திட்டப் பணிகளுக்காக 31.3.2000 வரை ரூ.6.04 கோடி செலவிடப்பட்டு 328 குடியிருப்புகளுக்கான பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. 656 குடியிருப்புகளுக்கான பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

❖ 47,500 குடியிருப்புகளுக்கு ரூ.14.50 கோடி செலவில் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றுள்ளன.



### நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்

- தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 584 அடுக்குமாடிக் குடியிருப்புகளை ரூ.12.90 கோடி செலவில் கட்டியுள்ளது. மேலும், 30 மத்திய தர வருவாய் குடியிருப்புகள் ரூ.0.60 கோடி செலவில் சென்னை செனாய் நகர் பகுதியில் கட்டப்பட்டு, பணிகள் முடிவடைந்துள்ளன.

### நடைபாதை வாசிகளுக்கான வீட்டு வசதித் திட்டம்

- சென்னை மாநகரில் பல்வேறு பகுதிகளில் நடைபாதைகளில் வசித்துவந்த 2706 குடும்பங்கள் ரூ.2.04 கோடி செலவில் மாற்றிடங்களில் குடியமர்த்தப் பட்டுள்ளனர்.

### வீட்டுவசதிகளைப் பெருக்குவதில் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் பங்கு

- 1995 - 96ம் ஆண்டு வரை ஆண்டுதோறும் 40,000 முதல் 45,000 வரை புதிய வீடுகள் கட்ட நிதியுதவி வழங்கப்பட்டு வந்தது. தற்போது ஆண்டுதோறும் 70,000 முதல் 80,000 வீடுகள் கட்ட நிதியுதவி வழங்கப்படுகிறது.

- 1996க்கு முன்னர் புதிய வீடுகள் கட்ட ஆண்டுதோறும் ரூ. 150 கோடி முதல் ரூ. 200 கோடி வரை வழங்கப்பட்டு வந்த கடனுதவி உயர்த்தப்பட்டு தற்போது ஆண்டிற்கு ரூ.650 கோடியளவிற்கு கடனுதவி வழங்கப்படுகிறது.

- குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான கடனுதவி ரூ.55,000/-லிருந்து ரூ.1,00,000/- ஆகவும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான கடன் ரூ. 80,000/-லிருந்து ரூ. 2,00,000/- ஆகவும், மற்றும் நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மூலம் வழங்கப்படுகின்ற வீட்டுவசதி கடன் ரூ. 3 இலட்சத்திலிருந்து அதிகபட்சமாக ரூ. 7 லட்சம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

- 1996ம் ஆண்டிற்கு முன்னர் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் வீடற்ற ஏழை எளியோருக்கு ஆண்டுதோறும் 30,000 வீடுகள் கட்ட நிதியுதவி வழங்கப்பட்டு வந்தது. 1996க்குபின் 50,000 என உயர்த்தப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு கிராமிய வீட்டுவசதி சங்கம் என்ற கணக்கில் 167 சங்கங்களாக இயங்கின. தற்போது 195 சங்கங்கள் ஆக உயர்ந்து, செயல்பட்டு வருகின்றன.

- 1996க்கு முன்னர் இருந்த 474 நகர்ப்புறச் சங்கங்கள், தற்போது 544 நகர்ப்புறச் சங்கங்களாக அதிகரிக்கப்பட்டு நிதியுதவிகளை வழங்குகின்றன.

- 1996 மே மாதத்திற்குப்பின் 700க்கும் அதிகமான சார்புச் சங்கங்களின் மூலம் 2,54,556 புதிய வீடுகள் கட்ட மொத்தம் ரூ.1,439.61 கோடி கடனுதவி வழங்கப் பட்டுள்ளது.

- கடந்த நான்காண்டுகளில் கட்டப்பட்டுள்ள 2,54,556 வீடுகளில் ஊரகப் பகுதிகளில் மட்டும் 1,72,946 புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதில் குறிப்பாக 1,35,000 வீடுகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை எளியோருக்கு கட்டப்பட்டதாகும். கடந்த நான்காண்டுகளில் ஊரகப் பகுதிகளில் பயனடைந்தோரின் பங்கு 68 விழுக்காடாகும்.

- இந்தியாவில் வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் நிதியுதவி மூலம் கட்டப்பட்டுள்ள 15 லட்சம் வீடுகளில் தமிழ்நாட்டில் மட்டும் 66 விழுக்காடுகளுக்கு மேல் - அதாவது 9,89,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

## இந்த ஆண்டின் புதிய திட்டங்கள்

- புறநகர்ப் பகுதிகளில் வசிக்கும் ஏழை எளியோருக்கு புதிய வீடு கட்ட அதிகபட்சமாக ரூ. 25,000/- கடன் வழங்கும் திட்டம்.

- நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் வீடுகளை பழுதுபார்த்து செப்பனிட அதிகபட்சம் ரூ. 1,00,000 கடன் வழங்கும் திட்டம்.



### வேளச்சேரி வரை பறக்கும் ரயில் திட்டம்

- திருமயிலை முதல் வேளச்சேரி வரையிலான பறக்கும் ரயில் திட்டம் (MRTS) 10.60 கி.மீ. நீளப் பகுதிக்கான திட்டச் செலவு ரூ. 733 கோடியில் தமிழ்நாடு அரசு மூன்றில் இரண்டு பங்கு செலவினையும், மத்திய அரசு மூன்றில் ஒரு பங்கு செலவினையும் ஏற்கிறது. 31.3.2000 முடிய தமிழ்நாடு வழங்கிய ரூ 205.29 கோடியுடன், மொத்தம் ரூ.304.32 கோடி செலவிடப்பட்டு, பணிகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன. 2002-ம் ஆண்டு மார்ச் திங்களில் முடியும்.

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்

- கடந்த 4 ஆண்டுகளில் 2,84,000 தொகுப்பு வீடுகள் ஊரகவளர்ச்சித் துறையின் மூலம் கட்டப்பட்டன. 2000-2001 இல் ரூ.99 கோடி செலவில் மேலும் 31,000 தொகுப்பு வீடுகள் கட்டப்பட உள்ளன.

- ஆதிதிராவிடர் நலத்துறைக்கு 1995-96ல் நிதி ஒதுக்கீடு ரூ. 208.10 கோடி, 2001ல் நிதி ஒதுக்கீடு ரூ.626 கோடி; மூன்று மடங்கு உயர்வு.

- ஆதிதிராவிட மாணவ மாணவிகளுக்குப் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள விடுதிகள் எண்ணிக்கை 131 ஆகும்.

- 82 ஆதிதிராவிட மாணவியர் விடுதிக் கட்டடங்கள் 30.45 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன.

- ஆண்டுக்கு 850 ஆதிதிராவிட இளைஞர்களுக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சி வழங்கும் கலைஞர் அரசின் சிறப்புத் திட்டத்தின்படி 1997-98ஆம் ஆண்டு முதல் 17 மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனங்களில் ரூ.5.08 கோடி செலவில் பயிற்சியளிக்கப்படுகிறது.

- ஆதிதிராவிட மாணவர் விடுதிகளில் சேர்ந்து படிக்க பெற்றோர் குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ,15,000 என்பது, ரூ,50,000 ஆக 1997ல் உயர்த்தப்பட்டது.

- 1995-96ஆம் ஆண்டு வரையிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளி மற்றும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியரில் 10ஆம் வகுப்புவரையிலும், மாணவர்களில் 8ஆம் வகுப்புவரையிலும் வழங்கப்பட்ட இரண்டு



இணை இல்வசச் சீருடை வழங்கும் திட்டம் 12ஆம் வகுப்புவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

- 1997 முதல் வசதியற்ற ஆதி திராவிட குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் திருமணத்திற்காக திருக்கோவில்கள் நிதியிலிருந்து 3,000 ரூபாய் வரை செலவிடப்படுகிறது.

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு சரிவர அமல் செய்யப்படுவது குறித்து ஆய்வு மேற்கொள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் தலைமையில் மாநில அளவிலான கண்காணிப்புக்குழு ஒன்று 1997ம் ஆண்டு அமைக்கப்பட்டது.

- 1997 ஜூலை 30ல் தியாகி கக்கன் அவர்களுக்கு மதுரையில் சிலை அமைக்கப்பட்டது,

- 1997ல் மதுரையில் தீண்டாமை ஒழிப்பு மாநாடு - தமிழகமெங்கும் மனிதச் சங்கிலி நிகழ்ச்சிகள்-சர்வசமயத் திருக்கோவில்களில் சமபந்தி விருந்துகள் நடத்தப்பட்டு, தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டது.

- சிதம்பரத்திலுள்ள நந்தனார் பள்ளி விடுதி வளாகத்தில் சுவாமி சகஜானந்தா நினைவரங்கம் கட்ட 1997-98ம் நிதியாண்டில் ரூ.10 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

- 1998ல் பட்டதாரி, முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான தேர்வில் ஆதிதிராவிட இளைஞர்கள் கூடுதலாகத் தேர்வுபெறத் தக்க வகையில், ஆசிரியர் தேர்வு வாரிய நேர்காணலில் அவர்கள் பெற வேண்டிய குறைந்தபட்ச மதிப்பெண் 15 என்பது 7 ஆகக் குறைக்கப்பட்டது.

- 1998ல் கட்டபொம்மனின் தளபதிகளில் ஒருவராக விளங்கிய ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த வீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்குக் கவர்ணகிரியில் 1.05 கோடி ரூபாய் செலவில் 200 குடியிருப்புகள் அனைத்து அடிப்படை வசதிகளுடனும் கட்டி வழங்கி 18.4.1998 அன்று திறந்து வைக்கப்பட்டன.

- ஆதிதிராவிட பழங்குடியினர் நலத்துறை பள்ளி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ மாணவியரின் மாத உணவுக் கட்டணம் ரூ.138.75 என்பது 1996-97ல் ரூ.180 எனவும், 1998-99ல் ரூ.225 எனவும் உயர்த்தப்பட்டது.

- கல்லூரி மற்றும் தொழில் பயிற்சி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர் மாத உணவுக் கட்டணம் ரூ.250 என்பது 1.6.97ல் ரூ.300 எனவும் 1998-99இல் ரூ.400 எனவும் உயர்த்தப் பட்டது.
- ஆதிதிராவிட பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் வன்கொடுமைகளைத் தடுத்து அவர்களைக் காப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழக முதலமைச்சர் தலைமையில் அரசியல் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட விழிப்புக் கண்காணிப்புக் குழு 9.10.1996 அன்று அமைக்கப்பட்டது.

- 4 கோடி ரூபாய் செலவில் சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு சென்னையில் மணிமண்டபம் அமைக்கப் படுகிறது.

- 1990ல் பழங்குடியினருக்கு 1 விழுக்காடு தனி இட ஒதுக்கீடு வழங்கி பழங்குடியின மக்களின் நலன் மேம்பட வழிவகுத்த இந்த அரசு தற்போது தமிழகம் முழுவதும் வாழும் ஏறத்தாழ 6 இலட்சம் பழங்குடியின மக்களின் நன்மைகளைக் காத்திட 2000இல் தனி இயக்ககம் ஒன்று ஏற்படுத்தியுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர், சீர்மரபினர் நலம்**

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர், சீர்மரபினர் நலனுக்காக 1995-1996இல் ஒதுக்கீடு ரூ.47.27 கோடி: 2000-2001ல் ரூ.175 கோடியாக ஏறத்தாழ மூன்றரை மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது.

- 1998 ஆண்டு வருமானம் ரூ.25,000க்குள் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் பிரிவுகளைச் சார்ந்த குடும்பங்களின் முதல் நபருக்கு பாலிடெக்னிக் நிறுவனங்களில் பட்டயப் படிப்பில் (டிப்ளமோ கோர்ஸ்) இலவசக் கல்வி.

- வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மிகப்பிற்படுத்தப் பட்டோருக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்ட நிதி ரூ.1 கோடி என்பது 1996ல் ரூ.2 கோடியாகவும் 1997ல் ரூ.10 கோடியாகவும், 2000-2001ல் ரூ.14 கோடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பிற்படுத்தப்பட்டோருக்கு ரூ.5 கோடி செலவிலும், முன்னேறிய வகுப்பினருக்கு ரூ.3 கோடி செலவிலும், 1997ல் விரிவு படுத்தப்பட்டது.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12000 என்பது 1996ல் ரூ.25000 ஆக உயர்வு.

- 1996-க்குப்பின் 137 புதிய மாணவ மாணவியர் விடுதிகள் ரூ.4.037 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (முந்தைய அரசில் 89 விடுதிகள் - செலவு 1.679 கோடி மட்டுமே).

- விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ, மாணவியரின் மாத உணவுக் கட்டணம் ரூ.135 என்பது ரூ.180 ஆக 1997-98லும், ரூ.225 ஆக 1998-99லும் உயர்த்தப்பட்டது.

- கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் மாத உணவுக் கட்டணம் ரூ.250 என்பது 1.10.1997ல் ரூ.300 எனவும், 1998-99ல் ரூ.400 எனவும் உயர்த்தப்பட்டது.

- பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிகளில் சேர்வதற்கு குடும்ப வருமான வரம்பு ரூ.15,000 என்பது ரூ.50,000 ஆக 1998-99ல் உயர்வு.

- ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் தேர்வுகளுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் தனிப்பயிற்சி நிலையத்தில் தங்கியுள்ள மாணவரின் மாத உணவுக் கட்டணம் ரூ.250 என்பது ரூ.500ஆக 1996ல் உயர்த்தப்பட்டது. 1998ல் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை 50 என்பது 100 ஆகவும் உயர்த்தப்பட்டது.

- அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்கள் ஆகியவற்றின் பணியிடங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் பிரதிநிதித்துவம் குறித்து ஆய்வு செய்ய பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சர் தலைமையில் 1.6.1998 அன்று உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது.

- மேற்கூறிய உயர்மட்டக்குழு வழங்கிய பரிந்துரைகள் ஆய்வு செய்யப்பட்டு, பத்தும் அதற்கு மேலும் எண்ணிக்கை உள்ள பணிநிலைப் பிரிவுகளுக்கு மட்டுமே இடஒதுக்கீடு பின்பற்றப்பட வேண்டும் என்னும் விதி மாற்றப்பட்டது.

- ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கை உள்ள பணிநிலை பிரிவுகளுக்கும் இடஒதுக்கீடு முறை பின்பற்றலாம் என்றும்,

- பணிமாறுதல் முறைமூலம் நியமனங்களில் நிரப்பப்படாத பணியிடங்களை முன்கொணர் முறையை (Carry forward) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உள்ளது போல் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப் பட்டோர்/சீர்மரபினருக்கும் விரிவுபடுத்தலாம் என்றும்,

- நேரடி நியமன முறையில் தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினருக்கு உள்ள முன்கொணர் முறையை பிற்படுத்தப்பட்டோருக்கும் விரிவுபடுத்தலாம் என்றும்,

- இடஒதுக்கீட்டு முறையைப் பல்கலைக் கழகங்கள் / தலைமை கூட்டுறவு நிறுவனங்கள் / வங்கிகள் / பொதுத்துறை நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தலாம் என்றும்,

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்

ஆகியோருக்கு உரிய பிரதிநிதித்துவம் இல்லையெனில், எத்தனை பணியிடங்கள் குறைகின்றதோ, அப்பணியிடங்களை ஒவ்வொரு பதவியிலும் 1.4.89 முதல் கணக்கில் கொண்டு அத்துறையிலுள்ள நுழைவுப் பதவியில் (Entry level post) படிப்படியாக ஐந்தாண்டு காலத்திற்குள் நியமனம் செய்யலாம் என்றும்,

❖ எங்கெல்லாம் இடஒதுக்கீட்டு முறை வகை செய்யப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் இனச் சுழற்சி முறையை பின்பற்றாதவர்கள்மீது குடிமைப்பணி (ஒழுங்கு முறை மற்றும் மேல் முறையீடு) விதி 17(பி)யின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து கடும் தண்டனை வழங்கலாம் என்றும்

- முடிவுகள் செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

❖ பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின இனத்தைச் சேர்ந்த 25 மகளிருக்கு ஆண்டுதோறும் செவிலியர் உதவியாளராகப் பயிற்சி அளித்து வந்ததை உயர்த்தி 250 மகளிருக்குப் பயிற்சி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

❖ பயிற்சிக் கட்டணம் ஒருவருக்கு ரூ.10,000 வீதமும், உண்டி, உறையுள் கட்டணம் ரூ.300 வீதமாக 6 மாதங்களுக்கும் ஆக மொத்தம் ரூ.59.66 இலட்சம் செலவில் 1999-2000 ஆண்டில் பட்டப் படிப்புப் படித்த 500 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 500 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்குச் சிறப்பு கணினி பயிற்சி அளிக்கும் திட்டம் செயலாக்கப் பட்டுள்ளது.

❖ 1998-99 முதல் 10ஆம் வகுப்பு மாணவ/மாணவியருக்கு வழங்கப்படுவது போல் 1999-2000 முதல் 9ஆம் வகுப்பு மாணவ/மாணவியருக்கும் அனைத்து பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்கான செலவினம் [illegible]4.48 இலட்சம்.

❖ 1998-99 முதல் 60 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் பெண்களுக்கு கணினி உதவியுடன் ஆடை வடிவமைப்பு, அலங்கார ஆடை விரிவாக்கம் மற்றும் ஆடை உற்பத்தி தொழில் நுட்பவியல் ஆகியவற்றில் ரூ..11.80 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

❖ 1998-99ம் ஆண்டிலிருந்து 2000 பிற்பட்ட / மிகப்பிற்பட்ட / சீர்மரபினருக்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளித்திட அதற்குரிய செலவுத் தொகையை 3 மாத பயிற்சி காலத்திற்கு ரூ.9,000லிருந்து ரூ.12,200ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. இந்த பயிற்சி கட்டணம் மேலும் ரூ.15,500 ஆக உயர்த்தி அதனால் ஏற்பட்ட கூடுதல் செலவு தொகை ரூ.1.25 கோடி(ரூ.1,25,23,500)க்கு ஒப்புதல் அளித்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

❖ 1999-2000ஆம் ஆண்டு முதல் 3795 நபருக்கு பயிற்சி அளிக்க ஆணையிடப் பட்டுள்ளது.

❖ மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபின பெண் குழந்தைகளின் கல்வி நிலையை உயர்த்திடும் நோக்கத்துடன், 1999-2000ஆம் ஆண்டிலிருந்து மூன்றாம் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை படிக்கும் 60,000 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவிகளுக்கு ஆண்டுதோறும் ரூ.500 வீதமும், 6வது படிக்கும் 30,000 மாணவிகளுக்கு மாதம் ரூ.100 வீதமும் 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. செலவு ரூ.6 கோடி.

❖ 1999-2000 ஆண்டு முதல் பிற்படுத்தப் பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 5000 மாணவ/மாணவியர்களுக்கு உயர்நிலை சிறப்பு கணினிப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

❖ 1999-2000 முதல் சென்னையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப் பட்டோர் அகில இந்திய பணி தேர்வுக்காக நடத்தப்பட்டு வரும் தனிப்பயிற்சி நிலையத்தையும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான முன்தேர்வு பயிற்சி மையத்தையும் ஒருங்கிணைத்து அகில இந்திய பணிகளுக்கான பயிற்சியின் தரத்தை உயர்த்தவும் தேர்வு செய்யப்படும் நபர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் அண்ணா மேலாண்மை நிலையத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



❖ தமிழ்நாட்டில் சிறுபான்மையினரின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்குச் சிறந்த வகையில் உதவிட, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திலிருந்து பிரித்து தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1.7.1999 முதல் தோற்றுவிக்கப்பட்டு தனியாக இயங்கி வருகிறது.

❖ அரசுப் பணிகளுக்கு நியமனம் செய்யப்படும் போது, முதல் 10 இடங்களில் மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கு 13.8.1992 முதல் வழங்கப்பட்டு வந்த ஒரு இடம் என்பது, 2000-2001ல் 2 இடமாக அதிகரிக்கப்படுகிறது.

❖ 20 விழுக்காடு இட ஒதுக்கீடு கோரி 1987இல் நிகழ்ந்த சமூக நீதிப் போரட்டத்தில் பலியான 21 தியாகிகளின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 3 இலட்ச ரூபாய் நிவாரண உதவியும், அவர்களின் குடும்பங்களுக்கு மாத ஓய்வு ஊதியமாக ரூ.1,500 வீதம் அனுமதித்தும் 7.4.1998 அன்று ஆணையிடப்பட்டது.

**தமிழ்நாடு சிறுபான்மையினர் நலம்**

❖ தமிழகத்தில் முதன்முறையாக சிறுபான்மையினர் நல ஆணையம் 13.2.1989இல் தொடங்கப்பட்டது.

❖ 1996 செப்டம்பரில் பேராயர் எஸ்றா சற்குணம் தலைமையில் திருத்தி அமைக்கப்பட்டது.

❖ சிறுபான்மையினரின் பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசுக்குப் பரிந்துரை செய்கிறது.

**தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்.**

❖ தமிழகத்திலுள்ள சிறுபான்மையினர் நலனுக்காகவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் / சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1.7.99 அன்று தனியே ஏற்படுத்தப்பட்டது.

❖ இந்த அமைப்பின் தலைவராக மக்கள் நல்வாழ்வுத்துறையின் சிறப்புச் செயலர் திரு.அலாவுதீன், இ.ஆ.ப. அவர்கள் கூடுதல் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ இதன் பொது மேலாளராக திரு.எமரால்டு கிங்ஸ்லி நியமிக்கப்பட்டுள்ளார்.

**உருது அகாதெமி**

❖ இஸ்லாமிய சமுதாயத்தினரின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்கப்பட்டு, தமிழகத்தில் உருது அகாதெமி 15 இலட்ச ரூபாய் தொடக்க முதலீட்டுடன் அமைக்கப்பட்டுள்ளது.

❖ 1996-97இல் உலேமாக்களின் மாத ஓய்வூதியம் ரூ.400 என்பது ரூ.500 ஆகவும் உயர்த்தப்பட்டது.

❖ ஓய்வூதியம் பெறும் உலேமாக்களின் எண்ணிக்கை 1998-இல் 2,000 என்பது 2,200 ஆக உயர்த்தப்பட்டது.

**மீனவர்களுக்கு**

❖ சிங்காரவேலர் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 4 ஆண்டுகளில் திட்டமிடப்பட்ட வீடுகள் 16,000.

❖ கட்டி முடிக்கப்பட்டவை 12,603; எஞ்சிய வீடுகளின் கட்டுமானப் பணி விரைவில் முடிவடையும்; 2000-2001இல் மேலும் 4000 வீடுகள் கட்டப்படும்.

❖ வீடு கட்டும் செலவு ரூ.32,000 என்பது ரூ.37,000 ஆக உயர்த்தப்பட்டது.

❖ 1998-99இல் ரூ.1 கோடி செலவில் பழுதுபார்க்க திட்டமிடப்பட்ட 2000 மீனவர் குடியிருப்புகளில், 1,801 குடியிருப்புகளில் பணிகள் முடிவடைந்துள்ளன.

- 323 மீனவ குடியிருப்புகளில் 2,303 தெரு விளக்குகள் 95,40,270 ரூபாய் செலவில் பொருத்தப்பட்டுள்ளன.

- 36 மீனவ குடியிருப்புப் பகுதிகளுக்கு ரூ.1 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் போடப்பட்டுள்ளன.

- மீனவர் மகளிர் கூட்டுறவு சங்கங்களுக்கு 31.80 இலட்சம் ரூபாய் செலவில் செலவில் இலவசமாக 25 மோட்டார் பொருத்திய 5 சக்கர வாகனங்கள்.

- மீனவர் காப்புறுதித் திட்ட நிதி ரூ.35,000 என்பது ரூ.50,000 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

- மீனவர் குழு காப்புறுதி திட்டத்தின் கீழ் 141 மீனவ குடும்பங்களுக்கு 1 கோடி 27 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது.

- மீனவர் விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ் 902 மீனவ குடும்பங்களுக்கு 2.45 கோடி ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளன.

- சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் மீன் பிடிப்பு இல்லாத நான்கு மாதங்களுக்கு மொத்தம் 6,48,769 மீனவர்களுக்கு மாதம் ரூ.270 வீதம் நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது.

- மீன்பிடி படகுகளுக்கு உயர்வேக டீசல் எண்ணெய் பயன்படுத்திய 5,157 மீனவர்களுக்கு திருப்பி வழங்கப்பட்ட ஆயத் தீர்வை 2 கோடியே 71 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய்.

- பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு உள்பொருத்தும், வெளிபொருத்தும் இயந்திரங்களில் பயன்படுத்திடும் மண்ணெண்ணெய் / டீசல் லிட்டர் ஒன்றுக்கு 50 பைசா வீதம் 94 மீனவர்களுக்கு, ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.1,500/- வரை 1999இல் 1,13,983 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- பாரம்பரிய மீன்பிடி படகுகளில் உள்பொருத்தும் இயந்திரத்திற்கு ரூ.12,000/- வீதம், வெளிபொருத்தும் இயந்திரத்திற்கு ரூ.10,000/- வீதமும் கடந்த நான்கு ஆண்டுகளில் 6,675 இயந்திரங்களுக்கும், 1,446 வலைகளுக்கும் - மொத்தம் 8 கோடியே 34 இலட்சத்து 81,437 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.





- 10 இடங்களில் மீனவர் அங்காடிகள் 2000-2001இல் அமைக்கத் திட்டம்; ஏலம் நடக்கும் இடங்களில் ஏலக் கூடமும், உலர்களமும் அமைக்கப்படும்.

- 245 உள்நாட்டு மீனவர் சங்கங்களில் 56,169 உறுப்பினர்கள் உள்ளனர். கூட்டுறவு சங்கங்கள் மூலம் 1000 உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள் கட்டப்படும்.

- தமிழக மீனவர்களைக் காத்திட ரூ. 4.50 கோடி செலவில் நீலம், கயல், பவளம், முத்து, வலம்புரி என்னும் பெயர்களில் 5 ரோந்துப் படகுகள் 16.11.1999 முதல் இயக்கம்.

- 2000-2001இல் விபத்தில் இறக்கும் மீனவ மகளிர் குடும்பங்களுக்கு ரூ.15,000, காயமடையும் மகளிருக்கு ரூ. 7,500 நிவாரண உதவி.

## நெசவாளர் துயர்துடைக்க

- தமிழக வரலாற்றிலேயே முதல்முறையாக தமிழகத்திற்கென தனியாக ஒரு ஜவுளி கொள்கை உருவாக்கப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்த நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகளுக்கு புத்துயிர் அளித்திட ரூ.185.76 கோடி அளவிற்கு பணப்பயனும் பிற சலுகைகளும் அடங்கிய புனரமைப்புத் திட்டம் கலைஞர் அரசினால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப் பட்டுள்ளது.

- 60 வயதடைந்த கைத்தறி நெசவாளர்களுக்கு உதவித்தொகை ரூ.150/-. 2000-2001இல் ரூ.200/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- பயன்பெறத் தகுதியுள்ள நெசவாளர்கள் 91,600; இதுவரை பயன்பெற்ற நெசவாளர்கள் 5,860.

- 1997இல் நெசவாளர்களுக்கு 10 விழுக்காடு கூலி அதிகரிக்கப்பட்டது.

- 60 வயதிற்குமுன் இறக்கும் நெசவாளரின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத்தொகை 1996-97இல் ரூ.15,000 என்பது ரூ. 25,000 என உயர்வு; 1998-99இல் அது ரூ.35,000; 1999-2000இல் ரூ. 40,000; 2000-2001இல் ரூ.50,000 என உயர்வு.

- 1998 முதல் ஏறத்தாழ 75 கோடி ரூபாய் செலவில் கைத்தறித் துணிகளுக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி.

- ரூ.365 கோடி மதிப்பில் 31.3.1998ல் தேங்கியிருந்த கைத்தறித் துணிகளுக்கு 1998 மே முதல் 1998 அக்டோபர் வரை 6 மாத காலம் சிறப்புத் தள்ளுபடி 10 விழுக்காடு சேர்த்து மொத்த தள்ளுபடி 30 விழுக்காடு அனுமதிக்கப் பட்டது.

- இதனால் விற்பனையான துணியின் மதிப்பு ரூ. 202 கோடி;

- லுங்கி ரகங்களுக்கு 30 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி மேலும் 5 மாத காலம் அதாவது 31.3.99 வரை நீட்டிப்பு. அதனால் கூடுதல் விற்பனை ரூ. 11.45 கோடி.

- முந்தைய ஆட்சி 1994-95, 1995-96 ஆகிய ஆண்டுகளுக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்காமல் விட்டிருந்த தள்ளுபடி மானியம் நிலுவை ரூ.43.25 கோடி கலைஞர் அரசினால் வழங்கப்பட்டது.

- கடனில் வாங்கிய பட்டு நூலுக்கு தவணை தவறிய பாக்கிக்கு "டான் சில்க்" வசூல் செய்யும் 3 விழுக்காடு தண்ட வட்டி ரத்து செய்யப்பட்டது. (அரசு ஆணை (கடிதம்) எண்.103, கைத்தறி, கைவினை மற்றும் காதி (நிதி-2) துறை, நாள் 21-5-1998)

- நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கடனில் நூல் கொள்முதல் செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களுக்கும், அகதி முகாம்களிலிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும்,



முதியோர் உதவித் தொகை பெறுபவர் களுக்கும் பொங்கல் விழாவையொட்டி 1996க்குப்பின் 371.42 கோடி ரூபாய் செலவில் 2 கோடியே 76 இலட்சத்து 62 ஆயிரம் இலவச வேட்டிகளும், 2 கோடியே 99 இலட்சத்து 7 ஆயிரம் இலவச சேலைகளும், வழங்கப்பட்டன.

## தொழிலாளர் நலன்

❖ வேலைவாயப்பு பதிவு நிறுவனங்களில் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த கால அவகாசம் 12 மாதங்கள் என்பது 2.9.1996 ஆணையின்படி 18 மாதங்களாக அதிகரிக்கப்பட்டது.

❖ 1993, 1994, 1995 ஆகிய ஆண்டுகளில் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியமையால் காலாவதியாக்கப்பட்ட பதிவுகளை மீண்டும் உயிர்ப்பித்துக்கொள்ள அவகாசம் அளித்து 28.10.1996 அன்று ஆணையிடப்பட்டது. இதன் மூலம் 1,08,201 விண்ணப்ப தாரர்களின் காலாவதியாக்கப்பட்ட பதிவுகள் உயிர்ப்பிக்கப்பட்டன.

❖ அதே போல, 1996, 1997, 1998 ஆகிய ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கும் சலுகை அளிக்கும் நோக்கில் 25.5.1999 அன்று அளிக்கப்பட்ட சலுகை காரணமாக 51,886 பதிவுகள் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டன.

❖ எஸ்.எஸ்.எல்.சிக்கும் குறைவான கல்வித் தகுதியுடன் வேலை தேடி பதிவு செய்துள்ளவர்களுக்கு, அவர்களுடைய பதிவு காலத்தில் ஒவ்வொரு மூன்று ஆண்டிற்கும் ஒரு ஆண்டு வீதம் அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகள் வரை வயது வரம்பில் சலுகை வழங்கிட 2.2.2000 அன்று ஆணையிடப்பட்டது. இதன் மூலம் 5 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் பயனடைகிறார்கள்.

❖ புதிதாகத் தொடங்கப்பட்ட திருவள்ளூர், நாமக்கல், தேனி, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 7.2.1997 அன்றும், பெரம்பலூர், கரூர் ஆகிய மாவட்டங்களில் 4.11.1997 அன்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டு, ஆணையிடப்பட்டன.

❖ அமைப்பு ரீதியில் இல்லாத 25 இலட்சம் தொழிலாளர் பயன்பெற தனி தொழிலாளர் நல வாரியம்.

❖ கோலப்பன் குழு பரிந்துரை - விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியம் உயர்த்தி நிர்ணயம்;

❖ விவசாயத் தொழிலாளர்கள் நலவாரியம், தையல் தொழிலாளர் நல வாரியம், ஆட்டோ ஓட்டுநர் நல வாரியம், வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம், முடிதிருத்துவோர் நல வாரியம், சலவைத் தொழிலாளர் நல வாரியம் - எனப் பல்வேறு தொழிலாளர் களுக்கும் தனித்தனி நலவாரியங்கள் 2000-2001இல் அமைத்திடத் திட்டம்.



❖ 1.1.99 முதல் 7,651 ஒப்பந்தத் தொழிலாளர்க்கு மின்வாரியத்தில் பணி நிரந்தரம். அதன் விவரம்:

| | |
|---|---|
| நான்கு அனல்மின் நிலையங்களில் | - 7,500 பேர் |
| இரண்டு எரிவாயுச் சுழல் மின்நிலையங்களில் | - 151 பேர் |
| ஆக மொத்தம் | - 7,651 பேர் |

❖ மூடப்பட்ட தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கு 1.5.99 முதல் மாதம்தோறும் வழங்கப்படும் நிவாரண உதவித் தொகை ரூ.250. இதுவரை பயன்பெற்றவர்கள் 6,166 பேர். வழங்கப்பட்ட தொகை ரூ.88,76,500.

**மின்திட்டங்கள்**

❖ தமிழகத்தின் மொத்த மின்உற்பத்தித் திறன் 1995-96இல் 6908 மெகாவாட், 1999-2000இல் 7152 மெகாவாட்.

❖ 1989-90இல் உருவாக்கப்பட்ட 630 மெகாவாட் திறனுள்ள வடசென்னை அனல் மின் திட்டம்-1ம்,

❖ 120 மெகாவாட் திறனுள்ள வாரியத்தின் பேசின்பாலம் எரிவாயு மின்திட்டமும் அண்மையில் செயலாக்கப்பட்டன.

❖ மெகாவாட் சாத்தனூர் புனல் மின் திட்ட செயலாக்கம் 9.3.1999.

❖ 8 மெகாவாட் பவானி புனல் மின் திட்ட செயலாக்கம் - 1998 பிப்ரவரி.

❖ சர்க்கரை ஆலைகளில் இணை மின் திட்டங்கள் மூலம் மின் உற்பத்தி 142.1 மெகாவாட்.

❖ தமிழ்நாடு மின்வாரியத்தின் 30 மெகாவாட் திறன் கொண்ட பார்சன்ஸ் பள்ளத்தாக்கு புனல் மின் திட்டம் 20.3.2000 அன்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டு 29.3.2000இல் இயக்கத்திற்கு வந்தது.

❖ பிள்ளைப்பெருமாள் நல்லூர் எரிவாயு சுழலி மின் திட்டத்திற்கு நிதி இறுதியாக்கம் முடிந்துள்ளது. மார்ச் 2001இல் செயல்படத் தொடங்கும்.

❖ 6 (ஆறு) தனியார் நிறுவனங்களுடன் 2367 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய மின்சாரம் வாங்கும் ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டுள்ளது.

❖ இதைத்தவிர ஜி.எம்.ஆர்.வாசவி என்ற தனியார் நிறுவனம் 28.3.99இல் பேசின்பிரிட்ஜில் 196 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திட்டத்தை தொடங்கி வைத்தனர்.

❖ 686 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட 3 தனியார் மின் திட்டங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன.

❖ கோவில்களப்பாலில் 107 மெகாவாட் திட்டம் 2000-2001இல் உற்பத்தித் தொடங்கும்.

❖ பெருங்குளத்தில் 100 மெகாவாட், குத்தாலத்தில் 65 மெகாவாட், மின்உற்பத்தி செய்யும் 2 எரிவாயு மின்திட்டங்கள் நிறுவ விரைவான நடவடிக்கை

❖ 250 மெகாவாட் திறனுள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரி மின் திட்டத்திற்கு 14.8.98 அன்று மத்திய அரசு அனுமதி 2002-2003இல் செயல்படும்.

❖ ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டம் - 5000 கோடி ரூபாய் மூலதனம் - 500 மெகாவாட் மின்உற்பத்தி - மும்பையைச் சேர்ந்த ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தார் முகவராகத் தேர்வு - 2003இல் செயல்படும்.

❖ 1885 மெகாவாட் மின்உற்பத்தி செய்யும் எண்ணூர் எல்.என்.ஜி எரிவாயு மின்திட்டம் - மும்பை தட்சிண் பாரத் எனர்ஜி கன்ஸோர்டியம் முகவராக தேர்வு - மின்நிலையம் அமைக்கப்படுவதற்கான வேலைகள் விரைவில் தொடங்கும்.

❖ 20 குறுகிய கால மின் திட்டங்கள் தொடங்கத் திட்டம் - 568 மெகாவாட் மின் உற்பத்தி

செய்யும் 6 திட்டங்களுக்கு மத்திய அரசு எரிபொருள் இணைப்புக்கு அனுமதி.

❖ குறிப்பிட்ட சில எரிபொருள்களைப் பயன்படுத்தி மின்னாக்கிகள் மூலம் மின் உற்பத்தி செய்து கொள்ளும் நூற்பு ஆலை, காகித ஆலை, இரசாயன ஆலை, சர்க்கரை ஆலை போன்ற நிறுவனங்களுக்கு வரிவிலக்கு.

❖ காற்று, சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களுக்கு நிரந்தரமாக வரிவிலக்கு.

## தொழில் வளர்ச்சி

❖ 1996இல் தொழில் நேயமிக்க (Industrial Friendly Policy) புதிய தொழிற்கொள்கை அறிவிக்கப்பட்டது. தொழில் தொடங்குவதில் முதலீட்டாளர்களிடம் வெளிப்படையான அணுகுமுறை (Transparent Approach) பின்பற்றப்படுகிறது.

❖ தொழில் தொடங்கத் தேவைப்படும் அனுமதிகளை உடன் வழங்கிட இந்தியாவிலேயே முதல் முறையாக ஒற்றைச் சாளர முறை (Single Window System) அறிமுகம்.

❖ படித்து வேலையில்லா இளைஞர்க்கும், மகளிர்க்கும் ஆலோசனைகள் வழங்கிட கிண்டியில் தொழில் முனைவோர் வளர்ச்சி மையம் உருவாக்கம்.

❖ சென்னையில் இரண்டாவது பன்னாட்டு விமான நிலையம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, மத்திய அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

❖ தென் மாவட்ட வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் வகையில் இந்த நிதி ஆண்டில் தொடங்கப்படவுள்ள நாங்குநேரி உயர் தொழில்நுட்பத் தொழிற்பூங்காவுக்காக (High-tech Industrial Park) ஏறத்தாழ 2,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. புகழ்பெற்ற இரு நிறுவனங்களிடம் இருந்து சாத்தியக்கூறு அறிக்கைகள் பெறப் பட்டுள்ளன.

❖ மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் நாங்குநேரி உயர் தொழில்நுட்பத் தொழிற்பூங்காவை சிறப்பு பொருளாதார மண்டலமாக (Special Economic Zone) அறிவித்துள்ளது மிகப்பெரிய வளர்ச்சியை அங்கு உருவாக்கிடும்.

❖ முதல் தலைமுறை பெண் தொழில் முனைவோரை ஊக்குவித்திட திட்ட முதலீட்டில் 10 சதவீதம் அல்லது ரூ.50,000/- வரை மானியம் வழங்கப்படுகிறது.







❖ பல்வேறு சிப்காட் தொழில் வளாகங்களில் மட்டும் 108 புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

❖ 1996 முதல் பல பெரிய தொழிற்சாலைகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

அவைகளில் முக்கியமானவை :

❖ இருங்காட்டுக் கோட்டையில், 2450 கோடி ரூபாய் முதலீட்டில் ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை.

❖ திருவள்ளூரில் 320 கோடி ரூபாய் முதலீட்டில் மிட்சுபிஷி லேன்சர் கார் தொழிற்சாலை.

❖ மறைமலைநகரில் 1700 கோடி ரூபாய் முதலீட்டில் ஃபோர்டு மோட்டார் தொழிற்சாலை.

❖ மறைமலை நகரில் 480 கோடி ரூபாய் முதலீட்டில் விஸ்டியான் கார் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

❖ கடலூரில் 12.16 கோடி ரூபாய் முதலீட்டில் டான்டெக் அக்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

❖ தர்மபுரி மாவட்டம் ஓசூருக்கு அருகே 5.42 கோடி ரூபாய் முதலீட்டில் ப்ளூமிங் மெடோஸ் லிமிடெட் நிறுவனத்தின் மலர் பதப்படுத்தும் தொழிற்சாலை.

❖ ஈரோடு மாவட்டம், சோளங்கபாளையத்தில் 35 கோடி ரூபாய் முதலீட்டில் எஸ்.கே.எம். எக் புராடக்ட்ஸ் தொழிற்சாலை.

❖ காஞ்சிபுரம் மாவட்டம் செட்டிபுண்ணியம் கிராமத்தில் 5.10 கோடி ரூபாய் முதலீட்டில் பாரத் டெக்ஸ் ஃபேஷன்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

❖ கும்மிடிப்பூண்டியில் 300 கோடி ரூபாய் முதலீட்டில் தாப்பர் டூபான்ட் லிமிடெட் தொழிற்சாலை.

❖ தாம்பரம் ஏற்றுமதி வளாகத்தில் 27 கோடி ரூபாய் முதலீட்டில் ஏசியன் லைட்டிங் ரிசோர்சஸ் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை.

❖ கரூர் மாவட்டம் அப்பர் பாளையத்தில் 4.5 கோடி ரூபாய் முதலீட்டில் கரூர் யார்ன் லிங்க்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

❖ ஓசூருக்கருகில் சொக்கராசன் பள்ளி கிராமத்தில் 10.20 கோடி ரூபாய் முதலீட்டில் ஓசூருக்கருகில் சொக் டாரஸ் நாவல்டீஸ் லிமிடெட் தொழிற்சாலை.

❖ திருப்போரூர் அருகில் இடையன் குப்பம் கிராமத்தில் 21 கோடி ரூபாய் முதலீட்டில்

ஸ்ரீராம் ஆட்டோ உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

- ❖ இருங்காட்டுக் கோட்டையில் 8.6 கோடி ரூபாய் முதலீட்டில் லுமெக்ஸ் சாப்ளிப் இந்தியா லிமிடெட் ஆட்டோமோட்டிவ் லைட்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை.
- ❖ சென்னை மணலியில் 10.18 கோடி ரூபாய் முதலீட்டில் ரமணசேகர் ஸ்டீல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.
- ❖ இருங்காட்டுக் கோட்டையில் 45 கோடி ரூபாய் முதலீட்டில் ஜே.பி.எம்.சங்வூ லிமிடெட் தகடு உலோகப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.



- ❖ இருங்காட்டுக் கோட்டையில் 17 கோடி ரூபாய் முதலீட்டில் ஜே.கே.எம். டெரிம் வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.
- ❖ திருப்பெரும்புதூர் அருகில் மானூர் கிராமத்தில் 27.70 கோடி ரூபாய் முதலீட்டில் மெட்-டெக் புராடக்ட்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.
- ❖ இருங்காட்டுக் கோட்டையில் 40 கோடி ரூபாய் முதலீட்டில் இல்ஜின் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை.
- ❖ இருங்காட்டுக் கோட்டையில் 23 கோடி ரூபாய் முதலீட்டில் டைனமேடிக் குரூப் கம்பெனிகள் வாகன உதிரிபாகங்கள் தொழிற்சாலை.
- ❖ இருங்காட்டுக்கோட்டையில் 9 கோடி ரூபாய் முதலீட்டில் பி.எச்.சி. மேனுபேக்சரிங் லிமிடெட் நிறுவனத்தின் கார் கதவுகள் தயாரிக்கும் தொழிற்சாலை.
- ❖ இருங்காட்டுக் கோட்டையில் 9 கோடி ரூபாய் முதலீட்டில் ஷார்தா மோட்டார் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் கார் எக்சாஸ்ட் (Car Exhaust) தயாரிக்கும் தொழிற்சாலை.
- ❖ இருங்காட்டுக் கோட்டையில் 45 கோடி ரூபாய் முதலீட்டில் போஸ் ஹூண்டாய் காயில் சென்டர் ப்ராஜக்ட் தொழிற்சாலை.
- ❖ சென்னைக்கு அருகில் ஆலத்தூரில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் ஆர்க்கிட் கெமிக்கல்ஸ் மற்றும் பார்மாசூடிகல்ஸ் தொழிற்சாலை.
- ❖ சென்னையில் 8 கோடி ரூபாய் முதலீட்டில் சிட்டிசன் வாட்சஸ் - வாட்ச் அசெம்பளிங் புராஜக்ட் தொழிற்சாலை.
- ❖ ராணிப் பேட்டையில் 44 கோடி ரூபாய் முதலீட்டில் சாம் க்ரீவ்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ட்ராக்டர் மற்றும் அசெம்ப்ளிங் தொழிற்சாலை.
- ❖ கடலூரில் 18 கோடி ரூபாய் முதலீட்டில் டேன்பேக் இண்டஸ்ட்ரீஸ் (ஹைட்ரோ ப்ளோரிக் புராஜக்ட்) தொழிற்சாலை.
- ❖ கடலூரில் 11.60 கோடி ரூபாய் முதலீட்டில் டேன்பேக் இண்டஸ்ட்ரீஸ் (ப்ளோரோ பென்சீன் புராஜக்ட்) தொழிற்சாலை.
- ❖ 500 கோடி ரூபாய் முதலீட்டில் சேலம் அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட் தொழிற்சாலை.



- ❖ மணலியில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் எபாக்சி ரெசின் புராஜக்ட்-பெட்ரோ அரால்டைட் தொழிற்சாலை.
- ❖ கோவை மதுக்கரையில் 33 கோடி ரூபாய் முதலீட்டில் அசோசியேட்டட் சிமெண்ட் கம்பெனியின் சிமெண்ட் புராஜக்ட் தொழிற்சாலை.
- ❖ கும்மிடிப்பூண்டிக்கருகில் ஏறத்தாழ 25 கோடி ரூபாய் முதலீட்டில் ஹைதராபாத் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் Autoclayed Aerated Concrete Block Project தொழிற்சாலை.
- ❖ சென்னை பேசின் பிரிட்ஜில் 825 கோடி ரூபாய் முதலீட்டில் ஜி.எம்.ஆர் வாசவி தனியார் மின் உற்பத்தித் திட்டம்.
- ❖ சென்னைக்கருகில் சிங்கப் பெருமாள் கோவிலில் 210 கோடி ரூபாய் முதலீட்டில் மஹிந்த்ரா இண்டஸ்ட்ரியல் பார்க் லிமிடெட் நிறுவனத்தின் வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழில் வளாகம்.
- ❖ இருங்காட்டுக் கோட்டையில் 59.54 கோடி ரூபாய் முதலீட்டில் மட்சுசிட்டா ஏர் கண்டிஷனர் தயாரிக்கும் தொழிற்சாலை.
- ❖ இருங்காட்டுக் கோட்டையில் 30 கோடி ரூபாய் முதலீட்டில் மேண்டோ ப்ரேக் சிஸ்டம் இந்தியா நிறுவனத்தின் வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.
- ❖ மறைமலைநகரில் 27 கோடி ரூபாய் முதலீட்டில் வேலியோ இந்தியா ப்ரிக்சன் மெட்டீரியல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் கார் உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற் சாலை.
- ❖ தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் சார்பில் 202 கோடி ரூபாய் முதலீட்டில் துறைமுகத்தை ஆழப்படுத்தும் திட்டம்.
- ❖ சென்னைக்கருகில் மறைமலைநகரில் 28.50 கோடி ரூபாய் முதலீட்டில் ஆப்டிகல் ஃபைபர் கேபிள் தொழிற்சாலை.
- ❖ சென்னைக்கருகில் 5.60 கோடி ரூபாய் முதலீட்டில் இந்தியன் அண்டு நேச்சுரல் மெடிகல் புரொடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலை.
- ❖ திருப்பெரும்புதூரில் 15 கோடி ரூபாய் முதலீட்டில் இன்வோல் மெடிக்கல் (இந்தியா) லிமிடெட் தொழிற்சாலை.
- ❖ இருங்காட்டுக்கோட்டையில் 30 கோடி ரூபாய் முதலீட்டில் ரெனால்ட்ஸ் பால் பென் காம்பொனன்ட்ஸ் தொழிற்சாலை.
- ❖ புழல் கிராமத்தில் 3.3 கோடி ரூபாய் செலவில் சிங்கப்பூரைச் சேர்ந்த செம்பவாங் ஸ்ரீராம் பொருள் விநியோகத் தொழிற்சாலை.
- ❖ இருங்காட்டுக்கோட்டையில் 5 கோடி ரூபாய் முதலீட்டில் ஆட்டோலெக் இண்டஸ்ட்ரீஸ் எண்ணெய் மற்றும் தண்ணீர் பம்புகள் தயாரிக்கும் தொழிற்சாலை.
- ❖ இருங்காட்டுக்கோட்டையில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் மார்க்விப் இந்தியா காகித அட்டை தயாரிக்க உதவும் எந்திர உற்பத்தித் தொழிற்சாலை.
- ❖ கோவைக்கு அருகே மயிலேறி பாளையத்தில் 12.5கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள இன்ட்ஸில் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் வாகன உதிரிபாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை.
- ❖ இவை போல 1996க்குப் பின் கடந்த 4 ஆண்டுகளில், சிப்காட் வளாகங்களில் மொத்தம் 108 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன.
- ❖ இத்தொழிற்சாலைகள் மூலம் 17,726 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.
- ❖ ஆனால், கடந்த கால ஆட்சியில், ஐந்து ஆண்டுகளில் 22 தொழிற்சாலைகள் மட்டுமே தொடங்கப்பட்டு 4,230 பேர் மட்டுமே வேலை வாய்ப்புகளைப் பெற்றனர்.
- ❖ எண்ணூரில் ரூ 6,000 கோடி செலவில் பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலை ஒன்றை

நிறுவ, ஜப்பானிய மிட்சுயி (Mitsui) கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. பூர்வாங்கப் பணிகள் நடைபெறுகின்றன.

**தொழில் முதலீட்டில் தமிழகம் முதலிடம்**

❖ இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையத்தின் (CMIE) 1996 ஏப்ரல் மாத அறிக்கையின்படி, தமிழகத்தில் செய்யப்பட்டிருந்த தொழில் முதலீடுகள் ரூ. 90,650 கோடி ; இந்தியாவில் 5ஆம் இடம்.

❖ தற்போதைய நிலவரப்படி, தமிழகத்தின் மொத்த முதலீடு ரூ.1,56,893 கோடி - தமிழகம் இந்தியாவில் முதலிடம்.

❖ 4 ஆண்டுகளில் தமிழகத்தில் உயர்ந்துள்ள தொழில் முதலீடு ரூ.66,243 கோடி.

❖ இந்திய தொழில் முதலீட்டில் தமிழகத்தின் பங்கு 27.06 சதவீதம். 1996இல் கழக அரசு பொறுப்பேற்ற பொழுது இப்பங்கு 8.45 சதவீதம் மட்டுமே. இது தமிழகத்தின் மகத்தான தொழில் வளர்ச்சிக்கு மிகச்சிறந்த சான்றாகும்.

**தொழில் வளர்ச்சியில் சாதனை**

❖ 1994-95இல் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி 8.7 விழுக்காடு; தற்போது அது 15.02 சதவீதமாக உயர்ந்து சாதனை.

**ஏற்றுமதியில் தமிழகத்தின் சாதனை**

❖ 1992-93 அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பல்வேறு பொருட்களின் மதிப்பு ரூ.6,808 கோடி. 1997-98இல் கலைஞர் ஆட்சியில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பல்வேறு பொருட்களின் மதிப்பு ரூ.18,982 கோடி.

❖ தமிழகத்தின் தற்போதைய ஏற்றுமதி மதிப்பு ரூ.22,976 கோடி (5.3 பில்லியன் அமெரிக்க டாலர்).

**கணினி மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகத்தின் சாதனை**

❖ தமிழகத்தில் கணினி மென்பொருள் ஏற்றுமதி மதிப்பு :

1995-96 அ.தி.மு.க. ஆட்சியில்- ரூ.37 கோடி.

1999-2000 கலைஞர் ஆட்சியில் - ரூ.1,914 கோடி.

❖ தமிழகத்தின் ஏற்றுமதி சாதனைகள் குறித்து 7-2-2000 நாளிட்ட "எகனாமிக் டைம்ஸ்" நாளேடு "Exports in Tamil Nadu" என்னும் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பாராட்டு :

*"Tamil Nadu is one of the highly industrialised States of our Country and is a major contributor to the Country's exports.*

*Of late there is a spurt in the growth of industries like Software, Artificial diamonds and imitation jewellery.*

*Chennai has now become an important base for global software majors, as the city has the necessary infrastructure with adequate manpower"*

"தமிழகம் இந்தியாவின் பெரிதும் தொழில் மயப்படுத்தப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. நாட்டின் ஏற்றுமதிக்கு தமிழ்நாட்டின் பங்களிப்பு மிகப் பெரியதாகும்.

அண்மைக் காலத்தில் மென்பொருள், செயற்கை வைரங்கள் மற்றும் இமிடேஷன் நகைகள் போன்ற பல தொழில்களின் வளர்ச்சி மிகக் கணிசமாக அதிகரித்துள்ளது.

சென்னை தேவையான மனிதவளத்துடன், உரிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுத் திகழ்வதால், உலகின் மிகப்பெரிய மென்பொருள் நிறுவனங்களின் முக்கிய தளமாக விளங்குகிறது".





**கடன் வைப்புத் தொகையில் தமிழகம் முதலிடம்**

❖ கடன் தொகை வைப்புத் தொகை விகிதாச்சாரத்தில் அகில இந்திய சராசரி 55.5 விழுக்காடு.

❖ ஆனால், தமிழகம் 92.3 விழுக்காடு - முதலிடம்.

❖ 100 விழுக்காடு ஏற்றுமதி தொழில்களில் தமிழகம் முன்னணி.

❖ அகில இந்திய அளவில் ஏற்றுமதித் தொழில்கள் - 3503.

❖ அவற்றுள் தமிழகத்தில் மட்டும் 584 - இது 6ல் ஒரு பங்கு.

**தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி**

❖ தகவல் தொழில்நுட்பத்திற்குத் தனி கொள்கை வகுத்த முதல் மாநிலம் தமிழகம்.

❖ 5.10.98 இல் தகவல் தொழில் நுட்பத்துறை உருவாக்கம்.

❖ 28.11.98 இல் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு வழிகாட்ட முதல்வர் தலைமையில் மாநில அளவிலான தகவல் தொழில்நுட்ப பணிமுனைப்புக் குழு. (State Level Task Force on Information Technology)

❖ தமிழ் மென்பொருள் தொழில் மேம்பாடு, பள்ளிகளில் கணினி அறிமுகத்திற்குப் பாடத்திட்டத்தை உருவாக்குதல் முதலியவற்றிற்கு வழிவகை காண டாக்டர் அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் துணைக்குழு.

❖ 1999 பிப்ரவரி 7-8 இல் சென்னையில் கணிப்பொறியில் தமிழ்மொழிப் பயன்பாட்டை அதிகப்படுத்தும் வகையில் உலக அறிஞர்கள் பங்குபெற்ற உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு நடத்தப்பட்டது.

❖ அம்மாநாட்டின் முடிவுகள்படி, ஒலியியல் அடிப்படையில் தரப்படுத்தப்பட்ட புதிய தமிழ் விசைப்பலகை மற்றும் தமிழ் வரிவடிவக் குறியீடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கேற்பத் தயாரிக்கப்படும் வன்பொருள், மென்பொருள்களுக்குச் சான்று வழங்கப்படும்.

- உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் (Tamil Virtual University) டாக்டர் வி.சி.குழந்தைசாமி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது.

- "தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி" ரூ.5 கோடியில்(Corpus value) 1999 ஏப்ரல் முதல் தொடங்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டிற்கு முதல் தவணையாக ரூ.25 இலட்சம் விடுவிக்கப்பட்டது. தமிழகத்தில் மின்னணு மூலமாக வாணிகம் வளர்ச்சியுற இந்நிதி உதவும்.

- 12 இலட்சம் சதுர அடி பரப்பில் ரூ.340 கோடி செலவில் சென்னை தரமணியில் "டைடல் பார்க்" உருவாகிறது; 4-7-2000 அன்று பிரதமர் வாஜ்பாய் திறந்து வைக்கிறார்.

- சிறுசேரியில் 1000 ஏக்கர் பரப்பில் ஒரு தகவல் தொழில்நுட்பத் தொழில் பூங்கா உருவாக்கப்படுகிறது.

- கேளம்பாக்கத்தில் ஒரு தகவல் தொழில் நுட்பத் தொழில் பூங்கா உருவாக்கப்படுகிறது.

- தகவல் தொழில்நுட்பத் தொழிலில் ஈடுபடும் இளைஞர்களுக்கு நிதியுதவி வழங்க சிறப்பு மூலதன நிதி ரூ.25 கோடி. (Venture Capital Fund) இதுவரை 4 தொழில் முனைவோர்க்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- 11.9.98 இல் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மையம் - டானிடெக் தொடக்கம்.

- வேர்ல்டுடெல் நிறுவனத்தின் துணையோடு அமைக்கப்படவிருக்கும் சமுதாய கணினி இணைய மையங்கள் சுமார் 13,000 ஆகும்.

- உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகள் சுமார் 1.5 இலட்சம் என எதிர்பார்க்கப்படுகிறது.

- 1999-2000இல் 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி விருப்பப் பாடம். 2000-2001 இல் எஞ்சிய 532 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், 60 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் கணினிப் பாடம் நீட்டிப்பு.

- மென்பொருள் வல்லுநர்கள் (Software Professionals) இன்று இந்தியாவில் தமிழகத்தில்தான் அதிகம் என்று நம்பப்படுகிறது.

- மெயின் பிரேம் கணினித் திறன் (Largest Main frame computing capacity) தமிழ்நாட்டில்தான் அதிகம் உள்ளது என்று நம்பப்படுகிறது.

- மல்டிமீடியா சாப்ட்வேர் அப்பிளிகேஷன்ஸ் (Multi-media Software Applications) அதிகமாகத் தயாரிக்கப்படும் தலைநகராக சென்னை உருவாகி வருகிறது.

- "மென் பொருள் திட்டங்கள் தயாரிப்பதற்கு இந்தியாவில் சிறந்த இடம் சென்னையே" என நாஸ்காம் (NASSCOM) 1998ஆம் ஆண்டில் நடத்திய ஆராய்ச்சி மூலம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

- "ஏராளமான மென்பொருள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரே நகரம் சென்னைதான்" என புகழ்பெற்ற கம்ப்யூட்டர் வார இதழான "தி டி.க்யூ வீக்" தனது 6.3.2000 இதழில் பாராட்டியுள்ளது.

- 1996 மே மாதத்திற்குமுன் தமிழகத்தில் இருந்த மென்பொருள் நிறுவனங்கள் 34 மட்டுமே. 1996க்குப்பின் 562 மென்பொருள் நிறுவனங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. தற்போது 596 நிறுவனங்கள்

**மென்பொருள் ஏற்றுமதியில்**
**தமிழகத்தின் சாதனை**

- 1995-96இல் மென்பொருள் ஏற்றுமதி ரூ.37 கோடி.

- 1997-98 இல் மென்பொருள் ஏற்றுமதி ரூ.393 கோடி.

- 1998-99 இல் மென்பொருள் ஏற்றுமதி ரூ.1,246 கோடி.

- 1999-2000இல் மென்பொருள் ஏற்றுமதி ரூ.1,914 கோடி.



(As per the data given by the Director, STPI, Chennai in THE HINDU dated 15th May 2000.)

**சிறுதொழில் வளர்ச்சி**
**விற்பனையில் சாதனை**

- தமிழகத்திலுள்ள தேயிலை, ஜவ்வரிசி, கயிறு, தீப்பெட்டி, கைவினைப் பொருட்கள் முதலியவை சார்ந்த 344 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.1417.70 கோடிக்கு விற்பனைகள் செய்யப்பட்டு சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

**சிறுதொழில்களுக்கு ரூ.306 கோடிக்குமேல்**
**மானிய உதவிகள்**

- 4528 சிறு தொழில் நிறுவனங்களுக்கு 88.54 கோடி ரூபாய் மாநில முதலீட்டு மானியமாகவும், பெண் தொழிலாளர்களை பணியமர்த்தும் தொழிற்சாலைகளுக்கு கூடுதல் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

- 13,376 சிறுதொழில் நிறுவனங்களுக்கு 28 கோடி ரூபாய் மின்கட்டண மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- 767 சிறுதொழில் நிறுவனங்களுக்கு 3.10 கோடி ரூபாய் ஜெனரேட்டர் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- 1015 சிறு தொழில் நிறுவனங்களுக்கு 187.08 கோடி ரூபாய் விற்பனைவரி சலுகையாகவும், ஒத்திவைப்பு மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

- ஆக 4 ஆண்டுகளில் 19,686 சிறுதொழில் நிறுவனங்களுக்கு 306.71 கோடி ரூபாய் அளவுக்கு மானிய உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

**சிறுதொழில்கள் வளர்ச்சியில் சாதனை**

- 50 ஆண்டுகளில் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்ட சிறுதொழில்களின் எண்ணிக்கை 2,34,400.

- ஆனால், 4 ஆண்டுகளில் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள சிறுதொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 1,23,247, அவைகளில் 2,665.66 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

- 4 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட 1,23,247 சிறுதொழில் நிறுவனங்களில் 10,26,416 பேருக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

- 43 தொழிற் கூட்டுறவு சங்கங்களில் 4,101 பேர் புதிதாக வேலை நியமனம் பெற்றுள்ளனர்.

- சிறுதொழில் துறையில் 4 ஆண்டுகளில் 179 பணியாளர்கள் நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

## மருத்துவத்துறை

- அரசு மருத்துவமனைகள் மூலம் நான்காண்டுகளில் ஏழை எளியோர்க்கு வழங்கப்பட்ட மருந்துப் பொருள்களின் மதிப்பு - ரூ.354 கோடி.

- 1996க்குப் பின் நியமனம் செய்யப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை - 2,641

  மருத்துவச் செவிலியர் எண்ணிக்கை - 1,566

- சொந்தக் கட்டடம் இல்லாத 652 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.52 கோடி செலவில் கட்டடங்கள்.

- 200 துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்ட ரூ.9.80 கோடி அனுமதி - 31 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- 18 ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

- கருவுற்ற தாய்மார்களுக்குத் தரமான சிகிச்சையளித்திட 201 மருத்துவமனைகளுக்கு அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- இரத்தப் பரிசோதனைகளைத் துல்லியமாக உடனுக்குடன் அறிய உதவும் செமி-ஆட்டோ

அனலைசர் (Semi-Auto Analyser) என்னும் நவீன கருவி ரூ.1.5 கோடியில் 140 மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

❖ கிராமப்புற மக்களின் மேம்பாட்டிற்காக 28 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு வட்டார மருத்துவமனைகளாக மேம்படுத்தப் பட்டுள்ளன.

❖ மருத்துவப் பரிசோதனைக்காக மனித உறுப்புகளை வண்ணத்தில் படம் பிடித்துக் காட்டும் கலர் டோப்லர் (Colour Dopler) கருவிகள் இரண்டு வாங்கப்பட்டு, சென்னை அரசு பொது மருத்துவமனைக்கும், மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கும் வழங்கப்பட்டுள்ளன.

❖ நோய்களைக் கண்டறிந்து, உரிய சிகிச்சை அளிக்க உதவிடும் நவீன கருவிகள் ரூ.20 கோடி செலவில் அனைத்து மருத்துவ மனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

❖ மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்கு 26 நோயாளி ஊர்திகள் ரூ.1.12 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

❖ 26.10.1997இல் தொடங்கப்பட்ட திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரிக்கு ரூ.12.73 கோடி செலவில் கட்டடம் கட்டப்படுகிறது.

❖ கடும் நோயால் அவதியுறும் ஏழை மக்களின் மருத்துவச் சிகிச்சைக்கு உதவிட "தமிழ்நாடு மாநில நோயாளர்கள் நிதி அமைப்பிற்கு" ரூ.10 கோடி 30.3.1998 அன்று வழங்கப்பட்டது.

❖ அனைத்து மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைகளிலும் முழு உடல் பரிசோதனைத் திட்டத்தைத் தொடங்கிட 11.6.1999 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

❖ மருத்துவமனைகளின் உள்நோயாளிகளின் வசதிக்காக ரூ.8 கோடி செலவில் கட்டில்கள், மெத்தைகள், படுக்கை விரிப்புகள் முதலியன புதிதாக வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

❖ புதிதாய் அமைந்த திருவாரூர், நாகை, பெரம்பலூர் மாவட்டங்களில் ரூ.5 கோடி செலவில் காசநோய் மையங்கள் கட்டப்பட்டுள்ளன.

## 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

❖ திட்டமிடப்பட்டவை 298 - இதுவரை செயலாக்கப்பட்டவை 250.

## வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வோர்க்கு ரூ.25,000 மருத்துவ சிகிச்சை நிதி

❖ 1997-98இல் இதய நோய், சிறுநீரக நோய், புற்றுநோய் ஆகிய நோய்களுக்கு அறுவை செய்து கொள்ளும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு நிதியுதவி ரூ.25,000 அறிமுகம் - 31.3.99வரை 4,162 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

❖ அரசு மருத்துவமனைகளில் வெளிப் பிணியாளர்கள் பார்வை நேரம் பகல் 12 மணி வரை நீட்டிப்பு.

❖ கிராமப்புற மக்களுக்கு மருத்துவ வசதிகள் உடனுக்குடன் கிடைத்திட 10 கோடி ரூபாய் செலவில் ஆரம்ப சுகாதார நிலையங் களுக்கும், மருத்துவ மனைகளுக்கும் 381 ஆம்புலன்ஸ் வண்டிகள்.

## தொழில் நிறுவனங்களின் உதவியோடு மருத்துவமனை மேம்படுத்தும் திட்டம்

❖ தொழிலதிபர்களுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேச்சு. அவரது வேண்டுகோளைத் தொடர்ந்து, 49 தொழில் நிறுவனங்கள் 23 அரசு மருத்துவமனைகளையும் 69 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் 5 துணை சுகாதார நிலையங்களையும் மேம்படுத்திட பொறுப்பேற்பு.

## கண்ணொளி வழங்கும் திட்டம்

❖ 1972-73இல் அறிமுகப்படுத்தப்பட்ட கண்ணொளி வழங்கும் திட்டத்தில் இடையில் தொய்வு.





❖ 1996க்குப் பின் கலைஞர் அரசு இத்திட்டத்திற்கு புத்துயிர்.

❖ அனைத்து மாவட்ட மருத்துவ மனைகளிலும் கண் சிகிச்சை பிரிவுகள் மேம்படுத்தப் பட்டுள்ளன.

❖ முக்கிய வட்ட மருத்துவமனைகள் கண் மருத்துவ சிகிச்சை பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

❖ 26 மாவட்டங்களில் நடமாடும் கண் சிகிச்சை பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

❖ 4 ஆண்டுகளில் 13,42,000 பேருக்கு கண்புரை அறுவை சிகிச்சை செய்யப் பட்டுள்ளது.

❖ 2,87,776 பேருக்கு கண் உள் ஆடி (Intra-Ocular Lens) பொருத்தப்பட்டுள்ளது.

## தேசிய சித்த மருத்துவ நிலையம்

❖ கலைஞர் அரசின் வேண்டுகோளை ஏற்று, தாம்பரத்திற்கருகில் ரூ.100 கோடி செலவில் மைய அரசு சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அமைக்கிறது.

❖ அதற்கு 6.64 கோடி ரூபாய் மதிப்புள்ள 15 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டது.

❖ 60 வயதிற்கு மேம்பட்ட பரம்பரை சித்த மருத்துவர்களுக்கான மாத உதவித் தொகை ரூ. 150 என்பது ரூ. 500 ஆக உயர்வு.

❖ மருத்துவமனைகள் திறம்படச் செயல்பட சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் குழு ஒவ்வொரு மருத்துவமனைக்கும் அமைக்கப்பட்டுள்ளது.

❖ 46 வட்ட மருத்துவமனைகளில் சித்த மருத்துவப்பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

## காவல்துறை மேம்பாட்டில் தமிழக அரசின் பணிகள் :

### காவலர் நியமனம்

❖ நியமனம் செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்-ஆண்கள் : 1996இல் 476; 1997இல் 867; 1998இல் 700; மொத்தம் 2043; நியமனம் செய்யப்பட்ட உதவிஆய்வாளர்-பெண்கள்: 1998இல் 300;

❖ நியமனம் செய்யப்பட்ட ஆண் காவலர்கள் : 1997இல் 5801; 1998இல் 3671;

இவ்வாண்டில் 4000 - ஆக மொத்தம் 13,472.

❖ நியமனம் செய்யப்பட்ட பெண் **காவலர்கள்** : 1997இல் 3052; தற்போது 1000; மொத்தம் 4052.

❖ இவையல்லாமல் நடப்பாண்டில் ஓய்வுபெறும் காவலர்களுக்கு பதிலாக 1500 காவலர்களும், கடலோரக் காவல்படை, அதிவிரைவுப்படை, முக்கிய இடங்களில் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக 2000 காவலர்களும் ஆக, மேலும் 3500 காவலர்கள் புதிதாக நியமிக்கப்பட உள்ளனர்.

**காவலர்களுக்குப் பதவி உயர்வுகள்**

❖ 18,106 இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு முதல் நிலைக் காவலர்களாகப் பதவி உயர்வு.

❖ 17,000 முதுநிலைக் காவலர்களுக்குத் தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு. வரும் ஜூலையில் மேலும் 4,000 முதல் நிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு பெறுவர்.

❖ 1920 தலைமைக் காவலர்களுக்கு சிறப்பு உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

**புதிய காவல் நிலையங்கள்**

❖ 1996க்குப்பின் 57 புதிய காவல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் 15 புதிய காவல் நிலையங்கள் தொடங்கப்பட உள்ளன.

❖ 36 புறக்காவல் நிலையங்கள் முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டன.

**காவல்நிலையங்களுக்குக் கட்டடங்கள்**

❖ 150 காவல் நிலையங்களுக்கு கட்டடம் கட்ட அனுமதி. 85 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

❖ காமராசர் சாலை காவல்துறை தலைமை அலுவலகம் ரூ.1.75 கோடியில் புதுப்பிப்பு.

**நவீனமயம்**

❖ காவல்துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ், கணினி, தொலைத்தொடர்பு வசதி, வாக்கி டாக்கிகள் போன்றவை ரூ.49.55 கோடி செலவில் காவல்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.

❖ 624 புதிய வாகனங்கள் ரூ.19.69 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

**காவலர் குடியிருப்புகள்**

❖ ஆண்டுதோறும் 1500 குடியிருப்புகள் வீதம் கட்டப்பட்டு வந்தன; 1997-98 முதல் அது ஆண்டுக்கு 2500 வீதமாக உயர்த்தப்பட்டது. நடப்பு ஆண்டு முதல் அது 3000 ஆக உயர்த்தி கட்டப்படும்.

❖ 1996க்குப் பின் கட்ட அனுமதிக்கப்பட்ட 9,602 குடியிருப்புகளில் கட்டி முடிக்கப்பட்ட காவலர் குடியிருப்புகள் 8,552. எஞ்சிய குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளும் முடியும் நிலையில் உள்ளன.

❖ 2751 குடியிருப்புகளில் கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

❖ 13,932 வீடுகளுக்கு தனி மின்சார மீட்டர்கள் பொருத்தப்பட்டன.

❖ 11,140 காவலர் குடியிருப்புகளில் மின்விசிறிகள் பொருத்தப்பட்டன.

❖ காவலர் நலனுக்காக ரூ.270 கோடி செலவு.

**நீதிமன்றங்கள்**

❖ 101 புதிய நீதி மன்றங்கள் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

❖ நான்கு ஆண்டுகளில் ரூ.32,46,22,000 செலவில் பல்வேறு நீதிமன்றங்களும், நீதித்துறை அலுவலர்களுக்கான குடியிருப்புகளும் கட்டப்பட்டன.

❖ மதுரையில் உயர்நீதி மன்ற கிளை அமைக்க 75 ஏக்கர் (33 ஹெக்டேர்) நிலம் கையகப்படுத்தப்பட்டு, 13-4-2000 அன்று





ரூ.56.45 கோடியில் கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

❖ சென்னை உயர்நீதி மன்றத்தில் ரூ.2 கோடி செலவில் குளிர்சாதன வசதி 9 நீதிமன்றக் கூடங்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

❖ சென்னை உயர்நீதி மன்றத்தில் கணினி மையம் 22.11.1999 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

❖ சென்னை உயர்நீதி மன்றத்தில் கணினி விரிவாக்கத்திற்காக 1.09 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

❖ செலவில் கணினி மையம் நிறுவப்பட்டு 22.11.1999 முதல் தொடங்கிவைக்கப் பட்டது.

**தீயணைப்புத்துறை**

❖ 49 புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

❖ 22 தீயணைப்பு நிலையங்களுக்குச் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**மதுவிலக்கு**

❖ மதுவிலக்கு செயலாக்கத்திற்கு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

❖ வரிச்சீரமைப்புகளால் ஆயத்தீர்வை வருவாய் மற்றும் மதுபானங்கள் மீதான விற்பனை மூலம் கிடைத்த வருவாயில் அரசின் சாதனைகள் - ஆண்டுவாரியாக :

1995-96இல் ரூ.1425 கோடி.

1996-97இல் ரூ.1649 கோடி.

1997-98இல் ரூ.1943 கோடி.

1998-99இல் ரூ.2697 கோடி.

1999-2000இல் ரூ. 3005 கோடி

### வணிக வரித்துறை மூலம் ஆண்டுதோறும் வழங்கப்பட்டுள்ள கூடுதல் வரிச்சலுகைகள்

1996-97இல் ரூ.353 கோடி

1997-98இல் ரூ.143 கோடி

1998-99இல் ரூ. 81 கோடி.

1999-2000இல் ரூ. 25 கோடி.

2000-2001இல் ரூ. 76 கோடி.

- முதல் ஆண்டு தரப்பட்ட சலுகை, தொடர் ஆண்டுகளுக்கும் பொருந்தும் என்ற வகையில் கணக்கிட்டால், 5 ஆண்டுகளில் வழங்கப்பட்ட வரிச்சலுகைகளின் மதிப்பு ரூ.2700 கோடி.

### வரி விலக்கு அளிக்கப்பட்ட பொருட்கள்

- 1996-97இல் பருப்பு, மிளகாய், தனியா, மஞ்சள், புளி, சீரகம், பெருங்காயம், வெல்லம், சிகைக்காய், வெள்ளி மெட்டி, வெள்ளி கொலுசு, வெள்ளி அரைஞாண் கயிறு, நெல் உமி, குருணை முதலிய 14 பொருள்களுக்கு முழு வரி விலக்கு.

- மேலும் மேல்வரி, கூடுதல் மேல்வரி அறவே நீக்கப்பட்டது. வரிவிதிப்புக்கு உட்பட்ட கூடுதல் விற்பனை வரி விதிப்பிற்கான விற்பனைத் தொகை 100 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது.

- 1997-98இல் பருத்தியினாலான பனியன் முதலிய பின்னலாடைகள், மாட்டுத் தீவனம், நாட்டு மருந்துகள், ஊனமுற்றோர் பயன்படுத்தும் சைக்கிள், புளிச்ச கீரை, கயிறு, கோதுமைத் தவிடு, பஞ்சாமிர்தம், விபூதி, நாமக்கட்டி முதலிய 24 பொருள்களுக்கு வரி விலக்கு.

- 1998-99 சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் போன்ற எண்ணெய் வகைகள், காசினிக் கீரை, கணினி மென்பொருள் Picture Varnish தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருள் முதலிய் 6 இனங்களுக்கு வரி விலக்கு.

- 1999-2000இல் கணினிகள், பிற உறுப்புகள் மீதும் தங்கம், வெள்ளிக்கட்டிகள் மீதும் விதிக்கப்படும் கூடுதல் விற்பனை வரி நீக்கம்.

- இந்திய ரிசர்வ் வங்கி அமைப்புகள் தங்க நகை ஏற்றுமதியாளர்களுக்கு விற்கும் தங்கத்திற்கு முழுவரிவிலக்கு, தங்க நகை ஏற்றுமதியாளர்களுக்கு விதிக்கப்படும் கொள்முதல் வரியிலிருந்து விலக்கு, சித்த மருந்துகள், சூரிய ஒளியினால் இயங்கும் விளக்குகள், புடவை விளிம்புப்பட்டிகள் (Saree Falls), பருத்தி நூல் கயிறு, தட்டி, கூடை, முறம், காலணிப் பட்டிகள் போன்ற 10 பொருள்களுக்கு முழு வரிவிலக்கு.

- 2000-2001இல் நித்திய கல்யாணி இலை மற்றும் வேர், அடிசரக்கு இனங்கள், காதுகேட்கப் பயன்படும் கருவிக்கான கம்பி, அரைஞாண் கயிறு, பதப்படுத்தப்பட்ட பால், நாட்டுச் சர்க்கரை, கற்கண்டு, வணிகச் சின்னமில்லாத மசாலாப்பொடி, காய்கறி வத்தல்கள், தமிழ்த் தினசரி காலண்டர்கள், காகித உறை - பைகள் ஆகிய 10 இனங்கள் மீதான வரி முழுவதும் நீக்கம்.

### வரி குறைக்கப்பட்ட பொருட்கள்

- 1996-97இல் சமையல் எரிவாயு, கரும்பு, மசல், மின்உற்பத்திக்கான முதலீட்டுப் பொருள்கள் உட்பட 30 இனங்களுக்கு வரி குறைப்பு.

- 1997-98இல் யூரியா, தமிழ்த் தட்டச்சுப் பொறிகள், மூக்குக் கண்ணாடி வில்லைகள், கொசுவத்திச் சுருள், கோலிக்குண்டு, கண்ணாடியிலான சிறுமணி, மின்னணுப் பாகங்கள், தலைக்கவசங்கள், சரளைக் கற்கள், பொம்மைகள், வறுத்த நிலக்கடலை பருப்பு, குடைகள், காகிதப் பைகள், தார்ப்பாய்கள், சூட்கேஸ், ஆயில் இன்ஜின் பாகங்கள், மேஜை, நாற்காலி, சரிகை, தையல், பூத்தையல் இயந்திரங்கள், வணிகச் சின்னமுடைய நெய், வெண்ணெய் உள்ளிட்ட 34 இனங்களுக்கு வரி குறைப்பு.

- 1998-99இல் தேங்காய், கொப்பரை, வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகள், பேக்கரியில் தயாரிக்கப்படும் உணவுப் பொருட்கள்; வணிக சின்னம் இடப்பட்ட ஐஸ்கிரீம், பட்டாணி மாவு தோலி, குருணை முதலிய 8 இனங்களுக்கு வரி குறைப்பு.

- 1999-2000இல் கணினிகள், தொலைக் காட்சிப் படம் எடுக்கும் கருவிகள், டிரான்சிஸ்டர்கள், வணிகச் சின்னமிட்ட ரஸ்க், வாழ்த்து அட்டைகள், சாம்பிராணி வில்லைகள் உள்ளிட்ட 54 இனங்களுக்கு வரி குறைப்பு.

- 2000-2001இல் மொசைக் கற்கள், துணி துவைக்கும் எந்திரங்கள், அனைத்து வகை மின் சக்திக் கருவிகள், உபகரணங்கள், வறுகடலை போன்ற 15 இனங்களுக்கு வரி குறைப்பு.

### சுய வரி விதிப்பு

- 28.5.1993 முதற்கொண்டு 16.7.1996 வரை விற்பனைத் தொகை ரூ.5 இலட்சம் வரையில் இருந்த சுய வரி விதிப்பிற்கான உச்ச வரம்பு, 17.7.1996 முதல் ரூ.10 இலட்சமாகவும், 1.4.1998 முதல் ரூ.10 இலட்சம் முதல் ரூ.20 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டு, 1999-2000 ஆண்டு வரிவிதிப்புக்கு அது ரூ.1 கோடி என படிப்படியாக உயர்த்தப்பட்டுள்ளது.

### இணக்க முறை வரிவிதிப்பு

- ஒப்பந்தக்காரர்கள், ஆண்டு முடிவில் முடிக்கப் பெற்ற ஒப்பந்தப் பணித் தொகையில், கட்டிடப் பணி ஒப்பந்தத் தொகையில் 2 விழுக்காடு இணக்க வரியாகவும், மற்ற ஒப்பந்த பணித் தொகையில் 4 விழுக்காடு இணக்க வரியாகவும் விதிக்கப்பட்டுள்ளது. இதைப் போன்றே, தங்கம் மற்றும் வெள்ளி நகை வணிகர்களின் வியாபாரத் தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூ.50 இலட்சங்கள் மிகாதிருப்பின், அவர்கள் விருப்பத் தெரிவின்படி இணக்கவரி ஒன்பதாம் அட்டவணைப்படி விதிக்கப்பட்டுள்ளது. இதனால் பல வணிகர்கள் பயனடைந்துள்ளனர்.

- திரு. தங்கராசு, இ.ஆ.ப. (ஓய்வு) தலைமையிலான வணிக வரி சீரமைப்புக் குழு வழங்கிய பரிந்துரைகளுக்கேற்ப தங்கம், வெள்ளி நகைகள் விற்பனை, உணவு விடுதிகளில் நிகழும் விற்பனை ஆகியவற்றிற்கு படிமுறை (Slab System) விகிதத்தில் மாதவாரி வரி விகிதம் 1997-98இல் அறிமுகம்.

- விற்பனை வரி விதிக்கத்தக்க குறைந்தபட்ச விற்பனைத்தொகை அளவு ரூ.1 இலட்சம் என்பது ரூ.3 இலட்சமாக 1996-97இல் உயர்வு.

- வணிகராகப் பதிவு செய்ய நிர்ணயிக்கப்பட்ட மொத்த விற்பனைத் தொகைக்கான வரம்பு ரூ.75 ஆயிரம் என்பது 1998-99இல் ரூ.1.50 இலட்சமாகவும், 1999-2000இல் ரூ.3 இலட்சமாகவும் உயர்வு.

- தமிழக வரலாற்றில் முதன்முறையாக 1999-2000 நிதிநிலை அறிக்கை தயாரிக்கும்முன் மாநிலத்திலுள்ள அனைத்து வர்த்தகச் சங்கங்கள், வணிகர் சங்கங்கள் ஆகியோரை அழைத்து அவர்களுடைய கருத்துகளைக் கேட்டு வரிச்சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

- இதுபோலவே, 2000-2001 நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் முன்பும் 11.3.2000 அன்று இக்கூட்டம் நடத்தப்பட்டு கருத்துகள் கோரப்பட்டன.

### வரித் தள்ளிவைப்புத் திட்டம்

- வட்டியில்லா வரித் தள்ளி வைப்பு மற்றும் வரித் தள்ளுபடித் திட்டத்தின் கீழ், 1608 வர்த்தக நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.2983.40 கோடிக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, இதுவரை ரூ.992.51 கோடி பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

### சமாதான் திட்டம்

- வணிக வரித்துறை வாயிலாகச் சமாதான் திட்டம் 1.6.1999 முதல் கொண்டு

வரப்பெற்று, மொத்தம் 1621 வணிகர்கள் பயன் பெற்றனர். இதன் வாயிலாக ரூ.19.27 கோடி வரி நிலுவை வசூலிக்கப்பட்டு, ரூ.46.35 கோடி வரி நிலுவைத் தள்ளுபடிச் செய்யப்பட்டது.

### சோதனைச் சாவடிகள் நீக்கம்

❖ இடைமாநில சோதனைச் சாவடிகள் நீங்கலாக, உள்மாநிலத்தில் அமையப் பெற்ற சோதனைச் சாவடிகளில் 15 சோதனைச் சாவடிகள் 26.3.1998 அன்று வெளியிடப்பட்ட ஆணையின்மூலம் நீக்கப்பட்டன.

### உள் கட்டமைப்பு

❖ வணிக வரித்துறையில், வரிவிதிப்பு வட்டங்கள், சோதனைச் சாவடிகள், உதவி ஆணையர், துணை ஆணையர், இணை ஆணையர் மற்றும் ஆணையர் அலுவலகங்களில் மொத்தம் 246 கணினிகள் ரூ.3.58 கோடி செலவில் பொருத்தப்பட்டன் 3.9.1996 முதல் 31.3.2000 வரை மொத்தம் 29 மோட்டார் வாகனங்கள் ரூ.81.89 இலட்சம் செலவில் தொழில் துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### வேலை வாய்ப்புகள்

❖ 1.4.1996 முதல் 31.3.2000 வரை, வணிகவரித்துறையில் ஓர் இணை ஆணையர், 5 துணை ஆணையர் பதவிகள் உட்பட மொத்தம் 163 புதிய பதவிகள் உருவாக்கப்பட்டு, நியமனங்கள் செய்யப் பட்டுள்ளன.

### கருணை அடிப்படையில் பணியமைப்பு

❖ ஜூன் 1996ஆம் ஆண்டு முதல் மார்ச் 2000 வரை மொத்தம் 156 நபர்கள் கருணையின் அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டனர்.

### வணிகர் நல வாரியம்

❖ 1975ஆம் ஆண்டு இறுதியில் கலைஞர் அரசினால் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்ட "தமிழ்நாடு வணிகர் நல வாரியம்" 1976 சனவரியில் கழக அரசு கலைக்கப்பட்டமையால் தொடங்கப் படவில்லை. பின், 1989இல் கழக அரசு மீண்டும் அமைந்த போது, 25.9.1989 அன்று வெளியிடப்பட்ட ஆணையின்படி தொடங்கப்பட்டு, 29.2.2000 வரை 29,797 வணிகர்கள் ஆயுள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

❖ அரசு ஆரம்ப காலத்தில் ஒதுக்கிய நிதி ரூ.2 கோடியைத் தவிர, ஈட்டுத் தொகையாக ரூ.35,49,000 பெறப்பட்டு, 31.3.2000 வரை மொத்தம் 174 நலிவுற்ற வணிகர்களுக்கு அளிக்கப்பட்ட நிதியுதவிகள் விவரம் :

❖ கல்வி ஊக்கத்தொகையாக 49 நபர்களுக்கு 1 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

❖ மருத்துவ உதவித்தொகையாக 13 நபர்களுக்கு 2 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

❖ தீ விபத்துக்கான உதவித்தொகையாக 26 நபர்களுக்கு 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

❖ மாணவர் ஊக்கத்தொகையாக 6 மாணவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

❖ குடும்பநல உதவியாக 80 குடும்பங்களுக்கு 31 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் வழங்கப் பட்டுள்ளது.

### பத்திரப் பதிவில் முத்திரை தீர்வை சலுகைகள்

❖ தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தால் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த ஒதுக்கீட்டுதாரர்களுக்கு எழுதித்தரப்படும் கிரைய ஆவணங்களுக்கு முத்திரை தீர்வைக்கு விலக்கு அளித்து 8.1.1998 அன்று ஆணையிடப்பட்டது.

❖ படித்து வேலையின்றி இருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் நோக்குடன் 19 மற்றும் 



20.7.1997 ஆகிய நாட்களில் ஆவண எழுத்தர்களுக்கான உரிமத் தேர்வு நடத்தப்பட்டு தேர்ச்சி பெற்ற 22,000 பேருக்கும் பத்திர எழுத்தர் உரிமம் வழங்கப் பட்டுள்ளது.

❖ குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே செய்யப்படும் பாகப்பிரிவினை ஆவணங்கள் மீது விதிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை 4 சதவீதம் என்பது 2 சதவீதமாகக் குறைத்து 13.8.1997இல் ஆணை.

❖ ரூ.3 ஆயிரத்திற்கு மேற்படாத அசையாச் சொத்துகள் விற்பனையில் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தில் இருந்து முழு விலக்கு 27.7.1998இல் ஆணை.

❖ தமிழகம் முழுவதிலும் கூடுதலாக 1524 முத்திரைத்தாள் விற்பனை இடங்களை உருவாக்கி 6.7.98இல் ஆணை.

❖ ஒத்தி ஆவணங்கள் மீதான முத்திரைத் தீர்வை 7 சதவிகிதம் 4 சதவிகிதமாக குறைத்து 13.8.97இல் ஆணை.

❖ வீட்டுவசதி கடன் நிறுவனங்கள் பொதுமக்களிடம் அடமானம் பெறும் சொத்துக்களை மறு ஈடு வைத்து கடன் பெற விதிக்கப்படும் 13 விழுக்காடு முத்திரைத் தீர்வை 0.1 விழுக்காடாக் குறைத்து 17.12.97இல் ஆணை.

❖ இதனால் வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனங்கள் அதிக நிதி ஆதாரங்களைத் திரட்டி, வீடு கட்டுபவர்களுக்கு அதிக அளவில் கடன் வசதிகளை அளிக்கிறது.

❖ 26.2.1999 அன்று அறிமுகப்படுத்தப்பட்ட சாமாதான் சலுகை திட்டத்தின்கீழ் 1.3.1999 அன்று முத்திரைத் தனித் துணை ஆட்சியரிடம் நிலுவையில் உள்ள ஆவணங்களில் வழிகாட்டி மதிப்பு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மதிப்பின்மீது விதிக்கத்தக்க முத்திரைத் தீர்வை மற்றும் ஏற்கனவே செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை ஆகிய இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டுத் தொகையில் 50 சதவிகிதத்தினை செலுத்தி ஆவணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் வகையில் 1.3.1999 முதல் 30.9.1999 வரை செயல்படுத்தப்பட்டது. இதன்மூலம் 36,813 ஆவணங்கள் முடிக்கப்பட்டு 34.56 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

❖ பதிவுத்துறையை கணினிமயமாக்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, ஆவணங்கள் பாதுகாப்பு, சான்றிட்ட நகல்கள், வில்லங்கச் சான்று, வழிகாட்டி மதிப்பு தகவல் போன்றவை உடனடியாக வழங்கப்பட ஆவன செய்யப்பட்டு வருகிறது.

❖ தமிழகத்தில் நெடுஞ்சாலை, நீர்ப்பாசனம், மின்உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்மானம் போன்ற பெரும் உள்கட்டமைப்புத் திட்டங்கள் குறித்து 50 கோடி ரூபாய்க்கு மேல் எழுதிக் கொடுக்கும் அடமான ஆவணங்கள் மீது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வையை ரூ. 25 இலட்சம் எனவும், பதிவுக் கட்டணம் ரூ. 5 இலட்சம் எனவும், 2.12.1999 அன்று குறைத்து ஆணையிடப்பட்டது.

## தமிழ் வளர்ச்சி

❖ தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தனி அமைச்சகம்.

❖ ஓர் இணை இயக்குநர், இரண்டு மண்டல துணை இயக்குநர், 14 உதவி இயக்குநர் பணி இடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப் பட்டன. 1990இல் ஏற்படுத்தப்பட்ட தமிழ் ஆய்வு அலுவலர் பணியிடங்கள் உதவி இயக்குநர் பணியிடங்களாகவும், அனைத்து மாவட்டங்களிலும் இளநிலை உதவியாளர் பணியிடங்கள், உதவியாளர் பணியிடங்களாகவும் மேம்படுத்தப்பட்டன. அனைத்து மாவட்டங்களிலும் கூடுதலாக ஓர் அலுவலக உதவியாளர் பணியிடமும் தோற்றுவிக்கப்பட்டன.

❖ 1996-97இல் ஆந்திர மாநிலம் குப்பம் பகுதியில் அமையும் திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 50 இலட்சம் நிதி.

❖ யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழ் வெளியிட 1996க்குப்பின் ரூ.3.60 இலட்சம்.

❖ ஆசியவியல் ஆய்வு நிறுவனத்திற்கு நல்கைத் தொகையாகவும், தமிழ் இலக்கியக் கலைக் களஞ்சிய 3-ஆம் தொகுதி வெளியீட்டிற் காகவும் 1996க்குப்பின் ரூ.84,23,667/-.

❖ திருவனந்தபுரம் பன்னாட்டு திராவிட மொழியியற் பள்ளிக்கு நல்கை நிதியும், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை நினைவு நூலகக் கட்டடம் கட்டவும் 1996க்குப்பின் ரூ.50 இலட்சம்.

❖ 1996-97இல் தில்லித் தமிழ்ச் சங்கத்தில் அய்யன் திருவள்ளுவர் கலையரங்கம் கட்ட ரூ.10 இலட்சம்.

❖ 1997-98இல் கர்நாடக மாநில ஊப்ளி தமிழ்ச் சங்கத்தின் பள்ளிகளுக்கு நூல்கள், விளையாட்டுக் கருவிகள் வாங்கிட ரூ.80,000/-.

❖ 1997-98இல் மதுரைத் தமிழ்ச் சங்கக் கட்டடம் புதுப்பித்தல், நூலக மேம்பாடு, தமிழ் கற்றோர்க்கு வேலைவாய்ப்பு பயிற்சி அளிப்பதற்காக ரூ.45 இலட்சம்.

❖ மைசூர்-இந்திய மொழிகள் மையத்தில் தமிழ்ச் சான்றிதழ் வகுப்பு நடத்திட ரூ.15,000/-.

❖ ஜம்மு பல்கலைக் கழகத்தில் தமிழ்ச் சான்றிதழ் வகுப்பு நடத்திட ரூ.20,000/-.

❖ 1998-99இல் பெங்களூர் காமராசர் உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.10,000/-.

❖ மும்பைத் தமிழ்ச் சங்கக் கட்டடம் புதுப்பிக்கப்பட ரூ.1 இலட்சம்.

❖ திரு.ஐ.சண்முகநாதன் அவர்களின் "ஒரு தமிழன் பார்வையில் இருபதாம் நூற்றாண்டு" நூல் வெளியிட ரூ.3 இலட்சம்.

❖ குமரிமுனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா சிறப்பு வெளியீடுகள் அச்சிட தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ரூ.1,60,420/-.

❖ தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்டு வந்த ஆண்டு நல்கை ரூ.1.13 கோடி 1998-99 முதல் ரூ. 3.53 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

❖ ரூ.50 இலட்சம் செலவில் தமிழில் கலைக் களஞ்சிய நூல்கள் வெளியிடும் திட்டத்தின் கீழ், குழந்தைகள் கலைக் களஞ்சியம் 10 தொகுதிகள் மறுபதிப்பாக ரூ.10 இலட்சம் செலவில் 24.12.1998இல் வெளியீடு; அறிவியல் வாழ்வியல் கலைக் களஞ்சியம் வெளியிட தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு 1999-2000இல் ரூ.10 இலட்சம்.

❖ ரூ.15 இலட்சம் செலவில் மருத்துவக் களஞ்சியம் வெளியிட இதுவரை 5 தொகுதிகளுக்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது (4 தொகுதிகள் ஏற்கனவே வெளியீடு).

❖ 1999-2000இல் மறைந்த பேரறிஞர் கே.கே. பிள்ளை எழுதிய, "தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்" நூலிலை மறுபதிப்பு செய்திட ரூ.77,800/- வழங்கப்பட்டது.

❖ அகராதி, சொல் அகராதி நூல்கள் ரூ.10 இலட்சம் செலவில் வெளியிடும் திட்டத்திற்கு இதுவரை 4 இலட்சம் ரூபாய் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.

❖ ரூ.12 இலட்சம் செலவில் பிற மாநிலங்களில் தமிழ் மையங்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மும்பை, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் முறையே 31.1.2000 அன்றும், 1.2.2000 அன்றும் தமிழ் மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

❖ 1996இல் 142வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது; தொடர்ந்து உ.வே.சா.வின் பிறந்த நாள் விழாக்கள் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்றன.

## நூற்றாண்டு விழாக்கள்

❖ 19.2.97இல் இ.மு. சுப்பிரமணியன்பிள்ளை, மே.வி.வேணுகோபால் பிள்ளை, 24.12.98இல் மங்கலங்கிழார், 4.8.97இல் மனோன்மணியம் சுந்தரனார்,






30.10.1999இல் ராய சொக்கலிங்கம், 13.3.2000இல் கி.ஆ.பெ. நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டன.

❖ அரிய தமிழ் நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 1996க்குப்பின் 76 நூல்கள் வெளியிட ரூ.5,14,277 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

❖ தமிழ் வளர்ச்சிக்காகச் சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 1996க்குப்பின் 163 நூல்களை வெளியிட ரூ.6,57,646 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

❖ மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிட உதவும் திட்டத்தின் கீழ் 52 நூல்களுக்கு 10,19,651 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

❖ தமிழ் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்தை முனைப்புடன் செயல்படுத்திட தலைமைச் செயலகத்திற்கும், துறைத் தலைமை அலுவலகங்களுக்கும் 1,000 தட்டச்சுப் பொறிகள் 90 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

❖ அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் வழங்கப்படும் உதவி நிதி ரூ.400 என்பது 10.9.96 முதல் ரூ.500 ஆக உயர்த்தப்பட்டது. கடந்த 4 ஆண்டுகளில் 39 தமிழறிஞர்களுக்கு புதிதாக நிதியுதவி அனுமதிக்கப்பட்டது.

❖ மொழிக் காவலர்களுக்கு 15.1.1991 முதல் வழங்கப்பட்ட நிதியுதவி ரூ.400 என்பது 10.9.1996 முதல் மாதந்தோறும் ரூ.500 எனவும், 10.10.1996 முதல் ரூ.1500; மருத்துவப்படி ரூ.15; மரபுரிமையர்க்கு ரூ.750; மருத்துவப்படி ரூ.15 எனவும், 15.8..1997 முதல் மொழிக்காவலர்களுக்கு ரூ.3000, மருத்துவப்படி ரூ.15; மரபுரிமையருக்கு ரூ.1500; மருத்துவப்படி ரூ.15 எனவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

### அரசுடைமையாக்கப்பட்ட தமிழ் மேதைகளின் நூல்கள்

❖ 1 கோடியே 24 இலட்சத்து 4,404 ரூபாய் செலவில் பின்வரும் 15 தமிழ் மேதைகளின்



நூல்கள் 1996க்குப்பின் அரசுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

❖ 1996-97இல் தேவநேயப் பாவாணர், 1997-98இல் மறைமலை அடிகள், 1998-99இல் திரு.வி.க., கல்கி, கவிமணி, ஜீவானந்தம், நாமக்கல் கவிஞர், வ.உ.சிதம்பரனார், கா.மு.ஷெரீப், நாவலர் சோமசுந்தர பாரதியார், பரலி சு.நெல்லையப்பர், வ.வே.சு. அய்யர், காரைக்குடி சா. கணேசன், எஸ். டி.எஸ். யோகி ஆகியோர் நூல்கள் அரசுடைமை.

❖ 29.9.1999 அன்று வெ.சாமிநாத சர்மா நூல்கள் அரசுடைமை;

❖2000-2001இல் சாமி சிதம்பரனார், மயிலை சீனி வேங்கடசாமி, கவிஞர் முடியரசன் ஆகியோரின் நூல்களை அரசுடைமையாக்கி, தலா ரூ.10 இலட்சம் பரிவுத்தொகை வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

❖ பழம்பெரும் விடுதலைப் போராட்ட வீரரும், முதுபெரும் தமிழறிஞருமாகிய ஜமதக்னி என்னும் வேலூர் க. இராகவன், இந்திய மொழிகளிலேயே முழு அளவில் முதன் முதலாக தமிழில் எழுதியுள்ள காரல் மார்க்சின் "மூலதனம்" மற்றும் "மிகைமதிப்பு" ஆகிய நூல்களை 6,000 பக்கங்கள் கொண்ட புத்தகமாக வெளியிடுவதற்கு ரூ.5 இலட்சம் நிதி.



❖ சிறந்த எழுத்தாளர் - திரைப்பட வசனகர்த்தா மறைந்த இளங்கோவன் குடும்பத்திற்கு ரூ.2.25 இலட்சம் நிதியுதவி.

❖ 1997 இல் பாரதியார் விருதும், 1998இல் அம்பேத்கர் விருதும் நிறுவப்பட்டன.

❖ தமிழ் அறிஞர்களுக்கு வழங்கப்படும் விருதுத் தொகை ரூ.10 ஆயிரம், 1996இல் ரூ.20 ஆயிரமாகவும், 1998இல் ரூ.1 இலட்சமாகவும் உயர்வு.

❖ இசைப்பள்ளிகள் மாவட்டம்தோறும் தொடங்கத் திட்டம்; 1997-98இல் அறிமுகம்; 1997க்குப்பின் 15 மாவட்டங்களில் இசைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.



❖ 31.12.1975இல் தமிழக அமைச்சரவை முடிவின்படி அறிவிக்கப்பட்ட குமரிமுனை அய்யன் திருவள்ளுவர் சிலை, ஏறத்தாழ ரூ.10 கோடி செலவில் நிறுவப்பட்டு, சரியாக 25 ஆண்டுகளுக்குப்பின் 1.1.2000 அன்று தலைவர் கலைஞரால் திறக்கப்பட்டது.

❖ 23 சிறார் சிறுமிகளுக்குக் "குறள் பரிசு" மாதம் ரூ.1000/- அவர்கள் வாழும் காலம் வரை வழங்க 8.1.2000 அன்று ஆணையிடப்பட்டு, 9.2.2000 அன்று முதல் மாத - குறள் பரிசுத் தொகை முதல்வர் கலைஞரால் வழங்கப்பட்டது.

❖ மத்திய அரசு "ஞானபீட விருது" வழங்குவதுபோல், தமிழ் எழுத்தாளர்களுக்குக் "குறள்பீட விருது" வழங்கிட, முதல்வர் தலைமையில் "தமிழ்ச் சங்கப்பலகை" அமைக்கப்பட்டுள்ளது.

**தியாகிகளுக்கு நினைவுச் சின்னங்கள்**

❖ போர் நினைவுச் சின்னம் அருகே சுதந்திரப் பொன்விழா நினைவுச் சின்னம்.

❖ ரூ.30 இலட்சம் செலவில் கிண்டியில் தியாகிகள் மணிமண்டபம் 2.10.1998 அன்று திறப்பு.

❖ ரூ. 25 இலட்சம் செலவில் பெரியவர் பக்தவச்சலம் நினைவிடம் 13.3.1998 அன்று திறப்பு.

❖ வேலூரில் சிப்பாய்க் கலகத்தில் இன்னுயிர் ஈந்த இந்தியப் படைவீரர் நினைவாக ரூ.3 இலட்சம் செலவில் நினைவுத் தூண் 20.12.1998 அன்று திறப்பு.

❖ மதுரை திருமங்கலத்தில் வீரத் தியாகி விசுவநாததாஸ் வாழ்ந்த இல்லம் 11,82,500-க்கு அரசினால் வாங்கப்பட்டு, ரூ.50 இலட்சம் செலவில் திருமண மண்டபம், நூலகம் ஆகியவற்றுடன் நினைவு இல்லமாக உருவாக்கப்பட்டு 27.12.1998 அன்று திறப்பு.

❖ நெல்லை மாவட்டம் நெல்கட்டும் செவல் கிராமத்தில் ரூ.50 இலட்சம் செலவில் பூலித்தேவன் மாளிகை புனராக்கம் - பூலித்தேவன் சிலை அமைத்து 28.12.1998 அன்று திறப்பு.

❖ கட்டபொம்மனின் தளபதி வீரன் சுந்தரலிங்கம் நினைவாக கவர்னகிரி கிராமத்தில் வீரன் சுந்தரலிங்கம் நகர் உருவாக்கம். ரூ.1.05 கோடி செலவில் அவர் வாரிசுகள் 200 பேருக்கு வீடுகள்.



- நாகர்கோவில் சி.பி. இராமசாமி பூங்காவில் ரூ. 15.50 இலட்சம் செலவில் பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம் 19.4.1998 அன்று திறப்பு.

- நேதாஜி நூற்றாண்டையொட்டி சென்னை காமராஜர் சாலையில் ரூ.7.40 லட்சம் செலவில் அவரது சிலை 5.12.1997இல் திறப்பு.

- அண்ணல் அம்பேத்கர் மணி மண்டபம் 4 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது. விரைவில் திறப்பு.

- காந்தி மண்டப முகப்பில் காந்தியடிகளுக்கு மார்பளவுச் சிலை அமைக்கப்பட்டது போல் இராஜாஜி, காமராசர், அண்ணா, எம்.ஜி.ஆர். ஆகியோர் நினைவிடங்களின் முகப்பில் அவரவர்தம் மார்பளவுச் சிலைகள் திறக்கப்பட்டுள்ளன.

- குமரிமுனையில் 50 இலட்ச ரூபாய் செலவில் உருவாகி வரும் காமராசர் மணிமண்டபத்திற்கு 27.6.1999 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

- காமராசர் பிறந்த நாளையொட்டி, ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் 17-ஆம் நாள் தியாகிகள் தினமாகக் கொண்டாடப்படும் என 17.7.99 அன்று அறிவிப்பு.

- தியாகிகள் மணிமண்டபம் முகப்பில் சுதந்திரப் போராட்ட தியாகி ஆர்யா என்ற பாஷ்யம், மொழிப்போர் தியாகி சங்கரலிங்கனார் ஆகியோரின் சிலைகள் 2.20 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு 17.7.1999 அன்று திறப்பு.

- திருச்சியில் வ.வே.சு. அய்யர் வாழ்ந்த இல்லம் 5-5-1999 அன்று தமிழக அரசினால் நினைவு இல்லமாக்கப்பட்டது; 1.20 இலட்ச ரூபாய் செலவில் நூலகமும் திறப்பு.

- ரூ.20.50 இலட்சம் செலவில் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் மணிமண்டபம் 15.12.1999 அன்று திறப்பு; உடுமலை நாராயணகவி மணிமண்டபமும் ரூ.20.50 இலட்சம் செலவில் அமைப்பு.

- மருதூரில் வள்ளலார் இராமலிங்க அடிகளார் வாழ்ந்த இல்லம் ரூ.2 இலட்சம் செலவில் புனரமைப்பு

- இனமானம் போற்றிய தமிழ்த்துறவி குன்றக்குடி அடிகளார் தவத்திரு தெய்வ சிகாமணி அருணாசல தேசிகர் மணிமண்டபம் சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் 22 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது.

- சிவகங்கை மாவட்டம் மருதுபாண்டியர் நினைவிடம் 20.50 இலட்ச ரூபாய் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

- தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு பகுதியில் வீரபாண்டிய கட்டபொம்மன் சிலையைச் சுற்றியுள்ள 45 செண்ட் நிலம் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களால் அரசுக்கு வழங்கப்பட்டு, 10.97 இலட்ச ரூபாய் செலவில் பூஞ்சோலை அமைக்கப் பட்டுள்ளது.

- பேரறிஞர் அண்ணா நினைவிடம் 3.30 இலட்ச ரூபாய் செலவில் புதுப்பிக்கப் பட்டுள்ளது.

- 92.01 இலட்ச ரூபாய் செலவில் வள்ளுவர்கோட்ட மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- வள்ளுவர் கோட்டம் குறள்மணிமாடத்தில் 12 இலட்ச ரூபாய் செலவில் குறளோவியக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. சென்னை மாகவி பாரதியார் நினைவு இல்லம் 10.20 இலட்ச ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

- மதுரையில் தியாகி கக்கன் திருவுருவச்சிலை 31.8.1997 அன்று திறப்பு.

- சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் திருவுருவச் சிலை ரூ. 3.90 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு 11.6.1998 அன்று திறப்பு.



- சென்னை கிண்டியில் தீரன் சின்னமலை திருவுருவச் சிலை 4.10.1998 அன்று திறப்பு.

- புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மன்னர் இராஜகோபால தொண்டமான் திருவுருவச்சிலை 4.35 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு 14.3.2000 அன்று திறப்பு.

- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை வாழ்ந்த இல்லம் ரூ.9.51 இலட்சம் செலவில் அரசு நினைவு இல்லமாக மாற்றம்.

**சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள்/திட்டங்கள்**

- மத்திய அரசின் தியாகிகள் ஓய்வூதியம் பெறுவோர்க்கு மாநில அரசு வழங்கும் மாத ஓய்வூதியம் ரூ.250/- என்பது ரூ.500/- ஆக 1.4,1997 முதல் உயர்த்தப்பட்டது ; அத்துடன் மருத்துவப்படி ரூ.15/-.

- சுதந்திரத் திருநாள் பொன்விழா கொண்டாட்டத்தையொட்டி, 15.8.1997 முதல் சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கும், மொழிப்போர் தியாகிகளுக்கும் மாத ஓய்வூதியம் ரூ.1500/- என்பது ரூ.3000/- என உயர்வு. அத்துடன் மருத்துவப்படி ரூ.15/-.

- 15.8.1997 முதல் அவர்களின் சட்டப்படியான வாரிசுகளுக்கு உயர்த்தப்பட்ட மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் ரூ.750/- என்பது ரூ.1500/-; மருத்துவப்படி ரூ.15/-.

- விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்களுக்கும் பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டத்தில் உரிய சாதி விகிதத்திற்குள்ளேயே ஒதுக்கீடு செய்ய 25.11.1999இல் ஆணையிடப்பட்டுள்ளது.

- சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பகங்கள் மூலம் வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்க 4.5.1999 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- 1980-81 ஆம் ஆண்டிலிருந்து பொறியியல் பட்டப் படிப்பில், விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு (மகன்கள்/மகள்கள்) ஒதுக்கீடு ஓரிடம் என இருந்து வந்ததை 1999-2000 ஆம் ஆண்டு முதல் ஐந்து இடங்கள் என உயர்த்தப்பட்டது; 2000-2001 ஆம் ஆண்டிலிருந்து அதனை பத்து இடங்கள் என மேலும் உயர்த்தி 7.3.2000இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- இயற்கை எய்திடும் விடுதலைப் போராட்ட வீரரின் ஈமச் செலவிற்காக, அவரது மனைவிக்கு அல்லது அவருடைய சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு உடனடியாக வழங்கப்பட்டு வந்த ரூ.1000 என்பது, 17.4.2000 முதல் ரூ.2000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- 1996 நவம்பருக்கு முன் மத்திய/மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுக்கு மட்டுமே, அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை வழங்கப்பட்டது. இச்சலுகை விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களின் விதவைகளுக்கும் அவர்களின் சட்டப்படியான வாரிசுகளுக்கும் 5.11.1996 முதல் விரிவுபடுத்தப்பட்டது.

- 29.8.1996 வரை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.150/- வீதமும், வீரபாண்டிய கட்டபொம்மனின் வாரிசுதாரர்களுக்கு மாதம் ரூ.300/- வீதமும் வழங்கப்பட்டு வந்த உதவிப்பணம் 30.8.1996 முதல் மாதம் ஒன்றிற்கு ரூ.500/- ஆக உயர்த்தப்பட்டது.

- 13.5.1996 முதல் இதுவரை 169 பேருக்கு மாநில விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியமும், 40 பேருக்கு மாநில விடுதலைப்போராட்ட வீரர் தொடர் ஓய்வூதியமும் ஆக, மொத்தம் 209 பேருக்கு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் புதிதாக வழங்கப்பட்டுள்ளது.

- முன்னாள் முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களின் உதவியாளர்

திரு. பாலு அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் ரூ.3.50 இலட்சத்தில் இலவசமாக இல்லம் அளிக்கப்பட்டுள்ளது.

❖ 1990இல் ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகளுக்கு அரசு போக்குவரத்துகளில் இலவசப் பயணச் சலுகை; 1996இல் இச்சலுகை தியாகிகளின் வாரிசுகளுக்கும் நீட்டிப்பு.

**திரையுலக வளர்ச்சிக்காக சலுகைகள் மற்றும் தரமான தமிழ்த் திரைப்படத்திற்கு மானியத் தொகை உயர்வு**

❖ குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமானத் தமிழ்த் திரைப்படங்களுக்கு மானிய உதவி வழங்கும் திட்டத்தின்கீழ் ஒரு படத்திற்கு வழங்கப்பட்ட மானிய உதவி 1 லட்ச ரூபாய் என்பதனை 1989 ஆம் ஆண்டில் 1.50 லட்சம் ரூபாய் என உயர்த்தி வழங்கிய கலைஞர் அரசு, 1996இல் பதவி ஏற்றபின், 3 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக 17.7.1996 அன்று மேலும் உயர்த்தியது.

❖ 12 முதல் 30 பிரதிகள் வரை எடுக்கப்பட்டு வெளியிடப்படும் திரைப் படங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இந்த மானிய உதவியை 17.7.1996-க்குப் பின் 8 பிரதிகளுக்குக் குறையாமல், 25 பிரதிகளுக்கு மிகாமல் தயாரிக்கப்படும் படங்களுக்கு ஆணையிட்டது கலைஞர் அரசு.

**திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்கும் விருது**

❖ தமிழ்நாடு அரசினால் நடத்தப்படும் சென்னை தமிழ்நாடு திரைப்படத் தொலைக்காட்சி தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் தங்கள் செயல்முறைப் பயிற்சிக்காகத் தயாரிக்கும் குறும்படங்களுக்கும் 1998-99ஆம் கல்வி ஆண்டு முதல், சிறந்த இயக்குநர், ஒலிப்பதிவாளர், ஒளிப்பதிவாளர், படத் தொகுப்பாளர், படம் பதனிடுபவர் மற்றும் நடிகர் - ஆகியோருக்கு தலா 1 பவுன் தங்கப்பதக்கமும், ரூ.5,000/- ரொக்கப் பரிசும் வழங்கிட 27.10.1998 அன்று ஆணையிட்டது கலைஞர் அரசு.

**படப்பிடிப்புக் கட்டணத்தில் சலுகைகள்**

❖ தொல்பொருள் ஆய்வுத்துறையின் கட்டுப்பாட்டில் வரும் புராதனச் சின்னங்கள் மற்றும் அது போன்ற கலைச் சின்னங்கள் உள்ள இடங்களில் படப்பிடிப்புகளை நடத்திட, படத் தயாரிப்பாளர்கள் செலுத்தி வந்த படப்பிடிப்புக் கட்டணம், ஓர் இடத்திற்கு ஒரு நாளைக்கு 5,000/- ரூபாய் என இருந்ததை 1000/- ரூபாய் என்றும், ஏனைய இடங்களுக்கு 2,500/- ரூபாய் என இருந்ததை 500/- ரூபாய் எனவும் குறைத்தது கலைஞர் அரசு.

**படப்பிடிப்பு நடத்த ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் முறையை அறிமுகப்படுத்தியது கலைஞர் அரசு**

❖ அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்திட அரசின் பல்வேறு துறைகளுக்கும் சென்று, பல தடையில்லாச் சான்றிதழ்களைப் பெற்று, அதன் பின்னரே படப்பிடிப்புகளை நடத்திட அனுமதி பெற வேண்டி இருந்தது. இது தயாரிப்பாளர்களுக்குப் பெரும் சிரமத்தைத் தந்ததால், அனைத்திற்கும் ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் ஒற்றைச் சாளரமுறை (Single Window System) கலைஞர் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகிறது.

**திரைப்படத் தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரண உதவித் திட்டம் கண்ட கலைஞர் அரசு**

♦ தமிழ்த் திரைப்படங்களில் நடிக்கும் சண்டைப் பயிற்சியாளர்கள் சண்டைக் காட்சியின்போது உயிரிழக்க நேர்ந்தால் அவர்களுடைய குடும்பத்துக்கு ஒரு இலட்ச ரூபாயும், செயல்பட முடியாத அளவுக்கு காயம் பட்டு ஊனமடைய நேர்ந்தால் 50 ஆயிரம் ரூபாயும் நிவாரண உதவியாக வழங்கும் திட்டம் 1996 முதல் கலைஞர் அரசினால் செயல்படுத்தப் படுகிறது.



**கேளிக்கை வரியிலிருந்து விலக்கு வழங்கிய தமிழக அரசு**

♦ குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தமிழ்ப் படங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தகுதி வாய்ந்த தமிழ்த் திரைப்படங்களுக்கு அவை வெளியிடப்பட்ட முதல் நான்கு வாரங்கள் வரை கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கும் திட்டம் 12.12.96 முதல் கலைஞர் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை,மை இந்தியா, சாதி சனம், புதல்வன், குடும்பச் சங்கிலி, எல்லாம் பணத்துக்காக, நீதியின் வாசலிலே, "ஹவுஸ்புல்" - என்னும் 7 படங்களுக்குக் கேளிக்கை வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**கேளிக்கை வரி குறைப்பு**

♦ புதிய படங்களுக்குக் கேளிக்கை வரியைக் கலைஞர் அரசு 54 விழுக்காட்டில் இருந்து 40 விழுக்காடாக 1989ஆம் ஆண்டில் குறைத்தது.

♦ 1.8.98 முதல் 40 விழுக்காட்டிலிருந்து 30 விழுக்காடாக மேலும் குறைக்கப்பட்டது

♦ 10 ஆண்டுகளுக்கு முன்வந்த திரைப் படங்களுக்கு கேளிக்கை வரி 40 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாகவும் குறைக்கப்பட்டது.

♦ மொழி மாற்றுப் படங்களுக்கும், பிற தமிழ்ப் படங்களுக்குக் குறைக்கப்பட்டதுபோல் கேளிக்கை வரி 1.8.98 முதல் குறைக்கப்பட்டது.

♦ இதேபோல இணக்க வரி முறையும் (Compounding Interest) அதற்கு ஏற்றாற்போல் குறைக்கப்பட்டது.

♦ இந்த வரிக் குறைப்புகள் மூலம் திரைப்படத்துறைக்கு 40 கோடி ரூபாய் அளவுக்கு வரிச் சலுகைகள் 1.8.98 முதல் கலைஞர் அரசினால் வழங்கப்பட்டது.

**திரைப்பட உரிமை மாற்ற வரியை ரத்து செய்த தமிழக அரசு**

❖ விற்பனை வரிச் சட்டத்தின்படி, திரைப்படங்களுக்கான உரிமை மாற்றம் மீது, 1.4.1986 முதல் 11.11.1999 வரை வணிகர்கள் செலுத்த வேண்டிய வரியினைத் தள்ளுபடி செய்ததுடன், உரிமை மாற்றத்திற்கான விற்பனை வரியை 12.11.1999 முதல் 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடு எனவும் குறைத்தது கலைஞர் அரசு.

**பத்திரிகையாளர் நலன்**

❖ 1996-97இல் பத்திரிகையாளரின் ஓய்வூதியம் ரூ.500 என்பது ரூ.1000 ஆகவும்; 1999-2000இல் இது ரூ.1500/-





எனவும், 2000-2001இல் ரூ.2000 எனவும் உயர்த்தப்பட்டது.

- 1997-98இல் பணிபுரியும் பத்திரிகையாளர் இறக்க நேர்ந்தால் அவர்களின் குடும்பத்திற்கு நிவாரண உதவி ரூ.25,000 வழங்கும் திட்டம் அறிமுகம். 1999-2000இல் ரூ. 40,000; 2000-2001இல் ரூ.50,000/- என உயர்த்தப்பட்டது.

- 1989-90இல் சென்னை மாநகரில் பத்திரிகையாளர்களுக்கு குடியிருப்பு மனைகள்; 18-6-1997 அன்று மதுரை தல்லாகுளத்திலும், 29-9-1998 அன்று திருச்சி மாவட்டம் குட்டப்பட்டியிலும் பத்திரிகையாளர்களுக்கு குடியிருப்பு மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

### சமூக நீதிப் போராட்ட தியாகிகளின் குடும்பத்திற்கு ஓய்வூதியம்

- 1987 - 20 விழுக்காடு இட ஒதுக்கீடு போராட்டத்தில் - துப்பாக்கிச் சூட்டில் உயிர்நீத்த 21 தியாகிகளின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்பட்ட குடும்ப நல நிதி ரூ. 3 இலட்சம்.

- அவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ.1500.

- அரசுப் பணிகளுக்கு நியமனம் செய்யப்படும் போது, முதல் 10 இடங்களில் மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கு 13.8.1992 முதல் வழங்கப்பட்டு வந்த ஒரு இடம் என்பது, 2000-2001இல் 2 இடமாக அதிகரிப்பு.

### வருவாய்த்துறை

- 13-5-1996ல் பதவி ஏற்ற அன்றே தரை வரி ரத்து.

- அரசுக்கு வருவாய் இழப்பு ரூ.14 கோடி; 1.25 இலட்சம் குடும்பங்கள் பயன்.

### முன்னாள் கிராம அலுவலர் நலம்

- 14-11-1980-இல் அவசரச் சட்டத்தினால் பணியிழந்து, வாழ்ந்து வரும் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு கலைஞர் அரசு 23.08.1996இல் ஒவ்வொரு மாதமும் ஓய்வூதியமாக ரூ.175/- மற்றும் அதற்குரிய படிகள் வழங்கவும், 14.11.1980-இல் பணியிழந்து உயிரிழந்த முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பத்திற்கு மாதமொன்றுக்கு ரூ.100/-குடும்ப ஓய்வூதியம் வழங்கவும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

- இவ்வாணையின்படி 05-12-1986 முதல் முன்னாள் கிராம அலுவலர்கள் சிறப்பு



ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட்டதால், ஒவ்வொரு முன்னாள் கிராம அலுவலரும் சிறப்பு ஓய்வூதிய நிலுவைத் தொகையாக ஏறத்தாழ ரூ.23,000/- பெற்றனர்.

- பின்னர் 22.07.1998 அன்று சிறப்பு ஓய்வூதியத்தை ரூ.175/-லிருந்து ரூ.250/-ஆக உயர்த்தியும் (இதனால் இதர படிகளுடன் சேர்த்து தோராயமாக மாதமொன்றுக்கு ரூ.800/- அளவில் கிடைக்கும்) குடும்ப ஓய்வூதியத்தை ரூ.100/-லிருந்து ரூ.150/-ஆக உயர்த்தியும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

- முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மேலும் சலுகைகள் வழங்கும் நோக்கத்தில் பதவி ஒழிப்பு நாளான 14-11-1980 அன்று பணியிலிருந்தவர்களுக்கு மட்டுமல்லாமல், அன்றைய நாளில் தற்காலிகப் பணி நீக்கத்தில் இருந்தவர்களுக்கும், விடுப்பில் இருந்தவர்களுக்கும் இச்சிறப்பு ஓய்வூதியச் சலுகை 09.09.1998 அன்று நீட்டிக்கப்பட்டது.

### இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்

- பொருளாதாரத்தில் நலிவுற்ற நிலையில், ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்குக் குறைவாக உள்ள 6,68,452 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் விவரம்:-

| | | |
|---|---|---|
| 1996-க்குப் பின் வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் | | 6,68,452 |
| பயனாளிகளில் ஆதிதிராவிடர்கள் | - | 2,22,389 பேர் |
| மலைவாழ் மக்கள் | - | 7,092 பேர் |

### முதலமைச்சர் பொது நிவாரண நிதி

- 13.5.96-க்குப்பின் வழங்கப்பட்டுள்ள நிவாரண தொகை ......ரூ. 39.64 கோடி

- உயிர்காக்கும் அறுவை சிகிச்சைக்கு நிவாரணம் பெற்ற பயனாளிகள் ..4,162

- இயற்கைச் சீற்றங்களால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் பெற்றவர்கள் ..............................8,293

- விபத்துகளால் பாதிக்கப்பட்டு நிவாரணம்பெற்றோர் ..................2,637

- பிறவகையினர் ..............................56,800

மொத்த பயனாளிகள் ................71,89:

### அரசு ஊழியர் நலன்

- அரசு ஊழியர் குடும்பநல நிதி ரூ. 60 ஆயிரம் என்பது ரூ.1 இலட்சமாக உயர்வு.

- முழு ஓய்வூதியம் பெற 30 ஆண்டு பணி போதும்.

- ஓய்வு பெறும்போது ஒப்படை செய்து பணம் பெறும் 240 நாட்கள் ஈட்டிய விடுப்பில் 180





நாட்களுக்கு மட்டுமே ஊதியத்துடன் அனுமதிக்கப்பட்ட வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற படிகளை எஞ்சிய 60 நாட்களுக்கும் அனுமதித்து 1997-98இல் ஆணை.

- ❖ தனிப்பட்ட அலுவலுக்காக அனுமதிக்கப்படும் அரைச் சம்பளத்துடன் கூடிய விடுப்பினை (Half Pay Leave on Private Affairs) ஓய்வுபெறும் காலத்தில் 90 நாட்கள் வரை ஒப்படை செய்து, அதற்குரிய முழுச் சம்பளத்தையும் அரசு ஊழியர் பெற 1997-98இல் ஆணை.
- ❖ 1.1.1996 முதல் மத்திய அரசின் ஐந்தாவது ஊதியக்குழுவின் அடிப்படையில் அரசு ஊழியருக்கும், ஓய்வூதியம் பெற்றோருக்கும் ஊதியம் மற்றும் ஓய்வூதியம் திருத்தி வழங்கப்பட்டது. இதனால் 1998-99இல் மட்டும் அரசுக்குக் கூடுதல் செலவு ரூ.10,344 கோடி.
- ❖ வீடுகட்டும் கடன் ரூ.4 இலட்சம் என்பது ரூ.6 இலட்சமாக 2000-2001இல் உயர்வு.

## வனவளம் மற்றும் சுற்றுச்சூழல்

- ❖ ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ரூபாய் 499.02 கோடி மதிப்பீட்டில் "தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம்" எனும் மாபெரும் திட்டம் 1997-98 முதல் செயல்படுத்தப்படுகிறது.
- ❖ இது ஐந்தாண்டு காலம் செயல்படும். 1999 இறுதிவரை ரூபாய் 236 கோடி செலவில் ஏறத்தாழ 5.60 இலட்சம் ஏக்கர் (2,25,000 ஹெக்டேர்) பரப்பில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 2000-2001 இல் ரூ.109.4 கோடி செலவில் 1.89 இலட்சம் ஏக்கர்(75,000 ஹெக்டேர்) பரப்பில் 200 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது.
- ❖ வன விலங்குகளைப் பாதுகாத்திட 9 புதிய வன விலங்குகள் சரணாலயங்கள் அமைக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவற்றுள், அனுமதி கிடைக்கப் பெற்ற திருச்சி கரைவெட்டி, ஈரோடு வெள்ளோடு வடமுகம் ஏரி ஆகிய இடங்களில் புதிய சரணாலயங்கள் அமைக்க ஆணை.

* * *



# இளைஞர் நலத்திட்டங்கள்

இளைஞர்கள், அதாவது 15–35 வயதுக் குட்பட்டவர்கள் மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 1/3 பங்காக உள்ளனர். சமுதாயத்தின் துடிப்புமிக்க திறமைமிக்க இந்தப் பிரிவை ஒழுங்காகக் கையாள்வதன் மூலம் அவர்களிடம் உள்ள சக்தியைத் தனி மனித வளர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டுக்கும் பயன்படுத்தலாம். இளைஞர்களிடையே அவர்களின் தனித்துவத்தை உணரச் செய்தல், சமுதாய சேவை மனப்பான்மையை மேம்படுத் துதல், "நமக்கு நாமே" என்ற கொள்கையில் பிடிப்பு ஏற்படுத்துதல் ஆகிய வைகள் இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் முக்கிய நோக்கமாக உள்ளது. இத்துறையின் செயல்பாடுகள் மாணவ இளைஞர் சமுதாய மட்டுமின்றி பெரும்பான்மையான மாணவரல்லாத இளைஞர் சமுதாயத்தின் நலன்களையும் கருத்திற்கொண்டுள்ளது. பெரும் பான்மையான இளைஞர் நலத்திட்டங்கள் பல்வேறு துறைகள்– பள்ளிக்கல்வித் துறை, உயர்கல்வித்துறை, ஊரகவளர்ச்சித் துறை, ஆதிதிராவிடர் நலன் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை – செயல்படுத்தி வருகின்றன. இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை பணி அடிப்படையில் மாற்றம் ஏதுமில்லாமல் மாற்றங்களை ஏற்படுத்த தேசிய மாணவர் படை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

### தேசிய மாணவர் படை

இந்தியாவில் முதன்மை வாய்ந்த இளைஞர் இயக்கமான தேசிய மாணவர் படை 1948ல் உருவாக்கப்பட்டது. நல்லொழுக்கம், கட்டுப்பாடு, துணிவுடைமை, தோழமையுணர்வு, தலைமையேற்கும் திறமை, சமயச் சார்பின்மை, வீரச்செயல் ஆற்றும் எழுச்சியுணர்வு, போட்டி விளையாட்டுகளில் நேர்மை ஆகிய நற்பண்புகளையும் தன்னலமற்ற தொண்டு ஆர்வத்தையும் இளைஞர்களிடையே உருவாக்கி, அவர்களைப் பயன்மிக்க குடிமக்களாக ஆக்குவது தேசிய மாணவர் படையின் நோக்கமாகும். 'ஒற்றுமை மற்றும் ஒழுக்கம்' அதன் கோட்பாடாகும்.

மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் மூலம் பாதுகாப்புத் துறை செயலாளர் பொறுப்பில் தேசிய மாணவர்படை இயக்ககம் நிர்வகிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தேசிய மாணவர்படையைச் செம்மையாகவும், திறன்படவும், நிர்வகிக்கும் பொறுப்பினைத் தமிழக அரசு இந்த இயக்ககத்தின் துணைத் தலைமை இயக்குநருக்கு அளித்துள்ளது. தேசிய மாணவர்படை குறித்த செலவை மத்திய அரசும் மாநில அரசும் ஏற்கின்றன.

1999–2000ஆம் ஆண்டில் 88,328 தமிழக மாணவர்கள் தேசிய மாணவர் படையில் சேர்ந்துள்ளனர். தமிழ்நாடு அரசு தனது பங்காக ரூ.1,315 இலட்சம் கடந்த ஆண்டிற்கென ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் 2000–2001ல் இதற்காகக் கூடுதல் தொகை ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இந்தியா முழுவதிலுமுள்ள 16 மாநில தேசிய மாணவர்படை இயக்கங்களுள் தமிழ்நாடு தேசிய மாணவர் படைக்குழு புதுதில்லியில் நடைபெற்ற குடியரசு தின முகாமில் கலந்து கொண்டு, தேசிய அளவில் முதலாவதாக வந்து "பிரதமர் பதாகையை" வென்றுள்ளது. தமிழ்நாடு தேசிய மாணவர்படைக்குழு இதுகாறும் 11 முறை தேசிய அளவில் முதலாவதாக வந்துள்ளது என்பது பாராட்டுக்குரியதாகும்.

தமிழக அரசு தேசிய மாணவர் படையினருக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு கீழ்க்காணும் சலுகைகளை அளித்துள்ளது.



(அ) தேசிய மாணவர்படை பயிற்சியில் சிறந்தவர்களுக்கு உதவித்தொகையாக முதுநிலைப்பிரிவில் 80 மாணவர்களுக்கு ரூ.1,200 வீதமும், இளநிலைப்பிரிவில் 90 மாணவர்களுக்கு ரூ.600 வீதமும் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

(ஆ) தேசிய மாணவர்படை இயங்குகின்ற கல்லூரி ஒவ்வொன்றிலும் தேசிய மாணவர் படை சான்றிதழ் உடையவர்களுக்கு இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் ஒவ்வோர் இடம் ஒதுக்கப்படுகிறது, அவ்வாறே பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் ஒவ்வொன்றிலும் ஓரிடம் ஒதுக்கப்படுகிறது.

(இ) 2000–ஆம் ஆண்டு குடியரசு தினவிழாவில் கலந்து கொண்ட தேசிய மாணவர் படையினருக்கு அளிக்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை ரூ.100 லிருந்து ரூ.1000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.

(ஈ) பொறியியற் கல்லூரிகளில் தேசிய மாணவர் படையினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 2 இடங்கள் 10 இடங்களாக வரும் கல்வியாண்டிலிருந்து உயர்த்தப்படுகிறது.

### நாட்டு நலப்பணித் திட்டம்

நாட்டு நலப்பணித் திட்டம் தமிழகத்தில் 1,170 பள்ளிகள் (50 தொண்டர்கள் வீதம் 1170 அலகுகள்), 528 கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்பப் பயிலகங்களில் (100 தொண்டர்கள் வீதம் 1065 அலகுகள்) செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்திலுள்ள மொத்த நாட்டு நலப்பணித்திட்ட தொண்டர்களின் எண்ணிக்கை 1,65,000 ஆக உள்ளது. 2000–2001 ஆம் கல்வியாண்டு முதல் இந்த எண்ணிக்கை 1,70,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் 7:5 என்ற விகிதத்தில் மத்திய அரசாலும், மாநில அரசாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டு வருகிறது. 1999–2000 ஆம் ஆண்டிற்கான நாட்டு நலப்பணித் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு ரூ.5.11 கோடி ஆகும். (பள்ளிகளுக்கு ரூ.1.86 கோடி, கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களுக்கு ரூ.3.25 கோடி). இந்த மானியத்தொகை அன்றாட பணிகள் சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டு நலப்பணித்திட்ட பணிகளாவன– வளாகங்களை மேம்படுத்துதல், மரம் நடுதல், இரத்த தானம் செய்தல், கல்வியறிவு இயக்கம், எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு இயக்கம், உடல் நலம், சத்துணவு, குடிசைப் பகுதிகளை மேம்படுத்துதல், சேவை நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல் மற்றும் பல.

### சாரண சாரணியர் இயக்கம்

சர்வதேச இயக்கமான சாரண சாரணியர் இயக்கத்தின் முக்கியக் குறிக்கோள் பள்ளி மாணவ மாணவியரிடையே நல்லொழுக்கத்தை வளர்த்தல், நாட்டுப்பற்று உணர்வு, இரக்க மனப்பான்மை, சமூகப்பணி ஆகியவைகளைப் புகட்டுவதாகும். 'எப்போதும் தயாராக இரு' என்பது அதன் கோட்பாடாகும். இந்த இயக்கம் தமிழ்நாட்டில் 3,430 பள்ளிகளில் இயங்கி வருவதுடன், இந்த இயக்கத்தில் 74,500 மாணவர்களும் 43,889 மாணவியரும் உறுப்பினர்களாக உள்ளனர். 1998–99 ஆம் ஆண்டு முதல், 2000 சிறந்த சாரண சாரணியருக்கு "இராஜ்ய புரஸ்கர்" விருது வழங்கப்பட்டு வருகிறது. அரசு இதற்காக ரூ.5 இலட்சம் செலவு செய்கிறது.




### இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளைக் குறித்து வழிகாட்டுதல்

உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள், அவர்களுக்கு உண்டான பல்வேறு போட்டித் தேர்வுகளைப் பற்றியும், வேலைவாய்ப்புகளைப் பற்றியும், சுய தொழிலுக்கான வாய்ப்புகளைப் பற்றியும் போதுமான வழிகாட்டுதல் இல்லாமல் இருக்கின்றார்கள். கிராமப்புறப் பகுதிகள் மற்றும் சிறிய நகரங்களில் வாழ்கின்ற மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடத் தெரியாத தேக்க நிலையில் உள்ளார்கள். உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவ சமுதாயத்திற்கு சரியான வேலை வாய்ப்பிற்கான வழிகாட்டும் முறையை இணையம் உட்பட மின்னணுவியல் மற்றும் பத்திரிக்கை மூலம் பரவலாக அனைவரும் அறியும்படி இத்துறை வழிவகுத்து ஆவன செய்து முக்கியப் பங்காற்றும்.

## மாணவரல்லாத இளைஞர்களுக்கான திட்டங்கள்

### இளைஞர் விடுதிகள்

நமது நாட்டின் பாரம்பரியப் பண்பாட்டை பற்றித் தெரிந்துகொள்ள இளைய சமுதாயம் மேற்கொள்ளும் பயணங்களை ஊக்குவிக்கும் பொருட்டு இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன. இளைஞர்கள் மேற்கொள்ளும் கல்விச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, இன்பச் சுற்றுலா, சரித்திரப்புகழ்பெற்ற மற்றும் பாரம்பரிய கலாச்சார மையங்களுக்குச் செல்லும் போது அவர்களுக்குக் குறைந்த செலவிலான தங்கும் வசதிகளை இளைஞர் விடுதிகள் அளிக்கும் நோக்கத்தோடு கட்டப் படுகின்றன.

இது மைய அரசும், மாநில அரசும் இணைந்து செயல் படுத்தும் திட்டமாகும். மாநில அரசு இளைஞர் விடுதி கட்டுவதற்கான நிலத்தை இலவசமாகத் தருகிறது. மைய அரசு கட்டுமானப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.

தற்சமயம் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.






### இளைஞர் விழா

இளைஞர் விழாக்கள் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இளைஞர்களிடையே அர்த்தமுள்ள சுமுகமான நட்புறவையும், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் நடத்தப்பட்டு வருகிறது. மாநில அரசின் ஒதுக்கீடு ரூ.1.3 இலட்சம் ஆகும். மைய அரசும் இதே போன்று ஒவ்வொரு ஆண்டும் தேசிய அளவில் இளைஞர் விழாவினை ஜனவரித் திங்கள் 12–16 வரை நடத்தி வருகிறது. இவ்விழாக்களில் பல்வேறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களைச் சார்ந்த அணிகள் 18 வெவ்வேறு போட்டிகளிலும், போட்டிகள் அல்லாத கலை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கின்றனர். தேசிய இளைஞர் விருதுகள் இந்த விழாவின் போது வழங்கப்படுகிறது.

### வீரதீரச் செயல்களை ஊக்குவிக்கும் திட்டம்

மைய அரசின் 50 விழுக்காடு மானிய உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இளைஞர்களைப் பேணுவது, சவால்களை எதிர்கொள்ளும் திறன், பரந்த மனப்பான்மை, ஒருங்கிணைந்த கூட்டு முயற்சி மற்றும் கடினமான சூழ்நிலைகளை எதிர்கொண்டு விரைந்து முடிவெடுக்கும் திறனை வளர்ப்பதை குறிக்கோளாகக் கொண்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. பின்வரும் வீரதீரச் செயல்களுக்காக மாநில அரசுகள், கல்வி நிறுவனங்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள், தனிநபர் குழுக்கள் உதவி வழங்கப்படுகிறது.

நீண்ட தூரப் பயணம், நீண்ட நடைப்பயணம், முகாம் அமைத்தல், மலைக்குன்று ஏற்றம், மலையேற்றம், சைக்கிள் பயணம், பனி சறுக்குதல், படகு சவாரி, நீர் சறுக்குதல், தொலைதூர நீச்சல், காற்றில் மிதத்தல், குதித்தல், பாய்மர சவாரி, துடுப்புப் போட்டி, பாராசூட்டிங் மற்றும் பல.

1998–99ஆம் ஆண்டில் 100 மாணவர்கள் மற்றும் சென்னை மாநகராட்சியைச் சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு நீலகிரியில் நீண்டதூர மலையேற்றம் செய்தனர். இதற்கு மைய அரசிடமிருந்து ரூ.0.57 இலட்சம் மானியம் பெறப்பட்டது.

### இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம்

15–35 வயதுள்ள கிராமப்புற இளைஞர்களுக்காக மைய அரசால் உருவாக்கப்பட்ட திட்டமாகும். அந்தந்த இடத்திலுள்ள தேவைகளைக் கருத்திற்கொண்டு தக்க பயிற்சி அளிப்பதன் மூலம் இளைஞர்களிடம் மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணரவும், சுய வேலைவாய்ப்பு மற்றும் போதிய வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்கிடுவதையும் இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், கோழிவளர்ப்பு, தையற்கலை, வானொலிப் பெட்டி மற்றும் தொலைக்காட்சி பழுதுபார்ப்பு, கணினி பயிற்சி போன்றவைகள் இப்பயிற்சித் திட்டத்தில் அடங்கியுள்ளன. இத்திட்டம் மாநில அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த பயிற்சி முகாமின் கால அளவு ஒரு மாதம் முதல் ஆறு மாதம் வரை கொண்டதாகும்.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் பங்கேற்பாளர்களுக்கு மைய அரசு, அவர்களின் இருப்பிடத்திலிருந்து பயிற்சி நடைபெறும் இடத்திற்கு சென்று வர இரண்டாம் வகுப்பு இரயில் கட்டணம் அல்லது குறுகிய தூர பேருந்து கட்டணம் மற்றும் உணவு, தங்குமிடம் மற்றும் இதர செலவினங்களுக்காக அதிகபட்சமாக ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.50 வீதம் வழங்கி வருகிறது.

### தேசிய ஒருமைப்பாட்டினை ஊக்குவித்தல்

இத்திட்டத்தின் கீழ், தேசிய ஒருமைப்பாட்டைப் பேணவும் மற்றும் மத நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் நடத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக மைய அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. இதில் அடங்கியுள்ள இரண்டு முக்கியப் பயிற்சித் திட்டங்கள் –

(அ) தேசிய ஒருமைப்பாட்டு முகாம்

(ஆ) மாநிலங்களிடையே இளைஞர்கள் பரிவர்த்தனை

தேசிய ஒருமைப்பாட்டு முகாம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 7–10 நாட்கள் நடத்தப்படுகிறது. இதில் 50 முதல் 200 இளைஞர்கள் பங்கேற்கலாம். இந்த முகாம்களில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த இளைஞர்கள் ஒன்றாகத் தங்கியும், உணவருந்தியும், ஒருவரையொருவர் புரிந்து கொண்டும், கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்றும் மற்றும் தொழில் முகாமில் பங்கேற்றும் வருகின்றனர்.

மாநிலங்களுக்கிடையே இளைஞர்கள் பரிவர்த்தனையின் கீழ், ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் மாணவரல்லாத இளைஞர்கள் மற்ற மாநிலங்களுக்குச் சென்று அங்குள்ள மாறுபட்ட கலாச்சாரத்தைத் தெரிந்து கொள்ள ஏதுவாகிறது.

15–35 வயதிற்குட்பட்டவர்கள் அனைவரும் இத்திட்டத்தில் பங்கேற்கலாம். குறிப்பாக, (1) ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் (2) இளைஞர் மன்றங்கள் அல்லது தன்னார்வ நிறுவனங்களில் உறுப்பினர்களாக உள்ள மாணவரல்லாத இளைஞர்கள் (3) விவசாய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் (4) தொழிலாளர் அமைப்பைச் சார்ந்தவர்கள் போன்றோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கான நிதியுதவி பின்வருமாறு:

(அ) உணவு மற்றும் தங்குமிடம் – மாநகரங்கள் அல்லது மாநில தலைநகரங்களாயின் ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.40 மற்ற இடங்களுக்கு ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.35.

(ஆ) பயணக் கட்டணம் – இரண்டாம் வகுப்பு இரயில் கட்டணத்தில் 90 விழுக்காடு அல்லது பேருந்து கட்டணம்.

(இ) அச்சிடுதல் மற்றும் வெளியிடுதல் – இளைஞர்கள் பரிவர்த்தனை நிகழ்ச்சி பற்றிய அறிக்கைகளை அச்சிட்டு வெளியிடுவதற்கான விலை நிகழ்வு ஒன்றுக்கு ரூ.1,000–க்கு மிகாமல் வழங்கப்படுகிறது.




## இளைஞர்களுக்கான கண்காட்சித் திட்டம்

இத்திட்டத்தின் குறிக்கோள், தேசிய வளர்ச் சியில் இளைஞர்களின் ஈடுபாட்டினை மதித்து வளர்த்தல், மதச் சார்பற்ற தன்மையை ஊக்குவித்தல், தேசிய ஒருமைப்பாடு, வேற்று மையில் ஒற்றுமை, இந்தியக் குடிமகன் என்பதில் பெருமைப்படுதல், சமூக தீமைகளை ஒழித்தல் போன்ற வையாகும். இத்திட்டம் மாநில அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டுப்புற நடனம், நாட்டுப்புறப் பாடல்கள், வர்ணம் தீட்டுதல், கலை மற்றும் கைத்தொழில், புத்தகங்கள் மற்றும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் இளைஞர்கள் சார்ந்த திட்டங்கள் ஆகியவைகள் மைய அரசின் நிதியுதவியுடன் நடத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான நிதியுதவி பின்வருமாறு:

(அ) நாட்டுப்புற நடனம், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பாடல்கள், வர்ணம் பூசுதல், கலை மற்றும் கைத்தொழில் மற்றும் தேசிய அளவிலான இளைஞர்கள் மாநாடு/ கலந்துரையாடல் / கருத்தரங்கம் / இளைஞர்கள் முகாம்கள் நடத்துதல் ஆகியவற்றிற்கு –

1. உணவுக் கட்டணம் ரூ.20 நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு

2. பயணக்கட்டணம் – பங்கேற்பாளர் தங்குமிடத்திலிருந்து முகாம் நடக்கும் இடத்திற்கு வர குறுகிய வழி பயணக் கட்டணம்

## மலைவாழ் பகுதியில் இளைஞர் நலத்தினை ஊக்குவிக்கும் சிறப்புத் திட்டம்

மலைவாழ் பகுதி இளைஞர்களுக்கிடையே தலைமையேற்கும் தன்மையை வளர்க்கும் பயிற்சித் திட்டங்கள், சுயவேலைவாய்ப்புத் திறனை வளர்க்க உதவும் தொழில் பயிற்சிகள், கண்காட்சிகள் இத்திட்டத்தின் கீழ் நடத்தப்படுகின்றன. இத்திட்டம் மாநில அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஏனைய இளைஞர் நலத் திட்டங்களுக்கு வழங்கப்படுகின்ற நிதியுதவியைப் போன்று இத்திட்டத்திற்கும் வழங்கப்படுகிறது.



## இளைஞர் மன்றங்கள் / சங்கங்கள் / சுயஉதவி குழுக்கள் அமைப்பதை ஊக்குவித்தல்




நேரு யுவ கேந்திரா சங்கேதன், மைய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையின் கீழ் செயல்படுகின்ற ஒரு சுயாட்சி நிறுவனமாகும். இந்நிறுவனம் 15–35 வயதிற்குட்பட்ட மாணவரல்லாத கிராமப்புற இளைஞர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணத்துடன் பல்வேறு கிராமப்புற இளைஞர் மன்றங்களை அமைத்துள்ளது. நேரு யுவ கேந்திரா சங்கேதன் மூலம் மாநில அரசின் "நமக்கு நாமே" திட்டங்களும், பல்வேறு ஐ.இ.சி. செயல்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மாநிலத்தின் ஒவ்வொரு கிராம பஞ்சாயத்துக்களிலும் இளைஞர் மன்றங்களை அமைப்பதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு இளைஞர் மன்றங்களை அமைக்கும் இயக்கத்தினை வலுப்படுத்த முனையும். இளைஞர் மன்றங்களை ஒருங்கிணைக்கவும், அவர்களுக்கு எழுச்சியூட்டவும், துறை மூலமாக 'நம்மால் முடியும்' என்ற திங்களிதழ் ஒன்றும் வெளியிடப்பட உள்ளது.

ஊரக வளர்ச்சித் துறை, மைய அரசின் நிதி ஆதாரத்துடன் செயல்பட்டு வரும் சுவர்ண ஜெயந்தி கிராம் சுவரோஸ்கர் யோஜனா என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களை ஒன்றிணைத்து சுய உதவி குழுக்கள் அமைக்கப்படுகிறது. அவர்கள் குறைந்தபட்சம் ஆறு மாத காலத்திற்காவது சிக்கனம்–உடன்–கடன் வழங்கும் அமைப்பில் பங்கேற்க ஊக்கமளிக்கப்படுகிறார்கள். சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு நிலையாக இருக்கும்பட்சத்தில் அந்தக் குழுக்கள் சுற்றுமுறையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடமிருந்தும், வங்கிகளிலிருந்தும் நிதியுதவி மற்றும் மானியக் கடன் பெற தகுதியுள்ளவர்களாகிறார்கள். இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, ஊரக வளர்ச்சித் துறையுடன் இணைந்து, கிராமப்புறங்களில் 15–35 வயதிற்குட்பட்ட மாணவரல்லாத கிராமிய இளைஞர்களைக் கொண்ட 1000 சுயஉதவிக் குழுக்களை 2000–2001 ஆம் ஆண்டில் அமைக்க முயலும். இந்த சுயஉதவிக் குழுக்கள் எதிர்காலத்தில் கிராமப்புறங்களில் இளைஞர் மன்றங்கள் அமைக்க முக்கிய கருவாக அமையும்.

இதே போன்று, 2000–2001 ஆம் ஆண்டில் ஒவ்வொரு கிராம பஞ்சாயத்துக்கள் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் இளைஞர் மன்றங்களை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்த மன்றங்கள் அந்தப் பகுதியில் அமைக்கப்படவுள்ள விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்களைப் பராமரிக்கும்.

## மாநில இளைஞர் ஆலோசனைக்குழு அமைத்தல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாநில இளைஞர் ஆலோசனைக்குழு அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இளைஞர்கள் நலன் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் உச்ச அமைப்பாக இது விளங்கும்.

தமிழக அரசின் பல்வேறு துறைகள் மூலம் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டுக்கான செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் எண்ணற்ற திட்டங்கள் நடைமுறையில் இருப்பினும், அவற்றை ஒருங்கிணைத்துப் புதிய பரிமாணமும் அதிக அழுத்தமும் அளிப்பதன் மூலம் ஒருமித்த தாக்கத்தை ஏற்படுத்துவது அவசியமாகிறது.

இந்நோக்கத்தின் அடிப் படையில் உருவாக்கப்பட்ட இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை இளைய தலை முறையினரிடையே சீரிய நல்லொழுக்கத்தைப் புகுத்துவதிலும், மதச் சார்பற்ற மனப்பான்மையையும், விளையாட்டு வீரர்களின் நற்பண்புகளையும், தன்னலம் கருதா சேவை மனப்பான்மையையும் ஊக்குவிப்பதிலும் ஈடுபடுகிறது. ●



# தொழில் வளர்ச்சியில் இந்தியா முழுமைக்கும் வழிகாட்டும் மையமாக தமிழகம் உருவாகும்

□ முதலமைச்சர் கலைஞர்

*நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் 13.5.2000 அன்று வெளியிடப்பட்ட முதலமைச்சர் கலைஞர் அவர்களது பேட்டியிலிருந்து...*

*செய்தியாளர்* : இந்த ஆண்டுடன் தங்களுடைய ஆட்சியின் நான்கு ஆண்டுகள் நிறைவெய்துகிறது. வளர்ச்சியைப் பொறுத்த வரையில் நீங்கள் தமிழகம் எந்த அளவிற்கு முன்னேறியுள்ளதாகக் கருதுகிறீர்கள்? மேலும், தொழில் மயமாக்கத்தைப் பொறுத்த வரை இனிவரும் பத்தாண்டுகளில் தமிழகத்தின் வளர்ச்சி எந்த நிலையில் இருக்கும்?

*முதலமைச்சர் கலைஞர்* : 1994–95–இல், 8.7 சதவீத அளவிற்கு இருந்த தமிழகத்தின் தொழில் வளர்ச்சி 1996க்குப் பின் அரசு மேற்கொண்ட தொழில் நேயத்துடன் கூடிய வெளிப் படையான அணுகுமுறைகள் காரணமாக (Industrial Friendly and Transparent Approach) 1999–2000–ஆம் ஆண்டில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி 15.02 சதவீதம் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது.

அரசின் தொழில் கொள்கை, முற்போக்கான, ஆக்கபூர்வமான அணுகுமுறை ஆகியவற்றின் காரணமாக தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டின் அடிப்படைத் தோற்றம் முற்றிலுமாக மாறி இருக்கிறது.



1996 ஏப்ரலில், தமிழகத்தில் செய்யப்பட்டிருந்த தொழில் முதலீடுகள் ரூ.90,650 கோடி. இது இந்த நான்கு ஆண்டுகால ஆட்சியில் ரூ.1,56,893 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது.

ஆகையால், கடந்த 4 ஆண்டுகளில் தமிழகத்தில் மொத்த தொழில் முதலீடு ரூ.66,243 கோடி. தொழில் முதலீட்டில் தமிழ்நாடு முதலிடத்தை எய்தியுள்ளது. இந்திய தொழில் முதலீட்டில் தமிழகத்தின் பங்கு 27.06 சதவீதம். 1996–இல் இந்த அரசு தமிழகத்தில் பொறுப்பேற்ற பொழுது இப்பங்கு 8.45 சதவீதமாக மட்டுமே இருந்தது என்பதனை நினைவுபடுத்திட விரும்புகிறேன். பொருளாதார வளர்ச்சியில் மாநிலங்களுக்கிடையே தற்போது மூன்றாவது இடத்திலுள்ள தமிழ்நாடு, இரண்டாவது இடத்தை எய்துவதற்கு உரிய வாய்ப்புகளைப் பெற்றுள்ளது.

உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும், வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் தமிழகம் இன்று இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய மாநிலம் ஆகும்.

தமிழகத்தின் தற்போதைய ஏற்றுமதி மதிப்பு 5.3 பில்லியன் டாலர் (22,976 கோடி ரூபாய்) ஆண்டு ஏற்றுமதி வளர்ச்சி விகிதம் 12 முதல் 15 விழுக்காடு.

இன்றைய நிலையில், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் மும்பையிலுள்ள இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, தமிழ்நாடு 144 என்கிற குறியீட்டு எண்களைப் பெற்று இந்தியாவிலேயே மூன்றாவது இடத்தில் இருக்கிறது. ஆனால் தேசிய சராசரி 100 ஆகும்.

இந்த அரசு மின்னாற்றல், சாலைகள், துறைமுகங்கள், தகவல் தொழில்நுட்பம், விமானப்போக்குவரத்து போன்ற உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதில் மிகுந்த அக்கறையுடன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

1995–96–இல் வெறும் 37 கோடி ரூபாய் அளவில் இருந்த கணினி மென்பொருள் ஏற்றுமதி, 1999–2000–இல் ரூ.1,890 கோடியாக அதிகரித்துள்ளது.

மென்பொருள் ஏற்றுமதியில் கடந்த சில ஆண்டுகளில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மிகவும் வியப்பூட்டுவதாகும். வரும் பத்தாண்டுகளில் மாநிலத்திலுள்ள மக்களின் உறுதியான ஒத்துழைப்புடன் தற்போதைய வளர்ச்சி வேகம் தொடர்ந்து நீடித்தால், தமிழகம் தொழில் வளர்ச்சி நடவடிக்கைகளின் மையமாகவும், இந்தியா முழுமைக்கும் வழிகாட்டும் மையமாகவும் உருவாகும்.

*செய்தியாளர்* : தமிழகத்தின் வருங்காலத்தை நிர்ணயிக்கும் கருவியாக அமையப்போவது எது? தமிழகம் எந்தெந்த முனைகளில் ஊக்கம் அளித்திட வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?



*முதலமைச்சர்* : தமிழ்நாடு உணவு உற்பத்தியில் முன்னணியில் உள்ளது. இந்த அரசு பல வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றியுள்ள மையாலும், புதிய வேளாண் தொழில் நுட்பத்தை பின்பற்றுவதில் தமிழக விவசாயிகள் கொண்டுள்ள விழிப்புணர்வு காரணமாகவும், 1999–2000 ஆண்டில் தமிழகத்தின் உணவு உற்பத்தி முன் எப்போதும் இல்லா அளவுக்கு 103 மெட்ரிக் டன் என உயர்ந்துள்ளது.

சென்னை–பெங்களூர், சென்னை–கன்னியாகுமரி ஆகிய நெடுஞ்சாலைகள் முழுவதிலும் தொழிற்சாலைகள் பெருகி வளர்ந்து தொழில் நெடுஞ்சாலை ஆகிட வேண்டும் என்பது என்து பேரவா. இக்கருத்து செயல்வடிவம் பெறும் வகையில், புதிய தொழில் நுட்பங்களையும், புதிய தொழிற்சாலைகள் அமைவதையும் ஊக்கப்படுத்துவது, தமிழக இளைஞர்களுக்கு மிகப் பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவது



என்ற நோக்கத்துடன் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன்.

தமிழகத்தின் எதிர்கால முன்னேற்றத்தின் திறவுகோல் 21–ஆம் நூற்றாண்டின் எழுச்சிமிக்க இரு துறைகளான தகவல் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம் ஆகியவற்றை ஏற்றுக்கொள்வதில் தான் அடங்கியுள்ளது.

இந்த அரசு தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு ஏற்கெனவே போதுமான அளவிலான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பயனாக, பல்வேறு தொழிலகங்கள் உருவாகி வருகின்றன.

தமிழகம் உயிரியல் வளம் செறிந்துள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், பல்வகைப்பட்ட தாவர வகைகளும், உயிர்வாழ் இனங்களும் நிறைந்துள்ளன. மேலும், தமிழகத்தில் அறிவாற்றல் நிறைந்த பணியாளர்கள் நிறைந்துள்ளனர். இளைஞர்களை ஆற்றல் நிறைந்தவர்களாக உருவாக்கிடும் பல சிறந்த கல்வி நிறுவனங்களும் இங்கே உள்ளன. உயிரியல் வளம் அடிப்படையிலான தொழில் வளர்ச்சி தமிழகத்தில் நிலைபெறுவதற்காக உயிரியல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்திட வேண்டும் என்பது என் விருப்பமாகும்.

தமிழகத்தில் உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை வகுப்பதற்காக வல்லுநர் குழு ஒன்றை டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையில் ஏற்கெனவே நாங்கள் அமைத்துள்ளோம். அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களில் இக்கொள்கை அறிவிக்கப்படுவதன் மூலம், உயிரியல் தொழில்நுட்பக் கொள்கையை இந்தியாவிலேயே முதன் முதலாக உருவாக்கிய மாநிலம் என்னும் பெருமையைத் தமிழகம் பெறும்.

உலகில் உயிரியல் தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்கும் முன்னணி நிறுவனம் ஒன்றின் ஒத்துழைப்புடன் உயிரியல் தொழில்நுட்ப தொழில் மண்டலம் (Biotech Enterprise Zone) ஒன்று நிறுவுவதற்கு ஏற்கெனவே திட்டமிடப்பட்டுள்ளது. உயிரியல் தொழில்நுட்பத் தத்துவங்களையும் பொருள்களையும் வர்த்தக ரீதியில் பயன்படுத்துவதற்கு காப்புரிமம் (Patents) வழங்கி ஊக்கமளித்திடும் இன்குபேஷன் வசதிகளை (Incubation facilities) இம்மண்டலம் உருவாக்கிடும். மதுரை காமராசர் பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக் கழகம் ஆகியவற்றில் உள்ள உயிரியல் தொழில்நுட்ப மையங்களின் உதவியோடு தமிழகத்தில் உயிரியல் தொழில்நுட்பத் திறன்களை இம்மண்டலம் வளர்த்திடும்.

*செய்தியாளர்* : தகவல் தொழில்நுட்பம் ஏற்படுத்தியுள்ள அதீத வளர்ச்சியும், இதில் தலைமை நிலையைப் பெற்றிட வேண்டி பெங்களூர் மற்றும் ஹைதராபாத் ஆகிய நகரங்களுடன் சென்னை மாநகரம் போட்டியிட்டு வரும் இத்தருணத்தில், தமிழகம் ஏதற்கு முன்னுரிமை அளித்திட வேண்டும்? தகவல் தொழில் நுட்பத்தில் தலைமை நிலையை எய்துவதற்குத் தமிழகம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்து வருகிறது?

*முதலமைச்சர்* : தகவல் தொழில்நுட்பத்துறை வளர்ச்சியில் 1996–இல் இந்த அரசு அமைந்த பிறகு தான் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தகவல்



தொழில்நுட்பத்திற்குத் தனிக்கொள்கை ஒன்றை அறிவித்த முதல் மாநிலம் தமிழகமே.

தகவல் தொழில்நுட்பத்துறையைச் சீராக வளர்த்திட, எனது தலைமையில் தகவல் தொழில்நுட்ப



பணிமுனைப்புக் குழு (State Level Task Force on Information Technology) அமைக்கப்பட்டுள்ளது.

கணினித் தமிழை உருவாக்கி வளர்ப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் தமிழக அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

12 இலட்சம் சதுர அடி பரப்பில் ரூ.340 கோடி செலவில் சென்னை தரமணியில் "டைடல்பார்க்" என்னும் ஆசியாவிலேயே மிகப்பெரிய மென்பொருள் பூங்கா உருவாகிறது. பிரதமர் வாஜ்பாய் அவர்களால் 4.7.2000 அன்று திறக்கப்படவிருக்கும் இப்பூங்காவில், உலகப் புகழ்பெற்ற பல நிறுவனங்கள் அங்கு தம்முடைய மென்பொருள் தொழில் நிறுவனங்களை அமைத்திட ஏற்கெனவே முடிவு செய்துள்ளன.

தகவல் தொழில்நுட்பத் தொழிலில் ஈடுபடும் இளைஞர்களுக்கு நிதியுதவி வழங்கி ஊக்கமளித்திட சிறப்பு மூலதன நிதி (VENTURE CAPITAL FUND), தமிழ் மென்பொருள் வளர்ச்சிநிதி (Tamil Software Development Fund) ஆகியன உருவாக்கப்பட்டுள்ளன. மெயின் பிரேம் கணினித் திறன் வாய்ந்தோர் (Largest Main frame computing capacity) தமிழ்நாட்டில் தான் அதிகம் உள்ளனர். இந்தியாவில் உள்ள நகரங்களில் மல்டிமீடியா சாப்ட்வேர் அப்ளிகேஷன்ஸ் (Multi-media Software Applications) அதிகமாகத் தயாரிக்கப்படும் தலைநகரமாகச் சென்னை திகழ்கிறது.

"மென்பொருள் திட்டங்கள் தயாரிப்பதற்கு இந்தியாவில் சிறந்த இடம் சென்னையே" என நாஸ்காம் (NASSCOM) (மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் தேசிய சங்கம்) 1998–ஆம் ஆண்டிலேயே நடத்திய ஆராய்ச்சி மூலம் அறிவித்துள்ளது.

"தமிழ்நாடு முதல்வர் கருணாநிதி அவர்கள் உச்சியில் ஏறி நின்று சென்னையில் நிகழ்ந்து வரும் அமைதியான புரட்சியைப் பற்றி உரக்கச் சொல்லிட வேண்டிய அவசியம் இல்லாமலேயே, ஓசை இல்லாமல் ஏராளமான மென்பொருள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரே நகரம் சென்னை தான்" என புகழ்பெற்ற கம்ப்யூட்டர் வார இதழான "தி டேட்டா க்வெஸ்ட்" தனது 6.3.2000 இதழில் பாராட்டியுள்ளது.

"பிசினஸ் இந்தியா" இதழ் தனது 1.5.2000 இதழில், "பழைய மாமல்லபுரம் சாலை சென்னையின் [illegible] நெடுஞ்சாலையாக (Ckyber Corridor of Chennai) உருவெடுத்து வருகிறது" என்று கூறி பாராட்டியுள்ளது.

வரும் பத்தாண்டு காலத்தில் தமிழகம் நூறு விழுக்காடு கணிப்பொறி அறிவாற்றல் [illegible] வேண்டும் எனும் உணர்வோடு 1200 அரசு மேல்நிலைப் பள்ளிகள், அரசு கலை– அறிவியல் கல்லூரிகள், அரசு மருத்துவக் கல்லூரிகள், பல் மருத்துவக் கல்லூரிகள்

ஆகியவற்றில் கணிப்பொறிக் கல்வியை அறிமுகப்படுத்தியுள்ளது.

*செய்தியாளர் :* தாங்கள் தமிழகத்தின் முதலமைச்சராக 13 ஆண்டுகளுக்கும் மேலாகப் பதவி வகித்து வந்துள்ளீர்கள். சிறந்த ஆட்சியாளர்களில் ஒருவராக தாங்கள் மதிக்கப்படுகிறீர்கள். பொதுமக்கள் பயன் பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை நீங்கள் அறிமுகம் செய்துள்ளீர்கள். இதுவரை தங்களால் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களில், எந்தத் திட்டத்தைக் குறித்து நீங்கள் பெருமிதம் கொள்கிறீர்கள்?

*முதலமைச்சர் :* தமிழக முதல்வர் பொறுப்பில் நான் பணியாற்றிய முந்தைய காலத்திலும் சரி, தற்போதும் சரி, அரசின் வளர்ச்சித் துறைகளோடு இணைந்து, தமிழகத்தின் ஒட்டு மொத்த முன்னேற்றத்திற்கும், ஏழை, எளிய வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் மேம்பாட்டிற்குமாக பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வந்துள்ளேன்.



சமுதாயத்தில் உள்ள நலிந்த பிரிவு மக்களின் நலம் கருதி நான் நடைமுறைப்படுத்திய திட்டங்களில் பல அகில இந்திய அளவில் கவனத்தை ஈர்த்துப் பாராட்டுக்களைப் பெற்றுள்ளன.

1971-இல் பிச்சைக்காரகள் மறுவாழ்வுத் திட்டம், 1972-இல் கண்ணொளி வழங்கும் திட்டம், 1973-இல் கை ரிக்ஷாவை ஒழித்து சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம், 1974-இல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம், 1975-இல் ஆதரவற்ற சிறுவர்களுக்குக் கருணை இல்லங்கள் அமைக்கும் திட்டம், விதவைகள் மறுமணத்திட்டம் முதலிய திட்டங்கள் சமுதாயத்திலுள்ள ஏழை, எளிய, நலிந்த பிரிவினரின் நலன் கருதி நிறைவேற்றப்பட்டவை ஆகும்.

அதே போல, 1989, 1990-ஆம் ஆண்டுகளில், பெண்களுக்குச் சொத்துரிமை, அரசுப்பணிகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு முதலிய திட்டங்களும், ஏழை, எளிய பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டங்களும் இந்த அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டவை ஆகும்.

இத்திட்டங்களைத் தொடர்ந்து 1996-ஆம் ஆண்டில் எனது அரசு அமைந்த பிறகு, "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்", "நமக்கு நாமே திட்டம்", "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்", "வாழ்வொளித் திட்டம்", "உழவர் சந்தைத் திட்டம்", "வருமுன் காப்போம் திட்டம்", "கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்", "பூமாலை திட்டம்", "வாழ்ந்து காட்டுவோம் திட்டம்" என்பன போன்ற திட்டங்களும், "தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டமும்" தொடங்கப்பட்டு, தமிழகத்தில் மட்டுமல்லாமல் நாட்டின் பல பகுதிகளிலும் பல்வேறு தரப்பினரின் பாராட்டுக்களையும் குவித்து வருகின்றன.



சமத்துவபுரத் திட்டத்தை செயல்படுத்துவதில் என் மனம் பெரிதும் பெருமிதம் அடைகிறது.

சமுதாய முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் இந்தத் திட்டங்களை எல்லாம் உருவாக்கிச் செயல்படுத்தும் வேளையில் அடையும் மகிழ்ச்சியும், மனநிறைவும் ஒருபுறம் இருந்தாலுங்கூட, பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டத்தைச் செயல்படுத்துவதிலே என்னுடைய மனம் பெரிதும் பெருமிதம் அடைகிறது.

ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் அமைக்கப்படும் 100 குடியிருப்புகளில், 40 குடியிருப்புகள் தாழ்த்தப்பட்ட / மலைவாழ் இன சமுதாயத்தினருக்கு மட்டும் ஒதுக்கப்படுகிறது. ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சகோதரரின் வீட்டிற்கு இருபுறமும் மற்ற வகுப்பினரின் வீடுகள் அமைந்து அவர்கள் மகிழ்ச்சியுடனும், நல்லிணக்கத்துடனும் வாழ்ந்து வருகின்றனர். பல்வேறு சாதி, மத பிரிவுகளைச் சார்ந்தவர்கள் கூடி அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்ந்து வருவது இத்திட்டத்தின் வெற்றியை எடுத்துரைக்கிறது. அந்த வெற்றி தமிழகம் முழுவதும் மட்டுமல்ல, இந்தியா முழுவதிலும் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்பது என்னுடைய விருப்பமாகும்.

இதற்காக தமிழக மக்களும், தகவல் தொடர்பு சாதனங்களும் தனது முழுமையான ஆதரவினை நல்கிட வேண்டுமென்பது என்னுடைய அவா.

*செய்தியாளர் :* குடிதண்ணீர் பிரச்சினை மிகப்பெரிய பிரச்சினையாக, குறிப்பாக சென்னையில் காணப்படுகிறது. வறட்சியான இந்த ஆண்டில், ஆந்திர மாநில முதல்வர் திரு. என். சந்திரபாபு நாயுடு கிருஷ்ணா நதிநீரை அளித்து உதவ முன்வந்துள்ள போதிலும், குடிநீர் தட்டுப்பாட்டால் மக்கள் பெரிதும் அல்லல் படுகின்றனர். 2000-2001-ஆம் ஆண்டு ஒரு வறட்சியான ஆண்டாக இருக்கும் என்ற எச்சரிக்கையும் எழுந்துள்ளது. ஆனால் அரசாங்கமோ, கடந்த 1992-92-ஆம் ஆண்டு சந்திக்க நேர்ந்த அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, இந்த நிலைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண இதுவரை போதுமான முயற்சிகளை எடுக்கவில்லை. இனிவரும் ஆண்டுகளில், வறட்சியான காலங்களில் பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில், இந்தப் பிரச்சினைக்கு இப்போதும், எப்போதும் உதவக்கூடிய ஒரு தீர்வினைக் காண உதவும் விடையை முதலமைச்சர் அளிப்பாரா?

முதலமைச்சர் : சென்னை மாநகரைப் பொறுத்தவரை, ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு மேலாகவே, குடிநீர்ப் பிரச்சினை இருந்து வருகிறது. 1948-ஆம் ஆண்டில் ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார், சென்னை மாகாண முதலமைச்சராக விளங்கிய அந்தக் காலகட்டத்திலேயே, சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வரவேண்டுமென மத்திய அரசினை வலியுறுத்தினார்.

கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் 1976–ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களால் அறிவிக்கப்பட்டது. சென்னைக்கு 15 டி.எம்.சி. கிருஷ்ணா நீரை வழங்குவதற்கு ஆந்திரம், தமிழகம், கர்நாடகம், மராட்டியம் ஆகிய மாநிலங்களுக்கிடையே 1977–ஆம் ஆண்டு அக்டோபரில் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. எம்.ஜி.ஆர். அப்பொழுது தமிழகத்தின் முதல்வர். அதன்பின் 1983–ஆம் ஆண்டில் திருமதி இந்திரா காந்தி அவர்கள் சென்னைக்கு வந்து கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். ஆனால், அதனைத் தொடர்ந்து, நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் இத்திட்டம் பல ஆண்டுகள் கிடப்பில் இருந்தது.

1989லும் பின்னர் 1996லும் கழக அரசு அமைந்த பிறகு, ஆந்திர முதல்வர்கள் என்.டி.இராமராவ், சென்னாரெட்டி, ஜனார்த்தன ரெட்டி மற்றும் சந்திரபாபு நாயுடு ஆகியோரிடம் நான் பேச்சு வார்த்தை நடத்தி, அதன் பின்பு 1996 செப்டம்பர் மாதத்தில் கிருஷ்ணா நீர் சென்னை வந்து சேர்ந்தது.

தமிழகத்தினுடைய குடிநீர்த் தேவையை நிரந்தரமாகத் தீர்த்திட வேண்டும் என்னும் உணர்வோடு, இந்த அரசு கடந்த 4 ஆண்களாக பல சிறப்புத் திட்டங்களை தமிழகத்திலே செயல்படுத்தி வருகிறது என்பதை சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.



ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் வீதம் 32,000 ஊரகக் குடியிருப்புகளுக்கு, குடிநீர் வழங்கிட உறுதி பூண்டு 1996 முதல் இதுவரை 21,501 குடியிருப்புகளுக்கு, 967 கோடி ரூபாய் செலவில் பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய குடியிருப்புகளுக்கும், இரண்டாண்டுகளில் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2000–2001–ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அவ்வுரையில் பின் வருமாறு கூறினேன்.

“2050–ஆம் ஆண்டில் உலகெங்கிலும் 200 கோடிக்கும் மேற்பட்டோர் தண்ணீர் பற்றாக்குறையால் பாதிப்பிற்கு ஆளாவார்கள் என்று ஐ.நா.சபையின் சுற்றுச்சூழல் திட்டம் (United Nations Envirnment Programme) கூறுகிறது. நெதர்லாந்து நாட்டில் அண்மையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தண்ணீர் மன்றமும் அதையொட்டிய மாநாடும் (Second World Water Foum and Ministerial Conference) 2050–ஆம் ஆண்டில், இந்தியாவில் ஆறு மாநிலங்கள் தண்ணீர்ப் பற்றாக்குறைக்கு உள்ளாகும் என்றும், அதில் ஒன்று தமிழ்நாடு என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மழை கொட்டும்போது அதில் பத்து சதவிகிதத்தைக் கூட சேமித்து வைக்க முடியாத நிலையும், ஒரு நாள் பெய்யும் பெருமழை கடலில் கலப்பதைச் சேமித்து வைத்தால் சென்னை நகரின் ஓராண்டுத் தேவையைப் பூர்த்தி செய்யலாம் என்கிற நிலையும் மாநிலமெங்கும் நிலத்தடி நீர் மட்டம் வேகமாகக் குறையும் நிலையும் நாம் அறிந்தவையே. எனவே, வருமுன் காப்பதைக் கடமையாகக் கொண்ட தமிழக அரசு இன்னும் ஐம்பது ஆண்டுகளில் ஏற்படவிருக்கும் நெருக்கடியை எதிர்கொள்ளவும், வெற்றிபெறவும் உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்ய ஒரு நிபுணர் குழுவை அமைத்து, மாநில முழுவதும் மழை நீரை வீணாக்காமல் சேமித்து உபயோகப் படுத்தவும், நிலத்தடி நீரைப்பாதுகாத்து அதிகரிக்கவும் எடுக்கப்பட வேண்டிய முயற்சிகளைப்பற்றி அறிக்கையினைப் பெற்று அதனைச் செயற்படுத்த முன்வரும்”

நாங்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என்பதை இதன் மூலம் தாங்கள் உணர்வீர்கள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906



நமக்கு நாமே திட்டம்.





பண்ணைமகளிர்த்திட்டம்







பதிவு எண். M 8676
Licence No. TN/MS(C) / PP-23












நமது அன்றாட
பழக்கவழக்கங்களால்,
எய்ட்ஸ் வராது.
அதற்கு நீங்களே
ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:9





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
வைகாசி – ஆனி
ஜூன் 1–15, 2000
மலர் : 31 இதழ் : 23
விலை ரூ.5


## இந்த இதழில்...


- தகவல் தொழில்நுட்பத்தில் வியப்பூட்டும் வளர்ச்சி ------- 2
- அண்ணல் அம்பேத்கர் – கலைக்கல்லூரி முதல் மணி மண்டபம் வரை ------- 5
- கலைஞரின் சொல்லாட்சி ------- 8
- எங்கள் ஊர் பிரச்சினை ------- 28
- ஆதிதிராவிடர் – பழங்குடியினர் நலன் ------- 30
- வன வளர்ப்பு ------- 42




"இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவின் பத்தாவது நிறுவன நாள் விழாவினைக் கொண்டாடும் பொருட்டு இன்று நாமனைவரும் இங்கே கூடியிருக்கிறோம். இந்த இனிய வேளையில் இங்கே வருகை தந்துள்ள பிரமோத் மகாஜன் அவர்களை வரவேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா ஒரு ஆற்றல் மிக்க நிறுவனமாகவும், அதே நேரத்தில் குறுகிய காலத்தில் விரைந்து வளர்ச்சி பெற்று, பலன் கூட்டும் நிறுவனமாகவும் திகழ்கிறது. தொழில் நேய மிக்க கண்ணோட்டத்துடன் இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் மென்பொருள் ஏற்றுமதி வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்து வருகிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், சென்னையிலுள்ள இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவின் சாதனை மிகவும் சிறப்பானதாகவும் போற்றத்தக்க வகையிலும் உள்ளது.

கடந்த 18 நாட்களுக்கு முன்பு தான் சென்னையில் போலாரிஸ் பவுண்டேஷன் சார்பில் அமைக்கப்பட்டுள்ள புதிய "மென்பொருள் மேம்பாட்டு மையத்தினை" நான் திறந்து வைத்தேன். அப்பொழுது, அந்த நிறுவனத்தின் தலைவர், தமிழகத்தின் சுற்றுச்சூழல் மற்றும் அதன் பாரம்பரியத்தோடு கூடிய பண்பாடு தம்மை மிகவும் கவர்ந்ததன் காரணமாகவே சென்னையில் தமது நிறுவனத்தை அமைத்திட முடிவு செய்ததாக என்னிடம் குறிப்பிட்டார்.

**அதிக முதலீடுகளைப் பெற்றுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம்**

அந்த உணர்வு பூர்வமான கருத்துக்களை "எகனாமிக் அண்டு பொலிடிக்கல் வீக்லி" 6.5.2000–ஆம் நாளிட்ட இதழில் முழுமையாக ஆதரித்து எழுதியுள்ளது. அந்த இதழில் வெளியாகியுள்ள ஒரு கட்டுரையில், பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்குப் பின்னர், இந்தியாவிலுள்ள மாநிலங்களின் செயல்பாடுகளைப் பற்றிய விரிவான ஒரு ஆய்வு இடம் பெற்றுள்ளது.




அந்த ஆய்வுக் கட்டுரையில் வெளியாகியுள்ள, தமிழகத்தைப் பற்றிய சில முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :

மாநிலத்தின் உற்பத்தி வளர்ச்சி வீதத்தைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு இந்தியாவின் முதல் ஆறு மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

ஆண்டு வளர்ச்சியினைப் பொறுத்த மட்டில், 6 சதவீதத்திற்கும் மேலான வளர்ச்சியைப் பெற்றுள்ள ஒரே தென்னிந்திய மாநிலம் தமிழகம் மட்டுமே.

தமிழ்நாட்டின் கடன் வைப்பீட்டு விகிதம் 90 சதவீதமாகும். இது இந்நாட்டிலேயே மிக அதிகமாகும்.

தமிழ்நாட்டில் கற்றோர் விகிதம் 70 சதவீதமாகும். இது, தேசிய சராசரியான 62 சதவீதத்தைக் காட்டிலும் அதிகம்.

இந்தியப் பொருளாதார ஆய்வு மையத்தின் அறிக்கையின்படி (CMIE) தொழில் துறையில் அதிக முதலீடுகளைப் பெற்றுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்பதை நான் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

# தகவல் தொழில்நுட்பத்தில் வியப்பூட்டும் வளர்ச்சி

**- முதலமைச்சர் கலைஞர்**

**தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் பிரமிக்கத்தக்க முன்னேற்றம்**

இந்த அறிக்கைகள் அனைத்தும் நாங்கள் நல்லாட்சியினை தொடர்ந்து வழங்கி வருகிறோம் என்பதையே உறுதி செய்கின்றன.



முன்னேற்றத்திற்குரிய, வளர்ச்சிக்கு வழிவகுக்கும் கொள்கைகளை இந்த அரசு தொடர்ந்து கடைப்பிடித்து வருவதன் பயனாக, தமிழகம் மிகச்சிறந்த கட்டமைப்பு வசதிகளையும், மேம்பட்ட மனிதவள ஆற்றல்களையும், மிகச்சிறந்த தொழில் கலாச்சாரத்தையும், பொறுப்பான நிர்வாகத்தையும் பெற்று விளங்குகிறது. எனவே, தமிழ்நாட்டை தங்களின் களமாக அமைத்துக் கொள்ள முன்வரும் தொழில் நிறுவனங்கள் வெற்றிகரமான எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்நோக்கலாம்.

தகவல் தொழில்நுட்பத் தொழிலைப் பொறுத்த வரையில் இது முற்றிலும் உண்மையாகும். தமிழகத்தில் இதன் வளர்ச்சி மிகவும் பிரமிக்கத்தக்க வகையில் வெகு சிறப்பாக அமைந்துள்ளது.

தமிழகத்தின் வலிமையாகவும், வளமாகவும் அமைந்துள்ள சில அம்சங்களை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

**நீதி–காவல் துறைகளில் கணினி மயமாக்க திட்டம்**

தகவல் தொழில் நுட்பத்துக்கென்று ஒரு தனிக் கொள்கையை முதலில் வகுத்த மாநிலங்களில் தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது.

ஒருங்கிணைந்த கொள்கையை வகுத்து தமிழகம் ஒரு முன்னேறிய மாநிலமாகத் திகழ்கிறது. பொதுமக்கள் அரசோடு தொடர்பு கொள்ளும் போது, அந்தத் தொடர்பு பயன்தரும் வகையிலும், மனநிறைவு தரும் வகையிலும் அமைவதற்கேற்ப, கணினி மயமாக்கல் திட்டத்தை அரசுத் துறைகளில் நாங்கள் செயல்படுத்தி வருகிறோம்.

உதாரணத்திற்கு நான் இவற்றில் சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன். நிலப்பதிவுருக்கள், நில வரைபடங்கள், வட்ட அலுவலகங்கள், சார்–அலுவலகங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், விற்பனை வரி அலுவலகங்கள், நகராட்சிப் பணிகள் போன்ற துறைகளில் கணினி மயமாக்கல் திறம்பட செயல்படுத்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில் காவல் துறையிலும், நீதித் துறையிலும் இதனை விரிவுபடுத்த பெருமளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மென்பொருள் தொழில் முதலீடு செய்ய சிறந்த சாத்தியக் கூறு உள்ள நகரம் சென்னை**

தேசிய மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்களின் கூட்டமைப்பு (NASSCOM) கடந்த 1998–ஆம் ஆண்டு மேற்கொண்ட ஓர் ஆய்வின் மூலம், மென்பொருள் தொழிலில் முதலீடு செய்ய சிறந்த சாத்தியக்கூறுகள் உள்ள நகரமாகச் சென்னை நகரைத் தேர்வு செய்துள்ளது.



தகவல் தொழில் நுட்பத்திற்கென்று ஒரு தனித்துறையினை உருவாக்கி, அத்துறை முதலமைச்சரின் நேரடிப் பொறுப்பில் இயங்குகிறது என்ற பெருமையும் தமிழகத்திற்குண்டு.

பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், ஆப்டிகல் ஃபைபர் கேபிள்களைப் பதிப்பதற்காக

1999–ஆம் ஆண்டு சனவரித் திங்களில் "பிசினஸ் வேர்ல்டு" என்ற பத்திரிகை மேற்கொண்ட ஆய்வு, தகவல் தொழில்நுட்பப் பயிற்சி வசதிகளுக்கு,

இந்தியாவிலேயே தமிழகத்தைச் சிறந்த இடமாக அங்கீகரித்துள்ளது.

2008-ஆம் ஆண்டில் பள்ளிகளிலிருந்து படித்து வெளிவரும் மாணவர்கள் அனைவரும் கணினிக் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கிட வேண்டுமென்று இந்த அரசு திட்டமிட்டுள்ளது. இதனை செயல்படுத்தும் பொருட்டு, தமிழகத்திலுள்ள 1200 அரசு மேனிலைப்பள்ளிகளிலும் கணினிக் கல்வியை வழங்கத் தொடங்கியுள்ளோம். ஆண்டுதோறும் ஏறத்தாழ ஐம்பதாயிரம் பள்ளி மாணவர்கள் முழுமையான கணினிக் கல்வி அறிவு பெற்றவர்களாக உருவாக்கப்படுவார்கள். இந்தியாவில் இத்தகைய கல்வி அளிக்கும் மிகப்பெருந்திட்டம் இது.

இந்த அரசின் சீரிய முயற்சியால் சென்னை தரமணியில் உருவாக்கப்பட்டுள்ள "டைடல் பார்க்" நிறுவனம் இந்தியாவிலேயே பிரம்மாண்டமானதும், மிக நவீனமானதுமாகும்.

அத்துடன், பழைய மாமல்லபுரம் சாலையில் சிறுசேரி கிராமத்தில் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் மற்றொரு பெரிய அளவிலான தகவல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றை இந்த அரசு உருவாக்கி வருகிறது. தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களுக்கு மேம்படுத்தப்பட்ட நிலங்களை வழங்க இது வழிவகை செய்யும்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஹார்வர்டு பல்கலைக்கழகம் 1999 அக்டோபரில் நடத்திய ஆய்வில், தமிழ்நாடு குறுகிய காலத்தில் இந்தியாவிலேயே மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப மாநிலமாக விரைவில் உருவாகும் என்று தெரிவித்துள்ளது.

இந்த அரசு மேற்கொண்டுள்ள மற்றுமொரு முயற்சியை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தகவல் தொழில் நுட்பவியல் தமிழ்நாட்டின், ஒவ்வொரு பகுதியிலும், குறிப்பாக கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய வகையில் பரவ வேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த ஆர்வமும், அக்கறையும் கொண்டுள்ளது. பன்னாட்டுப் புள்ளி விவரத் தொடர்புகள் பரவலாகக் கிடைத்திட வேண்டும் என்பதொன்றே அடிப்படைத் தேவையாகும்.

இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா இத்தொடர்புகளை அளிக்க முன்வந்துள்ளது. எனவே இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவிற்குத் தேவையான நிதி ஆதாரங்களை வழங்குவதற்கு இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதன் பயனாக, இந்த ஆண்டின் இறுதிக்குள்ளாகவே மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தகவல் தொழில் நுட்பத் தொடர்பு வசதிகள் கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்நாட்டின் தகவல் தொழில் நுட்பத்தில், தமிழகத்தை முன்னணி மாநிலமாகத் திகழச் செய்திட முடியும் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. உலகத் தகவல் தொழில் நுட்ப வரைபடத்தில், தமிழகம் உறுதியான இடத்தைப் பிடித்துப் பெருமையுடன் விளங்கும். இந்த முயற்சியில் வெற்றி பெறுவதற்கு ஏற்ற வகையில் தமிழக அரசு தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

நாங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில், மத்திய அரசின் தகவல் தொழில் நுட்ப அமைச்சகமும், இந்திய மென்பொருள் தொழில் நுட்பப் பூங்கா போன்ற நிறுவனங்களும் தங்களுடைய முழு ஒத்துழைப்பை வழங்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இங்கே நான் குறிப்பிடும் சில நடவடிக்கைகளில் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உதவியை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

தமிழகம் முழுவதிலும் சர்வதேசத் தகவல் தொடர்புகளை ஏற்படுத்த இந்திய மென்பொருள் தொழில் நுட்பப்பூங்கா (STP) முன்வர வேண்டும்.

மனிதவள மேம்பாட்டுத் துறையின் மூலம் அண்மையில் குவாலியரில் ஏற்படுத்தப்பட்ட "இந்திய தகவல் தொழில் நுட்பவியல் மேலாண்மை நிறுவனம்" போன்ற உயர்கல்வி நிறுவனத்தை சென்னையிலும் விரைந்து அமைத்திட வேண்டும் என்ற எங்களின் கோரிக்கையினை நிறைவேற்ற வேண்டும். இது குறித்து, பிரதமருக்கும், மனிதவள மேம்பாட்டு அமைச்சருக்கும் நான் முன்னரே வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

தமிழகத்திலுள்ள அனைத்து ஒன்றியங்களும் பயன் பெறும் வகையில், தகவல் தொழில் நுட்ப மையங்களை நிறுவிட மத்திய அரசின் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

கடலுக்கடியில் பதிக்கப்பட்டு கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் ஆப்டிகல் ஃபைபர் கேபிள் மூலம் சென்னையை இணைப்பதற்கான முயற்சியை ஊக்குவிக்க வேண்டும். எனது இந்த வேண்டுகோள்களுக்கு செவிசாய்த்து அதனை துரிதப்படுத்தும்படி மத்திய அமைச்சர் திரு. பிரமோத் மகாஜன் அவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய மென்பொருள் தகவல் தொழில் நுட்ப நிறுவனத்தின் வெற்றிக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிறுவனம் வருங்காலங்களில் ஒளிமயமாகத் திகழ எனது நல்வாழ்த்துக்களையும் இந்த இனிய வேளையில் தெரிவித்துக் கொள்கிறேன்".

★ ★ ★



# அண்ணல் அம்பேத்கர்

சாதி பாகுபாடு நீங்க காந்தியார் பெரிதும் பாடுபட்டார். 'அரிசனங்கள்' என்றால் தெய்வத்தின் பிள்ளைகள் என்று அவர் கூறினார். அவர்கள் ஆலயப் பிரவேசம் செய்ய ஒரு போராட்டமே நடத்தி வெற்றி கண்டார்.

எம்மதமும் சம்மதமே என்ற கொள்கை மிகவும் உயர்ந்தது ஆகும். ஒருவரது பிறப்பை வைத்து மேலோர், கீழோர் என்று கூறுவது தவறு. அவரவர் அறிவுத் திட்டத்தை வைத்தே இதைக் கணிக்க வேண்டும். இதைத் தெளிவுபடுத்தத் தான் ''சாதிகள் இல்லையடி பாப்பா'' என்று பாடினார் பாரதியார்.

முள் நிறைந்த கள்ளிக் காட்டில் தோன்றினாலும் அகில் அதிகம் மதிக்கப்படுகிறது.

உப்புக் கரிக்கும் கடல் நீரில் கிடந்தாலும் முத்து உயர்வானதாக எண்ணப்படுகிறது.

சேற்றில் பிறந்தாலும் செந்தாமரை சிறப்பாகப் பேசப்படுகிறது.

1891-ஆம் ஆண்டில், ஏப்ரல் 14-ஆம் தேதி மராட்டிய மாநிலத்தில் உள்ள அம்பாவதி என்ற சிற்றூரில் பிறந்தவர் அவர். தந்தையார் பெயர் ராம்ஜீ சக்பால், தாயார் பெயர் பீமபாய். பெற்றோர் அவருக்கு வைத்த பெயர் பீமராவ் என்பதாகும்.

பதினான்காவது பிள்ளையாகப் பிறந்த அவர், பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

தீண்டாமைக் கொடுமை அந்தப் பள்ளியிலும் தலைவிரித்தாடியது. உயர் சாதி என்று அப்போது கருதப்பட்ட சாதியில் பிறந்த பிள்ளைகள் மட்டுமே பலகையில் உட்காருவர். கீழ்ச்சாதி என்று கருதப்பட்ட சாதியில் பிறந்த பிள்ளைகள் வெறும் தரையில் தான் உட்காருவர். தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்த பீமராவும் தரையிலேயே அமர்த்தப்பட்டார்.

ஆசிரியரோ, உயர் சாதிப்பிள்ளைகளோ தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிள்ளைகளைத் தொடக்கூடக் கூசுவார்கள். அவர்களுடைய பாடநூல், எழுதுகோல் ஆகியவற்றைக் கூடத் தொடமாட்டார்கள்.

பீமராவ் தனது பள்ளியில் இருந்த இந்த நிலையை வெறுத்தார். இதனால் கல்வியிலும் அவரால் கவனம் செலுத்த முடியவில்லை.

இதுபோன்ற நேரத்தில் அந்தப் பள்ளிக்கு அம்பேத்கர் என்றொரு ஆசிரியர் வந்து சேர்ந்தார். அவர் பிறப்பால் அந்தணர். ஆனால், அப்போதிருந்த மற்ற ஆசிரியர்களைப் போலத் தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்களை அவர் அலட்சியம் செய்யவில்லை.

பீமராவ் தாழ்ந்த சாதியினரானாலும் அவரை மிகவும் அன்போடு நடத்தினார். தான் கொண்டு வரும் உணவையும் அவருக்கு உண்ணக் கொடுத்தார். படிப்பதில் உற்சாகம் ஊட்டினார்.

ஆசிரியர் அம்பேத்கர் காட்டிய அன்பே சிறுவன் பீமராவை அக்கறையோடு படிக்க வைத்தது. தான் பெற்ற முன்னேற்றத்திற்குக் காரணமான அவர் பெயரையும் சேர்த்துத் தான் இவர் தன் பெயரை 'பீமராவ் ராம்ஜி அம்பேத்கர்' என்று மாற்றிக் கொண்டார். நாளடைவில் அம்பேத்கர் என்ற பெயரே நிலைத்தது.

சதாரா என்ற இடத்தில் அம்பேத்கரும் அவர் தமையனாரும் படித்துக் கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் தந்தை கோரிக்கேன் என்ற ஊரில் வேலை பார்த்து வந்தார்.

ஒரு நாள் அம்பேத்கரும், அவரது தமையனாரும் தந்தையைப் பார்க்கப் புறப்பட்டனர். ரயில் மூலம் மாசூரில் போய் இறங்கினார்கள். அங்கிருந்து கோரிக்கேனுக்குப் போக ஒரு மாட்டு வண்டியில் புறப்பட்டனர்.

போகிற வழியில், இவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று தெரிந்து கொண்ட வண்டிக்காரர் மிகவும் கோபப்பட்டார். தன் வண்டியின் தூய்மையே கெட்டுவிட்டதாகச் சொல்லி அவர்களை வண்டியைக் குடை சாய்த்துக் கீழே உருட்டி விட்டார்.

அப்போதும் நிதானம் இழக்கவில்லை அம்பேத்கர். பேசியது போல் இரண்டு பங்கு வாடகை தருவதாகவும் தம்மை ஏற்றிச் செல்லுமாறும் வண்டிக்காரரிடம் கூறினார். வண்டிக்காரர் சிறிது யோசித்து விட்டுப் பிறகு சம்மதித்தார். ஆனால், அவர்களையே வண்டி ஓட்டச் சொல்லிவிட்டு, தன் சாதிப் பெருமை கெட்டுவிடக் கூடாதே என்று வண்டியின் பின்னால் நடந்தே சென்றார் அவர்.

இன்னொரு சமயம் தாகமுற்று நீர் கேட்டார் அம்பேத்கர். அவர் தாழ்த்தப்பட்டவர் என்பதால் யாரும் நீர் தர மறுத்து விட்டார்கள். தாகம் தாளாமல் குளத்தில் இறங்கி, தண்ணீர் குடித்தார் அம்பேத்கர். இது கண்ட அந்த ஊர் உயர் சாதியினர் கோபமுற்று அவரைப் பலமாகத் தாக்கிவிட்டனர்.

இந்த இரண்டு சம்பவங்களும் அம்பேத்கர் நெஞ்சில் ஆழப்பதிந்தன. எனவே தீண்டாமைக் கொடுமையைப் பூண்டோடு அழிக்க உறுதி பூண்டார்.

இளமையிலேயே அம்பேத்கருக்கும் இராமாபாய் என்பவருக்கும் திருமணம் செய்து வைக்கப்பட்டது. திருமணத்தின் போது இராமாபாய்க்கு ஒன்பது வயது தான்.

கற்பதில் அவர் கொண்டிருந்த ஆர்வத்தைக் கண்டு வியந்தார் பரோடா மன்னர். மேல் படிப்புக்காகத் தாமே உதவி செய்து அமெரிக்காவிற்கு அனுப்பி வைத்தார். ஊக்கம் குறையாமல் படித்தார் அம்பேத்கர். 1915-இல் எம்.ஏ. பட்டமும், 1916-இல் பி,எச்.டி. பட்டமும் பெற்று இந்தியாவிற்குத் திரும்பினார்.

பரோடா அரண்மனையில் அவருக்குப் படைச் செயலாளர் பதவி தரப்பட்டது. ஆனால், அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்பதால், அரண்மனையில் யாரும் மதிக்கவில்லை பரோடாவில் தங்கக்கூட அவருக்கு இடம் கிடைக்கவில்லை. மனம் வெதும்பி பம்பாய்க்கே திரும்பினார் அம்பேத்கர்.

பம்பாய் சென்ற அவர், கோல்காப்பூர் மன்னர் துணையோடு 'ஊமைகளின் தலைவன்' என்ற ஒரு செய்தித்தாளை நடத்தினார். தீண்டாமை என்னும் தீமையைக் களைய அந்த ஏட்டின் மூலம் பெரும்பாடுபட்டார். அங்கு ஒரு கல்லூரியில் பொருளியல் பேராசிரியர் வேலையும் கிடைத்தது.

வேவல் பதனே என்ற நண்பரிடம் உதவிபெற்று லண்டன் மாநகருக்குச் சென்றார். அங்கே ஓய்வின்றிப் படித்த அம்பேத்கர் எம்.எஸ்.ஸி. பட்டமும் பாரிஸ்டர் பட்டமும் பெற்று இந்தியா திரும்பினார்.



வழக்கறிஞர் தொழிலை விரும்பி ஏற்றுச் செய்து வந்தார். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் தொடர்பான வழக்குகளில், இலவசமாகவே ஆஜராகி நீதி பெற்றுத் தந்தார்.

இந்த நிலையில் பம்பாய் கவர்னர் அம்பேத்கரைச் சட்டமன்றப் பேரவை உறுப்பினராக நியமித்தார்.

*சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் தமிழக அரசு ரூ.4 கோடி செலவில் அமைத்துள்ள அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 10-6-2000 அன்று திறந்துவைத்தார்.*

தாழ்த்தப்பட்ட சமூகத் தார்க்கு இழைக்கப்படும் அநீதிகளை அவர் எதிர்த்துப் போராடினார். இதன் முடிவு நல்லபடியாகவே அமைந்தது.

'அரசாங்கப் பள்ளிகள், மருத்துவமனைகள், அலுவலகங்கள், நீர்நிலைகள் முதலான அனைத்திலும் மக்கள் அனைவருக்கும் உரிமை உண்டு. சாதி, வேறுபாடுகளுக்கு இடமில்லை' என்று பம்பாய் அரசாங்கம் சட்டம் போட்டது. தாழ்த்தப்பட்ட மக்கள் இதனால் தங்களுக்குள்ள உரிமையைப் பெற்றார்கள்.

தாழ்த்தப்பட்டோர் அவல நிலை பற்றிக் காந்தியாரைக் கண்டு பேசினார் அம்பேத்கர். காந்தியார் அவரது அறிவாற்றலைப் பெரிதும் பாராட்டினார். 1947-இல் 'தீண்டாமை பெருங்குற்றம், அதைக் கடைப்பிடிப்பவர்கள் குற்றவாளிகள்' என்று அறிவித்தது அரசியல் அமைப்புச் சபை. அம்பேத்கர் ஓரளவு நிம்மதிப்பட்டார்.

1947-இல் ஜவஹர்லால் நேருவின் அமைச்சரவையில் சட்ட அமைச்சராகப் பதவியளித்துச் சிறப்பிக்கப்பட்டார் அம்பேத்கர். இந்திய அரசியல் சட்டத்தை நிர்ணயிக்க ஒரு குழு நியமிக்கப்பட்டது. இதன் தலைவராகவே அம்பேத்கர் நியமிக்கப்பட்டார்.

அந்தக் குழு உறுப்பினர்கள் பல காரணங்கால் ஒதுங்கியிருந்தார்கள். ஆனால், அம்பேத்கர் தனித்தே நின்று அரும்பாடுபட்டு இந்திய அரசியல் சட்டத்தை இயற்றித் தந்தார்.

அம்பேத்கருக்கு அமெரிக்காவில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகம் சிறப்புப் பட்டம் அளித்தது. நம் இந்திய நாட்டிலுள்ள உஸ்மானியா பல்கலைக்கழகம், இலக்கியத்தில் டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்பித்தது.

அழியாப் புகழுக்குச் சொந்தக்காரரான டாக்டர் அம்பேத்கர் 1956-ஆம் ஆண்டு டிசம்பர் 6-ஆம் நாளுயிர் நீத்தார்.

தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்தாலும், தன்னம்பிக்கையோடு படித்து முன்னேறிய டாக்டர் அம்பேத்கர் பெருமை அளவிடற்கரியதாகும். ●



# டாக்டர் அம்பேத்கர் - கலைக்கல்லூரி முதல் மணிமண்டபம் வரை

சென்னை - வியாசர்பாடியில், 1972ஆம் ஆண்டிலேயே அண்ணல் அம்பேத்கர் பெயரால் கலைக்கல்லூரி அமைத்தது கலைஞர் அரசு. இந்தியாவிலேயே அம்பேத்கர் பெயரால் அமைந்த முதல் கலைக்கல்லூரி இதுதான்.

கலைஞர்தான் 1972இல் மைலாப்பூர் ஹாமில்டன் பாலத்திற்கு டாக்டர் அம்பேத்கர் பெயர் சூட்டினார். 1989ஆம் ஆண்டிற்கும் இருபதாண்டுகளுக்கு முன்பு அம்பேத்கர் பிறந்த மராட்டிய மாநிலத்தில் உள்ள மரத்வாடா பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பல்கலைக்கழகம் என்று பெயர் சூட்டுவதாக மராட்டிய சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றினார்கள். தீர்மானம் நிறைவேற்றினார்களே தவிர செயல்படுத்தவில்லை. அந்தத் தீர்மானத்தைப் புதுப்பித்து மரத்வாடா பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயர் வைக்க வேண்டுமென்று 1989ஆம் ஆண்டு அந்த மக்கள் போராடிய போது அந்த செய்தியை பத்திரிகையிலே பார்த்துவிட்டு, கலைஞர் அவர்கள் அங்கு அப்போது ஆளுநராக இருந்த திரு. அலெக்சாண்டர் அவர்களுக்கும், அன்றைய மராட்டிய முதல்வர் திரு. சரத்பவார் அவர்களுக்கும் கடிதம் எழுதினார். இலட்சக் கணக்கானத் தந்திகளைத் தமிழகத்திலே இருந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இந்தத் தந்திகள் எல்லாம் இங்கிருந்து பறந்து சென்றதும் ஆளுநர் அலெக்சாண்டர் அவர்களே கலைஞருக்கு பதில் கடிதம் அனுப்பினார். விரைவிலே அந்தப் பெயர் சூட்டப்படும் என்று அறிவித்தது மாத்திரமல்ல, அவ்வாறு அந்தப் பெயர் சூட்டப்பட்ட பிறகு அதற்கான அரசாங்க ஆணையை கலைஞருக்கு அனுப்பிவைத்தார்.



1990ஆம் ஆண்டு அம்பேத்கர் நூற்றாண்டினையொட்டி ஓராண்டு காலம் விழா தமிழகத்தில் கொண்டாட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டார். அதேநேரத்தில்தான் சென்னை சட்டக்கல்லூரிக்கு டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி என்ற பெயரும் சூட்டப்பட்டது. அதன்பின்னர் சேலத்திலே பெரியார் பல்கலைக்கழகத்தில் அம்பேத்கருடைய பெயரில் ரூ.25 இலட்சத்தில் அறக்கட்டளை ஒன்று தொடங்கப்பட்டு மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இந்தியாவிலேயே முதலாவதாக சட்டப் பல்கலைக்கழகமொன்று தமிழகத்தில் கலைஞர் அவர்களால்தான் தொடங்கப்பட்டது. அப்படி முதலாவதாக தொடங்கப்பட்ட சட்டப் பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கருடைய பெயரினை கலைஞர் சூட்டினார்.

1994ஆம் ஆண்டு, ஆண்டுதோறும் ஒருவருக்கு அம்பேத்கர் விருது அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அது அமல்படுத்தப்பட்ட ஆண்டு 1998, அதுவும் கலைஞர் ஆட்சியில்தான்.

சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.4 கோடி செலவில் டாக்டர் அம்பேத்கர் மணிமண்டபம் 10-6-2000 அன்று கலைஞர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

* * *

# கலைஞரின் சொல்லாட்சி



## கவிஞனின் இலக்கணம்

கவிஞன் என்பவன் யார்? கவிதை என்பது எது? இக்கேள்விகளுக்கு இதுவரை யாரும் ஒத்த கருத்தமைந்த விடை பகர்ந்தாரில்லை. மேனாட்டுக் கவிஞனுக்குக் கூறிய இலக்கணம், நம் நாட்டுக் கவிஞனுக்கு ஒவ்வாததாய் முடியும். இந்நாட்டுக் கவிஞனுக்குரிய இலக்கணம் மேனாட்டுக் கவிஞனுக்கு ஒத்து வரவில்லை. இவ்வாறாக நாட்டிற்கு நாடு கவிஞனின் இலக்கணம் மாறுபடுகிறது.

அவ்வாறிருக்க இவன் தான் கவிஞன், இதுதான் கவிதை என்று அறுதியிட்டுக் கூறவியலாத தன்மையில் உள்ளது. இந்நிலையில் நாம் பொதுவான, யாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் சில கருத்துக்களைக் காண்போம்.

தான் கண்டும், கேட்டும், படித்தும், அறிந்துணர்ந்த கருத்துக்கள் உள்ளத்தே நிரம்பி வழிய, அக்கருத்துக்களை, தன்னோடொத்தவர்களுக்குக் கூறியே ஆக வேண்டும் என்ற இருப்புக் கொள்ளாத நிலை ஒருவனுக்கு வர, உடனே தன்னுள்ளத்தே பீறிட்டெழுந்து வரும் கருத்துகளை எவன் வெளிப்படுத்துகிறானோ! அவனே கவிஞனாவான். அக்கருத்துக்களைத் தாங்கிக் கொண்டு எது நிற்கிறதோ அதுவே கவிதையாகும். அது பா வடிவில் மட்டும் தான் இருக்கும் என்பதில்லை. உரைநடையிலும் இருக்கும். பாக்களுடன் உரை நடையும் கலந்தும் இருக்கும். வாய்மொழியாகவும் இருக்கும். எப்படியிருப்பினும் அது கவிதையேயாகும்.

கவிதை என்பது இப்படித்தான் இருக்க வேண்டும் என்று கட்டுப்பாடு விதிப்பது அறியாச் செயல். கட்டுப்பாட்டிற்குள் நின்று கவிதையியற்றுபவனை விட, கட்டுப்பாடில்லாது, தன்னிச்சையாகக் கவிதையியற்றும் போது அங்கே கவிஞனது முழு உணர்ச்சியும், தாண்டவமாடக் காண்கிறோம்.

மேனாட்டுக் கவிஞன் ஷேக்ஸ்பியர் கூட தான் இயற்றிய சொற் சித்திரங்களை புதிய முறையில் தான் இயற்றினார். அதில் பண்டுதொட்டு இருந்து வந்த இலக்கணம் இல்லையென்று கூறி ஒதுக்கிவிட்டார்களா? இல்லையே! ஷேக்ஸ்பியர் எழுத்துக்களைக் கண்ணெனப் போற்றி வரவில்லையா?

இரண்டடிகளில் வெண்பா எழுத இலக்கணம் இருந்தும் யாரும் எழுதாதிருக்க வள்ளுவர் மட்டும் எழுதியதால் நானிலம் அதைப் புறக்கணித்ததா? இல்லையே!

மிகப் பெரிய உணர்வு படைத்த கவிஞன் தன் கருத்துக்களை வெளியிடும் போது அவன் எதையும் காணமாட்டான். சுற்றுச் சூழ்நிலை எதுவும் அவனுக்குத் தெரியாது. தன் கருத்தைப் பிறருக்குக் கூறி அறிவுறுத்த வேண்டும் என்ற துடிப்பு மட்டுமே அவனிடம் எஞ்சியிருக்கும்.

அப்போது வெளிவரும் வார்த்தைகள்தான், உணர்ச்சிப் பிழம்பான கவிதையாகும்.

என்னுடைய ஆசிரியர், பெருந்தகை, உச்சிமேற்புலவர், காந்தை கவியரசு அவர்கள், கவிதைக்குரிய இலக்கணத்தைப் பற்றிக் கூறியது இன்னும் என் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. ஒரு சிலந்தி வலை பின்னியிருந்தது. அவ்வலைக்கு, சின்னஞ்சிறு பூச்சிகள் வரின், அதில் மாட்டிக் கொள்ளும். பின்பு சிலந்தி அப்பூச்சிகளைத் தன் உணவாக்கிக் கொண்டுவிடும். ஆனால் ஒரு வண்டு வலைக்கு வரின், அவ்வலையை ஊடறுத்துக் கொண்டு அப்பால் சென்றுவிடும்.

இதைப்போல் தான் எல்லாக் கவிஞர்களும், இலக்கணம் என்ற வலைக்குள் சிக்கிச் சீரழிந்து விடுவார்கள். ஆனால் பெரும் கவிஞர்கள் வண்டுபோல் இந்த இலக்கண வரம்பை அறுத்துக் கொண்டு சென்று கொண்டேயிருப்பார்கள் என்று கூறியது என் பசுமை உள்ளத்தில் இன்னும் ஒலிக்கிறது.

இந்த வண்டு போன்ற கவிஞன் பட்டியலில் தான் நம்முடைய கலைஞர் இடம் பெறுகிறார். ஆகவே

□ தஞ்சை புலவர் கு. அய்யாறன்



இலக்கணத்தைப் பற்றிக் கவலைப்படாது. உணர்ச்சிகளை அள்ளிக் கொட்டிக் கொண்டே செல்கிறார். உணர்ச்சி இடம் பெறும்போது அங்கே முழுமையான கவிதை நயம் தோன்றுகிறது என்பதை எடுத்துக் காட்டுவதுதான் எனக்குரிய வேலை. அதை முழுவதும் செய்வதற்கு நான் முற்பட்டேனில்லை. "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" எனபத்து போல் ஆங்கொன்றும் ஈங்கொன்றும் காட்டிச் செல்வேன்.

முழுக் கவிதை நயத்தையும், தனியாக நூல் இயற்றும் எண்ணமுடையேன். அதுபோழ்து விரித்துரைப்பேன். இப்போது அச்சாரமாகச் சிறிது கூற முற்படுகிறேன்.

## கலைஞரின் உயிர் எது?

வானொலியில், விடுதலை வீரர்கள் என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. அப்போது கலைஞர் தலைமையுரை நிகழ்த்தினார். அப்போது கூறிய கவிதையிற் சில வரிகள் வருமாறு :

**"இமிழ்கடல் வேலித் தமிழகம் ஈன்ற**
**என்னுயிர் அண்ணன், அன்னையர், தந்தையர்**
**பொன்னொளிச் சோதரர், புகழ்மிகு பாவலர்**
**கண்மணித் தமிழின் காவலர் யாவரும்**
**இற்றைத் திருநாள் ஏற்பீர், வணக்கம்."**

இதில் முதற்கண் தன்னுடைய வழிபடு கடவுளாம் பேரறிஞர் அண்ணாவிற்கு வணக்கம் செலுத்திப் பின் கவிதை தொடங்கும் நயம் நம்முள்ளத்தைத் தொடுகிறது. இங்கே உயிர் போன்ற அண்ணன் என்று கூறியிருப்பின் உயிர் வேறு, அண்ணன் வேறு என்று இரு பொருளாகி நிற்கும். ஆகவே உயிர் போன்ற அண்ணன் என்று உவம உருபு கொடுக்காது கூறினார். என் உயிரும், அண்ணனும் வெவ்வேறு அல்ல, இரண்டும் ஒன்றே என்பதை அறிவுறுத்த என்னுயிர் அண்ணன் என்றார்.

## தாய் தந்தை சிறு ஆய்வு

அத்தகைய அண்ணனைத் தன்னோடு மட்டும் வைத்து மகிழாது, பரந்துபட்ட உள்ளத்தால் தமிழ்நாடு முழுவதற்கும், சொந்தக்காரர் என்பதை அறிவுறுத்த "தமிழகம் ஈன்ற என்னுயிர் அண்ணன்" என்றார்.

பழைய மூடப் பழக்கங்களைக் கைக்கொண்டு தமிழ் வீரத்தையும், பண்பாட்டையும் சற்றே ஒதுக்கி வைத்து வாழ்ந்த தமிழகத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள், அவர் தம் முயற்சியால், எழுத்தால், பேச்சால், நாடகத்தால், தன்னுடைய உள்ளத்தால், புதிய தமிழகத்தை ஈன்றார் என்ற புதுப் பொருளையும் நாம் காணுவதற்கு ஏற்ற வகையில் தமிழகம் ஈன்ற என்னுயிர் அண்ணன் என்று கூறினார். தமிழகம் ஈன்ற என்பதில் இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' தொக்கி நின்றதாகக் கொண்டு, தமிழகத்தை ஈன்ற என்னுயிர் அண்ணன் என்று பொருள் கொண்டு மேற்கூறிய நயத்தைக் காணவேண்டும்.

அடுத்து வரும் வரி, அன்னையர், தந்தையர் என்பது. இங்கே அன்னையர் தந்தையர் என்பது அண்ணாவின் அன்னையையும், தந்தையையும் குறிக்கும் என்பர் சிலர். இப்பொருள் அவ்வளவு சிறப்புடையதன்று. ஏனெனில் தமிழகம் ஈன்ற அண்ணன் என்று முன்னர் கூறிவிட்டமையால் அண்ணனுக்குத் தாய் தந்தை "தமிழகம்" ஆகிவிட்டது.

ஆகவே அடுத்துக் கூறும் அன்னையர், தந்தையர் என்பதில் கலைஞரவர்கள் தன்னுடைய தாய் தந்தையரைக் குறித்தார் என்று கோடலே சிறப்புடையதாகும். அவ்வாறு பொருள் கொண்டால்தான், முதற்கண் வணங்க வேண்டிய தன்னுடைய தாய் தந்தையர்களைக் காட்டிலும் தான் விரும்பி வழிபடுவது பேரறிஞர் அண்ணாவையே ஆகும் என்ற வலிமையான பொருள் ஏற்பட்டு, அண்ணனிடம் தனக்குள்ள பிணைப்பு எத்தகையது என்பதை நானிலத்திற்கு அவ்வரிகள் எடுத்துக்காட்டும்.

## கண்மணித் தமிழ்

அடுத்து, 'புகழ் மிகு பாவலர்' என்றார். பாவலருக்குச் சில காலம் புகழ் இருக்கும். பிறகு மறைந்தொழியும். ஒரு சில பாவலருக்கு சில காலங்களில் ஒரு சில நேரங்களில் புகழ் வருவதுண்டு. வந்த சுவடு தெரியாது போய்விடுவது உண்டு. அத்தகைய பாவலருக்கு நான் வணக்கம் சொல்லவில்லை. இறந்த காலத்திலும், நிகழ் காலத்திலும், எதிர் காலத்திலும் நின்று நிலைத்திருக்கும்

### பரதம்

"பரதம்" என்ற சொற்றொடரில் "ர" என்ற எழுத்தின் கீழ் உள்ள கோட்டை நீக்கி விட்டால் "பாதம்" என்று ஆகிவிடும். பரதம் ஆடும் பாவைகளுக்குப் "பாதம்" முக்கியம். பாதம் என்ற வார்த்தையில் உள்ள "ப"வுக்கு அடுத்து உள்ள துணை எழுத்தை நீக்கிவிட்டால் "பதம்" என்றாகும். நடனம் ஆடுவோருக்குப் "பதம்" பாட வேண்டும். "பரதம்" என்ற சொல்லில் "ப"வை நீக்கிவிட்டால் "ரதம்" என்று வரும். ஆடும் மகளிர் "ரதம்" போலச் சிங்காரித்துக் கொண்டு ஆட வேண்டும். "ரதம்" என்ற வார்த்தையில் "ர"வை நீக்கினால் "தம்" என்று வரும். நடனமிடுவோருக்குத் "தம்" பிடிக்க – மூச்சடக்கத் தெரிந்திருக்க வேண்டும். இதன் அடிப்படையில்தான் பரதம் என்று சொல் அமைக்கப் பட்டிருக்கும்.

– கலைஞர்

புகழையுடைய பாவலருக்கு வணக்கம் கூற வந்தேன் என்பதை அறிவுறுத்த வினைத் தொகையாக புகழ் மிகு பாவலர் என்றார்.

இதையடுத்துக் கூறும் வரி, கண்மணித் தமிழின் காவலர் என்பது. கண் போன்ற தமிழ் என்று சொல்லவில்லை. சிலருக்குக் கண் இருக்கும் ஆனால் பார்வையிராது. பார்வையுள்ள கண் என்பதையுணர்த்த, கண்மணித் தமிழ் என்றார்.

மேற்கூறிய இவ்வளவு நயங்களையும் மூன்று வரிகளில் பொதிந்து வைத்து நம் உள்ளத்தே பதித்து வைக்க கலைஞரவர்கள் இயற்றிய இக்கவிதை வரிகள் நம் நெஞ்சத்தைவிட்டு அகலாது கொலு வீற்றிருக்கின்றன.

இனி மேற்கொண்டு முடிவுரையில் குறிப்பிட்ட சில வரிகளைக் காண்போம் :

**"சிறை வாழ்ந்தார் செக்கிழுத்தார். இந்தத்**
**தரையாண்ட**
**வெள்ளையரை விரட்டுவதற்குக் குறை ஆயுள்**
**பெற்று பலர்**
**கொலையும் உண்டார் உறைமீறி வெளி வந்த**
**கத்தி போல**
**உயிர் மீது ஆசையின்றிப் போர் புரிந்தார்"**

— என்று குறிப்பிடுகிறார்.

இங்கே சிறையில் இருந்தார் என்று கூறாது, சிறை வாழ்ந்தார் என்றதனால் வ.உ.சிக்கு சிறையில் இருந்தது துன்பமாக இல்லையென்பதையும், பிறர் பொருட்டு தான் இன்னலடைவது தான் முழு வாழ்க்கை என்பதையும் புலப்படுத்துவதற்குச் சிறை வாழ்ந்தார் என்று கூறினார்.

இதையடுத்துக் கூறுகிறார். "தரையாண்ட வெள்ளையரை விரட்டுதற்கு" என்று. தரையாண்ட வெள்ளையர் என்பதற்குப் பொருள் காணும்போது, தரையென்பதை ஆகு பெயராகக் கொண்டு இந்திய மக்களை ஆண்ட வெள்ளையர் என்று பொருள் கொள்ளல் சிறந்ததாகாது. வீரவுணர்ச்சி மிக்க இந்திய மக்களை அடக்கி ஆட்சி செய்வது அரிது என்ற எண்ணத்தால், வெள்ளையர்கள் மக்களை ஆட்சி செய்யவில்லை. வெறுந் தரையையே ஆட்சி செய்தனர் என்ற கருத்தை நமக்குப் புலப்படுத்த தரையாண்ட வெள்ளையர் என்றார்.

அதற்காக, விடுதலை வீரர்கள் குறை ஆயுள் பெற்றார் என்றார். அந்தக் குறை ஆயுளை எவ்விதம் பெற்றார் என்பதை விளக்குவதற்கு, கொலையும் உண்டார் என்றார். உண்டார் என்ற சொல்லினால் அக்கொலையைக் கூட நம் விடுதலை வீரர்கள் உள்ளம் விரும்பி ஏற்றார்கள் என்ற கருத்தையும் இவ்வரிகளில் நயம்படக் கூறுகிறார்.

## "இதயத்தைத் தந்திடு அண்ணா"

### இரங்கற்பா

நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் நம் தவப் பேறின்மையின் காரணமாக நம்முள்ளங்களில் நிறைந்து, உடலளவில் மறைந்தபோது, அத்துன்பத்தைத் தாங்காது அல்லலுற்று அரற்றும் நம் கலைஞர் அண்ணாவைப்பற்றி கவிதையியற்றி, கூறக் கேட்ட போது மாற்றார்களும் கண்ணீர் மல்கினர் என்ற போது அக்கவிதையின் வலிமை நன்கு புலனாகும். இன்பச் சுவையில் வெளிவரும் கவிதையை விட அவலச் சுவையில் வெளிவரும் கவிதைச் சுவை மேலோங்கியே நிற்கும். அதுவும் நிறை புலமை உணர்ச்சியுள்ள ஒருவரிடமிருந்து வெளிவரும் போது அவலச்சுவையோ! சொல்லுந்தரத்தன்று.

உதாரணமாக சங்க நூலான புறநானூற்றில் பாரியின் மகளிரிருவர் தன் தந்தையையிழந்து, தன் பறம்பு மலையையிழந்து பற்றுக் கோடில்லாது வாழ்ந்தபோது, முழுத்திங்களை நோக்கியவுடன், அவர்கள் உள்ளத்தே அவலச் சுவை பீறிட்டெழுகிறது. அவ்வுணர்ச்சி வார்த்தைகளாக வெளி• வருகிறது. அப்பாடல் வருமாறு :

**"அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்**
**எந்தையுமுடையே மெங்குன்றும் பிறர்கொளார்**
**இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவின்**
**வென்றெறி முரசின் வேந்தரெம்**
**குன்றங் கொண்டார் யாம் எந்தையுமிலமே".**

இப்பாடலில் ஏதேனும் அருஞ்சொற்கள் இருக்கின்றனவா? இல்லை. மிக மிக எளிமையான பாடல். அகராதியை வைத்துப் பொருள் காணத் தேவையில்லை. ஆனால் பாடலை முழுவதும் படித்ததும் நம்முள்ளம் அனலில் மெழுகென உருகுகிறது. கண்களில் நீர் மல்குகிறது. பாரி மகளிரின் நெஞ்சத்திலுள்ள அவலத்தையெல்லாம் "எக்ஸ்ரே" பிடித்தது போல் படம் பிடித்துக் காட்டுகிறது இப்பாடல். அவலச் சுவையை, தெள்ளிதின் விளக்கிய இப்பாடல் புறநானூற்றில் மிகச் சிறந்த பாடலாகும் என்று பெரும் புலவர், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள் கூறுவார்கள்.

இனி மற்றொரு பாடலில் கருத்து வருமாறு :

தன்னிகரற்ற தலைவனை, கூற்றுவன் அழைத்துச் சென்றானாக, அது கண்டு பொறாத புலவர்களும், பொருநர்களும் ஒன்றாகக்கூடி, கூற்றுவனை நாம் ஏசுவோம், அதுவும் ஒன்று கூடி ஏசுவோம் என்று கூறுகிறார். இதில் அனைவரும் ஒன்று கூடி ஒரு செயல் செய்தால் அது நிறைவேறும் என்ற கருத்தைத் தெளிவாக வெளிப்படுத்துகிறார். இங்கும் புலவர்களின் வெம்பிய உள்ளத்தின் நிலையை நமக்குப் புலப்படுத்துகிறது அப்பாடல்.





இதுபோன்று தான் நம் கலைஞரவர்களும், அண்ணாவிடம் இரவலாக இதயத்தைக் கேட்டு கையறுநிலையில் பாடிய கவிதை காலத்தால் அழியாதது; மாற்றார்கள் அக்கவிதையை அழிக்க நினைத்தாலும் அது அவர்களை அழித்து, தான் அழியாமல் நிற்கும் நன்மையுடையது. இதில் முன்னர்க்கூறியது போல் எளிய, ஆனால் தெளிவான சொற்கள் அடங்கியுள்ளன. அவைகள் கொடுக்கும் பொருளாழம் சொல்லுந்தரத் தன்று.

அவைகளில் சில வரிகளைக் காண்போம்.

**"பூவிதழின் மென்மையிலும் மென்மையான**

**புனித உள்ளம் — அன்பு உள்ளம்**
**அரவணைக்கும் — அன்னை உள்ளம் —**
**அவர்**
**மலர் இதழ்கள் தமிழ் பேசும்.**
**மா, பலா, வாழையெனும் முக்கனியும்**
**தோற்றுவிடும்**

**விழிமலர்கள் வேலாகும் — வாளாகும்**
**தீங்கொன்று தமிழ்த்தாய்க்கு வருகுதென்றால்**
**கால் மலர்கள் வாடிடினும் அவர் கடும் பயணம்**
**நிற்காது**

**கைம் மலர்கள் பிணைத்து நிற்கும் தம்பியரை —**
**கழகத்தை**

**அம்மலரே எதிரிகளை மன்னித்து**
**நெற்கதிர் போல் தலை நாணச் செய்துவிடும்.**

இதில் அண்ணாவின் உள்ளத்தையும், இதழ்களையும், விழிகளையும், கால்களையும் கூற வருகிறார். குறுந்தொகையில் கடவுள் வாழ்த்துப் பாடலில் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடிய பாடல் வருமாறு :

**"தாமரை புரையும் காமர் சேவடிப்**
**பவளத் தன்ன மேனித் திகழொளிக்**
**குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்**
**நெஞ்சு பகவெறிந்த வஞ்சுடர் நெடுவேற்**
**சேவலங் கொடியோன் காப்ப**
**ஏமவைக லெய்தின்றா னுலகே"**

இங்கே, சேவடி மேனி, உடுக்கை, ஒளி, வேல், சேவற் கொடி இவைகளை ஒரே நிறத்தையுடைய பொருளால் வருணித்துள்ளார். இதன் நயம் விரிப்பின் பெருகும்.

அதுபோல் இங்கே நம் கலைஞர் அவர்களும் அண்ணாவைப் பற்றி நினைத்துப் பாட புகுங்கால், முதற்கண் அவருடைய உள்ளமே நினைவிற்கு வர, அதற்கு மங்கலப் பொருளாம் மலரை உவமை கூறி, அதினினும் மென்மையான உள்ளம் என்று கூறியது பொருத்தமுடையதே. அண்ணாவின் உள்ளத்தின் மென்மையைப் புலப்படுத்த மலரைக் கூடக் கூறாது, அதன் இதழைக் கூறி, அதனினும் மென்மையானது என்றார்.

### அன்னை உள்ளம்

அந்த உள்ளம் தூய்மையான உள்ளமாக இருந்ததால் — அது அன்புள்ளமாக இருந்ததால், உள்ளம் அன்னை உள்ளமாக மாறியது என்றார்.

ஈன்றெடுத்த அன்னையர்கள், தம் குழந்தைகளனைவரும், அவர்கள் எவ்வாறாயினும், குழந்தைகள் மேம்படு நிலையில் இருக்க வேண்டும் என்று வேறுபாடு இல்லாது கருதுவார்கள்.

அதுபோல் அண்ணாவும், தன் தம்பிமார்கள் அனைவரும், தன்னோடொத்த மேல்நிலையில் இருக்க வேண்டும் என்று விரும்பி அதற்கேற்ப நடந்து கொண்டார். உலகில் எந்தத் தலைவனுக்கும் இல்லாத இந்த ஒப்பரிய குணம் அண்ணாவிடம் இருந்தது. கீழுள்ளவர்களை மேலே தூக்கி விட்டு நிலை நிறுத்துவது என்பது யாருக்கும் எளிதில் வராத செயல். ஏனெனில் அவர்கள் மேல் நிலைக்கு வரின் தன் நிலை தாழ்ந்துவிடும்; அல்லது குறைந்து விடும் என்று அவர்களெல்லோரும் நம்புகிறார்கள்.

ஆனால் நம் அண்ணாவோ, அவ்விதம் எண்ணாமல் இருப்பதற்குக் காரணம் தன்னுடைய ஆற்றலில் அசைக்க முடியாத நம்பிக்கையிருந்ததால் தான் என்ற கருத்தை நமக்குப் புலப்படுத்த, அண்ணாவிற்கு இருந்த உள்ளம் மென்மையான உள்ளம் என்று கூறி அமைதி காணாது, அது புனித உள்ளம் என்று மீண்டும் கூறி, அதிலும் அமைதி காணாது, அன்னை உள்ளம் என்று கூறி ஓரளவு அமைதி கண்டார் நம் கலைஞர்.

சிறப்பின் பாலால் தாயின் மனமும் திரியும் என்றதனால், ஒரே வழி அன்னை உள்ளமும் மாறுபடுமே என்றஞ்சிய கலைஞர், அன்னை உள்ளம் என்று வாளாக் கூறாது, அரவணைக்கும் அன்னை உள்ளம் என்று அடை கொடுத்துப் புகழ்வாராயினர்.

### தமிழ் பேசும் இதழ்

இதையடுத்து, மலர் இதழ்கள் தமிழ் பேசும் என்றார். பேசுந்தொழிலையுடையது வாய். அதில், நா, பற்கள், உதடுகள் என்பன பேச்சிற்கு உதவி செய்வன. இதில் ஒன்று குறையினும் பேச்சிற்குத் தடையேற்படும். அவ்வாறிருக்க அண்ணாவின் இதழ்கள் தமிழ் பேசும் என்று கூறினார். மற்றவர் கண்களுக்கு வெளிப்படையாக, நாவும் பற்களும் தெரியாத காரணத்தாலும், முகத்தின் முன்னின்று அனைவருக்கும் அறிமுகப்பட்டிருப்பதாலும், சிறப்பாக இதழைக் கூறினார். மேலும் அவர் கற்றவைகளைப் பேசுவதற்கு நா, பற்கள், உதடுகள் இவையனைத்தும் தேவையில்லை. தமிழ்த் தேனில் ஊறிய உதடுகள் மட்டுமே அதைச் செய்துவிடும் என்று அதன் வலிவைப் புலப்படுத்துகிறார்.

உலகில் பழமொழி சொல்வதுண்டு, உள்ளத்தில் ஒன்று, உதட்டில் ஒன்று என்பார்கள். அதை வைத்துப் பார்த்தால், எவ்வளவோ நூல்கள் வேற்றுமொழிக் கருத்துகள், பிற மதக் கருத்துகள் உலகின் எந்தக் கோடியில் இருப்பினும் அதைக் கொணர்ந்து, படித்துணர்ந்து அவைகள் தன்னுள்ளத்தே நிரம்பியிருந்தாலும், அக்கருத்துக்களை வெளிக் கொணர்ந்து, நாட்டிற்குத் தரும்போது அது உதட்டிலே, தமிழாக வெளி வருகிறது என்ற அரிய கருத்தையும் நமக்கு விளங்க வைக்க "மலர் இதழ்கள் தமிழ் பேசும்" என்று சுருங்கக் கூறி விளங்க வைக்கிறார் கலைஞர்.

### முக்கனிகள்

அதையடுத்துக் கூறுகிறார், மா, பலா, வாழையெனும் முக்கனியும் தோற்றுவிடும் என்று. முக்கனி என்பது ஈண்டு வெறும் பழங்களை மட்டும் உணர்த்துவதாகக் கொள்ளக் கூடாது. தமிழின் கூறுகளான இயல், இசை, நாடகம் என்பதை முக்கனியாய் ஏற்றிக் கூறுகிறார். அதாவது, இவர் பேசம் தமிழைக் கேட்டு தமிழே தோற்று விடுகிறது என்ற சீரிய கருத்தை நமக்குப் புகட்டுகிறார். முப்பிரிவைக் குறிக்க, கனிகளிற் சிறந்ததாதலின் முக்கனியான மா, பலா, வாழை என்று கூறினார்.

மாங்கனிகளில் சில புளிப்பானவை உண்டு. சுவை குறைந்த மற்ற கனியும் உண்டு. தோல் தடித்த கனிகள் உண்டு. இனிமையே உருவெடுத்தாற் போன்ற அமைப்பும், சுவையும் கொண்ட கனிகளும் உண்டு. புளிப்பான கருத்துகளடங்கிய இலக்கியங்களும் உண்டு. திருக்குறள் போன்ற இனிமைச்சாறு பொழிந்து வழியும் இலக்கியங்களும் உண்டு என்பதைத் தெரிவிக்க இயல் துறைக்கு மாங்கனியை உவமை கூறினார்.

இசையிலக்கணம் சற்றுக் கரடு முரடானது. வீணையைப் போல் அது தோற்றத்தில் வளையுடையதாயினும், அதை மீட்டினால் எழும்பும் இசை யாவரும் நுகரும் தன்மையுடையது. சிறிது ஆழமாக இசையிலக்கணம் படித்துணர்ந்து விட்டால் முழுமையான இன்பத்தை அளிக்கவல்லது. ஆகவே தான் வெளியே முள்ளோடு கூடிய உருவத்தையும், உள்ளே யாவரும் விரும்பும் இனிக்கும் பலாச்சுளையையும் உடைய பலாக்கனியை இசைக்கு உவமை கூறினார்.

அடுத்து, வாழைப்பழத்தைச் சுவைப்பதற்கு அதிகமான சிரமம் தேவையில்லை. தோலையுரித்து விட்டு, பழத்தை அப்படியே விழுங்க வேண்டியது தான். நாடகமும் அப்படியே. நாடகத்தை அனுபவிக்க, நம்மை நாம் தயார் செய்து கொள்ளவேண்டாம். போய் உட்கார்ந்தாலே போதும். பழத்தை விழுங்குவது போன்று, 'நாடகக் கருத்தை மனத்தகத்தே வாங்கிக் கொண்டு இன்புறலாம். ஆனால் பழத்தை உண்ட பிறகு அதன் தோலை கைபோன போக்கில் வீசியெறிந்தால் அத்தோல் வழுக்கி தானே விழ நேரிடலாம். அல்லது பிறர் விழ நேரிடலாம். ஆகவே நாடகக் கருத்து தீமையுடையதாக இருப்பின் தானே கெடலாம். அல்லது பிறரைக் கெடச் செய்யலாம். இதைக் கருத்திற் கொண்டு மிகவும் கவனத்தோடு நாட்டிற்குகந்தக் கருத்தையே நாடகத்தில் புகுத்த வேண்டும் என்பதை உள்ளடக்கி, கலைஞர் நாடகத் துறைக்கு வாழைக்கனியை உவமை கூறினார்.

மா, பலா, வாழை என்ற இந்த சின்னஞ்சிறு சொற்களைக் கொண்டு இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் பண்புகளை வெளிக்கொணர்ந்து அறிவுறுத்திய பாங்கு நெஞ்சைக் கவர்வதாகும்.

### மலர் விழியா? விழி மலரா?

இதையடுத்துக் கூறும் வரிகள் வருமாறு :

**"விழி மலர்கள் வேலாகும், வாளாகும்**
**தீங்கொன்று தமிழ்த்தாய்க்கு வருகுதென்றால்"**

— என்று கூறுகிறார்.

பொதுவாக மலர் விழி என்று தான் சொன்னார்கள். மலர் விழியென்று கூறின் மலர் போன்ற விழி என்று உவமையாகி, பெண்களின் விழியையுணர்த்தும். ஆனால் இங்கே பெண்ணின் விழியிலிருந்து, மாறுபட்டது அண்ணாவின் விழிகளாதலின், மலர் விழியென்பதை மாற்றி, உருவகமாக்கி, விழி மலர் என்றார்.

மலருக்கு மென்மைத் தன்மையே இயல்பாக இருக்க, அதை மாற்றி இங்கே வேலாகவும், வாளாகவும் மாறுகிறது என்று கூறுகிறார். எவ்விதமான கருத்தோட்டத்தையும், கண்களே தெற்றெனத் தெரிவிக்கும் கருவியாதலின் கண்களின் மேலேற்றி, விழிகள் வேலாகவும், வாளாகவும் மாறுகின்றன என்றார். விழிகள் இரண்டாதலின், வேலையும், வாளையும் உடன் கூறினார். சேய்மைக் கண்ணுள்ள பகையைத் தீர்ப்பதற்கு விரைந்து வெகுதூரம் செல்லும் வேலையும் மீறி அப்பகை அருகே வந்த போது அதைத் தாக்கி, எதிர்த்தொழித்து அழிக்க வாளையும் கூறினார்.

தமிழ்த் தாய்க்குத் தீங்கு பலப்பல வரத்தேவையில்லை. ஒரே ஒரு தீங்கு வந்தாலும் போதும். அண்ணாவின் விழிகள் வேலாகவும், வாளாகவும் மாறும் என்றார். "வருகுதென்றால் என்று கூறக்காரணம் எவ்வளவு மேம்பட்ட நிலையிலுள்ளவர்களும், தமிழ்த் தாய்க்குத் தீங்கு எண்ண மாட்டார்கள். செய்யமாட்டார்கள். ஆனால் ஏதோ ஒன்றை நினைத்து ஏதோ ஒன்றைச் செய்ய அது தமிழ்த் தாய்க்குத் தீங்காக அமைந்துவிடுமாதலின் "தமிழ்த் தாய்க்குத் தீங்கு வருகுதென்றால்" என்று கூறி அதிலுள்ள நுட்பத்தைப் புலப்பட வைத்தார்.

### கால் மலரின் கடும் பயணம்

அடுத்து வரும் அடிகளில் கீழ் வருமாறு கூறுகிறார்.

**"கால் மலர்கள் வாடிடினும் அவர் கடும்பயணம் நிற்காது**
**கைம் மலர்கள் பிணைந்து நிற்கும் தம்பியரை கழகத்தை**
**அம்மலரே, எதிரிகளை மன்னித்து**
**நெற்கதிர் போல் தலை**
**நாணச் செய்து விடும்"**

— என்று கூறுகிறார்.



ஆன்மீகத்தில் கூறுவார்கள். ஆண்டவன் நமக்கு, தலைகொடுத்தது அவன் தாளை வணங்குவதற்கு. கைகொடுத்தது அவனைத் தொழுவதற்கு, கண் கொடுத்தது அவனைக் காண்பதற்கு, நா கொடுத்தது அவன் புகழ் பேசுவதற்கு, கால் கொடுத்தது அவன் திருக்கோயில் செல்வதற்கு, என்று கூறுவார்கள்.

ஆனால் அண்ணாவிற்கு கால்கள் இருப்பதே பட்டி தொட்டிகளெல்லாம் சென்று அங்குள்ள மக்களைக் கண்டு கருத்துக்களைப் பரப்புவதற்குத்தான் என்று கூற வந்தவர், கால் மலர்கள் வாடிடினும், அவர் கடும்பயணம் நிற்காது என்றார்.

அக்காலத்தில் அவர் கூட்டங்களில் பேசும்போது, இன்னல்களும் அல்லல்களும் அடுக்கடுக்காக வந்தபோதும் அதையும் பொருட்படுத்தாது மீண்டும் மீண்டும் தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டேயிருந்தார் என்பதைக் குறிக்க "கடும் பயணம்" என்று கூறினார்.

கைம்மலரோ! தன் அன்புத் தம்பிமார்களை எங்கும், தன்னை விட்டுச் செல்ல முடியாதபடி ஒன்றாகப் பிணைத்து நிற்கும் என்றார். அன்புத் தம்பியர்கள், உண்மைத் தம்பியர்கள் அடங்கியது தான் கழகமாதலின், அக்கழகத்தையும் அக்கை மலரே பிணைத்து நின்றது.

ஒரே வழி தன் பிணைப்பிலிருந்து நழுவி ஏதோ அற்பமான சில காரணங்களுக்காகச் சிலர் வெளியேறுவார்களானால், வெளியேறித் தகாத கீழான முறையில் நடந்து கொள்வார்களேயானால் அப்போது அவர்களை மன்னித்து அவர்களின் தலை நாணத்தால் கவிழும் நிலையைச் செய்துவிடுவார் என்று கூறினார்.

அம்மலரே என்பதை தனித்தனியாகக் கூட்டி, கால் மலரே என்றும் கை மலரே என்றும் பொருள் காண வேண்டும். இரண்டையும் கூற வேண்டியதற்குக் காரணம் மனந்திருந்தி தன் கால்களில் விழுந்தவர்களைத் தன் கால் மலர் மன்னித்து விடுகிறது. விழுந்த அவர்களைத் தூக்கி நிறுத்தி கைமலரும் அவர்களை மன்னித்து விடுகிறது என்ற கருத்துக்களை நமக்குத் தெரிவிக்க "அம்மலரே" என்றார்.

மன்னிப்புப் பெற்ற அவர்களை நெற்கதிர் போல் தலைநாணச் செய்துவிடும் என்று கூறுகிறார். தலை நாணுதலுக்கு நெற்கதிரை உவமை கூறுகிறார். முற்றிய நெற்கதிர் தான் தலை கவிழுமாதலின் ஈண்டு நெற்கதிர் என்றது முற்றிய அறுவடைக்குத் தயாராகவுள்ள கதிரை என்று கொள்ள வேண்டும். அதுபோல் தன்னை விட்டுச் சென்றவர்கள் மீண்டும் தன் அனுபவத்தால் முழு அறிவையும் பெறும் இடம் அண்ணாவிடம் தான் என்பதையும், தன்னிடம் வந்து மன்னிப்பைப் பெற்று தலை நாணுவார்கள் என்ற கருத்தையும் விளங்க

வைக்க "நெற்கதிர் போல் தலை நாணச் செய்துவிடும்" என்றார்.

### வாழ்த்துக் குவியல்

இதையடுத்துக் கூறும் வரிகள் வருமாறு :

**நாடிவரும் பூ முடியே புகழ் முடியே உமைத்**
**தேடி வரும் வாழ்த்துக் குவியலிலே – தினம்**
**பாடி வரும் வண்டாக நான் பறப்பேன்**
**உனக்காக எனைத் துறப்பேன் என**
**ஒரு கோடித் தமிழ் இளைஞர்**
**பாடி நின்ற பாட்டுக்குப் பெருந்தலைவன்"**

– என்று கூறுகிறார்.

அண்ணா அவர்கள் தானிருந்த இடத்திலேயே இல்லாமல் தன் அன்புத் தம்பிமார்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ! அங்கெல்லாம், பொதுமக்களின் அவலக்குரல் எங்கெங்கு கேட்கப்படுகிறதோ! அங்கெல்லாம்,தன்னுடைய தொண்டுள்ளம் எங்கெங்கு தேவைப்படுகிறதோ! அங்கெல்லாம் இவர் வலிய தானே அந்த இடங்களை விரும்பித் தேடிச் செல்பவராதலின் "நாடி வரும் பூ முடியே" என்றார்.

"பூ முடியே" என்பதிலுள்ள முடியென்னும் சொல் தலைமையென்னும் பொருளையுணர்த்தும். முடியுடை மூவேந்தர் என்று கூறும்போது, மகுடத்தையுடைய மூன்று வேந்தர் என்று பொருள் கொள்ளலாகாது. முடியில்லா வேந்தர்கள் இருக்க முடியாது. அப்படியிருக்க முடியுடை மூவேந்தர் என்று கூறும்போது, அங்கே பூவேந்தர்களைச் சிறப்பிக்க வந்த சொல் "முடி" என்பது. ஆகவே முடியென்பது தலைமையுடைய மூவேந்தர்கள் என்று பொருள்பட்டு, சிறப்பித்து நிற்றல் போல் ஈண்டும், தலைமையான சிறந்த பூப்போன்றவர் என்று பொருள் காண வேண்டும். பூ மணம் பரப்புவதைப் போல் அவருடைய புகழ் மணமும் தானாகவே பரவுகிறது என்பதைக் குறிக்க நாடிவரும் "புகழ் முடியே" என்று குறிப்பிட்டார்.

முன்னர் கூறியதற்கேற்ப பின்னும் ஓர் அடி கூறுகிறார். உமைத் தேடி வரும் வாழ்த்துக் குவியலிலே என்று.

வாழ்த்துக் குவியல் என்பது ஈண்டு கணக்கற்ற மலர் மாலைகளையுணர்த்தி நின்றது. காரணம் அண்ணாவை வாழ்த்த முயன்று சொற்களைத் தேடினால், தமிழ் மொழியிலும் சொற்கள் இல்லையென்பதாலும், எப்படியோ தன்னுடைய அறிவாற்றலால் சொற்களைத் தேடிக் கண்டுபிடித்துவிட்டாலும் கூட, அவைகளைக் கொண்டு அண்ணாவின் எதிரிலேயே அவர் புகழ் பாட யாருக்கும் மனத்தெளிவு வராது. குழம்பி, சொற்கள் தடுமாறி சிலை போல் நின்றிடுவர். ஆதலின், தன்னுடைய உள்ளத்து வாழ்த்துகளை மலர் மாலையாக மாற்றி, கணக்கற்ற மாலைகளை அவருக்குச் சூட்டி மகிழுகின்றனர்.

### ஆண்டவன் காப்பாற்றுவான்!

ஒருமுறை எதிர்க்கட்சித் தலைவராகக் கலைஞர் பணியாற்றியபோது, அமைச்சர், துரைமுருகனும், இரகுமான்கானும், சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்கள். அப்போது அவர்கள் இருவரும் சட்டமன்றத்தில் தொல்லை தருவதாகக் கருதி அன்றைய சட்டப்பேரவைத் தலைவர் முனு ஆதி அவர்கள் "இவர்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்" என்று சொன்னார். உடனே கலைஞர், "நானும் ஆண்டவன் தான் ஒரு காலத்தில் தமிழகத்தை முதல்வராக இருந்து ஆண்டவன் நான்; நிச்சயமாக அவர்களை காப்பாற்றுவேன்" என்றார். தற்போது ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் நடைபெற்ற ஆளுநர் உரையைப் பாராட்டிப் பேசிய அனைவரும் கலைஞருக்குப் பாராட்டுரை வழங்கினர். பதில் அளித்துப் பேசும் போது "உறுப்பினர் அனைவரும் எனக்குப் பாராட்டுரை வழங்கினார்கள். நான் இதைப் பாராட்டுரையாக ஏற்றுக் கொள்ளவில்லை. "பாதுகாப்பு உரையாக" ஏற்றுக் கொள்கிறேன்" என்றார்.

அந்த மலர் மாலைகளில் உள்ள தேனைப் பருகுவதற்கு தமிழ் இளைஞர்கள் வண்டாகப் பறக்கின்றனர். ஒரு கோடித் தமிழ் இளைஞர் என்று கூறுகிறார். அப்படியென்றால் ஒரு கோடி இளைஞர் மட்டும் தானா? என்ற வினா எழும்பும். ஆகவே, ஒரு என்பதற்கு ஒப்பற்ற என்ற பொருள் கொண்டு எண்ணிக்கையிலடங்கா ஒப்பற்ற இளைஞர்கள் என்ற பொருளையும் கொள்ள வேண்டும். ஆக ஒரு கோடித் தமிழ் இளைஞர் என்பது ஒப்பற்ற கணக்கற்ற இளைஞர்களை உணர்த்தி நின்றது. அண்ணாவின் திட்டங்களைச் செய்து முடிப்பவர் இளைஞராதலின், இளைஞர் என்றார். வெறும் இளைஞர் என்று கூறாது தமிழ் இளைஞர் என்றார். தமிழ் என்பதற்குப் பொருள் பல உள்ளன. இனிமை, பண்பு, வீரம், ஆற்றல் என்று பல பொருள்கள் உள்ளன. இப்பொருள்களையெல்லாம் சேர்த்துப் பொருள் கண்டு இனிமையான இளைஞர், பண்புள்ள இளைஞர், வீரமுள்ள இளைஞர், ஆற்றலுள்ள இளைஞர் என்று பொருள் கூறுதல் வேண்டும்.



### வண்டு பறக்கிறது

இத்தகைய இளைஞர்கள் அந்த மலர் மாலைகளில் உள்ள தேனினைப் பருகுவதற்கு வண்டாகப் பறக்கின்றனர். போட்ட மலர் மாலையில் தேன் உள்ளது என்பது எவ்வாறு புலப்படும் என்பதைக் காண வேண்டும். மாலையை அணிந்து கொண்டு அங்கு மிங்கும் அலைந்து கொண்டேயிருப்பின், அதிலுள்ள தேன் கீழே சிதறி வழிந்து போகும். பிறகு வண்டுகள் அங்கே பறப்பதற்குக் காரணம் இல்லை. ஆனால் இங்கே தமிழ் இளைஞர்கள் தேனைப் பருகுவதற்குப் பறப்பதாகக் கூறுகிறார். அங்கு தன் மீது மட்டற்ற ஆர்வம் கொண்டு, ஈடில்லா அன்பினால் பிணைக்கப்பட்டு தன் மீது இவ்வளவு நம்பிக்கையை வைத்துள்ளனரே! என்று வியந்துதான் அண்ணா அசைவற்று நின்று விடுகிறார். ஆகவே, மாலைகளிலிருக்கும் தேனும் கீழே சிதறி வழியாமல் மாலைகளிலேயே தங்குகிறது. அதைப் பருகுவதற்கு வண்டுகளாகிய இளைஞர்கள் பறக்கின்றனர்.

அதெல்லாம் ஒன்றும் இல்லை. மாலையிலுள்ள மலர்களைப் பறித்துக் கட்டி மாலையாக்கி எவ்வளவோ! நேரம் காத்திருந்து அண்ணாவிற்குப் போடும் போது, அதில் தேன் இருக்க நியாயமில்லை என்று கூறுவாரேயானால், ஈண்டுத் தேன் என்றது அவர் உள்ளத்தே நிரம்பி வழியும் அன்புத் தேன் – ஆர்வத் தேன் – பாசத் தேன் – கருணைத் தேன் – அவரிடமுள்ள அறிவுத் தேன். இந்தத் தேன்களெல்லாம் அவர் மார்பில் புரளும் மாலைகளில் இரண்டறக் கலக்கிறது. இத்தேனைப் பருகுவதற்கு ஒரு கோடித் தமிழ் இளைஞர் பாடி வரும் வண்டாகப் பறந்து வருகின்றனர், என்று பொருள் கண்டு மகிழ்வடைய வேண்டும்.

### யான் எனது என்னும் பற்று

அப்படிப் பாடி வரும் போது உனக்காக எனைத்துறப்பேன் என்கின்றனராம். இங்கே எனைத் துறப்பேன் என்பது, அண்ணாவிற்காகத் தன்னுயிரையும் துறப்பேன் என்று பொருள். ஆனால் சிறிது ஐயமும் ஏற்பட்டுவிடும். அண்ணாவிடம் சேர்ந்தால் உயிர் துறக்க நேரிடுமோ? என்ற அச்சம் யாவரிடத்திலும் ஏற்பட்டுவிடும். ஆகவே இங்கே எனைத் துறப்பேன் என்பதற்குப் பொருள் வருமாறு: என்னை என்ற சொல்லில் இடைக் குறைந்து, எனை என்று நின்றது. உலகில் எல்லாரும் நான், நான் என்று பேசி, அதையடுத்து இது என்னுடையது, இது என்னுடைய குடும்பம், இவள் என்னுடைய மனைவி, இவர்கள் என்னுடைய மக்கள், இது என்னுடைய வீடு என்றே பேசி அதற்கேற்ப நடப்பர். இது சுயநலத்தின் பாற்படும். ஆனால் அண்ணாவிடத்துப் பற்று கொண்ட கோடி இளைஞர்களும் நான், எனது என்ற பற்றை அடியோடு நீக்கி, நாம் நமது என்ற பரந்த நிலைக்கு ஆட்பட்டு, நம்முடைய மொழி, நம்முடைய நாடு, நம்மினம், நம் நாகரிகம், நம் கலைகள் என்ற எண்ணத்தாலேயே சீரிய அரிய தொண்டு புரிந்து வாழ்ந்தவர் என்ற அரும்பெரும் கருத்தை நமக்குப் புலப்படுத்த என் செல்லக் கலைஞர், மன்னிக்கவும் நம் செல்லக்கலைஞர் எனைத் துறப்பேன் என்று இளைஞர் கூறினார் என்று இவர் கூறுவாராயினர்.

இப்படி இளைஞர்கள் பாடி நின்ற பாடல்கள் கணக்கற்றவைகளாக இருப்பதால அது காவியமாயிற்று. ஆகவே அக்காவியத்தின் பாட்டுடைத் தலைவன் பேரறிஞர் அண்ணாவானார் என்ற கருத்தை "பாடி நின்ற பாட்டுக்குப் பெருந்தலைவன்" என்ற அடி நமக்கு உயர்த்துகிறது.

### அண்ணாவின் உருவங்கள்

இதையடுத்து சில அடிகள் பின்னால் கூறுகிறார் :

**"கவியினில் பொருளெனக் கரும்பினில் சுவையெனக்**
**கதிரினில் ஒளியென, காவினில் மலரென,**
**நிலவினில் குளிரென, நிலமிசை வளமென**
**குலவிடும் அருவி, குழறிடும் மொழியென**
**உலவிடும் காற்றில் ஏறிடும் இசையென,**
**அலையெழுங் கடலில் ஆடிடும் நுரையென,**
**கலைமணங் கமழக் கூடிய கவிஞர்**
**தலைமகன்அண்ணா திருப்புகழ் பாடிட**
**நில மகள் வடிக்கும் கண்ணீர் அந்தோ! வெள்ளம் –**
**வெள்ளம் – மாபெரும் வெள்ளம்"**

– என்று கூறுகிறார்.

இங்கே தமிழகத்தை கவியாகவும், அதன் உட்பொருளாக அண்ணா அமைந்துள்ளார் என்றும், தமிழகம் கரும்பாக உள்ளது என்றும், அதன் சுவையாக அண்ணா உள்ளார் என்றும், தமிழகம் ஞாயிற்றின் கதிராக உள்ளது என்றும், அதன் ஒளியாக அண்ணா உள்ளார் என்றும், தமிழகம் சிறந்த சோலையாக உள்ளது என்றும், அதில் மணம் பரப்பும் மலராக அண்ணா உள்ளார் என்றும், தமிழகம் நிலவாக உள்ளதென்றும், அதன் குளிச்சியாக அண்ணா உள்ளார் என்றும், தமிழகம் சிறந்த நிலமாக உள்ளதென்றும், அதன்கண், உள்ள வளங்களாக அண்ணா உள்ளாரென்றும், தமிழகம் சிறந்த அருவியாக உள்ளது என்றும் அது எழுப்புகின்ற இனிய ஓசையாக அண்ணா உள்ளாரென்றும், கலைமணம் மலிந்த கவிஞர் பெருமக்கள், தலைமகனாம் அண்ணாவின் திருப்புகழ் பாடுகிறார்கள்.

### இருவகைக் கண்ணீர்

இதைக் கேட்டு நிலமகள் கண்ணீர் வடிக்கிறாள். கண்ணீர் வடிப்பதற்குரிய காரணங்கள் இரண்டு. இத்தகைய ஒரு தலைமகன் என்னுடைய மடியில்

மொழி தழைத்து நீடுழி இன்று போல் இருக்க வேண்டுமென்றால் அதனிடம் சிறப்பான, தலைமையான, உலகம் போற்றும் நூல் இருக்க வேண்டும். அதைப் புலப்படுத்த,

**"கலைமகளாம் நம் அன்னை வள்ளுவனைத்**
**தலைமகனாய்ப் பெற்றெடுத்தாள்"**

— என்று கூறுகிறார்.

**பண்பட்ட வாழ்வில் புண்பட்ட கொள்கை**

அதையடுத்து கூறும் வரிகள் வருமாறு :

**"விண்முட்டும் மலையோரம் — நம்**
**கண்பட்டும், படாமலும் எழுகின்ற நச்சுமரம்போலப்**
**பண்பட்ட தமிழர் வாழ்வில் — முதுகில்**
**புண்பட்ட கொள்கையெல்லாம் மூண்டதந்தோ!**
**சாதிகளைக் காணாது குறள் ஒலித்த**
**தமிழ் மண்ணில்**
**பாதியிலே வந்ததம்மா பல கோடி சாதிகளும்**
**அறிவு மணங் கமழ்கின்ற ஆலயங்கள்**
**அற்றுப்போய்**
**ஆயிரம் தெய்வங்கள் உறைகின்ற கோயில்கள்**
**கண்டுவிட்டார்"**

பண்பட்ட தமிழ் வாழ்வை விண்முட்டும் மலைக்கு உவமை கூறுகிறார்.

மலையானது நிமிர்ந்தோங்கி நிற்பது அசையாத நிலையையுடையது. தன்னிடம் உள்ள பொருள்களை உலகிற்கு என்றும் வற்றாத நிலையில் கொடுத்துக் கொண்டேயிருப்பது. வெகு தொலைவிலிருந்து நோக்கினாலும், தான் இருக்குமிடத்தைத் தெரிவிப்பது. அதைப்போலவே, தமிழர்கள், நிமிர்ந்த நோக்குடையவர்களாக இருப்பவர்கள். வெகு தொலை நாடுகளிலும் தமிழர்களின் மாப்புகழ் இன்றும், நாளையும் பேசப்படுவது. ஆகவே, இந்த ஒற்றுமையால் தமிழர் வாழ்விற்கு, "விண் முட்டும் மலை"யை உவமை கூறினார்.

"தமிழர் வாழ்வில் முதுகில் புண்பட்ட கொள்கையெல்லாம் மூண்டதந்தோ", என்று கூறக்காரணம் வருமாறு : தமிழர் வாழ்வில் சிறப்பாக அங்கம் வகிப்பது இரண்டு. ஒன்று காதல், ஏனையது வீரம். ஏனைய பண்புகளெல்லாம் இவ்விரண்டிலேயே அடங்கிவிடும். இவ்விரண்டில் ஏதாவதொரு பண்பை அழித்துவிட்டால், அல்லது மாற்றிவிட்டால் தமிழர் நிலையை குலையச் செய்துவிடலாம் என்று நம்பினம் அல்லாதார் எண்ணினார். முயன்றார். காதலை அழிக்க உலகில் சக்தியொன்றில்லையாதலின், ஏனைய வீரத்தில் கைவைத்து, வீரத்தை அழிக்க அவர்கள் காதலைக் கருவியாக்கி, தமிழர் சமூகத்தைச் சீர்குலைக்க சாதிகளை அறிமுகம் செய்தனர் என்பதை விளக்குவதற்காக,

**கண்பட்டும் படாமலும் எழுகின்ற நச்சு மரம் போலப்**
**பண்பட்ட தமிழர் வாழ்வில் — முதுகில்**
**புண்பட்ட கொள்கையெல்லாம் மூண்டதந்தோ!**

— என்று இவ்வரிகளைக் கூறினார்.

புண்பட்ட கொள்கையென்பது வீரத்துறைக்கு மட்டும் பொருந்துவதன்று. தமிழர்களின் ஏனைய எல்லாத் துறைகளிலும் மாற்றம் ஏற்பட்டதை, "முதுகில் புண்பட்ட கொள்கையெல்லாம் மூண்டதந்தோ" என்ற வரிகள் நமக்குக் கூறுகின்றன.

அதற்குப் பிறகு கூறுகிறார்,

**"அறிவு மணங் கமழ்கின்ற ஆலயங்கள்**
**அற்றுப்போய்**
**ஆயிரம் தெய்வங்கள் உறைகின்ற கோயில்கள்**
**கண்டுவிட்டார்"**

பண்டைக்காலத்தில் ஆலயங்களில் நிகழும் எச்செயலும், அறிவுக்குப் பொருத்தமானவைகளாகவே இருந்தன. உதாரணத்திற்குச் சில : ஆண்டவனுக்குப் படைக்கப்பட்ட உணவுகளை ஆதரவற்றவர்கள், உறுப்பிழந்து வாழ முடியாதவர்கள் இவர்களுக்கு, ஒரு நாளை ஆறு கூறுகளாக்கி, அந்த ஆறு வேளைகளிலும் உணவு படைத்து வந்தனர். தமிழ் மணம் கமழும் இடமாக இருந்த அந்த ஆலயங்களில் தமிழின் கூறுகளான இயல், இசை, நாடகம் மூன்றும் இடம் பெற்று மக்களுக்கு நல்வழி காட்டி வந்தன; "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற கொள்கையைப் பறைசாற்றி வந்தன.

இந்த நிலை சிறுகச் சிறுக மாறி, எங்கிருந்தோ வந்தவர்கள், தமிழால் ஏற்றம் பெற்றவர்கள் மேற்கொண்ட செயல்களையெல்லாம் மாறச்செய்து, ஆயிரக்கணக்கான தெய்வங்கள் இருக்கின்ற கோயில்களாக மாற்றிவிட்டனர் என்பதை வெகு நாகரிகமாக, ஆத்திகர்கள் மனம் கூட புண்படாத முறையில், ஆனால் முழு உண்மையை தெளிவாகக் கூறிய கலைஞர் பாராட்டுக்குரியவர்.

**மொழிச்சுவை - வாய்ச்சுவை**

அதையடுத்தும் கூறும் வரிகள் வருமாறு:

**கிட்டப்பா! கிட்டாதப்பா!!**

*ஒருமுறை சட்டப்பேரவை உறுப்பினர் திரு. கிட்டப்பா மாயூரத்தில் விமானதளம் அமைக்கப்படுமா என்று கேட்டதற்குக் "கிட்டப்பா — அது கிட்டாதப்பா" என்றார் கலைஞர்.*



**"மொழியுணர்வே,**
**இல்லாத வாயுணர்வின்**
**மாக்கள் — தமிழ்**
**அழியினும் வாழினும்**
**என்னென்று**
**இருந்திட்டார்"**

— என்று கூறுகிறார்.

இங்கே தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூட,

**"செவியிற் சுவையுணரா**
**வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும்**
**என்"**

— என்று தான் கேட்டார்.

செவிச் சுவையென்பது, சொற்சுவை பொருட்சுவை என்று இருவகைப்படும். அவற்றுள் சொற்சுவையானது, சந்தம் (அதாவது ஓசை) அலங்காரம் என இருவகைப்படும். பொருட்சுவையென்பது காமம், நகை, கருணை, வீரம், உருத்திரம், அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தம் என ஒன்பது வகைப்படும். இவைகளைக் கேட்காத செவியென்று வள்ளுவர் கூற வருகிறார். இதை செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள் என்று கூறினார். இந்த அடிக்கு பெரிய விளக்கம் கூறுவது போன்ற, மற்றொரு பரிமேலழகர் நிலையில் நின்று நம் கலைஞர் விளக்க வருகிறார். இந்த சொற்சுவை, பொருட்சுவை இவைகளை நமக்கு அளிப்பது, அளப்பரிய நம் அருந்தமிழேயாதாலும், தமிழின் மூலமே இவ்வுணர்வுகளை நாம் பெற முடியுமாதலும் அவ்வுணர்வை மறந்து, வாயுணர்வின் மாக்கள் இருந்து என்ன பயன் என்று கேட்பதற்காக மொழியுணர்வே இல்லாத மாக்கள் என்று கூறினார். செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள் என்று மாற்றிக் கூறியதின் மூலம், வள்ளுவரின் இக்குறளில் முதலடிக்குப் பெரியதோர் விரிவுரை எழுதியதைப் போல, கலைஞரின் வரிகள் ஒளிவீசுகின்றன.

**பதிகத்துப் பொருள்**

அதற்குப் பிறகு, நம்முடைய அண்ணன் காஞ்சியில் பிறந்ததைப்பற்றிக் குறிக்குமிடத்து அவர் கூறும் கவிதை வரிகள் வருமாறு :

**பதிகத்துப் பொருளாய்**
**பழந்தமிழர் புறப்பாட்டாய்**
**வந்துதித்தான் அண்ணன்**

— என்று கூறுகிறார்.

**கவிதை**

**"கவிதையில்" "தை"யை நீக்கிவிட்டால் "கவி"! கவிதான் கவிதையை எழுதமுடியும். கவிதையில் "க"வை நீக்கிவிட்டால் விதை. எத்தனையோ எண்ணங்கள் விதைக்கப்படுகின்றன. கவிதைகளை யாத்துத் தருகின்றவர்கள் கற்பனை வளத்தோடு, கருத்து வளமும் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்.**

**— கலைஞர்**

பதிகம் என்பது பத்துப் பாடல்கள் அடங்கிய பகுதியாகும். பத்துப் பாடல்கள் என்று குறிப்பதற்குக் காரணம் அதற்குப் பிறகு வரும் எண்களெல்லாம், அது எந்த உயர்ந்த எண்ணாக இருந்தாலும் பத்திற்குள் அடங்கிய எண்ணாகவே அது இருக்கும். எத்தனைக் கோடியாயிருந்தாலும் இந்தப் பத்திற்குள் உள்ள எண்களைச் சேர்த்துக் கொண்டே போக வேண்டும். அவ்வளவுதான். அதுபோல் அண்ணாவின் தோற்றம் — அதனால் தமிழகம் அடைந்த நன்மைகள் இவைகளின் எண்ணிக்கை பதிகம் 'போன்றிருந்தது என்பதைக் குறிக்க பதிகம்' என்றார்.

சத்தற்ற வெறும் பாடல்கள் போல் அண்ணாவின் தோற்றம் இல்லையென்பதை அறிவுறுத்த, அதன் பொருள் போல் இனிமையுடையது என்பதைக் குறிக்க வெறும் பதிகம் என்று சொல்லாது, பதிகத்துப் பொருளாய் என்று விளக்கினார்.

நூற்பொருளேயன்றி ஆசிரியரின் கருத்துகளையும் தாங்கிக் கொண்டிருக்கும் பதிகம் போன்று, நூலுக்கு அழகைத் தந்து மகுடம் போல் இருக்கும் பதிகம் போன்று, தன்னைப் படித்துணராது, நூலுள் சென்றால் இடர்ப்பட வைக்கும் 'பதிகம் போன்று அண்ணாவின் தோற்றம் இருந்தது என்பதை பதிகத்துப் பொருளாய் வந்துதித்தான் அண்ணன் என்று கூறி விளங்க வைத்தார். பதிகத்திற்குக் கூறிய கருத்துகளை, அண்ணாவின் செயலுக்கும் வாழ்விற்கும் ஏற்றி, பொருள் கண்டு நமக்கு இன்பம் நல்கிய கலைஞர் அடுத்த வரியில் கூறுகிறார்.

"பழந்தமிழர் புறப்பாட்டாய்" என்று.

பாழ்பட்டு நின்ற தமிழ்ச் சமுதாயம், மீண்டும் பண்டு போல் நெஞ்சுயர்த்தி, தலைநிமிர்ந்து பீடுநடை போட, வீரவுணர்ச்சி தேவையென்றுணர்ந்து அதற்காக உழைத்தார்கள் என்பதைக் குறிப்பதற்கு "பழந்தமிழர் புறப்பாட்டாய்" அண்ணா வந்துதித்தான் என்று கலைஞர் கூறினார். அதன் பின்,

**அவன் தந்த தமிழ்**

**அவன் புகழைப் பாடுதற்கு**
**அவன் வளர்த்த தம்பி நானும்**
**அவன் தந்த தமிழ் எடுத்து**
**இவண் வந்தேன் இது தான் உண்மை**

— என்று கூறுகிறார்.

அண்ணாவின் புகழ் ஞாயிற்றின் கதிர்போல் எங்கும் பரவி நிற்கிறது. இங்கே அண்ணாவை, தன் கழகத்தின் சின்னமாகவே கருதுவதை முதல் வரி எடுத்துக் காட்டுகிறது.

அவன் புகழைப் பாடுதற்கு கலைஞர் முனைகிறார். தமிழ் இருக்கிறது. அது நம்மைக் கைவிடாது காக்கும் என்றெண்ணி, அண்ணாவின் புகழைப் பாட வருகிறார். அந்தத் தமிழும், இவருக்கு அண்ணா கொடுத்த தமிழ் என்று கூறுவதால், அகத்தியன் அளித்த தமிழ், தொல்காப்பியன் அளித்த தமிழ், பாண்டியர்கள் வளர்த்த தமிழ் என்று சொல்வது போல், ஒரு புதிய மரபை உண்டாக்குகிறார். அண்ணா தந்த தமிழ் என்று, ஆனால் இதுதான் உண்மை, அகத்தியன் அளித்த தமிழும், தொல்காப்பியன் தந்த தமிழும், கற்றறி புலவர்களிடம் கூட முழுமையாக இல்லை.

மாறாக அண்ணா தந்த தமிழால் தான் எழுதுவதும், பேசுவதும் செய்கிறார்கள். சங்க காலத்திற்குப் பிறிது தமிழில் ஓர் மறுமலர்ச்சியை முழுமையாகவே செய்தவர் அண்ணா தான் என்பதை, யாவரும் நன்கு அறிவர். இதையெல்லாம் உள்ளடக்கி, 'அவன் தந்த தமிழ் எடுத்து இவண் வந்தேன், இதுதான் உண்மை', என்று கலைஞர் கூறினார்.

மாணிக்கவாசகர், ஓரிடத்தில் கூறுமிடத்து; இறைவனை வணங்குவதற்கும் அவனுடைய அருள் வேண்டும் என்பதைக் குறிக்க 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்று குறிப்பிட்டார். அதுபோலவே இங்கே, கலைஞரும், அண்ணாவின் புகழ் பாடுவதற்கு அவன் தந்த தமிழ் எடுத்து வந்தேன் என்று கூறி, மாணிக்கவாசகரின் கருத்தோட்டத்தில் ஒன்றாகிறார். ஏனென்றால், மாணிக்கவாசகரும் முதல் அமைச்சராக இருந்தவர். கலைஞரும் முதல் அமைச்சராக இருந்தவர், இருப்பவர். ஆகவே ஒன்றிய கருத்து இருப்பதில் வியப்பில்லை.

### அண்ணா - தமிழுருவம்

இனி மேற்கொண்டு அண்ணாவை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அழைக்கின்றனர் என்பதைக் கூறவந்தவிடத்து,

**"தலைவரென்பார், தத்துவ மேதை என்பார்**
**நடிகர் என்பார், நாடக வேந்தர் என்பார்**
**சொல்லாற்றல் சுவை மிக்க எழுத்தாற்றல்**
**பெற்றார் என்பார்**
**மனிதரென்பார், மாணிக்கமென்பார் மாநிலத்து**
**அமைச்சரென்பார்**
**மனிதரென்பார், அருமொழிக் காவல் என்பார்**
**அரசியல் வாதி என்பார் – அத்தனையும்**
**தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர்**
**நெஞ்சத்து அன்பாலே**
**'அண்ணா' என்ற ஒரு சொல்லால்**
**அழைக்கட்டும் என்றே அவர் அன்னை**
**பெயரும் தந்தார்"**

– என்று குறிப்பிடுகிறார்.

இங்கே குறித்தவைகள் அனைத்திலும் தன்னிகரற்று விளங்கினார் என்றாலும், அனைவரும் ஒருமுகமாக, செல்லமாக, "அண்ணா" என்றே அழைத்தனர். இப்படி அழைப்பதற்கேற்ற விதத்தில் அவருடைய அன்னையும் பெயர் வைத்தார் என்று கூறுகிறார். அண்ணா என்று கூறிவிட்டால் அதற்குள் எல்லாப் பெயர்களும், எல்லாக் கருத்துக்களும், ஏன்! தமிழ் முழுவதும் அதனுள் அடங்கி விடும். தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். உயிரெழுத்து மெய்யெழுத்து, உயிர் மெய்யெழுத்து என்று. இந்த மூன்றும் சேர்ந்தது தான் தமிழ் மொழி. தமிழ் மொழியிலுள்ள, அனைத்து நூல்களும் இம்மூன்றிலேயே அடங்கும். தமிழ்ப் பிரிவான இயல், இசை, நாடகம் அதுவும் அதிலேயே அடங்கும். அதுபோலவே, "அ" என்ற உயிரெழுத்தையும் "ண்" என்ற மெய்யெழுத்தையும் "ணா" என்ற உயிர்மெய்யெழுத்தையும் வரிசையாகவே பெற்றுள்ள "அண்ணா" என்ற சொல்லைக் கூறின அளவிலேயே தமிழ்க் கடலென ஒலித்த அண்ணாதான் நம் கண்முன் வருகிறார். அகத்தியர் கடலை தன் கையால் முகந்து குடித்தே வற்றச் செய்தார் என்ற கதை நாட்டில் உண்டு. அது எந்த அளவிற்கு உண்மை என்பது யாவரும் அறிவர். ஆனால் தமிழ்க்கடலை முழுவதும் முகந்து உண்டவர் அண்ணா என்ற சொல்லிற்கு உரிமையுடையவர். ஏனென்றால் அந்தச் சொல்லிலேயே தமிழ் அடங்கிவிடுகிறதென்றால், அச்சொல்லிற்கு உரிமை படைத்தவர் செய்யும் செயலை நம் முன்னோரால் தனித்தனியே எடுத்து விளக்கிக் கொண்டிருக்க நமக்குப் போதிய புலமையும், தகுதியும் இல்லையென்று அனைவரும் "அண்ணா" என்றே அழைத்தனர். அதற்கேற்ப, அவர் அன்னை பெயரும் தந்தார் என்று வள்ளுவர் போல் சுருங்கக் கூறி. விரித்தால் இவ்வளவு பொருளையும் தரவல்ல இவ்வரிகளை, நம் கலைஞர் கூறி நம்மை எங்கெங்கோ அழைத்துச் செல்கிறார்.

### நெஞ்சை உலுக்கும் தற்குறிப்பேற்றம்

அதையடுத்து, நெஞ்சை அடித்துத் துவைத்துப் பிழிவதைப் போல சில வரிகள் கூறுகிறார்.

**"அண்ணனுக்கோர் சிலை**
**சென்னையிலே வைத்தபோது....**
**ஆள்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார்**
**ஆணையிடுகின்றார் எம் அண்ணா என்றிருந்தோம்**
**ஐயகோ! இன்னும்**
**ஓராண்டே வாழப்போகிறேன் என்று**
**அவர் ஓர் விரல் காட்டியது இன்றன்றோ புரிந்தது**

– என்று கூறுகிறார்.

இங்கே 'தற்குறிப்பேற்றணி' சிறப்பான முறையில் கவிச்சக்கரவர்த்திக் கம்பனும், வில்லிபுத்தூராழ்வாரும் கூறிய முறையில் அமைந்துள்ளது. அவர்கள் கூறிய தற்குறிப்பேற்றணி நம்முள்ளத்தை மகிழ்விக்கவே முடிகிறது.



### நயன திட்சை

ஆனால் நம் கலைஞர் கூறிய இந்தத் தற்குறிப்பேற்றணி நம்முடைய உள்ளங்களையே அழச் செய்து விடுகிறது.

**"உன் கண்ணொளியின் கதகதப்பில் வளர்ந்தோமே**
**என் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றிவிட்டாய்"**



மீன் தன் கண்ணால் பார்த்தே குஞ்சு பொரித்து விடும் என்று சொல்லுவார்கள். இதை ஆன்மீகத்தில் 'நயன தீட்சை' என்று கூறுவார்கள். கண்ணின் கடைப் பார்வையாலே அருள் செய்பவள் ஆதலின் இறைவிக்கு 'மீனாட்சி' என்று பெயர். அது போல் கண்ணின் கதகதப்பிலேயே தன் தம்பியர்களை அண்ணா வளர்த்தார் என்பதைக் குறிக்க கண்ணொளியின் கதகதப்பில் வளர்ந்தோம் என்று குறிக்கிறார். இது மீனின் தன்மையாதலின், அதற்கேற்ப, பின்னடியில், என் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றி விட்டாய் என்று கேட்பது நயம் வாய்ந்தது.

**நிழல் நீதான் என்றிருந்தோம் – நீ**
**கடல்**
**நிலத்துக்குள் நிழல் தேடப்போய்**
**விட்டாய்; நியாயந்தானா?**

– என்று கேட்கிறார்.

"தஞ்சை வாணன் கோவை" என்ற நூலின், தோழன், தலைவியைக் காணாத தலைவன் அடையும் வேதனையைக் கூறுமிடத்து, தலைவா! உலகிலுள்ள நீர் வெப்பமடைந்தால் அதை ஆற்றுவதற்கு "கடல் நீர் உளது" கடல் நீரே வெப்பமடைந்தால் என்ன செய்வது என்று கேட்கிறான். அதுபோல, அண்ணா, உன்னுடைய அன்பு நிழலில் அறிவு நிழலில் பாச நிழலில் நாங்கள் தங்கியிருந்தோம். அப்படியிருக்க, எங்களை வெப்பத்தில் தவிக்கவிட்டு, நீ நிழல் தேடப் போய் விட்டாயா? என்று கேட்பது நம்முள்ளத்தைப் பிழிந்து விடுகிறது.

**"நாத இசை கொட்டுகின்ற**
**நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்"**

அவருடைய உரைகளையெல்லாம் வெறும் எழுத்துக் கோர்வையாக நினையாது நாத இசையாகவே அனுபவித்தனர் என்று கூறுகிறார். எவ்வளவு வன்மையான நெஞ்சுடையவர்களும் இசையைக் கேட்ட அளவில் அதன் வயப்படுவர். அதுபோல் அண்ணாவின் பேச்சுசைக் கேட்டவுடனேயே, யாவரேயாயினும், அவர் வயப்படுவாராதலின் நாத இசை கொட்டுகின்ற நாவு" என்று புகழ்ந்துரைத்தார்.

எழுதுவதற்கு அவர் செய்ய வேண்டிய செயல்கள் வேறொன்றுமில்லை. சிந்தனை செய்து, இதைத்தான் எழுத வேண்டும் என்று நினைக்கக் கூடத் தேவையில்லை. விரல் அசைந்தாலே கருத்து மழை, பெய்யத் தொடங்கிவிடும் என்பதை விளக்க நம் கலைஞர்,

**"விரல் அசைத்து**
**எழுத்துலகில்**
**விந்தைகளைச்**
**செய்தாயே"**

– என்பதைக் குறிப்பிடுகிறார்.

அல்லலுற்று அரற்றிக் கதறியழும் போதும், அண்ணாவின் அறிவுரையே கலைஞருக்கு நினைவிற்கு வருகிறது. வந்ததும் குறிப்பிடுகிறார்,

**"எதையும் தாங்கும் இதயம்**
**வேண்டுமென்றாய்**
**இதையும் தாங்க ஏதண்ணா**
**எமக்கிதயம்"**

– என்று கேட்கிறார்.

ஏதண்ணா எனக்கிதயம் என்று கேட்கவில்லை. தமிழ்ச் சமுதாயம் முழுதையும் தன்னுள் அடக்கிக் கொண்டு கேட்டாராதலின் "ஏதண்ணா எமக்கிதயம்" என்று கூறினார்.

### கலைஞர் கேட்ட வரம்

இறுதியாக ஓர் வரம் கேட்கிறார். வரம் என்பது, தான் கேட்பதை, யாரிடம் கேட்கப்படுகிறதோ, அவரைத் தவிர வேறு யாராலும் நிறைவேற்ற முடியாத தன்மையுடையதாக இருக்க வேண்டும். அன்றி, கேட்கப்படுவது தன்னுடைய சுயநலத்திற்காக, இருக்கக் கூடாது. இந்த இரண்டு தன்மைகளும் அதில் அடங்கியிருக்க வேண்டும். இந்த இலக்கணம் முழுவதும் நிரம்பிய நிலையில் கவிச்சக்கரவர்த்தி, கம்பன் தன் காவியத்தில் கடைசியில், தசரதன் விண்ணில் தோன்றி இராமா! உனக்கு வேண்டும் வரம் கேள் தருகிறேன்

என்றான். இவ்வளவு பட்டும் தசரதனுக்கு இந்த வரம் கொடுக்கும் குணம் போகவில்லை. என்ன செய்வது? உயர்குடித் தோன்றல்லவா? தசரதன் கூறியவுடன் இராமன் கேட்கிறான், நன்றாக வரத்தின் இலக்கணத்தை உணர்ந்து கேட்கிறான், தன் பொருட்டு எதையும் கேட்க விரும்பாது, சாதுர்யமாகக் கேட்கிறான். தந்தையே! தாங்கள் தீயவள் என்று விலக்கப்பட்ட என் தெய்வமும் அத்தெய்வத்தின் மகனும் முறையே எனக்குத் தாயும், தம்பியும் ஆக வரம் தர வேண்டும் என்ற கேட்டான். இதை தசரதன் கொடுத்துவிட்டால், கைகேயியும் பரதனும் தசரதனுக்கு மீண்டும் மனைவியும் மகனுமாக மாறிவிடுவர் என்பதை வெகு நுட்பமாக இராமன் வாயிலாக, கம்பன் கேட்பது போல், கலைஞர் பெருமகனும் அண்ணாவிடம் வரம் வேண்டுகிறார்.

**"இருக்குமிடந்தேடியான் வரும் வரையில்**
**இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா**
**நான் வரும் போது கையோடு கொணர்ந்து**
**அஃதை**
**உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா"**
**என்று கூறி இந்த அளவில் இதை நிறுத்துகிறார்.**

இதயத்தை, கடனாகக் கேட்கவில்லை. ஏனென்றால், உலகியல் வழக்குப்படி கடன் என்றால் வட்டி போட்டுத்தர வேண்டும். அண்ணா இதயம் கோடிக்கணக்கான செல்வக்குவியலுக்குச் சமம் அதற்கு வட்டி போட்டுக் கொடுக்க தன்னாலும், தமிழகத்தாலும் இயலாதாதலின், கடனாக இதயத்தைக் கேட்காது இரவலாகக் கேட்டார்.

இரவலாகப் பெற்ற பொருளை வாங்கியவர் அதே நிலையில் எவ்விதமான பழுதும் ஏற்படா நிலையில் வைத்து, மீண்டும் திருப்பிக் கொடுப்பதுபோல், இவரும் நான் வரும்போது கையோடு கொணர்ந்து அஃதை உன் கால் மலரில் வைப்பேன் என்று கூறி நம்மை வியக்க வைப்பது மட்டுமல்லாது கண்ணீர் சிந்தும்படியும் வைத்து விடுகிறார்.

முத்தை முத்தோடு சேர்ப்பது போல், தங்கத்தைத் தங்கத்தோடு சேர்ப்பது போல், மலரை மலரோடு சேர்ப்பிக்கிறார். இக்கவிதையில் முதலில் அண்ணாவின் இதயத்தை பூவிதழின் மென்மையானது என்று கூறி, காலையும், மலருக்கு உவமை கூறி (கால் மலர்கள் வாடினும்) துவங்கியதற்கேற்ப, கவிதையின் இறுதியிலும் மலரினும் மென்மையான இதயத்தைக் கொணர்ந்து உன்கால் மலரில் வைப்பேன்" என்று நீண்ட நினைவாற்றலுடன் கவிதைக் கண்ணீரை நிறுத்த முயன்ற கலைஞர் மிகவும் பாராட்டுக்குரியர். இதயத்தை இரவலாகக் கேட்டது கூட அண்ணாவிற்குப் பிறகு தமிழகத்தை முதல்வராக இருந்து ஆட்சி செய்ய அண்ணா இதயம் இன்றியமையாதது என்பதைத் தெரிவிக்கவே இதயத்தை இரவலாகக் கேட்டார், என்ற பொருளும் அதனூடே மிளிரக் காணலாம்.

இதுகாறும் கூறியவற்றால் சில்வகையெழுத்தில், பல்வகைப் பொருளைத் தெரிந்து, தெரிந்துரைப்பதே கவிதையாகும். அக்கலையில் டாக்டர் கலைஞர், தன்னிகரற்ற உணர்வுப் பிழம்பாக, விளங்குகிறார் தன் கவிதைகளைப் படிப்பவர்களை உணர்ச்சிப் பிழம்பாக்குகிறார். வீரத்தின் வரிகளைப் படிக்கும் போதோ, கோழை கூட வீரனாகிறான். கூனன் நிமிர்ந்து பார்க்கிறான். பேடிகூட கையிலே வாளேந்துகிறான். ஒன்பான் சுவைகளில் எச்சுவை பற்றி கலைஞர் குறிப்பிட்டாலும் கேட்பவர், அச்சுவையாகவே மாறிவிடுவர் என்பது திண்ணம். அவருடைய உவமைகளோ! தனித்த நிலையில் நின்று, சங்கநூல்கள் கூறுகின்ற உவமைகளைப் போல் சில இடங்களில் அதை விஞ்சுகின்ற நிலையில் அமைவதுண்டு. அவருடைய வாதத்திறமை, எழுத்திற்கு எழுத்து, சொல்லிற்குச் சொல், பொருளுக்குப் பொருள் ஒத்த நிலையில் நின்று போரிட்டு வெற்றி வாகை சூடும் தன்மையது.

## ''மனோகரா'' திரைப்படத்தில் கலைஞர் சொல்லாட்சி

நாடகப் பேராசிரியர் சம்பந்த முதலியார் இயற்றிய நாடகமாம் 'மனோகரா' திரைப்படவுருவம் பெற்றது. அதற்கு கலைஞர் அவர்கள் வசனம் எழுதியதன் மூலம், தனக்கும், ஏன்? சம்பந்த முதலியாருக்கும் கூட அழியாத புகழை அடையச்செய்தார். கதையின் கருப்பொருளை நன்றாக மனதில் வாங்கிக் கொண்டு, அதில் நடமாடும் பாத்திரத் தன்மைகளை, சிக்கறத் தெரிந்து கொண்டு வியத்தலே இப்பகுதியின் நோக்கமாகும்.

முதற் காட்சியில் குகையின் உட்புறம் அரூபம் ஒரு சிலையைச் செதுக்கிக் கொண்டிருக்கிறது. அப்போது பெரியவர் பேசும் வசனம் வருமாறு :

**"வெற்றி – வேதனையைப் பொருட்படுத்தாதவனுக்குக் கிடைத்த வெகுமானம், அநேக வருஷங்களாகப் பட்ட பாட்டிற்குச் சரியான அறுவடை. இனி நினைத்ததையெல்லாம் செய்து முடிப்பேன். கேசரிவர்மா, கவலைகள் படிந்த உன் கண்களிலே, களிப்புப் பொங்கட்டும். துயர மேகங்கள் உன்னை விட்டுத் தூர ஓடட்டும். தொல்லைகள் இனி நமக்கு தூசுகள்"** என்பது அவ்வசனம்.

இதில் முதலிலுள்ள சொல் வெற்றி என்பது. கற்றறி புலவரும், கொஞ்சு மொழிக் கவிஞரும், நூலியற்றும் போதும், கவிதையாக்கும் போதும் முட்டின்றி முடிவான் பொருட்டு மங்கலச் சொற்களை எழுத்தோதுதல் நன்மரமாதலின், அதையே தானும் மேற்கொண்டொழுகினேன் என்றறிவுறுத்தற்கு மங்கலச் சொல்லால் ''வெற்றி'' என்பதை முதலில் எடுத்தாண்டார். இதனை இவ்வாறின்றி கதையில் வரும் பெரியவர் தான் அரிதின் முயன்று பெற்ற வெற்றியைக் குறிப்பிட அச்சொல் கூறினார் என்றுரைப்பினும் அதுவும் பொருத்தமாம். மேலும்,



வெற்றி என்ற சொல்லிற்கு இலக்கணமும், அங்கே காணக்கிடக்கிறது. வெற்றியென்பது என்னவென்றால், அது வேதனையைப் பொருட்படுத்தாதவனுக்குக் கிடைத்த வெகுமானம் என்று கூறி, வெற்றியின் நல்லிணக்கணம் தெரிவித்துரைத்தார்.

இனி வேதனையைப் பொருட்படுத்தாதவனுக்குக் கிடைக்கும் வெகுமானம் என்று எதிர்காலத்தால் கூறாது கிடைத்த வெகுமானம் என்று இறந்த காலத்தாற் கூறியது, வேதனையைப் பொருட்படுத்தாதவன், துன்பங்களை ஏற்பவன், வெற்றியடைதல் ஒரு தலையாதலின் துணிந்து, எவ்வித ஐயமும் கொள்ளாது, இறந்த காலத்திற் கூறிய கலைஞரின் இலக்கண அறிவு நாம் கண்டு வியத்தற்குரியதே.

அடுத்து வரும் வசனம் வருமாறு :

"அநேக வருஷங்களாக பட்ட பாட்டிற்குச் சரியான அறுவடை" என்பது. பாடுபட வேண்டிய துறை உழவுத்துறையே என்பதைக் குறிக்க எண்ணிய கலைஞர் அறுவடை என்ற சொல்லை ஈண்டு கையாண்டார். தான் கருதிய உட்கருத்தைக் குறிப்பினால், விளக்கிய நயத்தை அறுவடை என்ற சொல்லில் நாம் காணலாம்.

இதையடுத்து வரும் வசனம் வருமாறு : கேசரிவர்மா, கவலைகள் படிந்த உன் கண்களிலே களிப்புப் பொங்கட்டும், துயர மேகங்கள் உன்னைவிட்டுத் தூர ஓடட்டும். தொல்லைகள் இனி நமக்கு தூசுகள் என்ற வசனத்தைக் காண்போம்.

இங்கே நாம் காண வேண்டியது "கண்ணிற் சிறந்தவுறுப்பில்லை என்பர் ஆன்றோர். ஒருவனுடைய வாழ்க்கையை விளக்குவதற்கு வேறு கருவி தேவையில்லை. அவனுடைய கண்களே போதும். இதுபற்றியே, பகையும் கேண்மையும் கண்ணுரைக்கும் என்றனர் ஆன்றோர். அக்கருத்தையே கலைஞர் அவர்களும் ஏற்று, கேசரிவர்மனின் துன்ப வாழ்க்கை முடிந்து இன்ப வாழ்க்கைத் துவங்கவிருப்பதை, அவன் கண்களிலேயே வைத்து விளக்கினார்.

கதையில் கேசரிவர்மனுக்கு துயரம் நீங்கினாலும் அடுத்தடுத்து, துயரத்தின் கீழேயுள்ள கட்டம் தொல்லைகள் நீங்கவில்லை. அதைக் குறிக்க வந்த கலைஞர், தொல்லைகள் இனி நமக்கு தூசுகள் என்று கூறினார். தொல்லைகள் இருப்பினும் அதனைத் தூசாகக் கருத வேண்டும். துவண்டுவிடக் கூடாது என்றதோர் அறிவுரையையும் நமக்குப் பாடமாக்குகிறார்.

அதையடுத்து வரும் வசனம் : (கேசரிவர்மன் கூறுவது)

**"சிலைதான், ஏன் செதுக்கினேன்? இவளை சித்திரவதை செய்வதற்கு ஒத்திகை பார்க்க. வசந்தசேனை உன் விழியில் வேல் செருகுவேன். கூந்தலுக்குத் தீ மூட்டுவேன். கொவ்வை உதடுகள், அவைகளில் கூரிய ஊசிகளைக் குத்துவேன். கன்னாடிக் கன்னம்.. ஹ ஹ ஹ காட்டாரியால் கிழிப்பேன் ....** " என்பது அவ்வசனம்.

சித்திரவதை செய்யப்போகும் ஒருவன் அதை ஒத்திகை பார்ப்பதற்கு நியாயமில்லை. ஆனால், இங்கே, கேசரிவர்மனால் சித்திரவதையாகப் போகும் வசந்தசேனை, மன்னனின் காமக்கிழத்தியாக பட்டத்து தேவியைக் காட்டிலும் அரசனின் உள்ளங்கவர் காமவல்லியாகக் கொலு வீற்றிருக்கிறாள். அவளை நெருங்குவதே அரிதான செயல். அவ்வாறிருக்க தன்னந் தனியனாய், தன்னோடு இருக்கும் ஒரு சிலரைக் கொண்டு பழிவாங்க நினைத்த கேசரிவர்மன், அதற்கேற்ற திட்டங்கள் தீட்டி வந்தான். அத்திட்டத்தின் பயன் காண இன்னும் சில காலமே அவன் காத்திருக்க வேண்டியவனாதலின் அதற்கு முன்னோடியாக ஒத்திகை பார்த்தான் என்று நமக்குத் தெரிவிக்க ஒத்திகை என்ற சொல்லை கலைஞர் கையாண்டார். பழிவாங்கும் எண்ணம் அவனை உலுக்க, தற்காலிகமாகவேனும் சிலையின் மூலம் பழி வாங்குதலைச் செய்தான் என்று கூறினாலும், அதற்கும் ஒத்திகை பார்த்தான் என்ற சொல் இடம் அளிப்பதாயிற்று.

துயரம் என்பது நிலைத்ததோர் இடத்திலேயே நின்று துன்பம் பயப்பதன் றாதலின், ஓரிடத்திலேயே நில்லாத தன்மை பெற்ற மேகங்களைத் துயரத்திற்கு உவமை கூறினார். இது பற்றியே, பாவேந்தராம், பாரதிதாசனாரும், "ஆரியத்தால் ஒளியிழந்து தமிழைப்போல் அழகிழந்தாய் உனையடைந்த மேகத்தாலே" என்று கூறிப் போந்தார்.

### மூன்று நா கொண்டவன்

*கலைஞர் தலைமை ஏற்று நடந்த கவியரங்கில் கவிஞர் மு.மேத்தா கலைஞரைப் பாராட்டிக் கவிதை படிக்கும் போது இரு நா கொண்டோனே (பேனா, நாக்கு) வாழ்க எனப் பாடினார். அதற்கு கலைஞர் நான் மூன்று நா கொண்டவன் இன்னொன்று "அண்ணா" எனக் கூறினார்.*

அதையடுத்துக் கூறுகிறான், **"உன் விழியில் வேல் செருகுவேன், கூந்தலுக்குத் தீ மூட்டுவேன்"** என்று.

பொதுவாகவே, ஏன் சிறப்பாகவும் விழியை 'வேல்விழி' எனக் கூறுவர். மனதைக் குத்திக் காயப் படுத்தும் தன்மை அதன் பாலுள்ள காரணத்தால்.

எந்தக் கண் வேலால் தன் மனத்தை குத்திப் புண்ணாக்கி,

அப்புண்ணை தன் மற்றொரு அருட் கண்ணால் ஆற்றாது போனாளோ? அந்தப் பொல்லாங்கை நினைத்தும், ஒன்றையழிக்க நினைத்தால் அதன் இனத்தாலேயே அதையழித்தல் சிறப்பு என்று நினைத்தும் "வேல் விழியில் வேல் செருகுவேன்" என்றார் கலைஞர். "கூந்தலுக்குத் தீ மூட்டுவேன்" மகளிரிடம் காம எண்ணத்தை மிகுதியும் தோற்றுவிப்பது அவர்களுடைய அளகாபரமே. ஆன காரணம் பற்றியே கூந்தல் அதிகமில்லாத மாதர்களும் செயற்கைக் கூந்தல் புனைந்து மகிழ்வாராயினர். கேசரிவர்மனாகிய தானும், மன்னன் புருஷோத்தமனும், வசந்தசேனையிடம் மயங்கியதற்குப் பெரும்பங்கு பூண்ட, அவளின் கூந்தலே அவனுக்கு நினைவு வந்தது.

அதை தீ மூட்டி முடை நாற்றம் வரச் செய்துவிட்டால், அது ஒன்றே சாலும் என்று நினைத்து கூந்தலுக்கு தீ மூட்டுவேன் என்றான். கம்பன் தன் காவியத்தில், **அனுமன், தன் வாலில் வைத்த தீயை இலங்கையில் வைத்தபோது** எங்கெங்கு புகை நாற்றம் வீசியது என்று குறிக்குமிடத்து, இலங்கைப் பெண்கள் கூந்தலிலும் புகை நாற்றம் வீசியது என்று குறிப்பிடுகின்றார்.

தோல்வி மேல் தோல்வி கண்ட இலங்கை வீரர்கள், தன் மனைவியரிடமாவது சிறிது இன்பம் காண்போம், என்று செல்ல, கூந்தலும் புகை நாற்றம் வீச, நினைத்த இன்பம் இழந்து நின்றார்கள் என்பதை குறிக்க கூந்தலில் தீயிட்ட நிகழ்ச்சியை கம்பன் எடுத்தோதினான்.

அதுபோலவே, கூந்தலுக்குத் தீ மூட்டுவேன் என்ற சொற்களைக் கூறி, அதன் மூலம் சிறந்த நயத்தைப் புலப்படுத்தியதால், நம் கலைஞரும் காவியக் கலைஞரான கம்பனோடு ஒத்த நிலையில் நிற்கிறார் என்று கூறல் சாலப் பொருந்தும்.

***மனோகரன் :***

**"அம்மா – அம்மா – துள்ளிவரும் வேல், ஆவேசத்தை அள்ளிவரும் வாள் அவைகளை யெல்லாம் தடுத்திருக்கிறேன். அவைகளை விடப் பெரியவளா? என்னை நகையாடிய இந்தக் கள்ளி. ஆனால் அவளைத் தான் எதிர்க்க முடியாமல் ஓடி வந்திருக்கிறேன். யாராலம்மா? தங்களால் – தங்கள் கட்டளையால்– சத்தியத்தால்."**

இங்கே மிகமிக வேகமாக வரும் வேலைக் குறிக்க துள்ளிவரும் வேல் என்றார். போர்க்களத்தில் உறையினின்று வெளிவரும் வாளாதலின் ஆவேசத்தை அள்ளி வரும் வாள் என்றார். மேலும், வாளும் இவரிடம் அடைமொழி பெறும் மாட்சி நினைந்து நினைந்து வியக்கும் அடைமொழியாகும்.

இத்தகைய வேலையும், வாளையும் தடுக்கும் ஆற்றல் பெற்ற மனோகரன் வஞ்சகி வசந்தசேனையை பழி வாங்காது, வந்ததற்குக் காரணம் தாயிடம் செய்த சத்தியம் என்று காரணம் கூறியதால் ஈண்டு, எவ்வளவு இக்கட்டான நிலையிலும் தாய் சொல் மீறாதவன் என்பதைக்காட்டி, இவனுக்கு இணையாக இராமன் என்பவனும் முன் இருந்தான் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறார்.

***சத்தியசீலர் :***

**"மனோகரா! நீ சபைக்குச் செல்வது காரணம் கேட்க அதற்கு எப்படிச் சென்றால் என்ன? விலங்கு கைகளுக்கே தவிர வாய்க்கு அல்லவே!**

இங்கு சத்தியசீலர், மனோகரனிடம் தாயின் கட்டளையை மீற வேண்டாம் என்பதைக் குறிப்பால் உணர்த்தி, ஆனால் அதே நேரத்தில் மனோகரனின் ஆத்திரத்தை எல்லாம் நன்கு உணர்ந்து உன் வாய்தீர எது எது வேண்டுமானாலும் பேசி அரசனுக்கு அறிவுறுத்து" என்பதையும் தெரிவிக்க விலங்கு கைகளுக்கே தவிர, வாய்க்கு அல்லவே என்று கூறிய நயம் பாராட்டுதற்குரியது. இதன் மூலம் அமைச்சனுடைய சாதுர்யத்தையும் தெற்றென விளக்குகிறார்.

*அரசர் :* **"மனோகரா உன்னை எதற்காக அழைத்திருக்கிறேன் தெரியுமா?"**

*மனோகரன் :* **"திருத்திக் கொள்ளுங்கள். தயவு செய்து, அழைத்து வரவில்லை. இழுத்து வரச் செய்திருக்கிறீர்கள்."**

*அரசர் :* **"என் கட்டளையைத் தெரிந்து கொண்டிருப்பாய் நீ".**

*மனோகரன் :* **"கட்டளையா இது? கரைகாண முடியாத ஆசை. பொன்னும் மணியும், மின்னும் வைரமும், பூட்டி மகிழ்ந்து கண்ணே! முத்தே! தமிழ்ப்பெண்ணே, என்றெல்லாம் குலவிக் கொஞ்சி, தந்தத்தாலான கட்டிலிலே சந்தனத் தொட்டிலிலே, வீரனே, என் விழி நிறைந்தவனே, தீரர் வழி வந்தவனே, என்று யாரைச் சீராட்டிப் பாராட்டிச் சொன்னீர்களோ, அவனை, அந்த மனோகரனை சங்கிலியால் பிணைத்து சபை நடுவே நிறுத்தி சந்தோஷம் கொண்டாட வேண்டும் என்ற தங்கள் தனியாத ஆசைக்குப் பெயர் கட்டளையா, தந்தையே!"**

இங்கு, மனோகரன் தந்தையிடம் மனம்விட்டுப் பேசும் கட்டம் இதுவே, முதலாதலின், தன் தந்தையும் அரசனுமான புருஷோத்தமன் முதலிலிருந்தே தவறுடையவன் என்பதைக் காட்ட அரசன் கூறிய முதல் சொல்லிலேயே தவறு இருக்கக் கண்டு, அதைச் சுட்டிக் காட்டுவதற்காக திருத்திக் கொள்ளுங்கள் தயவு செய்து, அழைத்து வரவில்லை, இழுத்து வரச்செய்திருக்கிறீர்கள் என்று கூறியதன் மூலம் தவறுடைய நெஞ்சத்தினன் பேசும் சொற்களும் தவறுடையனவே என்பதனையும், இவ்வசனத்தின் மூலம் நமக்கு அறிவுறுத்துகிறார்.

*மனோகரன் :* **"கொலை செய்தேனா? கொள்ளை அடித்தேனா? நாட்டைக் கவிழ்க்கும் குள்ளநரி வேலை நான் செய்தேனா?"**

கூடாதார் வளநாட்டை கொள்ளையிட்டுச் சிதைத்தலையும், நேராதார் பெருநாட்டை எரியூட்டி அழித்தலையும் உழபுலவஞ்சி, மழபுலவஞ்சி என்று புறப்பொருள் கூறும். அதனை உணர்ந்த நம் கலைஞர் அக்கருத்தை உள்ளடக்கி, கொலை செய்தேனா? கொள்ளையடித்தேனா? என்று மனோகரன் வாயிலாகக் கேட்கிறார்.

*மனோகரன் :* **"அரை நொடியென்ன? அதற்குள்ளாகவே, ஆனால் யாரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் தெரியுமா? கோமளவல்லி, கோமேதக சிலை – கூவும் குயில் – குதிக்கும் மான் என்றெல்லாம் உம்மால் புகழப்படும் இந்தக் கோணல் புத்திக்காரியின் கொள்ளிக் கண்களை?– கொடிய நாக்கை?–என் கூர்வாளுக்கு இரையாக தந்துவிட்டு அதை எதிர்த்தால் உம்மையும் உமக்குப் பக்கத்துணை வந்தால் அந்தப் பட்டாளத்தையும், பிணமாக்கிவிட்டு சூன்யக்காரிக்கு ஆலவட்டம் சுற்றியவர்களைச் சுடுகாட்டுக்கு அனுப்பிவிட்டேன் என்று சுழலும் வாளுடன், சூழும் புகழுடன் என் அன்னையிடம் ஓடி மன்னிப்பு கேட்க வேண்டும். நிறைவேற்றட்டுமா? அந்த உத்தரவை .... தயார் தானா? தயார் தானா?**

**ஏன் நடுங்க வேண்டும் ஹ.... ஹ.... ஹ... புருஷோத்தமர் போரிலே புலி ?– வாள் எடுத்தால் வையம் நடுங்கும். அவரா இப்படிப் பயப்படுகிறார். பாவம் வேலின் கூர்மையை சோதித்த விரல்கள் வஞ்சகியின் விரலை அல்லவா ரசித்துக் கொண்டிருக்கின்றன. பாசறையைப் பார்வையிட்ட கண்கள் இந்தப் பாம்பாட்டத்தின் பாவத்தில் அல்லவா லயித்துக் கிடக்கின்றன. கோட்டைக் கொத்தளங்களை நினைத்துக் கிடந்த இந்த நெஞ்சம், இந்தக் குட்டிச்சுவரின் நிழலில் அல்லவா? குளிர்ச்சி காணுகிறது**

– என்று நீண்ட வசனம் பேசுகிறார்.

மன்னிப்பு கேட்க வேண்டும் என்ற சொற்களைக் கேள்வியுற்றதும், மனோகரனின் சினம் எரிமலையென ஆகி, அதிலிருந்து உமிழும், நெருப்புத் துண்டுகளைப் போன்ற சொற்களை உதிர்க்கின்றான். அப்போது அவன் அடைந்த நிலை சொல்லுந்தரத்தன்று. வீரத்தின் எல்லைக் கோட்டிற்கே சென்று செயலாற்றத் துடிக்கின்றான். அந்நிலையில் அவன் செயல்பட்டிருந்தால் எஞ்சியவர்கள் யாரும் இல்லாமல், அனைவரையும் கொன்று குவித்து, தான் ஒருவனே தனித்து நிற்பான். அத்தகைய மனோகரன், தன் அன்னையிடம் செய்த செயலுக்கு மன்னிப்பு கேட்கத் தயாரானான்.

இத்தகைய மாபெரும் வீரனை, குணாளனை தன்னந்தனியாளாக தாயிடம் அனுப்பிவைக்க நம்முடைய கலைஞருக்கு மனம் வரவில்லை.

கம்பன் காவியத்தில் சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமனை, கைகேயி 'தன்பால் அழைத்து அரசன் சொன்னதாகச் சொல்லி கோசல நாட்டை தன் மகனுக்கு ஆக்கி இராமனைக் காடு செல்லக் கூறி அனுப்பி வைத்தாள். பட்டம் இழந்த இராமன், அப்பொழுது ஓர் எளிய குடிமகனாவான். அவ்வேளையில் அவனுக்கு, மெய்க்காவலில்லை. புடைசூழ் பரிவாரம் இல்லை – அந்நிலையில் தன்னந் தனியாளாய் அப்பெரு வீரனை ?– குணாளனை அனுப்பிவைக்க கவிச்சக்கரவர்த்திக்கு மனம் இல்லை. ஆகவே இராமன் எப்படிச் சென்றான் என்பதைக் கூறுமிடத்து,

"இழைக்கின்ற விதி முன் செல்ல, தருமம் பின் இரங்கியேங்க அவன் சென்றான்" என்று கூறுகிறார். இராமனுக்கு முன் விதி சென்றதாகவும், அவன் பின்னே தருமமானது, இந்த அறச்செல்வன் சென்றுவிட்டால், நமக்கு இனி வேலை இல்லை என்று ஏங்குமாப் போல் அவன் பின்னே இரங்கிச் சென்றதாம் என்று நயம்படக் கூறி தன் கவித்திறனைக் காட்டினார் கவிச் சக்கரவர்த்தி.

அதுபோலவே, பெருவீரனும் குணக்குன்றுமாகிய மனோகரனை தனியாக அனுப்ப மனமில்லாத கலைஞர், சுழலும் வாளுடன், சூழும் புகழுடன் அன்னையிடம் ஓடி மன்னிப்பு கேட்பேன் என்று கூறியதனால், கவிச் சக்கரவர்த்தித் திறனுடன் நம் கலைஞருடைய திறனும் ஒன்றாகியது.

*மனோகரன் :* **"ஓடும் – புறநானூற்றின் பெருமையை மறைக்க வந்த புழுதிக் காற்றே ஓடும். கால் பிடரியில் இடிபட ஓடும். அஞ்சியோடும் வேகத்திற்கு இதைவிடச் சிறந்த சொற்கள் இல்லையாதலின் கால் பிடரியில், இடிபட ஓடும் என்றார்.**

**"சித்து வேலைக்காரியின் ரத்தத்தை மொண்டு உமக்கு அபிஷேகம் செய்விக்கிறேன். இந்த நாசகாரியின் நரம்புகளால் உமக்கு மாலை சூட்டுகிறேன். முல்லைச் சிரிப்பென புகழ்வீரே, மோக போதையில் அந்தப் பல்லையெடுத்து உமக்கு அர்ச்சனை செய்கின்றேன்.**

கவிச்சக்கரவர்த்தி செயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியில் காளிதேவிக்கு அபிஷேகம் செய்யும் காட்சியை கலைஞர் பழுதற மனதில் வாங்கிக் கொண்டு அதற்குச் சொல் வடிவு கொடுத்து நம்மை ஈண்டு இன்புறுத்துகிறார்.

*வசந்தசேனை :* **"எப்படி மாறும். இந்திரனுக்காக படைக்கப்பட்ட அகல்யா – சந்திரனுக்காகப் படைக்கப்பட்ட தாரை – புருஷோத்தமனுக்காகப் படைக்கப்பட்ட வசந்தா".**

இங்கே தம்மை அகல்யாவுடனும், தாரையுடனும் ஒப்பிட்டுக் கூறியது, தானும் அவர்களைப் போல் எச்சில் பட்டபெண் என்பதைத் தெரிவிப்பதற்காக இவ்வாறு கூறினார்.

*பத்மாவதி* : **"நிறுத்து. பல ஆண்டு காலம் என் பர்த்தாவை உன்னுடையவராக்கிக் கொண்டு என் வாழ்வை நிலவில்லா வானமாக்கினாய் - பொறுத்துக் கொண்டேன்",**



இங்கே தன்னுடைய வாழ்வை வானமாகவும், கணவன் புருஷோத்தமனை நிலவாகவும் கூறுகிறாள் பத்மாவதி. பொதுவாக, ஆடவன் தான், பெண்ணைப் பார்த்து, நீ தான் நிலவு, நீயில்லையெனில் என் வாழ்வு, இருண்டு விடும்" என்று கூறக் கேட்டிருக்கிறோம். இங்கே பத்மாவதி, அதை அப்படியே மாற்றிக் கூறுகிறாள். இதிலிருந்து ஒரு பெண்ணிற்கு தன் கணவன் தான் நிலவாகும் என்பதையும், அவன் இல்லையென்றால் வாழ்வில் ஒளியில்லை என்பதையும், தனக்குக் கணவன், இருந்தும் இல்லாதவளாக இருந்தேன் என்பதையும், அத்துன்பத்தையும் என் கணவனின் நன்மைக்காகவே பொறுத்துக் கொண்டேன் என்பதையும் தெரிவிக்க நிலவில்லாத வானமாக தான் இருந்ததாகக் கூறினாள். மேலும் சந்திரனைப் புராணக் கூற்றுப்படி பார்த்தாலும், அவன் ஒரு ஆண் மகனே! என்பதையும், அவனைப் பெண்களின் அழகிற்கு உவமை கூறுதல் சிறந்ததன்று என்பதையும், ஆண் மகனை ஆண்மகனுக்கே உவமை கூறல் வேண்டும் என்பதையும் டாக்டர் கலைஞர் அவர்கள் மேற்கூறிய தன் உவமையின் மூலம் நமக்குத் தெரிவிக்கிறார். இது போன்று பண்டு தொட்டு கூறி வந்த மரபை மாற்றிக் கூறி புதுமையான ஆனால் மிகச் சரியான பொருள் ஒன்றைக் கவிச் சக்கரவர்த்திக் கம்பனும், ஓரிடத்தில் கூறுகிறார். அது வருமாறு :

"புறநானூற்றுப் புலவர் உட்பட அரசனை உயிர் என்றும், மக்களை உடல் என்றுமே கூறிச் சென்றனர். "மன்னன் உயிர்த்தே மலர் தலையுலகம்" என்ற அடியை நோக்கவும், ஏனைய எல்லாப் புலவர்களும், அரசனை உயிர் என்றே கூறுகின்றனர். ஆனால் கம்பன் மட்டும், இந்த மரபை மாற்றியமைக்கிறார். "தசரதனைக் குறிக்குமிடத்து, உயிரெல்லாம் உறைவதோர் உடம்புமாயினான்" என்று கூறுகிறார்.

இவ்விதம் குறித்ததனால் ஏற்பட்ட பயன் என்ன என்று பார்த்தால் மிகச் சிறந்த பயன் ஏற்பட்டது. அரசனை உயிர் என்று கூறினால், உயிர் தன் விருப்பப்படியே, மக்களை ஆட்டிப் படைக்கலாம் என்ற பொருள் ஏற்படுத்துகிறது. அப்போது அந்த அரசன் சர்வாதிகாரியாக விளங்குகின்றான் என்ற பொருள் ஏற்படுகிறது.

ஆனால் அரசனை உடல் என்றும், மக்களை உயிர் என்றும் மாற்றிக் கூறியதனால் உயிர்களாகிய மக்கள் தான் அரசனை இயக்குகிறார்கள் என்ற பொருள் ஏற்பட்டு, அதனால் அரசன் மக்களின் விருப்பத்திற்கேற்றபடி இயங்குகிறார் என்றதனால் அந்த அரசன் இப்போது, சர்வாதிகாரியாக, முடி மன்னனாக இல்லாது, மக்களரசனாக, குடியரசுத் தலைவனாக மாறி விடுகிறார்.

எவ்வளவு பெரிய மாற்றத்தைத் தன் சொல்லாட்சியால், கம்பன் எப்படி ஏற்படுத்தினானோ! அதற்கு எள்ளளவும் குறையாத மாற்றத்தை, புதுப்பொருளை, நம் கலைஞர் தன் உவமையின் மூலம் மாற்றிக் காட்டினார் என்பதை அறிஞருலகம், சிந்தித்துப் போற்றிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

*பத்மாவதி* : **"ஏன் சிரிக்கிறீர்கள்? செவ்வாழைத் தோட்டத்திலே குதித்தாடும் குரங்குகளே! மங்கை உருவில் – மகான் உருவில், இந்த மண்ணை வளைக்க வந்த மகா பாதகர்களே! இப்படிச் சிரித்தவர்கள் வாழ்ந்ததில்லை. அழுதவர் கெட்டதில்லை என்று ஜெகம் சொல்லும் சரித்திரத்தை மறந்தவர்களே!"**

இந்த இடத்தில் தன் சோழ நாட்டை வெறும் வாழைத் தோட்டம் என்று கூறாது, செவ்வாழைத் தோட்டம் என்று கூறினார். வாழையினங்களிலே சிறந்தது செவ்வாழையாதலின், செவ்வாழைத் தோட்டம் என்றார். ஆன காரணம் பற்றியே பேரறிஞர் அண்ணாவும் சிறந்ததோர் சிறு கதையொன்றையெழுதி, அதற்குச் 'செவ்வாழை' என்று தலைப்பிட்டு மகிழ்வாராயினர். அதுபோல் சிறந்த நாடாதலின் சோழநாட்டை, செவவாழைத் தோட்டம் என்று கூறினார்.

அங்கேயிருக்கின்ற குரங்குகள் என்று கூறாது, குரங்குகளின் இயல்பை சார்த்தி குதித்தாடும் குரங்குகள் என்றார். ஒரு பொருளைக் கூறுமிடத்து, அதனியல்பையும் ஒருசேரக் கூறுவது சங்கப்புலவரின் இயல்பு. சங்கப் பாடலில் வெறும் யானையென்னாது, 'ஆடியல் யானை' என்பார். யானையின் இயல்பு எப்போதும் ஆடிக்கொண்டேயிருப்பது. அதை விளக்க "ஆடியல் யானை" என்றார். அதுபோல் 'பவளக் கூர்வாய்', 'செங்கால் நாராய்' என்பார் மற்றொரு புலவர். பலர் புகழ் ஞாயிறு என்பார் நக்கீரர். புகழ்ச்சியாயினும், இகழ்ச்சியாயினும் பொருளைக் கூறுமிடத்து அதன் சிறப்பியல்புகளைச் சேர்த்து கூறுதல் வலிமையுடைத்தாதலின், நம் கலைஞரும் வெறும் குரங்கென்னாது, குதித்தாடும் குரங்குகளே! என்று அடை கொடுத்தார்.

இனி, இப்படிச் சிரித்தவர் வாழ்ந்ததில்லை. அழுதவர் கெட்டதில்லை என்று கூறுகிறார்.

சிரிக்க வேண்டும் – நன்றாகச் சிரிக்க வேண்டும். அது நீண்ட நாள் ஒருவனை வாழ வைக்கும் என்று மருத்துவக் கலைஞர்கள் கூறி வருகிறார்கள். நம்முடைய கலைவாணர் அந்த உத்தியைக் கண்டுதான், எல்லோரையும் தன்னால் இயன்ற அளவு சிரிக்க வைத்துப் பெரும் புகழும் பெருந் தியாகமும் செய்து மறைந்தார்கள். இவ்வாறிருக்க சிரித்தவர் வாழ்ந்ததில்லை என்று கூறினால் அது மாறு கொளக் கூறியதாகாதோ எனில், இல்லை. கலைஞர் சிரித்தவர் வாழ்ந்ததில்லை என்று தனியாகக் கூறாது, இப்படிச் சிரித்தவர் என்று சேர்த்தே கூறுகிறார். 'இப்படி' என்பது அக்காட்சியில் உக்கிரசேனனும், வசந்தசேனையும் சிரிக்கும் பெருஞ்சிரிப்பான ஆணவச் சிரிப்பை எடுத்துக் காட்டியது. ஆகவே சிரிப்பென்பது ஈண்டு ஆணவச் சிரிப்பையுணர்த்தி நின்றது.

'அழுதவர் கெட்டதில்லை' என்பது அடுத்த வசனம், அழுகையென்றாலே, நல்லவர், பிறரால் துன்பப்படும் போது ஏற்படும் நிலையே அழுகையாகும். ஆகவே தான் திருவள்ளுவர், அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படையென்றார். ஆகவே அழுகை என்பது நல்லவர்கள் பிறரால் துன்பப்படும் பொழுது கண்ணீர் விடுகின்றமைக்கே அழுகை என்று பொருள். அவ்வழுகையே செல்வத்தைத் தேய்க்கும் படையாகி அழித்துவிடும் என்பதற்கேற்ப இங்கும், பத்மாவதி, மனோகரன், விஜயா ஆகியோரின் அழுகைக் கண்ணீரே படையாக மாற வசந்தசேனையும், உக்கிரசேனனையும் அழிந்து, பத்மாவதி, மனோகரன், விஜயா இவர்களோடு தொடர்புடைய புருஷோத்தமன் ஆகியோரை வாழ வைக்கப் போகிறது என்பதைக் கூற, 'அழுதவர் கெட்டதில்லை' என்ற வாசகத்தை நம் கலைஞர் கூறினார்.

*வசந்தன்* : **(வசந்தி மனோகரனின் மீது வீசிய கட்டாரி வசந்தன் மீது பாய்கிறது. அப்போது) "அண்ணா! இந்தப் பாவி வீசிய கட்டாரி உன் மீது பட்டிருந்தால் நீ எவ்வளவு வலியோடு கஷ்டப்படுவாய் என்பதை நான் உணருகிறேன். நீ வாழ வேண்டும் அண்ணா! – அண்ணா! நீ தான் நாட்டை ஆள வேண்டும்! நான் சாக வேண்டும்" என்று கூறி வசந்தன் சாகிறான்.**

இவ்வசந்தன் மூலம் தன் தலைவர் பேரறிஞர் அண்ணாவின் ஆட்சி தான் எதிர்காலத்தில் வரப்போகிறது! வரவேண்டும், என்ற தன்னுடைய அழிவில்லாத எண்ணத்தை வசந்தன், பாத்திரப் படைப்பின் மூலம் கலைஞர் நிலைநிறுத்துகிறார். சிறு இடம் கிடைத்தாலும் தன் பிரச்சாரத்தைத் துவக்க கலைஞர் எப்போதுமே தயாராக இருந்தார் என்பதை நாம் உணருகிறோம்.

இதுகாறும் கூறியவற்றால் திரைக்கதைக்கேற்ற வசனத்தை, பேரறிஞர் அண்ணாவின் வேலைக்காரி, ஓரிரவு, சொர்க்கவாசல் படங்களுக்குப் பிறகு இவ்வளவு நயம் செறிந்த வசனத்தை – முத்தான உரையாடலை – இயற்கையான உவமையை – கலைஞரின் சொல்லில் மட்டுமே நான் கண்டேன். இது என் தீர்ப்பன்று. நானிலம் வழங்கிய தீர்ப்பு.

கலைஞரின் வசனத்தில் புரட்சி வெடித்தது. அனல் கக்கியது. தீக்குழம்பு ஓடியது. அமைதி தவழ்ந்தது – புன்னகை பூத்தது. காதலும் காமமும் போட்டியிட்டது. நகைச்சுவை, உதடுகளில் ஊர்ந்தது, நம்முள்ளமும் மகிழ்ந்தது என்று கூறி இதை இந்த அளவில் நிறுத்துகிறேன்.

***– முதலமைச்சர் கலைஞர் அவர்களது பிறந்த நாள் ஜூன் 3. அதனையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.***

## மூளைப் பொருள்

திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் "மூலப்பொருளே இல்லாத என் தொகுதிக்கு, ஏதாவது தொழிற்சாலைக் கிடைக்குமா?" என்று கேட்டார். அதற்கு கலைஞர் அவர்கள் "மூளைப்பொருள் கிட்டுமா என்று பார்க்கிறேன்" என்றார்.



**பிரச்சினை :**

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மேல்நல்லாத்தூர் ஊராட்சி மதுரா பட்டரை கிராமத்தில் சுமார் 50 வருட காலமாக குடிநீர் வசதி இல்லாமல் இருந்து வந்தது.

1996–ஆம் வருடம் நடத்திய ஊராட்சிமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இ.சுந்தரமாகிய நான் ஊராட்சி மன்றத் தலைவராக பொறுப்பேற்று, முதல் வேலையாக மேற்படி பட்டரை கிராமத்திற்கு குடிநீர் வசதி வாரியத்தின் வாயிலாக தண்ணீர் வசதிகோரி, தமிழக முதல்வருக்கும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இயக்குநருக்கும், உள்ளாட்சித்துறை அமைச்சருக்கும் பலமுறைகள் கடிதம் அனுப்பி, நேரில் சென்று பார்த்ததும், அதற்கு பலனாக சென்ற 1999-2000–ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் ஆழ்துளை கிணறு அமைத்து, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்து சுமார் ஆறு மாத காலம் ஆகிவிட்டது.

ஆனால் இதுவரையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் தண்ணீர் விநியோகம் செய்யாமல் கிடக்கின்றது. மேற்படி பணியை எடுத்து செய்த ஒப்பந்தக்காரரிடம் விசாரித்ததில் புதியதாக போட்ட ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் இல்லை என்று சொன்னார்கள், இதனால் இதுநாள் வரையில் எந்த பலனும் இல்லை. எனவே, மேற்படி குறையினை தமிழரசு இதழ் வாயிலாக போக்க வழிவகை செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

***– தலைவர், மேல்நல்லாத்தூர் ஊராட்சிமன்றம், திருவள்ளூர் மாவட்டம்.***

# எங்கள் ஊர் பிரச்சினை




**தீர்வு :**

மேல்நல்லாத்தூர் ஊராட்சியை சார்ந்த பட்டரை கிராமத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***– வட்டார வளர்ச்சி அலுவலர் கடம்பத்தூர், திருவள்ளூர் மாவட்டம்***

* * *

**பிரச்சினை :**

ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், வெள்ளக்கோயில் கிராமம் எங்கள் ஊரில் குடிநீர் திறந்து விடுவதில்லை, இரண்டு வாரத்திற்கு ஒருமுறை 1 மணி நேரம் குடிநீர் திறந்து விடுகிறார்கள். இது எங்களுக்குப் போதவில்லை. எனவே, இரண்டு நாட்களுக்கு ஒரு முறை 2 மணி நேரம் குடிநீர் திறந்துவிட்டு குடிநீர் கிடைக்க உதவிடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

***– ஊர் பொதுமக்கள் சார்பாக, பி.முருகேசன் நடேசன்நகர், வெள்ளக்கோயில் கிராமம் ஈரோடு மாவட்டம்.***

**தீர்வு :**

ஈரோடு மாவட்டம் வெள்ளக்கோவில் பேரூராட்சி வளர்ந்து வரும் மிகப்பெரிய நகரமாகும். வெள்ளக்கோவிலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவிலுள்ள புதுப்பை அமராவதி ஆற்றிலிருந்து குடிநீர் திட்டம் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் 60 பிரிவுகளாக கேட் வால்வு வைத்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு பகுதிக்கும் 2 மணி நேரம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இவ்வாறு அனைத்து பகுதிகளுக்கும் ஒரு முறை குடிநீர் வினியோகம் செய்ய 120 மணி நேரம் ஆகிறது. இவ்வாறு குடிநீர் விநியோகம் செய்தால் 5 நாட்களுக்கு ஒரு நாள் என்ற விகிதத்தில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. ஒருமுறை குடிநீர் வினியோகம் செய்யும் போது ஒரு குழாயில் 2400 லிட்டர் வரை (சுமார் 150 குடங்கள்) தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. ஒரு குடும்பத்திற்கு ஒரு நாள் ஒன்றுக்கு 30 குடம் (500 லிட்டர்) என்ற அளவில் கிடைக்கிறது. இவை போதுமானதாகும்.

இவை தவிர தினசரி 10 மணி நேரம் இரண்டு மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் நீரூற்று நிலையத்தில் பொதுக்குடிநீர் குழாய்கள் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. தற்போது உச்ச கட்ட அளவான தினசரி 24 மணி நேரமும் மின்மோட்டார் இயக்கப்பட்டு 9 இலட்சம் லிட்டர் தினசரி குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் தற்போது காவிரி குடிநீர்த் திட்டம் விரைவில் செயல்படவுள்ளதால் வெள்ளகோவில் பேரூராட்சி முழுவதும் முழு அளவில் போதுமான அளவு தண்ணீர் விநியோகம் செய்யப்படும் என்று செயல் அலுவலர் தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

***– மாவட்ட ஆட்சித்தலைவர் ஈரோடு மாவட்டம்.***

* * *

**பிரச்சினை :**

நாகை மாவட்டம் திருக்குவளை வட்டம், மேலவாழக்கரை ஊராட்சி எருவைக்காடு கிராமத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியர் ந.கணகசபை என்பவர் வட்டார வளர்ச்சி அலுவலர் அனுமதியின்றி பழைய வீட்டின் முகப்பை நீட்டி சாலையை ஆக்கிரமித்து ஓட்டுவில்லை வீடு கட்டியுள்ளார். உலக வங்கியில் நவார்டு 5வது திட்டத்தில் ரூ.60 இலட்சம், மேலவாழக்கரை இராமன் கோட்டம் தார்சலை பணி நெடுஞ்சாலைத்துறை (ஆர்.ஆர்.)யினரால் நடைபெறுகிறது. ஆக்கிரமிப்பால், வழங்கப்பட்ட 3.200 கி.மீட்டருக்கு பதில் 3 கி.மீட்டர் போடப்பட்டு பணி நடைபெறுகிறது. 9.8.99 நாளன்று நாகை மாவட்ட ஆட்சியருக்கு ஊர்மக்களால் மனு கொடுக்கப்பட்டு ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை இதுநாள் வரை எடுக்கப்படவில்லை. ஆக்கிரமிப்பை அகற்றவும், வழங்கப்பட்ட தூரம் குறைவின்றி தார்சாலை அமைக்கவும், நெடுஞ்சாலை (ஆர்.ஆர்.) கிராமச்சாலைகள் உதவிப்பொறியாளர், நாகப்பட்டினம் அவர்களுக்கும், ஆக்கிரமிப்பை அகற்ற மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் திருக்குவளை வட்டாட்சியர் அவர்களுக்கு நடவடிக்கை எடுக்க ஆணை பிறப்பித்து பொதுமக்களின் குறையை நீக்கவேண்டுமாய் தாழ்பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

***– ஊர் பொதுமக்களுக்காக, வி.பத்மநாபன் தலைவர், மேலவாழக்கரை ஊராட்சி, திருக்குவளை வட்டம், நாகை மாவட்டம்***

**தீர்வு :**

நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை வட்டம், மேலவாழக்கரை கிராமத்தைச் சேர்ந்த ஏர்வைக்காடு, இராமன் கோட்டம் ஆகிய இரண்டு கிராமங்களில் ரோடு போடுவதற்கு இடையூறாக இருந்த ஆக்கிரமிப்பினை அகற்ற வேண்டுமென அய்யூர் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் கிராமவாசிகள் பலவித போராட்டங்களை அறிவித்ததின் தொடர்பாக அப்பகுதிகள் திருக்குவளை வட்டாட்சியரால் பார்வையிடப்பட்டு, காவல்துறை உதவியுடன் அனைத்து ஆக்கிரமிப்புகளும் முற்றிலுமாக அகற்றப்பட்டு விட்டது. ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் போது நாகப்பட்டினம் (கிராமச்சாலைகள் பணிகள்) உதவிப்பொறியாளரும் திருக்குவளை வட்டாட்சியருடன் உடனிருந்து ஆக்ரமிப்புகளை அகற்றிட உதவி செய்துள்ளார்.

*– மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம்*

* * *

**பிரச்சினை :**

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, ஆலங்குடி முதல் மேற்பனைக்காடு வரை 15 தடம் எண் என்ற பேருந்து செல்கின்றது. இந்த பேருந்து சரிவர இயங்குவது இல்லை. மிகவும் பழுது அடைந்த பேருந்து. ஆதலால் நிறைய பேர் மிகவும் அவதிக்கு உள்ளாகின்றார்கள். ஏன் என்றால் அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவர்கள் இந்த பேருந்தில் தான் செல்ல வேண்டும். எனவே, நீங்கள் எங்களது பிரச்சனையை தீர்த்து வைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

***– ஆர். இராசமோர், சேந்தன்குடி புதுக்கோட்டை மாவட்டம்.***

**தீர்வு :**

தற்போது, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி – மேற்பனைக்காடு தடம் எண்.15–க்கு குறைந்த வயதுடைய பேருந்து மாற்றம் செய்யப்பட்டு, நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

***– தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (குடந்தை கோட்டம் 4 ) லிட்.***

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், வேளாண்மை தொழிலை அடிப்படையாகக் கொண்டுள்ள ஆதிதிராவிடர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் வேளாண்மை மற்றும் வேளாண் தொடர்புடைய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பணிகளுக்காக**

அ. டீசல் எண்ணெய் விசையால் நீர் இறைக்கும் எந்திரம் 5 பரி திறன்,

ஆ. இரட்டை காளை மாடுகளுடன் கூடிய டயர் வண்டி,

இ. மிதிவண்டியுடன் கூடிய விசைத் தெளிப்பான்,

ஈ. உழவு மாடுகள் வாங்கி, அரசு உதவிகளை வழங்கி வருகிறது.

பரி திறன் கொண்ட டீசல் பம்பு செட்டுகள் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ள ஏழை ஆதி திராவிடர்கட்கு உதவிட இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. திட்ட மதிப்பீட்டில் 50% மானியமாகவும், 45% வங்கி கடன் தொகையாகவும், 5% பயனாளிகள் பங்குத் தொகையாகவும் பின்வருமாறு அளிக்கப்படுகிறது.



| | | |
|---|---|---|
| வங்கிக் கடன் | - | ரூ.9,000 (45 சதவீதம் அலகுத் தொகையில்) |
| பயனாளியின் பங்கு | - | ரூ.1,000 (5 சதவீதம் அலகுத் தொகையில்) |

**தேவையான தகுதிகள்**

2 ஏக்கர் நிலம் குத்தகையாகவோ / சொந்தமாகவோ கொண்ட ஆதி திராவிடர் விவசாயி இக்கடன் பெற விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர்.

# ஆதிதிராவிடர் - பழங்குடியினர் மேம்பாடு

| | | |
|---|---|---|
| அலகுத்தொகை | - | ரூ.20,000 |
| மானியம் | - | ரூ.10,000 (50 சதவீதம் அலகுத் தொகையில்) |



**டயர் வண்டியுடன் கூடிய காளை மாடுகள்**

பெரும்பான்மையான ஆதி திராவிடர்கள் வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். எனவே, வேளாண் பணியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்காக இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அறுவடைக்கு முன்னர் மற்றும் பின்னர் வேளாண் பொருட்களை எடுத்துச்செல்ல விவசாயிகட்கு இத்திட்டம் பெரும் உதவி புரியும்.

| | | |
|---|---|---|
| அலகுத்தொகை | - | ரூ.20,000 |
| மானியத் தொகை | - | ரூ.10,000 |
| வங்கிக் கடன் | - | ரூ.9,000 |
| பயனாளியின் பங்கு | - | ரூ.1,000 |

**தேவையான தகுதிகள்**

2.5 ஏக்கர் நிலம் குத்தகையாகவோ / சொந்தமாகவோ உள்ள ஆதிதிராவிடர் விவசாயி இத்திட்டத்தில் விண்ணப்பம் செய்யத் தகுதியுடையவராவர்.



**வாடகைக்கு விடக்கூடிய விசைத் தெளிப்பான்**

வேலை இல்லாத ஆதிதிராவிடர் விவசாயக் கூலிகள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறலாம். பயனாளி இத்திட்டத்தினைப் பயன்படுத்தி நல்ல வருவாய் ஈட்ட இயலும்.

இத்திட்டத்தின் விவரம்:



| | | |
|---|---|---|
| அலகுத்தொகை | - | ரூ.6,000 (அலகுத் தொகையில்) |
| மானியம் | - | ரூ.3,000 (50 சதவீதம் அலகுத் தொகையில்) |
| வங்கிக் கடன் | - | ரூ.2,700 (45 சதவீதம் அலகுத் தொகையில்) |
| பயனாளியின் பங்குத்தொகை | - | ரூ.300 (5 சதவீதம் அலகுத் தொகையில்) |

**தேவையான தகுதிகள்**

நிலமற்ற விவசாயக் கூலி, இத்திட்டத்தில் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர். விசைத் தெளிப்பானை பயன்படுத்தும் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.



**உழவு மாடுகள்**

திட்டத்தின் விவரங்கள் :

| | |
|---|---|
| அலகுத்தொகை | ரூ.12,000 |
| மானியம் | ரூ.6,000 (50 சதவீதம் அலகுத் தொகையில்) |
| வங்கிக் கடன் | ரூ.5,400 (45 சதவீதம் அலகுத் தொகையில்) |
| பயனாளியின் பங்கு | ரூ.600 (5 சதவீதம் அலகுத் தொகையில்) |

**தேவையான தகுதிகள் :**

2 ஏக்கர் நிலம் குத்தகையாகவோ / சொந்தமாகவோ கொண்ட விவசாயி இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

**ஆதிதிராவிடர்கட்கு விசை உழவு எந்திரம் வழங்கும் புதிய திட்டம்**

1991-ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி, பெரும்பான்மையான ஆதி திராவிடர் மக்கள் வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். எனவே, 500 விசை உழவு எந்திரங்கள் ரூ.500 இலட்சங்கள் குறியீட்டில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மொத்த விளிம்புத்தொகை ரூ.100 இலட்சங்கள் தாட்கோ மூலமாக 4 சதவீத வட்டி வீதத்தில், 10 ஆண்டுகள் திரும்பச் செலுத்தும் முறையில் அளிக்கப்படும். சிறப்பு மத்திய உதவித்திட்டத்தின் நிதி உதவியுடன் மானியத் தொகையாகிய ரூ.125 இலட்சங்கள் தாட்கோ வழங்கும் ரூ.250 இலட்சங்கள் வங்கிக் கடனாகவும் வழங்கப்படும்.

திட்டத்தின் விவரங்கள் பின்வருமாறு :

**விசை உழவு எந்திரம்**

| | |
|---|---|
| அலகுத்தொகை | ரூ.1,00,000 - 100% |
| மானியம் | ரூ.25,000 (அ) 30% இதில் குறைந்த தொகை |



விளிம்புத் தொகை ரூ.20,000 (அ) 20% இதில் குறைந்த தொகை

பயனாளியின் பங்கு தொகை ரூ.5,000 5%

வங்கிக் கடன் ரூ.50,000 மீதம்

**தேவையான தகுதிகள்**

1. 3 ஏக்கர் நிலத்தினைச் சொந்தமாகவோ / குத்தகையாகவோ பயனாளி பெற்றிருத்தல் வேண்டும்
2. மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**நெற்கதிரடிக்கும் எந்திரம் வழங்கும் புதிய திட்டம்**

நம் நாட்டில் நெற்பயிர் சாகுபடியில், தமிழகம் முன்னோடியான மாநிலமாகும். தற்போது நெற்பயிர் கதிரடித்தல் பழமையான முறையில் கையினால் அடிக்கப்பட்டு வருகிறது. இம்முறையினால், பயிர் விரயமும், கால தாமதமும் ஏற்படுகின்றன. எனவே, வேளாண் பணியில் ஈடுபட்டுள்ள ஆதி திராவிடர்கட்கு 500 நெற்பயிர் கதிரடிக்கும் எந்திரம் மொத்த நிதித் தொகை ரூ.375 இலட்சத்தில் அளிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. ஒரு பயனாளி ரூ.22,500 தொகையை மானியமாகவும், மொத்த மானியத் தொகையாக இத்திட்டத்திற்கு சிறப்பு மத்திய நிதி உதவித் தொகையில் ரூ.112.50 இலட்சங்கள் அளிக்கும்படியும், தாட்கோ விளிம்புத் தொகையாக ரூ.75 இலட்சங்கள், 4% வட்டி வீதத்தில் 10 ஆண்டுகள் திரும்ப செலுத்தும் முறையில் அளிக்கப்படும். வங்கிக்கடன் தொகையாக ரூ.168.75 இலட்சங்களும் செலவிடப்படும்.



திட்டத்தின் விவரங்கள் பின்வருமாறு :

**நெற்பயிர் கதிரடிக்கும் எந்திரம்**

| | |
|---|---|
| அலகுத்தொகை | ரூ.75,000 – 100% |
| மானியம் | ரூ.22,500 (அ) 30% இதில் குறைந்த தொகை |
| விளிம்புத் தொகை | ரூ.15,000 (அ) 20% |
| பயனாளியின் பங்கு தொகை | ரூ.3,750 5% இதில் குறைந்த தொகை |
| வங்கிக் கடன் தொகை | ரூ.33,750 மீதம் |

**தேவையான தகுதிகள்**

1. பயனாளி ஒருவர் 3 ஏக்கர் நிலத்தினைச் சொந்தமாகவோ / குத்தகையாகவோ வைத்திருக்க வேண்டும்.
2. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

வேளாண் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள் கொண்ட திட்டங்கட்குப் பயனாளி விண்ணப்பத்துடன் அளிக்க வேண்டிய இணைப்புகள்

| | | |
|---|---|---|
| 1. | சாதிச்சான்றிதழ் | 2 நகல்கள் |
| 2. | குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டை | 2 நகல்கள் |
| 3. | சொத்துக்கான சிட்டா அடங்கல் | 2 நகல்கள் |





| | | |
|---|---|---|
| 4. | திட்டத்திற்கான தொகை தேவைப்பட்டியல் (Quotation) | 2 நகல்கள் |
| 5. | விண்ணப்பதாரரின் நிழற்படம் | 2 நகல்கள் |

**தனிநபர் தொழில் முனைவோர் திட்டம்**

ஆதிதிராவிடர் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த தனிநபர் தொழில் முனைவோர் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆதிதிராவிடர் சுயமாகத் தொழில் துவங்கி, தொழில் முனைபவராக வர விழைபவர்கள் இத்திட்டத்தின் கீழ்ப்பிரதானமாக சேர்க்கப்படுவர்.

இத்திட்டத்தின் பிரதான அம்சம் பின்வருமாறு :

1. ரூ.25,000 (அ) 30% திட்ட மதிப்பீட்டுத் தொகை இவற்றில் குறைந்த தொகை மானியமாக வழங்கப்படும்.
2. 20% (அ) 1.25 இலட்சம் இவற்றில் குறைந்த தொகையினை (திட்ட மதிப்பீட்டுத் தொகையில்) தாட்கோ விளிம்புத் தொகையாக 4% வட்டியுடன் 10 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தும் தொகையாக வழங்கப்படும்.

தனி நபர் தொழில் முனைவோர் திட்டம் 3 பிரிவுகளாக அதன் அலகுத் தொகைக்குத் தக்கவாறு பிரிக்கப்படுகிறது.

பிரிவு 'அ' அலகுத்தொகை ரூ.3.00 இலட்சங்கள் வரை

பிரிவு 'ஆ' அலகுத் தொகை ரூ.3.00 முதல் 5.00 இலட்சங்கள் வரை

பிரிவு 'இ' அலகுத் தொகை ரூ.5.00 முதல் 7.50 இலட்சங்கள் வரை

இத்திட்டத்தின் கீழ் லாரி, டிராக்டர், விசை உழுவு எந்திரம் வாடகைக்கார், மினிவேன், ஆட்டோ, கோழிப்பண்ணை, துணி ஏற்றுமதி, கருங்கல் சல்லி உடைப்பு எந்திரம் கணிப்பொறி நிலையம், நகலக எந்திரம் ஆகியவற்றுக்கு விண்ணப்பிக்கலாம்.

**பயனாளிகள் தேர்வு**

செய்தித்தாட்களில் விளம்பரம் செய்து ஆதிதிராவிடர் மக்களிடமிருந்து விண்ணப்பங்களை மாவட்ட மேலாளர்கள் பெற வேண்டும். விண்ணப்பங்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்போதுமான அத்தாட்சிகள் தேவைப்படுகிறது. முதல் கட்டமாக மாவட்டங்களில் ஸ்கிரீனிங் கமிட்டி அமைக்கப்பட வேண்டும். தாட்கோ மாவட்ட மேலாளர், மாவட்டத் தொழில் மைய மேலாளர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், வங்கியால் நியமிக்கப்பட்ட அலுவலர் ஆகியோரைக் கொண்டு இக்குழு இயங்கும். விண்ணப்பங்களை இக்குழு பரிசீலனை செய்து, பின்னர் வங்கிகட்கு அனுப்பி வைக்கும். வங்கியின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் தேர்வுக்குழுவினரால் இறுதித் தேர்வு மேற்கொள்ளப்படும்.

ரூ.1.00 இலட்சம் வரையிலான திட்டத்திற்குத் தேர்வுக்குழு, பின்வரும் அலுவலர்களைக் கொண்டு இயங்கும்.

| | |
|---|---|
| அ. கூடுதல் ஆட்சியர் மற்றும் திட்ட அலுவலர் (மா.ஊ.வ.முகமை) | தலைவர் |
| ஆ. மாவட்ட மேலாளர், தாட்கோ | செயல் உறுப்பினர் |



இ. பொது மேலாளர்,
மாவட்டத் தொழில் மையம் — உறுப்பினர்

ஈ. முன்னோடி வங்கி மேலாளர் — உறுப்பினர்

உ. மாவட்ட வேலைவாய்ப்பு
அலுவலர் — உறுப்பினர்

1.00 இலட்சத்திற்கு மேல் உள்ள திட்டங்கட்குக் கீழ்க்காணுமாறு தேர்வுக்குழு இயங்கும்.

அ. மாவட்ட ஆட்சியர் — தலைவர்

ஆ. மாவட்ட மேலாளர்,
தாட்கோ — செயல்
உறுப்பினர்

இ. திட்ட அலுவலர், DRDA — உறுப்பினர்

ஈ. பொது மேலாளர்,
மாவட்டத்தொழில் மையம் — உறுப்பினர்

உ. முன்னோடி வங்கி மேலாளர் — உறுப்பினர்

தேர்வுக்குழு பயனாளியினைத் தேர்வு செய்தவுடன் மானியம் மற்றும் விளிம்புத் தொகையினை வங்கிக்கு, தாட்கோவால் விடுவிக்கப்பட வேண்டும். வங்கிக் கடனுடன் கூடிய மானியம் மற்றும் விளிம்புத்தொகை ஆகியவற்றைப் பயனாளிகளுக்கு வங்கி விடுவிக்கும்.

சொத்து உருவாக்கம், விளிம்புத் தொகை மற்றும் வங்கிக் கடன் வசூல் நடவடிக்கைகளுக்கு தாட்கோ உதவி மேலாளர்கள் மற்றும் மாவட்ட மேலாளர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.

**நகல்கள் :**

| | | |
|---|---|---|
| அ. சாதிச் சான்றித;ழ் | – | 2 நகல்கள் |
| ஆ. வருமானச் சான்றிதழ் | – | 2 நகல்கள் |
| இ. குடும்ப உணவுப்பங்கீடு அட்டை | – | 2 நகல்கள் |
| ஈ. சிட்டா அடங்கல் (வேளாண்மைத் திட்டத்திற்கு) | – | 2 நகல்கள் |
| உ. திட்ட அறிக்கை | – | 2 நகல்கள் |
| ஊ. திட்டத்திற்கான விலை விவரப்பட்டியல் | – | 2 நகல்கள் |
| எ. விண்ணப்பதாரரின் நிழற்படம் | – | 2 நகல்கள் |
| ஏ. மற்றும் தேவையான பிற சான்றிதழ்கள் | – | 2 நகல்கள் |





### துப்புரவு பணியாளர்களுக்கான புதிய திட்டங்கள்

கல்வி மற்றும் பொருளாதாரத்தில் துப்புரவு பணியாளர்களை ஊக்குவிக்க அரசியல் அமைப்பில் வழிவகை இருந்தும், இன்றைய அளவில் அவர்களின் முன்னேற்றம் ஒதுக்கப்பட்டே வருகின்றது. அவர்கள் செய்யும் தொழிலில் இருந்து அவர்களை விடுவித்து, சமூக பொருளாதாரத்தில் மறு வாழ்வு அளிக்க நடவடிக்கை எடுத்தும், சில காரணங்களால் அம்முயற்சிகள் முழு வெற்றி அடைய முடியவில்லை. அரசின் கொள்கை மற்றும் திட்டங்களின் மூலமாக துப்புரவு பணியாளர்களுக்குப் பயனுள்ள மாற்றுத் தொழிலை ஏற்படுத்தினால்தான் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மாற்றி அமைக்க முடியும்.

1990–ஆம் ஆண்டு முதல் தாட்கோ மூலம் துப்புரவு



பணியாளர் மற்றும் அவரைச் சார்ந்தோர் மறுவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க, பல்வேறு தொழில் திட்டங்களில் ரூ.50,000 வரை ஒவ்வொரு பயனாளிக்கும் நிதி உதவி செய்யப்பட்டு வருகின்றது. இவ்வாண்டு மேலும், பலவிதமான புதிய திட்டங்கள் தேசிய துப்புரவுப் பணியாளர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் தாட்கோவின் மூலம் செயல்படுத்த உள்ளதென மகிழ்ச்சியுடன் தெரிவிக்கப்படுகிறது.

1. ரூ.65,000 செலவில் துப்புரவுப் பணியாளர்களுக்கு 28 ஆட்டோ வழங்க மொத்தம் ரூ.18.21 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
2. ரூ.3.65 இலட்சம் செலவில் 10 துப்புரவுப் பணியாளர்களுக்கு வாடகை கார் வழங்க மொத்தம் ரூ.36.50 இலட்சங்கள் செலவிட திட்டமிடப் பட்டுள்ளது.
3. துப்புரவு பணியாளர்களிடையே கூட்டுறவு முறையில் 5 சுய உதவிக்குழுக்களை அமைத்து ஒவ்வொரு குழுவிற்கும் ரூ.4.55 இலட்சம் மதிப்பில் மினி லாரியினை, ரூ.22.75 இலட்சம் திட்ட செலவில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
4. மற்றொரு திட்டமாக 10 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.5.30 இலட்சம் மதிப்பில் கழிவு நீர் அகற்றும் லாரியினை மாநகராட்சி / நகராட்சி பகுதிகளுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு மொத்த மானியமாக ரூ.11.72 இலட்சங்களும் தேசிய துப்புரவுப் பணியாளர் நிதி கழகத்தின் கடனாக ரூ.112.98 இலட்சங்களும் வழங்கப்படும்.

இத்திட்டத்தினைச் செயல்படுத்த ஒரு அலகிற்கு ஒதுக்கப்படும் நிதி விவரங்கள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| மானியம் | – | ரூ.25,000 அல்லது திட்டத் தொகையில் 30 சதவீதம் (இதில் குறைந்த தொகை) |
| பயனாளியின் பங்குத் தொகை | – | திட்டத் தொகையில் 5 சதவீதம் |
| பருவக்கடன் மானியம் | – | திட்டத் தொகையில் பங்கு தொகை போக மீதி உள்ளதொகை |

தேசிய துப்புரவுப் பணியாளர் நிதிக்கழகத்தின் மூலம் வழங்கப்படும்

| | | |
|---|---|---|
| வட்டி வீதம் | – | 6% ஆண்டிற்கு |
| திருப்பி செலுத்தும் கால அளவு | – | 10 வருடங்கள் |



### தேவையான தகுதிகள்

1. அனைத்து துப்புரவுப் பணியாளர் மற்றும் அவரைச் சார்ந்தோர் அதாவது துப்புரவு பணியாளர்கள் மற்றும் தெரு சுத்தம் செய்யும் தொழில் புரிபவர்களும் (Scavengers and Sweepers) இத்திட்டத்தின் மூலம் பயன்பெறத் தகுதியுடையவராவர்.
2. மினி லாரி மற்றும் கழிவு நீர் அகற்றும் லாரி வாங்குவதற்குக் கூட்டுறவு முறையில் 5 முதல் 10 நபர்கள் கொண்ட குழுக்கள் அமைத்து மாநகராட்சி / நகராட்சி மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.
3. குழுக்கள் பெறப்படும் வாகனத்திற்கு வாடகை பணி முன்னுரிமை அளிக்கும் உறுதியினை எழுத்து மூலமாக சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் தர வேண்டும்.
4. இத்திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளின் குடும்ப ஆண்டு வருமானம் கிராமப்புறத்தில் ரூ. 31,952க்கும், நகர்ப்புறத்தில் ரூ.42,412க்கும் மிகாமல் இருக்க வேண்டும்.



விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களின் நகல்களை இணைக்க வேண்டும்.

1. துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கான சான்றிதழ் (Scavenger and Sweeper)
2. குடும்ப உணவு பங்கீட்டு அட்டை நகல்
3. ஒட்டுநர் உரிமம் குறித்த சான்றிதழ்
4. மற்றும் பிற சான்றிதழ்




### தேசியத் துப்புரவுப் பணியாளர்களை அப்பணியிலிருந்து விடுவித்து புனர்வாழ்வு வழங்கும் திட்டம்

மனிதக் கழிவினை மனிதனே அகற்றும் மனித நேயத்திற்கு இழிவான தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை அதனின்று விடுவித்து புனர்வாழ்வு அளிக்கும் நோக்கமாக 1990-91-ஆம் ஆண்டு இத்திட்டம் துவக்கப்பட்டது. இத்திட்டம் 5 ஆண்டு கால அவகாசத்தில் துப்புரவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களை அத்தொழிலிலிருந்து முழுமையாக விடுவித்து மதிப்பு மிக்க தொழிலில் ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டது.

நடப்பாண்டில் 3,000 துப்புரவுப் பணியாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இச்செயல் திட்டத்தில் மொத்த தொகையாக ரூ.1043.50 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.243.50 இலட்சங்கள் மானியத்தொகையாகவும், ரூ.150 இலட்சங்கள் தாட்கோ விளிம்புத் தொகைக் கடனும் இதில் அடங்கும்.

| | |
|---|---|
| மானியம் | – ரூ.10,000 (அ) திட்டத் தொகையில் 50% இவற்றில் குறைந்த தொகை |
| விளிம்புத்தொகை | – ரூ.7,500 (அ) திட்டத் தொகையில் 15% இவற்றில் குறைந்த தொகை |
| வங்கிக்கடன் | – ரூ.32,500 (அ) திட்டத் தொகையில் 35% |

### பெண் குழந்தைக் கல்வி ஊக்குவிப்பு உதவித் திட்டம்

இத்திட்டம் 1994-95-ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டு, 1995-96-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண் குழந்தைகள், பள்ளிக்குச் செல்லாமல் பாதியிலேயே கல்வியை நிறுத்தம் செய்வதைத் தவிர்த்து, உயர் கல்வி அறிவு பெற்று வாழ்க்கையில் சாதனை புரிய வேண்டுமென்ற நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும்.

3-ஆம் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை பயிலும் பெண் குழந்தைகள் மற்றும் 6ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகள் பள்ளிக் கல்வியினைத் தொடர ஊக்க உதவித் தொகையாக முறையே ரூ.500ம், 1,000ம் வழங்கப்படுகிறது.

நடப்பாண்டிலும் (1999-2000) பெண் கல்வித் திட்டம் மூலம் உதவி அளிக்கப்படும். சென்ற ஆண்டில் மொத்தம் ரூ.6 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

### செயல்படுத்தும் முறை :

பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் அப்பள்ளியில் படிக்கும் தகுதி வாய்ந்த 3, 4, 5 மற்றும் 6ஆம் வகுப்புப் பெண் குழந்தைகளின் குடும்ப வருமானம் மற்றும் சாதிச் சான்றிதழ்களுடன் கூடிய பெயர்ப் பட்டியலை உதவிக் கல்வி அலுவலர்கள் பெற்று, மாவட்ட மேலாளர்களிடம் அளிக்க வேண்டும். பின்னர், பெண் குழந்தைகளின் தாயாரின் பெயரில் அருகில் உள்ள அஞ்சலகத்தில் கணக்கு துவக்கப்பட்டு, அக்கணக்கில் குழந்தைகளுக்கான உதவித் தொகையினை மாவட்ட மேலாளர்களால் விடுவிக்கப்பட வேண்டும்.

மாவட்ட மேலாளர்கள் உதவிக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர் ஆகியவர்களைத் தொடர்பு கொண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண் குழந்தைகளின் பெயர்ப் பட்டியலை பெற வேண்டும். இப்பெயர் பட்டியலினை பள்ளிவாரியாக பெற வேண்டும். பெறப்பட்ட பட்டியலை கூர்ந்தாய்வு செய்து உதவித் தொகையினை 1999-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குள் விடுவிக்க நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.

## மகளிர்க்கான சிறப்புப் புதிய திட்டங்கள்

### ஆதிதிராவிடப் பெண்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் :



1991-ஆம் ஆண்டு இந்திய மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மக்கட் தொகை ஒரு கோடியே ஏழு இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதனில், ஆதிதிராவிடர் பெண்களின் எண்ணிக்கை 53 இலட்சமாகும். அதாவது ஆதிதிராவிடர் மொத்த மக்கட் தொகையில் 49.45 சதவீதம் என, இரண்டில் ஒரு பங்கு அளவிற்கு உள்ளது. எந்த ஒரு திட்டமும் சாதனை அடைய வேண்டுமாயின் அவ்வகுப்பில் உள்ள பெண்களின் பொருளாதாரம் மற்றும் உரிமையினை உயர்த்தாமல் அச்சமூகத்தின் நலம் மற்றும் முன்னேற்றம் உயர்வடைய இயலாது. எனவே, ஆதிதிராவிடர் மகளிர்கட்கு புதிய திட்டத்தினை அறிவிப்பதில் தாட்கோ பெருமை அடைகிறது.



ஆதிதிராவிடர் பெண்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடையச் சிறப்பு தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தினை தாட்கோ அறிமுகப்படுத்துகிறது. அரசு சார்பற்ற அமைப்புகளின் மூலம் ஆதிதிராவிடர் மகளிர் சுய உதவிக் குழுக்களாகப் பல எண்ணிக்கைகளில் அமைத்து அவர்களைத் தொழில் முனைவோர்களாக உருவாக்க, தாட்கோ மூலம் 50% மானியம், 20% விளிம்புத்தொகை கடனாக வழங்கவும், அவ்விளிம்புத் தொகையினை 4% வட்டி வீதத்தில் 10 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தவும் வழிவகை செய்துள்ளது. அத்திட்டத்தினை செயல்படுத்த முக்கியத் தொழிற் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்தினால் மகளிருக்கு உதவி புரிவது மட்டுமின்றி, அவர்கள், பொருளாதாரத்தில் சுதந்திரமும், தன்னம்பிக்கையும், தன்னிறைவும் அடைய உதவி புரியும்.

மாநில முழுமைக்கும் ஆதிதிராவிடப் பெண்களையே 130 சுய உதவிக் குழுக்களை, அரசு சார்பற்ற அமைப்புகளின் மூலம் அமைத்து அவர்கள் தொழில் முனைவோராக உருவாக்கப் பயிற்சி அளித்து, வழிகாட்டி மற்றும் கண்காணிப்பு செய்து, பொருளாதாரத்தில் சுதந்திரமாக இயங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுவிற்கும், ரூ.5.00 இலட்சம் வரை நிதி உதவி செய்யப்படும். இதனில்,

1. மொத்த மானியத் தொகை ரூ.325 இலட்சங்களும்
2. மொத்த விளிம்புத் தொகைக் கடன் ரூ.130 இலட்சங்களும்
3. பயனாளிகளின் பங்குத் தொகை ரூ.32.50 இலட்சங்களும்
4. வங்கிக் கடனாக ரூ.162.50 இலட்சங்களும், அடங்கும்.

இத்திட்டத்தில் குழுவிற்கு 10 முதல் 15 நபர்கள் அடங்கிய 130 ஆதிதிராவிடர் பெண்கள் சுய உதவிக் குழுக்கள் மாநிலம் முழுமையிலும் அமைக்கப்படும். இத்திட்டத்தில் செலவிடப்படும் மொத்தத் தொகையில் 5% பயனாளிகளின் பங்குத் தொகையாக இருக்கும். இத்திட்டத்தில், பந்தல் அலங்காரம் (சாமியானா) பாத்திரங்கள் வாடகைக்கு விடுதல், ஒளி, ஒலி அமைப்பு ஆகியவையும் அடங்கும்.

### தேவையான தகுதிகள்

1. தமிழக மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் இத்திட்டம் செயல்படுத்த முன்னுரிமை வழங்கப்படும்.
2. மகளிர் குழுக்கள் 10 முதல் 15 என்ற எண்ணிக்கையில், ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.
3. மூன்று ஆண்டுகட்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட சுய உதவிக் குழுக்களாக இருத்தல் வேண்டும்.
4. மகளிர் நலனில் அக்கறையும் முன் அனுபவமும் கொண்ட அரசு சார்பற்ற அமைப்புகளின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயங்க வேண்டும்.
5. அரசு சார்பற்ற அமைப்புகள் சங்கப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
6. அரசு சார்பற்ற அமைப்புகள் நிதி ஆதாரம் கொண்டதாக இருக்க வேண்டும்.



7. அரசு சார்பற்ற அமைப்புகள் குறைந்தது 10 ஆண்டுகள் சமூகப் பணி புரிந்த அனுபவமும், நற்பெயரும் பெற்றிருக்க வேண்டும். பெண்கள் பொருளாதார நிலைக்கு உயர்த்த முறையான அணுகுமுறையும் திட்டம் வெற்றியடையப் போதுமான தகுதியும் பெற்றிருக்க வேண்டும். இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் அரசு சார்பற்ற



அமைப்புகள் அரசின் கரும்புள்ளிப் பட்டியலில் இடம் பெற்றிருத்தல் கூடாது.

**வாக சான்றிதழ் அமைப்புகள் பின்வரும் சான்றிதழ்களை அளிக்க வேண்டும் :**

நிழற்பட நகல் (Xerox Copies)

1. சங்க பதிவுச் சான்றிதழ்
2. குழுக்களில் இடம்பெறும் பயனாளிகளின் சாதிச் சான்றிதழ்
3. கல்வித் தகுதிச் சான்றிதழ் (பெண்கள் 8–ஆம் வகுப்பு வரை பயின்று இருத்தல் வேண்டும்)
4. திட்ட மதிப்பீட்டிற்கான விலை விவரப் பட்டியல்
5. குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டை இரு நகல்
6. வருமானச் சான்றிதழ்
7. திட்ட அறிக்கை
8. ஓட்டுநர் உரிமம் / உரிமமில்லை. (போக்குவரத்துப் பிரிவுக்கு மட்டும்)

## பயிற்சித் திட்டங்கள்

**ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்களுக்கு கணிப்பொறி பட்டயப் பயிற்சி :**

கணிப்பொறி அறிவினைப் பெற்ற மக்களுக்குப் பல்வேறு புதிய தொழில் மற்றும் வேலை வாய்ப்புக்களை தகவல் தொடர்பு தொழில் நுட்ப அறிவியல் ஏற்படுத்தியுள்ளது. இத்தொழில் நுட்ப அறிவியல் துறையில் ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்கள் போட்டியிட்டு அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு பயிற்சிபெற இது நல்லதொரு தருணமாகும்.

தாட்கோ மூலம் இரு புதிய பயிற்சித் திட்டங்களை ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்கள் மாநில முழுமையிலும் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப் படுகிறது. இதனில், 2000 ஆதிதிராவிடர்கள் பயனடையும் வகையில் ஓராண்டு மென் கணிப்பொறி தொழில் நுட்பப் பட்டயப் பயிற்சியினை தலைசிறந்த நிறுவனங்கள் மூலம் அளிக்கப்பட உள்ளது. ஒரு பயிற்சியாளருக்கு பயிற்றுவிப்போர் தொகையாக ரூ.17,000 வீதம் மொத்தம் ரூ.340 இலட்சங்களும், பயிற்சியாளர்கட்கு மாதாந்திர உதவித் தொகையாக ரூ.400 வீதம் மொத்தம் ரூ.96 இலட்சங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மற்றொரு திட்டத்தில் 500 மாணவ / மாணவிகள் மாநில முழுமையிலும் பயன்பெறும் வகையில் வன் கணிப்பொறி தொழில் நுட்பப் பயிற்சி ஓராண்டு வழங்கப்படும். இத்திட்டத்திலும் தொழில் நுட்பம் வாய்ந்த பயிற்சி நிறுவனம் மூலம் பயிற்சி வழங்கப்படும். இத்திட்டத்தில், பயிற்சி பெறும் மாணவர்கட்கு ரூ.400 வீதம் உதவித்தொகையாக ரூ.24 இலட்சமும் உள்ளடக்கி மொத்த செலவுத் தொகையாக ரூ.109 இலட்சங்களும் செலவிடப்படும்.

இப்பயிற்சித் திட்டம் ஆதிதிராவிடர் மாணவர்களிடையே தொழில் அறிவினை ஏற்படுத்தி தக்க வேலை வாய்ப்பினை மாநில முழுமையும் ஏற்படுத்தித் தர உதவி புரியும்.

இப்பயிற்சியினை அளிக்கப் பயிற்சி நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் தாட்கோ தலைமை அலுவலகத்தில் பெறப்பட்டு, பயிற்சி நிறுவனங்கள் தேர்வு செய்யப்படும்.

**தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பயனாளிகளிடையே தன்னம்பிக்கை உருவாக்க தொழில் நுட்ப அமைப்புகள் மூலம் அவர்கட்குத் தேவையான தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும். இதற்காக 250 பயிற்சியாளர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு தாட்கோ மூலம் தேர்வு செய்யப்பட்ட தொழில் நுட்ப அமைப்புகள் மூலம் ரூ.50 இலட்சம் செலவில் தொழில் பயிற்சி அளிக்கப்படும்.

**சுயதொழில் வேலைவாய்ப்புப் பயிற்சி:**

தாட்கோவில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டமும் முக்கிய அங்கம் வகிக்கின்றது. ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த ஆண், பெண் இரு பாலரும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாக ஆதிதிராவிட மாணவ, மாணவியர்கள், குறிப்பிட்ட கால அவகாசத்தில் குறிப்பிட்ட தொழிலில் த்திறமையை வளர்த்து கிராமப்புற குடிசைத் தொழிலில் சுயவேலை வாய்ப்புபெறுவதே முக்கிய நோக்கமாகும்.

இவ்வாண்டில் 1,000 நபர்கள் பயன்பெறும் வகையில் பயிற்சியாளர்கட்கு மாதாந்திர உதவித் தொகையாக ரூ.350–ம் பயிற்றுவிப்போர் கட்டணம் ரூ.200 வீதமும், மூலப்பொருள் வாங்குவதற்கு மாதம் ரூ.75–ம் பயிற்சி முடிவில் ரூ.600 மதிப்புள்ள பயிற்சிக்கான பொருட்கள் ஒவ்வொரு மாணவரும் பெறும் வகையில் ரூ.43:50 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**தேவையான தகுதிகள் :**

1. விண்ணப்பதாரர் 18 முதல் 35 வயதிற்குள் இருத்தல் வேண்டும்
2. குடும்ப வருட வருமானம் ரூ.31,952–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்
3. பயிற்சியாளர்களின் இருப்பிடத்திலிருந்து 10 கி.மீ. தூரத்திற்குள் பயிற்சி நிறுவனங்கள் அமைந்திருக்க வேண்டும்.
4. விண்ணப்பதாரர்களின் கல்வித் தகுதி 8–ம் வகுப்பு அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.



**தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்**

தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், இந்திய அரசின் சமூக நீதி மற்றும் நல அமைச்சகத்தின் கீழ் இயங்கி வருகிறது.

தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் மாநில அளவிலான பட்டியலினத்தோர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பல்வேறு நலத்திட்டங்களைக் குறைந்த பொருளாதாரத்திற்கு உகந்தவாறு சுய வட்டி விகிதத்தில் தொழிலில் விவசாயம், தோட்டக்கலை, கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால் வளத்துறை, குறைந்த நீர்ப்பாசன திட்டங்கள், சிறுதொழில், பணிசேவை மற்றும் போக்குவரத்துத் திட்டங்கட்கு நிதி உதவி அளிக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன் பெற விரும்புவோர் கீழ்க்காணும் தகுதியினை பெற்றிருத்தல் வேண்டும்.

1. பயனாளி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லது மேற்படி இனத்தவர் கூட்டுறவு சங்கத்தின் மூலமோ (அ) சட்டப்படி நிறுவப்பட்ட அமைப்பின் மூலமோ பயன்பெற தகுதியுடையவராவர்.
2. நகர்ப்புறத்தில் உள்ளோரின் குடும்பத்தின் ஆண்டு வருவாய் ரூ.42,412–க்கு மிகாமலும், கிராமப்புறத்தில் உள்ளோர் ஆண்டு வருவாய் ரூ.31,952–க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தினை 1996–ஆம் ஆண்டு முதல் தாட்கோ செயல்படுத்தி வருகிறது. தாட்கோவில் செயல்படுத்தப்படும் பிரதான திட்டங்கள் பின்வருமாறு:

1. போக்குவரத்துப் பிரிவு திட்டங்கள்
2. வேளாண்மைப் பிரிவு திட்டங்கள்
3. உயர்ந்த தொகை திட்டங்கள்

கடந்த ஆண்டின் தேவையைக் கருத்தில் கொண்டு இவ்வாண்டு போக்குவரத்துத் திட்டங்களுடன் செயல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் இரு பிரிவுகளாக போக்குவரத்து மற்றும் உயர்ந்த தொகைப் பிரிவுத் திட்டங்கள் என செயல்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது. இதில் போக்குவரத்துத் திட்டங்கட்கு ரூ.2,135.50 இலட்சங்கள் செயல்திட்டத்தில் ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. உயர்ந்த தொகைப் பிரிவு திட்டத்தின் கீழ் தொழிற்பிரிவு, வேளாண்மைப் பிரிவு மற்றும் பணி சேவைப் பிரிவு ஆகிய திட்டங்களைச் செயல்படுத்த முறையே ரூ.750 இலட்சங்கள், ரூ.250 இலட்சங்கள் மற்றும் ரூ.250 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நிதி ஒதுக்கீடு விவரம் :**

**1. பருவக் கடன் :**

ரூ.30 இலட்சங்கள் வரையிலும் உள்ள திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் பருவக் கடன் உதவி வழங்கப்படுகிறது.

**2. பயனாளிகளின் பங்குத் தொகை :**

| வ. எண். | திட்ட அலகுத்தொகை (ரூ.) | பயனாளிகளின் குறைந்த பட்ச பங்குத் தொகை சதவீதத்தில் |
|---|---|---|
| 1 | 1 இலட்சம் வரை | இல்லை |
| 2 | 1 இலட்சம் முதல் 25 இலட்சங்கள் வரை | 2 சதவீதம் |
| 3 | 25 இலட்சங்கள் முதல் 5.00 இலட்சங்கள் வரை | 3 சதவீதம் |
| 4 | 5 இலட்சங்களுக்கு மேல் | 5 சதவீதம் |

பயனாளிகளின் பங்குத் தொகை அடுக்குமுறை அடிப்படையில் அமையாது.

3. திட்ட மதிப்பீட்டில் பருவக்கடன் அதிக பட்சமாக 85% நிதியினை மாநில அளவிலான முறைப்படுத்தும் முகமையின் உதவித் தொகை மற்றும் திட்டத்தின் பிற நிதி ஆதாரங்களையும் / மானியத்தினைக் கருத்திற்கொண்டு வழங்கப்படும்.

4. வட்டி விகிதம் :

| வ. எண் | என்.எஸ்.எப்.டி.சி. அலகு கடன் ரூ. | ஆண்டு விதம் வட்டி எஸ்.சி.டி.சி. | பயனாளிகள் செலுத்த வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1 | 5 இலட்சங்கள் வரை | 4% | 7% |
| 2 | 5 இலட்சங்களுக்கு மேல் | 6% | 9% |

மேற்காணும் வட்டி விதம் அடுக்குமுறை அடிப்படையில் அமையாது.

5. பருவக்கடன் காலாண்டு / அரையாண்டு / முழு ஆண்டு காலத் தவணைகளில் 5 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

**பயனாளிகள் தேர்வு :**

அரசாணை நிலை எண்.54 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 19.04.99–இல் கூறியவாறு இரு நிலைகளில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள்.

**முதல் நிலை :**

முதல் நிலையாகப் பயனாளிகளிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களைக் கீழ்க்காணும் குழுவின் மூலமாகக் கூர்ந்தாய்வு செய்யப்பட வேண்டும்.

1. மாவட்ட மேலாளர், தாட்கோ
2. பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம்
3. மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர்.

**இரண்டாம் நிலை :**

கூர்ந்தாய்வு செய்யப்பட்ட விண்ணப்பங்களை கீழ்க்கண்ட மாவட்ட அளவிலான குழுவின் மூலம் இறுதி செய்யப்பட வேண்டும்.

1. திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
2. மாவட்ட மேலாளர், தாட்கோ
3. பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம்
4. மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர்
5. தாட்கோ தலைமை அலுவலகத்தால் நியமிக்கப்பட்ட தலைமையிட அலுவலர்

மேற்காணும் குழுவினரால் நேர்காணல் மூலமாக தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள், தேர்வு செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் தேவையான ஆவணங்கள் தாட்கோவிற்கு அளிக்கப்பட வேண்டும்.

## பழங்குடியினருக்கான புதிய திட்டங்கள்

**பழங்குடியின மகளிருக்கான புதிய தொழில் முனைவோர் திட்டம் :**

ஆதிதிராவிடர் மகளிர்கட்கு செயல்படுத்தப்படும் பந்தல் அலங்காரம், சமையல் பாத்திர வாடகை, ஒலி, ஒளி அமைப்பு போன்ற திட்டங்களைப் போல் பழங்குடியின மகளிர்கட்கும் மாநில அளவில் 5 சுய உதவி குழுக்களை ஏற்படுத்தி, ஒவ்வொரு குழுவிற்கும், திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சங்கள் வழங்கி, அரசு சார்பற்ற அமைப்புகளின் வழிகாட்டுதல் மற்றும் பயிற்சியின் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை சுயமாக நிலை நிறுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**[illegible] :**

1. மொத்தமானியமாக ரூ.12.50 இலட்சங்களும்
2. மொத்த விளிம்புத் தொகை கடனாக ரூ.5.00 இலட்சங்களும்
3. மொத்த வங்கிக் கடனாக ரூ.7.50 இலட்சங்களும் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் 10 முதல் 15 நபர்கள் கொண்ட பழங்குடியின மகளிர்கள் கொண்ட 5 குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு குழுவிற்கும் கீழ்க்கண்ட அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| மானியம் | – | ரூ.2.50 இலட்சங்கள் (அ) திட்டத் தொகையில் 50% |
| விளிம்புத் தொகை | – | ரூ.1.00 இலட்சம் (அ) திட்டத்தொகையில் 20% கடன் |
| வங்கிக் கடன் | – | ரூ.1.50 இலட்சம் (அ) திட்டத் தொகையில் மீதியுள்ள தொகை |

**தேவையான தகுதிகள் :**

ஆதிதிராவிடர் மகளிர் தொழில் முனைவோருக்கு உள்ள தகுதிகள் பழங்குடியின மகளிர்களுக்கும் பின்பற்றப்படும்.

**பழங்குடியினருக்கான போக்குவரத்து திட்டங்கள் :**

தமிழ்நாட்டின் மொத்த மக்கட் தொகையில் சுமாராக ஐந்து இலட்சத்து எழுபத்தி ஐந்து ஆயிரம் மக்கள் பழங்குடியினராக உள்ளனர். இதில் பெரும் பகுதி மக்கள் திருவண்ணாமலை, நீலகிரி, திருவள்ளூர், சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் வசிக்கின்றனர். பெரும்பான்மையான மலைவாழ் மக்களின் இருப்பிடம் போக்குவரத்து தொடர்பற்று இருப்பதால் மலைவாழ் இளைஞர்களுக்கு சிறிய போக்குவரத்து வாகனங்கள் வழங்கி உதவி புரிய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ரூ.175 இலட்சம் செலவில் 50 ஜீப் மற்றும் ரூ.90 இலட்சம் செலவில் 20 மினி வேன்களும் வழங்கி, வாடகை மற்றும் சுற்றுலா வாகனமாகவும் பயன்படுத்தி பொருள் ஈட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது.



இது தவிர, ரூ.47 இலட்சம் செலவில் மலைவாழ் மக்கட்களுக்கு சிறிய அளவில் தொழில் புரிய அதாவது, பால்பண்ணை, கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் ஆடு வளர்ப்பு ஆகிய தொழிலில் ஈடுபடுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பழங்குடியின மக்களுக்கு பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :

1. மொத்த மானியத் தொகை – ரூ.168.50 இலட்சங்களும்
2. மொத்த விளிம்புத் தொகை கடன் – ரூ.67.40 இலட்சங்களும்
3. மொத்த வங்கி கடனாக – ரூ.101.10 இலட்சங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் பிரிவு வாரியாக ஒரு அலகுக்கு ஒதுக்கீடு வருமாறு :

| வ எண். | பிரிவு | மானியம் 50% | விளிம்புத் தொகை கடன் 20% | வங்கிக் கடன் 30% |
|---|---|---|---|---|
| 1 | மினி லாரி | 2.25 | 0.90 | 1.35 |
| 2 | ஜீப் | 1.75 | 0.70 | 1.07 |
| 3 | மற்ற சிறிய திட்டங்கள் | 0.50 | 0.20 | 0.30 |

**தேவையான தகுதிகள் :**

இத்திட்டத்திற்கு தனி நபர் தொழில் முனைவோருக்கான தகுதிகள் பின்பற்றப்பட வேண்டும்.

**[illegible]**

அ. வடிமுனை பொங்கு ஊற்று கிணறு

ஆ. மின்விசை பம்பு செட் 7.5 குதிரை திறன்.

**புதியதாக செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்**

அ. தேசிய துப்புரவு பணியாளர் நிதி மற்றும் மேம்பாட்டு கழக திட்டம்

ஆ. உழவு மாடுகள் வழங்குவது

இ. கணிப்பொறி பட்டயப் பயிற்சி

ஈ. மின் உழவு இயந்திரம்

உ. நெற் கதிரடிக்கும் இயந்திரம்

ஊ. ஆதிதிராவிடர் மகளிர்க்கான தொழில் முனைவோர் திட்டங்கள்

எ. பழங்குடி மகளிருக்கான தொழில் முனைவோர் திட்டங்கள்

## தாட்கோ பயனாளிகள் கடைபிடிக்க வேண்டிய விதி முறைகள்

1. தாட்கோ திட்டத்தில் பயனடைய விரும்பும் பயனாளிகள் தங்களது மாவட்டத்தில் உள்ள தாட்கோ மாவட்ட மேலாளரை அணுகி கடன் பெற விரும்பும் திட்டத்திற்கான விண்ணப்பத்தினை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
2. விண்ணப்ப படிவத்தில் கோரியுள்ள அனைத்து விவரங்களையும் உரிய முறையில் பூர்த்தி செய்து முழுமையான விண்ணப்பத்தினை உரிய ஆவணங்களுடன் வரையறுக்கப்பட்டுள்ள காலத்திற்குள் தாட்கோ மாவட்ட மேலாளரிடமோ அல்லது உதவி மேலாளரிடமோ விண்ணப்பதாரர் அளித்தல் வேண்டும்.
3. விண்ணப்பத்தினை, விண்ணப்பதாரரே நேரில் சென்று தாட்கோ அலுவலகத்தில் அளிக்க வேண்டும் எனவும், எக்காரணம் கொண்டும் இடைத்தரகர்கள்/ உறவினர்கள் மூலம் விண்ணப்பங்கள் அளிக்கத் தேவையில்லை எனவும் அறிவிக்கப்படுகிறது.
4. தாட்கோ அலுவலகத்தில் தங்களது விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பின்னர், விண்ணப்பம் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதல் சான்றினை தாட்கோ மாவட்ட மேலாளரிடமிருந்து விண்ணப்பதாரர் பெறுதல் வேண்டும்.
5. தாட்கோ கடன் உதவிப் பெற்ற பயனாளி கடன் தொகையினைப் பயன்படுத்தி, உடன் உரிய சொத்தினை உருவாக்கல் வேண்டும். உருவாக்கிய சொத்து குறித்த விவரத்தினை தாட்கோ அலுவலகத்திற்கு உடன் தெரிவித்தல் அவசியம்.
6. கடன் பெற விண்ணப்பித்தல், கடன் பெறுதல் போன்ற நிகழ்ச்சிகளில் இடைத்தரகர்கள் மற்றும் உறவினர்களின் உட்புகுதல் அனுமதிக்கப்படமாட்டாது எனவும், இடைத்தரகர்களை ஊக்குவிக்க வேண்டாம் எனவும் பயனாளிகள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.
7. தாட்கோ கடன் பெறுதலில் பயனாளிகள் கையூட்டு அளித்தலும், இடைத்தரகர்கள் போன்றோர் கையூட்டுப் பெறுதலும் தண்டனைக்கு உரியதாகும்.
8. தாட்கோவின் மூலம் கடன் உதவிப் பெற்ற பயனாளி சொத்தினை உருவாக்கி, தனது வருமானத்தைப் பெருக்கி சமுதாயத்தில் உயர்வடைவதுடன், பெற்ற வங்கி கடன் மற்றும் தாட்கோ விளிம்புத் தொகையினை உரிய தவணைகளில் வங்கி மூலமோ அல்லது வங்கி மற்றும் த்ாட்கோ அலுவலகத்திற்கு உரிய தொகையினைத் தனித் தனியாகவோ செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.
9. தாட்கோவில் பெற்ற கடனை திரும்பச் செலுத்தும் தொகையே தொடர்ந்து பலருக்கு கடன் வழங்கப் பயன்படுகிறது என்பதைப் பயனாளிகள் நன்கு உணர்ந்து கடன் தொகையினை திரும்பச் செலுத்துவதில் சுணக்கம் காட்டக் கூடாது எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ★

# வன வளர்ப்பு



தரம் குன்றிய வனப்பகுதிகளை வளமாக்கும் நோக்கத்துடன் தமிழகத்தில் முதன் முதலாக கூட்டு வன நிர்வாக முறையில் 'தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்' என்ற ஒரு உன்னதமான திட்டம் பன்னாட்டு ஜப்பான் கூட்டுறவு வங்கி உதவியுடன் 1997–98–ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகளுக்குச் சுமார் ரூ.500 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு மரவகைகளை உருவாக்குதல், தீவிர மண்வளப் பாதுகாப்பு மற்றும் நீர்வளத்தை அதிகரித்தல், வன உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், எரிமரம் போன்ற கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், இயற்கைச் சூழல் சமன்பாட்டை மீளச்செய்தல் ஆகியவை இத்திட்டத்தின் தலையாய நோக்கங்களாகும். ஒவ்வொரு ஆண்டும் 40 சதவிகிதத்திற்குக் குறைவான மர அடர்த்தியுள்ள தரம் குன்றிய வனப்பகுதிகளை ஒட்டியுள்ள 200 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, திட்ட செயல்பாட்டின் எல்லா நிலைகளிலும் உள்ளூர் மக்களின் முழுமையான ஈடுபாடும், பங்கேற்பும் உறுதி செய்யப்படுகிறது. வனத்தை நம்பி வாழ்க்கை நடத்தும் கிராம மக்களை மாற்றுத் தொழிலில் ஈடுபடுத்தி வனங்களை அழிவிலிருந்து காப்பதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

**நீர்ப்பிரிமுகடு மேம்பாடு :**

இத்திட்டமானது நீர்ப்பிரிமுகடு (WATERSHED) அடிப்படையில் செயற்படுத்தப்படுவதால் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மேற்கொள்ளப்படும் மண்வளம் மற்றும் நீர்வளப் பணிகளினால் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து தங்குதடையற்ற நீர்வளம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள மண் மற்றும் நீர்வள மேம்பாட்டுப் பணிகளினால் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் பலப்படுத்தப்பட்டு நிலத்தடி நீர் அதிகரித்து பல போக பயிர் விளைச்சலும் மேற்கொள்ளப்படுவதால் இத்திட்டம் மிகவும் பாராட்டப்படுகிறது.

**வெளிப்படையான தன்மை :**

இத்திட்டம் உள்ளூர் மக்கள் அடங்கிய வனக்குழுவினரால் செயல்படுத்தப் படுவதாலும், செலவினங்கள் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் தகவல் பலகைகள், துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் ஆகியவை மூலம் விளம்பரப்படுத்தப் படுவதாலும் திட்டம் குறித்த வெளிப் படையான செயல்பாடு உறுதிபடுத்தப் படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களில், இதர துறைகளினால் செயல்படுத்தப்படும் முன்னேற்றப் பணிகளையும் ஒருங்கிணைத்து கிராமத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு வழிவகை செய்யப்படுவதால் இத்திட்டத்திற்கு கிராம மக்களிடையே மிகுந்த வரவேற்பு உள்ளது. கிராம மக்களின் ஒத்துழைப்பு கிடைப்பதால் அருகிலுள்ள வனப்பகுதிகளை மேய்ச்சல் மற்றும் திருட்டு வெட்டுக்களிலிருந்து பாதுகாக்கப் பெற்று இயற்கை வன உற்பத்தி பெருகி சுற்றுப்புறச் சூழல் மேம்பட்டுள்ளது.



**மாற்று வேலைவாய்ப்பு :**

திட்டம் நிறைவேற்றப்பட்ட 600 கிராமங்களில் வனத்தை நம்பி வாழ்க்கை நடத்தும் கிராம மக்களுக்கு மாற்று வேலைவாய்ப்புகள் பெற பயிற்சி, நிதி உதவி அளித்தல் மற்றும் கிராம சமுதாயப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிராம மக்களுக்கு கயிறு திரித்தல், செங்கல், ஊறுகாய், வயர்கூடை, தைலம், மெழுகுவர்த்தி, அகர்பத்தி, அப்பளம் தயாரித்தல், பாய்முடைதல், மீன், தேனீ, காளான் வளர்ப்பு, தையல் பயிற்சி, ஓட்டுநர் பயிற்சி போன்ற கிராம மக்களுக்கு வருவாய் ஈட்டித்தரும் தொழில்கள் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**பயன்கள் பங்கீடு :**

இத்திட்டம் நிறைவேற்றப்படும் கிராமங்களை ஒட்டியுள்ள வனப்பகுதிகளின் தொடர்ந்த பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்துடன் அவ்வனப்பகுதிகளில் விளையும் விறகு மற்றும் இலந்தை, புளி, பசுந்தழை மரம் போன்ற சிறு வனப் பொருட்களை எவ்வித கழிப்புமின்றி அக்கிராம வனக்குழு உறுப்பினர்கள் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளது.

**திட்ட முன்னேற்றம் :**

இத்திட்டத்தின் முதலாம் ஆண்டான 1997–98–இல் ரூ.45.20 கோடி செலவில் 200 கிராமங்களைச் சுற்றி 61,014 ஹெக்டேர் பரப்பளவிலும், 198 கிலோ மீட்டர் நீளத்திலும் மரம் உற்பத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின் இரண்டாம் ஆண்டான 1998–99–இல் ரூ.95.20 கோடி செலவில் 200 கிராமங்களைச் சுற்றி 88,548 ஹெக்டேர் பரப்பளவிலும், 300 கிலோ மீட்டர் நீளத்திலும் மரம் உற்பத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின் மூன்றாம் ஆண்டான 1999–2000–இல், ரூ.95.48 கோடி செலவில் 200 கிராமங்களைச் சுற்றி 75,407 ஹெக்டேர் பரப்பளவிலும், 400 கிலோ மீட்டர் நீளத்திலும் மரம் உற்பத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நடப்பு ஆண்டான 2000–2001–இல் 75,450 ஹெக்டேர் மற்றும் 300 கிலோ மீட்டர் பரப்பளவில் ரூ.107.06 கோடி செலவில் தரம் குன்றிய காடுகளைச் சுற்றியுள்ள 200 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

## சொரகளத்தூர் கிராமம்

**சமூகப் பொருளாதார நிலை :**

திருவண்ணாமலை மாவட்டத்தில் இருந்து சுமார் 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சொரகளத்தூர் கிராமம் பொருளாதாரத்தில் மிகவும் பின்னடைவு அடைந்து, தண்ணீர் பற்றாக்குறையினால் வேளாண்மையில் மிகவும் குறைந்த அளவு விளைச்சல் உள்ள கிராமமாகும். இக்கிராமத்தில் சுமார் 559 குடும்பங்கள் வாழ்கின்றனர். இக்கிராமத்தில் நீர்ப்பிடிப்பு பகுதி தரம்குன்றி காணப்படுவதாலும், விளைச்சலில் பின்னடைவு அடைந்த நிலைமை காணப்படுவதாலும் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்கள் 48% காணப்படுவதாலும், இவற்றினை மேம்பாடு செய்யும் எண்ணத்தோடு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தினை இக்கிராமத்தில் செயலாக்க தேர்ந்தெடுக்கப்பட்டது.

**கிராம வனக்குழு :**

சொரகளத்தூர் கிராமத்தில் கூட்டுவன மேலாண்மை அறிமுகப்படுத்தப்பட்டு இத்திட்டத்தின் பயனையும், இயற்கை வன வளங்களைப் பாதுகாப்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் பொதுமக்களுக்கு துறை அலுவலர்களால் எடுத்துக் கூறப்பட்டது. 522 ஆண்கள், 545 பெண்கள் மற்றும் செயற்குழுவில் 17 ஆண்கள், 7 பெண்கள் உள்ளிட்ட கிராம வனக்குழு ஆரம்பிக்கப்பட்டது.

**வன வள மேம்பாட்டுப் பணிகள் :**

சொரகளத்தூர் காப்புக்காட்டில் 300 ஹெக்டேர் பரப்பளவில் காடு வளர்க்கும் பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, 1.2 இலட்சம் கன்றுகள், மண் வளம் மற்றும் சிறுவன மகசூல் தேவையை கருத்தில் கொண்டு வளர்க்கப்பட்டது. சிறுவன மகசூலில் நீண்ட கால பயிர் வகையைக் கருத்திற்கொண்டு 4,700 மூங்கில், 7,700 புளி, 2,300 நெல்லி, 6,000 விலான் மற்றும் 5,000 நாவல் கன்றுகள் வளர்க்கப்பட்டது. மேற்படி கன்றுகள் நல்ல வளர்ச்சி அடைந்துள்ளன. இக்கிராமத்தில் 35 தடுப்பணைகள் கட்டப்பட்டு மழைநீர் சேகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இரண்டு மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டது. இதனால் 344 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் பயனடைந்தன. மருத்துவ குணமுள்ள தாவரங்கள் மற்றும் நாவல், புங்கன், புளி முதலிய கன்றுகள் நடப்பட்டுள்ளது. எரிபொருள் மற்றும் மாட்டுத்தீவன தேவையைப் பூர்த்தி செய்து வனவளங்கள் அழிவதை பாதுகாக்க எரிபொருள் மற்றும் தீவனம் வழங்கும் வங்கிகள் பஞ்சாயத்து நிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**சமூக நலப்பணிகள் :**

சொரகளத்தூர் கிராமத்தில் மக்களின் அத்தியாவசிய தேவைகள் அதிகம் இருப்பினும், இடைதாங்கு மண்டலத்தின் கீழ் முக்கியமான தேவைகள் நிறைவேற்றப்பட்டது. அவைகள் பின்வருமாறு :

நூலகம்,
ரேணுகாம்பாள் கோவில் சுற்றுச்சுவர்,
டிவிரூம் கட்டுதல்,
மேல்நிலைத்தொட்டி அமைத்தல்.

**[illegible]வாய்ப்பும்**
**[illegible] பெருக்கமும் :**

[illegible] தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் [illegible] கிராமத்திற்கு தேவையான வசதிகள் மற்ற [illegible] மூலமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. [illegible] சம்பாதிக்கும் திறன் குறைவாக உள்ளதால் [illegible] மாற்று வேலைவாய்ப்பின் மூலமாக வருமானத்தைப் பெருக்க வழிவகை செய்யப்பட்டு தேவையான பொருட்கள் வழங்கப்பட்டது. இதன் மூலம் 330 கிராம மக்கள் பயனடைந்துள்ளனர்.

**சுய உதவிக்குழுவும் பெண்கள் மேம்பாடும் :**

பெண்களுக்கான சுய வேலை வாய்ப்பு குழு அமைக்கப்பட்டு அவர்களுக்கு தையல், மஹிளா நர்சரி, சாயம் மற்றும் ஊறுகாய் தயார் செய்தல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது. இதனால் 70 பெண்கள் பயனடைந்து ரூ.76,993 வருமானம் அடைந்துள்ளார்கள்.

**தொண்டு நிறுவன ஈடுபாடு :**

சொரகளத்தூர் திட்ட கிராமத்தில் செயல்பட்டு வரும் இரண்டு தொண்டு நிறுவனங்களான "எக்ஸ்னோரா" மற்றும் "ரிவஸ்" மூலமாக கிராம மக்களுக்கு மருத்துவ முகாம் மற்றும் பயிற்சிகள் அளிக்கப்பட்டது.

**கூட்டு வன நிர்வாகத்தின் வெற்றி :**

கூட்டுவன மேலாண்மையின் வெற்றி அக்கிராமத்தில் இயங்கி வரும் கிராம வனக்குழுவின் பங்கேற்பினை பொறுத்து அமையும். சொரகளத்தூர் கிராமத்தில் கிராம வனக்குழுவினர் இதற்கு ஒரு சான்றாக அமைந்துள்ளனர். கிராம வனக் குழுவினர், வனத்துறை களப்பணியாளர்களுடன் ஒத்துழைப்பு நல்கி வனவளர்ப்புப் பணிக்குத் தேவையான கூலியாட்களைக் கிராமத்திலிருந்து சேகரித்து அளித்து வெளியாட்கள் கூலியாட்களாக பயன்படுத்துதல் தவிர்க்கப்பட்டுள்ளது. மேய்ச்சல் மற்றும் அத்துமீறி நுழைந்து வனத்தை சேதப்படுத்துதல் போன்றவை வனப் பகுதியில் அறவே நிறுத்தப்பட்டுள்ளது. கிராம வனக் குழுவினரின் தீவிர கண்காணிப்பினால் வனப்பகுதிகள் பாதுகாக்கப்பட்டு, மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு ரூ.72,280 வசூலிக்கப் பட்டுள்ளது. இதனால் கன்றுகள் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. கிராம வனக்குழுவினரினால் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கு மனித சக்தி மற்றும் பொருட்கள் மூலம் ரூ.20,990—க்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும் சொரகளத்தூர் கிராமத்தில் இயங்கிவரும் கிராம வனக்குழுவினர் ரூ.2 இலட்சம் சேகரம் செய்து உயர்நிலைப்பள்ளி அமைக்க தலைமை பள்ளி அலுவலரிடம் முதலீடு செய்துள்ளனர்.



கிராம வனக்குழுவினரால் ரூ.45,000 அளிக்கப்பட்டு வரவேற்பு வளைவு அமைக்கப்பட்டுள்ளது. முடப்படும் நிலையிலிருந்த பால் வழங்கும் சங்கத்தில் ஒரு நாளைக்கு 1 கேன் அளவு பால் உற்பத்தி செய்த நிலை மாறி ஒரு நாளைக்கு 15 கேன் அளவு பால் உற்பத்தி பெருக வழிவகை செய்யப்பட்டுள்ளது. கிராம வனக்குழு நிதியில் ரூ.1,32,120 சேமிப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய முன்மாதிரியான செயல்பாட்டினால் சொரகளத்தூர் கிராமம் ஊரக வளர்ச்சியில் ஒரு சிறந்த இடம் பெற்றுள்ளது.

## புதூர் பாலப்பட்டி கிராமம்

**அறிமுகம் :**

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், நெடுங்காலமாக புறக்கணிக்கப்பட்டு வந்து பிற்போக்கு நிலையிலிருந்த கிராமங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு அடிகோலியுள்ளது. இதற்கான ஒரு உதாரணம் புதூர்பாலப்பட்டி கிராமமாகும். நாமக்கல் மாவட்டம், ஆத்தூர் வனக்கோட்டம், தம்மம்பட்டி சரகத்தில் கொல்லிமலையில் அமைந்துள்ள மலைவாழ் மக்கள் வசிக்கும் புதூர்பாலப்பட்டி கிராமத்தில் 1997—98—ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**திட்ட செயல்பாடுகள் :**

இக்கிராமத்தை சார்ந்துள்ள வனப்பகுதிகளைப் பாதுகாப்பதில் இம்மலைவாழ் மக்களின் உளமார்ந்த ஈடுபாட்டை உறுதி செய்வதற்காக மலைவாழ் மக்களுக்கு பலவித சமுதாய மற்றும் தனிநபர் பயன் அளிக்கும் பல முன்னேற்றப் பணிகளைத் தமிழ்நாடு வனத்துறை மேற்கொண்டதுடன் தன்னார்வுதொண்டு நிறுவனங்களின் உதவியுடனும், இதர அரசு துறைகளின் மூலமும் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் முக்கியமாக அக்கிராமத்தில் வாழ்ந்து வந்த அனைத்து குடும்பங்களுக்கும் அவர்களின் பழைய குடிசை வீடுகளுக்கு பதிலாக 36 நன்கு திட்டமிடப்பட்ட கல்வீடுகள் ஆத்தூர் ரோட்டரி சங்கத்தினர் ரோட்டரி இண்டர்நேஷனலின் நிதி உதவியுடன் கட்டிக் கொடுத்துள்ளனர். இவ்வீடுகள் அவர்களுக்கு 20.10.99 அன்று உரிமையாக்கப்பட்டன. இதற்காக ரோட்டரி இண்டர்நேஷனல் ரூ.18,40,000 மானியம் வழங்கியுள்ளது. கிராம வனக்குழு தன் பங்காக ரூ.1,78,880—ஐ செலுத்தியுள்ளது. அரசுக்கு எவ்வித செலவும் இல்லாமல் அதே சமயம் அனைத்து மலைவாழ் மக்களுக்கும் நிரந்தர கல் வீடுகள் கட்டிக்கொடுத்திருப்பது அக்கிராம மக்களை இத்திட்டத்தின் கீழ் முழு ஈடுபாடு கொள்ள செய்திருக்கிறது. இதன் விளைவாக அருகிலுள்ள காப்புக்காட்டில் மேய்ச்சல் ஒழிக்கப்பட்டு, திருட்டு வெட்டுகளும் தடுக்கப்பட்டுள்ளதால், அறவே அழிந்த நிலையில் இருந்த சந்தன மரம் மீண்டும் புத்துயிர் பெற்று வனப்பகுதி அடர்த்தி 75 சதவிகிதத்திற்கு அதிகரித்துள்ளது.

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இடைதாங்கு மண்டலப்பகுதியில் கீழ்க்கண்ட சமுதாய மற்றும் தனிநபர் வருவாய் ஈட்டுப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**சமுதாய நலப்பணிகள் :**

சமுதாயக்கூடம் மற்றும் சமையல் அறை

நெற்களம் – இரண்டு (பெரிய கோம்பை மற்றும் புதூர்பாலப்பட்டி)

குடிநீர் வசதிக்காக குழாய்கள் அமைத்தல்

**மாற்று வேலைவாய்ப்பும்**
**வருமானப் பெருக்கமும் :**

இரண்டு தட்டச்சுகள் (ஒன்று ஆங்கிலம் – ஒன்று தமிழ்) கிராம வனக்குழுவுக்கு வழங்கப்பட்டு இருவருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இரண்டு தையல் இயந்திரங்கள் மற்றும் ஒரு எம்ப்ராய்டரி தையல் இயந்திரம் கிராம வனக்குழுவுக்கு வழங்கப்பட்டு இரண்டு ஆண்கள் மற்றும் மூன்று பெண்களுக்கு தையல் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பதிமூன்று நபர்களுக்கு தலா ரூ.5,000 வீதம் கறவை மாடுகள் வாங்குவதற்கு வட்டியில்லா கடன் அளிக்கப்பட்டு 10 மாத தவணைகளில் பிடித்தம் செய்யப்படவுள்ளது.

கூடை முடைதல், ஒயர் கூடைகள் பின்னுதல் ஆகிய பயிற்சிகள் 5 ஆண்களுக்கும் 20 பெண்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

100 குடும்பங்களுக்கு கோழி வளர்ப்பிற்காக தலா 7 கோழிக் குஞ்சுகள் அளிக்கப்பட்டுள்ளது.

தலா ரூ.4,800 வீதம் இரண்டு விசை தெளிப்பான்கள் கிராம வனக்குழுவுக்கு வழங்கப்பட்டு தேவைப்படும் நபர்களால் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

மிகவும் ஏழையாக உள்ள விவசாய தொழிலாளர்களுக்கு விவசாய கருவிகள் வாங்கி இலவசமாக வழங்கப்பட்டு அவர்கள் வருமானம் பெருக வழிவகுக்கப்பட்டுள்ளது.

கிராம மக்கள் தங்கள் வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தி செய்ய பழவகை மரங்கள் இலவசமாக அளிக்கப்பட்டு அவர்கள் வருமானம் அதிகரிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**இதர துறைகளின் ஒருங்கிணைப்பு :**

இவற்றைத் தவிர இதர துறைகள் மூலம் கீழ்க்கண்ட சமுதாய நலப்பணிகள் இக்கிராமத்தில் செய்யப்பட்டுள்ளன.

- தம்மம்பட்டி – பெரியகோம்பை சாலையில் ரூ.33 இலட்சத்தில் ஒரு பாலம் நெடுஞ்சாலைத் துறையினரால் அமைக்கப்பட்டுள்ளது.
- தம்மம்பட்டி– பெரியகோம்பை சாலையை நாமகிரிப்பேட்டை பஞ்சாயத்து யூனியன் தார்சாலையாக மாற்றியுள்ளது.
- கால்நடை பராமரிப்புத்துறை 240 கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி போட்டுள்ளது.
- ஆத்தூர் ரோட்டரி சங்கம் கண் சிகிச்சை முகாம் நடத்தி 140 நபர்களுக்குச் சிகிச்சை அளித்ததுடன், 3 நபர்களைத் துறையூர் அழைத்து சென்று கண் அறுவை சிகிச்சையும் அளித்துள்ளது.

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்த தொடங்கியதிலிருந்து புதூர்பாலப்பட்டி கிராம மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளதுடன் அடுத்துள்ள வனப்பகுதிகளும் புத்துயிர் பெற்றுள்ளது என்பது கண்கூடாகும்.

## குருவார்பட்டி கிராமம்

**கிராம பொருளாதார நிலை :**

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் இருந்து சுமார் 60 கிலோ மீட்டர் தொலைவில் வடக்கு திசையில் திருச்சி – திண்டுக்கல் – மதுரை ஆகிய மாவட்டங்கள் சந்திக்கும் முச்சந்தியில் வெள்ளிமலை அடிவாரத்தில் அமைந்துள்ள ஒரு குக்கிராமம்.

குருவார்பட்டி, கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் கொட்டாம்பட்டி பஞ்சாயத்தில் அடங்கிய இக்குக்கிராமத்தில் சுமார் 292 ஏழை குடும்பங்கள் வாழ்கின்றனர். இக்குக்கிராமத்தில் உள்ள மக்கள் அனைவருமே ஏழை விவசாயக் கூலிகள். எவ்வித ஆற்றுப்பாசனமும் இன்றி, கிணற்றுப் பாசனத்தையே நம்பியுள்ள இக்கிராம மக்கள் பெரும்பாலும் நிலமற்ற ஏழைகள். இக்கிராமத்தில் உள்ள நிலங்கள் அனைத்துமே பெரும் நிலச்சுவான்தாரர்களுக்குச் சொந்தமானவை. அவர்கள் மதுரை, மேலூர் போன்ற நகரங்களில் இருந்து கொண்டு நிலங்களை சிறு சிறு துண்டுகளாக்கி குத்தகைக்கு விட்டும் அல்லது விவசாயம் செய்யாமல் மரப்பயிர்கள் வளர்த்து வருகின்றார்கள். இவர்களது நிலங்களில் இக்கிராம மக்கள் கூலி வேலை செய்தும், அறுவடை காலங்களில் வெளியூர்களுக்கு கூலி வேலைக்குச் சென்றும், இதர நாட்களில் நத்தம், சிங்கம்புணரி போன்ற இடங்களில் இருந்து தென்னந்தோப்புகளில் தென்னை ஓலைகள் கொள்முதல் செய்து வந்தும், அவற்றை பின்னி வெளியாட்களுக்கு விற்றும், வயிறு வளர்த்து வருகிறார்கள். ஓரிரண்டு வீடுகளை தவிர பெரும்பாலானவை கூரை வீடுகள். இந்த பொருளாதார பின்னணியில் உள்ள இக்கிராம மக்கள் விறகுகள் வெட்டவும், வருவாய் ஈட்டும் நோக்கத்துடன் தாம் வாங்கி வளர்த்து வரும், வெள்ளாடுகளை, மேய்ப்பதற்கும் மதுரை வனச்சரகரின் பொறுப்பில் உள்ள 391.92 எக்டர் பரப்பளவுள்ள வெள்ளிமலை ஒதுக்குக் காட்டை நம்பியிருந்தார்கள்.

### கிராமம் தேர்வு செய்யப்படுதல் :

1998–இல் ஜனவரி மாதத்தில் ஒருநாள் தமிழ்நாடு வனத்துறையில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் தமிழ்நாடு வனவளர்ப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் நடப்பதை தெரிந்து கொண்டு, மதுரை மண்டல வனப் பாதுகாவலர் அவர்களையும், மாவட்ட வன அலுவலர் அவர்களையும், நேரில் சந்தித்து அவர்களது கிராமத்திற்கு இத்திட்டத்தை நடைமுறைபடுத்தி கிராமத்தின் உயர்வுக்கு வழிகோல வேண்டும் என்று வேண்டிக் கொண்டுள்ளதை தொடர்ந்து அவர்களும் சம்பந்தப்பட்ட கிராமத்தை நேரில் சென்று பார்வையிட்டு மக்களின் வறுமை, அறியாமையை போக்கினால் தரம் குன்றி உள்ள இந்த மலைப்பகுதியைத் தரமான வனமாக மாற்றுவதற்கு வாய்ப்பு உள்ளது என்று அறிந்து கொண்டனர். அதனடிப்படையில் இக்கிராமம் 1998–99–இல் தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### வன மேம்பாட்டுப் பணிகள் :

இன்றைய நிலையில் இத்திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு குறியீடு இலக்கு எய்தப்பட்டுள்ளது. நீர் ஆதார பணிகள் முழு அளவில் செய்வதற்கு இந்த ஒதுக்குக்காட்டில் போதிய வாய்ப்புகள் இல்லாமல் இருந்தபடியால், சுமார் 80 ஹெக்டேர் பணிகள் இக்கிராமத்திற்குச் சற்று தொலைவில் உள்ள வலைசேரிபட்டி ஒதுக்குக் காட்டிற்கு மாற்றப்பட்டது. இந்த வெள்ளிமலை ஒதுக்குக் காட்டில் 7 சிமெண்ட் நீர் தடுப்பாணைகளும், 30 வெற்றுக்கல் தடுப்பாணைகளும் நல்ல முறையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 11,410 நீர்ப்பிடிப்பு குழிகளும் வெட்டி, பெய்யும் மழை நீர் ஒரு சொட்டு கூட வெறுமனே வீணாவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் வனத்திலிருந்து மண் அரித்து செல்வது முற்றிலுமாக தடுக்கப்பட்டுள்ளது.



நாற்று நடவுப்பணிகளும் குறியீட்டின்படி முடிக்கப்பட்டுள்ளது.

### கிராம வனக்குழு அமைத்தல் :

கூட்டு வன மேலாண்மையில் இக்கிராம மக்கள் கொண்டுள்ள ஆர்வம் பெரிதும் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளது. கிராம வனக்குழுவில் மகளிருக்கும், சிறுபான்மையோருக்கும், உரிய பிரதிநிதித்துவம் அளித்து கிராம வனக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதர உள்ளாட்சி மன்றத்திலுள்ள உறுப்பினர்களும் 'அலுவல் சாரா' (Ex-Officio) உறுப்பினர்களாக சேர்க்கப் பட்டுள்ளார்கள். வனக்குழு தலைவரும், இதர உறுப்பினர்களும் இத்திட்டத்தை மக்களிடையே விளக்கிச் சொல்லி குடும்பங்களிலுள்ள ஆண், பெண்



ஆகிய இருபாலார்களையும் கிராம வனக்குழு உறுப்பினர்களாக சேர்த்து உள்ளார்கள்.

### கிராம நலப்பணிகளும் மாற்று வேலைவாய்ப்பும் :

வெளிமண்டல பணிகளை பொறுத்தவரையில் கிராமத்திற்கு வழங்கப்பட்ட நிதிகள் பின்வருமாறு பயன்படுத்தப்பட்டுள்ளது.

| | பணிகள் விவரம் | ஒதுக்கீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1. | கயிறு திரிக்கும் பயிற்சி வழங்கி தொழில் உபகரணங்கள் வாங்க செலவிட்டது (10 கயிறு திரிக்கும் எந்திரம்) | 31,500 |
| 2. | தையல் தொழில் கற்பிக்க தையல் எந்திரங்கள் வாங்கி பயிற்சி அளிக்க செலவிட்டது தளவாடச்சாமான்கள் உள்பட | 31,933 |
| 3. | கால்நடை, மருத்துவ முகாம் நடத்த செலவிட்டது | 1,773 |
| 4. | பள்ளி செல்லும் மாணவர்களுக்கு மாலை நேர டியூசன் வகுப்பை மற்றும் முதியோர் கல்வி நடத்த செலவிட்டது | 14,090 |
| 5. | அரவிந்த் கண் மருத்துவமனையுடன் இணைந்து கண் மருத்துவ முகாம் நடத்தியது | 4,000 |
| 6. | அரசு பள்ளியில் தளவாடச் சாமான்கள் வாங்கி வழங்கிய வகையில் செலவிட்டது | 2,600 |
| 7. | பள்ளி மற்றும் கிராம இளைஞர்களுக்கு விளையாட்டு கருவி வாங்க செலவிட்டது | 3,335 |
| 8. | கிராமத்தில் குடிநீர் பற்றாக்குறையை போக்க ஆழ்குழாய் கிணறு அமைக்க செலவிட்டது | 42,550 |
| 9. | கிராம வனக்குழுவுக்கு நிலம் வாங்க செலவிட்டது | 15,469 |
| 10. | அ) 10 நபர்களுக்கு தலா ரூ.7000 வீதம் பசுமாடு வாங்கி சுயதொழில் செய்ய சுழல் நிதி வழங்கிய வகையில் | 70,000 |
| | ஆ) பிளாஸ்டிக் கூடை முடைதல் மற்றும் பாய்கள் அலங்காரப் பொருட்கள் செய்யும் தொழிலுக்கு சுழல்நிதி வழங்கியது | 15,000 |
| | இ) தென்னை ஓலை மூலம் ஓலை வெய்யும் தொழில் செய்ய சுழல் நிதி வழங்கியது | 30,250 |
| | ஈ) தென்னந்தோப்புகளிலிருந்து ஓலைகளை கிராமத்திற்கு கொண்டுவர தேவைப்படும் சைக்கிள் வாங்க சுழல்நிதி வழங்கியது | 17,500 |
| | உ) தேநீர் கடைகள் நடத்த சுழல் நிதி வழங்கியது | 3,000 |
| | ஊ) பலசரக்கு கடை நடத்த சுழல்நிதி வழங்கியது | 10,000 |
| | எ) காய்கறி கடை நடத்த சுழல்நிதி வழங்கியது | 3,000 |
| 11. | செருப்பு தைக்கும் தொழிலாளிக்கு உபகரணங்கள் வாங்க நிதியுதவி | 1,000 |
| 12. | சலவை தொழிலாளர்களுக்கு தேய்ப்பு பெட்டிகள் வாங்கி இலவசமாக வழங்கியது | 3,000 |
| | மொத்தம் | 3,00,000 |

### மாற்று வேலைவாய்ப்பும் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளும் :

இந்த கிராமத்தை பொறுத்தவரை பெரும்பாலும் ஏழை மக்களாக இருப்பதால் அன்றாட கூலி வேலை செய்து வரும் வருமானத்தை நம்பியே இக்குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. விவசாயம் அல்லாத காலங்களில் ஆடு மேய்த்தும், தென்னை ஓலைகளைக் கொண்டு கிடுகு முடைந்தும், வாழ்ந்து வருகின்றனர். விவசாயத்திற்கு அடுத்தபடியாக இக்கிராம மக்களின் பிரதான தொழில் கிடுகு முடைதலே. கிடுகு முடைவதன் மூலம் ஒரு குடும்பம் சராசரி ரூ.50 முதல் ரூ.60 வரை வருமானம் பெறுகின்றன. ஆனால் உற்பத்தி செய்யும் கிடுகுகள் அன்றாடம் விற்பனை ஆவதில்லை. வாரம் ஒரு முறை அல்லது 10 நாளைக்கு ஒருமுறை பெரிய நகரங்களிலிருந்து வியாபாரிகளும், இடைத்தரகர்களும் வந்து லாரியில் கிடுகுகளை ஏற்றி செல்கின்றனர். கையில் உள்ள நிதி தீர்ந்ததும் தொடர்ந்து தென்னை ஓலை வாங்க பணம் இல்லாமல் 75% க்கும் மேலான மக்கள் 'கந்து வட்டிக்கு' 'கந்து வட்டிக்காரர்களிடமிருந்து' வட்டிக்கு பணம் கடனாக

பெற்று தொழில் செய்ய பயன்படுத்துகின்றனர். அவ்வாறு வழங்கப்படும் கடன் தொகைக்கு கடுமையான வட்டி செலுத்தி என்றென்றும் கடனாளியாகவே கிராம மக்கள் வாழ்கின்றனர். உதாரணமாக ரூ.500 கடனாக பெறும் ஒருவர் கடன் பெறும் அன்றே ரூ.100க்கு ரூ.25 வீதம் ரூ.125 வட்டியாகவும் ரூ.10 எழுத்துக் கூலியாகவும் மொத்தம் ரூ.135 முதலிலேயே செலுத்த வேண்டும். ரூ.500 கடன் தொகைக்கு உண்மையில் கடன் வாங்குபவர் பெறுவது ரூ.365 மட்டுமே. இந்த ரூ.365ஐ வாரத்திற்கு ரூ.50 வீதம் 10 தவணைகளில் ரூ.500–ஐ திருப்பிச் செலுத்த வேண்டும். இதை ஆண்டு வட்டி விகிதத்தை கணக்கிட்டால் வட்டி 17.8% ஆகிறது. எனவே இக்கிராமம் என்றும் கடன்பட்ட கிராமம் ஆகவே வாழ்ந்து வந்தது. வனத்துறை இந்த கிராமத்தை தத்து எடுத்த பின்பு இந்த செய்தி மாவட்ட வன அலுவலரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டபோது எப்படியும் கந்து வட்டிக்காரர்களின் பிடியிலிருந்து கிராம மக்களை விடுவிக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் 100 குடும்பங்களுக்கு ரூ.1000 வீதம் வட்டியில்லாமல் சுழல் நிதியாக வழங்கப்பட்டு கிராம மக்கள் பயன்பெறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. படிப்படியாக கிராம மக்கள் கடன் தொல்லையிலிருந்து மீண்டு வருகின்றனர். இவ்வாறு வழங்கப்பட்ட ரூ.1000, 15 நாட்களுக்கு ஒருமுறை தலா ரூ.100 வீதம் ஐந்து மாத காலத்தில் சுழல் நிதிக்கு திருப்பி செலுத்தப்படுகிறது. நிதியுதவி பெறும் கிராம மக்கள் தலா ரூ.50 வீதம் கிராம வனக்குழுவிற்கு நன்கொடையாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு கிராம வனக்குழு நிதியை பலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**குழு காப்பீட்டுத்திட்டம் :**

இது அல்லாமல் ஏழைகளாக இருந்த கிராம மக்களைப் பலவகையிலும் மேம்பாடு அடைய செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் முதல் கட்டமாக 101 நபர்கள் மதுரை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மூலம் தனி நபர் விபத்து காப்பீடு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த திட்டத்தின் பாலிசி தொகை ரூ.10,000 பிரிமியம் ஆண்டுக்கு ரூ.25. இந்தத் திட்டத்தை குழு காப்பீட்டுத் திட்டமாக வனத்துறை உதவியுடன் கிராம வனக்குழுவினர் அறிமுகப் படுத்தியுள்ளதால் சலுகை வழங்கப்பட்டுள்ளனர். இதன்படி ஒரு தனி நபர் ரூ.15 பிரிமியம் ஆக ஐந்து ஆண்டுகளுக்குச் செலுத்த வேண்டும். இவ்வளவு குறைந்த பிரிமியத்தை வனத்துறை மூலம் முயற்சி செய்து பெறப்பட்டுள்ளது. இந்த ரூ.15 பிரிமியம் தொகையில் ரூ.10 தனிநபரும், ரூ.5 கிராம வனக்குழு நிதியிலிருந்தும் செலுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் அனைத்து கிராம வனக்குழு உறுப்பினர்களுக்கும் நன்கொடையாக வழங்க விரிவு படுத்தப்படவுள்ளது.

**நிரந்தர வேலைவாய்ப்பு :**

கிராமத்தில் வாங்கப்பட்ட நிலத்தில் ஒரு தொழிற்சாலை நிர்மானித்து குறைந்த பட்சம் ஐம்பது கிராம மக்களுக்காவது நிரந்தர வேலைவாய்ப்புக்கு வழி ஏற்படுத்தி கிராம வனக்குழு அதன்படி முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டக் கிராமம் – குருவார்பட்டி – காடுகளின் நிலை :**

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் குருவார்பட்டி கிராமத்தில் நடைமுறைபடுத்தப்பட்ட பிறகு அருகாமையில் உள்ள காப்புக் காடுகளின் நிலைமை தற்போது மாறியுள்ளது. அழிந்து வரும் காடுகளின் நிலை தற்போது தடுக்கப்பட்டு நல்ல முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. கால்நடை மேய்ச்சல் முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளதால், காடுகள் அழிவிலிருந்து காக்கப்பட்டு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. நீர்வள மேம்பாட்டுப்பணி மற்றும் இடைதாங்கு மண்டலம் மூலமாக கிராமத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தினால் கிராம மக்கள் காட்டிற்குள் நுழைவது தடுக்கப்பட்டுள்ளது. இதனால் மக்களுக்குக் காடுகளினால் மறைமுகமாக கிடைக்கும் பயன்களை அவர்கள் உணர்ந்துள்ளனர். நீர்த்தேக்க தடுப்பாணைகளினால் மண் அரிப்பு தடுக்கப்பட்டு பயிர்களின் நிலையில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. மனிதர்கள் மற்றும் கால்நடைகளின் இடையூறுகள் இல்லாத காரணத்தினால் வனவிலங்குகளின் இனப்பெருக்கம் இக்காடுகளில் அதிகரிக்கப்பட்டுள்ளது. காட்டெருமை, சிறுத்தைப்புலி, மயில் மற்றும் இதர பறவை இனங்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகிறது. இவ்வனவிலங்குகள் அருகிலுள்ள எண்ணிக்கை அதிகமாக காணப்படுகிறது. இவ்வனவிலங்குகள் அருகிலுள்ள கிராமங்களுக்கு கோடைக் காலங்களில் தண்ணீர் தேடி வரும் பொழுது பயிர்கள் அழிக்கப்படுவதை தவிர்க்கும் பொருட்டு இரண்டு நீர்நிலை தேக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட செயல்கள் கிராம மக்களிடம் சுய கட்டுபாட்டினை ஏற்படுத்தி காடுகள் அழிவதிலிருந்து காக்கப்பட்டு சுற்றுப்புற சூழ்நிலையில் கடந்த நாற்பது ஆண்டுகளாக காணப்படாத முன்னேற்றம் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள நிலை ஒரு கிராமத்தின் முன்னேற்றக் கதையாகும். ●

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 தொலையச்சு : 5368926





| வ.எண் | மாதச் சந்தா | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா | கூடுதல் தொகை (3+4) | அரசு தள்ளுபடி | அங்கத்தினர்களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |




ஈரோடு மாவட்டம் - பவானி


கன்னியாகுமரி மாவட்டம் - காந்திபுரம்


பெரம்பலூர் மாவட்டம் - இலம்பாலு


திருவள்ளூர் மாவட்டம் - சோழவரம்


விருதுநகர் மாவட்டம் - தயிலப்பட்டி


தென்னம்பட்டி


மதுரை மாவட்டம் - அலங்காநல்லூர்


தஞ்சை மாவட்டம் - சுந்தரபெருமாள்கோயில்


நீலகிரி மாவட்டம் - உபதலை


கோவை மாவட்டம் - காரமடை


திருவள்ளூர் மாவட்டம்


நாகப்பட்டினம் மாவட்டம் - கோனேரிரா

# கலைஞர் அரசில்

## கிராமங்கள்தோறும் கான்கிரீட் சாலைகள்


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2031
ஆனி
ஜூன் 16-30, 2000
மலர் : 31 இதழ் : 24
விலை ரூ.5


முதல் பக்க அட்டையில்

கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரி, திருச்சி

இரண்டு மற்றும் மூன்றாம் அட்டையில்

கிராமங்கள்தோறும் கான்கிரீட் சாலைகள்

நான்காம் அட்டையில்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கரூர் மற்றும் நாமக்கல்

இந்த இதழில்...


- திருச்சியில் கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரி ---------- 2
- ஊரக வளர்ச்சிப் பணிகள் ---------- 5
- தாய்மொழியில் கல்வி ஏன் வேண்டும்? ---------- 15
- கிராமங்கள்தோறும் கான்கிரீட் சாலைகள் ---------- 17
- கல்கத்தா - மும்பையில் தமிழ் மையம் ---------- 18
- நான்காண்டு காலத்தில் 10 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் ---------- 19
- சுற்றுச் சுவர்களுடன் கல்நார் கூரை வீடு ---------- 20
- முதுகு வலியைப் போக்க... ---------- 21
- மனித யந்திரம் ---------- 23
- ஒசூரில் ஒரு சாதனை ---------- 30
- திருப்பெரும்புதூர் களிமண் படிவங்கள் ---------- 31
- டேனிடா குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டம் ---------- 36
- கதவைத் தட்டும் வாய்ப்பு ---------- 38


---

**திருக்குறள்**

*நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்.*

நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும். (உடல் நோய்க்கு மட்டுமின்றிச் சமுதாய நோய்க்கும் இது பொருந்தும்).

*- கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*

222187

# திருச்சியில்
# கி. ஆ. பெ. விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரி
## – விழாவில் முதலமைச்சர் கலைஞர்

கி.ஆ.பெ.விசுவநாதம் என்பது ஒரு தனி மனிதருடைய பெயரல்ல. இந்தத் தென்னகத்தில் வளர்ந்த தமிழ் இயக்கத்தினுடைய வரலாற்றுக் கூறு. அதனுடைய மொத்தப் பதிப்பு தான் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள்.

சின்னஞ்சிறு வயது முதல் நான் அவர்களை அறிவேன். மாணவப் பருவத்திலே, நான் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்ட அந்தக் காலக் கட்டத்தில் அத்தகைய தூண்டுதல் எனக்கு ஏற்படுத்தியவர்களுள் அண்ணன் கி.ஆ.பெ. அவர்களும் ஒருவராவார். தந்தை பெரியார் அவர்களோடும், பேரறிஞர் அண்ணா அவர்களோடும் கலந்து திராவிட இயக்கத்தை தமிழகத்திலே வளர்ப்பதற்கு அடிகோலியவர். அதன் பிறகு அவர்கள் அந்த இயக்கத்திலே நிலைத்து நிற்காமல் வேறு வழி சென்றாலும் அவ்வழியும் தமிழை வாழ வைக்கின்ற வழியாக, தமிழுக்கு ஏற்றம் தருகிற வழியாக அமைந்து தமிழகத்தில் எல்லா துறைகளிலும் தமிழ் மணம் கமழ வேண்டுமென்று விரும்பியவர் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள்.

சுயமரியாதை இயக்கத்தை வளர்த்த பெருமை பலருக்கு உண்டென்றாலும், அதில் சிறப்பான பெருமைக்குரியவர் முத்தமிழ்க் காவலர் அவர்கள். நீதிக் கட்சியில் சுயமரியாதை இயக்கத்தில் அடியெடுத்து வைத்து தொண்டாற்றிய அந்தக் காலத்தில், திருச்சியிலே விசுவநாதம் என்று ஒருவர் இருக்கிறார் என்று சொல்வார்கள். அவரைப் பற்றி திருச்சியில் வந்து விசாரித்தால், "விசுவநாதம் பிள்ளை வீடா?" என்று கேட்பார்கள், இப்போது என்னவோ முதலியார் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அப்போது விசுவநாதன் பிள்ளை என்று தான் சொல்வார்கள். அந்த 'பிள்ளை' என்ற பட்டப்பெயரை விட்டுவிட்டு வெறும் விசுவநாதம் ஆக – கி.ஆ.பெ.விசுவநாதம் ஆக மாறி– பிறகு தமிழ் மக்களால் 'முத்தமிழ்க் காவலர்' என்று மகுடம் சூட்டப்பட்டு எனக்கு அண்ணனாகத் திகழ்ந்தார். மறைந்தும் மறையாத அந்த மாணிக்கம் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள்.

இங்கே ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்பதற்காக அவர் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல. எத்தனையோ முறை என்னைச் சந்திருக்கிறார். என்னை மாத்திரமல்ல, யார் தமிழகத்தின் முதலமைச்சராக பதவி ஏற்கிறார்களோ அவர்களையெல்லாம் சந்தித்து, "திருச்சியில் மருத்துவக் கல்லூரியை தொடங்க நான் இவ்வளவு முயற்சிகளை எடுத்திருக்கிறேன். அந்த முயற்சி முற்றுப்பெற நீங்கள் உடனடியாக ஆவன செய்யுங்கள்" என்று எல்லா முதல் அமைச்சர்களிடமும் படையெடுத்து – அவைகள் எல்லாம் பயனற்றுப் போயின. எனினும் அவருடைய கனவை நிறைவேற்ற வேண்டும் என்கிற உணர்வோடு – இந்த அரசு இந்த மருத்துவக் கல்லூரியை இங்கே உருவாக்கியிருக்கிறது.

இந்த மருத்துவக் கல்லூரி இங்கே உருவாக நான் தான் காரணம் என்று சொன்னார்கள். கி.ஆ.பெ.விசுவநாதம் பெயரால் உருவாவதற்கு நான் காரணமாக இருக்கலாம். ஆனால் கல்லூரி உருவாக வேண்டும் என்று விரும்பிய என்னுடைய எண்ணத்தை ஈடேற்றிய அந்தப் பெருமை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி அவர்களுக்கும், ஒரு அருமையான கட்டடத்தை மருத்துவக் கல்லூரியாகக் கூட அல்ல, ஒரு பல்கலைக்கழகம் போலவே இங்கே கட்டி, எனக்கு காட்சி தருகிற வகையில் அதை உருவாக்கியிருக்கின்ற பொதுப்பணித் துறை அமைச்சர் தம்பி துரைமுருகனுக்கும், இதற்கான முயற்சிகளில் அரும்பாடு பட்டு, தினந்தோறும் ஒயாதுழைத்த தம்பி நேருவிற்கும், கண்ணும் கருத்துமாக இந்தப் பணியிலே ஈடுபட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் மூர்த்தி அவர்களுக்கும் பொதுப்பணித் துறை பொறியாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் இந்த நல்ல நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கெல்லாம் என்னுடைய பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்.

ஏனென்றால், திருச்சியில் மாத்திரமல்ல, தென்னகத்திலேயே எந்தவொரு நகரத்திலும், எந்தவொரு மாவட்டத் தலைநகரத்திலும் ஏன் மாநில தலைநகரத்திலும் கூட இப்படியொரு கல்லூரி இவ்வளவு அழகாக, எழிலார்ந்த முறையில் கட்டடக்கலையின் எல்லா சிறப்புக்களையும் பெற்று அமையவில்லை என்பதை நெஞ்சை நிமிர்த்தி என்னால் சொல்ல முடியும். அந்தப் பெருமையை திருச்சிக்கு தந்துள்ள அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் நான் மீண்டும் மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**திட்டங்களை நிறைவேற்றுவதில் முதலிடம் வகிக்கும் திருச்சி மாவட்டம்**

திருச்சியைப் பொறுத்து என்னிடத்தில் ஒரு பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. அது முழுக்க முழுக்க உண்மையான சரியான பட்டியல்.

திருச்சி மாவட்டம் மூர்த்தி அவர்களுடைய நிர்வாகத்தில் சிறுசேமிப்பு இயக்கத்தில் தமிழகத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ள மாவட்டம். கொடி நாள் வசூலில் தமிழகத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ள மாவட்டம் திருச்சி மாவட்டம். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலும் முதல் இடத்தைப் பெற்றுள்ள மாவட்டம் திருச்சி மாவட்டம். பொது விநியோக முறையில் முதல் இடத்தைப் பெற்றுள்ள மாவட்டம். குழந்தை தொழிலாளர் சீரமைப்பில் இந்தியாவிலேயே பிற மாநிலங்களுக்கு முன் மாதிரி மாவட்டமாகத் திகழ்வது திருச்சி மாவட்டம்.

ஒருங்கிணைந்த ஊட்டச்சத் துணவு திட்டத்தில் முதல் இடம் பெற்றுள்ள மாவட்டம் திருச்சி மாவட்டம். கட்டட மையத்தில் இந்தியாவில் இரண்டாவது இடம் – தமிழகத்தில் முதல் இடம் பெற்றுள்ள மாவட்டம்; ஊனமுற்றோர் மறுவாழ்வில் முதலிடம் பெற்றுள்ள மாவட்டம்; வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் முதல் இடத்தைப் பெற்றுள்ள மாவட்டம், பட்டா மாறுதல் செய்யும் பணியில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ள மாவட்டம். ஊரக இளைஞர் விளையாட்டு மையங்களை நிறுவுவதிலும், முதல் இடம் பெற்றுள்ள மாவட்டம், நல்ல கலெக்டரைப் பெற்றுள்ள மாவட்டங்களிலும் திருச்சியும் ஒரு மாவட்டம் என்று குறிப்பிட்டு நான் அவரைப் பாராட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

**எதிர்கால ஒளிவிளக்குகளாக மாணவர்கள் திகழவேண்டும்**

திருச்சி மாநகருக்கு எழிலார்ந்த ஒரு கட்டடத்தைத் தந்தது மாத்திரமல்ல. அதிலே பயிலுகின்ற மாணவர்கள் எதிர்கால ஒளிவிளக்குகளாகத் திகழ வேண்டும் என்கிற எதிர்பார்ப்போடு இந்தக் கட்டடம் இங்கே திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. அப்படி அந்த மாணவர்கள் திகழ்ந்தால் தான் இந்த மருத்துவக் கல்லூரிக்கு எந்த முத்தமிழ்க் காவலர் பெயர் சூட்டப்பட்டிருக்கிறதோ அவருக்குப் பெருமை யார் இதைத் திறந்து வைத்திருக்கிறோமோ அந்த அமைச்சர்களுக்குப் பெருமை. முதல் அமைச்சராக இருக்கிற எனக்குப் பெருமை. அந்த மாணவர்களை தமிழகத்திற்கு ஈன்றளித்த பெற்றோர்களுக்குப் பெருமை. அவர்களுக்கு பயிற்சி தந்த ஆசிரியர்களுக்குப் பெருமை. அந்த வகையிலே மாணவர்கள் ஒத்துழைக்க வேண்டும். நல்ல பெயரைத் தேடித்தர வேண்டும். இந்த மருத்துவக் கல்லூரிக்கு என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவத் துறையில் இந்த ஆட்சியைப் பொறுத்த வரையில் முன்னேற்றமான – விஞ்ஞான ரீதியான பல திட்டங்களையெல்லாம் இன்றைக்குப் பயன்படுத்தி வருகிறது என்பதை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இங்கே கோடிட்டுக் காட்டினார். அந்தத் திட்டங்களை நாட்டு மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பயன்படுத்திக் கொள்ளத் தெரியாத, இன்னும் அதைப் பற்றி அறியாத மக்கள், நகர்ப்புறத்திலே அதிகமாக இல்லாவிட்டாலும் கூட, நாட்டுப்புறங்களில், கிராமப்புறங்களில் ஏராளமாக இருக்கிறார்கள்.





## “தமிழகத்தில் எல்லா துறைகளிலும் தமிழ் மணம் கமழ வேண்டுமென்று விரும்பியவர் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்.”

**வருமுன்காப்போம் திட்டத்தில் 3,667 முகாம்கள்**

அவர்களுக்கெல்லாம் வழி காட்டத் தக்க வகையிலே தான் கடந்த ஆண்டு வரும்முன் காப்போம் என்கிற ஒரு திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தி அந்தத் திட்டத்தின்படி இன்றைக்கு பல இடங்களில் முகாம்களை ஏற்படுத்தி அந்த 3,667 முகாம்களுக்கு 33 இலட்சத்து 3,021 பேர் வருகை தந்து பரிசோதனை செய்து கொண்டிருக்கிறார்கள். இதிலே தொடர் சிகிச்சைக்காக பக்கத்திலே உள்ள பெரிய மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டவர்கள் ஒரு இலட்சத்து 97 ஆயிரத்து 452 பேர்.

இவர்கள் எல்லாம் தங்களுக்கு என்ன வியாதி வரக்கூடும் என்று அறியாமல் இருந்தவர்கள். அல்லது வந்த பிறகு கூட என்ன வியாதி வந்திருக்கிறது என்று தெரியாமல் கிராமப்புறத்திலே சுருண்டு கிடந்தவர்கள். அவர்களையெல்லாம் நேரிலேயே சென்று அரசுத்துறை மருத்துவர்கள் சந்தித்து – பரிசோதித்து சிகிச்சை அளித்திருக்கிறார்கள். முகாம்களிலே சிகிச்சை போதாது – பெரிய மருத்துவமனையிலே தான் சிகிச்சை பெற வேண்டுமென்ற நிலை இருக்குமேயானால் அந்த இடங்களுக்கு அவர்களை அனுப்பி வைக்கும் வழி வகைகளைச் செய்து இன்றளவும் அந்தத் தொண்டினை செய்து வருகின்ற அரசு தான் உங்கள் அரசு.

நான் இரண்டு நாட்களுக்கு முன்பு நாமக்கல் சென்றிருந்தேன். நாமக்கல்லில், இந்த திட்டத்தை எப்படி செயல்படுத்துகிறோம் என்பதை அந்த மாவட்ட ஆட்சித்தலைவர் என்னிடத்திலே விவரித்து அதற்கான விளக்க கையேட்டை என்னிடத்திலே தந்தார்.

அதிலே உள்ள புகைப்படங்களைப் பார்த்தேன். நாமக்கல் வரும்முன் காப்போம் முகாமிற்கு வந்த ஒரு பெண்மணிக்கு வயிற்றிலே கட்டி இருக்கிறது. அந்த அம்மையாரால் வயிற்றை வலிக்கிறது என்று தான் சொல்ல முடிந்தது. அதுகூட நாம் நேராகச் சென்று அவரை முகாமிற்கு அழைத்து வந்து பரிசோதித்த பிறகு தான் தெரிந்தது. அங்கே எக்ஸ்ரே எடுத்தார்கள். வயிற்றுக்குள் பெரிய கட்டி இருப்பதைத் தெரிந்து கொண்டார்கள். உடனடியாக நாமக்கல் மருத்துவமனைக்கு அவரை முகாமிலிருந்து அழைத்துச் சென்றார்கள். அங்கே அறுவை சிகிச்சை நடைபெற்றது. அவருடைய தலையைவிட பெரிய கட்டி கர்ப்பப் பையிலே இருந்ததை அறுவை சிகிச்சை மூலம் எடுத்திருக்கிறார்கள். அதையெல்லாம் புகைப்படம் எடுத்து என்னிடம் காட்டினார்கள்.

நான் எண்ணிக் கொண்டேன். எவ்வளவு பயனுள்ள ஒரு காரியத்தை இந்த வரும்முன் காப்போம் திட்டத்தின் மூலம் நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதை எண்ணி எனக்கு நானே மகிழ்ச்சியடைந்தேன். ஆறுதல் பெற்றேன்.

இப்படி பல தாய்மார்களுடைய நலன் காக்க– அவர்களுக்கு வந்துள்ள நோய் என்ன என்பதை அறிந்து கொள்ள– அறிந்த பிறகு அதைத் தீர்த்து வைக்க – வருவதற்கு முன்பே வராமல் தடுக்க இருக்கக்கூடிய திட்டம் தான் வரும்முன் காப்போம் திட்டமாகும். அந்தத் திட்டமும் இந்த ஆட்சியிலே மருத்துவத் துறையிலே ஒரு பிரிவாக இன்றைய தினம் உங்களிடத்திலே கடைப்பிடிக்கப்படுகிறது. அதையும் தமிழ்நாட்டு மக்கள் நல்ல முறையிலே ஆதரித்து வருகிறார்கள். அவர்களுடைய ஆதரவு இன்று போல் என்றென்றும் எங்களுக்கு இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அந்த ஆதரவின் அடிப்படையிலே தான் திருச்சி மாநகரத்தில் இந்த அளப்பரிய பெருமை வாய்ந்த அழகான அரண்மனை போன்ற கட்டடத்தை மருத்துவக் கல்லூரிக்காக நாம் கட்டியிருக்கிறோம். இந்த கட்டடத்திலே பயிலுகின்ற மாணவர்கள் எதிர்கால ஒளிவிளக்காக தமிழகத்திலே திகழ வேண்டுமென்று அவர்களையெல்லாம் வாழ்த்தி இந்த நல்ல விழாவிலே கலந்து கொண்டு அண்ணன் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் பெயரால் ஒரு கல்லூரியை திறந்து வைத்ததிலே நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

– திருச்சியில்
கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரிக் கட்டடத்தை திறந்துவைத்து
26–6–2000 அன்று ஆற்றிய உரையிலிருந்து...

★ ★ ★



தமிழகத்திலுள்ள மொத்த மக்கள் தொகையில் 65 சதவிகிதம் கிராமப்புறங்களில் உள்ளனர். கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும், ஊரகப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டு கிராமப்புற வளர்ச்சிக்காக ஊரக வளர்ச்சித் துறையின் நிதி ஒதுக்கீட்டை, இந்த அரசு ஆண்டுதோறும் கணிசமாக உயர்த்தியுள்ளது. 1995–96–இல் ரூ.373.02 கோடியாக இருந்த ஊரக வளர்ச்சித்துறையின் ஒதுக்கீட்டை, 1996–97–இல் ரூ.494.76 கோடியாகவும், 1997–98–இல் ரூ.787.90 கோடியாகவும், 1998–99–இல் ரூ.1,185.63 கோடியாகவும், 1999–2000–இல் ரூ.1,225.73 கோடியாகவும், 2000–2001–ஆம் ஆண்டிற்கு ரூ.1,317.94 கோடியாகவும் உயர்த்தியுள்ளது.

கிராமப்புற வளர்ச்சியை கருத்தில் கொண்டு, மாநில அரசு தனது நிதியிலேயே முழுமையான, கிராம வளர்ச்சிக்கான “அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்”, மக்களை நேரடியாக திட்ட செயலாக்கத்தில் ஈடுபடுத்த வழிவகுக்கும் “நமக்கு நாமே திட்டம்” தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை முன்னுரிமைப்படி தெரிவு செய்து செயல்படுத்த சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், சமத்துவம், சகோதரத்துவத்தை மக்களிடையே ஏற்படுத்த ஏதுவாக “சமத்துவபுரம்” போன்ற முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### கடந்த நான்கு ஆண்டுகளில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்

ஊரகப் பகுதிகளில், 1,75,965 கைப்பம்புகளும், 37,956 விசைப்பம்புகளும், 461 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் உள்ளன. ஊரகப் பகுதிகளில், குழாய் மூலம் குடி தண்ணீர் வழங்குவதற்கான திட்டங்கள் வழக்கமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் விரைவுபடுத்தப்பட்ட குடிநீர் வழங்கல் திட்டம், மற்றும் குறைந்தபட்ச தேவைகள் திட்டம், ஆகியவற்றின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. இருந்தபோதிலும், குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குவதை விரிவாக்கம் செய்வது மற்றும் கைப்பம்புகள் பொருத்துவது முதலானவை கிராம ஊராட்சிகளால் மேற்கொள்ளப்படுகின்றன. 28 மாவட்டங்களில் உள்ள 5,642 குடியிருப்புகளை உள்ளடக்கிய வகையில் செயல்படுத்தப்படும், 461 கூட்டுக் குடியிருப்புத் திட்டங்கள் நீங்கலாக, விசைப்பம்புகள் உள்ளிட்ட எஞ்சிய அனைத்து குடிநீர் விநியோகத் திட்டங்களும் உள்ளாட்சி அமைப்புகள் மூலமே பராமரிக்கப்பட்டு வருகின்றன. போதுமான குடிநீர் ஆதாரம் இல்லாத குடியிருப்புகள், ஆகியவற்றில் போதுமான குடிநீர் ஆதாரங்களை ஏற்படுத்தும் நோக்கத்துடன், கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்கள், தமிழ்நாடு வடிகால் வாரியத்தின் மூலம் ஊரகப்பகுதிகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதுதவிர, உள்ளாட்சிகளில் கீழ்க்கண்டுள்ளவாறு புதிய கைப்பம்புகள் நிறுவப்பட்டுள்ளன.

| வருடம் | எண்ணிக்கை |
|---|---|
| 1996–97 | 4,765 |
| 1997–98 | 8,349 |
| 1998–99 | 7,733 |
| 1999–2000 | 11,084 |



செயலர், ஊரக வளர்ச்சித்துறை

கிராமங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட பெரிய அளவிலான முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது. மேலும் நகரப்பகுதிகளில் உள்ள வசதிகளைப் போன்றே, கிராம ஊராட்சிப் பகுதிகளிலும் குடிநீர் வழங்கல் வசதிகளை ஏற்படுத்த அரசு முனைப்பாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் தான், ஊரகப் பகுதிகளில் வாய்ப்புள்ள இடங்களில் வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு வழங்கிட அனுமதித்து, முதன் முறையாக 9-12-98இல் அரசாணை வழங்கியுள்ளது. ஊரகப் பகுதிகளில், 8,49,446 வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு வழங்கிட வாய்ப்புள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, விதிமுறைக்குப் புறம்பான முறையில் உள்ள குடிநீர் இணைப்புகளில் 2,19,639 குடிநீர் இணைப்புகளை முறைப்படுத்திடவும், எஞ்சியுள்ள 1,04,887 இணைப்புகளைத் துண்டித்திடவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் இணைப்பு ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் மொத்தம் ரூ.84.90 கோடி திரும்பச் செலுத்தப்படாத வைப்புத் தொகையாக, உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நிதி ஆதாரம் கிடைக்கப்பெறும். அத்துடன், குடிநீர் இணைப்பு பெற்றுள்ள வீடு ஒன்றுக்கு ரூ.30 வீதம், மாதாந்திர குடிநீர் கட்டணமாக, நிதி ஆதாரம் திரட்டவும் வழிவகை உள்ளது. பயனுள்ள பணிகளின் வாயிலாக, உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி ஆதாரத்தை அதிகரிக்கச் செய்யும் அளவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் இது முதன்முறையான நடவடிக்கையாகும்.





எனினும் அ) மிகக் குறைந்த நிலத்தடி நீர் ஆதாரத்தைக் கொண்ட கடின கற்பாறைகள் நிறைந்த பகுதிகளிலும் ஆ) உப்பு நீரால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் இ) புளோரைடினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்துவதில் அரசுக்கு அதிக இடர்ப்பாடுகள் இருந்து வருகிறது. குடிநீர் பற்றாக்குறையுள்ள பகுதிகள் பெரும்பாலும் மேற்கூறப்பட்ட மூன்று இனங்களுக்குள் அடங்கியுள்ளமையால், அவ்விடங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்த அதிக அளவிலான முதலீடு செய்து மிகப் பெரிய அளவிலான திட்டங்களை நிறைவேற்ற வேண்டியுள்ளது. எனினும், அவ்வாறு தேவைப்படும் மிகப் பெரிய அளவிலான திட்டங்களை நிறைவேற்றி, குடிநீர் பற்றாக்குறையை அகற்றி, தேவையான நிதிஆதாரத்தைத் திரட்டிட, அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது.

**தெரு விளக்குகள்**

குடிநீருக்கு அடுத்தபடியாக, மக்களுக்கு மிக இன்றியமையாதது தெரு விளக்குகள் அமைப்பது. எனவே,. போதுமான தெருவிளக்குகள் இல்லாத குடியிருப்புகளில், தெருவிளக்குகளை அமைத்திட அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. அத்துடன் பெரிய ஊராட்சிகள் ஒரு சிலவற்றில், சோடியம் ஆவி விளக்குகளை அமைத்து, விளக்கு வசதியினை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

1996-97-ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி, 50,000 புதிய தெரு விளக்குகள் அமைக்க வேண்டியிருந்தது. எனவே, 1997-98-ஆம் ஆண்டில் 27,907 தெருவிளக்குகள் அமைக்க ரூ.7.28 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டது. 1998-99-ஆம் ஆண்டில் 35,284 தெருவிளக்குகள் அமைக்க, சமன்பாடு மற்றும் ஊக்க நிதி மானியத்தில் இருந்து ரூ.12.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பல்வேறு பிற திட்டங்களின் நிதியை ஒருங்கிணைத்து, 1996-97-ஆம் ஆண்டு முதல் 1999-2000-ஆம் ஆண்டு வரை 34,583 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டன. ஆக மொத்தம் 90,097 தெருவிளக்குகள் கடந்த நான்காண்டுகளில் அமைக்கப்பட்டன. 1998-99-ஆம் ஆண்டில் 10,000 தெருவிளக்குகளும், 1999-2000-ஆம் ஆண்டில் 2,000 தெருவிளக்குகளும், சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன. பத்தாவது நிதிக்குழு மானியம், பொதுநிதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் உள்ள நிதி ஆதாரத்தைப் பயன்படுத்தி, கூடுதலான தெருவிளக்குகளை அமைத்திட உள்ளாட்சி நிறுவனங்கள் முயற்சி மேற்கொண்டுள்ளன.

**சாலைகள் மற்றும் தெருக்கள்**

கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு ஊரகச் சாலைகள் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. தென் மாநிலங்களுக்கிடையே கேரள மாநிலத்திற்கு அடுத்தபடியாக, அதிக சாலை நெருக்கம் உடைய பெருமை தமிழ்நாட்டுக்கு உள்ளது. ஊரகப் பகுதிகளில் அனைத்துக் காலங்களிலும் பயன்படுத்தக்கூடிய நல்ல தளமுள்ள சாலை வசதிகளைக் கொண்ட தென் மாநிலங்களில் தமிழ்நாடு முதலாவதாக உள்ளது. கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ள ஊரகச்சாலைகளின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அவற்றை படிப்படியாக தார்ச்சாலைகளாக மாற்றுவது என 1989-ஆம் ஆண்டில் தமிழக அரசால் மிக முக்கியமான கொள்கை முடிவெடுக்கப்பட்டது. முதன் முறையாக, தமிழ்நாட்டில் கிராமங்களில் அதிக அளவில் சாலைகளை தார்ச்சாலைகளாக, மாற்ற நடவடிக்கைகள் துவக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகள் 1990-91-ஆம் ஆண்டிற்குப் பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது. இதனை, 1996-97-ஆம் ஆண்டில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. கடந்த நான்கு ஆண்டுகளில் கீழ்க் கண்டுள்ளவாறு கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படும் சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

| வருடம் | கி.மீ. |
|---|---|
| 1996-97 | 5,713.80 |
| 1997-98 | 4,888.48 |
| 1998-99 | 6,314.69 |
| 1999-2000 | 3,982.97 |
| மொத்தம் | 20,899.94 |

சாலைகள் அமைப்பதில் உள்ளாட்சி நிறுவனங்களால் பின்பற்றப்பட்டு வந்த இளகிய கனத்திற்குப் பதிலாக, ஊரகச் சாலைகள் திட்டத்தின் கீழ், நெடுஞ்சாலைத்துறையில் அனுசரிக்கப்பட்டு வருவது போன்ற இறுகிய கனத்துடனேயே ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகளை அமைப்பதென 1999-2000-இல் தமிழக அரசால் மிக முக்கியமான மற்றொரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, ஊரக வளர்ச்சித்துறையில் சாலைகள் இறுகிய கனத்துடனேயே அமைக்கப்படுகின்றன. 1989-90-ஆம் ஆண்டில் 4,418 கி.மீ. ஆக இருந்த ஊரகப் பகுதி தார்ச்சாலைகளின் நீளம் மேற்கூறப்பட்ட முயற்சி மற்றும் நடவடிக்கைகளின் காரணமாக 1999-2000-ஆம் ஆண்டில் 22,866 கி.மீ. ஆக உயர்ந்துள்ளது. வேளாண் விளைபொருட்களை சந்தைக்கு விரைவாக எடுத்துச்



செல்வதற்கு ஏதுவாக, முக்கிய மாவட்ட சாலைகள் மற்றும் இதர மாவட்ட சாலைகளுடன், கிராமங்களை இணைக்கும் வகையில், சாலைப் பணிகளுடன், சிறு பாலங்கள் மற்றும் கல்வெர்ட் பணிகளும் மேற்கொள்ளப் படுகின்றன. தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சி மற்றும் நபார்டு திட்டத்தின் கீழ், நெடுஞ்சாலைத் துறையின் ஊரகச் சாலைகள் பிரிவின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றுவதற்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. இதுவரை தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் நபார்டு திட்டத்தின் கீழ் 6,101.88 கி.மீ சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



1999–2000 மற்றும் 2000–2001–ஆம் ஆண்டுகளில் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பில் உள்ள சாலைகளில் 11,651 கி.மீ. நீளத்திற்குரிய சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றுவதென தமிழக அரசால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 1999–2000–ஆம் ஆண்டில் 3,982 கி.மீ. நீளத்திற்குரிய சாலைகள் தார்ச்சாலைகளாக மேம்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 7,669 கி.மீ. நீளத்திற்குரிய சாலைகள் 2000–2001–ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும். நடைமுறையில் உள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் கீழ், இப்பணிகள் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படுவதுடன், நபார்டு திட்டத்தின் ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.120 கோடி மற்றும் அரசுக் கடன் பத்திர வெளியீட்டின் மூலம் ரூ.100 கோடி திரட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்முயற்சிகளின் காரணமாக ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்கென கணிசமான நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறும்.




கிராமத்தில் உள்ள தெருக்களையும், சந்துகளையும் கான்கிரீட் தளத்துடன் கூடியதாக மேம்படுத்த 1999–2000–ஆம் ஆண்டில் தமிழக அரசால் முக்கிய கொள்கை முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. 1999–2000 மற்றும் 2000–2001 ஆகிய இரண்டு ஆண்டுகளில் 5,000 கி.மீ. நீளத்திற்குரிய கிராமத் தெருக்கள் மற்றும் சந்துகளை கான்கிரீட் தளமுடையதாக மேம்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு மேம்பாடு செய்யப்பட்ட கான்கிரீட் தளமுடைய தெருக்கள் பலவகையான தேவைகளுக்கு பயன் அளிக்கக்கூடிய சொத்துக்களாக அமைவதால், மேற்கண்டவாறு கான்கிரீட் தளமுடைய தெருக்களாக மாற்றும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பு உள்ளது. 1999–2000–ஆம் ஆண்டில் 2,000 கி.மீ. வரையிலான தெருக்கள் மட்டுமே மேம்பாடு செய்ய





உத்தேசிக்கப்பட்டிருந்தாலும், 2,905 கி.மீ. நீளத்திற்குரிய தெருக்கள் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டன. 2000–2001 – ஆம் ஆண்டில் 3,000 கி.மீ. நீளத்திற்குரிய தெருக்கள் எடுத்துக் கொள்ளப்படும். பொது மக்களின் ஒத்துழைப்பின் காரணமாக, நிர்ணயிக்கப்பட்ட 5,000 கி.மீ விட கூடுதலான சாதனையை அடைந்துவிடலாம் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### ஊரக வீட்டு வசதி

ஊரகப் பகுதி மக்களுக்கு எல்லா காலங்களிலும், குடியிருப்புக்கு உகந்த தரமான வீடுகளை அமைத்துத் தருவது அரசின் பிரதான நோக்கம். ஊரகப்பகுதி ஏழை மக்களுக்கு கான்க்ரீட் கூரையுடன் கூடிய இலவச வீடுகளை, முதலில் தமிழக அரசுதான் அறிமுகப்படுத்தியது. பல்வேறு திட்டங்களின் கீழ், 1988–89 வரை மாநில அரசே ஆதிதிராவிட மக்களுக்கு 1,00,658 வீடுகளை கட்டித்தந்துள்ளது. இந்த நடவடிக்கை மத்திய அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டு, இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் என்ற பெயரில் புதிய ஊரகக் குடியிருப்புத் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. முந்தைய ஆண்டுகளில், இத்திட்டம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், ஒரு துணைத் திட்டமாக செயலாக்கப்பட்டு வந்திருப்பினும் 1.4.1996–ஆம் தேதி முதல் தனியானதொரு திட்டமாக அறிமுகப்படுத்தப் பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட வீடுகள் :

| வருடம் | வீடுகள் எண்ணிக்கை |
|---|---|
| 1996–97 | 71,615 |
| 1997–98 | 56,618 |
| 1998–99 | 46,018 * |
| 1999–2000 | 38,841 ** |

* குறைந்த பட்ச அடிப்படை வசதிகள் திட்டத்தின் கீழ் 4,688 வீடுகள் உட்பட

** 15,589 கச்சா வீடுகள் மேம்படுத்துதல் உள்பட

1999–2000 முதல் மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ் (அ) குடியிருக்க இயலாத கச்சா வீடுகளை, வீடு ஒன்றுக்கு ரூ.10,000 செலவினத்தில் மேம்படுத்துதல் மற்றும் (ஆ) வறுமைக் கோட்டிற்குச் சற்று மேல் உள்ள குடும்பங்களுக்கு மானியம் ரூ.10,000–த்துடன் மற்றும் ரூ.40,000 வரை கடனுதவியுடன் கூடிய, மானியத்துடன் கூடிய கடனுதவித் திட்டம் என இரு பகுதித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. குடியிருக்க இயலாத கச்சா வீடுகள் திட்டத்தின் கீழ், மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டிற்கு மேல் தேவைப்பட்ட எஞ்சிய செலவினம் அனைத்தையும், மாநில அரசு நிதியில் இருந்து மேற்கொண்டு, குடியிருக்க இயலாத கச்சா வீடுகள் மேம்படுத்தல் திட்டத்தின் கீழான வீடுகளையும் புதிய வீடுகளாகவே கட்டித் தருவது என

மாநில அரசால் முடிவு மேற்கொள்ளப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 15,589 வீடுகளுமே புதிய கான்க்ரீட் வீடுகளாகவே கட்டப்பட எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், மாநில அரசால் போதுமான அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாநில அரசின் 25 சதவிகித பங்குத் தொகையுடன் கான்கீரீட் கூரைக்கான கூடுதல் செலவினத்தையும், மாநில வரவு செலவுத் திட்டத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தின் கீழ் உள்ள செலவினத்தில் மாநில அரசின் சுமை மிக அதிகமானதாகும். தற்போதைய நிதி ஒதுக்கீடு பின்வருமாறு:

| | இனம் | செலவினம் ரூ. |
|---|---|---|
| 1. | மத்திய அரசு பங்கு | 15,000 |
| 2. | மாநில அரசு பங்கு | 5,000 |
| 3. | கான்க்ரீட் கூரை செலவினம் | 12,000 |
| | மொத்தம் | 32,000 |

மேற்கூறப்பட்ட முயற்சிகளோடு மட்டுமல்லாமல் 1997–98 மற்றும் 1998–99–ஆம் ஆண்டுகளில் ரூ.15 கோடி செலவில் 29,889 வீடுகள் பழுது பார்க்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும் ரூ.15 கோடி செலவில், 5,148 வீடுகள் புதுப்பித்து கட்டப்பட்டுள்ளன. 1998–99–ஆம் ஆண்டில் குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் திட்டத்தின் கீழ், 4,688 வீடுகள் புதியதாக கட்டப்பட்டுள்ளன. எனவே இந்த அரசின் இப்படிப்பட்ட சீரிய முயற்சிகளால், 7,30,550 வீடுகள் ஊரகப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி, வறுமைக் கோட்டிற்கு சற்றே மேற்பட்ட குடும்பங்கள் பயன்பெறும் அளவில், மானியத்துடன் கூடிய கடனுதவி திட்டத்தின் கீழ், 2,339 வீடுகளுக்கு நிதியுதவி 1999–2000–இல் அளிக்கப்பட்டுள்ளது.

**ஊரக சுகாதாரம்**

ஊரக சுகாதாரம் என்பது, கழிவறை வசதிகளை ஏற்படுத்துதல், கழிவுநீர் அகற்றல், திடப்பொருள் கழிவினை அகற்றுதல், கிராம சுற்றுப்புற சுகாதாரம் முதலான அம்சங்களைக் கொண்டது. கழிவறை வசதிகளை ஏற்படுத்துதல் தொடர்பாக தனிப்பட்ட நபர்களின் வீடுகளில் கழிவறைகள் அமைப்பதை ஊக்குவித்தல், சமுதாய கழிவறைகளைக் கட்டி பராமரித்தல், பள்ளிகள் மற்றும் சத்துணவு மையங்களில் கழிவறைகளை அமைத்தல் முதலானவற்றில், உள்ளாட்சி அமைப்புகளால் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிராமங்களில், ஊரக சுகாதார வசதிகளை மேம்படுத்தும் அளவில் செயல்படுத்தும் திட்டங்களின் மத்திய அரசின் ஊரக சுகாதாரத் திட்டமானது மிகவும் முக்கியமானதாகும். இந்தத் திட்டமானது, 1986–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. 1999–2000 – ஆம் ஆண்டில் இத்திட்டமானது திருத்தியமைக்கப்பட்டு, திருத்தியமைக்கப்பட்ட ஊரக சுகாதாரத் திட்டம் என பெயரிடப்பட்டுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட இத்திட்டத்தில் பெரிய அளவிலான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. (அ) தனி நபர் வீட்டு கழிவறைக்கான மானியம் கழிவறை ஒன்றுக்கு ரூ.2,000 – த்திலிருந்து ரூ.500 ஆக கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மற்றும் நிறுவனங்களுக்கான கழிவறைகளுக்கு மானியம் ரூ.18,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ஆ) இலக்கீட்டின் அடிப்படையிலான ஒதுக்கீட்டிலிருந்து, மூன்று ஆண்டு காலத்தில் படிப்படியாக திட்ட அடிப்படையிலான ஒட்டு மொத்த சுகாதார இயக்கத்திற்கு மாறுதல் செய்யப்படும்.





திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து மத்திய ஊரக சுகாதாரத் திட்டத்தின் கீழ் 3,49,591 தனிநபர் வீட்டுக் கழிவறைகள் கட்ட எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட கழிவறைகளின் விவரம் பின்வருமாறு:

| வருடம் | தனிநபர் கழிவறைகள் எண்ணிக்கை |
|---|---|
| 1996–97 | 26,136 |
| 1997–98 | 55,854 |
| 1998–99 | 47,827 |
| 1999–2000 | 1,36,130 |

1986–87–ஆம் ஆண்டிலேயே, தமிழக அரசு ஊரகப் பகுதிகளில் சமுதாயக் கழிவறைகளை கட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதிலும், போதிய நீர் ஆதார வசதிகள் இன்மையால், மேற்படி நடவடிக்கைகள் பயனளிப்பதாக இல்லை. மேற்படி சமுதாய கழிவறைகள் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை. எனவே, அண்மைக் காலத்தில், உரிய தண்ணீர் வசதிகளுடன் கூடிய சமுதாயக் கழிவறைகளை கட்டுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

**சாதனைகள்**

★ இந்த அரசு பொறுப்பேற்ற 13.5.96–ஆம் நாள் வரையில் முடிக்கப் பெறாமல் நிலுவையில் இருந்த 1,14,141 பணிகளை முடிக்க வேண்டிய கூடுதல் சுமை இந்த அரசுக்கு ஏற்பட்டது. நீதிமன்ற வழக்குகள் சம்பந்தப்பட்ட 171 பணிகளைத் தவிர, இதர பணிகள் அனைத்தும் தற்போது முடிக்கப் பெற்றுள்ளன.

★ வளர்ச்சிப் பணிகளில் புதிய தன் முயற்சியாக அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற வளர்ச்சித் திட்டங்களை இந்த அரசு 1997–1998 முதல் அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது.

★ மாநில திட்டப்பணிகளுக்கான ஒதுக்கீடு 1993–94–ஆம் ஆண்டில் ரூ.50 கோடியாக இருந்தது, பல்வேறு மடங்காக அதிகரிக்கப்பட்டு 1999–2000–ஆம் ஆண்டு ரூ.475.60 கோடியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

★ கூடுதலாக ஒதுக்கீடு மற்றும் அதிக எண்ணிக்கையிலான நிலுவைப் பணிகள், இருந்த பொழுதிலும் 1996–97–ஆம் ஆண்டு முதல் 1999–2000–ஆம் ஆண்டு வரை 13.5.96–இல் அதற்கு முந்தைய ஆண்டு பணிகளில் நிலுவையாக இருந்த 1,14,141 பணிகளுடன் கடந்த நான்கு ஆண்டுகளில் புதியதாக எடுக்கப்பட்ட பணிகளையும் சேர்த்து 9,86,601 பணிகளில், 50,394 தவிர இதர பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ முழுமையான கிராம வளர்ச்சிக்கு வழிகோலும் புதுமையான திட்டமான அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், 1999–2000–ஆம் ஆண்டு வரை 634 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு ரூ.519.00 கோடி செலவில், 74,810 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

★ 1997–98–ஆம் ஆண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நமக்கு நாமே திட்டமானது, தேவைகளின் அடிப்படையில் மக்கள் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும் ஊரக வளர்ச்சித் திட்டமாகும். இத்திட்டம் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.107.96 கோடி மதிப்பீட்டில் ரூ.40.96 கோடி மக்கள் பங்களிப்புடன் பல்வேறு சமுதாயப் பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ 1997–98–ஆம் ஆண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஒதுக்கீடானது 1998–99–ஆம் ஆண்டில் ரூ.35 இலட்சமாகவும், 999–2000–ஆம் ஆண்டு ரூ.50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் ரூ.257.97 கோடி மதிப்பீட்டில் 18,656 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

★ கிராமப்புறங்களில் வாழும் ஏழைகளுக்கு, தீப்பிடிக்காத வீடுகள் கட்டித்தருவது என்பது மாநில அரசின் இலட்சியக் கொள்கையாகும். கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் அதாவது 1996–97–ஆம் ஆண்டு முதல் 1999–2000–ஆம் ஆண்டு வரை சுமார் 2,13,092 தீப்பிடிக்காத கான்க்ரீட் வீடுகள் கிராமப்புறங்களில் வாழும் ஏழைகளுக்காக கட்டித்தரப்பட்டுள்ளன.

★ இவ்வீடுகளுக்கு கான்க்ரீட் கூரை போடுவதற்காக வீடு ஒன்றிற்கு மாநில அரசால் வழங்கப்பட்ட ரூ.7,000ம், 1998–99 முதல் ரூ.12,000 ஆக உயர்த்தப்பட்டது.

★ தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்டித்தருவது தொடர்ந்து மாநில அரசின் முதன்மைப் பணியாக உள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் 5,326 பள்ளிக் கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன. 1999–2000–ஆம் ஆண்டில் மட்டும், 937 தொடக்க/நடுநிலைப்பள்ளிக் கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன. மேலும், உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளுக்கு 737 புதிய வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் கணினி மையத்திற்கு உள் கட்டமைப்பு வசதியாக 552 கட்டடங்கள் ஆக மொத்தம் 1,290 கட்டடங்கள் ரூ.22.08 கோடியில் கட்டித்தரப்பட்டுள்ளன.

★ கடந்த நான்காண்டுகளில், 701 கிராம ஊராட்சிகளுக்கு, சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளளன.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் 6,652 நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக்கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. 1999–2000–ஆம் ஆண்டில் மட்டும் 1,707 கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன.

★ கடந்த நான்கு ஆண்டுகளில், அங்கன்வாடி மற்றும் சத்துணவு மையங்களுக்குத் தேவையான வசதிகளை அளிக்கும் பொருட்டு 1,406 மையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன. 1999–2000–ஆம் ஆண்டில் மட்டும் 247 கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன.

★ புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்பு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர், கடலூர், திண்டுக்கல், மதுரை, ஈரோடு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் தலா ஒரு கிராமத்தில் புதுமையான தொழில் நுட்ப யுக்திகளைப் பயன்படுத்தி மொத்தம் 556 வீடுகள் கட்டித்தரப்படவுள்ளன.

★ ஊரக சுகாதாரம் என்பது, மக்களுடைய வாழ்க்கைத் தரத்தின் முக்கியஅளவு கோலாகும். எனவே, இத்திட்டம் குறித்து தகவல், கல்வி மற்றும் தொடர்பு குறித்த முனைப்பு இயக்கங்களை இராமநாதபுரம், ஈரோடு, தருமபுரி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ திருத்தியமைக்கப்பட்ட மத்திய ஊரக சுகாதாரத் திட்டத்தின் கீழ், 1999–2000–ஆம் ஆண்டில் குறைக்கப்பட்ட மானியத்துடன் கடலூர், வேலூர், கோவை மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ரூ.51.02 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது.

★ இத்திட்டம் ஆரம்பமானது முதல் 3,49,591 தனிநபர் கழிப்பிடங்களும், 404 சமுதாய கழிப்பிடங்களும், 3,209 நிறுவன கழிப்பிடங்களும் கட்டப்பட்டுள்ளன.

★ கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் டேனிடா (Danida) திட்ட நிதியுதவியுடன் சிறப்பு ஊரக சுகாதாரத் திட்டம், தேவை மற்றும் பங்கேற்பு அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 4,749 தனிநபர் கழிவறைகளும், குடிநீர் மற்றும் பொது கழிவறைகளும் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுளளன. கீரப்பாளையம் கிராமம் 100 விழுக்காடு மாதிரி சுகாதார கிராமமாக திகழ்கிறது.

★ கிராம அடிப்படை வசதிகளை முறையாகப் பராமரிப்பதிலும் அடிப்படை விவரங்களைப் பயன்படுத்தி, பல்வேறு திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தவும், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் கண்காணிக்கவும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி



ஒன்றியங்களிலும் கணிப்பொறி மயமாக்கும் பணி ரூ.19.50 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ கடந்த நான்காண்டுகளில் 35,596 நீர் ஆதாரப் பணிகள் (மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரையின்படி, 16.1.2000 அன்று மாநிலத்தில் உள்ள 12,619 கிராமங்களில் ரூ.6.31 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு (கிராமத்திற்கு ரூ.5,000 வீதம்) அய்யன் திருவள்ளுவர் நூலகங்கள் மற்றும் படிப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

★ பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டத்தின் கீழ் 66 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளவை போக, மீதமுள்ள 84 சமத்துவபுரங்கள் நடப்பு நிதியாண்டில் அமைக்கப்படவுள்ளன.

● ● ●

# “தீண்டாமை”

**– முகவை சிவ இரவீந்திரன்**

*தீண்டாமை பாவம், பெருங்குற்றம், தன்மையற்ற*
*செயலாகும்!*
*தீயவர்கள் தீயெரித்தல் சம்பவங்கள்*
*தெளிவாக்கும்!*
*தூண்டாமை நன்மையென சொன்னவர்கள்*
*துயர்நீக்க,*
*தொன்றுதொட்டுவந்தவர்கள் சொன்ன*
*சொல்லின் நிலையேற்று,*
*வேண்டாமேயென வேற்றுமையில் ஒற்றுமையை*
*நிலைநாட்டி,*
*வையகமும் வானகமும் உள்ளளவும்*
*நினைவூட்டி,*
*சான்றோர்கள் நந்தனையும் தில்லையிலே*
*உயர்வாக்கி,*
*தெய்வமக்கள் நாமந்தனை செல்லமாகச்*
*செயலேற்றார்!*
*ஆண்டோர்கள் அமலாக்க அண்ணல்காந்தி*
*தந்துவிட்டார்!*
*அம்பேத்கர் பட்ட அல்லல் அனுபவத்தில்*
*கண்டுவிட்டார்!*

*“கடையனுக்கும் கடைத்தேற்றம்” கண்டவர்கள்*
*போற்ற,*
*கலப்புமணமக்களுமே தங்கஇழை ஏற்றார்!*
*தடைகள்பல கடந்துவந்து சரித்திரங்கள்*
*படைத்தோர்,*
*தடைக்கல்லாய் முடங்கவைத்த சாத்திரங்கள்*
*உடைத்தார்!*
*உடையுண்டி உறையுள் மொழிபலவுள்*
*ஒருமைப்பாட்டை,*
*உலகமே வியந்துநோக்கும்(நம) தருமைநாட்டை!*
*குடைப்பிடித்து செருப்பணிந்து தலைநிமிர்ந்து*
*செல்லவிட்டார்!*
*குளம்கிணறுபயன்படுத்த நிலையுணர்ந்து*
*சொல்லிவிட்டார்!*
*நடைமுறைக்கு ஒவ்வாத நச்சரவாம் தீண்டாமை!*
*நலங்குலைக்கும் இழிசெயலாம், நம்மவர்க்கு*
*வேண்டாமே!*

*சத்துணவு பகலுணவு சீருடையும் சமத்துவமே!*
*சருக்காரின் பணியகங்கள், (கல்வி)கூடங்களில்*
*சமத்துவமே!*
*சொத்துரிமை அனைத்துரிமை தக்கபடி*
*தந்தாலும்,*
*சாதி அடிப்படையில் சலுகைபல தந்துவிட்டார்!*
*வித்தானசாதி விவரப் பட்டியலும்,*
*வருங்காலத்தலைமுறைகள் வருந்தாமல்*
*செய்திடுமோ?*
*வைக்கம் வீரரென்ற விருதாவின் பெரியாரும்,*
*வாரீசாம் அண்ணாவும் வெறுத்தார்கள்*
*அறியாமை!*
*முத்தான மணித்திட்டம் முதலமைச்சர்*
*கொண்டுவந்தார்,*
*முனைப்போடு செயலாற்றி முதலிடத்தை*
*வென்றிடுவோம்!●*

சிறுவனாகப்
பென்சில் சீவும்போது
கசிந்த ரத்தம்
உண்மையாக இருந்தது.
இப்போது ஜாக்கிரதை உணர்வு
வந்துவிட்டது வயதுடன்
எஞ்சியது என்ன?
காயம்படாத கைவிரல்.
நிஜம் கசியாத கவிதை.

– **கல்யாண்ஜி**
*"அந்நியமற்ற நதி" தொகுப்பிலிருந்து...*





# தாய்மொழியில் கல்வி ஏன் வேண்டும்?

*– முனைவர் க. மு[illegible]*

"மொழியென்பது ஒரு கருத்துப் புலப்படுத்தக் கருவி" என்ற கூற்று, மொழி குறித்துச் சொல்லப்படும் மேலோட்டமான விளக்கமாகும். 'ஒருவனின் தாய்மொழியென்பது அவன் பிறந்த மண்ணோடும், வாழும் சமூகத்தோடும் தொடர்பு கொண்டது. அவனது நிழலைப் போல அவனின் ஆளுமையிலிருந்து பிரிக்க முடியாதது. அவன் அச்சமூகத்தின், அவ்வினத்தின் உறுப்பினன். அவன் அவ்வினத்தின் ஆற்றலை, உணர்வுகளை, நினைவுகளை, வரலாறுகளை அவ்வினத்தின்மொழி வழியாகச் சொந்தம் கொண்டாடுகின்றான். எனவே தான், அவன் வாழும் சமுதாயத்தில் அவனின் பங்கு சமுதாயப் பங்காகிறது. இங்கு தான் மொழி என்பது அவனின் சமூகப் பண்பாட்டை வளர்த்தெடுக்கும் கருவியாகச் செயல்படுகிறது. சமூகத்தில் அம்மொழியின் பயன்பாட்டுத் தளங்கள் சுருங்கும்போது, அவ்வினத்தின் பண்பாட்டுத் தொடர்ச்சி சுருங்குகிறது, அல்லது அறுபடுகிறது. ஆகவே, தாய்மொழி வழிக் கல்வி என்பது ஒரு கல்வித் தத்துவம் என்பதோடு, சமூகப் பண்பாட்டு வளர்ச்சியையும், மன நிறைவையும் நோக்கமாகக் கொண்ட ஒன்று என்பது பெறப் படுகிறது.

வி.ஐ.இலெனின் தேசிய இன எழுச்சியின் வடிவமாக மொழியைப் பின் வருமாறு விளக்குகிறார். "மனித சமுதாயம் கூடிவாழ மொழி மிகவும் இன்றியமை யாத தாகும். பல்வேறு வகுப்புகளாகப் பிரிந்து உரிமையுடன் வாழ மொழி வளர்ச்சி தவிர்க்க இயலாதது. தேசிய மாநிலங்கள் அமைவதற்குப் பாடுபடும் ஒவ்வொரு தேசிய இயக்கமும் இந்த அடிப்படை மூலமே இன்றைய முதலாளித்துவச் சூழலில் பாடுபட வேண்டியுள்ளது. மொழி வளர்ச்சி பெறாத நிலையில் அந்த இலக்குகளைத் தேசிய இயக்கங்கள் அடைந்திட இயலாது.

இலெனின் குறிப்பிடும் மொழி வளர்ச்சி என்பது, சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும், அச்சமூகத்தின் மொழி இடம் பெறுதலைக் குறிப்பதாகும். ஒவ்வொரு இனமும், தனது மொழியின் வழியாகத் தான் தன் பரம்பரைக்கு வழிவழியாகப் பண்பாட்டு எண்ணத் தொடர்பை அடைகிறது. வேற்றுமொழி கல்வி மொழியாக அமைவது, "கருத்துப் புலப்படுத்தக் கருவி" என்ற அளவில் மட்டுமன்று, அம்மொழி பேசும் இனத்தின் பண்பாட்டுச் சாயலையும் அது வழங்குகிறது. இதனால், வேற்று மொழியோடு, வேற்று இனப்பண்பாட்டுக் கலப்பும் மேலோங்குகிறது. எதிர் நிலையில் தாய் மொழியும், அம்மொழி பேசும் இனத்தின் பண்பாடும் பின்னுக்குத் தள்ளப்பட்டுக் காலப் போக்கில் அழிந்து மறையும். இப்படி மறைந்த மொழிகளும், இனங்களும் உலகில் பலவுண்டு. எனவே, தாய்மொழிக் கல்வி என்பது, ஓர் இனத்தின் சமூகப் பண்பாட்டை நிலை நிறுவத்துவதற்கான இன்றியமையாத தேவையாக அமைகிறது.

கல்வியைச் சமூகப் படுத்தலின் முதற்கட்டப்பணி என்பது, தாய்மொழியில் கல்வி அளிப்பதாகும். கல்வியும், வாழ்வும் இணைந்தே இருத்தல் வேண்டும். இரண்டிற்கும் இடையே இடைவெளி இருந்தால், கல்வியினால் மக்களுக்குப் பயன் இல்லை என்பது பொருள். அத்தகைய கல்வித் திட்டம் தன் குறிக்கோளை நிறைவேற்றுவதில் தவறியதாகும். கற்கும் கல்வியும், கல்வியைப் பெறுவோரும் அவர்கள் வாழும் சமுதாயத்திற்கு ஒத்ததாகும், ஒத்துடையவர்களாகவும் இருக்க வேண்டுமாயின், அவர்களின் தாய் மொழியில் கல்வி அமைதல் வேண்டும். கல்வியைச் சமூகப்படுத்தலில் அச்சமூகத்தின் மொழி சிறப்பான பங்காற்றுகிறது.

ஆங்கிலேயர்கள் பெரும்பான்மையினராக வாழும், அவர்களே ஆட்சி செலுத்தும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில், ஆங்கிலம் பேசாத மக்களுக்கு அவர்களின் தாய்மொழியிலே கல்வி அளிக்க வேண்டும் என்று 1967இல் சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டம் வந்தபின் கல்வி கற்பவரின் தரத்தை ஆராய்ந்து கண்ட உண்மைகள் பின்வருமாறு:

1. தாய்மொழியில் கற்பவர்கள் விரைந்து கற்கின்றனர்.
2. அவர்தம் அறிவு தெளிவு பெற்றதாக உள்ளது.

கற்பிக்கப்படும் கல்விக்கும், கற்கும் சமூகத்திற்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்பதற்காக, ஆங்கிலேயர் பெரும்பான்மையினராக இருந்தும், ஆட்சியாளர்களாக இருந்தும், ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு அவரவர்களின் தாய்மொழியில் கல்வி அளிக்கப் பெறுகிறது. இங்கு நம் நாட்டு நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும்.

கவிஞர் தாகூர் பின்வரும் காரணத்திற்காகக் காந்தியடிகளுக்கு வணக்கம் செலுத்துகிறேன் என்றாராம். "நீங்கள் அரசியலுக்கு வருவதற்கு முன்னால் பல பெரியவர்கள் விடுதலைப்பற்றிப் பேசினார்கள். ஆனால்

அங்கு கூடியிருக்கும் கூட்டமோ பெரும்பகுதி, அவர்கள் பேசியதோ கோடிக்கணக்கான மக்களின் உரிமையைப்பற்றி அவர்களுக்கு ஆங்கிலத்தில் பேசினால் மக்களுக்குப் புரியுமா? ஆனால் நீங்கள் வந்தவுடன் அவர்களுடைய மொழியிலேயே அவருடன் உறவாடி பேசினீர்கள். மக்களும் புரிந்து கொண்டார்கள். அதனால் தான் வணக்கம் செலுத்துகிறேன்". இம்மேற்கோள், கல்வித் தத்துவத்திற்கு மட்டுமின்றி எவ்விதக் கருத்துத் தத்துவமாக இருப்பினும், புரிதலுக்கும், கருத்துப் பரவலுக்கும் சமூகத்தின் மொழியே உகந்தது என்பதைச் சுட்டி நிற்கிறது. எனவே, கல்வியின் பயன் சமூகத்தை எட்ட வேண்டுமாயின், அச்சமூகத்தின் மொழியில் கல்வி வழங்கப் பெறுதல் வேண்டும் என்பது பெறப்படுகிறது.

தாய்மொழி வழிக் கல்வியின் முதன்மையான செயற்பாடுகளில் ஒன்று கல்வியைப் பரவலாக்குதலாகும். குறிப்பிட்ட ஒரு சிலரோ, குறிப்பிட்ட சில இனங்களோ, கல்வி கற்க வேண்டும் என்று, இருந்தால் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருப்பதில் தடையில்லை. ஆனால், கல்வியை எல்லா மக்களும் பரவலாக்க விரும்பினால், அவர்களின் தாய் மொழியைப் பயிற்று மொழியாக்குவதன் மூலம் மட்டுமே அது இயலும். கல்வியைப் பரவலாக்குவதோடு, கல்வி வாயிலாகப் பெறும் வேலைவாய்ப்பைப் பரவலாக்குவதற்கும் தாய்மொழி வழிக்கல்வி பயன்படும்.

குறிப்பிட்ட சிலரிடமும், குறிப்பிட்ட சில, இன மக்களிடமும் மட்டுமே தங்கிவிடும் கல்வியைச் சமூகத்தின் எல்லா நிலை மக்களும், குறிப்பாக கீழ் நிலையிலுள்ள மக்களுக்கும் உரிய ஒன்றாக ஆக்குவதில் தாய்மொழி வழிக் கல்வி முக்கிய பங்காற்றும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆகவே கல்வி, கல்விப்பயன் இவைகளைப் பரவலாக்குவதற்காகத் தாய்மொழி வழிக் கல்வி வேண்டப்படுகிறது.

அந்தந்த மாநிலத்தில் அந்தந்த மாநில மொழியில் கல்வி வழங்கப்படும் பொழுதுதான் கல்விக்காகச் செலவிடப்படும் செலவினங்கள் அந்த மாநில மக்களுக்குப் பயன்படுவதாக அமையும். மனிதவள மேம்பாடு குறித்துச் சிந்திக்கும் இற்றை நாளில் அந்தந்த மாநில மக்களுக்கு மனவலிமையும், அறிவுத் தெளிவும் ஏற்படுவதற்கு மாநில மொழிவழி கல்வி அல்லது தாய்மொழி வழிக் கல்வி என்பது கட்டாயத் தேவையாகிறது. தமிழுக்குரிய இடத்தை ஆங்கிலத்திற்கு மட்டுமின்றி வேறு எந்த மொழிக்கும் கொடுத்துவிட முடியாது.

தமிழகத்தே எங்கும் எல்லா நிலைகளிலும் தமிழ்வழிக் கல்வியே அமையவேண்டும். அந்தச் சூழல் உருவாகும் போது தான் தமிழ்நாட்டில் தமிழ் மக்களுக்கு வலிமை ஏற்படும். உயர் கல்வியைப் பொறுத்தவரை தங்களுக்கு உரிய இடத்தைப் பெறுவதற்காக மாநில மொழிகள் இன்னும் காத்துக் கொண்டிருப்பதால் ஆங்கிலம் பேசுபவர்களின் குத்தகையாகக் கல்வி மாறிவிட்டது. இப்போக்கு மாறவும் மாநிலமக்கள் முழு உரிமையுடன் வாழவும் தாய்மொழி வழிக் கல்வி இன்றியமையாத தேவையாகிறது.

நாட்டின் பெரும்பாலான மக்கள் தொழில்நுட்பம், பொருளுற்பத்தி, விற்பனை முதலியவற்றில் ஈடுபட்டுள்ளனர். நாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கும் பொருட்களின் உற்பத்தி, மற்றும் தரம் இவைகளைப் பெருக்குவதற்கும் மக்களிடம் மிகுதியான திறமை இருக்க வேண்டும். இப்பணிகளைச் சிறப்பாக செய்வதற்கு இவற்றில் சிறந்த அறிவுள்ளவர்கள் தேவை. இப்படிப்பட்ட அறிவுள்ளவர்களைத் தாய்மொழி வழிக் கல்வி மூலமாகத்தான் உருவாக்க முடியும். அதன் மூலமாகத்தான் தகுந்த வாய்ப்புக்களையும் நேரடி வாய்ப்புகளையும் ஒரு மாணவர் பெற முடியும். இன்று உலகில் முன்னேறிய நாடுகளாகக் கருதப்படும் பல நாடுகளின் உற்பத்தி முன்னேற்றத்திற்கு அங்கு நிலவும் தாய்மொழி வழிக் கல்வியை முதன்மையான ஏதுவாகப் பலரும் சுட்டியுள்ளனர். இவ்வாறு தாய்மொழி வழிக் கல்வி என்பது நாட்டு முன்னேற்றம் மற்றும் உற்பத்தி முன்னேற்றம் பற்றியதாக அமைகிறது.

மேற்குறித்தவாறு தாய்மொழி வழிக் கல்விக்கான ஏதுக்களை மேலும் விரித்துச் சொல்ல இயலும். தாய்மொழி வழிக் கல்விக்கான வலியுறுத்தல்களில் கல்வியியல் ஏதுக்களும் உளவியல் ஏதுக்களும் முதன்மைப்படுத்தப்பட்ட அளவு சமூகவியல் ஏதுக்கள் முன்மொழியப்படவில்லை. உளவியல், கல்வியியல் ஏதுக்களைவிடச் சமூகவியல் ஏதுக்களே தாய்மொழி வழிக் கல்வியின் உயிராக உள்ளது. ஏனெனில் மொழியென்பது சமூகத்தின் ஆணிவேர். இதைக்கல்வி வல்லுனர்கள் உணர்ந்து ஆக்க வழியில் தமிழைக் கல்வி மொழியாக்க முன் வரவேண்டும். இது தமிழர்களின் மொழி உரிமை மட்டுமன்று, சமூக உரிமை பண்பாட்டு உரிமையுமாகும். ●

### *உண்மைக்கு உதாரணம்*

*ஒரு நாள் முல்லா, தம்மிடம் அறிவுரை கேட்பதற்காக வந்தவர்களிடம் உண்மையைப் பற்றி உபதேசம் செய்து கொண்டிருந்த போது, ''உண்மையின் மதிப்ப மிகவும் அதிகம்'' என்று சொன்னார்.*

*அதைக் கேட்ட சீடர்களில் ஒருவன், ''எப்படி அவ்வாறு சொல்கிறீர்கள்?'' என்று வினவினான்.*

*அதற்கு முல்லா, ''எப்படி என்றா கேட்கிறாய்? கூறுகிறேன். உலகில் அதிகமாகக் கிடைக்கும் பொருளுக்கு மதிப்ப குறைவாகவும், அதிகமாகக் கிடைக்காத பொருளுக்கு மதிப்ப அதிகமாகவும் உள்ளது. இதற்கு உதாரணம் இரும்பும், தங்கமும் ஆகும். உண்மையை இந்த உலகில் அதிகமாகக் காணமுடியாது. அரிதாகவே காண முடியுமாதலால், அதன் மதிப்ப அதிகம்'' என்று விளக்கம் சொன்னார்.*



# கிராமங்கள் தோறும் கான்கிரீட் சாலைகள்

*கிராமத்தில் உள்ள தெருக்களையும், சந்துகளையும் கான்கிரீட் தளத்துடன் கூடியதாக மேம்படுத்த **1999–2000**–ஆம் ஆண்டில் தமிழக அரசால் முக்கிய கொள்கை முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. அவ்வாறு கான்கிரீட் தளமுடையதாக மேம்பாடு செய்யப்பட்ட தெருக்கள், கதிரடிக்கும் தளம் போன்ற பலவகையான தேவைகளுக்கு பயன் அளிக்கக் கூடிய சொத்துக்களாக அமைவதாலும் மற்றும் மழைக் காலங்களில், மழைநீர் தேங்கி, சுகாதார சீர்கேடு ஏற்படுவதை தவிர்த்து, சுற்றுப்புற சூழ்நிலை சீர்கெடாமல் இருக்க உறுதுணையாக இருப்பதாலும், கான்க்ரீட் தளம் உடைய தெருக்களாக மேம்படுத்தும் பணிகளுக்கு பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பு உள்ளது. எனவே, **1999–2000** மற்றும் **2000–2001** ஆண்டுகளில் சுமார் **5,000** கி.மீ நீளத்திற்குரிய தெருக்களை மேம்பாடு செய்ய முடிவெடுக்கப்பட்டு, **1999–2000**–ஆம் ஆண்டில் **2000** கி.மீ., **2000–2001**–ஆம் ஆண்டில் **3000** கி.மீ. தெருக்கள் மேம்பாடு செய்ய அறிவிக்கப்பட்டது. ஆனால் பொது மக்களிடையே இருந்த வரவேற்பு காரணமாக **1999–2000**–ஆம் ஆண்டில் மட்டும், **2905** கி.மீ. நீளத்திற்குரிய தெருக்கள் சுமார் ரூ.**203.35** கோடி மதிப்பீட்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் சிமெண்ட் கான்கிரீட் தளமுடையதாக மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.*



*அத்துடன் நடப்பு (**2000–2001**–ஆம்) ஆண்டில் மேலும் **3000** கி.மீ. வரையிலான தெருக்களை சுமார் ரூ.**232.50** கோடி மதிப்பீட்டில் மேற்கூறப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களின் கீழ் சிமெண்ட் கான்கிரீட் தெருக்களாக மேம்பாடு செய்ய அறிவிக்கப்பட்டு இதுவரை **1711.03** கி.மீ. கான்கிரீட் தெருவாக மாற்ற அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.*



★ ★ ★

# கல்கத்தா - மும்பையில் தமிழ் மையம்

தமிழ்நாடு அரசின் தமிழ் மையத்தைக் கல்கத்தா தேசிய உயர்நிலைப்பள்ளியில் தமிழ் ஆட்சிமொழி, பண்பாடு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் 1-2-2000 அன்று தொடங்கிவைத்தார். கல்கத்தாவில் தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகளுக்கு இதுவரை இவ்வளவு பேர் கூடியதே இல்லை என்று கல்கத்தா தமிழர்களே வியக்கும் வண்ணம் ஆயிரக்கணக்கில் மக்கள் குடும்பம் குடும்பமாக வந்திருந்தனர்.

விழாவில் சுப்பிரமணியம் கிருட்டிணமூர்த்தியின் வங்க மொழியாக்கத் திருக்குறள் நூலை அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் வெளியிட இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் துணைப் பொதுமேலாளர் திரு.கோமதிநாயகம் பெற்றுக் கொண்டார்.

விழாவில், கல்கத்தாத் தமிழர்களின் நீண்ட நாள் கனவு நிறைவேறுகிறது என்றும் தமிழர்கள் இருக்கும் இடம் தேடி வந்து தமிழ் வளர்க்கும் தமிழ்நாடு அரசின் பணி தாயன்புக்கு நிகரானது என்றும் பலரும் பாராட்டையும் நன்றியையும் தமிழ்நாடு அரசுக்கும் தமிழ் வளர்ச்சித் துறைக்கும் தெரிவித்தனர்.

அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் தமது உரையில், தமிழ் கற்க விரும்புகிறவர்களுக்குத் தமிழைக் கற்றுத்தர அனைத்து வசதிகளையும் வழங்குவதோடு வாரம் தோறும் திருக்குறள் வகுப்பும் மாதந்தோறும் தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகளும் ஆண்டுக்கு ஒருமுறை கலை நிகழ்ச்சிகளும் வழங்கிடும் வகையிலும், தமிழ் மையத்தின் பணிகள் அமையும் என்றும், இசைப்பள்ளி ஏற்படுத்தப்படும் என்றும் தற்காலத் தகவல்தொடர்பு வசதிகளுக்கு ஏற்பத் தமிழ் பற்றிய அனைத்துத் தகவல்களையும் பெறும் மையமாக இது அமையும் என்றும் மேலும் சிறந்த வங்க மொழி நூல்களையும் தமிழ் மொழி நூல்களையும் மொழி பெயர்க்கப்படும் என்றும் தெரிவித்தார்கள்.

மும்பையில்

31.1.2000 அன்று தமிழ்நாடு அரசின் தமிழ் மையத்தைத் தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் நவி மும்பைத் தமிழ்ச் சங்கத்தில் தொடங்கி வைத்தார்.

மும்பை மாநகராட்சி 46 பள்ளிக்கூடங்களில் ஏழாம் வகுப்பு வரை, தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி வழங்கி வருகிறது. இப்பள்ளிகளில் ஏறத்தாழ 18,000 மாணவர்கள் படிக்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் ஏழை எளிய தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தமிழ் வழியில் கல்வி கற்பதற்குப் பாட நூல்கள் தமிழ்நாட்டிலிருந்து செல்ல வேண்டியுள்ளன. மற்ற மாணவர்களுக்கு மாநகராட்சி இலவசமாகப் புத்தகங்களை வழங்கத் தமிழ் வழி மாணவர்கள் நூல்கள் கிடைக்காமல் திண்டாடுகின்றனர். ஆசிரியர் மட்டும் ஒரு நூலை வைத்துக் கொண்டு பாடம் நடத்துகிறார். பாடநூல் கிடைக்காமலும் வாங்க இயலாமலும் திண்டாடும் மாணவர்களுக்குக் கடந்த காலத்தில் ஒருமுறை வழங்கப்பட்டதைப் போன்று தமிழ்நாட்டுப் பாட நூல்களை அன்பளிப்பாகக் கேட்டுள்ள மும்பை வாழ் தமிழ் மக்களின் கோரிக்கையை தமிழக முதல்வரிடம் தக்கவாறு எடுத்துரைத்து, முயற்சி செய்வதாக அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் தெரிவித்தார்.

மேலும் மும்பை வாழ் தமிழ் மக்களின் கோரிக்கையை ஏற்றுத் தமிழ்நாட்டிலிருந்து ஆண்டுக்கொரு முறை கலைக்குழுவினர் மும்பை வந்து நிகழ்ச்சிகளை நடத்தித் தரும் வகையில் அரசு ஏற்பாடு செய்ய முன்வரும் என்றும் வாரம் தோறும் திருக்குறள் வகுப்பும், மாதம் தோறும் இலக்கியச் சொற் பொழிவுகளுமாக மும்பையில் உள்ள பல்வேறு தமிழ் அமைப்புகளோடு ஒருங் கிணைப்பினை ஏற்படுத்திக் கொண்டு தமிழ் மையம் செயற்படும் என்றும் தெரிவித்தார்.

விழாவிற்கு ஆயிரக்கணக்கானோர் குடும்பத்தோடு வந்திருந்தனர். தமிழிசைப் பாடல்களும் வயலின் இசை நிகழ்ச்சியும் சிறுமியரின் 'தமிழுக்கும் அமுதென்று பேர்' பாட்டிற்கான நாட்டிய நிகழ்ச்சியுமாக தமிழ் மையத் தொடக்கவிழா முத்தமிழ் விழாவாக நடந்தேறியது. முன்னதாக அமைச்சர் அவர்கள் அய்யன் வள்ளுவர் நூலகத்தைத் திறந்து வைத்துத் திருக்குறள் வகுப்பைத் தொடங்கி வைத்தார். இவ்விரு நிகழ்ச்சியிலும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ம.இராசேந்திரன் வரவேற்புரையாற்றினார். ●

## நேசக் காற்று ....

**– குடந்தை டி.எஸ்.பாலு**

*நண்பர்களே ....*
*மனத்தின் ஒட்டடைகளைத்*
*துடைத்தெறியுங்கள் ....*
*ஒரு நேசக் காற்றைக்*
*குடி அமர்த்துங்கள் ....*

*சாதிக்கத்தானே பிறந்தீர்கள்....*
*ஏன் சாதியின் சதியில் விழுந்தீர்கள்... !*
*குண்டு மல்லிகையாய்க்*
*குதூகலிக்க வேண்டிய நாட்டில்*
*குண்டு கலாச்சாரமா ...?*
*செருப்பே காலைக் கடிப்பதும்*
*கரையே நீரைக் குடிப்பதும்*
*இனி எத்தனை நாள்களுக்கு ....?*

*மத நல்லிணக்கம் என்பது*
*மன நல்லிணக்கமாய் மலரட்டும்...*
*மனித நேயம் என்பது*
*சோழன் பிசிராந்தையாரின்*
*நட்பாய் வளரட்டும்....*

*சமத்துவப் புறாக்கள்*
*வானவீதியில் அல்ல ...*
*உங்கள் நெஞ்சவீதியில் பறக்கட்டும் ...!*
*நண்பர்களே ...*
*நாட்டைவிட்டுக்*
*காட்டை நோக்கியேனும்*
*பயணம் செய்வோம்...*
*ஆனால்,*
*சாதி மதத்தின் பெயர் சொல்லி*
*சுடுகாட்டை நோக்கி வேண்டாம்...!*



# நான்காண்டு காலத்தில் 10 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள்

நாமக்கல் மாவட்டத்தை புதிய மாவட்டமாக 25.7.1996 அன்று நான் அறிவித்தேன். அந்த புதிய மாவட்டத்திற்கு ஓராண்டு காலத்திற்குள்ளாக ஒரு புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைந்து, காண்பதற்குக் கவர்ச்சியாக மாத்திரமல்ல, வசதி மிக்க ஒரு கட்டடமாகவும் அமைந்து அதைத் திறந்து வைக்கின்ற வாய்ப்பினையும் நான் பெற்றிருக்கிறேன்.

இந்த நான்காண்டு காலத்தில் மாத்திரம் உங்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். இதுபோன்ற மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களுக்குப் பத்துக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டும் - திறந்து வைக்கப்பட்டும் - முடியும் தறுவாயிலும் இருக்கின்ற நல்ல செய்தியினை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

16.9.1998 அன்று தூத்துக்குடியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் நான்கு கோடி ரூபாய்



செலவில் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. சென்னையில் 11.12.1996 அன்று ஒன்பது கோடி ரூபாய் செலவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

8.6.1998 அன்று விழுப்புரத்தில் ஏறத்தாழ 4 கோடி ரூபாய் செலவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. 8.6.2000 அன்று திருவண்ணாமலையில் 5.77 கோடி ரூபாய் செலவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இன்று நாமக்கல்லில் ஆறு கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்படுகிறது. தொடர்ந்து நாளைக்கு ஆறு கோடியே பதினாறு இலட்ச ரூபாய் செலவில் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

இதைத் தவிர நாகப்பட்டினம், திருவாரூர், திருவள்ளூர், தேனி ஆகிய மாவட்டங்களுடைய மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டடங்கள் திறப்பு விழாவிற்கு என்னுடைய தேதிக்காக காத்துக் கொண்டிருக்கின்றன.

**– நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை 24-6-2000 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...**

● ● ●



**செ**ன்னை நகருக்கு குடிபெயரும் குடிசைப்பகுதி வாழ்மக்கள் அவர்களது ஏழ்மை நிலையின் பொருட்டு தங்களுக்கென ஒரு நல்ல வீட்டினை அமைத்துக் கொள்ள இயலாததன் காரணமாக, அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகாமையில் அடிக்கடி தீ விபத்துக்குள்ளாகக் கூடிய குறைந்த செலவிலான கட்டுமானப் பொருட்களைக் கொண்டு அபாயகரமான இடங்களில் நிரந்தரமற்ற வீடுகளை அமைத்தும் மாறுபட்ட தட்பவெப்ப சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டும் வாழ்ந்து வருகின்றனர். இதுபோன்ற குடிசை வீடுகள் அடிக்கடி தீவிபத்துக்குள்ளாவதுடன் அதன் காரணமாக மிகுந்த பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் எற்படுகிறது.

அடிக்கடி தீ விபத்துக்குள்ளாகும் குடிசைப் ப்குதிகளில் அமைந்துள்ள குடிசைகளின் ஒலை கூரைகளை மாற்றி கல்நார் ஓட்டுக் கூரைகள் அமைக்கும் செலவினை அரசு ஏற்கும் என 1998–99–ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, தமிழகத்திலுள்ள 6 மாநகரங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் 50,025 குடும்பங்களுக்கு கல்நார் ஓட்டுக் கூரைகள் ரூ.31.52 கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 1998–99–ஆம் ஆண்டு முதல் 1999–2000 ஆண்டு வரை 20,611 குடும்பங்களுக்கு ரூ.26.5 கோடி செலவில் சுற்றுச் சுவர்களுடன் கல்நார் தகடுகளிலான கூரைகள் கொண்ட வீடுகள் முழு அரசு மானிய் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் 2000–2001–ஆம் ஆண்டில் சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் வாழும் 26,000 குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ.15,000 வீதம் மொத்த செலவினம் ரூ.39 கோடி செலவில் சுற்றுச் சுவர்களுடன் கல்நார் ஓட்டுக் கூரைகளிலான வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:-

| வ எண். | நகரத்தின் பெயர் | பயனடையும் குடும்பங்கள் | செலவினம் (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1. | சென்னை | 21,500 | 32.25 |
| 2. | மதுரை | 1,600 | 2.40 |
| 3. | திருச்சி | 1,000 | 1.50 |
| 4. | சேலம் | 1,100 | 1.65 |
| 5. | கோவை | 500 | 0.75 |
| 6. | திருநெல்வேலி | 300 | 0.45 |
| | மொத்தம் | 26,000 | 39.00 |

இத்திட்டத்தின் கீழ் சென்னை மாநகரத்தில் வாழும் 21,500 குடிசைவாழ் குடும்பங்களுக்கு ரூ.3.25 கோடி செலவில் சுற்றுச் சுவர்களுடன் கூடிய கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் அமைக்கப்படும். இத்திட்டச் செலவினத்தில் ரூ.16.125 கோடி ஹட்கோ நிறுவனத்திடமும் மீதமுள்ள தொகையான ரூ.16.125 கோடி தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிக் கழகத்திடமும் (Tufidco) இருந்தும் கடனாகப் பெறப்படும். மேலும், மதுரை, கோவை, சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் 4,500 குடும்பங்களுக்கு ரூ.6.75 கோடி செலவில் கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் அமைக்கப்படும்.

**சுற்றுச் சுவர்களுடன் கல்நார் தகடுகளிலான கூரைகள் கொண்ட வீட்டு வசதி**

இத்திட்டப் பணிகளுக்கான நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் 2000–ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் வாரத்தில் துவங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் டிசம்பர் மாதத்திற்குள் முடிவுறும்.

இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் பணிகள் குடிசைப்பகுதி வாழ் மக்களுக்கு இலவசமாக அமைக்கப்படும். இத்திட்டப் பணிகளுக்காக, பெறப்படும் கடனுதவி மாநில அரசால் திருப்பிச் செலுத்தப்படும். •



# முதுகு வலியைப் போக்க...

**இ**ன்று அதிகரித்து வரும் நோய்களின் எண்ணிக்கையில் முதலிடத்தை பிடித்து வருவது முதுகுவலி என்று கூறினால் அது மிகையான கூற்றல்ல.

முதுகுவலி என்பது என்ன? அதில் எத்தனை வகையுண்டு என்று உங்கள் எண்ணங்களில் நினைக்கலாம்.

முதுகுவலி என்பது புறமுதுகுப் பகுதியில் உண்டாகும் வலி. இது குறைந்த நாட்கள் இருந்தாலும், அதிக நாட்கள் இருந்தாலும் இதைப்பற்றி மிகுந்த கவனம் எடுக்க வேண்டும். முதுகுவலி ஏற்பட என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து அதனை நீக்கி அல்லது சரி செய்து நிவாரணம் பெறலாம்.

முதுகுவலியின் வகைகளைப் பார்த்தோமானால் 1. முழு முதுகுவலி 2. கீழ் முதுகுவலி 3. நடு முதுகுவலி என வகைப்படுத்தலாம். இவற்றில் கீழ் முதுகுவலி தான் நம்மில் அனைவருக்கும் தொல்லைக் கொடுப்பதாகும். கீழ் முதுகுவலி ஏற்படின் என்ன காரணங்கள் என்பதை சிந்தித்து ஆராய்ந்தோமானால் அக்காரணங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. அதிக தூரம் பயணம் செய்வது அல்லது அடிக்கடி உட்கார்ந்த நிலையில் பயணம் செய்வது
2. அதிக அளவு பாரம் தூக்குவது
3. அதிக வேலைப் பளு
4. அளவுக்கு அதிகமான உடற்பயிற்சி
5. வயது முதிர்தல்
6. எலும்பின் தேய்மானம்
7. உட்காரும் முறை சரி இல்லாமை
8. நடக்கும் முறை சரியில்லாதவை

கடைசியாக குறிப்பிட்ட காரணம் தான் பெண்கள் முதுகுவலியினால் அவதிப்படுவதற்குப் பிரதானமானதாகும்.

கீழ்முதுகுவலி ஏற்படுவதற்கு, எலும்பின் தேய்மானமும் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றது. அதிக அளவு எலும்புகளின் உராய்வினால், இதில் தேய்மானம் ஏற்படுகின்றது. உட்காரும் பழக்கம் சரியில்லாவிடில் இவ்வலி ஏற்பட ஏதுவாகும். சிலருக்கு முதுகுத் தண்டின் பிதுக்கத்தின் காரணத்தினாலும் இவ்வலி ஏற்படுகின்றது

**முதுகுவலியின் அறிகுறிகள்**

கீழ்முதுகுவலி இரு இடுப்பு எலும்புகளிலும் இணைந்து உண்டாகும். குனிந்து நிமிர்ந்தால் வலி ஏற்படுதல், படுத்து ஓய்விலிருந்தால் வலி குறைதல். முதுகுவலி ஆரம்ப நிலையில் இருந்தால் அதாவது சாதாரண வலியானால் நாமே வீட்டில் சரிசெய்து கொள்ளலாம். ஆரம்ப நிலையானால், கற்பூர தைல வகை சார்ந்த சித்தா அல்லது ஹோமியோபதி மருந்துகளை வலியுள்ள இடங்களில் தடவி பின்னர் இதமான வெந்நீர் ஒத்தடம் கொடுக்கலாம்.

உட்காரும் இருக்கையில் ஓர் தலையணையை வைத்து உட்காரலாம்.





நாற்காலியில் உட்காரும்போது எப்பொழுதும் கால்களைச் சற்று உயர்த்தி நிமிர்த்தி உட்கார வேண்டும்.

தரையில் உட்காரும் போது நிமிர்ந்து உட்கார வேண்டும்.

மெத்தையில் உறங்குவதைத் தவிர்த்துக் கொண்டு தரை விரிப்புகளில் தடித்த துணிகளை விரித்து அதன் மேல் படுத்து உறங்குவதே சிறந்தது

வயதானவர்கள் மாடிப்படிகளில் ஏறும் போது கைப்பிடியைப் பிடித்து ஊன்றியபடி செல்ல வேண்டும். படிகள் அதிக உயரமாக இருந்தால் முழங்கால்களில் கை வைத்து ஊன்றி மெல்ல ஏறுங்கள்.

தாழ்வாக சோபாவிலிருந்து எழும்போதும், அப்படியே செய்ய வேண்டும். எனவே, மாடிப்படிகளில் ஓடவோ, இரண்டிரண்டு படிகளாகத் தாவி ஏறவோ வேண்டாம். உடல் நலமுடைய சிறுவர்கள், இளைஞர்கள் பெரியோர் விஷயத்தில் இப்படி செய்யலாம். முதியோர்களிடம் இந்தப் பேச்சு கூடாது



மாடிப்படிகளில் ஏறுவதையும், இறங்குவதையும் கூடுமான அளவில் தவிர்க்க வேண்டும். இந்த ஆலோசனைகள் எல்லாம் ஆரம்பநிலை சாதாரண முதுகுவலிக்கு மட்டுமே பொருந்தும். நடு முதுகுவலியாக இருக்கும் பட்சத்தில் அவசியமாக மருத்துவரை அணுகி முதுகுத் தண்டில் பிதுக்கம் உள்ளதா என உறுதி மேற்கொண்டு தகுந்த சிகிச்சை எடுக்க வேண்டும்.

**வருமுன் தடுப்பது சிறப்பு**

முதுகுவலியால் துன்புறுகிறவர்கள் முதுகுவலிக்குக் காரணமான பின்வரும் விஷயங்களையும் நிலைமைகளையும் தவிர்க்க எப்போதும் விழிப்புடனும் கவனமாகவும் இருக்க வேண்டும். இன்னும் குறிப்பாக பின்வருமாறு செய்யலாம் அல்லது செய்யக்கூடாது போன்றவற்றை பின்பற்றுவது துணை நிற்கும்.

வசதியற்ற நிலையில் அதிக நேரம் உட்கார்ந்திருக்கக் கூடாது.

செரிமானம் இன்மை, வாயுத்தொல்லைகளை வளரவிட வேண்டாம்.

கழிவறைக்குச் செல்லவேண்டி இருந்தால் அடக்கியபடி இருக்க வேண்டாம்.

தேவையற்ற தூமதமானது எதுவும் முதுகுத் தண்டு தசைத்தனைகள், சிறுநீரகக் கற்கள், சிறுநீர்ப்பை, பெருங்குடல் ஆகியவற்றின் மீது தேவையற்ற அழுத்தத்தை உண்டாக்கும்.

வயதானவர்கள் தும்மல் வரும் நேரங்களில் நிமிர்ந்து இருக்க வேண்டும். உட்கார்ந்த நிலையிலோ அல்லது குனிந்த நிலையிலோ தும்மும் போது முதுகுத்தண்டு, பெருங்குடல் இவைகளுக்கு வலி ஏற்படக் கூடும்.

நாள்தோறும் சுமார் இரண்டு லிட்டர் சிறுநீர் கழியும் அளவு நிறைய தண்ணீர் குடியுங்கள். அதனால் உள்ளுறுப்புகள் நன்கு கழுவப்படும். பெரும்பாலானவர்களுக்குச் சிறுநீர்க் கற்கள் தோன்றா. கோடையில் வியர்வையால் இழக்கப்படும் தண்ணீரை ஈடுசெய்ய நீங்கள் அதிக தண்ணீரை குடிக்க வேண்டும். வடிகட்டிய சுத்தமான தண்ணீரை அல்லது கொதிக்க வைத்த நீரை குடித்து வருவது நல்லது. சுத்தமான நீர் கிடைக்காத நிலையில் மட்டுமே பானங்கள் குடியுங்கள்.

இறுதியில் உங்கள் முன்னேற்றம் குறித்து பிறருக்கு எடுத்துரையுங்கள். ●

# தெரியாதது எது?

வழக்கம் போல் பலர் முல்லாவைச் சுற்றி நின்று கேள்விகள் கேட்டனர். அவற்றுக்கெல்லாம் முல்லா தயக்கம் இல்லாமல் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

அதைப் பார்த்த ஊர்ப் பெரியவர் ஒருவர், ''எங்கள் முல்லாவுக்குத் தெரியாதது எதுவுமே இல்லை'' என்று பெருமையுடன் சொன்னார்.

உடனே அக்கூட்டத்தில் ஒருவன், ''முல்லா, குர்திஷ் மொழியைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?'' என்று வினவினான்.

குர்திஷ் மொழியில், ஒரே ஒரு வார்த்தை தான் முல்லாவுக்குத் தெரியும். ஆதலால், நியாயமாக ''எனக்குத் தெரியாது'' என்று பதில் கூறியிருக்க வேண்டும்.

சற்று முன்னர் தானே ஊர்ப் பெரியவர், ''எங்கள் முல்லாவுக்குத் தெரியாதது எதுவும் இல்லை'' என்று முல்லாவைப் புகழ்ந்தார்.

எனவே ''குர்திஷ் மொழியைப் பற்றி எனக்குத் தெரியாது' என்று பதில் சொல்ல, முல்லாவின் தன்மானம் இடம் கொடுக்கவில்லை.

எனவே, ''எனக்கு குர்திஷ் மொழியைப் பற்றித் தெரியும்'' என்று பதில் கூறிய முல்லா, மேலும் ''குர்திஷ் மொழியில் 'ஆஷ்' என்றால் 'சூடான சூப்பு' என்று பொருள்'' என்று தாம் அறிந்த ஒரே ஒரு வார்த்தையையும் சொல்லித் தம்முடைய குர்திஷ் மொழியறிவை நிலை நிறுத்தினார்.

உடனே ஒரு சிறுவன், ''முல்லா, ஆறிப்போன சூப்பைக் குர்திஷ் மொழியில் என்ன கூறுவார்கள்'' என்று வினவினான்.

ஒரு கணம்திகைத்த முல்லா, மறுகணம் ''தம்பி, குர்திஷ் மொழியினருக்கு ஆறிப்போன சூப்பே பிடிக்காது, ஆதலால், அதைக் குறிப்பிடும் சொல் இல்லை'' என்று சொல்லிச் சமாளித்தார்.

● ● ●



# மனித யந்திரம்

ஸ்ரீமீனாட்சி சுந்தரம்பிள்ளை ஒரு ஸ்டோர் குமாஸ்தா. அவர், உப்புப் புளி பற்று – வரவுக் கணக்கின் மூலமாகவும், படிக்கல்லின் மூலமாகவும் மனித வர்க்கத்தின் சோக நாடகங்களையும், மனித சித்தத்தின் விசித்திர ஓட்டங்களையும் அளந்தவர்.

அவருக்குச் சென்ற நாற்பத்தைந்து வருஷங்களாக, அதே பாதை, அதே வீடு, அதே பலசரக்குக் கடையின் கமறல்தான் விதி. அதுவும் அந்தக் காலத்தில் அடக்கமான வெறும் மூலைத்தெரு ராமு கடையாகத்தான் இருந்தது. கடையும் பிள்ளையவர்களுடன் வளர்ந்தது.

ஆனால் அதில் சுவாரஸ்ய மென்னவெனில், வெறும் மீனாட்சி, ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையாகப் பரிணமித்தாலும், அவருக்கு அந்தப் பழையதுதான். அந்தக் காவியேறிய கம்பிக்கரை வேஷ்டிதான். கடைக்கு முன்னால் இருந்த காரையும், கூரையும் போய், 'ரீ–இன்ஃபோர் ஸ்ட்' காங்க்ரீட், எலெக்ட்ரிக் லைட், கௌண்டர் முதலிய அந்தஸ்துகள் எல்லாம் வந்து விட்டன. கடையும் பிள்ளையும் ஒன்றாக வளர்ந்தார்கள்; ஆனால் ஓட்டி வளரவில்லை. கடையில் வரவு செலவு வளர்ந்தது; பிள்ளையவர்களுக்குக் கவலையும் வளர்ந்தது.

ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளை பற்று வரவுக் கணக்குகளில் உள்ள சிக்கல்களையெல்லாம் அற்புதமாகத் தீர்த்து வைப்பார். அந்தக் காலத்தில் புன்னை எண்ணெய்க் குத்து விளக்கடியில் இரவு பன்னிரெண்டு மணி வரை மல்லாடுவார். இப்பொழுதும் அந்த மல்லாட்டத்திற்கெல்லாம் குறைச்சல் இல்லை; ஆனால் இப்பொழுது, மின்சார விளக்கும் விசிறியும் உடன் விழித்திருக்கும்.

அவரது சம்பளமும் ஆமை வேகத்தில் 'ஓடி' மாதத்துக்கு ரூ.20 என்ற எல்லையை எட்டிவிட்டது. பற்று வரவுக் கணக்கு நிபுணர் ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையின் திறமையெல்லாம் அந்த ஸ்டோர் கடையுடன் தான். வீட்டு வரவு செலவுக் கணக்கு மட்டும், அவருடைய இந்திர ஜால வித்தைகளுக்கெல்லாம் மீறி, உலகளந்த பெருமாளாக, சென்ற நாற்பத்தைந்து வருஷங்களாகப் பரந்து கிடக்கிறது; பரந்து கொண்டு வருகிறது.

காலை ஐந்து மணிக்கு, ஈர ஆற்று மணல் ஒட்டிய அவர் பாதங்கள், வெகு வேகமாக ஆற்றில் இறங்கும் சந்திலிருந்து ராஜபாட்டையில் திரும்பி, மறுபடியும் ஒற்றைத் தெரு என்ற சந்தில் நுழைவதைக் காணலாம்.

மழையானாலும், பனியானாலும் ஈர வேஷ்டியைச் சற்று உயர்த்தி, கைகளால் பின்புறம் பறக்க விட்டுக் கொண்டு, உலர்ந்தும் உலராத நெற்றியில் சுப்பிரமணிய சுவாமி கோயில் விபூதி, குங்குமம், சந்தனம் விகசிக்க அவர் செல்லும் காட்சியைச் சென்ற நாற்பத்தைந்து வருஷங்களாகக் கண்டவர்களுக்கு, அவர் பக்தியைப்பற்றி அவ்வளவாகக் கவலை ஏற்படாவிட்டாலும், நன்றாக முடுக்கிவிடப்பட்ட பழுதுபடாத யந்திரம் ஒன்று நினைவிற்கு வரும்.

ஆறு மணியாகிவிட்டால், நேற்றுத் துவைத்து உலர்த்திய வேஷ்டியும் துண்டுமாக, ஈரத் தலையைச் சிக்கெடுத்த வண்ணம் ஸ்டோர் கடையை நோக்கி நடப்பார். மறுபடியும் அவர் இரவு பத்து அல்லது பன்னிரண்டு மணிக்குக் கடையைப் பூட்டிக் கொண்டு திரும்புவதைப் பார்க்கலாம்.

'மீனாட்சி' கணக்குப் பிள்ளை அந்தஸ்தை எட்டுவதற்கு முன்பே, நாலைந்து குழந்தை – மீனாட்சிகள் தெருவில் புழுதி ரக ஆராய்ச்சியில் ஈடுபடுவது சர்வ சாதாரணமாகிவிட்டது.

பிள்ளையவர்கள் பொறுமை சாலி – ஆதிசேஷன் ஒரு பூமி யின் பாரத்தைத் தான் தாங்குகிறானாம்; ஆனால் பொறுப்பு, ஏமாற்று, சுயமரியாதை, நம்பிக்கை என்ற நியதியற்றுச் சுழலும் ஒரு பெரிய கிரக மண்டலத்தையே தூக்கிச் சுமக்கிறார் அவர். ஏறு நெற்றி, வழுக்கைத்தலை, கூன் முதுகு, பெட்டியடியில் உட்கார்ந்து உட்கார்ந்து குடமான வயிறு – இவைதான் இச்சுமைதாங்கி உத்தியோகத்தால் ஏற்பட்ட பலன்கள்.

பிள்ளையவர்கள் மிகவும் சாது; அதாவது, படாடோபம், மிடுக்கு, செல்வம், அகம்பாவம்

□ புதுமைப் பித்தன்

முதலியவற்றின் உதைகளையும் குத்துக்களையும் ஏற்று ஏற்று, மனமும், செயலும், எதிர்க்கும் சக்தியையும், தன்னம்பிக்கையையும் அறவே இழந்து விட்டன. தாம் கீழ்ப்பட்டவர், விநயமாக இருக்க வேண்டும், தம்மைப் பாதுகாத்துக் கொள்ள உண்மை, நாணயம் முதலிய பழக்கங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்று உறுதிப்பட்டவர்.

**“ மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஒரு ஸ்டோர் குமாஸ்தா. அவர், உப்புப் புளி பற்று – வரவுக் கணக்கின் முலமாகவும், படிக்கல்லின் முலமாகவும் மனித வர்க்கத்தின் சோக நாடகங்களையும், மனித சித்தத்தின் விசித்திர ஓட்டங்களையும் அளந்தவர்.**

**அவருக்குச் சென்ற நாற்பத்தைந்து வருஷங்களாக, அதே பாதை, அதே வீடு, அதே பலசரக்குக் கடையின் கமறல்தான் விதி. அதுவும் அந்தக் காலத்தில் அடக்கமான வெறும் முலைத்தெரு ராமு கடையாகத்தான் இருந்தது. கடையும் பிள்ளையவர்களுடன் வளர்ந்தது. ”**

ஆனால் அவர் உள்ளத்தில், அந்தப் பெட்டிப்பாம்பாக அடங்கிக் கிடக்கும் உள்ளத்தில், அலாவுத்தீன் ஜீனியைப்போல், ஆசை பூதாகாரமாய் விரிந்து, அவரது சித்தப் பிரபஞ்சத்தையே கவித்து ஆக்கிரமித்துக் கொண்டது. தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் செயல் திறமையிழந்தவன் செய்வது போல், ஆசைப் பேய்க்குப் பூசையும் பலியும் கொடுத்து மகா யக்ஞம் செய்ய எந்தப் பக்தனாலும் முடியாது.

இந்த மனம் இருக்கிறதே, அப்பா! ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கும் அது உண்டு. நீறு பூத்த நெருப்பை வேதாந்திகள் பெரிய விஷயங்களுக்கு உபமானம் சொல்லுவார்கள். ஆசையைப் பொறுத்தவரை அந்த உபமானத்தால் பிள்ளை பெரிய மனுஷர் தான். “மீனாட்சியா! அந்த அப்பாவிப் பயல்!” என்று பலர் துச்சமாகக் கருதுவார்கள். முகத்திற்கெதிரேயும் சொல்லுவார்கள். அப்படிப்பட்ட ‘அப்பாவிப் பிராணி’யின் மனத்தில் புகைந்து கவிகிறது ஆசை.





வீட்டில் குழந்தைக்குப் பால் தட்டாமலிருக்க – ஏன், பால் விற்று நாலு காசும் சம்பாதிக்க – மாடும் கன்றும் வாங்க வேண்டும்! தெற்குத் தெரு மாவன்னாவுக்கு ‘மேடோவர்’ செய்த நிலத்தைத் திருப்ப வேண்டும். இது மட்டுமா? கால்மேல் கால் போட்டு, ‘ஏ மீனாட்சி!’ என்று தாம் அழைக்கப்படுவதுபோல், தம் இஷ்டப்படி ஆட ஒரு மீனாட்சியும் ஸ்டோர் கடையும் கைக்குள் வரவேண்டும்.

ஒரு முறை கொழும்புக்குப் போய்விட்டுத் தங்க அரைஞாண், கடிகாரச் சங்கிலி, வாட்ட சாட்டமான உடம்பு, கையில் நல்ல ரொக்கம், கொழும்புப் பிள்ளை என்ற பட்டம் முதலிய சகல வைபவங்களுடனும் திரும்ப வேண்டும். தெருவில் எதிரே வருகிறவர் எல்லோரும், துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு, பல்லை இளித்த வண்ணம், 'அண்ணாச்சி சௌக்கியமா?' என்று கேட்க வேண்டும்! ஊரில் நடைபெறும் கலியாணமும், சம்பவிக்கும் இழவும் இவர் வருகையை எதிர்பார்த்துத் தான் தம் பாதையில் செல்ல வேண்டும்!...

இன்னும் எத்தனையோ எண்ணங்கள்! தினசரிப் பணப் புழக்கம் எல்லாம் அவர் கையில் தான், கடைசியாய், தனியாகக் கடையைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு போகிறவரும் அவர்தான். அதே சமயத்தில் தான், கடைக்குக் கூப்பிடுகிற தூரத்தில் இருக்கும் ரயில்வே ஸ்டேஷனில் ஐந்து நிமிஷம் நின்று விட்டுத் தூத்துக்குடி ஷட்டில் வண்டி புறப்படுகிறது. டிக்கட் வாங்கிக் கொண்டு ராத்திரியோடு ராத்திரியாகக் கம்பி நீட்டிவிடலாம். டிக்கட்டுக்கு மட்டிலும் பணம் எடுக்கத் தினசரி கடையில் பணம் புரளும்.

ஆனால், அந்தப் போலீஸ்காரப்பயல் இருக்கிறானே! நினைக்கும் பொழுதே பிள்ளையவர்களுக்கு அவன் கை தோளில் விழுவது போலப் பயம் தட்டிவிடும். திடுக்கிட்டுத் திரும்பிக் கூடப் பார்த்து விடுவார்.

சிலர் நேரத்தைத் [illegible] கொள்ளக் [illegible] கொள்ளுவார்கள். [illegible] நிழலின் [illegible] உபயோகப்படுத்திக் கொள்ளுவார்கள். [illegible]காரத்தின் மெயின் ஸ்பிரிங் ஒடிவதற்கு ஹேது உண்டு. சூரியனை மேகம் மறைத்தால் நிழலின் குறியெல்லாம் அந்தரடித்துக் கொண்டு போக வேண்டியதுதான். அதனால்தானோ என்னவோ, சென்ற நாற்பத்தைந்து வருஷங்களாகக்



கொக்கிரகுளத்திலுள்ள பலருக்கும் ஸ்ரீமான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சாவி கொடுக்காத கடிகாரமாய், மேகத்தால் மறையாத சூரியனாய், என்றும் பழுதுபடாத நித்திய வஸ்துவாய் இருந்து வருகிறார்.

பிள்ளைக்கு எதிலும் நிதானம். இயற்கையின் நியதியைப் போல் இருக்கும் அவர் நடவடிக்கையெல்லாம்— நேற்று இருந்த மாதிரி தான் இன்றும், நாளையும், இனியும். ஒன்று மட்டும் சொல்லுகிறேன், கொக்கிரகுளத்தில் உள்ள மிகவும் முதிர்ந்த கிழவருக்கும், அவர் தம் சன்னக் கம்பிக் கறுப்புக்கரை நாட்டு வேஷ்டியுடன் தான் காட்சியளித்து வருகிறார். இந்த ஒழுங்கிலிருந்து அவர் விலகியதும் கிடையாது. விலக முயன்றதும், விரும்பியதும் கிடையாது.

ஸ்ரீபிள்ளையவர்களின் மு[illegible] தேஜஸ் கீஜஸ் என்ற தொந்தரவெல்லாம் பெறாவிட்டாலும், அவர் ஒரு சித்தாந்தி. பற்று வரவுக் கணக்கு அவருக்கு வாழ்க்கையின் இரகசியங்களை எடுத்துக் காண்பித்து, புகையூடு தெரியும் விளக்கைப் போன்ற ஒரு மங்கிய சித்தாந்தத்தை உபதேசித்தது.

மூலைத் தெரு லாந்தல் கம்பங்கூடச் சோர்ந்துவிட்டது. கொக்கிரகுளத்திலுள்ள லாந்தல் கம்பங்களுக்கு இரவு பத்து மணிக்குள்ளாகவே சர்வசாதாரணமாக ஏற்படும் வியாதி இது.

மூலைத் தெருவில் மற்ற இடங்களெல்லாம் ஒடுங்கிவிட்டன. ஸ்டோரில் பெட்டியடி மேல் ஒற்றை மின்சார விளக்குப் பிரகாசிக்கிறது. பிள்ளையவர்கள் ஓலைப் பாயில் உட்கார்ந்து கொண்டு மேஜையின் மேலுள்ள சிட்டைப் புத்தகத்தில் ஏதோ பதிந்து கொண்டு இருக்கிறார்.

"சுப்புப் பிள்ளையா? நாலு, நாலரை, நாலரையே மாகாணி, நாலரையே மாகாணியும் ஒரு சல்லியும், நாலரையே மாகாணி ஒரு சலலி, ஒரு துடடு, நாலு, ஒமபது, அஞசு சல்லி! சவததுப பயலுககுக் குடுததுக குடுத்துக் கட்டுமா? நாளைககு வரடடும் சொலலறேன. கோவாலயயனா? சொலலவும் முடியாது. மெலலவும் முடியாது! என்ன செயயறது? பிளளைவாள பாடு அவனபாடு..." ஏடுகளைப் புரட்டுகிறார. நெற்றியில் வழியும் வோவையைத துடைததுவிட்டு, இராமையாப பிள்ளை பேரேடடைத திருப்பிக் கூடட ஆரம்பித்தார. "வீசம், அரைக்கால், அரையோரைக்கால் ..."

"என்ன அண்ணாசசி, இன்னங் கடையடைககலே? எனனததே விளுநது விளுநது பாககிய?" என்று கொண்டே வநதார மாவடியா பிள்ளை. "வாரும் இரியும" என்று சொல்லி, மறுபடியும் கணக்கில் ஈடுபட்டார பிள்ளை,

"என்னய்யா, வண்டி போயிருக்குமே! இன்னமா? உமககென்ன பயித்தியம் ?"

"தம்பி, நீங்க ஒரு மூணு வீசம் அரை வீசம் கொடுக்கணுமில்லே; நாளாயிட்டுதே! கொஞ்சம் பாருங்க. கடையிலே பொரண்டாததானே முடியும்?"

"அதுக்கென்னையா, வார வியாழக்கிழமை பாக்கிறேன். நீங்க வீசம்படி பின்னைக்கி எண்ணை குடுங்க; பின்னைக்கு எண்ணை – புன்னைக்காய் எண்ணெய் எல்லாத்தையும் சேர்த்துக் குடுத்திடுவேன்!"

"பார்த்துச் செய்யுங்க!" என்று சொல்லிக் கொண்டே மேல் துண்டை எடுத்து ஒரு தோளில் போட்டுக் கொண்டு எழுந்தார். கொட்டாவி வந்துவிட்டது. வாய்ப் பக்கம் விரலால் சுடக்கு விட்டுக் கொண்டே, 'மகாதேவ, மகாதேவ' என்று முணு முணுத்த வண்ணம், நெடுங்காலக் களிம்பால் பச்சை ஏறிப்போன புன்னைக்காய் எண்ணெயிருக்கும் செப்புப் பாத்திரத்தண்டை சென்றார். குனியு முன் தலையை விரித்து உதறி, இடது கையால் அள்ளிச் சொருகிக் கொண்டு, கட்டை விரலுக்கும் நடு விரலுக்கும் இடையில் பிடித்து வீசம் படியில் எண்ணெயை எடுத்துக் கொண்டு திரும்பினார்.

"தம்பி!" என்று கொண்டே நீட்டினார்.

மாவடியா பிள்ளை கையில் இருந்த சிறு பித்தளை டம்ளரில் வாங்கிக் கொண்டார்.

பிள்ளையவர்கள் மறுபடியும் ஒழுங்காக மேல்துண்டை மடித்து பெட்டியடியில் போட்டுக் கொண்டு, "மகாதேவா!" என்று வாய்விட்டு ஓலமிட்ட வண்ணம், ஒற்றைக் கையைப் பெட்டியின் மேல் ஊன்றியபடி மெதுவாகச் சம்மணமிட்டு உட்கார்ந்தார்.

மாவடியா பிள்ளை புறப்படுவதாகத் தோன்றவில்லை.

"என்ன அண்ணாச்சி, இன்னந் "..தேரமாகலியா!" (தேரம் – நேரம்) என்று, பெட்டியடிப் பக்கத்தில் இருந்த தட்டில் உள்ள பொரிகடலையை எடுத்துக் கொரிக்க ஆரம்பித்தார்.

"இன்னம் ரெண்டு மூணு புள்ளியைப் பார்த்து விட்டுத் தான், கடையெடுக்கணும். எனக்குச் செல்லும் (செல்லும் . நேரம் செல்லும்). வார வைகாசியிலே ராதாவரத்துப் பிள்ளை என்னமோ காசுக்கடை வைக்ராஹளாமே, ஒங்கிளுக்கென்னய்யா...!" என்று சிரித்தார் பிள்ளை.

"அவாளுக்கென்ன! காசுக்கடையும் வைப்பாஹ, கும்பினிக் கடையும் வைப்பாஹ. கையிலே பசையிருந்தா யார் தான் என்னதான் செய்ய மாட்டாஹ. வார வைகாசிலையா? யார் சொன்னா?" என்று வாயில்

## தலைப்பாகையும் போர்வையும்

ஒரு நாள் தலைப்பாகை வாங்குவதற்காகக் கடைக்குச் சென்ற முல்லா, விலை கேட்டு ஒரு தலைப்பாகையை வாங்கிக் கொண்டபின், அங்கிருந்த போர்வை ஒன்று அவர் கவனத்தைக் கவர்ந்ததால், அதையும் வாங்க எண்ணினார்.

தலைப்பாகையின் விலையும், போர்வையின் விலையும் ஒன்றுதான் என அறிந்து கொண்ட முல்லா, "இந்தத் தலைப்பாகைக்குப் பதில் போர்வையை வாங்கிக் கொள்கிறேன்" என்று கடைக்காரரிடம் கூறிவிட்டு, தாம் எடுத்தத் தலைப்பாகையை வைத்துவிட்டுப் போர்வையை வாங்கிக்கொண்டு கிளம்பினார்.

முல்லா, போர்வைக்குரிய பணத்தைக் கொடுக்காமல் போவதைக் கண்ட கடைக்காரர், "ஐயா, போர்வைக்குரிய பணத்தைத் தராமல் போகிறீர்களே" என்று கேட்டார்.

அதைக் கேட்ட முல்லா, "நான் தலைப்பாகைக்குப் பதிலாகப் போர்வையை வாங்கியதால், பணம் ஏன் தர வேண்டும்?" என்று கேட்டார்.

அதற்கு கடைக்காரர், "அப்படியென்றால் தலைப்பாகைக்குரிய பணத்தைக் கொடுங்கள்" என்றார்.

முல்லா, "தலைப்பாகை உம்மிடம் இருப்பதால், உம்மிடம் உள்ள ஒரு பொருளுக்கு நான் ஏன் பணம் தர வேண்டும்?" என்று வினவியபடி வெளியே போனார்.

அவர் பணம் தராமல் வெளியே போவதைக் கண்ட கடைக்காரர் ஒன்றும் புரியாமல் நின்றார்.

உப்புக்கடலை ஒன்றை எடுத்துப் போட்டபடியே கேடடார்.

"என்னயயா, ஒரேயடியாக் கையை விரிக்கிய? ஓங்களுக்குத் தெரியாமலா பிள்ளைவாள் வீட்டிலே ஒண்ணு நடக்கும்? யாருக்கிட்ட உங்க மூட்டையை அவுக்கிய?" என்று கையில் எடுத்த பென்ஸில் முனை மழுங்கியிருந்தால், நகத்தால் கட்டையை உரித்துக் கொண்டே சொன்னார்.

மாவடியா பிள்ளை அப்படி இலகுவில் 'மூட்டையை அவிழ்த்து' விடுபவரல்லர். "ஊர்க் கதை எல்லாம் நமக்கெதுக்கு? நான் வாரேன். நேரமாகுது!" என்று எண்ணெயை எடுத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டார்.

"தம்பி! விசாளக்கௌமையை மறக்காமே!" என்றார் பிள்ளை.

"மறப்பனா!" என்று கொண்டே இருட்டில் மறைந்தார் மாவடியா பிள்ளை.

பிள்ளையவர்களுக்கு அப்புறம் கணக்கில் மனம் லயிக்கவில்லை. ராதாபுரத்துப் பிள்ளை ஆரம்பிக்கப் போகும் காசுக்கடையிலும், அதில் மாவடியா பிள்ளைக்குக் கிடைக்கக்கூடிய ஸ்தானத்தையும் பற்றி விஸ்தாரமாக நினைக்க ஆரம்பித்துவிட்டார்.

'மாவடியா பிள்ளைக்கென்ன! கையிலே பணம் புரண்ட வண்ணந்தான். இப்படியே ஒரேயடியாக முழுங்கரானெ, ஆளைக் கையிலே பிடிக்க முடியுமா? ....'

அவர் மனம் காசுக்கடைப் பெட்டியடியில் உட்கார்ந்திருக்கும் கற்பனை மாவடியா பிள்ளையைக் கண்டு பொறாமைப்பட்டது. என்னதான் இருந்தாலும், நாணயமாக ஒரு இடத்தில் இருக்கிறவன் என்று பேர் வாங்கப் போறானா! நாற்பத்தைந்து வருஷங்கள் ஒரே இடத்தில் இருந்து பேர் வாங்கினால் அல்லவா தெரியும்!...'

உடனே மனம் நாற்பத்தைந்து வருஷங்களையும் தாவி ஏதோ அந்தக் காலத்தில் பள்ளிக்கூடத்திற்குப் போக மறுத்ததினால் ஏற்பட்ட இந்த மாறுதலை நினைத்தது.

அந்தக் காலத்தில் அது பிரமாதமாகப் படவில்லை. அப்புறம் பிள்ளையும் குட்டியும் வந்து, அது இது என்று ஆக ஆகச் சந்தர்ப்பம் தவறாக மாறிப் பெரிய தவறாக உருவெடுத்தது. வக்கீல் பிள்ளையும் தான் படித்தவர்தான். இப்பொழுது அவரை, "ஏலே ஆறுமுகம்!" என்று கூப்பிட முடியுமா?

பிள்ளையவர்களுக்கு மனம் கணக்கில் லயிக்கவில்லை. பெட்டியில் மூடிவைத்தார். 'தூத்துக்குடி வண்டி இன்னும் புறப்படவில்லையே' என்ற எண்ணம் திடீரென்று உதித்தது 'சவத்தைக் கட்டி எத்தனை நாள் தான் மாரடிப்பது!' என்று முணுமுணுத்தார். நெற்றியில் குபீர் என்று வியர்வையெழும்பியது.

பெட்டிச் சொருகை அநாவசிய பலத்தை உபயோகித்து வெளியே இழுத்தார். உள்ளேயிருந்த சில்லறையும் ரூபாயும் குலுங்கிச்சிதறின. செம்பு, நிக்கல், வெள்ளி என்று பாராமல் மடமடவென்று எண்ணினார். நாற்பதும் சில்லறையும் இருந்தது. அவசர அவசரமாக எடுத்து மடியில் கொட்டிக் கொண்டு, விளக்கை அணைத்து, மடக்குக் கதவுகளைப் பூட்டினார்.

சாவிக் கொத்து கையில் இருக்கிறது. உணர்வு கூட இல்லாமல் வேகமாக ஸ்டேஷனை நோக்கி நடந்தார். நாற்பத்தைந்து வருஷமாக உழைத்துப் போட்டும் என்ன பலன்? நாக்குக்கு ருசியாய்ச் சாப்பிட முடிந்ததா? என்ன பண்ணி விடுவான்? கொஞ்ச தூரம் சென்ற பிறகு தான் செருப்பை கூடக் கடையிலேயே வைத்துவிட்டு வந்துவிட்டார் என்ற உணர்வு தட்டியது.

நல்ல காலமாக எதிரில் யாரையும் காணோம். 'பார்த்தால் தான் என்ன? கடையைப் பூட்டின பிறகு நேரே வீட்டிற்குத் தான் போக வேண்டுமா? நம்ம நினைப்பு அவனுக்கெப்படித் தெரியும்?'

ஸ்டேசனுக்கு வந்தாயவிட்டது. பெட்ரோமாக்ஸ் விளக்கடியில் தூங்கும் சில்லறைச் சிப்பந்திகள், பக்கத்து வெற்றிலை பாக்குக் கடையில் வாயடிக்கும் போர்ட்டர்கள்! வெளிக் கேட்டில் அவ்வளவு கூட்டம் இல்லை. ரயிலுக்குக் கூட்டம் இருக்காததும் நல்லது தான் என்று நினைத்து உள்ளுக்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டார் பிள்ளை.

டிக்கட் கவுண்டரில் பத்தே காலணாவை வைத்துவிட்டு, "தூத்துக்குடி!" என்றார் பிள்ளை, அதற்குள் நா வறண்டு விட்டது.

"எங்கே?" என்றார் டிக்கட் குமாஸ்தா.

பிள்ளை திடுக்கிட்டார். "தூத்துக்குடி!" என்றார் மறுபடியும்.

"வாயில் என்ன கொழுக்கட்டையா, தெளிவாகத்தான் சொல்லேன்!" என்று கொண்டே ஒரு டிக்கட்டை 'பஞ்ச்' செய்து கொடுத்தார் குமாஸ்தா.

அப்பாடா!

பிள்ளையவர்கள் நிம்மதியடைந்தவர் போல் மூச்சை உள்ளுக்கு வாங்கி மெல்ல விட்டுக்கொண்டு பிளாட்பாரத்தில் நுழைந்தார். வண்டி நின்று கொண்டிருக்கிறது. புறப்பட இன்னும் பத்து நிமிஷம். ஒரு சோடா விற்பவனும்.. ஆமவடை – முறுக்கு – போளி – ஐயரும் குரல் வரிசையைப் பிளாட்பாரத்தின் மேலும் கீழுமாகக் காண்பித்து நடந்தனர். லக்கேஜ் தபால் வண்டிப் பக்கத்தில் தான் ஸ்டேஷன் மாஸ்டரும், ஸ்டேஷன் சிப்பந்திகளும்!

தொடரின் பின்புறத்தில், ஒருவரும் இல்லாத தனி



வண்டியில் ஏறி, கூட்ஸ் ஷெட் பக்கம் பார்த்த ஜன்னல் அண்டையில் உட்கார்ந்தார். ஜன்னல் பக்கம் இருந்த நிம்மதி. இவரது மனதைத் துருதுரு என்று வாட்டியது. எழுந்து பிளாட்பாரத்தின் பக்கத்திலிருக்கும் ஜன்னல் பக்கம் வந்து உட்கார்ந்து கொண்டு, வண்டி எப்பொழுது புறப்படும் என்பதை ஆவலாக அறிய என்ஜின் பக்கம் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"பிள்ளைவாள்! ஏது இந்த ராத்திரியில்!" என்றது கம்பீரமான ஒரு குரல். வேறு ஒருவரும் இல்லை – ரயில்வே போலீஸைச் சேர்ந்த அவரது நண்பர் கலியாண சுந்தரம். பிள்ளை திடுக்கிட்டுத் திரும்பினார்.

போலீஸ்காரன்! பிள்ளையவர்கள் நண்பரைப் பார்க்கவில்லை. காக்கி உடையைத்தான் பார்த்தார்!

தன்னையறியாமல் அவரது வாய் "தூத்துக்குடி வரை!" என்றது.

"என்ன அவசரம் ! நான் உங்களை மணியாச்சியில் பார்க்கிறேன!" என்று சொல்லி, அளவெடுத்து வைக்கும் பெருமிதமான நடையுடன், லக்கேஜ் வான் பக்கம் நிற்கும் ஸ்டேஷன் மாஸ்டரை நாடினார் கலியாண சுந்தரம் பிள்ளை.

மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு நுனிநாக்கு முதல் அடித்தொண்டை வரை ஒரே வறட்சி. கண்கள் சுழன்றன.

"கலர்! சோடா!" என்று நீட்டினான் சோடாக்காரன்.

"ஏ, சோடா! கலர் ஒன்றை உடை!" என்றார் பிள்ளை.

'டஸ்!' என்ற சப்தம். 'ஸார்' என்று நீட்டினான் சோடாக்காரன். வாங்கிக் குடித்தார். "பூ!" என்று ஏப்பமிட்டுக் கொண்டே,

ஓரணாவை அவன் கையில் கொடுத்து விட்டுப் பலகையில் சாய்ந்து கண்ணை மூடினார் பிள்ளை. 'கலியாணி பார்த்து விட்டானே? நாளைக்கு நம் குட்டு வெளிப்பட்டுப் போகுமே!'

துறைமுகத்தில் கலியாண சுந்தரம் பிள்ளை தமக்காகக் காத்துக் கொண்டிருப்பதை மனக்கண்ணால் பார்த்தார்.

ரயில் விஸில் கிரீச்சிட்டது. பிள்ளையவர்கள் அவசர அவசரமாகக் கதவுப்பக்கம் வந்து இறங்கினார்.

பிளாட்பாரத்தில் கால் வைத்ததுதான் தாமதம், வண்டி நகர ஆரம்பித்தது.

" என்ன பிள்ளைவாள், இறங்கிட்டிய!" என்று வேகம் அதிகரித்து ஓடும் ரயில் சாரளத்திலிருந்து ஒரு குரல். கலியாண சுந்தரம் பிள்ளை தான்.

"அவாள் வரலை!" என்று கத்தினார் பிள்ளை.

மெதுவாக, நிதானமாக ஸ்டேஷனை விட்டு வெளியேறி ஸ்டோர் பக்கமாக நடந்தார் பிள்ளை. வழியில் சிறிது தூரம் செல்லுகையில் தான் பாஸ் இல்லாமல் எப்படிக் கப்பலில் செல்வது என்ற "ஞாபகம் வந்தது பிள்ளைக்கு. "புத்தியைச் செருப்பால் தான் அடிக்கணும்!" என்று சொல்லிக் கொண்டார் பிள்ளை. அவருக்குத் தமது ஆபத்தான நிலைமை அப்பொழுது தான் தெளிவாயிற்று. உடல் நடுங்கியது.

"யார் செய்த புண்ணியமோ!" என்று மடியில் இருந்த விபூதியை நெற்றியில் இட்டுக் கொண்டு, "மகாதேவா!" என்றார் வாய்விட்டு.

ஸ்டோருக்கு வந்து விட்டார். சாவதானமாகக் கதவைத் திறந்து விளக்கை ஏற்றினார். மடியில் இருந்த சில்லறையைப் பெட்டிக்குள் வைத்துவிட்டு,

சிட்டையை எடுத்து, "மீனாட்சி பற்று பதினொன்றே காலணா" என்று எழுதினார்.

மறுபடியும் விளக்கு அணைந்தது, காலில் செருப்பை மாட்டிக்கொள்ளும் சப்தம். பூட்டு கிளிக் என்றது.

முதலாளி வீட்டை நோக்கி 'சருக் சருக்'கென்ற செருப்புச் சப்தம்.

பிள்ளை வழியில் துண்டை உதறிப் போட்டுக் கொண்டார். தலையை உதறிச் சொருகிக் கொண்டார்.

முதலாளி காற்றுக்காக வெளியே விசுப் பலகையில் தூங்குகிறார்.

"ஐயா! ஐயா!" என்றார் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

"என்னவே, இவ்வளவு நேரம்!" என்று புரண்டு கொண்டே கொட்டாவி விட்டார் முதலாளி ஐயா,

"இல்லை, சோலி இருந்தது. ஏம்பத்துலே இண்ணக்கி பதினொண்ணே காலணா எளுதிருக்கேன்!" என்றார் பிள்ளை. அப்பொழுதும் அந்த நாவறட்சி போகவில்லை.

"சரி! விடியென வரப்போ, மூக்கென வண்டியைப் போட்டுக்கிட்டு வரச்சொல்லும். சந்தைக்குப் போக வேண்டாம்!" என்றார். சொல்லிவிட்டு, கொடுங்கையைத் தலைக்கு வைத்துக் கொண்டு கண்ணை மூடிக்கொண்டார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை, முதலாளி ஐயாவைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டே நின்றார். அப்புறம் மெதுவாகத் திரும்பி நடந்தார்.

– ***'சிறந்த சிறுகதைகள்' தொகுப்பிலிருந்து***

***தொகுப்பு : சா.கந்தசாமி***

***வெளியீடு : கலைஞர் பதிப்பகம், சென்னை–17.***

★ ★ ★

# ஓசூரில் ஒரு சாதனை

முதல்வர் பிறந்த நாளையொட்டி பல்லாயிரக் கணக்கான மரக்கன்றுகளை மாவட்டம் முழுமையும் நட்டு சாதனை படைத்ததுடன் தருமபுரி மாவட்டம் ஓசூரில் 28-6-2000 அன்று பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையின் அருகே அமைந்துள்ள யசோதா மகாலில் மாபெரும் இரத்ததான முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாம் இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் சீரிய பார்வையில் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த மருத்துவர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், தொண்டு நிறுவனத்தினர் ஆகியோரை தன்னடக்கி செய்தி விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் திரு.வ.முல்லைவேந்தன் தலைமையில் காலை 8.00 மணிக்கு தொடங்கப்பட்டது. முன்னதாக அமைச்சரால் இரத்ததானம் செய்யப்பட்டு தொடங்கிவைக்கப்பட்டது.

இந்த முகாமில், ஒரு புதிய சாதனையாக 2,177 நபர்கள் இரத்த தானம் வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது.

இந்நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆற்காடு திரு நா.வீராசாமி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இரத்ததானம் வழங்கியவர்களுக்கு அரிமா சங்கத்தின் சார்பில் குளுகோஸ், பிஸ்கட், டீ, உணவு முதலியன வழங்கப்பட்டன. அத்தோடு இந்திய செஞ்சிலுவை சங்கமும், தருமபுரி மாவட்ட திராவிட முன்னேற்ற கழகமும் இரத்ததானம் வழங்கியதற்கான சான்றிதழ்களைத் தனித்தனியே வழங்கினர்.





# திருப்பெரும்புதூர் களிமண் படிவங்கள்

– முனைவர் இரா. இராமசாமி

சென்னைக் கருகிலுள்ள திருப்பெரும்புதூர் பகுதியில் 2000 சதுர கிலோ மீட்டர் பரப்பில் 1,000 கோடி டன்னுக்கும் மிகையான களிமண் படிவம் அமைந்துள்ளது. இக்களிமண்ணை அடிப்படையாகக் கொண்டு நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் உண்டாக வாய்ப்புகள் உள்ளன.

### களிமண் படிவம்

திருப்பெரும்புதூர் களிமண் படிவம் 10 கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றிய களிமட் பாறையிலிருந்து உண்டானது. இக்களிமட் பாறை சிதிலமடைந்து களிமண் படிவம் தோன்றியுள்ளது. இக்களிமட் பாறையும் களிமண்ணின் எல்லாவிதத் தன்மையையும் பெற்றுள்ளது. ஆனால், களிமண் படிவாகக் பாறையாகவுள்ளது. எனவே இக்களிமட் பாறையையும் களிமண் படிவாகக்

இக்களிமண்ணில் ஈரத்தன்மையும், சுட்ட எடையிழப்பும் ஏறத்தாழ சம அளவில் (முறையே 7%, 7%) இருப்பதால் மோண்ட் மோரிலோனைட்டுக் கனிமம் 50% குறைவாக இருக்குமென மதிப்பிடப்படுகிறது.

களிமண்ணில் சிலிக்கா அடக்கம் 60%



கொள்ளலாம். களிமண் படிவத்தை மணலும், மண்ணும், செம்பாறாங்கல்லும், செஞ்சரளைகளும் 1லிருந்து 10 மீட்டர் ஆழம் வரை மூடியுள்ளது. மேற்கிலிருந்து கிழக்காகச் செல்லச்செல்ல களிமண்படிவம் 30 மீட்டரிலிருந்து 100 மீட்டர் ஆழத்திற்கு மேற்பட்ட தடிப்பத்தை உடையது. இக்களிமண் படிவத்தில் ஆங்காங்கே இடையிட்ட பருமணல் அல்லது குறுமணல் படலங்களும், ஏடுகளும், அடுக்குகளும், திட்டுகளும் விரவிக்கிடக்கின்றன. இவற்றின் நிறம் மஞ்சள், சாம்பல், கருஞ்சாம்பல், வெள்ளை, இளஞ்சிவப்பு, இளம்பழுப்பு வரை வேறுபடுகின்றது. இப்படிவில் மொண்ட்மோரிலோனைட், பிடிலைட், நான்ட்ரோனைட், கயோலினைட், இல்லைட், காலிசைட், நாக்ரைட், திக்கைட் போன்ற களிக்கனிமங்கள் காணப்படுகின்றன. எனினும் கயோலினைட்டைவிட மோண்ட்மோரிலோனைட் சிறிது மிகையாகவுள்ளது. இக்களிக் கனிமங்களுடன், மாக்னைட், குவார்ட்ச, கால்சைட், இலிமோனைட், ஹையாஸ்போல் கனிமங்களும் இடத்திற்கு இடம் வேறுபட்ட அளவுகளில் கிடைக்கின்றன.

உள்ளது. எனவே இதில் குறைந்தது 10% குவார்ட்ச கனிமம் இருக்கும் எனக் கருதப்படுகிறது. சுண்ண ஆக்ஸைடு 2%, மாக்னீய ஆக்ஸைட் 1.5% உள்ள இரும்பு ஆக்ஸைட் 1%லிருந்து 8% வரை வேறுபடுகிறது. அதனால் அதன் நிறம் வெள்ளையிலிருந்து இளஞ்சிவப்பு நிறம் வரை வேறுபடுகிறது. காரத்தன்மை 2% வரை வேறுபடுகிறது. சாயப்பூச்சின் மூலம் மோண்ட் மோரிலோனைட்டுக் கனிமம் மிகையாகவுள்ளதையறியலாம். மின்னணு உருப்பெருக்கியின் மூலம் தட்டையான வட்டக் கனிமங்கள் காணப்படுகின்றனவா, அல்லது ஊசி

போன்ற நீண்ட படிகங்கள் மிகையாக உள்ளனவாவென அறியலாம். திருப்பெரும்புதூர் பகுதியில் சுண்ணச் சத்துமிக்க மோன்ட் மோரிலோனைட் மிகையாகக் களிமண்ணில் காணப்படுகிறது. இது நீரை உறிஞ்சி உப்பும் தன்மையாதலால், உலர்ந்த பின் அதன் கன அளவு உப்பிய நிலையிலிருக்கிறது. அதில் நுண்துளைகள் மிகுதியாகக் காணப்படும். நுண்துளைகள் மிக்க களிமண் உலோக அயனிகளையும் அலோக அயனிகளையும் காற்றிலிருந்தும் நீரிலிருந்தும் உறிஞ்சுகிறது. அதனால், $Ca^{+2}$, $Mg^{+2}$, $K^{+}$, $Na^{+}$, $H^{+}$, OH, $NH^{3}$ 4, $PO^{3}$ 4, $SO^{2}$ 4, $Cl^{-}$ போன்ற அயனிகள் களிமத்தினுள் புகவோ அல்லது வெளியேறவோ செய்கின்றன. மற்றும் ஈயம், கோபால்ட், காட்மியம், துத்தநாகம் போன்ற கனமான தனிமங்களையும் உறிஞ்சுகின்றது. இது சுண்ண பென்டோனைட், சோடிய பென்டோனைட் என இருவகைப்படுகிறது. சுண்ணபென்டோனைட்டை விட சோடிய பென்டோனைட்டு சிறந்த முறையில் உறிஞ்சும் தன்மையது. கால்சியம் பென்டோனைட் நீரை உறிஞ்சி உப்புவதால் சிறந்த அடைப்பானாகப் பயன்படுகிறது. களிமண்ணைச் சுட்டால் 20° செ. – 150° செ. வெப்பநிலையில் ஈடத்தையிழக்கிறது. 400° செ. – 600° செ. வெப்பநிலையில் அதன் நீரடக்கத்தை இழக்கிறது. 550° செ. – 1050° செ. வெப்பநிலையில் அலுமினியச்சிலிக்கா ஆக்சைடுகள் சிதைந்து படிகத்தன்மையற்ற முல்லைட்டு, தீரிடைமைட்டு உண்டாகின்றன. 1350 செ. வெப்பநிலையில் முல்லைட் படிகங்கள் உண்டாகின்றன. 1470° செ. கிரிஸ்டோபலைட்டு உண்டாகிறது. 1545° செ. கிரிஸ்டோபலைட்டும் முல்லைட்டும் உருகுகின்றன. 1745° செ. – 1790° செ. வெப்பநிலையில் களிமண் உருகுகிறது. 2000° செ. வெப்பநிலையில் சிலிக்கா ஆவி வெளியேறுகிறது.



சுங்குவார் சத்திரத்திலுள்ள திறந்தவெளி களிமட் சுரங்கத்தோற்றம்

திருப்பெரும்புதூர் களிமண் மிருதுவானது, குறைந்த கடினத் தன்மை (2) கொண்டது. நீரை மிகையாக உறிஞ்சி உப்பும் தன்மையது. நீரில் கலந்து நுண் துகட்களாகப் பிரிய வல்லது. நனைந்த களிமண் பிசு பிசுப்பானது. நன்றாக வளையக்கூடியது வளைந்த நிலையில் நிலைத்து நிற்பது. சுட்டால் உறுதியடையும். இதில் ஏறத்தாழ 50 சதவீதம் மோன்ட் மோரிலோனைட், பிடிலைட், நான்ரோனைட் களிக்கனிமங்களும், சிறிதளவில் கயோலினைட், காலிசைட்டு போன்ற களிக்கனிமங்களும் உள்ளன. மற்றும் குவாட்சு, இலிமோனைட்டு தையார்போர் கனிமங்களும் மாக்னடைட்டு கனிமங்களும் காணப்படும். இக்களிமண் உலர்ந்த நிலையில் ஒரு நிறத்திலும், நனைந்தபின் வேறொரு நிறத்திலும், சுட்டபின் மற்றொரு நிறத்திலும் காணப்படும். இக்களிமண் கரியசாம்பல், சாம்பல், மஞ்சள், சிவப்பு, இளஞ்சிவப்பு, இளம்பழுப்பு நிறத்தில் காணப்படும். களிமண்ணில் அயஆக்சைட் குறிப்பிடத்தக்க அளவிலிருந்தால் மஞ்சள் நிறத்துடன் காணப்படும். அயஆக்சைடு 1% குறைவாக இருந்தால் வெள்ளை நிறத்திலும் 1% – 5% இரும்பு ஆக்சைடு இருந்து மணலுடன் கலந்திருந்தால் சுடும் பொழுது சிவப்பு நிறத்தையடைகிறது. ஆயஆக்சைட் குறைந்து சுண்ண ஆக்சைடு மிகையாக இருந்தால் இளஞ்சிவப்பு நிறத்தில் காணப்படும். அலுமினா அடக்கம் 35% – 40% வரை இருக்கும் பொழுது களிமண் உலைக்களக் களிமண்ணாகக் கருதப்படுகிறது. இதனைக் கொண்டு உலக்களச்செங்கல் தயாரிக்கப்படுகிறது.

களிமண்ணில் மிகச்சிறிய களிமட் துகட்கள் உள்ளன. இவை 4 மைக்ரான் ( 1 மைக்ரான் என்பது மில்லிமீட்டரில் ஆயிரத்தில் ஒரு பங்கு) உருவளவிலிருந்து 0.025 மைக்ரான் அளவு வரை சிறியனவாக இருக்கும். பொதுவாக அவற்றின் பருமன் அல்லது குறுக்குயரம் அதன் நீளத்தில் பத்தில் ஒரு பங்கு அல்லது ஐம்பதில் ஒரு பங்காக இருக்கும். அதனால் அவை தகடுகளாகக் காணப்படும். வட்டமான கட்டுக்களாகவோ, நீண்ட குழாய்களாகவோ, நார்களாகவோ, பட்டையாகவோ, ஊசிகளாகவோ, சில களிக்கனிமங்கள் தென்படும். இவற்றின் உருவளவை மின்னணு உருப்பெருக்கியில் பத்தாயிரம் முதல் ஐம்பதாயிரம் மடங்கு பெரிதாக்கிக் களிமட் கனிமங்களை இனம் கண்டு பிடிப்பார்கள். சில சமயங்களில் X – கதிர்களைப் பயன்படுத்தியும் அகச்சிவப்புக் கதிர்களைப் பாய்ச்சியும் களிமட் கனிமங்களை இனம் கண்டு பிடிப்பார்கள். மற்றும் களிமண்ணைச் சூடேற்றி அதில் ஏற்படும் மாற்றங்களை உற்றுநோக்கியும் களிமண் கனிமங்களை இனம் கண்டுபிடிப்பர். நீளமான களிமங்களும் தட்டையான வட்டக் களிக்கனிமங்களும் களிமண்ணில் காணப்படுவதால் அதன் பிணைவுத் திறன் மிகுதியாகிறது.



## வேளாண்மையில் களிமண்

களிமண் பள்ளங்களை நிரப்பி நிலத்தைச் சமன்செய்யப் பயன்படுகிறது. களிமண் பள்ளங்களை நிரப்பி நிலத்தைச் சமன்செய்யப் பயன்படுகிறது. மணற்பாங்கான நிலத்தை நன்செய் நிலமாக்குகிறது. புழுதி என்பது உலர்ந்த களிமண்.

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்"

என்ற குறளின்படி நிலத்தை மீண்டும் மீண்டும் உழ, மண் உலர்ந்த புழுதியாகிறது. அதன் நீர்ப்பிடிப்புத் திறன் மிகுதியாகிறது. நீர் மண்ணுடன் வினைபுரிந்து சிதிலமடைகிறது. அதனால் புழுதியான களிமண் நீரிலிருந்தும் காற்றிலிருந்தும் இலை மக்குகளிலிருந்து சிதிலமடைந்த கனிமங்களிலிருந்தும் பொட்டாசியம், கால்சியம், மக்னீசியம், சோடியம், நைட்ரேட், சல்பேட், பாஸ்பேட் போன்ற அயனிகளைப் பெற்று பயிர்களுக்கு வழங்குகிறது.



ஸ்ரீபெரும்புதூர் குளத்தில்

சுத்தம் செய்த களிமண்ணை நன்றாகப் பொடி செய்து கறிக்கோழிகளுக்கு வைக்கும் தவிட்டில் 2% களிமண் கலந்து நீர்விட்டுப் பிசைந்து வைத்து வந்தால் அது விரைவில் எடைகூடி வளருகிறது. குறைந்த நாட்களில் விற்பனைக்கு வந்துவிடுகிறது. கோழி அதிக எண்ணிக்கையில் முட்டையிடுகிறது, கோழிகளின் நோய் எதிர்ப்புத் திறனும் மிகுதியாகிறது. அவற்றின் வயிற்றுக் கோளாறுகளுக்கும் கழிச்சலுக்கும் மருந்தாகிறது. கோழிகள் உண்ணும் உணவிலுள்ள கிருமிகளையும் விஷத்தையும் உறிஞ்சி மலமாக வெளித்தள்ளுகிறது. 45 நாட்களில் வளரும் கறிக்கோழி 1 கிலோ களிமண்ணை உண்ணும். அதனால் 1,000 கோழிகள் உள்ள பண்ணைக்கு 45 நாட்களுக்கொருமுறை 1டன் களிமண் தேவைப்படும். ஆடுகளும், மாடுகளும், எருமைகளும் களிமண் 2% கரைத்த நீரைக் குடித்தால் நல்ல வளர்ச்சியுடன்அதிக அளவில், பாலைச்சுரக்கும். ஆண்டு ஒன்றுக்கு, ஆடு ஒன்றுக்கு 10 கிலோ களிமண்ணும், மாடு ஒன்றுக்கு 50 கிலோ களிமண்ணும் தேவைப்படும். கஞ்சித் தண்ணீரில் சுத்தமான களிமண் 20 கிராமிலிருந்து 50 கிராம் வரை கரைத்து முறையே ஆடுகளையும், மாடுகளையும் குடிக்கச் செய்யலாம். ஆடு, மாடுகளின் வயிற்றுப் பொருமலையும், கழிச்சலையும் களிமண் கட்டுப்படுத்துகிறது. கிருமிகளையும் விஷப் பொருட்களையும் களிமண் உறிஞ்சி வெளியேற்றுகிறது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஆண்டு ஒன்றுக்கு இதனால் பல்லாயிரக்கணக்கான டன் தானியங்கள் மிச்சப்படும். மனிதர்களும் இவ்விதமாக களிமண் கலந்த நீரைப் பருகியும், களிமண் சேறை உடல் முழுமையும் பூசிக் காய்ந்தபின் குளிக்கவும் செய்யலாம். மருந்துகளும் மாத்திரைகளும் களிமண் கலந்து செய்யப்படுகிறது.

## பிற தொழிற் பயன்கள்

நீர் எண்ணெய், பாறையெண்ணெய் (பெட்ரோலியம்) கொழுப்புகள், சாராயம், பெயிண்ட்டு, கரிம வேதியல் பொருட்கள் ஆகியனவற்றைச் சுத்தம் செய்யவும் களிமண் பயன்படுகிறது. பாறை யெண்ணெயிலிருந்து பலவிதமான கரிமவேதியல் பொருட்களைப் பிரிக்கவும் களிமண் பயன்படுகிறது. பாறை எண்ணெய், எண்ணெய், சாராயம் போன்றவற்றிலுள்ள ஈயம், கோபால்ட்டு, காட்மியம், துத்தநாகம் போன்ற உலோக



மதுரமங்கலத்திலுள்ள நாட்டுச் செங்கற்சூலை

அயனிகளை களிமண் உறிஞ்சுகிறது. களிமண்ணிலிருந்து தயாரிக்கும் செயற்கை சியோலைட்டு Cs [134], Cs [137], Sr [90] போன்ற கதிரியக்கக் கழிவுத் தனிமங்களையும் உறிஞ்சுகிறது. தோல் துணி சாயத் தொழிற்சாலைக் கழிவு நீரைச் சுத்தம் செய்யும் பொருளாகவும் பயன்படுகிறது. இத்தொழிற்சாலைகளின் கழிவு நீர்த் தொட்டி / குட்டைகளிலிருந்து கழிவுநீர் கசிந்து நில நீருடன் கலக்காமல் தொட்டிகளின் / குட்டைகளின் உட்புறமாகப் பூசப்படுகிறது. உயர் தொழில்நுட்ப வளர்ச்சியால் களிமண் பூசிய நிலப்பாய்களும், துணிகளும், தாள்களும் விற்பனைக்கு வந்துள்ளன. அவற்றிற்கு பென்டோமாட்டு, கிளேமாக்க, பென்டோபிக்க, குண்சீல், பென்டோனைட்டு பாலிஎதிலின் காம்போசிட்டுப் பூச்சுகள் என வழங்கப்படுகின்றன. இவற்றைக் கழிவுநீர்க் குட்டைகளில் பொருத்தி கழிவுநீர் கசியா வண்ணம் செய்யலாம். மற்றும் சதுப்பு நிலங்களில் கட்டிடங்களைக் கட்ட சிறந்த வானக்கால்களை நிறுவலாம். கழிவுநீர் நிலத்தினுள் செல்லாதபடி தடுத்து ஆவியாக்கலாம். அமிலக்கழிவு நீருடன் சுண்ணாம்புக் கரைசலைச் சேர்த்து நீர்த்து ஆவியாக்கி எஞ்சும் கழிவுப் பொருளைக் களிமண்ணுடன் சேர்த்துச் சிறந்த உரப்பொருள் தயாரிக்கலாம். குடிநீரைச் சுத்தம் செய்வதில் களிமண் பெரும்பங்கு வகிக்கிறது. ஏரி குளங்களிலுள்ள களிமண் இயற்கையாகவே நீரைச் சுத்தம் செய்து குடி நீராக்குகிறது. களிமண் கலந்த மண்டித்தண்ணீரையும் இராமநாதபுரம், சிவகங்கை, திருவள்ளூர் மாவட்ட மக்கள் விரும்பிக் குடிக்கின்றனர்.

கல், மணல் நீக்கப்பட்ட களிமண்ணை அரைத்துப் பொடி செய்து அதில் மூன்றில் ஒரு பங்கு பாஸ்பாரிக் அமிலம், கந்தக அமிலம், நைட்டிரிக் அமிலம், அம்மோனியா எரிபொட்டாசு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைக் கலந்து 90° வெப்பநிலையில் சுழலும் உருளை உலையிட்டு வறுத்து பின்னர் எஞ்சிநிற்கும் அமிலங்களையும் உப்புக்களையும் நீரில் கழுவி காயவைத்து மீண்டும் அரைத்து முறையே பாஸ்பேட், சல்பேட், நைட்ரேட், குளோரைட் பொட்டாசிய உரங்களைத் தயாரிக்கின்றனர். இவ்வித் இயல்பூட்டப்பட்ட களிமண் சிறந்த உரமாகக் கருதப்படுகிறது.

களிமண் குறைந்த கடினத்தன்மையுடன் (2) மிருதுவாயிருப்பதால் சுண்ணாம்புக் கல்லிலிருந்து தயாரிக்கப்படும் பற்பொடி அல்லது பசையைவிடச் சிறப்பானது மற்றும் இக்களிமண்ணுக்கு இயற்கையாகவே அயனி மாற்றத்தால் பற்களைச் சுத்தம் செய்யுமியல்பு உண்டு. ஆகையால் தக்க வேதியல் பொருட்களுடன் களிமண்ணைக் கலந்து பற்பொடியும் பற்பசையும் தயாரிக்கின்றனர். களிமண்ணுடன் சில பாறைவெண்ணெய் வேதியல் பொருட்களைச் சேர்த்து நன்றாக ஒட்டக்கூடிய பசை தயாரிக்கப்படுகிறது. களிமண்ணைக் கொண்டு சிறந்த அடைப்பான்கள் (Sealant) தயாரிக்கப்படுகிறது. பென்டோனைட்டு துறப்பணத் துளைச் சுவர்பூச்சாகவும் பயன்படுகிறது. களிமண்ணைக் கழுவிச் சுத்தம் செய்து அரைத்து பூச்சிக்கொல்லி மருந்துகள், இரப்பர், தாள் பெயிண்டு, பீங்கான் தொழிற்சாலைகளில் நிரப்பிகளாகப் பயன்படுத்துகின்றனர். திருப்பெரும்புதூர்க் களிமண்ணிலுள்ள மோன்மோரிலோனைட்டுத் தவிர ஏனைய கயோலினைட்டுக் களிமத்தையும் ஏனைய காலிசைட், நிக்கைட்டு நான்ரோனைட் போன்ற பிற களிமங்களையும் உயர் தொழில்நுட்ப மிதவை முறையில் பிரித்தெடுத்து அவற்றின் இயல்புக்கேற்ப சிறந்த பொருட்களை உற்பத்தி செய்யலாம். அலுமினா அடக்கம் 35% - 40% உள்ள களிமண்ணிலிருந்து கட்ட அலுமினா உலைக்களச் செங்கல் ஆகியவற்றைத் தயாரிக்கலாம். ஆகையால் குறைந்த செலவில் எவ்வாறு களிக்கனிமங்களை உயர்தொழில் நுட்பப் பொருட்களைத் தயாரிப்பது என்பது குறித்து உலகின் பல இடங்களிலும் ஆராய்ச்சி நடைபெறுகிறது. திருப்பெரும்புதூர்க் களிமண் தொழில் நகரமான சென்னைக்கருகில்



2,000 ச.கிலோ மீட்டர் பரப்பில் கிடைப்பதால் குவார்சு, பெல்சுபார், சுண்ணாம்புக் கற்கனிமங்களை நிரப்பிகளாகப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளில் அக்கனிமங்களுக்கு பதிலாக மலிவுப் பொருளாகப் பயன்படுத்தலாம். இதனால் அக்கனிமங்களைத் தொலைவிலிருந்து எடுத்து வரும் செலவு மீதமாகிறது.

தேலந்தவாக்கம், மேய்யூர், ஒதப்பை, மேல்நல்லாத்தூர், சுங்குவார் சத்திரம், திருப்பெரும்புதூர், பல்லம், வல்லக்கோட்டை, மெப்பேடு, ஆவடி, பட்டாபிராம் போன்ற ஊர்களில் ஓரிரண்டு மீட்டர் ஆழத்திலேயே களிமண் படிவம் கிடைக்கின்றது. செரப்பணஞ்சேரி, ஒரகடம், எறையூர், பாலநல்லூர், மணலூர், திருவாலங்காடு, திருமுல்லைவாயில், களிமேடு, ஆத்திரம்பாக்கம், காரணோடை சித்தஞ்சேரி, பெரியபாளையம், வெங்கல்பூச்சி அத்திப்பேடு, கன்னிலைப்பேர் ஆகிய ஊர்களில் சிறிது ஆழத்தில் 6 லிருந்து 10 மீட்டர் ஆழத்தில் களிமண் படிவம் அமைந்துள்ளது. இப்பகுதிகளில் பொட்டல் வெளிகளும், வயல்களும் காணப்படுவதால் சுரங்கம் தோண்ட ஏதுவான இடமாகும். சுங்குவார் சத்திரத்திலுள்ள சுங்கக் களிமண் வாலாஜாவிலுள்ள பீங்கான் தொழிற்சாலைக்கு கொண்டு செல்லப்படுகிறது. மணற்பாங்கான நிலத்தில் சிறிது களிமண்ணைச் சேர்த்து (60% மணல் 40% களிமண் ) செங்கல் செய்கின்றனர். களிமண் மிகுந்துள்ள இடத்தில் (களிமண் 60% மணல் 40%) ஓடுகளும், பீங்கான் தளங்களும் செய்கின்றனர். மற்றும் கயோலின் களிமத்துடன் சிறிதளவு இக்களிமண்ணைச் சேர்த்தால் பீங்கான் களிமண்ணை மிக பிசுப்புடையதாக்கி நன்றாக வளைக்க முடியும். களிமண்ணின் துகள் உருவளவு களிமண்ணிலுள்ள [illegible] களிமங்களின் விதம் அவற்றின் [illegible]யல் தன்மை விதம் வேற்றுக் களிமங்களின் விதம் அவற்றின் [illegible], உறிஞ்சிகள், ஆகியவற்றைப் பொருத்து, தாள்கள், இரப்பர் பெ[illegible], [illegible]கடுகள், கட்ட செயற்கைச் சியோலைட்டு வெப்பக் கட்டுப்பாட்டு [illegible]ல்நடைத்திவளம், களிமண், செங்கல், ஓடு, மருந்து மாத்தி[illegible] முடியும். சென்னை உலைக்களக் களிமண் ஆகியவற்றை உற்பத்தி [illegible] முடியும். சென்னை

தொழிற்சாலைகளும் உள்ளன. மற்றும் இரும்பு வார்ப்பட அச்சுத் தொழிற்கூடமும், மணலி பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலையும், பெயிண்டு தாள்கள், மின்தடைப்பீங்கான் தொழிற்சாலைகளும் உள்ளன. மற்றும் இக்களிமண்ணை நொறுக்கிக் கல் சரளை நீக்கி அரைத்து நீரில் கலக்கி சேற்றை தொடரான படிவுத் தொட்டிகளின் வழியாக இறுத்து பாய்ச்சி சுத்தம் செய்கின்றனர். உயர்தொழில் நுட்பத்தால் காற்று மற்றும் நீர்மிதிவை முறைகளாலும் கலக்கிகளாலும், அழுத்த வடிகட்டி முறைகளாலும் சுத்தமான களிமண்ணைப் பிரித்தெடுக்கின்றனர். மேலும் களிமண்ணிலுள்ள கயோலின் மற்றும் மோன்ட்மோரிலோனைட்டுக் களிமட் களிமங்களையும் தனித்தனியே பிரித்தெடுக்க உயர் தொழில்நுட்பம் வந்துவிட்டது. நவீன மயமாக்கப்பட்ட களிமண் ஆலைகள் எளிதாகக் களிமட் களிமங்களைத் தனித்தனியே பிரித்துவிடும். ஆயினும் தமிழகத்தில் அல்லது சென்னைக்கருகில் இத்தகைய ஆலைகள் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. களிமண் படிவிலுள்ள [illegible] பற்றி



அரண்வாயில் செங்கற் தொழிற்சாலை

மாநகரைச் சுற்றி ஆயிரத்திற்கு மேற்பட்ட செங்கல் சூளைகளில் நூறாயிரம் பேருக்கு மேல் வேலை செய்கின்றனர்.

### களிமட் தொழிற்சாலைகள்

திருப்பெரும்புதூர்க் களிமண்ணின் இயல்பையறிந்து அதனைப் பயன்படுத்தும் செங்கற்சூளைகளும், ஓட்டுச்சூளைகளும், பீங்கான்

விரிவான ஆராய்ச்சிகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறு ஆராய்ந்தால் ஓரிடத்தில் கிடைக்கும் களிமண் படிவின் தொழிற் தகுதியை வரையறுத்து குறைந்த செலவில் உயர் தொழில்நுட்பக் களிமட் பொருட்களை உற்பத்தி செய்யலாம். •

என் பெயர் விஜயகுமாரி. வயது 25. நான் பெரியதச்சூர் ஊராட்சியில் என் கணவர் இராமசந்திரனுடன் வசித்து வருகிறேன். கைப்பம்பு மெக்கானிக் பயிற்சி பற்றிய விவரத்தை ஊராட்சித் தலைவர் மூலம் கேள்விப்பட்ட பொழுது மிகவும் பயமாகவும், வியப்பாகவும் இருந்தது. இதுபோன்ற கடினமான வேலையை எப்படி செய்யமுடியும்? என்ற கேள்வியே என் பயத்திற்கு காரணம். ஆனால் பயிற்சியில் கலந்து

# டேனிடா குடிநீர் மற்றும் சுகாதார திட்டம்
# விழுப்புரம் மாவட்டம்

கொண்ட பின்னர் எனக்குள் உற்சாகமும், ஆர்வமும் ஏற்பட்டது. கைப்பம்பு ரிப்பேர் செய்வதில் பயிற்சி பெற்ற பிறகு என் ஊரில் பழுதான கைப்பம்புகளை ரிப்பேர் செய்ய ஆரம்பித்தேன். என்னுடன் சேர்ந்து பயிற்சியில் கலந்து கொண்ட தனசேகரன் என்ற மெக்கானிக்கோடு இணைந்து உள்ளூரிலும், வெளியூர்களிலும் கைப்பம்பு பழுது நீக்கப் பணியில் ஈடுபட்டு வருகிறேன்.



கிராம மக்களுக்கு சுகாதாரமான குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற சேவை மனப்பான்மையோடு இத் தொழிலை ஆரம்பித்த பிறகு இதனால் ஓரளவு மதிப்பூதியம் கிடைத்து வருகிறது. ஒரு கைபம்பிற்கு ரூ.160 மதிப்பூதியமாக கிடைக்கும். நானும், திரு.தனசேகரனும் சேர்ந்து கைப்பம்பு பழுது நீக்கம் செய்யும் தருணங்களில் ரூ.80 வீதம் மதிப்பூதியத்தை பகிர்ந்து கொள்வோம். இது தவிர, கைப்பம்பு அமைந்துள்ள இடத்தைச் சுற்றியுள்ள பயனாளிகள் தங்களால் இயன்ற தொகையை தருகின்றனர். இத்தொகையை வைத்து எனது வீட்டை புதுப்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு உழைத்து வருகிறேன். இப்பொழுதெல்லாம் என்னை பார்ப்பவர்கள், "பொண்ணு புதுசு புதுசா என்னென்னவோ பண்ணுது". "தலைவர் வேலை வாங்கிக் கொடுத்திருக்கிறார்'' என பேசிக் கொள்கின்றனர்.

இப்பயிற்சியில் கலந்து கொண்ட பின் நானும் சமூகப் பணி செய்கிறேன். கடினமான தொழில் மூலம் வருமானம் சம்பாதிக்கின்றேன் என்று நினைக்கும் போதே பெருமையாக உள்ளது. கைப்பம்பு பராமரிப்பு தொழிலுக்கு முன்னர் விவசாயத்தில் கூலி வேலைக்கு செல்வேன். அப்போது ரூ.30 மட்டுமே கூலியாக கிடைக்கும். தற்போது கைப்பம்பு பராமரிப்பு பணியில் கிடைக்கும் கணிசமானத் தொகை என்னைப் பொருத்தவரை பெரிய தொகை. மேலும் கைப்பம்பு பராமரிப்பு தவிர, மின்விசை பம்பு பராமரிப்பும் டேனிடா மூலம் பயிற்சி பெற்றுள்ளேன். எங்கள் ஊரில் உள்ள மின்விசை பம்பினை முறையாக வைத்து அனைவருக்கும் சுகாதாரமான குடிநீர் கிடைக்க பணி செய்து வருகிறேன். அதேபோல் டேனிடா திட்டம் மூலம் நடைபெற்ற நான்கு நாள் மின்விசை பம்பு பராமரிப்பு பயிற்சியில் ஆசிரியராக கலந்து கொண்டேன். என்னைப் போல் பெண்கள் பலர் இத்துறையில் வளர்ந்து வருவது எனக்கு மிகவும் பெருமையளிக்கின்றது.

இத்தொழிலை சிறப்புற செய்து நல்ல பெயர் வாங்க வேண்டும் என்ற ஆசையுடன், நம்பிக்கையை ஆணி வேராய் வைத்து பணி செய்து வருகிறேன்.



**டேனிடா குடிநீர் மற்றும் சுகாதார திட்டம்,**
**மாவட்டம் ஒருங்கிணைப்பகம்**

எனது பெயர் உமா ராஜகோபால். 32 வயது நிரம்பிய நான் திருமணமானவள். எனக்கு பள்ளி செல்லும் தினேஷ் குமார், திவாகர் என இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். நான் கெடார் ஊராட்சியிலுள்ள செல்லக்குப்பம் என்ற குக்கிராமத்தில் வசித்து வருகிறேன்.

நான் டேனிடா திட்டம் நடத்திய ஐந்து நாள் "கை பம்பு மெக்கானிக்" பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றேன். பயிற்சியின் போது வேலை கடினமாய் இருந்தாலும் பின்னர் பழக்கத்தில் வேலை சுலபமாகிவிட்டது. பயிற்சி முடிந்து வீடு வந்தவுடன் ஆர்வம் மற்றும் விழிப்புணர்வு மிகுதியாலும், கைப்பம்பு அமைந்துள்ள இடங்களையும், கைப்பம்பினையும் சுத்தம் செய்து முன் கவன பராமரிப்பு செய்தேன். முதலில் என்னைப் பார்த்தவர்கள், "இவ என்ன தான் கைப்பம்பு சீர்செய்யப் போறாளோ தெரியல" என்றெல்லாம் எனது ஆர்வத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் பேசினர். ஆனாலும், நான் தொடர்ந்து எனது பணியை கவனமாக செய்து வந்தேன்.

எனக்கு மேலும் உற்சாகமளிக்கும் வகையில் டேனிடா திட்டம் "கைப் பம்பு மெக்கானிக்குகளுக்கு" பயிற்சி கொடுக்கும் வாய்ப்பினை அளித்தது. இத்தகைய பயிற்சிகளில் மற்ற பெண்களுக்கு கற்றுத் தந்ததைவிட நான் அதிகம் கற்றுக் கொண்டது தான் ஏராளம். கைபம்பு சம்பந்தப்பட்ட சிறு சிறு பிரச்சினைகளை இன்னும் சிறப்பாக தெரிந்துகொள்ள முடிந்தது. திருமணமான நான் முதல் வீட்டு வேலைகளை மட்டும் செய்து கொண்டு, வெளி உலகம் தெரியாதிருந்த எனக்கு இப்பயிற்சி மூலம் ஒரு புதிய தொழில் திறனை கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. இப்பொழுது சமுதாயத்திற்கு சுத்தமான குடிநீர் கிடைக்க வழி வகை செய்யும் மெக்கானிக் என்ற பெயருடன் வலம் வருவதை நினைத்து பெருமையாக உள்ளது.



பெண் மெக்கானிக்காகி என்ன சாதித்து விடப் போகிறாள் என்று நினைப்பவர்கள் தான் ஏராளம். இது என்னுடைய அனுபவத்தில் நான் கண்ட உண்மை, ஆனால் திட மனதோடு நான் எனது பணியினை கவனமாகச் செய்ய செய்ய, மக்களுக்குள்ளும் விழிப்புணர்வு வந்துள்ளது என்பதை நான்அனுபவ பூர்வமாக காண்கிறேன். உதாரணமாக, சமீபத்தில், எங்கள் ஊரில் உள்ள கைப்பம்புகளுக்கு முன் கவன பராம்ரிப்பு செய்து கொண்டிருந்தேன். ஒரு கைப்பம்புக்கு அருகாமையிலுள்ளவர்கள் வந்து 'எல்லாரும் சொன்னாங்கம்மா, ரேடியோ கடை வெச்சிருக்கிற தம்பி சம்சாரம் தான் கைப்பம்பு சீர் செய்யுதுன்னு. நேர்ல பாக்கிறப்போதாம்மா தெரியுது உன்னோட திறமை என்று கூறியதோடு மட்டுமின்றி அவர்கள் வீட்டருகிலுள்ள இரண்டு கைப்பம்புகளையும் ரிப்பேர் செய்து தர வேண்டுமென கேட்டுக் கொண்டனர். நான் வீட்டில் இருந்திருந்தால் இந்த பெயர் வந்திருக்காது. அதோடு மட்டுமில்லாது, பெண்களாலும் கடினமான வேலைகளை செய்ய முடியும் என்பதை சமுதாயத்திற்கு படம் பிடித்துக் காட்டியிருக்க முடியாது.

இப்பணியினை நான் சிறப்புற செய்து வருவதற்கு எனது கணவருடைய ஒத்துழைப்பு அதிகம். கைப்பம்பு பராமரிப்பிற்காக செல்லும் வேலைகளில் எவ்வித தடங்கலுமின்றி அனுப்பி வைப்பார். குறிப்பிட்ட நேரத்திற்குள் செல்ல வேண்டும் என்பதற்காகவே என்னை சைக்கிளில் அழைத்துக் கொண்டு வந்து பஸ்ஸில் செல்ல உதவி செய்வார். கைப்பம்பு பராமரிப்பு தொடர்பான எனது அனுபவங்களை பகிர்ந்து கொள்கிற வேளையில், முகம் சுளிக்காமல் உற்சாகத்துடன் கவனிப்பார். மேலும் என் கணவரின் ஒத்துழைப்பும் எனது சுயநம்பிக்கையும் உள்ளபோது கைப்பம்பு பராமரிப்பு பணியை நல்ல முறையில் செயல்படுத்த என்னால் முடியும். ●

# கதவைத் தட்டும் வாய்ப்பு



□ Dr. P.T. சூர்யகுமார்

## கணிப்பொறிக் கல்வி

கம்ப்யூட்டர் அறிவு என்பது எல்லாத்துறைகளிலும் தேவைப்படும் ஒன்று. இப்போது கம்ப்யூட்டர் யுகம். எனவே தமிழக அரசு, எல்லாத்துறைகளிலும் முன்னேற்றம் காட்டுவதுபோல் இத்துறையிலும் மாணவர்களை சிறப்படையச் செய்யக் கிராமங்களில் உள்ள பள்ளிகளில்கூட கம்ப்யூட்டர் அறிவை வளர்க்க பல வழிகளைத் திட்டிச் செயல்படுத்தி வருகின்றது.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் அனைத்து மாணவர்களையும் கணிப்பொறி வல்லுநர்களாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதையும், விரைவில் TIDEL PARK (தமிழகத்தின் பெரிய கம்ப்யூட்டர் மையம்) மூலம் விரிவுபடுத்தலும் தமிழக மக்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் செய்தி.

கம்ப்யூட்டர் துறையை இரண்டாகப் பிரிக்கலாம். (i) Hardware (ii) Software. Hardware என்பது கம்ப்யூட்டரை, வடிவமைத்தல், பராமரித்தல், அதற்குரிய உபகரணங்களைத் தயாரித்தல் ஆகும். Software என்பது கம்ப்யூட்டரைப் பல வழிகளில் நாம் பயன்படுத்தும் முறையைச் சார்ந்தது. இதில் வேலைவாய்ப்பு அதிகம். கடைக்கணக்கு எழுதுவது முதல் வான்வெளி ஆராய்ச்சி, வெளிமண்டலம் செல்லுதல் முதற்கொண்டு செய்து முடித்திடலாம்.

**கம்ப்யூட்டர் படிக்க எத்தகைய ஆற்றல் பெற்றிருக்க வேண்டும் (Traits) :**

6 முதல் 60 வயதிற்கும் மேலும் விரும்புவோர் படிக்கலாம்.

1. கற்பனைச் சக்தி (Imagination), வடிவமைத்தல் (formation), சுறுசுறுப்பு வேண்டும் (alertness),
2. ஆராய்ந்து பார்த்தல் (Analytical Mind)
3. எண்ணாற்றல் (Numeracy), அறிவுத்திறன் (Resourcefulness)
4. பொறியியல் வல்லமை (Technology Skill)
5. அயராது உழைத்தல் (Hardwork)
6. தனித்தன்மையுடன் கூடிய பகிர்ந்து வேலைசெய்யும் யுக்தி (to work as one of a team as well independently).
7. சரியான முறையில் மற்றவர்களோடு கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் திறமை (ability to communicate with people).





**கணிப்பொறிக்கல்வியின் சிறப்பு :**

- ★ கணிப்பொறிக் கல்வி மூலம் வர்த்தகம் என்ற நிலை உருவாகியுள்ளதால், உலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் கணிப்பொறிக்கல்வி அவசியம்.
- ★ 'உலகின் கணிப்பொறிச் சந்தை' 900 மில்லியன் டாலராக (ரூ.40,000 கோடி உள்ளது). நம் நாட்டின் மக்கள் தொகை தற்போது 100 கோடியை தாண்டிவிட்டது. இதில் 20 கோடி மக்கள் கணிப்பொறித் துறையில் ஈடுபட்டால்கூட, ஆண்டுக்கு குறைந்தபட்சம் ரூ.600 கோடி வருமானம் கிடைக்கும்.
- ★ மருத்துவர்கள், கட்டடக் கலை நிபுணர்கள், பொறியியல் வல்லுநர்கள், திட்ட நிபுணர்கள், ஓவியர்கள் எனப் பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களுக்கும் கணிப்பொறியின் உபயோகம் மகத்தானது.
- ★ தொழில்நுட்பம் நாளுக்குநாள் மாறுவதுபோல், கணிப்பொறியின் வளர்ச்சியும், அதன் தேவையும் மாறுகின்றது. எனவே, நம்முடைய அறிவுத்திறனையும் அதற்கேற்ப வளர்த்துக் கொள்ளவேண்டும்.
- ★ நம்மிடம் மற்றவர்கள் எதிர்பார்ப்பதைவிட மிக அதிக அளவில் செய்துகாட்டும் போது, வெற்றிக்கனி நம் கையில் விழுகின்றது.
- ★ CAD, CAM, Multimedia போன்ற பல்வேறு பிரிவுகள் சிறந்தது.
- ★ பெண்கள் எப்போதும் சுட்டி. அதிலும் அவர்களிடம் அதிகமான Logistic thinking உண்டு. இதனால் கம்ப்யூட்டர் பெண்களின் பங்கு மிக அதிகம்.







- ★ தகவல் தொழில்நுட்பம் (Information Technology) கணிப்பொறி அறிவியல் தொழில்நுட்பம் (Computer Science and Technology), இணைய வசதிகள் (Internet) அறிவு அதிகமாக வரவேற்கப்படுகின்றது.
- ★ 6 வயது குழந்தை 60 வயது தாத்தா பாட்டி வரை, கணிப்பொறியைக் கற்றுக்கொள்கிறார்கள்.

**கம்ப்யூட்டரின் பல வேலைவாய்ப்புப் பிரிவுகள் :**

- ★ தரவுகளைப் பதிவுசெய்தல் (Data entry), பிரசுரங்கள் (Computer Publishing), புரோகிராமிங் (Operating System) இவைகளில் பகுதிநேரத் தொழில்நுட்ப உதவியாளர்களாக இருந்து வருமானம் பெருக்கலாம்.

**e-mail :**

குறைந்த நிமிடத்தில் எந்த [illegible]யும் கொடுத்து, அதற்குரிய பதிலையும் [illegible] இப்போதெல்லாம் [illegible] e-mail [illegible]கள்

**e-commerce :**

வர்த்தக வளர்ச்சிக்குப் பெரும் பங்கு வகிக்கின்றது.

தேவையான அறிவு : பிசினஸ் ஸ்ட்ரேட்டஜி, சேல்ஸ் அண்ட் மார்க்கெடிங், பிரைசிங், ஆர்டரிங் ஆன் லைன், விண்டோஸ் இன்டர்நெட், வெப்டிசைன், போட்டோஷாப், இமேஜ் டைப்ஸ், 3-டி அனிமேஷன், டெக்ஸ்ட் அனிமேஷன், மைக்வேவ், காஸ்டிங், டெமோகிராபிக்ஸ், அட்வர்டைசிங், சைபர்லாஸ், இன்டர்நெட், ஜாவா, எச்.டி.எம்.எல்., கோர்பா, சிஜிஐ, ஓஓபிஎஸ் (OOPS), ஏஎஸ்பி (புரோகிராம்ஸ்).

**வெப் அண்ட் நெட்ஒர்க் :**

எஸ்.கியூ.எல் சர்வர், இன்ஸ்டாலிங் அண்ட் கான்பிகரிங் சர்வர், மேனேஜிங் கொரிஸ், இன்டர்நெட் அண்ட் இன்டராநெட், வெப்சைட் செக்யூரிட்டி போன்ற நெட்ஒர்க் பிரசித்திமானவை ஆகும்.

**மெடிக்கல் டிரான்ஸ்கிரிப்ஷன் :**

மருத்துவர் கூறும் ஒலி வடிவில் இருக்கும் (ஆங்கிலத்தில்) மருத்துவக் குறிப்புகளை கேட்டு அதை எழுத்து வடிவில் மாற்றி (ஆங்கிலத்தில்) அமைத்தல் மெடிக்கல் டிரான்ஸ்கிரிப்ஷன் ஆகும்.

**தகுதி :**

ஆங்கில அறிவு தேவை.

- டாக்டர்கள் கூறும் மருத்துவச் சம்பந்தமான விஷயங்களைப் புரிந்துகொள்ளும் மருத்துவத்திறன், அறிவு, மருத்துவ டெர்மினாலஜி தெரிந்துவைத்து இருத்தல்.
- கம்ப்யூட்டரை விரைவில் இயக்கும் திறன்.

**தேவை :**

கம்ப்யூட்டர், இன்டர்நெட், அதிகவேகம்கொண்ட மோடம், டெலிபோன் டேட்டா கம்யூனிகேஷன்.

மாதம் ரூ.8 ஆயிரம் வரை சம்பாதிக்கலாம்.



**இன்டர்நெட் :**

உலகின் ஒரு மூலையில் உள்ளவர்கள் நொடியில் தொடர்புகொண்டு உரிய தகவல்களைப் பெறும் சாதனம் இன்டர்நெட் ஆகும். பலத்தரப்பட்ட வெப் சைட்டுகள் மூலம் அந்தந்தத் துறையின் முழு விவரங்களைப் பெறமுடியும்.

தற்போது இந்தியாவில் 50,000 (ஐம்பது ஆயிரம்) வெப்சைட்டுகளுக்கு மேல் உள்ளன.

- இந்த வெப்சைட்டுகளைச் சரிவர இயக்க, வெப் மாஸ்டர்கள், வெப் அட்மினிஸ்ட்டிரேட்டர்களின் தேவையும் அதிகரித்துவிட்டது.
- ஈ–காமர்ஸ் என்ற மின்வணிகத்தின் வளர்ச்சி, வெப்பேஜ் டிசைனர்களின் தேவையை அதிகப்படுத்தியுள்ளது.

M.W : Master of Website என்ற கோர்ஸ் விரைவில் மிகவும் பிரபலமாகிவிடும். திரைப்படங்களை இயக்கும் டைரக்டர்கள் போல் வெப்சைட் டைரக்டர்கள் தோன்றி விடுவார்கள் எதிர்காலத்தில்.

**மல்டி மீடியா :**

கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி திரைப்படங்களில் ஸ்பெஷல் எஃபெக்ட்டுகளை உருவாக்கும் வகையில், அனிமேஷன், வீடியோ, கிராபிக், ஒளி, ஒலி வடிவம் ஆகியவற்றை ஒன்றிணைத்துச் செயல்படுத்துவது மல்டிமீடியா.

**கம்ப்யூட்டரில் பயிற்சிகள் :**

1. Word Processing and Office Automation
2. PC Applications
3. Data Entry Operation (தகவல்களை கம்ப்யூட்டரில் பதிவு செய்தல்)
4. Diploma in Computer Technology
5. B.Sc. (Computer Science)
6. BCA (Computer Applications)
7. B.E. / B.Tech Computer Technology / Computer Science / B.Tech (Information Technology) - 4 years
8. M.Sc. (Software Engineering) - 5 years (பாரதியார் பல்கலைக்கழகம், P.S.G. தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்)
9. MCA (Computer Applications) - 3 years
10. M.Sc. (Computer Science) / M.Sc.(IT) / M.Sc.(Software Enggn.) - 2 years

ஜாவா புரோகிராமிங், வெப்பேஜ் டெவலப்மென்ட், விஷுவல் பேசிக் (வெளிநாடுகளில் சென்று வேலை செய்ய விரும்புவோர் மைக்ரோ சாப்ட், சிஸ்கோ, நோவல் போன்ற நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் தேர்வு தேர்ச்சி பெற்று இருக்கவேண்டும். இதிலும் Microsoft Certified System Engineer, Product Specialist, Solution Developer, Certified Novel Engineer, Cisco Certified Network Associate என்ற பயிற்சிகள் மிகச் சிறந்தவை.

பெரும்பாலான தனியார் நிறுவனங்கள் தற்போது அளிக்கும் சான்றிதழ்களும், பட்டயங்களும் பல்கலைக் கழகங்களால் அங்கீகரிக்கப்பட்டவை இல்லை. எனவே அதனை சீரமைக்கும் வகையில் மத்திய அரசு மின்னணுத்துறை O,A,B,C Level பயிற்சிகளை நடத்துகின்றது.

**கம்ப்யூட்டர் கல்வியில் சிறந்த நிறுவனங்கள் யாவை?**

1. இந்தியத் தொழில்நுட்பக் கல்லூரிகள் (Indian Institute of Technology) (6 - IITs) (சென்னை உள்பட)
2. தகவல் தொடர்பு தொழில்நுட்பத்துறை (4 - IIITs)
3. மண்டலப் பொறியியல் கல்லூரி (17 - RECs) (சென்னை உட்பட)
4. i இந்திய விஞ்ஞானக் கழகம் (Indian Institute of Science, Bangalore)

   ii. பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம்/பிர்லா தொழில்நுட்ப நிறுவனம்/டெல்லி இன்ஜினியரிங் கல்லூரி/ரூர்கி பல்கலைக்கழகம்/ஹைதராபாத்தில் உள்ள கணித மேம்பாட்டு மையம்/அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம்
5. தமிழ்நாட்டில், அண்ணா பல்கலைக்கழகம். மேலும் பலக்கல்லூரிகளிலும் கம்ப்யூட்டர் கல்வி அளிக்கப்படுகிறது.
6. தமிழகத்தில் உள்ள ஏறத்தாழ 367 கலை மற்றும் விஞ்ஞானம் நடத்தும் கல்லூரிகளில் BCA, B.Sc.(Computer Science), Diploma in Computer என +2 மாணவர்கள் கணினிக்கல்வி பெறத் தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.
7. மேலும் DOEACC, NCST, CSI போன்ற நிறுவனங்களில் அளிக்கப்படும் கல்விகள் சிறப்பு வாய்ந்தவைகளாகக் கருதப்படுகின்றது.

இதுவல்லாது கம்ப்யூட்டர் அறிவினையும், Softwareல் சிறப்பானப் பயிற்சிகளை NIIT, APTECH, SSI, COMPUTER POINT போன்ற நிறுவனங்களில் படித்தவர்களுக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்புகள் அதிகம்.

**NCST (National Centre for Software Technology)**
(National Centre for Software Technology,
6th Floor, Main Tower, Viswesvaraya Centre,
Bangalore-1)

மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகத்தின் மூலம் அகில இந்திய அளவில் நடத்தப்படும் (ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம்) தேர்வினை NCST என்ற மையம், நான்கு பிரிவுகளாகத் தேர்வுகளை நடத்துகின்றது.

இத்தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்குப் பல உயர்தரக் கல்வி நிலையங்களில் மேற்படிப்புக்கு முன்னுரிமை வழங்குவதோடு, பல நிறுவனங்களில் வேலைக்கும் தகுதி பெறுகின்றனர்.

| 4 கட்டத்தேர்வுகள் | கல்வித்தகுதி |
|---|---|
| 'E' லெவல் | இளநிலைப்பட்டம் (அ) டிப்ளமோ (பொறியியல்துறை) |
| 'I' லெவல் | 'E' லெவல் 50% மதிப்பெண்ணுடன் பாஸ் (அ) இளநிலைப் பட்டம் (கம்ப்யூட்டர் சயின்ஸ்) (அ) டிப்ளமோ (கம்ப்யூட்டர்) |
| 'D' லெவல் | 'I' லெவல் 50% மதிப்பெண்ணுடன் பாஸ் |
| 'G' லெவல் | 'D' லெவல் 50% மதிப்பெண்ணுடன் பாஸ் B.E. (கம்ப்யூட்டர் சயின்ஸ்/EEE/EC)<br>B.Tech (I.T)<br>MCA/MSc./M.Sc.(5 years)<br>PGD (IT) |

இந்த நான்கு கட்டத்தேர்வுகளோடு, கீழ்க்காணும் படிப்புகளுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றது.

1. PG Diploma in Software Technology/ Internet Technology

2. Advanced PGD in Software Technology

**DOEACC** (Department of Electronics, Accredition of Computer Courses)
(The DOEACC Society, Electronics Niketan, 6, CGO Complex, Lodhi Road, New Delhi-110 037.)

அகில இந்திய அளவில் வருடத்திற்கு இருமுறை ஜனவரி, ஜூலை மாதங்களில் கம்ப்யூட்டர் பயிற்சி – தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பல்வேறு தனியார் நிறுவனங்களில் படிக்கும் மாணவர்கள், இத்தேர்வினை எழுதினால் மத்திய அரசே சர்டிபிகேட் கொடுக்கின்றது. அங்கீகாரத்திற்குக் கவலை இல்லை. வேலை வாய்ப்பிற்கும் கவலை இல்லை.

நான்கு கட்டத் தேர்வுகள் நடைபெறுகின்றது. அவையாவை என்பதைப் பார்ப்போம் :

| **4 கட்டத் தேர்வுகள்** | **கல்வித் தகுதி** |
|---|---|
| 'O' level | +2 (or) S.S.L.C.(or) ITI |
| 'A' level | 'O' level (or) Dip.in Computer (or) IT + 1 year Exp. |
| 'B' level | 'A' level pass (or) PGDCA (or) Dip.in Computer (IT) + 2 year Exp. |
| 'C' level | 'B' level pass (or) B.E. (or) M.Sc.+ 1 year Exp. (or) MBA/GATE (Computer) |

**C.S.I. (Computer Society of India)**
(Directorate of CSI, CPT Complex, Taramani, Chennai)

இவை தன்னுடைய 62 கிளைகளின் மூலம் ஏறத்தாழ 20 கோர்ஸ்களை நடத்தி, சான்றிதழ்களை வழங்குகின்றது.

- ஒவ்வொரு வருடமும் (இரண்டு முறை) ஜனவரி, ஜூலை மாதங்களில் கோர்ஸ்களுக்கான தேர்வுகள் நடைபெறும்.
- தேர்வுக்கட்டணம் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.350 தான்.
- +2 படித்த மாணவர்கள் இங்கு சேரலாம்.
- ஏறத்தாழ 16 பயிற்சி இங்கு கற்றுத் தரப்படுகின்றது.

**PG DIPLOMA (INFOR.TECH) (1 YEAR)**
**– டானிடெக் நிறுவனம் நடத்துகிறது.**

**தகுதி :** B.Sc. (Computer) / BE / B.Tech.

கம்ப்யூட்டரில் எம்.எஸ். ஆபிஸில் புகழ்பெற்ற பில்கேட்ஸ், பென்டாசாஃப்ட் டெக்னாலஜியின் தலைவர் டாக்டர் வி. சந்திரசேகரன், இன்போசிஸ் நிறுவனத்தின் தலைவர் திரு.நாராயணமூர்த்தி அனைவரும் சாதனைப் படைத்த கம்ப்யூட்டர் இளைஞர்கள்தான்.

இது போன்ற இளைஞர்கள் இன்னும் உருவாகப் போகின்றார்கள். தமிழக இளைஞர்கள் எதிலும் முதன்மை வகிப்பதில் ஆர்வம் உடையவர்கள். இன்று ஏறத்தாழ பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் வெளிநாடுகளில் சென்று (அமெரிக்கா, ஜப்பான், நியுசிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில்) பொருள் ஈட்டுகின்றனர்.

இதற்காகவே தமிழக முதல்வர் தமிழகத்தில் சுறுசுறுப்பாக வேலைசெய்யும் இளைய IAS அதிகாரிகளைச் சேர்த்துச் செயலகத்தில் திட்டங்களைத் தீட்டுவதிலும், செயல்படுத்துவதிலும் போர் கால அடிப்படையில் செயல்படுவதுபோல் விரைந்து செயலாற்றுகின்றனர்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் எனச் சூளுரைத்து வழிநடத்தும் தமிழக அரசு, எங்கும் கம்ப்யூட்டர், எதிலும் கம்ப்யூட்டர் திறன் எனத் திட்டமிட்டு பட்டிதொட்டிக் கிராமங்கள் முதற்கொண்டு கம்ப்யூட்டர் அறிவு பெறத் திட்டமிட்டு, கல்விச் செயலகம் முனைப்போடு செயல்படுவது குறித்து எல்லோரும் வரவேற்கின்றனர். விரைவில் "தமிழக இளைஞர்கள்", "உலகின் இளைஞர்களாக"த் திகழப் போகின்றனர். 7,77,777 மாணவர்கட்கு விரைவில் வேலைவாய்ப்பு வசதி ஏற்பட உள்ளது.

**தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பற்றி தமிழக முதல்வர் சட்டசபையில் குறிப்பிட்டதாக வெளிவந்த செய்தி :**

இன்டர்நெட்டின் மூலம் நறுமணத்தை நுகரக்கூடிய வளர்ச்சி பருமானம் (Development) உலக மக்களை ஒரு சிறிய 8" x 8" பெட்டியில் அடக்கிவிட்டது என்பதே உண்மை. தமிழகம் தகவல் தொழில் வளர்ச்சியில் பெரும் ஆக்கப்பூர்வமான ஆர்வம் காட்டுகின்றது என்பதை மாணவர்களும் பெற்றோர்களும் உணர்ந்திடும் வண்ணம் கீழ்க்கண்ட தொகுப்பினை படித்து பயன்பெறலாம்.



- இந்தியாவில், தமிழ்நாட்டில்தான் ஏறத்தாழ 146 பொறியியல் கல்லூரிகளின் மூலம் 13 ஆயிரம் பட்டதாரிகள் தகவல் தொழில்நுட்பம் கல்வி பயின்று வெளியே வருகின்றனர். வரும் இரண்டு ஆண்டுகளில் இது மேலும் அதிகரித்து ஏறத்தாழ 20 ஆயிரம் மாணவர்கள் வெளியே வரப்போகின்றனர். அனைவருக்கும் அருமையான வேலைவாய்ப்பு இந்தியாவிலும், வெளிநாட்டிலும் உள்ளது.
- முக்கியமாக தமிழக மாணவர்களுக்கு அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளில் வரவேற்பு அதிகம் உள்ளது. இதை உறுதிபடுத்தும் வகையில் 98–99 சென்னையிலுள்ள அமெரிக்க தூதரகம், ஏறத்தாழ 21,371 பேர்களுக்கு விசா வழங்கியுள்ளது.
- அக்டோபர், 1998இல் தமிழக அரசு தகவல் தொழில்நுட்பப் பணி முனைப்புக் குழுவினை (IT Task Force) தமிழக முதல்வர் தலைமையில் அமைக்கப்பட்டு I.T. Policy ஒன்றையும் உருவாக்கி, பல வழிகளில் சிறந்து விளங்க முன்னேற்பாடு செய்துள்ளது.
- ஏறத்தாழ 340 கோடி ரூபாயில் தரமணியில், உலகப் புகழ்பெற்ற Indian Institute of Technology –க்கு அருகில் TIDEL PARK மென்பொருள் பூங்காவை உருவாக்கியுள்ளது.




- தமிழகத்தின் 'டிட்கோ' (TIDCO) நிறுவனத்தின் மூலம் Venture Capital Fund என்பதை ஆரம்பித்து, ஏறத்தாழ எட்டு கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யும் வகையில் 5 மென்பொருள் தொழில் முனைவோர்க்கு கடன் வழங்கியுள்ளது.

சென்னைக்கு அருகில் சிறுசேரி என்ற இடத்தில் 1000 ஏக்கர் பரப்பளவில் 'Hardware and Software Development Park ' (International Information Technology Park - IITP) ஒன்றை அமைக்க தமிழகத்தின் SIPCOT என்ற நிறுவனம் ஏற்பாடு செய்து வருகின்றது.

- தமிழகத்தில் 1200 உயர்நிலைப்பள்ளிகளில் கம்ப்யூட்டரை விருப்பப்பாடமாக மாணவர்கள் படிக்கும் வண்ணம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பள்ளிப்படிப்பு இறுதியிலேயே ஏறத்தாழ 48 ஆயிரம் மாணவர்கள் கம்ப்யூட்டர் பயிற்சித் திறன் பெற்று வரப்போகின்றார்கள்.
- இன்று தமிழ்நாட்டில் ஏறத்தாழ 570 மென்பொருள் நிறுவனங்கள் உள்ளன. நான்கு ஆண்டுகளுக்கு முன் இது சற்றே 36 மென்பொருள் நிறுவனமே இருந்தன என்பதை நினைக்கையில் வளர்ச்சியின் வேகம் தெள்ள தெளிவாக தெரிகின்றது.
- மேலும் போலாரிஸ் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா நாவலூரிலும்; வேர்ல்ட் டெல் (World Tel), 13,000 சமுதாய இணைய மையங்களை தமிழகத்திலும், ஜப்பானின் ஃப்யுஜிகூரா மற்றும் TIDCO, TCIL இணைந்து OPTIC FIBRE TELECOM CABLES என்ற நிறுவனத்தையும்; SIPCOT–ன் பெருந்துறை வளர்ச்சி மையம், ஏறத்தாழ 2,800 ஏக்கர் பரப்பில், 110 கோடி ரூபாய் செலவில் தொடங்கவுள்ளது என்பது, தமிழகம் தகவல் தொழில்நுட்பக் கல்வியில் ஜெட் வேகத்தில் வளர்ந்து வருகின்றது என்பது பெருமைப்படக் கூடிய விஷயம்தான். இது ஓர் தொடக்கம்தான். இதனால் தமிழகம் உலக நாடுகளிடையே சிறப்பிடம் பெற வெகுதூரம் இல்லை என்பதை உணர்ந்து மாணவர்களும், பெற்றோர்களும் அயராது பாடுபடுவது சாலச் சிறந்தது.

## கால்நடை மருத்துவம்

+2 தேர்வில் வெற்றி பெற்றவர்களும், அண்ணா பல்கலைக்கழகம் நடத்திய நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள், தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகத்திலும், அதன் சார்புடைய கல்லூரிகளில் B.V.Sc./B.F.Sc.யில் சேரலாம்.

**தகுதி :**

| +2வில் | OC | BC | MBC/DNC | SC/ST |
|---|---|---|---|---|
| i. உயிரியல் | 60% | 60% | 55% | பாஸ் |
| ii. இயற்பியல் & வேதியியல் | 60% | 60% | 55% | பாஸ் |
| i&ii சேர்ரயமாக | 70% | 65% | 60% | பாஸ் |

| என்னென்ன கோர்ஸ்கள் உள்ளன : | தகுதிகள் |
|---|---|
| B.V.Sc. | +2 |
| B.Fisheries Sc. | +2 |
| B.Forest Sc. | +2 |
| M.V.Sc. | B.V.Sc. |
| M.Fisheries Sc. | B.F.Sc. |
| Ph.D. (Veterinary) | M.V.Sc. |
| Ph.D.(Fisheries) | M.F.Sc. |
| PGDBM (Animal & Fisheries Science)) | B.V.Sc. B.F.Sc. |
| | B.Sc.(Agri) |
| | B.Sc.(Hort) |
| | B.Sc.(Forestry) |
| | B.E. |
| | B.L. |
| | M.B.B.S. |
| | B.Sc./B.A. |

**எங்கே படிக்கலாம் ?**

**FOREST COLLEGE AND RESEARCH INSTITUTE, METTUPALAYAM - 641 301, COIMBATORE DIST.**

- Forest Science (B.Ft.Sc.) - 4 years

**FISHERIES COLLEGE AND RESEARCH INSTITUTE, TUTICORIN - 628 008.**

**CENTRAL INSTITUTE OF FISHERIES NAUTICAL AND ENGINEERING TRAINING, S.N.CHETTY ST, ROYAPURAM, CHENNAI - 600 013.**

- Fisheries Science (B.F.Sc.) - 4 years

**CHENNAI VETERINARY COLLEGE, VEPERY, CHENNAI - 600 007.**

**VETERINARY COLLEGE AND RESEARCH INSTITUTE, NAMAKKAL, SALEM - 637 002**

- B.V.Sc., (5 years)






## பி.எஸ்.சி. நர்ஸிங்




3333 பேர்க்கு ஓர் நர்ஸ் என்ற விகிதம் இந்தியாவில் உள்ளது. சில மேலைநாடுகளில் 1000 பேர்க்கு ஒரு நர்ஸ் என்ற விகிதம் உள்ளது. படித்து முடித்தவுடன் சேவைக்குச் சேவை, வேலைக்கு வேலை குறைந்தது ரூ.2,000 மாத வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. வெளிநாடுகளில் B.Sc.(Nursing) படித்து முடித்த நர்சுகளுக்கு நல்ல வரவேற்புள்ளது. சென்னை மருத்துவக்கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், வேலூர் கிறிஸ்துவ மருத்துவக்கல்லூரி, திருச்சி ஹோலி-கிராஸ் கல்லூரி, திண்டுக்கல் அடுத்த அம்பிலிகையில் கிறிஸ்டியன் பெல்லோஷிப் கம்யுனிட்டி ஹெல்த் சென்டர் போன்றவைகளை தமிழ்நாட்டில் குறிப்பிடலாம். 'நர்ஸிங் கோர்ஸ்' எங்கெங்கு நடத்தப்படுகின்றது என்பதை அட்டவணையில் பார்த்துப் பயன்பெறவும்.

B.Sc. நர்ஸிங் படித்தவர்கள், மேற்கொண்டு M.Sc நர்ஸிங் சேரலாம். தொடர்ந்து படிக்கவேண்டும். தமிழ்நாட்டில் Ph.D.(நர்ஸிங்) முடித்தவர்கள் மிகக்குறைவு. எனவே விருப்பமுள்ள மாணவர்கள் ஆராய்ச்சிப் படிப்பு வரை கண்டிப்பாக பயில வேண்டும்.




B.Sc., பட்டப்படிப்பு இடம் கிடைக்காதவர்கள், முதலில் டிப்ளமோ படித்து, மீண்டும் பட்டப்படிப்புக்குத் தகுதி பெறலாம்.

மேலும் வெளிமாநிலங்களில் குறிப்பிடத்தக்க கல்லூரிகள் உள்ளன.

1. அகில இந்திய மருத்துவக் கல்லூரியின் நர்ஸிங் கல்லூரி (AIIMS, New Delhi) நியுடெல்லி.
2. நர்ஸிங் கல்லூரி, ஹைதராபாத்
3. நர்ஸிங் கல்லூரி, கோவா
4. லீலாபாய் தாக்கர்சே நர்ஸிங் கல்லூரி, மும்பாய்

இந்தியத் திருநாட்டில் சரியான அணுகுமுறையில் சட்டம் தெரியாதவர்கள் 80%க்கும் மேல் இருக்கின்றார்கள். மக்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக, தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணிக்க விரும்பும் இளைஞர்கள் சட்டம் படிக்கலாம். 'சட்டம் என் கையில்' என்று சொல்ல விரும்பும் இளைஞர்களும் சட்டம் படித்து சட்ட மேதையாகலாம். பொதுவாழ்வில் நல்லதொரு மனிதனை உருவாக்க சட்டம் பயன்படுகிறது. தவறு, குற்றம் இவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

'தெரியாமல் செய்வது தவறு'
தெரிந்தே செய்வது குற்றம்'

ஆம்! குற்றம் புரிந்தவர்களைத் திருத்தி, அவர்களை நல்வழிப்படுத்தும் பணியினை நீதிபதிகளும், வக்கீல்களும் செய்கிறார்கள்.

பள்ளி உயர்கல்வியில் (+2) தேறி குறைந்தது 45% மதிப்பெண் பெற்ற மாணவர்கள் சட்டம் படிக்கத் தகுதி பெற்றவர்கள். தமிழ்நாட்டில், சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய 5 இடங்களில் உள்ள அரசுக் கல்லூரிகளில் உள்ள ஐந்தாண்டு சட்டப் படிப்பில் சேர்ந்து கல்வி பயில்வதற்குப் பொதுவான நுழைவுத்தேர்வு நடத்தப்படுகிறது. நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் 5 ஆண்டு சட்டப் படிப்பில் சேர தகுதி பெற்றவர்கள் ஆவார்கள். இவர்களுக்கு முதல் மூன்று ஆண்டு முடிவில், B.A. சட்டம் என்ற பட்டமும், தொடர்ந்து ஐந்து ஆண்டு முடிவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு B.L.(Law) பட்டமும் வழங்கப்படுகிறது.

மேலும் கல்லூரியில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் இளநிலை அல்லது முதுநிலை பட்டம் பெற்ற மாணவர்களும், முழுநேர 3 ஆண்டு சட்டப்படிப்பில் (B.L.) (3 years) சேரலாம். தமிழகத்தில் சட்டக் கல்விக்கென டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் உள்ளது. இந்தியாவில் சட்டப் படிப்பை அளிக்கும் மிகச்சிறந்த கல்வி நிலையங்களுள் குறிப்பிடத்தக்க நிறுவனம் 'National Law School', Bangalore ஆகும். இந்நிறுவனத்தில் மூத்த வழக்கறிஞர்கள் மற்றும் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதிகளால் சட்டக்கல்வி அளிக்கப்படுகிறது. இப்பல்கலைக்கழகத்தில் இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சார்ந்த மாணவர்களும் சேரலாம். இங்கு L.L.B.(Bachelor of Law) படிப்பும், M.L.M., J.S.T., M.Phil., L.L.D. போன்ற படிப்புகள் அளிக்கப்படுகின்றன. மருத்துவச் சட்டம் மற்றும் நெறிகள், மனித உரிமைகள் சட்டம் போன்ற முதுநிலை Diploma படிப்புகளும் அளிக்கப்படுகின்றன. இது தவிர எம்.பில்.(M.Phil) பட்ட வகுப்புகளை இக்கல்வி நிறுவனத்தில் அஞ்சல் வழியிலும் படிக்கலாம். L.L.B. பட்டப்படிப்பில் சேர +2 அல்லது அதற்குச் சமமான படிப்பில் குறைந்தது 50% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். படிப்புக் கட்டணம் ஆண்டிற்கு ரூ.25,000 வரை செலவாகும். சட்டக் கல்லூரியில் மாணவர் சேர்க்கை குறித்த விளம்பரம் தினசரிகளில் வெளிவரும். நுழைவுத் தேர்வுகள் 'மே' மாதம் இறுதியில் நடைபெறலாம்.

சட்டப் படிப்பு படித்தவர்கள் State Service Commission, Civil Service Commission எழுதி Civil Service வேலைகளுக்குத் தகுதி பெறலாம். மேலும், இவர்கள் வங்கிகள், ஆயுட்காப்பீட்டுக் கழகங்கள், Corporate Sector போன்றவைகளில் சட்ட அலுவலர்களாகவும் நியமிக்கப்படுகிறார்கள். சட்டம் பயின்றவர்கள் சொந்தமாகவும் வழக்கறிஞர்கள் தொழில் செய்யலாம்.

சட்டக் கல்வி அளிக்கப்படும் கல்வி நிலையங்கள் பின்வருமாறு :

1. Dr. Ambedkar Government Law College, Chennai - 600 104.
2. Dr. Ambedkar Government Law College, Pondicherry - 605 001.
3. Central Law College, Salem - 636 008.
4. Coimbatore Law College, Coimbatore - 641 018.
5. Government Law College, Tiruchirapalli-620 002.






6. Madurai Law College, Madurai - 625 020.
7. National Law School (Deemed University), Bangalore - 560 072.
8. University of Madras, Chennai-600 005. (M.L. International and Constitutional Law)

**'பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலந்தீமை யாற்றிரிந் தற்று'**

– என்று குறள் கூறும்.

பண்பில்லாதவன் அடைந்துள்ள பெருஞ்செல்வமானது. நல்ல ஆவின்பால் அது வைக்கப்பட்டுள்ள கலத்தின் குற்றத்தால் திரிந்துபட்டதுபோல் இழிந்து கெடும். மனித குலத்துக்கு உரிய பண்பினைச் சீரமைக்க, அவர்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாக இருக்க சட்டம் படித்தல் அவசியம். எனவே சட்டக் கல்வியை உயர்ந்ததொரு தொழிற்கல்வி எனக் குறிப்பிடலாம்.

சட்டம் என்பது ஒரு நாட்டின் முக்கியப் பணிகளில் ஒன்று. சட்டம் ஒழுங்காக இருந்தால் நாடும் நலமுடன் இருக்கும். எனவே சட்டம் படித்தவர்கள் சிறப்பான இடத்தை வாழ்க்கையில் பெறுகின்றனர் என்றால் மிகையாகாது. எந்த தொழிலையும் தொடங்குவதற்கு முன் சட்ட சிக்கல்கள் வராதவாறு சட்ட நிபுணர்கள் உதவியை நாட வேண்டியுள்ளது. பெரும்பாலும் மாணவர்கள், மருத்துவம், பொறியியல், விவசாயம், கணினி போன்ற துறைகளைத் தேர்ந்தெடுப்பர். கடைசியாக சட்டத்திற்கு விண்ணப்பம் செய்வர். அது இப்போது மாறி, **சட்டம்தான் என்னுடைய முதல் விருப்பம் என மாணவர்களிடையே மாறுதல் ஏற்பட்டுள்ளது.**

சட்டப்படிப்பில் +2 படித்த மாணவர்கள் சேரலாம். BL என்பது 5 ஆண்டுகாலப் படிப்பு ஆகும். மாலை நேரக் கல்லூரிகள் தற்போது இல்லை. இளநிலைப் படிப்பு படித்தவர்கள் 3 ஆண்டு முழுநேர BL படிக்கலாம். இவர்களுக்கு இரண்டாவது ஆண்டு முடிவில் BGL பட்டமும், மூன்றாவது ஆண்டு முடிவில் BL பட்டமும் வழங்கப்படும்.

**எங்கெங்கு 5 வருட BL படிப்பு உள்ளது?**
**(வெளி மாநிலங்களில்)**

- நேஷனல் லா ஸ்கூல், பெங்களூர்
- பெங்களூர் பல்கலைக்கழகம், ஜனனி பாரதி
- பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி
- வெங்கடேஸ்வராப் பல்கலைக்கழகம், திருப்பதி
- உஸ்மானியப் பல்கலைக்கழகம், ஹைதராபாத்.
- ஆந்திரப் பல்கலைக்கழகம், வால்டர்.
- கேரளாப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.
- இந்திய சட்டக் கல்லூரி, புதுடெல்லி.
- எம்.எஸ். பல்கலைக்கழகம், பரோடா.
- சிவாஜி பல்கலைக்கழகம், கோல்காபூர்.
- உட்கல் பல்கலைக்கழகம், புவனேஸ்வர்.

**சட்டத்தைப் படிக்க வேண்டுவோரிடம் இருக்க வேண்டிய குணாதிசயங்கள் (Essential attributes) என்ன?**

- சட்டத்தைக் காக்கின்றோம் என்ற பொறுப்புணர்வு தேவை.
- சரளமாக ஆங்கிலத்தில் பேசவும், தமிழில் பேசவும் வேண்டும்.
- நீண்ட நேரம் பணி செய்ய வேண்டும்.
- புதிது புதிதுதாக நடக்கும் அன்றாட நிகழ்ச்சிகளை ஆராய்ந்து ஒழுங்குமுறைப் படுத்தும் திறன் பெற்று இருக்கவேண்டும்.
- நேர்மை, நீதி, மற்றவர்களுக்கு உதவும் மனப் பான்மை அதிகம் தேவை.
- பேச்சில் தெளிவு, உடனுக்குடன் விஷயங்களை உணரும் தன்மை, சரளமாகப் பேசுவதோடு, கருத்துக்களை மற்றவர்கள் ஒத்துக் கொள்ளக்கூடிய பேச்சு சாதுர்யம்.
- தோற்றம், நடை, பெருந்தன்மை, உயரம் போன்றவைகள் சட்டம் படிக்க விரும்புவோர்க்கு அழகு சேர்ப்பன ஆகும்.

**சட்டம் படித்தால் என்ன வேலை கிடைக்கும்?**

- சமுதாயத்தில் சிறந்த மதிப்பைப் பெறுவர்.
- நீதிபதியாகப் பணிபுரியலாம்.
- சட்ட நிபுணர்களாகப் பணிபுரியலாம் (Legal Advisor, Advocate)
- பல பெரிய நிறுவனங்களில் சட்ட ஆலோசகர்களாக நியமனம் செய்யப்படுவர்.
- பாதுகாப்புப் படையின் முப்படைப் பிரிவில் சட்டம் படித்தவர்களுக்குத் தனிமரியாதை.
- உலக நிறுவனங்களில் பணிபுரிய வாய்ப்பு உள்ளது.
- எல்லாத்துறையிலும் சட்டவல்லுநர்கள் தேவைப் படுகின்றனர்.

# விவசாயம்

விவசாயம்தான் இந்தியாவின் 70% மேல் மக்களுக்கு முக்கியத் தொழிலாக உள்ளது. விவசாயத்தின் வளர்ச்சி இந்தியாவின் முதுகெலும்பாக உள்ளது. தொழிற்புரட்சியின் காரணமாக சற்று மாறியது. இந்த நூற்றாண்டின் தொலைதொடர் தொழிற்நுட்பத்தால் மேலும் வளர்ந்து விவசாயப் புரட்சி ஏற்பட்டுள்ளது. எங்கெங்கே விவசாயப் படிப்பு உள்ளது என்பதைப் பார்ப்போம் :




<u>Agricultural College and Research Institute,
Coimbatore - 641 003.</u>

<u>Agricultural College and Research Institute,
Madurai - 625 104.</u>

<u>Agricultural College and Research Institute,
Killikulam - 628 252, Tuticorin District</u>

<u>Anbil Dharmalingam Agricultural College and
Research Insitute, Nawalur, Kuttapattu,
Trichy-620 009.</u>

- ☐ B.Sc.(Agri) - 4 years
- ☐ B.E.(Agri) - 5 years

<u>Agricultural College and Res.Institute
Kumulur, Pallapuram Post, Poovalur,
Trichy - 627 252</u>

- ☐ B.Tech (Food Processing Engineering)



<u>Home Science College and Research Institute,
Agricultural College Campus, Madurai-625 104.</u>

- ☐ B.Sc.(Home Science) - 3 years

<u>Adhiparasakthi Agricultural College, G.B. Nagar,
Kalavai - 632 506, Vellore District.</u>

- ☐ B.Sc.(Agri) - 4 years

<u>Pandit Jawaharlal Nehru College of Agriculture
Karaikal - 609 605</u>

- ☐ B.Sc.(Agri) - 4 years

<u>Horticulture College & Res. Institute,
Periyakulam - 625 604</u>

- ☐ B.Sc.(Horticulture) - 4 years

<u>Forest College & Res.Institute
Mettupalayam - 641 301, Coimbatore District</u>

- ☐ B.Sc.(Forestry) - 4 years

<u>Gandhigram Rural Institute
Gandhigram, Dindigul</u>

- ☐ Diploma (Agri) - 2 years

★ ★ ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 தொலையச்சு : 5368926

222187



தேனி மாவட்டம்



நாமக்கல் மாவட்டம் - பரமத்தி



திருவள்ளூர் மாவட்டம் - ஆயப்பாக்கம்



ர மாவட்டம் - திருப்பரங்குன்றம்



திருச்சி மாவட்டம்



சாத்தான்குளம்

verified



திண்டுக்கல் நகராட்சி



மதுரை மாவட்டம் - திருமங்கலம்



புதுக்கோட்டை மாவட்டம்



குன்னூர் நகராட்சி



விருதுநகர் மாவட்டம்

கடந்த ஆண்டில்
**ரூ.140 கோடி**
செலவில்
**2004 கி.மீ.**
கான்கிரீட் தெருக்கள்
அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில்
**ரூ. 250 கோடி**
மதிப்பீட்டில்
**3000 கி.மீ.**
கான்கிரீட் தெருக்கள்
அமைக்கப்படவுள்ளது.

பதிவு எண்.M.8676
Licence No. TN/MS(c)/PP-23

